வடமொழி வரலாறு

மேனாள் சேலம் நகராட்சிக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியன்,
மதுரைப் பண்டிதன், நெல்லைப்புலவன்,
சென்னைப் புலவ (வித்துவ) கலைத்தலைவன் (எம். ஏ.)
ஞா. தேவநேயன்
எழுதியது

நேசமணி பதிப்பகம்
ஆ 1135, 2 - ஆம் மேற்குக் குறுக்குச்சாலை
காட்டுப்பாடி விரிவு, வ. ஆ. மாவட்டம்,

அரசு

வடமொழி வரலாறு

★

நேசமணி பதிப்பகம்

The Hindu 16/12/73

Books in Indian Languages

TAMIL

VERCHORK KATTURAIGAL: By Jna. Devanesan. Publishers: South India Saiva Sidhanta Works Publishing Society Ltd., 1/140, Prakasam Road, Madras-1: Rs. 10.

This book contains a collection of articles by the author on roots of words in Tamil and how they have been used in Tamil literature. He treats of words beginning with vowels and of vowel-consonants, Kal, Kul, Sul and Thul elaborately. It is only after the Sangam age that foreign words got mixed up in Tamil literature. Philology a field for unbiased scholarship is confined to a few while the beauty of literature alone attracts the many.

The author's opinion (p. 11) that Aryan strategy made some credulous Tamil scholars deviate from the path of impartiality, fearlessness, selflessness and love of truth is not in good taste.

The Tamil Lexicon Committee constituted by the Madras University with eminent scholars did meritorious work. That was only a maiden attempt. There might have been some omissions and commissions. The author's remarks on its work on communal grounds (pages 206, 225 and 238) is to be regretted.

S. V. Varadaraja Iyengar.

SANSKRIT

வடமொழி வரலாறு

ஞா. தேவநேயன்

வடமொழி வரலாறு

மேனாள் சேலம் நகராட்சிக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியன்,
மதுரைப் பண்டிதன், நெல்லைப் புலவன்,
சென்னைப் புலவ (வித்துவ) கலைத்தலைவன் (எம்.ஏ.),
ஞா. தேவநேயன்
எழுதியது

நேசமணி பதிப்பகம்
ஆ 1135, 2-ஆம் மேற்குக் குறுக்குச்சாலை,
காட்டுப்பாடி விரிவு, வ.ஆ. மாவட்டம்
1967

(c) ஞானமுத்து தேவநேயன் (1902)

Ed 1 Dec. 1967

P15 v K7

VADAMOLI VARALARU

7-50 உருபா

பாரி அச்சகம், 127, பெருவழி (பிராடுவே), சென்னை - 1.

முகவுரை

இவ்வுலகில் இதுவரை நிகழ்ந்துவந்த பெரிய ஏமாற்றுக்களுள் தலைமையானது, வடமொழி தேவமொழி என்பதே. எங்ஙனமெனின், பழங்குடி மக்களான தமிழரும் திரவிடரும் ஏனையிந்தியருமட்டுமன்றி, இற்றையறிவியல் கண்ட ஆங்கிலரும் ஐரோப்பியரும் அமெரிக்கரும் இவ்வேமாற்றிற்கு ஆளாகியுள்ளனர்.

தமிழர், சிறப்பாகத் தமிழ வேந்தர், ஏமாறியதற்குக் கரணியம், அவரது (பகுத்தறிவைப் பயன்படுத்தாத) பழங்குடிப் பேதைமையும் கொடைமடமும் மதவெறியுமே. வேத ஆரியரின் ஏமாற்றிற்கு அவரது வெண்ணிறமும் அவரது வேதமொழியின் ஆரவாரவொலியும் துணைநின்றன. மேலையர் ஏமாறியதற்கோ, தமிழ் மறைப்புண்டு கிடப்பதும் தமிழர் ஆரியர்க்கு அடிமைப்பட்டிருப்பதுமே கரணியமாகும்.

கால்டுவெலார் செந்தமிழ் நாட்டு நடுவே அரை நூற்றாண்டு செந்தமிழை ஆராய்ந்தாரேனும், தமிழரின் பல்துறைத் தாழ்வும் தாழ்வுணர்ச்சியும், ஆரியர்க்கு முற்பட்ட தமிழிலக்கிய முற்றழிவும், கடைக்கழக எச்ச நூலின் அற்றை மறைவும், தமிழின் தென்மை தொன்மை முன்மைத் தன்மைகளைக் காணமுடியாவாறு அவர் கண்களை இறுகக் கட்டிவிட்டன.

இந்நூற்றாண்டில் மறைமலையடிகள் கிளர்ந்தெழுந்து தமிழ்த் தூய்மையைப் புதுக்கியிருப்பினும், பல்வகைப்பட்ட கோடன்மாரின் இரண்டகச் செயல்களால், அதன் முன்னேற்றம் பெரிதும் தடைப்பட்டுளது.

வேற்றவராலும் தன்னவராலும் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாகத் தமிழுக்குச் செய்யப்பட்டுவரும் தீங்கு, ஏட்டிலடங்கா; எண்ணத் தொலையா. இருக்கின்ற நெருக்கடி போதாதென்று இன்று இந்தியும் வந்து தமிழை அடர்க்கின்றது. இவற்றிற்கெல்லாம் அடிப்படை, தமிழின் அரியணையில் ஆரியம் அமர்ந்திருப்பதே. ஆதலால், தமிழை வடமொழியினின்று மீட்டு மீண்டும் அதை அரியணையில் அமர்த்தினாலன்றி, தமிழும் தமிழனும் வாழ வழியில்லை. ஆகவே, இந்நூலை எழுதத் துணிந்தேன்.

தமிழ் திரவிடத்திற்குத் தாயாக மட்டுமன்றி, ஆரியத்திற்கு மூலமாகவும் உள்ளதென்னும் உண்மையை, இந்நூலாற் கண்டு தெளிக.

இந்நூலை எழுதுவதற்குத் துணையாகச் சில அரிய ஆராய்ச்சி நூல்களை அன்பளிப்பாகவும் கடனாகவும் தந்துதவிய, காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியரும் துணை முதல்வரு மாகிய, பேரா. கோ. இராமச்சந்திரனார் (எம். ஏ.) அவர்கட்கு யான் பெரிதுங் கடப்பாடுடையேன்.

கடந்த பல்லாண்டாக என் மனவமைதி குலையாமற் காத்த, மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் பர். மெ. சுந்தரனார் (எம். ஏ., எம். லிட்டு., பிஎச். டி.) அவர்கட்கும், திரு. பு. மனோகர னார்க்கும், 'தமிழ்ப்பாவை' ஆசிரியர் திரு. கருணையார்க்கும், என் நெஞ்சார்ந்த நன்றி.

இந்நூல் அச்சீட்டுத் தொடர்பாகவும் வெளியீட்டுத் தொடர் பாகவும், திருநெல்வேலித் தென்னிந்திய சை. சி. நூ. ப. க. ஆட்சி யாளர் திரு. வ. சுப்பையாப் பிள்ளை அவர்கள் செய்த உதவிகளும் குறிக்கத்தக்கனவே.

தாய்மொழிப் பற்றினால் தானும் பிழைதிருத்தி
வாய்மொழிக் கேற்ப வடித்தெழுத்தும் — தேமொழிப்பேர்
ஆரிய வாற்றையு மச்சிட் டுதவினன்காண்
நாரா யணஞ்செட்டி நன்கு.

காட்டுப்பாடி,
உ0, நளி, கககஅ
(6-12-'67).

ஞா. தே.

நன்றியுரை

இந்நூலுந் ' தமிழ் வரலாறு ' என்னூலும் வெளியிட நாலாயிரம் உருபா தொகுத்து நல்கிய, திருச்சி மாவட்டப் பாவாணர் நூல் வெளியீட்டுக் குழுவின் செங்கைப் பகுதிக்கு, சிறப்பாகத் திருவாளர் நா. செல்வராசனார்க்கு, நான் மட்டுமல்லேன், இவ்வுலகிலுள்ள உண்மைத் தமிழர் அனைவரும் என்றுங் கடப்பாடுடையர்.

ஆளும் அரசும் அமைபல் கலைக்கழகும்
நாளும் திரள்செல்வ நாயகரும்—நீள்கையறத்
தாய்மொழிக் கென்றுருபா தண்டினான் நாகராசன்
ஆயிரம் நான்கென் றறி.

ஒன்றும் பலவும் ஒருநா ளளவுருபா
ஒன்றி யளித்தவெலா வொண்மையர்க்கும் — நன்றி
தமிழன்னை கூறுகின்றாள் தப்பாமற் கொள்ள
இமிழ்திரை ஞாலம் இசை.

உள்ளடக்கம்

பக்கம்

முகவுரை

நன்றியுரை

குறுக்க விளக்கம்

குறிவிளக்கம்

கருவிநூற்பட்டி

முன்னுரை :

1.	தமிழின் தொன்மை	...	1
2.	தமிழின் திரிபு வளர்ச்சி	...	12
3.	ஆரிய மொழிக் குடும்பம்	...	19
4.	வடமொழிப் பெயர்கள்	...	20
5	ஆரியர்க்குப் பிறந்தகமின்மை	...	25
6.	வடமொழியின் ஐந்நிலை	...	26
7.	இந்திய ஆரியர் வருகை	...	30
8.	வேதமும் வேதமொழியும்	...	32
9.	வேத ஆரியர் தென்னாடு வருகை	...	38
10.	சமற்கிருத வாக்கம்	...	4
11.	தொல்காப்பியமும் பாணினீயமும்	...	43
12.	ஆரிய ஏமாற்று	...	44
13.	மூவகை வடசொற்கள்	...	45
14.	முக்கால வடமொழித் தமிழ்ச் சொற்கள்	...	46
15.	மேலையர் திரிபுணர்ச்சி	...	46
16.	தென்மொழி வடமொழி வேறுபாடு	...	50
17.	தென்மொழி வடமொழிப் போராட்டம்	...	51

நூல் :

I. மொழியதிகாரம்

1.	மேலையாரிய இனச்சொற்கள்	...	55
2.	பிராகிருதச் சொற்கள்	...	63
3.	வடமொழிப் புகுந்த தென்சொற்கள்	...	63
.	தென்சொல் மூலத் திரிசொற்கள்	...	269
5.	தென்சொல்லடிப் புணர்ப்புச் சொற்கள்	...	270
6.	மொழிபெயர்ப்புச் சொற்கள்	...	270

7. இருபிறப்பிச் சொற்கள் ... 272
8. மயக்கச் சொற்கள் ... 272
9. தென்சொல்லை வடசொல்லாக்கிய வகைகள் ... 280
10. சுட்டுச் சொற்கள் ... 281
11. வினைச் சொற்கள் ... 283
12. இடைச் சொற்கள் ... 284
13. பல்வகைச் சொற்பெருக்கம் ... 284
14. இருகுறிச் சொற்கள் ... 287
15. வடசொற்கள் தென்சொற்களால் விளக்கம் பெறல் ... 287
16. வடவர் காட்டும் வேர்ச்சொற்கள் வேர்ச் சொற்களன்மை ... 290

இலக்கணவதிகாரம்

1. எழுத்தியல்

(1) வகையும் தொகையும் ... 297
(2) பாகுபாடும் பெயரும் ... 297
... 298
(4) எழுத்துச் சாரியை ... 299
(5) முறை ... 300
(6) அளபு (மாத்திரை) ... 301
(7) வடிவம் ... 301
(8) புணர்ச்சி ... 302
(9) வடமொழியெழுத்துப் பெருக்கம் ... 304
(10) வடமொழி வண்ணமாலையின் பின்மை ... 305
(11) வடமொழி வண்ணமாலையின் ஒழுங்கின்மை 306
(12) வடமொழிக் குறுங்கணக்கு நூற்பாக்கள் ... 306

2. சொல்லியல்

(1) பெயர்ச்சொல் ... 308
(2) வினைச்சொல் ... 311
(3) இடைச்சொல் ... 315

தொடரியல்

(1) தொகைச்சொல் (ஸமாஸ) ... 319
(2) சொற்றொடர் (வாக்ய) ... 320

III. இலக்கியவதிகாரம்

1. வேதம் ... 322
2. வேதாங்கம் ... 326
3. வேத சாத்திரம் ... 327
4. புராணம் ... 327
5. இதிகாசம் ... 328
6. பல்வகை நூல்கள் ... 328

IV. தமிழ்மறைப்பதிகாரம்

1. தமிழ்மறைப்பு வகைகள் ... 333
2. தமிழ்மறைப்பு நூல்கள் 333

V. முடிபதிகாரம் ... 345

அருஞ்சொல் அகரமுதல் வரிசை ... 348

பிழைதிருத்தப்பட்டி ... 350

குறுக்க விளக்கம் (Abbreviations)

1. இலக்கணக் குறியீடுகளும் பொதுச்சொற்களும்

அ பா.—அலிப்பால்
அ. ம. ப. க. க.—அண்ணுமலைப் பல்கலைக் கழகம்
ஆ. பா.—ஆண்பால்
இ. கா.=இறந்தகாலம்
உ. த.—உயர்தரம்
உ. வ.—உலக வழக்கு
எ. கா.—எதிர்காலம்
எ-டு—எடுத்துக்காட்டு
ஒ. நோ :—ஒப்பு நோக்க
ஒ. பா.—ஒன்றன்பால்
கி. பி. கிறித்துவிற்குப் பின்
கி. மு. கிறித்துவிற்கு முன்
செ. வ.—செய்யுள் வழக்கு
த. வி. தன்வினை
தொ. பெ.—தொழிற்பெயர்
தோரா.—தோராயம் (உத்தேசம்)
நி. கா.—நிகழ்காலம்
நூற். நூற்றுண்டு
பக்.—பக்கம்
ப. பா.—பலர்பால்
பர்.—பண்டாரகர்
பல. பா.—பலவின்பால்
பி வி.—பிறவினை
பெ.—பெயர்ச்சொல்
பெ. எ.—பெயரெச்சம்
பெ. பா.—பெண்பால்
பேரா.—பேராசிரியர்
வ. மு. இ.—வடமொழியில் மூலம் இல்லை
வி.—வினைச்சொல்
வி. எ.—வினையெச்சம்
வி. மு.—வினைமுற்று
வே. உ.—வேற்றுமையுருபு
com.—comparative
dim.—diminutive
pfx.—prefix
pron.—pronoun
suf., sfx.—suffix
sup.—superlative

2. மேற்கோள் நூற்பெயர்கள்

அக. நி.—அகராதி நிகண்டு
அகம்.—அகநானூறு
அரிச். பு.—அரிச்சந்திர புராணம்
அ. வே.—அதர்வ வேதம்
இரகு.—இரகு வமிசம்
இராமநா.—இராம நாடகம்
இலக். அ.—இலக்கிய அகராதி
இ. வே.—இருக்கு வேதம்
இறை.—இறையனுர் அகப்பொருள்
உபதேசகா.—உபதேசகாண்டம்
ஐங்., ஐங்குறு,—ஐங்குறுநூறு
கந்தபு.—கந்தபுராணம்
கம்பரா.—கம்பராமாயணம்
கல்லா.—கல்லாடம்
கலிங்.—கலிங்கத்துப் பரணி
கலித்.—கலித்தொகை
காஞ்சிப்பு.—காஞ்சிப்புராணம்
குமர. பிர.—குமர குருபரர் பிரபந்தத் திரட்டு
குற்ற. தல.—குற்றுலத்தல புராணம்
குறள்.—திருக்குறள்

குறுந்.—குறுந்தொகை
சிலப்.—சிலப்பதிகாரம்
சிறுபாண்.—சிறுபாணாற்றுப்படை
சீதக்.—சீதக்காதி
சீவக.—சீவக சிந்தாமணி
சூடா.—சூடாமணி நிகண்டு
சூளா.—சூளாமணி
சேதுபு.—சேதுபுராணம்
சொல்.—சொல்லதிகாரம்
சௌந்தரி.—சௌந்தரிய லகரி
ஞானா.—ஞானாமிர்தம்
தணிகைப்பு.—தணிகைப்புராணம்
தாயு.—தாயுமானவர் பாடற்றிரட்டு
திரி., திரிகடுக.—திரிகடுகம்
திருக்கோ.—திருக்கோவை
திருப்பு.—திருப்புகழ்
திருமந்.—திருமந்திரம்
திருமுரு.—திருமுருகாற்றுப்படை
திருவாச.—திருவாசகம்
திருவாலவா.—திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்
திருவிளை.—திருவிளையாடற் புராணம்
திவ்.—திவ்வியப் பிரபந்தம்
திவா.—திவாகரம்
தேவா.—தேவாரம்
தைலவ.—தைலவகைப் பரணி
தொண்டை. சத.—தொண்டை மண்டல சதகம்
தொல்.—தொல்காப்பியம்
நள.—நளவெண்பா
நன்.—நன்னூல்
நாமதீப.—நாமதீப நிகண்டு
நாலடி.—நாலடியார்
நான்மணி.—நான்மணிக் கடிகை
நீதிவெண்.—நீதிவெண்பா
நெடுநல்.—நெடுநல் வாடை
ப. க. க. அ.—பல்கலைக் கழகத் தமிழ் அகராதி
பதார்த்த.—பதார்த்தகுண சிந்தாமணி
பதிற்றுப்.—பதிற்றுப்பத்து
பரிபா.—பரிபாடல்
பழ.—பழமொழி
பாகவத.—பாகவத புராணம்
பாரத.—வில்லிபுத்தூராழ்வார் பாரதம்
பிங்.—பிங்கல நிகண்டு
பிரபு.—பிரபுலிங்க லீலை
பிரபோத.—பிரபோத சந்திரோதயம்
பிரமோத்.—பிரமோத்தர காண்டம்
பு. வெ.—புறப்பொருள் வெண்பா மாலை
புறம்.—புறநானூறு
பெரியபு.—பெரியபுராணம்
பெருங்.—பெருங்கதை
பெரும்பாண்.—பெரும்பாணாற்றுப்படை
பொ.—பொருளதிகாரம்
மணி.—மணிமேகலை
மலை.—மலையகராதி
மலைபடு.—மலைபடுகடாம்
மா. வி. அ.—மானியர் வில்லியம்சு சமற்கிருத அகராதி
மூ. அ.—மூலிகை அகராதி
மேருமந்.—மேருமந்தர புராணம்
விநாயகபு.—விநாயக புராணம்
COD—The Concise Oxford Dictionary
S. I. I.—South Indian Inscriptions

3. மொழிப்பெயர்கள்

இ.—இந்தி
இலத்.—இலத்தீன்
க.—கன்னடம்
கி.—கிரேக்கம்
கு.—குடகு (குடகம்)
கோ.—கோத்தம்
ச.—சமற்கிருதம்
த.—தமிழ்
து.—துளு (துளுவம்)
துட.—துடவம்
தெ.—தெலுங்கு
பர்.—பர்சி (பர்ஜி)
பி.—பிராகுவீ
பிரா.—பிராகிருதம்
பெர்.—பெர்சியன் (பாரசீகம்)
ம.—மலையாளம்
மரா.—மராத்தி
யா.—யாழ்ப்பாணத்தமிழ்
வ.—வடமொழி
AS—Anglo-Saxon
Dan—Danish
Du Dutch
F—French
G., Ger—German
Gk—Greek
Goth—Gothic
L—Latin
Lith—Lithuanian
LL—late Latin
LG—Low German
ME—Middle English
MLG—Middle Low German
Mod G—Modern German
OE—Old English
OF—Old French
OHG—Old High German
ON—Old Norse
OS—Old Saxon
S., Skt—Sanskrit
Slav—Slavonic
Sw—Swedish

குறிவிளக்கம் (Symbols)

குறி	விளக்கம்
-	இடைக்கோடு (hyphen)
—	வலமுறைத் திரிவுக் குறி
=	சமக்குறி, பொருட்பாட்டுக் குறி
+	புணர்ச்சிக் குறி
×	எதிர்நிலைக் குறி, முரண்பாட்டுக் குறி
ஷெ, ,,	மேற்படிக் குறிகள்
...	விடுபாட்டுக் குறி

கருவிநூற்பட்டி (Bibliography)

சமற்கிருதம் :

வடமொழி வரலாறு—சுப்பிரமணிய சாத்திரியார் (P.S.) எழுதியது

வடமொழி நூல் வரலாறு—ஷெ.

First Book of Sanskrit—By Ramakrishna Gopal Bhandarkar.

Second Book of Sanskrit—By Do.

Sanskrit Grammar.

Laghu Kaumudi with English Commentary —By Ballantyne.

Aṣṭādhyāyī Sūtrapāṭha:—By Bhattacarya.

The Sanskrit Language—By Burrow.

An Enquiry into the Relationship of Sanskrit and Tamil —By P. S. Subrahmanya Sastri.

A Sanskrit—English Dictionary—By Monier Williams.

Panini : His Place in Sanskrit Literature —By Theodor Goldstucker.

India as known to Panini—By V. S. Agrawala

வேதமொழி :

Sama Veda (Text and Tamil Translation) —By Sivananda Yatindira.

Krishna Yajur Veda (Text and Tamil Translation) —By Do.

A Vedic Grammar for Students—By A. A. Macdonell.

A Vedic Reader for Students—By Do.

An Account of the Vedas—C. L. S., Madras.

The Atharva Veda—Do.

The Brahmanas of the Vedas—Do.

மொழிநூல் :

Lectures on the Science of Languagc (2 Vols.)—By Max Muller.

Three Lectures on the Science of Language—By Do.

Historical Outlines of English Accidence—By Rev. Richard Morris.

முன்னுரை

1. தமிழின் தென்மை

பரந்த பாகுபாட்டில் ஒரு கூட்டுக் குடும்பமாய் அமைகின்ற, இந்திய ஐரோப்பிய மொழித் தொகுதியின் தொடக்க நிலை தமிழாயும் முடிவுநிலை சமற்கிருதமாயும் இருப்பதால், வடமொழியின் வரலாற்றை அல்லது இயல்பைந் தெளிவாய் அறிதற்கு, தமிழின் பிறந்தகம் எதுவென்று முதற்கண் காணல் இன்றியமையாததாம்.

தமிழ் தோன்றிய இடம் தெற்கே முழுகிப் போன குமரிக் கண்டமே (Lemuria) என்பதற்குச் சான்றுகளாவன:—

(1) தமிழும் அதனொடு தொடர்புள்ள திரவிட மொழிகளும் நாவலந் தேயத்திற்குள்ளேயே வழங்குதலும்; தென்மொழி வடக்கே செல்லச் செல்ல ஆரியப் பாங்கில் வலித்தும் உருத் தெரியாது சொற்றிரிந்தும் ஒடுங்கியும் இலக்கியமற்றும் இடையீடுபட்டும், தெற்கே வரவர மெல்லொலி மிக்கும் திருந்தியும் விரிந்தும் இலக்கிய முற்றும் செறிந்தும், இருத்தலும்.

(2) நாவலந் தேயத்திற்கு வெளியே திரவிட மொழியின்மையும், மேலைமொழிகளிலுள்ள தென்சொற்கட் கெல்லாம் தமிழிலேயே வேரிருத்தலும்.

(3) தென்மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நாற்பெரு மொழிகளுள், முழுத் தூய்மையுள்ள தமிழ் தென்னாட்டின் தென்கோடியில் வழங்குதல்.

(4) தமிழ் நாட்டுள்ளும், தெற்கே செல்லச் செல்லத் தமிழ் திருந்தியிருத்தலும், நெல்லை வட்டாரத் தமிழ் சொல்வளமும் சொற்றூய்மையும் தொல்வடிவச் சொல்வழக்கும் குமரி நாட்டு முறையொட்டிய தூய ஒலிப் பலுக்கமும் (உச்சரிப்பும்) கொண்டிருத்தலும்.

> "நல்லம்பர் நல்ல குடியுடைத்து சித்தன்வாழ்(வு)
> இல்லந் தொறுமூன் றெரியுடைத்து—நல்லரவப்
> பாட்டுடைத்து சோமன் வழிவந்த பாண்டியநின்
> நாட்டுடைத்து நல்ல தமிழ்."

என்னும் பழம்பாவும், பாண்டியனுக்குச் சிறப்பாகத் தமிழ் நாடன் என்னும் பெயருண்மையும், 'திருத்தக் கல்லிற்குத் தெற்கிட்டுப் பிறந்தவன்' என்னும் வழக்கும், இங்குக் கவனிக்கத் தக்கன.

(5) தமிழ், வடநாட்டு மொழிகளிலும் தெலுங்கு முதலிய திரவிட மொழிகளிலுமுள்ள வல்லொலிகளின்றி, சிறுவரும் முதியோரும் நோயாளிகளும் பலுக்கக் கூடிய பெரும்பாலும் எளிய முப்பான் ஒலிகளே கொண்டிருத்தலும்; எட்டும் பத்தும் பன்னிரண்டுமாக மெய்யொலிகள் கொண்ட மொழிகள் ஆத்திரேலியாவிலும் அதனையடுத்த தீவுகளிலும் வழங்குதலும்.

(6) ஆத்திரேலியாவையும் ஆப்பிரிக்காவையும் தன்னுடன் இணைத்துக் கொண்டு ஏறத்தாழ ஈராயிரங்கல் தொலைவு தெற்கே நீண்டிருந்த, குமரிக் கண்டத் தென்கோடிப் பஃறுளியாற்றங்கரை மதுரையில் தலைக்கழகம் இருந்தமையும்; குமரிக் கண்டத் தோற்றத்தின் எண்ணிற்குமெட்டா நிலநூலியல் (Geological) தொன்மையும்; அதன் பெரும் பகுதி வரலாற்றுக் காலத்திற்கு முன்பே முழுகிப் போனமையும்.

(7) தென்னைமரம் ஆத்திரேலியத் தீவுகளினின்றே பிற தென் கிழக்குத் தீவுகட்குக் கொண்டுவரப்பட்டதாகச் சொல்லப் படுவதும், குமரிக்கண்டத்தில் ஏழ்தெங்க நாடு இருந்தமையும், தென் என்னும் சொல் தென்னை மரத்தையும் தெற்குத் திசையையுங் குறித்தலும்.

தென்னுதல் = கோணுதல். தென்னியிருப்பது தென்னை.

(8) பண்டைத் தமிழ்ச் செய்யுட்களிற் கூறப்பட்டுள்ள நீர்நாயும், உரையாசிரியராற் குறிக்கப் பெற்றுள்ள காரோதிமமும் (காரன்னம்), ஆத்திரேலியாவிற்குத் தெற்கிலுள்ள தாசுமேனியத் தீவில் (Tasmania) இன்றுமிருத்தல்.

(9) வணிகத்தால் வந்த இரண்டோர் அயல்நாட்டு விலங்குகளும் நிலைத்திணை (தாவர) வகைகளுந்தவிர, மற்றெல்லாக் கருப் பொருள்களும், அறுபெரும்பொழுதும் ஐந்நில வகைகளுமாகிய முதற்பொருளும், தென்னாட்டிற்குச் சிறப்பாக உரியவையே பண்டைத் தமிழிலக்கியத்திற் கூறப்பட்டிருத்தல்.

(10) மக்களின் இயற்கையான நாகரிக வளர்ச்சியையும் நிலையையும் உணர்த்தும் ஐந்திணைப் பாகுபாடும், குறிஞ்சி மகளிர் தழையுடையும், நாடாட்சிக்கு முற்பட்ட ஊராட்சியும், அகப்பொருட் செய்யுட்களிற் புலனெறி வழக்கமாகத் தொன்றுதொட்டுக் கூறப்பட்டு வருதலும்; நிலையான குறிஞ்சி முல்லை மருத நெய்தலும் நிலையற்ற பாலையுமான ஐந்திணை நிலப் பாகுபாடு, தமிழ்நாட்டிற்போல் வேறெங்கும் அடுத்தடுத்து அமைந்திராமையும்.

(11) தமிழ் மக்கள் பழங் கற்காலத்திலிருந்து தென்னாட்டிலேயே தொடர்ந்து வாழ்ந்து வந்திருத்தலும், அவர்க்கு வந்தேறிக் கருத்தின்மையும்.

(12) தமிழர் பிறநாட்டிலிருந்து வந்தாரென்பதற்குப் பண்டைத் தமிழிலக்கியத்தில் ஒரு சான்றுமின்மை.

(13) தென்னாடு, தென்னர் (தென்னாட்டார்), தென்மொழி, தென்றமிழ், தென்னன் அல்லது தென்னவன் (பாண்டியன்), தென்கலை, தென்னுரை என்னும் பெயர்கள், தமிழ்நாட்டையும் தமிழரையும் தமிழையும் முதல் தமிழ்வேந்தனாகிய பாண்டியனையும் தமிழ்க்கலையையும் குறித்துத் தொன்று தொட்டு வழங்கி வருகின்றமை.

(14) குமரிக் கண்டத் தென்பகுதி முழுகிப் போனபின் பண்டைத் தமிழர் தம் இறந்த முன்னோரைத் தென்புலத்தார் என்றும், அவரிருக்குமிடத்தைத் தென்புலம் அல்லது தென்னுலகு என்றும், கூற்றுவனைத் தென்புலக்கோன், தென்றிசைக் கிழவன், தென்றிசை முதல்வன் என்றும், வழங்கி வந்தமை.

(15) இலக்கணம் இலக்கியம் சொல்வளம் முதலிய எல்லா வகையிலும், தென்னாட்டார்க்குச் சிறப்பாகவுரிய நாகரிகத்தைத் தமிழே காட்டி நிற்றல்.

(16) தமிழே தென்மொழியின் பிறந்தகத்தையும் அம்மொழி வளர்ச்சியின் முந்துநிலைகளையும் காட்டி, தென்னோரின் மொழி வரலாற்றையும் இன வரலாற்றையும் வரைதற்கேற்ற வரலாற்றுக் குறிப்புக்களைத் தாங்கி நிற்றல்.

(17) தெற்கு வடக்குத் தெரியாதவன், தெற்கும் வடக்குமாய்த் திரிகின்றான், தென்வடல், தென்பல்லி வடபல்லி (அணி

கள்) முதலிய வழக்குக்களில் தென்றிசை முதலிற் குறிக்கப் பெறுதல்.

(18) எண்டிசைத் தலைவருள் வடபால் மூவர் தவிர ஏனையை வரும், குமரிநாட்டிற்குப் பொருத்தமானவாறே அமைந் திருத்தல்.

கிழக்கில் சாலி (சாவக) நாட்டரசன் இந்திரன் (வேந்தன்) வழியினன் என்னப் பெற்றமையையும், தென்கிழக்கில் அமைதி மாவாரியில் சில எரி மலைகளுண்மையையும், தென் மேற்கில் தென்னாப்பிரிக்கரிருப்பதையும், குட (அரபிக்) கடல் குண (வங்காளக்) கடலினும் தொன்மையதாயிருப்ப தையும், நோக்குக.

(19) மேனாடுகளுள் முதன்முதல் நாகரிகம் பெற்றிருந்த எகிபது குமரிநாட்டுத் தமிழரொடு வணிகவுறவு கொண்டிருந்தமை.

(20) பிறமொழிச் சென்று வழங்கும் சொற்களும் இனமொழிச் சொற்களும் உட்பட, தமிழ்ச் சொற்களெல்லாம், வேறெம் மொழியிலும் இல்லாவாறு கொத்துக் கொத்தாகவும் குலங்குலமாகவும் தொடர்புகொண்டு தென்னாட்டுத் தென்கோடியிலேயே தொன்றுதொட்டு வழங்கி வருதல்.

எ - டு :

உல் : என்னும் முதலடி சொன்முதன் மெய்கள் ஆறொடுகூடி, குல், சுல், துல், நுல், புல், முல் என்னும் வழியடிகளைத் தோற்றுவிக் கும். அவற்றுள் குல் என்னும் வழியடி வளைவுக் கருத்தை அடிப் படையாகக் கொண்டு பின்வருமாறு நூற்றுக்கணக்கான சொற் களைப் பிறப்பித்திருத்தல் காண்க.

குல் குல்—குலவு. குலவுதல் = வளைதல். குலவு—குலாவு.
குலுத்தம் = வளைந்த காயுள்ள கொள்.
குலுக்கை = உருண்டு நீண்ட குதிர்.
குல்—(கொல்)—கோல் = உருட்சி, திரட்சி. கோல்—கோலி = சிற்றுருண்டை.

குல்—குள்—குளம் = வளைந்த நெற்றி, வெல்ல வுருண்டை.
குளம்—குளகம் = வெல்ல வுருண்டை.

குளியம் = உருண்டை. குளிகை = உருண்ட மாத்திரை.
குளியம்—குழியம் = வளைதடி, விரை (வாசனை)யுருண்டை.
குள்—குழல். குழலுதல் = சுருளுதல்.
குள்—(குய்)—குயம் = வளைந்த அரிவாள்.

குல்—குர்—குரங்கு. குரங்குதல்=வளைதல். குரங்கு—குரங்கி=வளைந்த அல்லது வட்டமான மதி.

குரவை=வட்டமாய் நின்று பாடியாடுங் கூத்து.

குருள்=மயிர்ச் சுருள். குருளுதல்=சுருளுதல்.

குருகு=வளையல், வளைந்த கழுத்துள்ள நீர்ப்பறவைப் பொது, ஓதிமம் (அன்னம்).

குரகம்=நீர்வாழ் பறவைப் பொது.

குர்—குறு — குறங்கு=கொக்கி. குறங்கு — கறங்கு=காற்றாடி. கறங்குதல்=சுழலுதல்.

குறள்—குறழ். குறழ்தல்=குனிதல்.

குறள்—குறண்டு. குறண்டுதல்=வளைதல், சுருளுதல்.
குறடு=வளைந்த அலகுள்ள பற்றுக் கருவி.
குறண்டல்=கூனல்.
குறு—கிறு. கிறுகிறுத்தல்=சுற்றுதல். கிறு—கிறுக்கு=தலைச்சுற்று, கோட்டி (பைத்தியம்).

குல்—குன்—குனி. குனிதல்=வளைதல், உடம்பு வளைதல்.

குனி=வில்.

குனுகுதல்=சிரித்து உடம்பு வளைதல்.

குன்—கூன்=வளைவு, முதுகு வளைவு. கூன்—கூனல்.

கூன்—கூனி=வளைந்த சிற்றிறால்.

கூன்=கூனை=நான்மூலையும் கூனுள்ள நீர்ச்சால்.

குள்—கூள்—கூளி=வளைந்த வாழைப்பழம்.

கூள்—கூண்டு=தட்டி வளைவு, வண்டிக் கூண்டு போன்ற பறவைக் கூடு, விலங்குக் கூண்டு.

கூண்டு—கூடு=நெற்கூடு, கூண்டு, உறை, உள்ளீடின்மை.

குள்—கொள்=வளைந்த காயுள்ள பயற்றுவகை.

கொள்—கோள்=சுற்றிவரும் விண்மீன் (கிரகம்).

கோள்—கோளம்=வட்டம், உருண்டை. கோளம்—கோளகை=வட்ட வடிவம், மண்டலிப் பாம்பு.

கோளம்=கோளகம்=(உருண்ட) மிளகு.

கோள்=கோளா=பொரித்த உருண்டைக் கறி.

கொள்—கொட்டு. கொட்டுதல்=கொள்கலத்தைச் சாய்த்து உள்ளீட்டை வீழ்த்துதல்.

கொள்=கொட்பு=வளைவு, சுழற்சி, சுற்றுகை.

கொட்டு=வட்டமான நெற்கூடு. கொட்டு — கொட்டம், கொட்டில், கொட்டாரம். கொட்டில்=வட்டமான தொழு.

கொட்டு—கொட்டை=உருண்ட வடிவம், பஞ்சுச் சுருள், உருண்ட தலையணை. கொட்டாரம்=வட்டமான களஞ்சியம்.

கொட்டு — கொட்டம் = வட்டமான தொழு, நூற்குங் கொட்டை. கொட்டகை = சாய்ப்புப் பந்தல்.
கொள்—கொட்கு. கொட்குதல் = சுற்றுதல், திரிதல்.
கொட்கு—கொக்கு = வளைந்த கழுத்துள்ள நீர்ப்பறவை.
கொட்கி—கொக்கி = வளைந்த மாட்டி. கொக்கை = கொக்கி.
கொக்கரை = வளைவு, வில், வலம்புரிச் சங்கு.
கொக்கட்டி = (குறுகி) வளைந்த பனங்கிழங்கு.
குள்-குண்டு = உருண்டை, உருட்சி. குண்டன் = உருண்டு திரண்டவன். குண்டை = உருண்டு திரண்ட காளை.
குண்டடியன் = உருண்டு திரண்ட ஆண் சிறுத்தை.
குண்டான் = குண்டா = உருண்ட வடிவான கலம்.
குண்டு— குண்டலம் = வட்டம், சுன்னம், காயம் (ஆகாயம்) ஆடவர் காதுவளையம்.

குண்டலம்—குண்டலி = மூல நிலைக்கள (ஆதார) வட்டம்.
குண்டலி—குண்டலினி = மூல நிலைக்களத்திலுள்ள பாம்பின் வடிவமைந்த ஆற்றலி (சக்தி), மாமாயை.

குண்டி = உருண்ட புட்டம். குண்டு-கண்டு = நூற்பந்து.
(குண்டகம்)—கண்டகம் = வட்டமான மரக்கால்.
கண்டி = ஒரு கலம், ஓர் அளவு.
கண்டி—கண்டிகை = பதக்கம், தோட்கடகம்.
கண்டிகை—கடிகை = நாழிகை வட்டில், நாழிகை, தோள் வளை, காப்பு. கடிகையாரம்—கடிகாரம்.

குள்—குண்—குணம் = குடம் (உருண்ட கலம்).
குணக்கு = வளைவு. குணக்குதல் = வளைத்தல்.
குணலை = நாணத்தால் உடல்வளைகை.
குணுக்கு = இளமகளிர் அணியும் கனத்த காது வளையம்.
குணம்—குடம் = வளைவு, உருண்ட கலம், சக்கரக்குறடு.
குடந்தம் = வளைவு, வணக்கம்.
குடக்கு—குடக்கி = வளைவானது.
(குடகம்)—கடகம் = வட்டமான பெரு நார்ப்பெட்டி.
கடகம்—கடாகம் = வானவட்டம்.
குடலை = உருண்டு நீண்ட பூக்கூடை.

குடம்பை = முட்டை, வட்டமான கூடு. குடம்பை—குதம்பை = காதோலைச் சுருள்.
குடா = வளைகடல், குடா—குடாவு. குடாவடி = வளைந்த அடியுள்ள கரடி.

குடாரி=யானைத்தோட்டி.
குடி=வளைந்த புருவம். குடி—குடில்—குடிலம்=வளைவு.
குடிலை=வளைந்த ஓங்கார வடிவம், தூயமாயை.
கொள்—கொண்டி=கொக்கி.
கோள்—கோண்—கோணு, கோணல், கோணம், கோணை.
கோண்=வளைவு, கோணம், மாறுபாடு, கொடுங்கோன்மை.
கோணம்—வளைவு, மூலை, கூன்வாள், யானைத் தோட்டி.
கோணம்—காணம்=கொட்பயறு.

ஒ. நோ: ஓட்டம் - ஆட்டம் (உவம வுருபு) ஓடுதல்=ஒத்தல். நோட்டம் - நாட்டம் (கண்). நோடு—நாடு. நாடுதல்= பார்த்தல், கவனித்தல், ஆய்தல், தேடுதல், விரும்புதல்.

கொள்—(கொண்)—கொடு=வளைவு, வளைவான. கொடுமை= வளைவு, தீமை, கடுமை.
கொடுமரம்=வில். கொடுவரி=புலி. கொடுந்தமிழ்=செந்தமிழினின்று திரிந்த தமிழ். கொடுமலையாளம்=எளிதில் விளங்காத பழமலையாளம். கொடும்பனி = கடும்பனி. கொடுவினை=தீவினை.

கொடுக்கு=வளைந்த தொங்கல், தேள் முதலியவற்றின் கொட்டும் உறுப்பு. கொடுக்கன்—கொடுக்கான் = தேள்வகை. கொடுக்கி=தேட்கொடுக்கி, கொக்கி.

கொடு—கொடுகு. கொடுகுதல்=கொடியதாதல்.
கொடும்பு=கொடுமை. கொடுவை=தீயதன்மை.
கொடுப்பு—குறடுபோன்ற கதுப்பு (அலகு).
கொடு—கொடி=வளைந்து படரும் நிலத்திணை வகை.
கொடிறு=குறடு, கதுப்பு (cheek, jaw).
கொள்—கொண்—(கொண்பு)—கொம்பு = வளைந்த மரக்கிளை, கிளை, கிளை போன்ற விலங்குக் கொம்பு.
கொம்பு=கொப்பு=கிளை, அணிகலவகை.
கோண்—கோடு=வளைவு, வளைந்த சங்கு, குளக்கரை, வீணைத்தண்டு, கொம்பு, வளைந்த வரி, வரி, கொடுமை. கோடுதல்=வளைதல்.
கோட்டம்=வளைவு, வணக்கம், மதியைச் சூழ்ந்த ஒளி வட்டம், மதில் சூழ்ந்த கோவில், குளக்கரை, வட்டம், நிலப்பிரிவு. கோட்டகம்=குளக்கரை.

கோட்டை=அரண்மனையை அல்லது நகரைச் சூழ்ந்த மதில், மதில்சூழ்ந்த இடம், மதியைச் சூழ்ந்த ஒளிவட்டம், வட்டமான நெற்களஞ்சியம், ஒரு பெரு முகத்தலளவு.

கோட்டுதல்=வளைத்தல், திரித்தல். கோட்டி=அறிவின் திரிபு, பித்தியம் (பைத்தியம்).

(கோடகம்)—கேடகம்=வட்டமான தடுபடை.

ஒ. நோ : பரி—பரிசை=வட்டமான கேடகம்.
கேடகம்—கிடுகு (Shield).

கோடல்=வளைவு, வளைந்த இதழுள்ள காந்தள். கோடை= காந்தள்.

கோடரம்=மரக்கிளை. கோடி=வளைவு. கோடலம்=பிறை போல் வளைந்த மாலைவகை.

கோடணை=கொடுமை. கோடம்—கோரம்=வட்டில்.

கோடு—கோசு. கோசு விழுதல்=துணி வெட்டும்போது கோணிப் போதல்.

ட—ச, போலி. ஒ. நோ : ஒடி—ஒசி, vide—vise.

குல் என்னும் அடிப்பிறந்த வளைவுக் கருத்துச் சொற்கள் இன்னுஞ் சிலவுள. அவை மிகையென்று இங்குக் குறிக்கப் பெற வில்லை.

இங்குக் காட்டப்பட்டுள்ள சொற்களுட் சில மேலையாரியத்திலுஞ் சென்று வழங்குகின்றன.

எ - டு :

கறங்கு (சுழல், காற்றுடி) ON hringr, OHG,OS,OE hring, E ring.
கிறு, கிறுகிறு—Gk guros, E gyrate.
குரங்கு—OE cranc, crinc, E crank.
குரவை—Gk koros (orig. a dance in a ring), E chorus.
குருகு, குரகம்—OHG, OS krano, OE cran, E crane.
குருள்—LG, Du, OFris krul, G krol, OE crol crul, E curl.
குலவு—L curvus, E curve.
குளியம், குழியம், கோளம்—L globus, E globe.
கொக்கி—Du hock, MLG hok, OE hoc E hook.
கொடுக்கு—ON krokr, F croc, ME croc, E crook.
கோணம்—Gk gonia.

இத்தகைய சொற்கள் மேலையாரியத்தில் அயல்நாடு சென்ற தனி மக்கள் போல் தனிப்பிரிந்தே நிற்றல் காண்க. தமிழ்ச் சொற்கள் குடும்பங் குடும்பமாகவும் குலங்குலமாகவும் தொடர்பு கொண்டிருப் பது போன்ற நிலைமை, வேறெம் மொழியிலுங் காண்டற் கரிது.

ஆங்கில மொழிவரலாறு எங்ஙனம் ஆங்கில நாட்டு வரலாற்ெறாடு இரண்டறக் கலந்துள்ளதோ, அங்ஙனமே தென்மொழி வரலாறும் தென்னாட்டொடு அல்லது குமரி நாட்டு வரலாற்ெறாடு இரண்டறக் கலந்துள்ளதென அறிக

மேற்காட்டிய தமிழ்ச் சொற்களுட் சில வடசொற்கள் போல் தோன்றலாம். அவை அங்ஙனமன்மை இந்நூல் முழுதும் படிப்பார்க்குத் தெற்றெனத் தெரிந்துவிடும்.

கிரேக்க மொழியிற் சில தமிழ்ச் சொற்களிருப்பது கொண்டு, கிரேக்க நாட்டினின்று தமிழர் வந்தாரென்பது, ஒரு மரத்தினின்று பறிக்கப்பட்டு வேறிடத்திலுள்ள சில இலைகளினின்றே அம்மரந் தோன்றிற்றென்பதை யொக்கும்.

இதனால், தமிழின் பிறந்தகம் குமரிநாடென்பதை அறியாதார், தமிழ்மொழியை ஆழ்ந்தாராயாதார் என்பது வெள்ளிடை மலையாம்.

இனி, **உல்** என்னும் முதலடியும், **குல் சுல் துல் நுல் புல் முல்** என்னும் வழியடிகளும், எவ்வாறு ஒரே அடிப்படைக் கருத்துப் பற்றி பல்வேறு சொற்களைப் பிறப்பிக்கின்றன என்பதை, பின்வரும் எடுத்துக் காட்டால் அறிந்து கொள்க.

குத்தல் அல்லது கிள்ளுதல்

குத்தற்கு அல்லது கிள்ளுதற்குக் கூரிய உறுப்பு அல்லது கருவி வேண்டும். உல் என்னும் லகர வீற்றடி, பிற்காலத்தில் உள் என்னும் ளகர வீற்றடியாகத் திரிந்துள்ளது. இங்ஙனமே ஏனையவும்.

உள் உல் = 1. தேங்கா யுரிக்கும் கூர்ங் கம்பி 2. கழு.

உல் — அல் — அல்கு — அஃகு. அஃகுதல் = கூராதல், நுண்ணிதாதல்.

அஃகு—அக்கு = முட்போன்ற முனையுள்ள காய்மணி (உருத்திராக்கம்). அக்கு—அக்கம். 'அம்'—பெ.பொ.பி.

ஒ. நோ : முண்மணி = அக்குமணி.

அல்—அலம் = கொட்டும் தேள் (திவா).

அல்—அலகு = கூர்மை.

அல்—அலவு—அலவன் = கூரிய கால்களையுடைய நண்டு, கடக வோரை (திவா.).

உல்—உள்—அள் = கூர்மை (திவா.) அள்—அளி = கொட்டும் தேனீ அல்லது வண்டு.

உள்—உளி = கூரிய செதுக்குக் கருவி.

உளி—உளியம்=கூரிய உகிருள்ள கரடி.
உளி—உகிர்=கூரிய விரலுறுப்பு.
உளி—உசி—ஊசி. ஒ. நோ : இளி—இசி.

குள் குல்—குறு—குற்று—குத்து—கொத்து—கொட்டு.
குள்ளுதல்=கிள்ளுதல் (நெல்லை வழக்கு.)
குள்—குளவி=கொட்டும் தேனீ.
குள்—குளிர்=நண்டு (பிங்.) கடகவோரை (திவா.), சூலம்—(சூடா). குளிர்—குளிரம்=நண்டு.

நண்டு கூரிய கால்களையுடையதாயும் நிலத்தைக் கிண்டிச் செல்வதாயுமிருத்தலைக் காண்க.

குள்—கள்=முள். கள்—கள்ளி=முட்புதர்வகை.
கள்—கடு=முள் (திவா.), முள்ளி (மலை.).
கள்—கண்டு=முள்ளுள்ள கண்டங்கத்தரி (மலை).
கண்டு—கண்டம்=கள்ளி (மலை.), எழுத்தாணி (பிங்.), வாள் (பிங்.), முட்கத்தரி (கண்டங்கத்தரி).
கண்டம்—கண்டகம்=முள் (இறை. 41 : 172), நீர் முள்ளி (தேவா. 268 :2), வாள் (சூடா), உடைவாள் (திவா.).
கண்டகம்—கண்டகி=தாழை, மூங்கில் வகை, இலந்தை.
கண்டு—கண்டல்= தாழை (நாலடி..), முள்ளி (சூடா.), நீர்முள்ளி (மலை.).
கண்டல்—கண்டலம்=முள்ளி (மூ. அ.).
கண்டு—கண்டி=அக்கமாலை (தேவா. 586 : 6).
கண்டி—கண்டிகை=அக்கமாலை (பிங்).
குள்—கிள்—கிள்ளி—கிளி. கிள்—கிள்ளை=கூரிய மூக்காற் கிள்ளும் பறவை.
கிள்—கெள்—கெளிறு=வாயருகுள்ள முள்ளாற் கொட்டும் மீன்.
கெளிறு—கெளிற்றி—கெளுத்தி. கெளிறு—கெடிறு.

சுள் சுல்—சூலம். சுல்—சுர்—சுரிகை=உடைவாள் (பெரும் பாண். 73).
சுர்—சுறு—சுறுக்கு=குத்தலுணர்ச்சி. சுரி—சூரி=கூர்ங் கத்தி.
சுரி—சுரணை=குத்துணர்ச்சி. சுல்—சுள். சுள்சுள்ளென்று குத்துகிறது என்பது உலக வழக்கு. சுளிக்கு=கூர்முனைக் கோல்.
சுள்ளான்=முட்குத்துவதுபோற் கடிக்கும் எறும்பு.

சுள்—(சுளை)—சுணை = கூர்மை, சிறுமுள், குத்துணர்ச்சி.
சுணை—சுணைப்பு = குத்துணர்ச்சி.
சுறு—சுரு—சுற = கூரிய செதிளால் வெட்டுங் கடல்மீன் (பொருந. 203), சுரு (திவா.).
சுற—சுறவு (புறம். 13 : 7). சுறவு—சுறவம்.

துள் துல் — துலம் = நீர்முள்ளி. துல்—(துள்)—தெள்—தேள் = கொட்டும் நச்சுருயிரி.
தெள்—தெறு. தெறுதல் = கொட்டுதல். தெறு—தேறு = கொட்டுகை. (பதிற்றுப். 71 : 6).
ஒ. நோ : வெள்—வெறு.
தெறுக்கால் = தேள் (திவா.), கடகவோரை (சூடா.).
தெறுப்பதம் = தெறுக்கால்.
தேள்—தேளி = தேள்போல் வாலில் முள்ளுள்ள மீன்.
தேட்கொடுக்கி = தேட்கொடுக்குப் போன்ற முட்காய்ச் செடி.

நுள் நுள்ளுதல் = கிள்ளுதல். நுள் — நுள்ளான் = நுள்ளுவது போற் கடிக்குஞ் சிற்றெறும்பு.
நுள்—நுள்ளல்—நொள்ளல் = சிற்றுலங்கு.
நுள்—நள்—நள்ளி = நண்டு (திவ். திருவாய். 9 : 10 : 2), கடகவோரை (சூடா).
நள்ளி—நளி = தேள் (பிங்.). நளி—நளிர் = நண்டு (சூடா.).
நள்—நண்டு. நண்டுத் தெறுக்கால் = நட்டுவாய்க் காலி.
நண்டல் = கிண்டல். நண்டல் பிண்டல் என்னும் வழக்கை நோக்குக.

புள் புள்—புள்ளி = குத்து. புள்ளுதல் என்னும் வினை, உள்ளுதல் துள்ளுதல் என்பன போன்றே பிற்காலத்து வழக்கற்றுப் போயிற்று. அதனின்று திரிந்த புட்டு, பொட்டு, பொட்டி என்னும் வினைகளும் வழக்கிறந்தன.
புள்—பொள்—பொறி = புள்ளி. பொள்—பொட்டு = புள்ளி.

முள் முள்ளுதல் = கிள்ளுதல். முள்—முள்ளி = முட்செடி, முட்கத்தரி, தாழை. முளி = செம்முள்ளி.
முள்—முளா—முளவு = முள்ளம் பன்றி (புறம். 325), முட்கோல்.
முள்—முளரி = நுண்மை (சூடா.) முட்செடி (பிங்.), முட்சுள்ளி (நற். 384).
முள்—முளை = கூர்மை (கலித் 4). முளை—முனை.

முள் — முண்டு — முண்டகம் = முள், முள்ளுடைத் தூறு (பிங்.), தாழை (பிங்.), நீர் முள்ளி (திவா.), கழி முள்ளி (மதுரைக் 96), கருக்கு வாய்ச்சி. முள்—வள் = கூர்மை.

இத்தகைய ஒழுங்குபட்ட ஏழடிச் சொற்றிரிவு வேறெம்மொழியினும் காண வியலாது. தமிழினின்று திரிந்த திரவிடமொழிகளும், எத்துணை வளர்ச்சி பெற்றிருப்பினும், இத்தகை வளமுற்றவை யல்ல. இங்ஙனம் இயற்கை, மென்மை, ஒழுங்கு, வளம் என்னுந் திறங்களை ஒருங்கே கொண்ட தமிழ், தொன்று தொட்டுத் தென்னாட்டொடு இரண்டறத் தொடர்பு கொண்டிருப்பது பெரிதும் கவனிக்கத் தக்கது.

2. தமிழின் திரிபு வளர்ச்சி

மூவிடப்பெயர்

தமிழ்

தன்மை	முன்னிலை	படர்க்கை (சுட்டு)
ஒருமை:		
(ஏன்)-யான்-நான்	(ஊன்)-நூன்-நீன்-நீ	அவன், அவர், அது
பன்மை:		
(ஏம்)-யாம்-நாம்	(ஊம்)-நூம்-நீம் நீயிர்-நீவிர்-நீர்	அவர், அவர்கள், அவை

தெலுங்கு

	தன்மை	முன்னிலை	படர்க்கை (சுட்டு)
ஒருமை:	நேனு	நீவு	வாடு, அதன்-அதடு; அதி (பெ. பா., ஒ. பா.)
பன்மை:	மேமு	மீரு	வாரு, வாண்ட்லு, அவி

இந்தி

	தன்மை	முன்னிலை	படர்க்கை
ஒருமை:	மைன்	து	வஹ் (அவன், அவள், அது)
பன்மை:	ஹம்	தும்	வே (அவர்கள், அவை)

தியூத்தானியம் (பழைய ஆங்கிலம்)

	தன்மை	முன்னிலை	படர்க்கை (சுட்டு)
ஒருமை:	ic	tu (du)	he, heo (she), hit (it)
பன்மை:	we	ye	hi (they)

இலத்தீனம் (Latin)

	தன்மை	முன்னிலை	படர்க்கை
ஒருமை :	ego	thou	is (he), ea (she), id (it) or ille, illa, illud
பன்மை :	nos	vos	ii (i) or ei, eae, ea or illi, illae, illa

கிரேக்கம்

	தன்மை	முன்னிலை	படர்க்கை
ஒருமை :	egō	su	autos, autē, auto
இருமை :	nō	sphō	—— —— ——
பன்மை :	hēmeis	humeis	autoi, autai, auta

வேதமொழியும் சமற்கிருதமும்

	தன்மை	முன்னிலை	படர்க்கை ஆ. பா.	பெ. பா.	அ. பா.
ஒருமை :	அஹம்	த்வம்	ஸ:	ஸா	தத்
இருமை :	ஆவாம்	யுவாம்	தௌ	தே	தே
பன்மை :	வயம்	யூயம்	தே	தா:	தானி

கவனிப்பு:-

(1) தன்மைப் பெயரின் நகர முதல், தெலுங்கிலும் இந்தியி லும் மகர முதலாகவும், தியூத்தானியத்திலும் சமற்கிருதத்திலும் வகரமுதலாகவும், திரிந்துள்ளது. ந-ம-வ.

(2) தன்மையொருமைப் பெயர், வேற்றுமையடியில் (Oblique base), me, my என்று ஆங்கிலத்திலும், me, mihi என்று இலத்தீனி லும், eme, emoi என்று கிரேக்கத்திலும், மாம், மயா என்று சமற்கிரு தத்திலும், திரிந்திருப்பதால், அதன் எழுவாயடியும் முதற்காலத்தில் மகர முதலியாகவேயிருந்து, அது வழக்கற்றுப் போனபின் வேறொரு (அகரமுதற்) சொல் ஆட்சிக்கு வந்திருக்கலாம். அவ்வகர முதற் சொல் மனத்தைக் குறிக்கும் அகம் என்னும் தமிழ்ச் சொல்லாகவு மிருக்கலாம். மனம் ஆதனையும் (Soul) ஆதன் தன்னையும் (Self) குறிப்பது இயல்பே.

(3) நும் என்னும் முன்னிலைப் பன்மைப்பெயர் வேற்றுமை யடியை எழுவாய்ப் பெயரென்று தொல்காப்பியர் (தவருகக்) குறித் திருப்பதால், அதுவே மராத்தி இந்தி முதலிய வடநாட்டு மொழி களில் தும் (நீர்) என்று திரிந்திருக்கலாம். நூம் என்பது தும்

என்றுயின், நூன் என்பது துன் என்றுவது இயல்பே. நீன் என்பது நீ என்று கடைக்குறைந்தது போல், துன் என்பதும் து என்று கடைக் குறைந்தது.

முன்னிலை யொருமைப்பெயர் தியூத்தானியத்திலும் இலத்தீனிலும், து, தௌ என்று சற்றே திரிந்தும், வேத ஆரியத்தில் த்வம் என்று மிகத் திரிந்தும்; கிரேக்கத்தில் சு என்று போலியாக மாறியும், உள்ளமை காண்க.

(4) தியூத்தானியத்திலும் இலத்தீனிலும் இருமை யெண் இன்மையால், அது கிரேக்கத்திலேயே தோன்றி வேத ஆரியத்திலும் சமற்கிருதத்திலும் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

மராத்தி, இந்தி, வங்கம் முதலிய வடநாட்டு மொழிகளிலும் இருமையெண் இல்லை. அம்மொழிகளை ஆரியமென மயங்கி, அவற்றில் இருமையெண் இறந்துபட்டதென்பது திரிபுணர்ச்சியே. தியூத்தானியத்திலும் அது மறைந்ததென்பது பொருத்தமானதன்று.

இவ்வுண்மை பின்னரும் சொல்லியலில் விளக்கப் பெறும்.

(5) தமிழ்த் தன்மையிடப் பெயர்களுள், ஏன் ஏம் என்னும் உயிர்முதற் சொற்கட்கும் நான் நாம் என்னும் நகரமுதற் சொற்கட்கும் இடையில், யான் யாம் என்னும் யகரமுதற் சொற்கள் இருப்பது போன்றே, ஆரிய முன்னிலையிடப் பெயர்களுள்ளும் ye, you, யூயம் என்னும் யகரமுதற் சொற்கள் உள்ளனவென அறிக.

(6) தகரம் சகரமாகவும் சகரம் ஹகரமாகவும் திரிதல் இயல்பாதலால், அதன் (தெ.), அது, அதி (தெ.) முதலியவற்றின் தகர வடியே, ஆரிய மொழிகளில் சகரமுதலாகவும் ஹகரமுதலாகவும் திரிந்திருத்தல் வேண்டும்.

ஆயினும், தியூத்தானியத்தை மட்டும் தனிப்பட நோக்கின், பொதுவகையில் திரிந்த த-ச-ஹ முறை சிறப்பு வகையில் மீண்டும் ஹ-ச-த எனத் தலைகீழாக ஒரு சில சொற்களில் மாறியுள்ளதாகத் தெரிகின்றது.

எ-டு: முதற்கால நிலை — he, heo
இடைக்காலநிலை — se, seo
இக்காலநிலை — the, they

இங்ஙனம், வேறுபட்ட மொழிகளில் எதிர்வழிப் போக்காகச் சொற்றிரிபு நிகழ்வதும் இயல்பே. இனி, இத்தலைகீழ்ச் சொற்றிரிபு இலக்கிய வழக்கிற்கேயுரியது எனலும் ஒன்று.

(7) தன்மையிடப் பெயர் ஏகார வடிவினின்றும், முன்னிலை யிடப் பெயர் முன்மைச் சுட்டாகிய ஊகார வடிவினின்றும், படர்க் கைச் சுட்டுப் பெயர் சேய்மைச் சுட்டாகிய ஆகாரவடிவினின்றும், தோன்றியுள்ளனவென்னும் அடிப்படையுண்மையுணரின், ஆரிய மூவிடப் பகரப் பெயர்களின் (Pronouns) திரிமுறையை எளிதில் அறிந்துகொள்ளலாம்.

ஏகு என்னும் வினை

உ—உய். உய்தல்=செல்லுதல் (த. வி.).
உய்த்தல்=செலுத்துதல் (பி. வி.).
உய்—உயவு=செலவு. உயவுநெய்=வண்டி செல்வதற் கிடும் நெய்.
உய்—இய்—இயவு=1. செலவு.

"இடைநெறிக் கிடந்த இயவுக் கொண் மருங்கில்" (சிலப். 11 : 168.) 2. வழி.

"இயவிடை வருவோன்" (மணி. 13 : 16).
இய்—இயல். இயலுதல்=1. செல்லுதல், நடத்தல்.

"அரிவையொடு மென்மெல வியலி" (ஐங். 175).
2. நடத்தல், நிகழ்தல், நேர்தல்.

"இயன்றதென் பொருட்டினு லிவ்விடருனக்கு" (கம்பரா. குகப். 10.), 3. கூடியதாதல்.

"இயல்வது கரவேல்." (ஆத்திசூடி.)
இயல் (பெ.)=நடத்தை, தன்மை, பொருளின் தன்மை யைக் கூறும் நூற் பகுதி. இயல்—இயல்பு.
இயல்—இயற்கை.
இய்—இய—இயங்கு. இயங்குதல்=செல்லுதல், அசைதல்.
இயங்கு—இயக்கு—இயக்கம்=செலவு, அசைவு.
இய்—எய்—ஏ—ஏகு. ஏகுதல்=செல்லுதல். ம. ஏகு, தெ. ஏகு (g).

ஒ. நோ : இயல்—ஏல், போ—போகு. ஏலுதல்=இயலுதல் (கூடிய தாதல்).
ஏ—யா—யாத்திரை=செலவு. யா—ஜா—ஜாத்ரா (இ.).

ஒ. நோ : ஏன்—யான், ஏது—யாது, ஏமம்—யாமம், ஏனை—யானை.
ஜா என்னும் இந்தி வினை இறந்தகாலத்தில் கயா (gayā) என்றே புடைபெயரும்.
சகரம் ககரமாவது போல் ஜகரம் 'g' ஆகும். இந்திக்கு மூலமான சூரசேனியில் ஜா என்னும் இந்தி வினை ஏ அல்லது யா என்றே வழங்கியிருக்கலாம்.

தியூத்தானியத்தில் ஜா என்னும் போதல் வினை gā எனத் திரியும். OS, OE gān, OHG gān, gēn, E go. ஆ ஓவாகத் திரிதல் தமிழிலுமுண்டு.

எ - டு: பெரியார்—பெரியோர், ஆம்—ஓம்.

"ஓமோமென வோங்கிய தோர் சொல்" (திருவாலவா. 38:4)

தமிழில் யகரம் சகரமாகவும் சகரம் ககரமாகவும் திரிதல் போல், திரவிட மொழிகளிலும் வடநாட்டு மொழிகளிலும் ஆரிய மொழிகளிலும் யகரம் ஜகரமாகவும் ஜகரம் 'g' ஆகவும் திரிகின்றன.

எ - டு: நெயவு—நெசவு, செய்—(கெய்)—கை.

யமன் (வ.)—ஜமுடு (தெ.), யோகி (வ.)—ஜோகி (இ.),
யௌவன (வ.)—juvenis (L.) ஜா—gā.

உய் என்னும் தமிழ்வினை வேத ஆரியத்தில் அய் என்று திரிந்து வழங்குகின்றது.

அய்—அயத்தே (ayate, இ. வே. i, 127, 3)=இயங்குகின்றான், செல்கின்றான்.
அய=செலவு, இயக்கம்.
அயன=செலவு (வா. ஸ. xxii,7), இயக்கம்.
அயனம்=இயக்கம், நடக்கை. சாலை, வழி (இ. வே. iii, 33, 7).

அயத்த, அயத்தம்=பாதம் (இ. வே. x 28 : 10, 11).

இய் என்னும் தமிழ் வினை ஆரிய மொழிகளில் இ என்று குறுகி வழங்குகின்றது.

Gk imen, L imus, iter ; Slav idu=I go, iti=to go,
Goth iddja= I went.
இ (இ. வே., அ. வே.),=செல்.
இத்=செல்கை. இத்த=போய். இத்தம்=வழி (ச. பி.).
இயங்கு—இக் (ikh)=இயங்கு, செல்; இயங்கு—இங்க் (inkh)=இயங்கு, செல்.
இயங்கு—இங் (இ. வே. ing)=இயங்கு, செல்.
ஏ (இ. வே.)=ஏகு, நெருங்கு, அடை. ஏத்த=சென்று, அடைந்து (இ. வே.).
ஏ—யா. (இ. வே.)=செல். யாத்த=போய் (இ. வே.).
யாத்ரி (இ. வே.)=செலவு, வழிப்போக்கு.

இ (இய்), ஏ (ஏகு) என்னும் இருவினைகளையும், வேத மொழியில் செல்லுதல், சென்றடைதல், அடைதல், பெறுதல் என்னும் பொருள்களில் ஆண்டிருக்கின்றனர். இப்பொருள்களில் அவை எய்து என்னும் வினையை ஒத்திருக்கின்றன. எய்துதல்=சென்றடைதல், அடைதல், பெறுதல். இய்—எய்—எய்து.

செல்லுதல் என்னும் பொருளில் வேத மொழியில் வழங்கும் கம் (gam) என்னுஞ் சொல், தியூத்தானியத்திலுள்ள gan (E.go) என்னுஞ் சொல்லைப் பெரிதும் ஒத்திருத்தல் காண்க.

செலவு என்று பொருள்படும் கம (gama), கமன (gamana) முதலிய சொற்களில் கம் என்பது முதனிலையாயிருப்பினும், கத (போய்), கதி (போக்கு) முதலிய சொற்களில் க (ga) என்பதே முதனிலையாயிருப்பது கவனிக்கத் தக்கது. மேலும், gan என்பது gam என்று திரிதலும் இயல்பே.

வந்த என்னும் எண்ணுப் பெயர்

தெலுங்கில் நூற்றைக் குறிக்க, நூறு என்னுஞ் சொல்லொடு வந்த என்னுஞ் சொல்லுமுளது.

இச்சொல் இலத்தீனிலுள்ள Centum என்னும் நூற்றுப்பெயரை ஒத்துளது. இதன் ஆங்கிலப் பலுக்கம் செந்தும் என்று சகர முதலாயிருப்பினும். இலத்தீன் பலுக்கம் கெந்தும் என்பதே. கிரேக்கத்திலுள்ள ஹெகந்தோன் என்னும் பெயரும் இதன் மறுவடிவே.

கிரேக்கம் இலத்தீனைவிடத் திரிந்த மொழியாதலால், அவ்விரு மொழிக்கும் பொதுவான சொற்கள் பெரும்பாலும் கிரேக்கத்தில் சற்றுத் திரிந்தேயிருக்கும். அத்திரிபு பெரும்பாலும் முன்மிகையாகவே யிருக்கும்.

எ-டு: L. nomen, Goth, OS, OHG namo, OE nama, E name, Gk onoma.

இம்முறையில், நூற்றைக் குறிக்கும் கிரேக்கச் சொல்லும் முன்மிகை கொண்டுள்ளது.

Hundred என்னும் ஆங்கிலச் சொல் centum என்பதினும் வேறுபட்டதாய்த் தோன்றினும், உண்மையில் அது பின்னொட்டுப் பெற்ற இலத்தீன் சொற்றிரிபே.

Hund என்பது நூற்றைக் குறிக்கும் பழைய ஆங்கிலச் சொல். அது எண் (number) என்று பொருள்படும் red என்னும் பின்னொட்டைக் கொண்டுள்ளது.

Goth rathjo (=number)—rath—red.

ஹகரம் ககரத்திற்கு இனமாதலால், centum என்பது hund எனத் திரிந்தது.

நூற்றைக் குறிக்கும் பிற ஆரிய மொழிச் சொற்களாவன :—

Ir-cet, Toch kant, Lith. szimtas, Goth hunda, Germ hundert, O. Sl suto, VL Śata, Skt Śatam, Av satam.

மேலையாரிய மொழிகளிலெல்லாம் நூற்றுப்பெயர் இடையில் மெல்லின மெய்கொண்டிருக்க, கீழையாரிய வேதமொழியில் மட்டும் அச்சொல் அது தொக்கிருப்பது, அதன் திரிபொடு பின்மையையுங் காட்டுவதாகும்.

மேலையாரியத்தினும் கீழையாரியம் பிந்தியதென்பது பின்னரும் பல்வேறிடத்து விளக்கப் பெறும்.

வகரம் சகரமாகத் திரிவது பெரும்பான்மையாவதால், வந்த என்னும் தெலுங்கச் சொல் கெந்த அல்லது கெந்து(ம்) எனத் திரிந்திருப்பது, உத்திக்கும் இயற்கைக்கும் ஒத்ததே.

வந்த என்பது போன்றே, வேறுசில தெலுங்கச் சொற்களும் சொல் வடிவுகளும் மேலையாரியத்துச் சென்று வழங்குவது கவனிக்கத்தக்கது.

தெலுங்கு	மேலையாரியம்
கிந்த—க்ரிந்த	GK cata (down)
பம்பு	GK pempo (to send)
பிள்ளை (த.)—பில்லி	L feles (cat)
மிக்கு (த.)—மிக்கிலி	OS mikil, OHG mihhile ON mikell, Goth mikils, E mickle
மக (த.)—மொக	L. mas (a male)
அறை (த.)—ராய்	GK laia (a stone)
வெள்ளு	OS, OE, E wend (to go)

Bowels என்னும் ஆங்கிலச் சொற்கு ஆங்கில அகர முதலிகளிற் காட்டப்பட்டுள்ள மூலம், அத்துணைப் பொருத்தமாய்த் தோன்றவில்லை. அது பேகுலு என்னும் தெலுங்கச் சொல்லின் திரிபாயிருக்கலாம். சதுவு என்னும் தெலுங்கச் சொல் studium (E study) என்னும் இலத்தீனச் சொல்லொடு தொடர்பு கொண்டதா என்பது ஆராயத்தக்கது.

இலத்தீனிலும் கிரேக்கத்திலுமுள்ள பல ககரமுதற் சொற்கள், ஆங்கிலத்திற் சகர முதலாகத் திரிந்து வழங்குகின்றன.

எ - டு :

இலத்தீன்	ஆங்கிலம்	கிரேக்கம்	ஆங்கிலம்
Celebrare	Celebrate	Kentron	Centre
Civicus	Civic	Kinema	Cinema

c=k(L)

இம்முறையிலேயே, கெந்தும் என்னும் இலத்தீன் சொல்லும் சில மேலையாரிய மொழிகளிலும் கீழையாரிய மொழிகளிலும் சகர முதலாகத் திரிந்துள்ள தென்க. ஆரிய மொழிக்குடும்பத்திலுள்ள பிற எண்ணுப் பெயர்களும், தென்மொழித் தொடர்புடையவை யென்பது பின்னர்க் காட்டப் பெறும். நூற்றைக் குறிக்கும் எண்ணுப் பெயரின் முதலெழுத்துப் பற்றி, ஆரிய மொழிகளைக் கெந்தும் மொழிகள் என்றும் சதம் மொழிகள் என்றும் இருபாலாகப் பகுத்துள்ளனர். ஆயின், தியூத்தானியச் சொற்கள் ஹகர முதலாயிருப்பதைக் கவனித்திலர்.

3. ஆரிய மொழிக் குடும்பம்

உலக மொழிகள் மொத்தம் ஏறத்தாழ மூவாயிரம். அவை முப்பது குடும்பம்போற் பகுக்கப்பெறும். அவற்றுள் முதன்மையானவை ஆரியம், சேமியம், சித்தியம் (அல்லது துரேனியம்) என மூன்றுகச் சொல்லப்பெறும். அவற்றுள்ளும் ஆரியம் முதன்மையாகக் கொள்ளப்பெறும்.

தமிழும் அதன்வழிப்பட்ட திரவிடமும் சேர்ந்த தென்மொழிக் குடும்பத்தை, சிலர் ஆரியத்துள்ளும் சிலர் சித்தியத்துள்ளும் அடக்குவர். உண்மையில் அது அவையிரண்டிற்கும் பொதுமூலமாகும்.

ஆரியக் குடும்பத்தைப் பின்வருமாறு பதினொரு பிரிவாகப் பகுப்பர்.

(1) இந்திய ஆரியம் (Indo-Aryan)
(2) ஐரேனியம்
(3) பாலத்திய சிலாவோனியம் (Baltic - Slavonic)
(4) அர்மீனியம்
(5) அல்பானியம்
(6) கிரேக்கம்
(7) இலத்தீனம்

(8) செலத்தியம் (Celtic)
(9) தியூத்தானியம் (அல்லது செருமானியம்)
(10) தொக்காரியம் (Tocharian)
(11) இத்தைத்தம் (Hittite)

இனி இவற்ருெடு திரேசியம் (Thracian), பிரிகியம் (Phrygian) முதலிய வேறு அறுசிறு பிரிவுகளையும் சேர்த்துக் காட்டுவர் பேரா. பரோ. அவை அத்துணைச் சிறப்புடையனவல்ல.

இவற்றுள் முதன்முதலாக ஆரியம் எனப் பெயர் பெற்றது இந்திய ஆரியமே. இந்திய ஆரியருள் ஒரு கூட்டத்தார் மேற்கு நோக்கிப் பிரிந்து சென்று கீழைப் பாரசீகத்திற் குடியேறியபின், அவர் நாட்டிற்கு ஆரியா அல்லது ஆரியாரு என்று பெயர் ஏற்பட்டதாகத் தெரிகின்றது. ஆரியாரு என்பது பின்னர் இரான் என மருவிற்று. இம்மருஉவினின்றே ஐரேனியம் (Iranian) என்னும் மொழிப்பெயர் தோன்றியுள்ளது.

கி. பி. 1796-இல், வில்லியம் சோன்சு (William Jones) என்னும் ஆங்கிலேயர், கிரேக்க இலத்தீன செருமானிய கோதிய செலத்திய மொழிகட்கும் சமற்கிருதத்திற்கும் இடைப்பட்ட நெருங்கிய உறவைக் கண்டுபிடித்தார். அதினின்று செருமனியிற் சமற்கிருதக் கல்வி மிக ஊக்கமாய் மேற்கொள்ளப் பெற்றது. அதன் விளைவாகத் தோன்றிய பிரடெரிக்கு மாக்கசு முல்லர் (Friedrich Max Muller, 1823—1900) என்னும் செருமானிய மொழிநூற் பேரறிஞர், ஆரியம் என்னும் சொல்லைச் சமற்கிருதத்திற்கினமான ஐரோப்பிய மொழிகட்கும் பெயராக விரிவுபடுத்தினர். அதனுல், ஆரியர் என்ருெரு தனி மக்கட் பேரினம் இருப்பதாகவும் தவருன கருத்தெழுந்தது.

இன்றும் ஆரியம் என்னும் பெயர் ஒரு மொழிக் குடும்பத்தைப் பொதுவாகக் குறிப்பதுடன், இந்திய ஆரியத்தைத் தனிப்படச் சுட்டவுஞ் செய்யும். அதனுல், தெளிவு நோக்கி, ஆரியமொழிக் குடும்பம் இந்திய—ஐரோப்பியம் (Indo-European) அல்லது இந்திய-செருமானியம் (Indo Germanic) என்று சொல்லப்பெறும்.

4. வடமொழிப் பெயர்கள்

வேதமொழி அல்லது அதன் செயற்கை வளர்ச்சியான இலக்கிய நடைமொழி (Literary dialect), வடக்கினின்று வந்ததால் வடமொழி என்றும், நன்ருகச் செய்யப்பட்டது என்னும் பொருளில் சமற்கிருதம் (ஸம்ஸ்க்ருத) என்றும், தேவர் பேசுவது என்னும்

பொருளில் தேவமொழி (தேவபாஷா) அல்லது கீர்வாணம் என்றும், ஆரியர் மொழி என்னும் பொருளில் ஆரியம் என்றும், பெயர் பெறும்.

இவற்றுள் பின்மூன்றும், ஆரியர் அல்லது பிராமணர் தமிழரின் ஏமாறுந் தன்மையைப் பயன்படுத்திக்கொண்டு, தம் அளவிறந்த செருக்கினால் தற்புகழ்ச்சியாகத் தாமே இட்டுக்கொண்ட பெயராகும்.

ஆரியம் என்னும் சொல் பிற்காலத்தில் ஆரிய அமைப்புள்ள மொழிகட்கெல்லாம் பொதுப்பெயராகி விட்டதனால், வேதமொழி அல்லது சமற்கிருதம் இந்திய ஆரியம் என்று அடைகொடுத்துக் குறிக்கப்பெறும்.

ஆரியன் என்னும் சொற்கு, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராமுதலியில், ஆரிய வகுப்பினன், ஆரியாவர்த்த வாசி, பெரியோன், ஆசாரியன், அறிவுடையோன், உபாத்தியாயன், ஐயனார், மிலேச்சன் என்னும் எண் பொருள்கள் கூறப்பட்டுள. இவற்றுள் ஈற்றயல் ஐந்தும் பிராமணர்க்குத் தென்னாட்டில் ஏற்றம் ஏற்பட்டபின் தோன்றியவை.

ஆசாரியனைக் குரவன் என்பதும், உபாத்தியாயனை ஆசிரியன் என்பதும், தமிழ்மரபு.

வடநாட்டு ஆரியர் பல்வேறு தொழிலரா யிருந்திருக்கலாமேனும், தென்னாட்டிற்கு வந்த ஆரியர் வேதமோதிப் பிழைத்த பிராமணரே. கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலும், "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" (தேவா. 844 : 5) என்று திருநாவுக்கரசர் ஆரியரையும் தமிழரையும் வேறுபடுத்திப் பாடுதல் காண்க. முசிலீம் மக்கள் தமிழ் நாட்டாரைப் 'பாமன் தமில்' (பிராமணன் தமிழன்) என்று பகுத்ததும் கவனிக்கத் தக்கதாம்.

கி.பி. 3-ஆம் நூற்றாண்டிலெழுந்த மணிமேகலையில், பிராமணன் (ஆரியப் பார்ப்பான்) வடமொழியாளன் என்றும், பிராமணத்தி (ஆரியப் பார்ப்பனி) வடமொழியாட்டி என்றும், குறிக்கப்பட்டுள்ளனர்.

"வடமொழி யாளரொடு வருவோன் கண்டு" (5 : 40).
"வடமொழி யாட்டி மறை முறை யெய்தி" (மணி. 13 : 73).

ஆரியம், வடமொழி என்னும் இரண்டும் ஒருபொருட் சொற்களாகவே தொன்றுதொட்டுத் தமிழகத்தில் வழங்கி வந்திருக்கின்றன.

"வடமொழி வாசகம் செய்தநல் லேடு" (சிலப். 15 : 58).
"ஆரியம் முதலிய பதினெண் பாடையின்"

(கம்பரா. பம்பா. 14.)

ஆரியன் என்னும் சொற்கு உழவன் என்று பொருள்கொண்டு, ar என்னும் இலத்தின் சொல்லை மூலமாகக் காட்டினர் மாக்கசு முல்லர். உழவுத் தொழிலில் முதன்முதற் சிறந்தவர் தமிழராதலாலும், ar என்னும் இலத்தீன் சொல்லும் ear என்னும் ஆங்கில சாகசனியச் சொல்லும் ஏர் என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபாதலாலும், வேத ஆரியர் ஆடுமாடு மேய்க்கும் முல்லை நாகரிக நிலையிலிருந்தமையாலும், "ஆரியர் மிலேச்சர்." என்று திவாகரம் கூறுதலானும், உயர்நாகரிகத்திற்கு அடிப்படையான உழவுத் தொழிலர்க்கு அநாகரிகர் (மிலேச்சர்) என்னும் பெயர் பொருந்தாமையானும், கி. பி. 2-ஆம் நூற்றுண்டில் இயற்றப்பட்ட மனுதரும சாத்திரத்திலும்

"சிலர் பயிரிடுதலை நல்லதொழிலென்று நினைக்கிறர்கள். அந்தப் பிழைப்புப் பெரியோர்களால் நிந்திக்கப்பட்டது. ஏனெனில், இரும்பை முகத்திலேயுடைய கலப்பையும் மண்வெட்டியும் பூமியையும் பூமியிலுண்டான பலபல ஜெந்துக்களையும் வெட்டுகிறதல்லவா?" (இராமநுஜாசாரியர் மொழிபெயர்ப்பு)

என்று கூறியிருத்தலானும், ஏரைக்குறிக்குஞ் சொல் இந்திய ஆரியத்திலின்மையாலும், ஆரியன் என்னும் பெயர் முதன்முதல் வேத ஆரியனுக்கே ஏற்பட்டதாகத் தெரிதலானும், அவர் கூற்றுப் பொருந்தாது.

வேத ஆரியர்க்கு இனமானவரும், செந்து (Zend) பழம்பாரசீகம் (Old Persian) ஆகிய ஆரிய மொழிகளைப் பேசினவரும், வேத ஆரியர் போன்றே நெருப்பு வழிபாட்டினருமாகிய, பழம்பாரசீக ஆரியர் இந்திய ஆரியரினின்று பிரிந்து போனவரே யாதலாலும், ஆரியன் என்னும் பெயர் இந்தியாவிலேயே ஏற்பட்டுவிட்டமையாலும், அச்சொல்லிற்கு வேத மொழியிலேயே கரணியங் காணுதல் வேண்டும்.

ஒரு நாட்டினத்திற்கு அல்லது மக்களினத்திற்கு நாடு அல்லது இடம், மொழி, நிறம், தொழில், சிறப்பியல்பு முதலியவற்றுற் பெயர் தோன்றும். அப்பெயர் ஓர் இனத்தார்க்குப் பிறரால் இடப்பெறலாம்; அல்லது அவ்வினத்தாரே தமக்கு இட்டுக்கொள்ளலாம்.

வேத ஆசிரியர் வெண்ணிறமாயிருந்ததினுலும், எடுப்போசையும் மூச்சொலியும் மிக்க முன்னேர் மொழியைக் கொண்டிருந்ததினுலும், அவையில்லாத வடநாட்டுத் திரவிடரையும் தென்னுட்டுத் தமிழரையும் ஏமாற்றி, தாமே தம்மை நிலத்தேவர் (பூசுரர்) என்றும் தம் முன்னேர் மொழியையும் அதனெடு வடதிரவிடங் கலந்த வேத

மொழியையும் தேவமொழி (தேவ பாஷா) என்றும் சொல்லிக்கொண் டது போன்றே, ஆரியன் என்னும் பெயரையும் தமக்கு இட்டுக் கொண்டனர்.

முதன் முதலாகத் தென்னாட்டிற்கு வந்த பிராமணரும் வெண் ணிறத்தாரே என்பது,

"நித்திலப் பைம்பூண் நிலாத்திகழ் அவிரொளித்
தண்கதிர் மதியத் தன்ன மேனியன்
ஒண்கதிர் நித்திலம் பூணொடு புனைந்து
வெண்ணிறத் தாமரை அறுகை நந்தியென்
றின்னவை முடித்த நன்னிறச் சென்னியன்
....
மூத்தீ வாழ்க்கை முறைமையின் வழாஅ
வேத முதல்வன் வேள்விக் கருவியொ(டு)
ஆதிப் பூதத் ததிபதிக் கடவுளும்"

என்னும் பிராமணப்பூத வண்ணனையினின்று (சிலப். 22: 16-36) அறிந்துகொள்க.

"அகத்தெழு வளியிசை அரில்தப நாடி
அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே"

என்பது (தொல். 102) ஆரிய மூச்சொலி மிகவைக் குறிக்கும்.

மானியர் வில்லியம்சு சமற்கிருத - ஆங்கில அகரமுதலியில், ஆரிய (ஆர்ய) என்னுஞ் சொற்கு,

"a respectable or honourable or faithful man"

என்று பொருள்கூறி, அர்ய என்பது மூலமாகக் காட்டப்பட்டுள்ளது. அர்ய என்னுஞ் சொற்கு,

"Kind, favourable, R V; attached to, true, devoted,
dear, R V; exccllent, L."

என்று பொருளும் ஆட்சி நூலுங் குறிக்கப்பட்டுள்ளன. அர்ய என் பதற்கு ரு என்பதை வேராகக் காட்டுவது எத்துணையும் பொருந் தாது.

அருமை என்னும் தமிழ்ச்சொற்கு, எளிதாய்க் கிடையாமை, பெருமை, மேன்மை என்பவற்றொடு பேரன்பிற்குரிமை (endearment) என்பதும் பொருளாயிருத்தல் கவனிக்கத்தக்கது.

இச்சொல்லின் முதனிலையான அரு என்பது ஆரி என்றுந் திரியும்.

ஆரி= 1. அருமை. "ஆரிப்படுகர்" (மலைபடு. 161).
2. மேன்மை.
"ஆரி யாகவுஞ் சாந்தந் தளித்தபின்" (சீவக 129).
3. அழகு (சூடா).

ஆரி என்னுஞ் சொல் அன்னீறு பெற்று ஆரியன் (மேலோன், உயர்ந்தோன்) என்றுவது, மிக எளிதும் இயல்புமாகும் இச்சொல் ஆரியமொழியில் ஆர்ய என்ற வடிவே ஏற்கும்.

ஆயினும், சிந்து வெளியிலிருந்த ஆரியனுக்குத் தென்னாட்டுத் தமிழ்ச் சொல்லால் எங்ஙனம் பெயர் அமைந்திருக்குமென்று, பலர் ஐயுறலாம். ஆரிய வருகைக்கு முன்பும் வட இந்தியாவில் திரவிடரே பெரும்பாலராய்ப் பரவியிருந்தனர் என்பதையும், வேதப் பெயரும் வேதப் பிரிவின் பெயரும் தென் சொற்றிரிபே என்பதையும், இந்தியா விற்கு வருமுன்னரே வேத ஆரியரின் முன்னோர் மொழியில் தமிழ்ச் சொற்கள் கலந்திருந்தன என்பதையும், வேதக் காலத்திலேயே வேத ஆரியர்க்குத் தமிழரொடு தொடர்பு ஏற்பட்டு விட்டது என் பதையும் உணர்வார்க்கு, இதில் எள்ளளவும் ஐயத்திற்கிடமில்லை யென்க. வேதப் பெயரும் வேதப் பிரிவின் பெயரும் இலக்கியவியலில் விளக்கப்பெறும். ஆண்டுக் காண்க.

ஒ. நோ : அரிய=மேலான. Gk aristos=best noble; isto (Sup. suf).

கடைக் கழகக் காலத்துப் பேதை வேந்தரும் அவரைப் பின் பற்றிய பேதை மாந்தரும் பிராமணரை நிலத்தேவரென்றே நம்பி வணங்கியதால், ஆரியன் என்னும் சொற்கு அர்ச்சிக்க (வணங்க)ப் படத்தக்கவன் என்று பொருள் கூறி, அர்ச் என்னும் ஆரியச் சொல்லை யும் அதற்கு மூலமாகக் காட்டுவர் வடமொழியாளர். அர்ச் என்பதி லுள்ள சகரம் ஆர்ய என்பதிலின்மையால், அது பொருந்தாது.

இராமன் சிறந்த அரசனாகவும் திருமாலின் அல்லது இறைவனின் தோற்றரவாகவும் கருதப் பெற்றதினாலேயே அவனை ஆரியன் என்று குறித்தனர் புலவர்; அவன் ஆரிய இனத்தினன் என்னுங் கருத்தினா லன்று.

"அஞ்சிலே யொன்று ருக ஆரியற் காக வேகி"—தனியன்
"ஆரியன் உரைப்பதானுன் அனைவரும் அதனைக் கேட்டார்,'
(கம்பரா. விபீடண. 106)

இராமன் கதிரவக்குல அரசனுதலின், சோழர் குடிக் கிளை யினனே. இது 'தமிழர் வரலாறு' என்னும் நூலில் விளக்கப் பெறும்.

ஒரு மொழிக்கு, அதைப் பேசும் மக்களால், அல்லது அது வழங் கும் இடத்தினுல், அல்லது அது எழுதப் பெற்ற நூலினுல், அல்லது அதன் எழுத்து வடிவினுல், அல்லது அதன் ஒலிச் சிறப்பியல்பால் பெயர் ஏற்படும். இவற்றுள் முதல் வகையால், ஆரியன் மொழி ஆரியம் எனப் பெற்றது

5. ஆரியர்க்குப் பிறந்தகமின்மை

ஆரிய இனத்தின் பிறந்தகம் எதுவென்று இரு நூற்ருண்டாக ஆராய்ச்சி நடைபெற்றுவரினும், இன்னும் எல்லார்க்கும் ஒப்ப முடிந்த முடிபிற்கு வரமுடியவில்லை. சிலர் காண்டிநேவிய மென்றும், சிலர் செருமனியென்றும், சிலர் காக்கேசிய மலைவாரம் என்றும், சிலர் பார சீகம் என்றும், சிலர் நடுவாசியா என்றும், சிலர் காரக்கோர மலைவாரம் என்றும், சிலர் சிந்துவெளியென்றும் பலரும் பலவாறு கூறிவருவா ராயினர்.

இங்ஙனம் முரண்பட்ட பல்வேறு கொள்கைகளையும் ஆழ்ந்து நோக்கின், ஒவ்வொன்றிலும் ஒரு சிறிது உண்மையுமிருக்கக் காணலாம்.

ஆரியம் என்பது ஒரு தனிமொழியையும் ஒரு குறுகிய காலத்தை யும் இடத்தையும் தழுவிய ஒரு தனியினமன்று. கிறித்துவிற்கு முன் ஏறத்தாழ 5000 ஆண்டுக் காலத்தையும், இந்தியா முதல் காண்டி நேவியம் வரை பல்லாயிரக்கணக்கான இடப்பரப்பையும் தழுவி, திரவிட நிலையிலிருந்து கீழையாரிய நிலைவரை திரிந்து, பல்வேறு அர சியல் நாடுகளையும் மக்கட் கூட்டங்களையும் தோற்றுவித்த, நெடுந் தொடர்த் திரிபினமே ஆரியமாகும்.

திரவிடம் வடமேற்காகத் தொடர்ந்து சென்று காண்டிநே வியத்தை முட்டித் திரும்பி, ஐரோப்பாவில் ஆரியமாக மாறியபின், மீண்டும் தென்கிழக்காக வந்து வட இந்தியாவில் வேத ஆரியத்தை யும் தென்னிந்தியத் தொடர்பினுற் சமற்கிருதத்தையும் பிறப்பித் திருப்பதால், இந்தியாவும் ஐரோப்பாவும் ஆகிய இருகோடிகளும் இவற்றிற்கிடைப்பட்ட பல இடங்களும் ஒவ்வொரு வகையில் ஒவ் வோரளவு ஆரியப் பிறந்தகமாக, வெவ்வேறு கோணத்தில் நோக்கு வார்க்குத் தனித்தனி காட்சியளிக்கின்றன.

இந்துக்குச (Hindukush) மலைத்தொடருக்கும் காரக்கோர (Karakorum) மலைத்தொடருக்கும் இடைப்பட்ட மலையடிவாரமான

வடகோகித் தானமே (Northern Kohistan) ஆரியரின் பிறந்தகம் என்று மேலையாரியத்தையும் கீழையாரியத்தையும் ஒப்பு நோக்கி யாராய்ந்த மாக்கசு முல்லர் கூறியுள்ளார். இது பிறர் முடிபினுஞ் சற்றே சிறந்ததன்றி முழுவுண்மையானதன்று.

அவர் கூறும் வட கோகித்தானம், கீழையாரியர் இந்தியாவிற்கு வருமுன் நெடுங்காலந் தங்கியிருந்த இடத்தையே குறிக்குமாதலால், அவர் கூற்று குன்றக் கூறல் அல்லது குறைப்பரவல் (அவ்வியாப்தி) என்னுங் குற்றந் தங்குவதாகும்.

ஆரியமொழிகட்குள் வேத ஆரியமும் அதன் கொடுமுடி அல்லது விரிவளர்ச்சியான சமஸ்கிருதமுமே பிறங்கித் தோன்றுவதாலும், அவற்றை அடிப்படையாக வைத்தே ஆரியமொழிக் கூட்டுக் குடும் பங்களை யமைத்து மேனுட்டார் ஆய்ந்து வருவதாலும், அவற்றை நீக் கிய ஆரியநிலை, அவர் கருத்துப்படி குறைத்தலையுடம்பே யென்று கூறிவிடுக்க.

இந்தியாவிற்குள் எங்ஙனம் பிராமணர்க்குத் தனி நாடில்லையோ, அங்ஙனமே விரிநீர் வியனுலகிலும் ஆரியத்திற்குப் பிறந்தகமாகக் கூறும் தனியிடமில்லையென்று, தெற்றெனத் தெரிந்துகொள்க.

6. வடமொழியின் ஐந்நிலை

வடமொழி ஒரு திரிமொழியும் கலவை மொழியுமாதலின், அது பின்வருமாறு ஐவேறு நிலை கொண்டதாகும்.

(1) தென் திரவிடம் (வடுகு)

முதன் முதல் வடதிசையாற் பெயர் பெற்ற மொழி வடுகு என்னும் தெலுங்கே. அது வேதக் காலத்திலேயே தமிழினின்று திரிந்திருந் தது.

வடம் – வடகு—வடுகு—வடுகம்.

வடகு என்னும் சொல்லிடையுள்ள டகரம், அதையடுத்து ஈற்றிலுள்ள குகரச் சார்பால் டுகரமாயிற்று. இங்ஙனம் அகரம் உகரமாய்த் திரிந் தது உயிரிசைவு மாற்றம் (Harmonic Sequence of Vowels) என்னும் நெறிமுறையாகும்.

ஒ. நோ: கேடகம்—கிடுகு

தமிழையடுத்து வடக்கிலுள்ள வடுகு, பல்வேறு வகையில் வலித்தும் திரிந்தும் விரிந்தும் ஆரிய அமைப்பிற்கு அடிகோலுகின்றது.

(க) எடுப்பொலி

எ-டு : குடி-guḍi (கோவில்), கூன்-gūnu, சடை-ஜட.

(உ) வலிப்பொலி

எ-டு : செய்-cey, போடு-பெட்டு.
இங்க்கா=இன்னும், கொஞ்ச்செமு=கொஞ்சம்,
அண்ட்டாரு=என்றார், எந்த்த=எவ்வளவு,
கும்ப்பு=கும்பு.

இங்ஙனம் ஆரியத்தன்மையடைந்த ங்க்க, ஞ்ச்ச, ண்ட்ட, ந்த்த ம்ப்ப என்னும் வல்மெலிவலி யிணைகள் முதன்முதல் வடுகிலேயே தோன்றுகின்றன. தமிழில் இத்தகைய வொலிகள் மருந்திற்குங் காணக்கிடையா. அதிலுள்ளவை யெல்லாம் ங்க, ஞ்ச, ண்ட, ந்த, ம்ப, ன்ற ஆகிய மென்மெலிவலி யிணைகளே.

தெலுங்கிற்கு வடக்கிலுள்ள திரவிட மொழிகளும், இங்ஙனம் வலித்தேயொலித்துப் படிப்படியாக ஆரியமாய்த் திரிந்து, வடஇந்தியாவில் ஆரியமாகவே மாறிவிடுகின்றன. பெலுச்சித்தானத்திலுள்ள பிராகுவி மூச்சொலியும் பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது.

எ-டு : கண்-khan, பால்-phalt.

தமிழின் தென்மையை அறியாத வடவரும் மேலையரும் அவர் வழிப்பட்ட கோடன்மாரும், ஆரியத்தில் மட்டுமன்றித் திரவிடத்திலுமுள்ள எடுப்பொலிகளே தமிழில் எடுப்பிலாவொலிகளாக அடங்கி விட்டன என்று கூறுவர். அவர்தம் அறியாமையை நடுநிலையறிஞர் ஆய்ந்து காண்க.

(ங) முதனிலை விரிப்பு

எ-டு : அடி-அடுச்சு, நட-நடுச்சு.

(ச) இடையின இடைச் செருகல்

எ-டு : கிந்த-க்ரிந்த, பொத்து-ப்ரொத்து, மிங்கு ம்ரிங்கு.

(ரு) பெயர்ச்சொல் வடசொல்லாதல்

எ-டு : கண்ட்ட (g) - கண்ட்ட (gh), வந்த—சத,
ஆலி (மனைவி)—ஆலி (பெண்ணின் தோழி)

(சு) வினைச்சொல் வடசொல்லாதல்

எ-டு : இச்சு (to offer)—யஜ் (வே-)
வத்து (must not, don't)—மத் (பி.)—மா (a particle of prohibition or negation)—மே (Gk).

மத் என்னும் இந்திச் சொல் சூரசேனியில் மத்து என்றிருந்திருக்கும். வத்து என்னும் தெலுங்கச் சொல் வலது என்பதன் எதிர்மறையாம். வேதமொழியில் இது மா என்று குறுகியிருக்கின்றது.

(2) வடதிரவிடம் (பிராகிருதம்)

பிராகிருதம் என்பது சமற்கிருதம் தோன்றுவதற்கு முன்பு வேதக் காலத்திலேயே, இந்தியா முழுதும் வழங்கிவந்த வட்டார மொழிகளாகும். பிராகிருதம் என்னும் சொல், முந்திச் செய்யப் பெற்றது அல்லது இயற்கையாகவுள்ளது என்று பொருள்படும். பைசாசி, சூரசேனி, மாகதி, மகாராட்டிரி, திராவிடீ எனப் பிரகிருதம் ஐந்தாக வகுக்கப் பெற்றிருந்தன. இவற்றுள் முன் நான்கே பெரும்பாலும் பிராகிருதம் எனப்படும். அவற்றுள்ளும், மகாராட்டிரம் முதற்காலத்தில் பஞ்ச திராவிடத்துள் ஒன்ருகக் கொள்ளப்பெற்றது. விந்திய மலைக்குத் தெற்கேயுள்ள கூர்ச்சரம், மகாராட்டிரம், ஆந்திரம், கன்னடம், திராவிடம், (தமிழ்) ஆகிய ஐந்நாடுகளும் பஞ்ச திராவிடம் என வழங்கி வந்தன. ஆகவே, முதற்காலப் பிராகிருதம், பைசாசம், சூரசேனி, மாகதி என்னும் மூன்றே. இவற்றையும் மொழியளவிலன்றிச் சொல்லளவில் வேறுபடுத்திக் காட்டுவது வழக்கமன்று. மூவகைப் பிராகிருதச் சொற்களையும் பிராகிருதம் என்று பொதுப்படக் குறிப்பதே வழக்கம்.

வட இந்தியப் பிராகிருதமும் ஒரு காலத்தில் திரவிடமாயிருந்து திரிந்ததே. அது வேதக் காலத்திற்கு மிக முந்தியதாகும். ஆகவே, வேத ஆரியர் வருகைக்கு முன், இந்தியப் பழங்குடி மக்கள் மொழிகளெல்லாம், தெற்கில் தமிழும் வடக்கில் திரவிடமுமாக இருவேறு நிலைப்பட்டிருந்தனவென் றறிதல் வேண்டும். திரவிடமும், தென்திரவிடம், நடுத்திரவிடம், வடதிரவிடம் என மூவகைப்பட்டிருந்தது. தென்திரவிடம் வடுகு போன்ற கொடுந்தமிழ்; நடுத்திரவிடம் மராட்டிரமும் குச்சரமும்; வடதிரவிடம் வட இந்தியப் பிராகிருதம்.

காலக் கடப்பினுல் மட்டுமன்றி இடச்சேய்மையினுலும் மொழிகள் திரிகின்றன. தமிழ் போன்ற இயன்மொழியில்தான் செம்மை என்னும் வரம்பிட்டு, இலக்கிய வாயிலாகவும் உயர்ந்தோருலக வழக்கு வாயிலாகவும் அதன் திரிபைத் தடுக்க முடியும். தெலுங்கு, மராத்தி, இந்தி, ஆங்கிலம் பிரெஞ்சு முதலிய திரிமொழிகளெல்லாம் திரிபினுலேயே தோன்றியுள்ளன. ஆதலால், அவற்றின் திரிபைத் தடுக்குமாறும் விலக்குமாறும் இல்லை. திரிபை நீக்கிவிடின் திரிமொழிகள் அவ்வம்மொழிகளாகா. தெலுங்குத் திரிபை நீக்கிவிடின், அது தமிழாய்விடும். அங்ஙனமே பிரெஞ்சுத் திரிபை நீக்கிவிடின், அது இலத்தீனுகிவிடும்.

திரிபிற்கு ஓர் எல்லையுமில்லை; ஒரு தனிப்பட்ட வகையுமில்லை. திரிமொழிகள் பல்வேறு வகையில் மேன்மேலுந் திரியத்திரிய, புதுப் புதுமொழிகள் தோன்றிக்கொண்டே அல்லது பிரிந்துகொண்டே போகும். இதனால், ஓர் இயன்மொழிக்கும் அதன் திரிமொழிகட்கும் இடைப்பட்ட உறவு அல்லது தொடர்பு, திரிபின் அளவிற்கேற்ப நெருங்கியோ நீங்கியோ இருக்கும். திரிமொழிகட்குள்ளும் ஒரு தாய் மொழிக்கும் அதன் கிளைமொழிகட்கும் இடைப்பட்ட உறவும் இத்தகையதே.

பாலினின்றே தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகியவை உருவாக்கப் பெறுகின்றன. ஆயின், இவற்றிற்கிடைப்பட்ட உறவு திரிபிற்கேற்பத் தோற்றத்திலும் பண்பிலும், வேறுபட்டுளது. உருக்கின நெய் தோற்றத்திற் பாலினின்று முற்றும் வேறுபட்டு விடுகின்றது, நெய் உருவாகும் வகையை அறியாதவன் நெய்க்கும் பாலிற்குமுள்ள தொடர்பை உணர முடியாவாறு. இங்ஙனமே மொழி கட்கிடைப்பட்ட உறவுமென்க.

வடதிரவிடம் என்னும் பிராகிருதம், தமிழுக்கு எத்துணை நெருக்கமாயிருந்ததென்பதைப் பின்வருஞ் சொற்களாற் கண்டு கொள்க.

தமிழ்	பிராகிருதம	தமிழ்	பிராகிருதம்
அச்சன்	அஜ்ஜ	சுன்னம்	சுன்ன
அத்தன்	அத்த	செட்டி	சேட்டி
அத்தை	அத்தா	சேணி	சேணி
அப்பன்	அப்ப	சொக்கம்	சொக்க
இதோ	இதோ	நட்டம்-(நடம்)	நட்ட
எட்டி – செட்டி	சேட்டி	நீல் - நீலம்	நீல்
ஏழகம் (ஆடு)	ஏளக	நேயம்	நேஅம்
ஐயவி	சசவ	படிக்கம்	படிக்கஹ
ஐயன்	அய்ய	படிமை	படிமா
கச்சை	கச்ச	பரிவட்டணை	பரிவட்டண
கசடு	கசட, சகட	பரிவட்டம்	பரிவட்ட
கட்டை	கட்ட (ṭh)	பல்லக்கு	பல்லங்க (nk)
கந்தன்	கந்த	பளிங்கு	பலிக (ph)
கப்பரை	கப்பர (kh)	புடவி	புடவீ (ḍh)
கற்பூரம்	கப்பர	பேய், பேந்து	பேத
கம்பம்	கம்ப (kh, bh)	பையுள்	பய்யாவுல
கம்மாளன்	கம்மார	மண்டபம்	மண்டவ
கலாவம்	கலாவ	மாது	மாது
கவாளம்	கவாட்ட	வக்கணம்	வக்கண (gg)

காவு	காவ் (gh)	வக்கு	வக்க
குள்ளம்	குல்ல (kh)	வட்டம்	வட்ட
கொக்கு	கொக்கை	வண்ணம்	வண்ண
சகடி	சாடீ (ṭ)		
சரி (ஒப்பு)	சரி		
சாவம்	சாவ		
சிப்பி - இப்பி	சிப்பீ		
சுண்ணம்	சுண்ண		

(3) கீழையாரியம்

கீழையாரியம் என்பது, வேத ஆரியரின் முன்னோர் வட கோகித் தானிலிருந்த போது அவர் மொழிநிலை. அது கிரேக்கத்திற்கு மிக நெருங்கிய தாயிருந்தமை உய்த்துணரப் பெறும்.

(4) வேதமொழி

இது பின்னர்க் கூறப்பெறும்.

(5) சமற்கிருதம்

இதுவும் பின்னர்க் கூறப்பெறும். மேலும், இந்நூலிற் பெரும் பகுதி சமற்கிருதம் பற்றியதே.

7. இந்திய ஆரியர் வருகை

இந்திய ஆரியர், இந்தியாவிற்குட் புகுந்த போது, கிரேக்கத்திற்கு நெருங்கிய மொழியைப் பேசிக்கொண்டு ஆடுமாடு மேய்க்கும் முல்லை நாகரிக நிலையிலேயே இருந்தனர்.

பன்றி, மாடு, குதிரை முதலிய பல விலங்கிறைச்சியையும் அவர் உண்டு வந்தனர். சோமக் கொடிச் சாற்றினின்று உருவாக்கிய கள்ளையுண்டு களிப்பதும் அதைத் தெய்வமாகப் புகழ்ந்து பாடுவதும் அவர் வழக்கம். அக்கள்ளை அவர் வழிபட்ட தெய்வங்கட்கும் படைத்தனர்.

கதிரவன், நெருப்பு, காற்று, மழை முகில் முதலிய இயற்கைப் பொருள்களை வணங்குவதும், வேள்வியில் சிறு தெய்வங்கட்கு விலங்குகளைக் காவுகொடுப்பதும், இறந்த முன்னோர்க்கு உரிய நாளிற் பிண்டம் படைப்பதுமே அவர் மதம்.

அவருக்கு எழுத்துமில்லை; இலக்கியமு மில்லை முன்னோர் வரலாற்றுக் கதைகளும் சிறுதெய்வ வழுத்துக்களும் செவிமரபாகவே வழங்கி வந்தன. அவருள் அறிவிற் சிறந்த பூசாரியர் (புரோகிதர்)

மனமும், வேள்வித்தூண், சுருவம், உரல், அம்பு முதலிய உயிரிலாப் பொருள்களுடன் பேசுவதும், இயங்கும் கார்முகில்களைப் பறக்கும் மலைகளாகவும் மின்னலை அவற்றை வெட்டி வீழ்த்தும் மழைத் தெய்வத்தின் வெண் படைக்கலமாகவும் கருதுவதும், இரவு பகலையும் விடியற் காலத்தையும் தெய்வங்களாகப் போற்றுவதும், போன்ற சிறுபிள்ளைத் தன்மையளவே வளர்ச்சி யடைந்திருந்தது.

குமுகாய (சமுதாய) அமைப்பு முறையில், அவர் வெவ்வேறு சரவடியாக (கோத்திரமாக)ப் பிரிந்திருந்தனர். ஒவ்வொரு சரவடியும் உறவுத் தொடர்புள்ள பல குடும்பங்களையும் ஒரு தலைவனையும் ஒரு பூசாரியையும் கொண்டிருந்தது. தலைவனைப் போன்றே பூசாரியும் அவ்வச் சரவடியிற் பிறந்தவனாகவே யிருந்தான். பழமுறையைப் பின்பற்றிவரும் தமிழருள்ளும், ஒவ்வொரு குலத்தார்க்கும் அவ்வக் குலத்தானே சமயக் குரவனாயிருத்தலை இன்றுங் காண்க.

இந்திய ஆரியர் படையெடுத்துப் பிறநாடுகளைக் கைப்பற்றுமளவு பெருந்தொகையராய் வரவுமில்லை. அவருக்குள் பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற நாற்பாற் பகுப்புமில்லை. இப்பகுப்பெல்லாம் பிற்காலத்தில் வடஇந்தியத்திரவிடரொடும் தென்னிந்தியத் தமிழரொடும் தொடர்பு கொண்டபின்பு, ஆரியப் பூசாரியரான பிராமணர், அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் தமிழ்ப் பொருளிலக்கணப் பாகுபாட்டைப் பயன்படுத்திக் கொண்டு இந்தியர்க்குள் வகுத்தமைத்தவையே. ஆரியர் வந்த காலத்தில் வடஇந்தியாவிற் குடியிருந்தவர் பெரும்பாலும் திரவிடரே. ஆரியர் வடநாட்டுப் பழங்குடி மக்களொடு போரிட்டு நாடு கைப்பற்றியதாக வேதத்திற் கூறப்பட்டிருப்பதெல்லாம், பிராமணர் திரவிடரைக் கொண்டு திரவிடரை வென்ற சூழ்ச்சியே. இது, விரல் விட்டெண்ணத்தக்க அகத்தியர் நாரதர் முதலிய ஒரு சில வேதக் காலப் பிராமணர் தென்னாட்டிற்கு வந்து, தம்மை நிலத்தேவரென்று கூறிச் சேர சோழ பாண்டிய முத்தமிழ் நாட்டையும் அடிப்படுத்தியதையும்; அறிவாராய்ச்சி மிக்க இவ்விருபதாம் நூற்றாண்டிலும், பிராமணர் தமிழர் முன்னேற்றத்திற்கென்றமைக்கப் பெற்ற நயன்மைக் கட்சியைத் (Justice Party) தன்னலத் தமிழரைக் கொண்டே வீழ்த்தியதையும்; நோக்குவார்க்கு இனிது விளங்கும்.

ஆரியர் வருமுன்பே, தமிழர் இம்மை மறுமையாகிய இருமைக்கு மேற்ற பலதுறையிலும் உயர்நாகரிகமடைந்திருந்தனர். தமிழர் கண்ட கலைகளும் அறிவியல்களுமே வடமொழியில் மொழிபெயர்க்கப் பட்டும் விரிவாக்கப் பெற்றும் உள்ளன. மேலையறிஞர் இதையறியாது இந்திய நாகரிகம் முழுதும் ஆரியரதென மயங்கிவிட்டனர். இஃது, ஓர்

இரவலன் தன் சூழ்ச்சியாற் புரவலனானபின், அவனை அரசர்குடிப் பிறந்தவனாகக் கருதுவதொத்ததே.

இந்திய ஆரியர் வந்த காலம்

இந்திய ஆரியரின் முதல் இலக்கியமான இருக்கு வேதத்தின் காலம் கி. மு. 1200-1000 என்று மார்க்கசு முல்லரும் (Max Muller) கி. மு. 2400-2000 என்று வின்றர்நீட்சும் (Winternitz), கி. மு. 3000 ஆண்டிற்கு முன்னென்று சி. வி. வைத்தியாவும், கி மு. 4500-3000 என்று யாக்கோபியும் (Jacobi) கி. மு. 6000 என்று உலோக மானிய திலகரும், வெவ்வேறு கரணியமுங் கணிப்புங் கொண்டு கூறியுள்ளனர்.

இவருட் கடையிருவரும். இருக்கு வேதத்திற் கூறப்பட்டுள்ள ஆரல் (கார்த்திகை) நாண்மீனின் (நட்சத்திரத்தின்) நிலையிலிருந்து கணித்துள்ளனர். கணியமுறைக் கணிப்பு கருத்து வேறுபாட்டிற்கும் ஐயந்திரிபிற்கும் இடமானதாதலால், அறிவியன் முறைப்படி திட்ட வட்டமானதன்று.

ஆரிய வருகைக்கு முற்பட்ட அரப்பா - மொகஞ்சோதரோ (Harappa-Mohenjodaro) நாகரிக முடிவுக்காலம், வயவர் சாண் மாசர்லால் (Sri John Marshal) கி. மு. 3000 என முடிவு செய்யப் பெற்றுள்ளது. அந் நாகரிகத்திற்கும் வேத ஆரியர் நாகரிக நிலைக்கும் யாதொரு தொடர்புமில்லை. வேத மந்திரங்களை நால்வேதமாக வகுத்ததாகச் சொல்லப்படும் வியாசர் காலமாகிய பாரதக் காலம் கி. மு. 1000 என, இந்திய வரலாற்றாசிரியரும் ஆராய்ச்சியாளரும் பொதுவாக ஒப்புக் கொண்டுள்ளனர். மொகெஞ்சோதரோ நாகரிகத்திற்கும் இந்திய ஆரியர் வருகைக்கும் இடையே நெட்டிடை கழிந்திருக்குமாதலாலும்; பல்லாயிரக்கணக்கான வேத மந்திரங்கள் (10415) இயற்றப்படவும், அவை நால்வேறு தொகுப்புக்களாக (ஸம்ஹிதைகளாக)த் தொகுக்கப் பெறவும், வேத ஆரியர் சிந்துவெளி கங்கைவெளி முழுதும் பரவவும், குறைந்த பக்கம் 500 ஆண்டு சென்றிருக்குமாதலாலும்; இந்திய ஆரியர் வருகைக்காலம் கி. மு 2000-1500 எனக் கொள்வது எல்லா வகையிலும் மிகப் பொருத்தமானதாகும்.

8 வேதமும் வேதமொழியும்

இந்திய ஆரியரின் முதல் இலக்கியமாகிய வேதம் இந்தியாவிலேயே இயற்றப் பெற்றது; தமிழ் மதங்களாகிய சிவநெறி திருமால் நெறி ஆகிய இரண்டொடும் சிறிதும் தொடர்பற்றது. ஆரிய மதமாகிய சிறுதெய்வ வேள்வி வணக்கத்தைத் தமிழரும் திரவிடரும் ஏற்றுக்

கொள்ளாமையின், ஆரியர் அடுத்துக் கெடுத்தல் முறையில் தமிழ் மதங்களையே மேற்கொண்டு, புதுத் தெய்வங்களைப் படைத்தும் பல்வேறு புராணம் என்னும் தொல்கதைகளைக் கட்டியும், அவற்றை ஆரியப்படுத்தித் தமிழையுந் தமிழ்ப் பூசாரியரையும் தள்ளிவிட்டு, பிராமணரே ஆரியமொழியிற் கோயில் வழிபாடு செய்துவரும்படி ஏற்பாடு செய்துவிட்டனர்.

வேதத் தெய்வங்கள்

(1) சில தெய்வங்கள் மேலையாரியத் தெய்வங்கள்

எ-டு பெயர் மாறாத் தெய்வம் :

இ வே. (R. V.) பர்ஜன்யா (மழைத் தெய்வம்)

Lith. perkunas, Goth fairguni, ice. fiorgyn.

பெயர் மாறிய தெய்வம் :

இ வே. (R. V.) யமன் (யம); Gk. plouton - E pluto.

யமன் இறந்தோர் போய்ச் சேரும் கீழுலகத் தலைவன். இறந்த வுயிர்கள் கடக்கும் வழியில், நாற்கண்ணும் அகன்ற மூக்குத் துளையு முள்ள (யமனுடைய) இரு கொடிய நாய்கள் உள்ளன. — வேத ஆரியர் கொள்கை.

புளூட்டோ இறந்தவுயிர்கள் சென்றடையும் (Hades என்னும்) கீழுலகத் தலைவன். முத்தலையுள்ள கெர்பெரோசு (Gk Kerberos - E Cerberus) என்னும் நாய் கீழுலக வாயிலைக் காக்கின்றது. — கிரேக்கர் கொள்கை.

உஷஸ் என்னும் விடியல் தெய்வம் ஈயோஸ் (Eos) என்னும் கிரேக்கத் தெய்வத்தையும் ஔரோரா (Aurora) என்னும் உரோமத் தெய்வத்தையும் ஒத்தது.

(2) எல்லா வேதத் தெய்வங்களும் சிறு தெய்வங்களே.
இது நூலில் விளக்கப் பெறும்.

(3) பல தெய்வங்கள் இன்றும் தமிழர் கேட்டறியாதவை.

எ-டு : மித்ரா, பூஷன், உஷாஸ், அஸ்வினிகள், ரிபுக்கள், பிரஜாபதி.

(4) சில தெய்வங்கள் பழந்தமிழ்த் தெய்வங்களே.

எ-டு :

மேனாடு சென்றது.
வாரணன் — Gk Ouranos, இ. வே. வருண.
இந்நாட்டிலிருந்தது:

இந்திரன்—இந்த்ரா. வேந்தன் என்னும் மருதநிலத் தெய்வப் பெயரே வடநாட்டில் இந்திரன் என்று மொழிபெயர்ந்து வழங்கி வந்தது. கடைக்கழகக் காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் கொண்டாடப் பெற்று வந்தது வேந்தன் விழாவே.

(5) சில தெய்வங்களின் நிலைமை காலத்திற்கேற்ப மாறி வந்திருக்கின்றது.

எ-டு :

த்யௌஸ் (வானம்), வருணு, இந்த்ரா, அக்னி, ருத்ரா என்னும் தெய்வங்கள், வெவ்வேறு காலத்தில் மண்ணுலக அரசர்போல் தலைமை பெற்று வந்திருக்கின்றன.

(6) சில தெய்வங்கள் ஒன்றோடொன்று மயக்கத்தக்கனவாயுள்ளன.

எ-டு:

ஆதித்யர், சூர்ய, விஷ்ணு, சாவித்ரி என்னும் நான்கும் ஒரே தெய்வத்தைக் குறிக்கின்றன. சூரியன் பகற்காலத்திற்கும் சாவித்திரி இராக்காலத்திற்கும் உரியனவென்று, சாயனர் வேறுபாடு காட்டியுள்ளனர். ஆதித்தர் பன்னிருவரும் பன்னிரு மாதத்திற்கு உரியவர் என்று கூறலாம். ஆயின், முதலில் அறுவரும் இடையில் எண்மருமாகவே ஆதித்தர் குறிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. விஷ்ணுவைப் பற்றிச் சிறப்பாகக் கூறியிருப்பதெல்லாம், அது எழுச்சி உயர்ச்சி வீழ்ச்சி ஆகிய மூவெட்டுக்களால் வானைக் கடந்தது அல்லது கடக்கின்றது என்பதே. இது அதனைச் சூரியனினின்று வேறுபடுத்திக் காட்டுவதாகாது.

(7) சில வேதத் தெய்வப் பெயர்கள் அல்லது அவற்றின் அடைமொழிகள் தமிழ்த் தெய்வங்களைக் குறிப்பனவல்ல.

எ-டு:

விண்-விண்டு=வானம் (சூடா), முகில் (பிங்), திருமால் (பிங்).

விஷ்ணு=கதிரவன் (வே.).

விண்டு என்பதை விஷ்ணு என்பதனொடு மயக்கிவிட்டனர் பிற்கால ஆரியர்.

சிவன் என்னும் பெயர், சிவந்தவன் என்று பொருள்பட்டுச் சேயோன் என்னும் முருகனை முன்னும் முத்தொழிலிறைவனைப்பின்னும் குறிக்கும் தூய தமிழ்ச்சொல். வேதத்தில் அக்கினிக்கும் இந்திரனுக்கும் உருத்திரனுக்கும் பொது அடைமொழியாக வரும் சிவ

என்னும் சொல், மங்கல அல்லது நல்ல என்று பொருள்படும் பெயரெச்சம். இவ்விரண்டிற்கும் தொடர்பில்லை.

(8) சில தெய்வப் பெயர்கள் தூய தமிழ்ச் சொற்களே.

எ-டு: வள்-வர்-வார்-வாரணம்=நிலத்தை வளைந்து அல்லது சூழ்ந்து இருக்கும் கடல். வாரணம்—வாரணன்=நெய்தல் நிலத்திற்குரிய கடல் தெய்வம்.

வாரணன்—வருண (இ. வே.). இந்திய ஆரியர் நீண்டகாலமாகக் கடலையறியாது நிலவழியாய் வந்தவராதலின், நீலக்கடல் தெய்வத்தை நீல வானத் தெய்வமாக மாற்றிவிட்டனர். பின்னர்த் தமிழரொடு தொடர்பு கொண்டபின், மீண்டும் பழம்பொருளை ஓரளவு ஊட்டிக்கொண்டனர்.

உருத்தல்=சினத்தல். உருத்திரம்=சினம். உருத்திரம்—உருத்திரன்=சினந்த கடுங்காற்றுத் தெய்வம். உருத்திரன்—ருத்ர(இ.வே.).

ருத்ர (Rudra) என்னுஞ் சொற்கு ஊளையிடுபவன் (Howler) அல்லது உரறி (Roarer) என்று பொருள் கூறுவர் மாக்கசு முல்லர்.

ருத் (rud)=அழு, ஊளையிடு, உரறு.

இனி, ருத்ர என்னும் வடசொல்லைச் சிவன் என்னும் தென்சொல்லின் மொழிபெயர்ப்பாகவும் கொள்வர். இது வேதக்காலத்திற் கொவ்வாது.

ருத் (rud-rudh)=சிவப்பாயிரு. ருதிர (rudhira) = சிவப்பு, செந்நீர் (அரத்தம்), செவ்வாய், செம்மணி (மாணிக்கம்).

இப்பொருளில் ருதிர என்னுஞ் சொல் அரத்தம் என்னும் தென்சொல்லின் திரிபாகும்.

(9) சில தெய்வங்களைப்பற்றி ஓரளவு முரண்பட்ட செய்திகள் வெவ்வேறிடத்திற் கூறப்பட்டுள்ளன.

(10) சோமக்கள்ளைத் தெய்வமாக வணங்கி வந்ததும், அதற்கு 114 இருக்குவேதப் பாட்டுக்கள் பாடப்பட்டிருப்பதும், வேத ஆரியரின் பிள்ளை மனநிலையைக் காட்டப் போதியனவாம்.

(11) முருகன், சிவன், திருமால், காளி என்பவர் வேதங்களிற் சொல்லப்படவுமில்லை; அவர் ஆரியத் தெய்வங்களுமல்லர். அவர் தூய தமிழ்த் தெய்வங்களே என்பது, என் 'தமிழர் மதம்' என்னும் நூலில் விளக்கப்பெறும்.

(12) வேத ஆரியர் தமிழரொடு தொடர்பு கொண்டபின், சில வேதத் தெய்வங்களைத் தமிழ்த் தெய்வங்களோடு இணைத்திருக்கின்றனர்.

எ - டு :

வேதத் தெய்வம்	தமிழ்த் தெய்வம்
உருத்திரன்	சிவன்
விஷ்ணு (சூரியன்)	திருமால்

வேதமொழி

(1) வேதமொழி மேலையாரியத்திற் கினமானது. இது பின்னர்க் காட்டப்பெறும்.

(2) வேதமொழி மேலையாரியத்தின் திரிபானது.

எ - டு :

தமிழ்	தியூத்தானியம்	இலத்தீனம்	கிரேக்கம்	வேதமொழி
அகரம் (மருத நிலத்தூர்)	—	அகெர் (g)	அக்ரோஸ் (g)	அஜ்ர
அதோள்	திதெர்	—	—	தத்ர
இதோள்	ஹிதெர்	கித்ர	—	அத்ர
இரு	ஆர், இஸ்	எஸ்	எஸ்	அஸ்
இரும்பு	இரன், அயெர்ன்	ஈரிஸ்	—	அயஸ்
இல் (உள்)	உந்தர்	இந்தெர்	—	அந்தர்
இலக்கம் (எல்)	லைற்(று)	லக்ஸ்	லியூக்கோஸ்	ருச்(சு)
உகம்-நுகம்	யுக்	யுகும் (g)		யுக (g)
உகை-அகை (செலுத்து)	அ(க்)க	அகோ (g)	அகோ (g)	அஜ்
எல்ல	ஹல்லோ	—	—	அரே, ரே
ஏழகம்	எல்கெ (k)-எல்க்	—	—	ஏடக (k)
கனு	(க்)னீ	கெனு (g)	கொனு (g)	ஜானு
கத்து-(கத்தி)	கத், கட்	—	—	க்ருத்
காண்	கான்-கன், கென், (க்)ன-(க்)னோ	(க்)னோ (g)	க்னோ (g)	ஜ்ஞா
கிழ(ம்)	—	—	கெரான் (g), ஜெரான்	ஜர, ஜரா

குத்து-குந்து	ஸ்குவாத்	செத் (d)	—	ஸத் (d)
கும் - கும்ம	—	கும்	ஸிம்-ஸின்	ஸம்
கோ (ஆன்)	கோ, கௌ	—	—	கோ (g)
சோம்பு	—	சோம்னுஸ்	—	ஸ்வப்
துமி	—	—	தெம் (னோ)	தூ
துருத்து	த்ரஸ்ற் (று)	த்ருதோ	—	துத்
துருவு	த்ரு	த்ரான்ஸ்	—	த்ரு, தார், தீர்
துவர் (வாசல்)	தோர்	—	துர	த்வார்
நாவாய்	—	நாவிஸ்	நௌஸ்	நௌ
நூன் - நூ - (நீ)	து, தௌ	து	தூ	த்வம்
பார்	—	பரெ	—	பஸ்
பிடுங்கு	ப்றிக் (b) ப்ரேக் (b)	ப்ரங்கோ (f)	—	ப்ரஜ் (bh)
பிறங்கு	ப்ரைற் (று)	—	—	ப்ராஜ்
பொறு	பெர் (b) பேர் (b)	பெர் (f)	பெர் (ph)	பர் (bh)
மடி- (மரி)	மொர்த் (சாவு)	மொரி	—	ம்ரு
மாது-மாதர் (பெண்)	மொதொர் (தாய்)	மாதெர் (தாய்)	மெதர் (தாய்)	மாத்ரு (தாய்)
முழுகு	—	மெர்கு (g)	—	மஜ்ஜ்
முன்-முன்னு (கருது)	முன்	—	—	மன்
மெது	ஸ்மூத்	—	—	ம்ருது
வதுவை (திருமணம், மணமகள்)	வெத் (d) (மண)	—	—	வதூ (dh)

(3) வேதம் இந்தியாவிலேயே இயற்றப் பெற்றது.
இதற்கு ஏதுக்கள் :

க. வேதமொழி பிராகிருதம் என்னும் வடதிரவிடச் சொற் கலந்தது.

மேலையாரியத்திலும் தமிழிலும் தென்திரவிடத்திலும் இல்லாத வேதச் சொற்களெல்லாம் பெரும்பாலும் வடதிரவிடச் சொற்களே.

உ. வேதமொழிச் சொற்றொடரமைப்பு, வடநாட்டு மொழிகள் போற் பெரும்பாலும் தமிழ் முறையைத் தழுவியது.

ங. வடநாட்டு மொழிகள் போன்றே வேதமொழியும் எகர ஒகரக் குறிலற்றது.

௪. வேதத்திற் சிந்து வெளியிலும் கங்கைவெளியிலுமுள்ள இடம் பொருள்களே குறிக்கப்பட்டுள்ளன

(4) வேத ஆரியர் வடநாட்டுத் திரவிடரிடைச் சிறுபான்மையரா யிருந்ததினுல், அவர் முன்னோர் மொழி வேதக் காலத்திலேயே வழக்கற்றுப் போய்விட்டது. அதனுல், வேத வொலிகளைப் பலுக்கும் (உச்சரிக்கும்) முறையைக் கூறும் சிட்சை (சிக்ஷா) நூல்களும், வேதச் சொற்களின் பொருளை விளக்கும் நிருத்த (நிருக்த) நூலும், எழுந்தன.

9. வேத ஆரியர் தென்னுடு வருகை

நாரதமுனிவர் காஞ்சி வருகை

"கடவுள் மாமுனி நாரதன் முன்னொரு காலையின்
இடனு டைத்திருக் காஞ்சியின் ஏகம்ப நாதரைச்
சுடரும் மாடக யாழிசை யால்தொழு தேத்துவான்
தடவு வெள்ளிப் பருப்பத நின்றுந் தணந்தனன்."
(காஞ்சிப்பு. தழுவக். 185)

அகத்திய முனிவர் தமிழகம் வருகை

அகத்தியர் காசியின் நீங்கியது :

"பாணித்தல் அமையும் இன்னே படர்கெனும் பவளச் செவ்வாய்
வாணிக்கு மணுளன் தன்னை விடைகொண்டு மகிழ்ச்சிகூர
ஆணிப்பொன் மாடக்கோயில் அகிலநா யகரை யன்பால்
பேணித்தாழ்ந் தெழுந்து காசிப் பெரும்பதி தணந்து போந்தான்."
(காஞ்சிப்பு. தழுவக். 218)

அகத்தியர் விந்தமலையடைந்தது :

"கச்சிமா நகரங் காணும் ஆதரங் கைம்மிக் கீர்ப்ப
நச்சணி மிடற்றுர் பாத நகைமலர் மனத்துட் கொண்டு
பொச்சமில் மனையா ளோடும் வான்நெறிப் போதுகின்ற
விச்சைதேர் முனிவன் தன்னைக் கண்டது விந்த நாகம்."
(ஷை. ஷை. 219)

அகத்தியர் தண்டகக் காடடைந்தது :

"பண்டயன் பயந்தருள் பாலகில்லரும்
முண்டரு மோனரு முதலி னோர்களத்
தண்டக வனத்துறை தவத்து ளோர்கடாம்
கண்டன ரிராமனைக் களிக்குஞ் சிந்தையார்." (3)

"ஐந்து மைந்து மமைதியி னுண்டவண்
மைந்தர் தீதிலர் வைகினர் மாதவர்
சிந்தை யெண்ணி யகத்தியற் சேர்கென
இந்து நன்னுதல் தன்னொடு மேகினர்." (26)

"விடர கங்களும் வெய்ச்செறி கானமும்
படருஞ் சின்னெறி பைப்பய நீங்கினர்
சுடரு மேனிச் சுதீக்கண னென்னுமவ்
விடரி லானுறை சோலைசென் றெய்தினர்." (27)

"மறைவ லானெதிர் வள்ளலுங் கூறுவான்
இறைவ நின்னரு ளெத்தவத் திற்கெளி
தறைவ தீண்டொன் றகத்தியற் காண்பதோர்
குறைகி டந்த தினியெனக் கூறினன்." (36)

"வழியுங்கூறி வரம்பக லாசிகள்
மொழியு மாதவன் மொய்ம்மலர்த் தாடொழாப்
பிழியுந் தேனிற் பிறங்கரு வித்திரள்
பொழியுஞ் சோலை விரைவினிற் போயினர்." (35)

ஆண்டகைய ரவ்வயி னடைந்தமை யறிந்தான்
ஈண்டுவகை வேலைதுணை யேழுலக மெய்த
மாண்டவர தன்சரண் வழங்கவெதிர் வந்தான்
நீண்டதமி ழாலுலகை நேமியி னளந்தான்." (36)

(கம்பரா. ஆரணிய. அகத்தியப் படலம்)

அகத்தியர் காஞ்சி யடைந்தது :

"(குன்றிடை முட்டி மறுகும் குரீஇயின் தடையுண் டழுங்கி
நின்ற அருக்கன் முதலோர் நெறிகொளச் செல்ல விடுத்துத்)
தன்றுணைப் பாவையி னோடுஞ் சார்தரு தாபத வேந்து
மன்றலம் பூம்பொழிற் காஞ்சி வளநகர் தன்னைமுன் கண்டான்."

"கண்டு தொழுது வணங்கிக் கையினை உச்சியிற் கூம்ப
மண்டிய காதலிற் புக்கு மரபுளிச் செய்கட னாற்றி
அண்டர் பிரானுர் தளிகள் அனைத்தும் முறையான் இறைஞ்சிப்
பண்டை மறைகள் முழங்கும் படரொளி ஏகம்பஞ் சார்ந்தான்."

"மன்னியஇத் தமிழ்க்கிளவி மந்திரங்கள் கணித்தடியேன்
செந்நெறியின் வழுவாஇத் திருக்காஞ்சி நகர்வரைப்பின்
உன்னனுக்க ளுகியினி துறைந்திடவும் பெறவேண்டும்
இன்னவரம் எனக்கருளாய் எம்பெருமான் என்றிரந்தான்."

(காஞ்சிப்பு. தழுவக். 226-7, 245)

அகத்தியர் சைய மலையடைந்தது :

"என்றிவை யுலகமெல்லாம் உய்யுமா றியம்பி வேளை
வென்றவர் தழுவித் தேற்றி விடைகொடுத் தருளப்பெற்று
வன்றிறல் முனிவர் கோமான் மகிழ்ந்தடி வணங்கிப் போந்து
தன்றுணைக் கிழத்தி யோடுஞ் சையமால் வரையைச்
சார்ந்தான்."
(ஷே. ஷே. 285)

அகத்தியர் பொதிகைமலை யடைந்தது

சலம்ப டைத்தவா தாவிவில் வலன்றனைச் சவட்டிய பெருநோன்பின்
வலம்ப டைத்தவன் அவ்வரை யணுகலும் மறிதிரைக் கடலாடை
நிலம்ப டைத்தது தொன்னிலை யாவரும் நிறைபெருங் களிகூர்ந்தார்
நலம்ப டைத்தசீர் உறுவனும் ஆயிடை வதிந்துதென் மலைநண்ணி"

"தென்றற் பிள்ளையை வயிறுளைந் தீன்றுதீம் பொருநைநீர்
குளிப்பாட்டி
மன்றற் சந்தனப் பொதும்பரின் தமிழொடு வளர்த்துமென்
மெலஞால
முன்றிற் பால்வினை யாடவிட் டமர்முது மலயவெற்
பினுஞ்சையக்
குன்றத் தும்அகத் தீசத்தும் முறைமுறை குலவிவீற்
றிருக்கின்றான்."
(ஷே. ஷே. 286, 283)

இங்குக் காட்டப்பட்டுள்ள வரலாறு துல்லிப வழிப்போக்கு வண்ணனையன்று. இச்செய்யுட்களினின்று அறியக் கூடியதெல்லாம், வேதக்காலத்திலேயே நாரதர், அகத்தியர் முதலிய ஆரியர் தென்னாடு வந்து முத்தமிழையுங் கற்றனர் என்பதே.

"தேவரெல்லாருங் கூடி, "யாஞ் சேரவிருத்தலின் மேருத் தாழ்ந்து தென்றிசை உயர்ந்தது; இதற்கு அகத்தியனாரே ஆண்டிருத் தற்குரியர்." என்று வேண்டிக்கொள்ள, அவருந் தென்றிசைக்கட் போதுகின்றவர் கங்கையாருழைச் சென்று காவிரியாரை வாங்கிக் கொண்டு, பின்னர் யமதக்கினியாருழைச் சென்று அவர் மகனார் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கொண்டு புலத்தியனாருழைச் சென்று அவருடன் பிறந்த குமரியார் உலோபா முத்திரையாரை அவர் கொடுப்ப நீரேற்று இரீஇப் பெயர்ந்து, துவராபதிப்போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரை யும் பதினெண்கோடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையுங் கொண்டு போந்து, காடுகெடுத்து நாடாக்கிப் பொதியின்கணிருந்து

என்னும் நச்சினார்க்கினியர் கூற்றும், மேற்கூறிய உண்மையைப் பல்வேறு கட்டுக் கதைகளுடன் புனைந்து கூறுவதே. இதிற் "பதினெண் கோடி" என்பது பதினெண்குடி என்றிருத்தல் வேண்டும்.

வடதிசை தாழ்ந்து தென்றிசை உயர்ந்தது என்பதும், அகத்தியர் அவ்விருதிசையையும் சமப்படுத்தினார் என்பதும், குமரிமலை முழுகுமுன் பனிமலை கடற்குள்ளிருந்தது என்பதையும்; அவர் கடலைக் குடித்தார் என்பது, பனி மலையை அடியிற் கொண்டிருந்த கடல் அம்மலை யெழுந்ததினால் மறைந்தது என்பதையும்; அவர் குடித்த கடலை உமிழ்ந்தார் என்பது, கீழ்த் திசையிலிருந்த நாகநாடு மூழ்கியபின் வங்காளக் குடாக் கடல் தோன்றியதையும்; அவர் விந்தத்தை அடக்கினார் என்பது, பனிமலையெழுமுன் விந்தமே வட இந்திய உயர்மலையாயிருந்தது என்பதையும்; அவர் துவராபதிப் போந்து பதினெண்குடி வேளிரைக் கொணர்ந்தார் என்பது, வேதக் காலத்தில் தமிழ மரபினரே வட இந்தியாவிற் பெரும்பாலராயிருந் தார் என்பதையும்; அவர் காடு கெடுத்து நாடாக்கினார் என்பது, அக்காலத்து நாவலந் தேயத்திற் பெரும்பகுதி மரமடர்ந்த காடா யிருந்தது என்பதையுமே; உணர்த்தும்.

அகத்தியர் வருமுன்பே தமிழ் இருவகை வழக்கிலும் சிறந்து வேதமொழியினும் உயர்ந்திருந்ததென்பதும், அவர் இறைவனருளைத் துணைக்கொண்டு தமிழ் கற்றுத் தேர்ந்து வழிநூ லியற்றினார் என் பதும், தமிழ்த் தோற்றம் வரலாற்றிற் கெட்டாதது என்பதும்.

> "உழக்குமறை நாலினு முயர்ந்துலக மோதும்
> வழக்கினு மதிக்கவியி னும்மரபி னுடி
> நிழற்பொலி கணிச்சியணி நெற்றியுமிழ் செங்கட்
> டழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான்."

> "என்றுமுள தென்றமிழ் இயம்பியிசை கொண்டான்."

என்னும் (ஆரணிய 3:41, 47) கம்பர் கூற்றாலறியப் பெறும்.

"உழக்குமறை" என்பது வேதமொழியின் திரிபு முதிர்ச்சி, செயற்கைத் தன்மை, ஓதற்கருமை முதலியவற்றையும்; "மதிக் கவி" என்பது தமிழ்ச் செய்யுட் பொருட் சிறப்பையும்; "மரபு" என்பது செந்தமிழ்ப் பண்பாட்டையும் உணர்த்தும்.

அகத்தியரைத் "தமிழ் முனிவன்" என்று தமிழர் போற்றியது புனைந்துரை பற்றியதேயன்றி இனஞ்சுட்டியதன்று. கான்சுத்தாந் தியசு பெசுக்கியை வீரமா முனிவர் என்றும், பர். உ. வே. சாமி நாதையரைச் சிலர் தமிழ்த் தெய்வம் என்றும் கூறுவதை நோக்குக.

தண்டக அடவியில் தனித்தனியாகவும் கூட்டங் கூட்டமாகவும் ஆரிய மறையோர் இராமர் காலத்திருந்தமை, அவர் வேதக்காலத் திலேயே படிப்படியாகத் தென்னாடு நோக்கி வந்தமையைக் காட்டும்.

10. சமற்கிருதவாக்கம்

வேத ஆரியர் தென்னாட்டுத் தமிழரொடு தொடர்பு கொள்ளு முன், வடநாட்டில் இயற்றியவையெல்லாம் வேதமந்திரங்களும் பிராமணங்களுமே. அவற்றின்பின் ஏற்பட்ட ஆரணியகங்களும் அவற்றின் முதிர்ச்சியான உபநிடதங்களும் தமிழ் ஓத்துக்களின் மொழிபெயர்ப்பே. சிறு தெய்வ வழுத்துக்களாகிய வேத மந்திரங் கட்கும், முழுமுதற் கடவுளின் உருவிலா வழிபாட்டை அடிப்படை யாகக் கொண்ட உயரிய மெய்ப்பொருள் நூலுக்கும் இடைப்பட்ட வேறுபாடு, மடுவிற்கும் மலைக்கும் இடைப்பட்டதாகும்.

வேத சாகைகட்கு ஏற்பட்ட பிராதிசாக்கியம் என்னும் ஒலி யிலக்கணங்களும், தமிழ் நெடுங்கணக்கைப் பின்பற்றிய கிரந்தாட் சரம் என்னும் வண்ணமாலையும் வரிவடிவும், வேதமொழியொடு ஆயிரக்கணக்கான தென்சொற்களைச் சேர்த்தமைத்த சமற்கிருதம் என்னும் அரைச் செயற்கையான நடைமொழியும், தமிழிலக்கணத் தைப் பின்பற்றிச் சமற்கிருத எழுத்திற்கும் சொல்லிற்கும் வகுத்த ஐந்திரம் என்னும் வியாகரணமும், வேத ஆரியரான பிராமணர் தமிழரொடு தொடர்பு கொண்டபின் இயன்றவையே

பல்வேறு துறைப்பட்ட பல்வேறு வடநூலாசிரியரும் காவியப் புலவரும், தொன்றுதொட்டுத் தென்னாட்டினராக இருந்து வந்திருக் கின்றனர். பாணினீயத்திற்கு வார்த்திகம் என்னும் பொழிப்புரை வரைந்த காத்தியாயனரும், மாபாடியம் என்னும் விரிவுரை வரைந்த பதஞ்சலியும் காவியதரிசம் என்னும் அணியிலக்கணம் இயற்றிய தண்டியும், வேதங்கட்கு விளக்கவுரை செய்த சாயனரும், தென் னாட்டாரே.

“பருதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநில
மொருபக லெழுவ ரெய்தி யற்றே
வையமுந் தவமுந் தூக்கிற் றவத்துக்
கையவி யனைத்து மாற்ரு தாகலிற்
கைவிட் டனரே காதல ரதனுல்
விட்டோரை விடாஅள் திருவே
விடாஅ தோரிவள் விடப்பட் டோரே.”

என்னும் புறநானூற்றுப் பாட்டு (358) வான்மீகியார் என்னும் புலவரால் இயற்றப் பெற்றதாகக் குறிக்கப் பெற்றுள்ளது. இப்பாட்டு துறவறத்தின் உயர்வைக் கூறுவதையும் வடமொழி வான்மீகி துறவியாயிருந்ததையும், இராமாயணக் கதை நிகழ்ச்சியின் பெரும்பகுதி தென்னாட்டில் நிகழ்ந்ததையும், வடமொழி வான்மீகியின் தென்னாட்டு இயற்கையமைப்பறிவையும், தருமபுத்திரனைக் கோதமனார் பாடிய பாட்டொன்று (366) புறநானூற்றில் உண்மையையும், பாரதப் போரில் முத்தமிழ் வேந்தரும் கலந்துகொண்டதையும், பாரதக் காலத்திற்கு ஓரிரு தலைமுறைக்கு முந்தியே இராமனிருந்ததையும், ஆரிய வருகைக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பஃறுளி நெடியோன் செய்தி புறநானூற்றிற் கூறப்பட்டிருப்பதையும் (9), நோக்கும்போது, புறநானூற்று வான்மீகி வடமொழியிராமாயண வான்மீகி தானோ என ஐயுற இடமுண்டாகின்றது.

இன்றும், வடநாட்டுச் சமற்கிருதப் புலவரினும் தென்னாட்டுச் சமற்கிருதப் புலவர் வல்லுநராயிருப்பது, கவனிக்கத்தக்கது.

11. தொல்காப்பியமும் பாணினீயமும்

தமிழிலக்கணத்தை வடமொழி வழித்தாகக் காட்டல்வேண்டி, ஆரிய வெறியால் நடுநிலை திறம்பிய வரலாற்றாசிரியரும் பிராமணத் தமிழ்ப் புலவரும் தொல்காப்பியத்தைப் பாணினீயத்திற்குப் பிற்பட்டதாகக் காட்டி வருகின்றனர்.

பாணினியின் காலம் கி. மு. 5-ஆம் நூற்றாண்டென்று வரலாற்று நூலாசிரியராலும் மொழியாராய்ச்சியாளராலும் வரையறுக்கப் பெற்றுள்ளது. தொல்காப்பியம் பாணினீயத்திற்கு முந்தியதும் பாரதக் காலத்திற்கும் (கி. மு. 1000) கடைக் கழகத் தொடக்கத்திற்கும் (கி. மு. 5-ஆம் நூற்.) இடைப்பட்டதுமாதலின், கி. மு. 7-ஆம் நூற்றாண்டினதாகும். இதற்கு ஏதுக்களாவன :—

(1) தொல்காப்பியம் பாரதக்கால நான்மறை வகுப்பிற்குப் பிற்பட்டமை.

(2) தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்திற் பாணினீயத்திற்கு முந்திய ஐந்திரமே குறிக்கப்பெற்றுள்ளமை.

(3) தொல்காப்பியம் கடைக்கழகத்திற்கு முந்திய நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து அரங்கேறியமையும், கடைக் கழகத் தோற்றம் கி. மு. 5-ஆம் நூற்றாண்டென்று இராமச்சந்திர தீட்சிதரால் நிறுவப் பெற்றுள்ளமையும்.

(4) தொல்காப்பியர் தம் காலத் தமிழகத்தில் வேற்றரசர் படையெடுப்பும் சிற்றரசர் தலையெடுப்பு மின்மையை, "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு" (1336) என்னுந் தொடராற் குறித்திருத்தல்.

(5) அற்றைத் தமிழக எல்லை வடவேங்கடமும் தென்குமரியும் குணகடலும் குடமலையும் என அறியுமாறு, "நாற்பெய ரெல்லை" (1333) எனத் தொல்காப்பியத்திற் குறிக்கப் பெற்றிருத்தல்.

(6) இரண்டொரு தொல்காப்பிய இலக்கண வரம்பு கடைக் கழகச் செய்யுளிற் கைக்கொள்ளப் பெறுமை.

(7) தொல்காப்பியம் எழுத்தும் சொல்லும் பொருளும் ஆகிய மூவதிகாரங் கொண்டிருத்தலும், பாணினீயம் எழுத்தும் சொல்லுமாகிய ஈரதிகாரத்ததேயாதலும், ஆகவே முன்னதினின்று பின்னதன்றிப் பின்னதினின்று முன்னது தோன்றற் கிடமின்மையும்.

தொல்காப்பியப் பொருளதிகாரம் யாப்பணிகளையும் தன்னுட் கொண்டதாகும்.

இன்னும் இதன் விரிவை என் தொல்காப்பிய விளக்கத்திற் கண்டு கொள்க.

12. ஆரிய ஏமாற்று

வேதப் பிராமணர், தம் வெண்ணிறத்தையும் தம் முன்னோர் மொழியின் ஆரவார வொலியையும், தமிழ திரவிடரின் பழங்குடிப் பேதைமையையும் கொடை மடத்தையும் மதப் பித்தையும், அள விறந்து பயன்படுத்திக் கொண்டு, தம்மை நிலத்தேவராகவும் தம் முன்னோர் மொழியையும் தம் இலக்கியச் செயற்கை மொழியையும் தேவமொழியாகவும் காட்டி, அவற்றைப் பழங்குடி மக்கள் நம்புமாறு செய்துவிட்டனர். அதனால் தமிழ் கோயில்வழிபாட்டிற்கும் இரு வகைச் சடங்குகட்கும் ஏற்காததென்று தள்ளப்பட்டு, சமற்கிருதமே அவ்வினைகட்குப் பிராமணரால் ஆளப்பெற்று வருகின்றது.

ஆரிய வேத மந்திரங்கள் பெரும்பாலும் ஆரிய மக்களால் இயற் றப்பட்டு அவர் பெயர்களைக் கொண்டிருக்கவும், அப்பெயர்கள் அம்மந்திரங்களைக் கண்டவர் பெயரேயன்றி இயற்றியவர் பெயரல்ல வென்றும், அம்மந்திரங்கள் ஒருவராலும் ஆக்கப்பெறாமல் இறைவன்

போன்றே என்றுமுள்ளன வென்றும், இன்றும் ஏமாற்றி வருகின்றனர்.

வடமொழியெழுத்தும் சொல்லும் இலக்கியமும் இலக்கணமும் பெரும்பாலும் தமிழைப் பின்பற்றி அமைந்திருக்கவும், வடமொழி வண்ண மாலையைக் குறிக்கும் பாணினீயத் தொடக்கப் பதினால் நூற்பாக்களும் சிவபெருமான் இயக்கிய உடுக்கையினின்று ஒலித்தவையென்றும், அதனால் அவை மகேசுவர அல்லது சிவ சூத்திரங்கள் எனப்பெறுமென்றும், ஏமாற்றி வருகின்றனர்.

வடமொழி தேவமொழியாதலால் அது எம்மொழியினின்றும் கடன்கொள்ளாதென்றும், அதிலுள்ளவையெல்லாம் வடசொற்களே யென்றும், ஆங்கில ஆட்சி தோன்றியபின்பும் கூறி வருவது துணிச்சலான ஏமாற்றே.

சிவன் (சேயோன்), திருமால், (மாயோன்), வேந்தன் (இந்திரன்), வாரணன் (வருணன்), காளி என்னும் தமிழ்த் தெய்வங்களை ஆரியத் தெய்வங்களென்றும், வடமொழியிலுள்ள மொழிபெயர்ப்பு நூல்களையும் தழீஇய நூல்களையுமெல்லாம் முதனூல்களென்றும், கூறுவது மதத்துறையிலும் இலக்கியத்துறையிலும் நிகழ்ந்துவரும் ஆரிய ஏமாற்றுக்களாகும்.

இனி, இறைவனே பிராமணன் சத்திரியன் வைசியன் சூத்திரன் என்னும் நால் மக்கள் வகுப்பைப் படைத்தான் என்றும், அவை அவன் தலை மார்பு தொடை பாதத்தில் தோன்றியவையென்றும், அதனாற் பின் மூன்றும் முறையே தாழ்ந்தவையென்றும், அவற்றுள் ஒவ்வொன்றும் மேல் வகுப்புக்கட்கு அல்லது வகுப்பிற்குத் தொண்டு செய்வதே இறைவன் நோக்கமென்றும், இதை இறைவனே வரைந்தான் என்றும் கண்ணன் வடிவிற் சொன்னானென்றும், இருக்கு வேதத்திலும் பகவற் கீதையிலும் எழுதி வைத்திருப்பது, மன்பதை முழுவதையும் தழுவுவதால், எல்லா ஏமாற்றிற்கும் முடிமணிபோற் சிறந்ததாகும்.

13. மூவகை வடசொற்கள்

இந்தியாவிற்குட்பட்ட வடமொழி நிலைகள் மூன்றாதலால், தமிழில் வழங்கும் அல்லது குறிக்கப்படும் வடசொற்களும் மூவகைப்படும். அவை வருமாறு :—

(1) பிராகிருத வடசொல்

எ-டு : ஆதி, இந்திரன்.

(2) வேத வடசொல்

எ-டு: இயந்திரம், தருமம்

(3) சமற்கிருத வடசொல்

எ-டு: சாமி (ஸ்வாமி), பங்கயம் (பங்கஜ).

14. முக்கால வடமொழித் தமிழ்ச் சொற்கள்

வடமொழியிலுள்ள தமிழ்ச் சொற்கள் பின்வருமாறு மூவேறு காலத்திற் புகுந்தனவாகும்.

(1) மேலையாரியத் தமிழ்ச் சொற்கள்

எ-டு:

தமிழ்	மேலையாரியம்	வடமொழி
அம்மை	அம்மா, மம்மா	அம்பா
இரும்பு	இரன், அயெர்ன், ஈரிஸ்	அயஸ்
உகை-அகை	அகோ (g)	அஜ்
நாவாய்	நாவிஸ், நௌஸ்	நௌ
பொறு	பெர் (b), பெர் (f), பெர் (bh)	பர் (bh)
வலி, வலம்	வலி	பல (b)

(2) வேதத் தமிழ்ச் சொற்கள்

எ-டு:

தமிழ்	வேதமொழி
ஆணி	ஆணி
கடு-கடுகு-கடுகம்	கடுக
சுவணம்	சுபர்ண

(3) சமற்கிருதத் தமிழ்ச் சொற்கள்

எ-டு:

தமிழ்	சமற்கிருதம்
மீன்-மீனம்	மீன
முகம்	முக (kh)

15. மேலையர் திரிபுணர்ச்சி

மேலையறிஞரும் ஆராய்ச்சியாளரும், தமிழைச் செவ்வையாய் ஆராயாமையாலும் இனவுணர்ச்சியாலும் சில முற்கோளாலும் (prejudices), வடமொழியாளரை முற்றும் நம்பித் தமிழைப்பற்றித் தவறான கருத்துக்களைக் கொண்டுள்ளனர். அவையாவன :—

(1) தமிழர் (அல்லது திரவிடர்), நண்ணிலக் கடற்கரை நாடு களினின்று வந்து இந்தியாவிற் குடிபுகுந்து, ஆரியரால் தென்கோடிக்குத் துரத்தப்பட்டார் என்பது.

(2) சமற்கிருதத்தினின்று பிராகிருதம் பிறந்ததென்பது.

பேரா. பரோ இந்திய ஆரியத்தைப் பின்வருமாறு முந்நிலையாய் வகுத்திருக்கின்றார்.

க. பண்டை இந்திய ஆரியம் (Old Indo-Aryan)

(க) வேதமொழி

(உ) சமற்கிருதம்

உ. இடை இந்திய ஆரியம் (Middle Indo-Aryan)

(க) பாளி

(உ) செந்நிலை இலக்கியப் பிராகிருதம் (Standard Literary Prakrit)

(ங) அபப்பிரஞ்சம் (Apabhramsa)

ங. இற்றை இந்திய ஆரியம் (Modern Indo-Aryan) மராத்தி, குசராத்தி, இந்தி, வங்காளம் முதலியன.

பர் (P. S.) சுப்பிரமணிய சாத்திரியார் இந்திய ஆரியத்தைப் பின்வருமாறு நானிலையாக வகுப்பர்.

க. வைதிக மொழி

உ. இதிகாச மொழி (இராமாயண பாரத மொழி)

"இதனைப் பாணினியாசிரியர் பாஷா என்பர். பதஞ்சலி முனிவர் லௌகிகீ என்பர்."

ங. பிராகிருதங்கள்

ச. பிராகிருதச் சிதைவுகள்

இவை இந்தி, பஞ்சாபி, காசுமீரி முதலியன.

கீழையாரியமும் வட இந்தியப் பிராகிருதமுஞ் சேர்ந்து வேத மொழியும், வேதமொழியும் தமிழுஞ் சேர்ந்து சமற்கிருதமும், அமைந் திருக்கவும், பெயரன் பாட்டனைப் பெற்றான் என்னும் முறையில் சமற்கிருதத்தினின்று பிராகிருதம் பிறந்ததென்னும் தலைகீழ் முடிபிற்கு உந்தப்படுவது, தமிழர் வெளிநாட்டினின்று வந்தவர் என்று கொள்ளும் அடிப்படைத் தவற்றினாலேயே.

மராத்தி, குசராத்தி இந்தி, வங்கம் முதலிய வடநாட்டு மொழி களெல்லாம் சொல்லிலும் சொற்றொடரமைதியிலும் தமிழடிப்படை

கொண்டவையென்பதை, பி தி. சீநிவாச ஐயங்கார் எழுதியுள்ள 'இந்தியக் கற்காலம்' (Stone Age in India) என்னும் நூலைக் கண்டு தெளிக.

தம்மம் (தர்ம), பொக்கரிணீ (புஷ்கரிணீ) எனப் பிராகிருதத்திற் சிலபல வட சொற்கள் சிதைந்து வழங்கிய மட்டில், அவை வட மொழி வழிப்பட்டவை எனக்கொள்ளல் தகாது. தமிழிலும் சோத்தம் (ஸ்தோத்ர), திட்டாந்தம் (த்ருஷ்டாந்த) எனச் சில வட சொற்கள் இடைக்காலத்தில் திரிந்து வழங்கித்தான் இருக்கின்றன. இதனால், தமிழ் வடமொழியினின்று கிளைத்ததென ஆகிவிடாது. தமிழிற் பல தன் சொற்கள் இன்றும் இறந்துபடாதிருப்பதால், வேற்றுச் சொற்களை என்றும் விலக்க முடியும். இந்நிலைமை வட நாட்டு மொழிகட்கில்லை. தொன்னூலும் மொழிச் செம்மையும் போற்றாமையால், அவை அதை முன்னரே இழந்துவிட்டன. பிராகிருதம் (முந்திச் செய்யப்பெற்றது), சமற்கிருதம் (நன்றாய்ச் செய்யப்பெற்றது) என்னும் சொற்பொருளே, அப்பெயர்கொண்ட மொழிகளின் முன்மை பின்மையை உணர்த்துதல் காண்க.

(3) சிவ மதமும் திருமால் மதமும் ஆரியர் கண்டவை எனல்.

இதனால், தூய தமிழ் மதங்களாகிய இவ்விரு தென் மதங்கட்கும் பிராமண மதம் (Braminical religion) எனப் பெயரிட்டிருக்கின்றனர்.

(4) தமிழிலக்கணம் வடமொழியிலக்கணத்தைப் பின்பற்றிய தெனல்.

தமிழுக்கே சிறப்பாகவுள்ள பொருளிலக்கணத்தின் அருமை பெருமைகளை மேலையர் அறிவாராயின், பவணந்தியின் நன்னூல் போல் கூறும் பாணினீயத்தை அவர் சிறிதும் போற்றார் என்பது திண்ணம். தமிழ் யாப்பிலக்கணமும் பிறமொழிகளிலும் மிக மேம் பட்ட வகைகளும் விரிவும் உடையதே.

தமிழகத்தில், அதிலும் பழைய செந்தமிழ்ப் பாண்டி நாட்டில், கால்டுவெலார் ஏறத்தாழ அரை நூற்றாண்டிருந்தும், தொல்காப்பியத்தையும் கடைக் கழகச் செய்யுட்களையும் காணப் பெறாமையாலேயே அவர் மேற்குறித்த முடிபிற்கு வரலானார்.

(5) இந்திய நாகரிகமே ஆரியரதெனல்.

இதற்குச் சில கரணியங்களும் உள. அவையாவன :—

க. இந்திய நாகரிகத்தைக் காட்டும் நூல்களெல்லாம் இன்று பெரும்பாலும் வடமொழிலேயே இருத்தல்.

௨. பிராமணர் எல்லாத் துறையிலும் மேம்பட்டுள்ளமை.

௩. தமிழைத் தாழ்த்தியும் சமற்கிருதத்தை உயர்த்தியும் பார் முழுதும் பரப்புரை செய்யப்பட்டு வருதல்.

௪. இற்றை அறிவியல் நாகரிகத்தைக் கண்டவர் மேலையாரிய மொழி பேசுபவராயிருத்தல்.

இனி, இதற்குச் சார்பாகவே இற்றைத் தமிழர் நிலைமையும் பின்வருமாறு உள்ளது.

௧. ஆயிரக்கணக்கான முதலிரு கழகத் தனித்தமிழ் நூல்களும் அழிந்தும் அழிக்கப்பட்டும் போனமை.

௨. இற்றைத் தமிழ் நூல்களிலெல்லாம் வடசொல்லோ ஆரியக் கருத்தோ சிறிதும் பெரிதும் கலந்துள்ளமை.

௩. தமிழர் குமுகாய (சமுதாய)த் துறையில் பிராமணருக்குக் கீழ்ப்பட்டிருத்தலும், அதை எதிர்க்கும் தன்மானவுணர்ச்சி அவருக்கின்மையும்.

௪. நூற்றிற்கெண்பதுபேர் எழுத்தறியாதிருப்பதும் பெரும்பாலார்க்குத் தாய்மொழியுணர்ச்சி யின்மையும்.

௫. பிறப்பொடு தொடர்புபட்ட ஆரியக் குலப்பிரிவினையால் சின்னபின்னமாய்ச் சிதையுண்டு, நாட்டின வுணர்ச்சியும் ஒற்றுமையுமின்றி முந்தியல் குக்குலங்கள்போல் வேறுபட்டிருத்தல்.

௬. கோயில் வழிபாடும் இருவகைச் சடங்கும் பெரும்பாலும் பிராமணப் பூசாரியரால் வடமொழியில் நடத்தப்பட்டு வருதல்.

௭. தந்நலப் போலித் தமிழப் புலவர், தலைமைத் தமிழ்ப் பேராசிரியப் பதவிகளைக் கைப்பற்றித் தமிழாக்க முயற்சிகளையெல்லாம் தடுத்து வருதல்.

இதனால் மேனாட்டார் தமிழின் சிறப்பை அறிதற்கு இதுவரை வாய்ப்பு நேர்ந்ததில்லை.

௮. தமிழ்நாட்டு அரசும் தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களும் தமிழைப் போற்றுமை.

௯. தமிழ்நாட்டுத் தலைமைப் பதவிகளைப் பெரும்பாலும் தமிழரல்லார் தாங்கி வருதல்.

16. தென்மொழி வடமொழி வேறுபாடு

செந்தமிழாகிய தமிழும் கொடுந்தமிழ்களாகிய திரவிட மொழிகளும் சேர்ந்தது தென்மொழியாகும்.

தென்மொழி	வடமொழி
(1) தெற்கில் தோன்றியது.	வடக்கினின்று வந்தது.
(2) இயற்கையாய் அல்லது தானாய்த் தோன்றிய இயன்மொழி.	திராவிடத்தினின்று திரிந்து தமிழால் வளம்படுத்தப் பெற்ற திரிமொழி.
(3) தூய ஓரினத் தாய் மொழி.	ஈரினக் கலவை மொழி.
(4) உலக வழக்கு மொழி.	வழங்கா நூன்மொழி; அதனால் பிறமொழிகளையே சார்ந்து வாழும் உண்ணி மொழி.
(5) இந்திய ஐரோப்பிய மொழிக் கோவையின் முதனிலை.	இந்திய ஐரோப்பிய மொழிக் கோவையின் இறுதி நிலை.
(6) மென்மொழி.	வன்மொழி.
(7) இயற்கைப் பால் மொழி.	செயற்கைப் பால் மொழி.
(8) பொருளிலக்கணத்தால் இலக்கண நிறைமொழி.	பொருளிலக்கணமின்மையால் இலக்கணக் குறைமொழி.
(9) செம்மை வரம்பு மொழி.	செம்மை வரம்பிலா மொழி.
(10) பெரும்பாலும் மூல இலக்கிய மொழி.	பெரும்பாலும் மொழிபெயர்ப் பிலக்கிய மொழி.
(11) உண்மை, சமன்மை, அன்பு முதலியவற்றை உணர்த்தும் பண்பாட்டு மொழி.	பொய்ம்மை, பிரிவினை, ஒருகுல முன்னேற்றம் முதலியவற்றை யுணர்த்தும் பண்பாடற்ற மொழி.
(12) மக்கள் மொழியென்று [illegible] மொழி.	தேவ மொழியென்று ஏமாற் [illegible] பா.

17. தென்மொழி வடமொழிப் போராட்டம்

தென்னாடு வந்த வேதப் பிராமணரையும் அவர் வழியினரையும் நிலத்தேவரென்றே தமிழர் நீண்டகாலம் நம்பியதினாலும், அவ்வாரியரும் தமிழ்வழி நூலியற்றித் தமிழ்ப்பற்றினர்போல் நடித்துத் தமிழர்க்குப் புலனாகாவாறு சன்னஞ் சன்னமாய் ஆரியக்கருத்துக்களை நுண்ணிதிற் புகுத்தி வந்ததினாலும், திருவள்ளுவர்காலம் வரை ஆரியத் தீங்கு தமிழர் கண்ணிற்குத் தெரியாது மறைந்திருந்தது.

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்". (972)

"அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்". (300)

"மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்". (134)

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்". (560)

என்று திருவள்ளுவரே முதன்முதல் ஆரியத்தைச் சமயத் துறையிலும் குமுகாயத் துறையிலும் கண்டித்தார்.

அதன்பின், கி. பி. 2-ஆம் நூற்றாண்டில், சுவாமிநாத தேசிகன் போல் தன் வடமொழியாசிரியனால் ஏவப்பட்டுத் தமிழைப் பழித்த குயக்கோடனை, நக்கீரர் சாவப்பாடினார் என்பது,

"ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானை"

என்னும் வெண்பாப் பகுதி உணர்த்தும்.

திருவிளையாடற் புராணத்திலுள்ள

"கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ."

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
யுண்ட பாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்."

என்னும் பரஞ்சோதி முனிவர் பாட்டுக்கள் (திருநாட். 57-8), 16-ஆம் நூற்றுண்டிலிருந்த தென்மொழி வடமொழிப் போராட்டத்தை ஒருவாறு தெரிவிக்கின்றன.

17-ஆம் நூற்றுண்டிற் பாடப் பெற்ற

"மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றரியத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை யுண்ணினைந் தேத்தல்
செய்வாம்"

என்னும் சீகாளத்திப் புராணத் தமிழ்வாழ்த்துச் செய்யுளில், "உறழ்தரு" என்னுஞ் சொல், "ஒத்திருக்கின்ற" என்னும் பொருளினும் 'மாறுபடுகின்ற' என்னும் பொருளே சிறந்து படுகின்றது.

18-ம் நூற்றுண்டிற் சிவஞான முனிவர் பாடிய

"வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகமெலாந் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற்
கடல்வரைப்பி லிதன்பெருமை யாவரே கணித்தறிவார்.

"இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர் இயல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தர் இசைபரப்பும்
இருமொழியும் ஆன்றவரே தழீஇயினார் என்றாலிவ்
விருமொழியும் நிகரென்னும் இதற்கையம் உளதேயோ."

என்னும் செய்யுட்கள் (காஞ்சிப்பு. தழுவக். 248-9), மாறுபடும் இருசாராரையும் ஒப்புரவாக்கும் நடுவர் கூற்றுப்போல் ஒலிப்பதால், தென்மொழி வடமொழிப் போராட்டத்தை மறைமுகமாகத் தெரிவிப்பனவே.

19-ஆம் நூற்றுண்டில், சுந்தரம் பிள்ளை தம் மனோன்மணீயத் தமிழ்த் தெய்வ வணக்கச் செய்யுளில்,

(தரவு—2)

"ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே."

(தாழிசை—3)

"சதுமறையா ரியம்வருமுன் சகமுழுது நினதாயின்
முதுமொழிநீ யனாதியென மொழிகுவதும் வியப்பாமே."

(தாழிசை—10)

“ பத்துப்பாட் டாதிமனம் பற்றினூர் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே.”

(தாழிசை—11)

“ வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொருநீதி.”

(தாழிசை—12)

“ மனங்கரைந்து மலங்கெடுக்கும் வாசகத்தில் மாண்டோர்கள்

கனஞ்சடையென் றுருவேற்றிக் கண்மூடிக் கதறுவரோ.”
என்று வெளிப்படையாய் இப்போராட்டத்தைக் காட்டினூர்.
இனி,

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.”

என்னும் பாடினூர்பெயர் தெரியாத தண்டியலங்கார வுரைப் பழைய வெண்பா, தமிழே உலகமுத லிலக்கியச் செம்மொழியென்று கூறி, அது ஆரியத்திற்கு மூலமென்பதை ஏரணமுறையி லுணர்த்து கின்றது.

தென்மொழி வடமொழிப் போராட்டம்பற்றிய உரைநடைப் பகுதிகள் பலவாகவும் விரிவாகவுமிருத்தலின், அவை இங்குக் கூறப் பட்டில.

1916-ஆம் ஆண்டு, மறைமலை யடிகளும் அவர்களின் அருமை முதன்மகளார் நீலாம்பிகை யம்மையாரும் வடசொல் லுள்ளிட்ட வேற்றுச் சொற்களைக் களைந்து நல்லுரமிட்டு நன்னீர் பாய்ச்சிக் கண்ணுங் கருத்துமாய்ப் பேணி வளர்க்கத் தொடங்கியதினின்று, தமிழ்ப் பயிர் தழைத்தோங்கி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகின்றது. அதே சமையத்தில், அகப் பகையும் புறப்பகையுமான பல்வகைத் தமிழ்ப் பகைவரும், வேற்றுச் சொற்களை மீண்டும் மீண்டும் ஊடுவிதைத்துக்கொண்டும் விலங்கு பறவைகளை ஏவிக்கொண்டும் வரத்தான் செய்கின்றனர். ஆயினும் அவர் படுதோல்வியடைந்து அடியோடு அழிந்தொழிந்து போவது அண்மணித்தே.

சென்ற நூற்றாண்டின் இறுதியிலேயே, சூரியநாராயண சாத்திரியார் தம் பெயரைப் பரிதிமாற் கலைஞன் என்று மாற்றித் தமிழர்க்குத் தனித்தமிழுணர்ச்சி யூட்டினாரேனும், அது செயலளவில் தொடராது உணர்ச்சியளவிலேயே நின்றுவிட்டது. அதனால், தேனும் பாலும் போன்ற தூய தீந்தமிழ்ச் சொற்களால் உரைநடையுஞ் செய்யுளு மாகிய இருவடிவிலும் பல்துறை தழுவி ஐம்பதிற்கு மேற்பட்ட அருநூலியற்றி, முதலிருகழக நிலைக்குத் தமிழைப் புதுக்கி அதற்குப் புத்துயிரளித்தவர், மாநிலத்தில் மக்களுள்ளவரை மறையாப் புகழ் பெற்ற மறைமலையடிகளே.

வடமொழி வரலாறு

I. மொழியதிகாரம்

பண்பட்ட மொழியில் ஒரு கருத்தைத் தெரிவிப்பது பெரும்பாலும் சொற்றொடரேயாயினும், ஒவ்வொரு மொழியும் சொற்களாக வன்றிச் சொற்றொடர்களாகத் தோன்றாமையால், உண்மையில் மொழி என்பது முழுநிறைவான சொற்றொகுதியே.

வேத ஆரியரின் முன்னோர் மேனாட்டினின்று வந்தமையால், அவர் மொழி மேலையாரிய மொழிகளை ஒத்திருந்தது.

1. மேலையாரிய இனச்சொற்கள்

எ - டு:

தன்மை முன்னிலைப் பெயர்கள்

பொருள்	Gk	L	Ger	E	S
யான் - நான்	ego	ego	ich	ic(OE), I	aham
யாம், நாம்	hemeis	nos	wir	we	vayam
நீ	su	tu	du	thou	tvam
நீம் (நீர்)	humeis	vos	euch, ihr	you	yuyam

சில முறைப் பெயர்கள்

தந்தை	pater	pater	vater	father	pitru
தாய்	meter	mater	mutter	mother	mātru
மகன்	—	—	sohn	son	sunu
மகள்	thugatar	—	tochter	daughter	duhitru
உடன் பிறந்தான்	frater	frater	bruder	brother	bhratru
உடன் பிறந்தாள்	—	(sostor sosor)	schwester	sister	svasru

சில உறுப்புப் பெயர்கள்

பொருள்	S	Gk	L.	Ger	E
தலை	kapala	kafale	caput	haupt	head
புருவம்	bhru	o-phrus	—	—	brow
கண்	akṣa	osse	oculos	auge	eye

மூக்கு	nāsi	—	nasus	nase	nose
பல்	dant	ontas	dens	zahn	tooth
களம் (மிடறு)	gala	—	collum gula	—	—
நெஞ்சாங் குலை	hrudaya	kardia	cordis	herza	heart
வயிறு (கருப்பை)	udara	delphis	uterus	—	—
கால்முட்டி (கணு)	janu	gonu	genu	knie	knee
பாதம்	pada, pāda	pod	ped	fuss	foot
உகிர் (நகம்)	nakha	—	—	—	nail
தோல்	carma	derma	—	—	—
எலும்பு	asthi	osteon	—	—	—
எலும்பு மூளை	majja	—	—	marg	marrow
மனம்	manas	—	mens	—	mind

சில எண்ணுப் பெயர்கள்

ஒன்று	eka	eis, en	unus	eins	one
இரண்டு	dvi	duo	duo	zwei	two
மூன்று	thri	treis	tres	drei	three
நான்கு	chathur	tettares	quatuor	vier	four
ஐந்து	panchan	pente	qninque	funf	five
ஆறு	ṣaṣ	hex	sex	sechs	six
ஏழு	sapthan	hepta	septem	steben	seven
எட்டு	aṣṭam	okto	octo	acht	eight
ஒன்பது	navan	ennea	novem	neun	nine
பத்து	dasan	deka	decem	zehn	ten
இருபது	vimsathi	eikosi(n)	viginti	zwanzig	twenty
நூறு	satha	ekaton	centum	hundert	hundred

சில பொதுச்சொற்கள்

பொருள்	வடமொழி	மேலையாரியம்
வளைவு	anka	Gk hankas, L uncus
அச்சு	akṣa	L axis, Gk axon, OG ahsa, Mod Ger achse, Lith assis

பொருள்	வடமொழி	மேலையாரியம்
தீ	agni	L ignis
முடிவு	anta	E end, OE ende, OS endi, OHG enti, ON endir, Goth andeis.
நுனி	agra	Gk akros
நீர்	ap	L aqua, Goth ahva (river)' OG aha affa, Lith uppe (river),
அப்பால்	apa	Gk apo, L ab, Goth of, E of.
எதிர்முக	abhi	L ob.
குதிரை	ašva	L equus, Gk hippos.
எருது	ukṣan	E ox, OE oxa, Goth auhsa, Armen esn.
நீர்	udaka	Gk hudor, L unda, E water, Ger wasser.
எழு	udi	L ori.
உம்பர்	upari	OG obar, Mod G uber, E over, Goth ufar, L super Gk huper.
காலவகை	karaṇa	Gk chronos.
நடுவண்	kendra	Gk kentron, L centrum, E centre.
வீடு	gṛha	(?) E kirk, ON kirkja, OE circe, OS kirika, OHG kirihha, E church.
வெப்பம்	gharma (ghṛ v. i)	E warm, Ger warm, Goth varmya, L formus, Gk thermos.
சக்கரம்	cakra	L circum, E circle, Gk kuklos.
ஞாலம்	ku	Gk ge.
தச்சன்	takṣa	Gk tekton.

பொருள்	வடமொழி	மேலையாரியம்
மரம்	taru, dru, dāru	Gk drus, E tree, Ger zehren, trewo, Goth triu.
வெள்ளி (உடு)	tārakā	E star, Gk aster, L stella.
துவாரம் (வாசல்)	dvār	Gk thura, E door, Ger tor, L, fores, porta.
வீடு	dama	L domus, Gk domos.
தெய்வம்	daiva	L devo, Gk theos.
நிலம்	dharā	L terra.
நாகம்	nāga	E snake, OE snaca, MLG snake, ON snakr.
பெயர்	nāman	E name, OE nama, OS, OHG namo, Ger name, Goth namo, ON nafn, L nomen, Gk onoma.
கீழ்	ni, nīca	E neath, OE neoth, OS nith, OHG nid, ON neth, AS nither, Ger nider, Slav nizu, Gk eni.
முதல்	pratama	Gk protos, L primus.
ஆடவன், மூவிடத்துளொன்று	puruṣa	(?) L persona, E person.
முன்	puras, purā pūrva, pra	Gk pro, L pro, Slav. pra, pro, Lith pra, E fore, Goth faur, faura, Ger vor.
ஒருவகை மரம்	bhūrja	E birch, OHG birihha, OE bierce, berc, ON bjork.
கரு	bhruṇa	L embryo, Gk embruon.
மீன்	matsya	L piscis, E fish.
மத்தம் (கிறுக்கு)	matta, mad	E mad, OS med, OHG meit, Goth maiths.
மது (கள், தேன்)	madhu	me du, Slav medu, E mead, Ger meth, Lith midus L mel.

நடுவண்	madhya	L medius, E mid, middle, Ger mitte, GK messos.
மா (பெரிய)	mah	L magnus, GK megas.
மன் (மாந்தன்)	manu, manuṣa	E man, OE man(n), OS, OH G man, Goth manna ON mathr.
மாத்திரம், மாத்திரை (அளவு)	matrā	GK metron, metreo, L metior, mensus, mersura E measure, Slav mera, Lith mera, E meter, metre.
வடிவம்	mūrta	Gk morphe.
எலி, சுண்டெலி	mūṣika	L mus, OS, OHG, ON mus, OE mūs, E mouse.
இப்பொழுது	nu, nū	Gk nu, nun, L nunc, Ger nu, nun, AS nu, nū, OE nū, E now
நுகம்	yuga	E yoke, L jugum.
உண்மையான	yatā	Gk etumos, eteos
மணப்பெண்	vadhū	E wed (to marry).
பன்றி	varāka	Du varken, L pork.
ஆடை	vastra	L vestis, E vesture.
சொல்	vārthā	E, OE, OS word, OHG wort, ON orth, Goth waurd, Ger worte, L verbam.
வாரி (கடல்)	vāridhi	L mare.
வால்	vāla, vāra	Gk oura.
உருவம்	vigraha	L figura, E figure.
வெள்ளை	sveta	E white, OE, OS hwit, OHG (h)wiz, ON hvitr, Goth hweits.
நாய்	sunaka	L canis.
பன்றி	sūkara	L sukula.
நரி	sṛgāla	E jackal, Turk chakal, Pers shagal.

பொருள்	வடமொழி	மேலையாரியம்
சொந்த	sva	L suus, Gk sphos, Goth sik, Ger sich.
பனி	hima	L hiems Gk kheimon, khimos, Slav zima, Lith zema.

சில வினைச்சொற்கள்

அருந்து (உண்)	ad	E eat, Goth it, L ed, Gk ed, Ger ess, Arm ut.
நெருக்கித் தூண்டு	ūrj	L urge, Gk orago, Goth vrik, Lith verz.
போ	gam	E go, OE, OS gān, OHG gān, gən.
பேராசைப்படு	gṛdh	E greed (n.), OE graedig (adj.), OS gradag, OHG gratac, ON grathugr, Goth gredags.
ஆராய்	circ	(?) E search, L circare.
பிற	jan	Gk gen, L gen(erare), E kin.
வாழ்	jīv	Gk zoo.
நீட்டு	tan	L tens, E tend.
வெப்பமாயிரு	tap	L tepere, E tepid (adj.).
துர-துரத்து	tur	E drive, OE drif, OS drib, OHG trib, ON drifa, Goth dreib.
பழக்கு	dam	L domare, Gk dmos, E tame.
ஓடித்திரி	dram	Gk dromos.
தா	dā	L do, donare-
குடி (பருகு)	pā	L bib, E bib.
கூ, கூவு	ku, kū	E coo, Gk kokuo.
மடி, மரி	mṛ	L mori.
முழுகு	majj	L mergo, mers, E merge.

பொருள்	வடமொழி	மேலையாரியம்
நுகம்பூட்டு	yuj	E yoke, OE geoc, OHG joh, OS, Goth juk, ON ok, L jugare.
சிவப்பாயிரு	rudh	E red, AS read, Ger rot Goth rauths, Slav rudru, Lith rudas, raudas, L ruber, rufus, Gk eruthros.
வரிசைப்படுத்து	rac	E range.
வெட்டு	lup	E lop
நோக்கு (பார்)	lōk	E look, OE locian, OS locon OHG luogen.
பேசு	vad	Lith vad.
சிதைத்துத் துன்புறுத்து	vadh	Gk Gtheō
வெல்	van	E win, L venia, Goth gawinnan, Ger gewinnen
அறி	vid	L vid, Slav. ved, Goth wit, wait, Cer wizz, wiss, AS wat, E wot, wit, Gk edein.
நெய்	ve	E weave, OE wef, ON vefa, OHG web.
வீங்கு	svi	E swell, OE, OS, OHG swellan, ON svella.
உட்கார்	sat	E sit, L sed.
தை	siv	E sew, OE si(o)w, OHG siuw, ON syj, Goth siuj, L sue.
நில்	sthā	L sta, E, OE, OS, Goth, ON stand, OHG stant, Ger stan, Slav. sta, Lith sto, Gk i-sta.
திருடு	sten	L steal, OE, OS, OHG stel, ON stel, Goth stil

பொருள்	வடமொழி	மேலையாரியம்
வியர்	svid	E sweat, ME swet(e), OE swat, OS swēt, OHG sweiz, ON sveit, Ger swizz, L sudare, Gk idros.
மகிழ்	hlad	E glad (v. t.), OE glaed, OS glad, ON glathr, OHG glat.
ஒலி	svan	E swan; Ger schwan, AS swin, L sonare.
இன்சுவையாயிரு	svad	E sweet (a. & n.) OE swete, OS swoti, HOG s(w)uozi, ON soetr, L suavis, suad, Goth suts.

('இரு' என்னும் துணை வினைச்சொல்)

பொருள்	S	Gk	L	Ger	E
இருக்கிறேன்	asmi	esmi	sum	bin	am
இருக்கிறோம்	'smas	esmes	'sumus	sind	are
இருக்கிறாய்	asi	eis	es	bist	art
இருக்கிறீர்(கள்)	stha	este	estis	seid	are
இருக்-கிறான்-ள், கின்றது	asti	esti	est	ist	is
இருக்-கிறார் (கள்)-கின்றன	santi	eisi	sunt	sind	are

இதுகாறுங் காட்டப் பெற்றவை எடுத்துக் காட்டுச் சொற்களே. இவற்றினின்று, வேத ஆரியரின் முன்னோர் மொழி எவ்வாறு மேலையாரிய மொழிகட்கு இனமாயிருந்த தென்பதைத் தெளிவாய்க் கண்டு கொள்ளலாம்.

பொதுவாக, மேலையாரிய மொழிக் குடும்பங்கட்குள் தியூத்தானியம் முந்திய நிலையையும், கிரேக்கம், சிலாவோனியம் முதலியவை பிந்திய நிலையையும், காட்டுகின்றன. இதனால், ஐரோப்பாவின் வடமேற்கோடியிலிருந்து தென்கீழ்க்கோடி நோக்கி ஆரியமொழிகள் படிப்படியாய்த் திரிந்து வந்திருப்பதை அறியலாம்.

சில சொற்கள் இப் பொதுவியல்பிற்கு மாருகத் தியூத்தானியத்தில் மிகத் திரிந்துள்ளன. இதற்கு அவை இந்தியாவினின்று முதலில் ஐரோப்பா சென்றுள்ளமையே கரணியம்.

எ - டு: எண்ணுப் பெயர்களும் சிலவுறுப்புப் பெயர்களும்.

ஆரிய மொழிகளுள் மிகத் திரிந்தது கீழையாரியம் என்பது முன்பு காட்டப்பட்டது.

ஒருசில தமிழ்ச் சொற்கள் மேலையாரிய வழியாகவும் நேரடியாகவும் வடமொழியிற் புகுந்துள்ளன.

எ - டு: ருத் (rudh)—மேலைவழி
ரக்த (அரத்த)—நேர்வழி

அரத்தம் என்னும் குருதிப் பெயரே பண்பியாகு பெயராக அதன் நிறத்தையுங் குறிக்கும்.

2 பிராகிருதச் சொற்கள்

மேலையாரியத்திலும் தமிழிலும் தென்திரவிடத்திலும் இல்லாத வேதமொழிச் சொற்களெல்லாம், பிராகிருதச் சொற்களே.

எ - டு: ஆதி, கிராமம்.

3. வடமொழிப் புகுந்த தென்சொற்கள்

கீழ்வரும் சொல்லிணைகளில் இடச்சொல் தென்சொல்லும் வலச்சொல் வடசொல்லும் ஆகும்.

அக்கம்[1] **— அர்க்க.**

அஃகல் = சிறிதாதல் (திவா.)

அஃகுதல் = சுருங்குதல், சிறுத்தல், நுண்ணிதாதல்.

அஃகு = அஃகம் = அக்கம் = 1/12 காசு.

காசு என்பது பழங்காலத்தில் ஒரு சிறு செப்புக்காசாயிருந்ததாகத் தெரிகின்றது.

"நெஞ்சே யுனையோர் காசா மதியேன்"

(தாயு. உடல்பொய். 72)

ஒரு காசிற் பன்னிலொரு பங்கு மதிப்புள்ளது மிகச் சிறிதாயிருந்திருக்குமாதலின், அக்கம் எனப் பெயர்பெற்றது

அர்க்க (arka) என்னும் வடசொற்குச் செம்பு (copper) என்றே, மானியர் வில்லியம்சு வடமொழியாங்கில அகர முதலியிற் பொருள் கூறப்பட்டுள்ளது. ஆயின், செ. ப. க. க. த. அகர முதலியில், அது அக்கம் என்னும் தென்சொற்கு மூலமாகக் குறிக்கப்பட்டுள்ளது.

அக்கம்² — அக்ஷ

அல் — அள் = கூர்மை (திவா.).

அல் — அல்கு. அல்குதல் = சுருங்குதல்.

அல்கு — அஃகு. அஃகுதல் = 1. குறுகுதல் (நன். 60)

2. சுருங்குதல்.

"கற்பக் கழிமட மஃகும்" (நான்மணி 29). 3. குவிதல்.

"ஆம்பல்......மீட்டஃகுதலும்" (காஞ்சிப்பு. திருக்கண். 104).

4. நுண்ணிதாதல்.

"அஃகி யகன்ற அறிவென்னும்" (குறள். 175).

அஃகு — அக்கு = முட்போன்ற முனைகளுள்ள மணி. (உருத்திராக்கம்).

"அக்கை யணிந்தவர் மெய்யுரை" (திருவானைக். கோச் செங். 4).

அக்கு — அக்கம் = பெரிய அக்குமணி.

'அம்' பெருமைப் பொருட் பின்னொட்டு.

"அப்புக் கொக்கிற கக்கம்" (திருப்பு. 416).

அக்கு என்பதே இயல்பான சொல் வடிவம். முள்ளுண்மை பற்றி அப்பெயர் தோன்றிற்று.

"முண்மணிகள் காய்க்குமரம் முப்பதுட னெட்டே".

என்று விருத்தாசலப் புராணம் கூறுதல் காண்க. கண்டம், கண்டி, கண்டிகை என்னும் பெயர்களும் அப்பொருள் பற்றித் தோன்றினவே. கண்டம் (கள்ளி), கண்டகம் (முள், நீர்முள்ளி), கண்டகி (தாழை), கண்டு, கண்டங்கத்தரி (முட்கத்தரி) முதலிய பெயர்களை நோக்குக. இவற்றின் மூலம் பின்னர் விளக்கப்பெறும்.

அக்கமணி இந்தியாவில் நேபாள நாட்டிற்கே உரிய இயற்கை விளைபொருள். ஆரியர் வருமுன்பு வட இந்திய வாணருட் பெரும்பாலர் சிவமதத் திரவிடரே. சிவநெறிக்குரிய குறி (இலிங்க)

வழிபாடு செய்துவந்த பழங்குடி மக்கள் 'சிச்னதேவ' என்று வேத ஆரியராற் பழிக்கப்பட்டனர் (இ. வே.). ஆரிய வருகைக்கு ஆயிர மாண்டுகட்கு முற்பட்ட அரப்பா—மோகெஞ்சோதரோ மக்களும் சிவநெறியரே. அந்நெறி தென்னாட்டிலேயே தோன்றிற்று.

"தென்னா டுடைய சிவனே போற்றி'.
(போற்றித் திருவகவல்),

"தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே"
(சிவபுராணம்),

"பாண்டி நாடே பழம்பதி யாகவும்"
(கீர்த்தித் திருவகவல்)

என்று மாணிக்கவாசகர் பாடுதல் காண்க.

அக்குமணியணிவு முதலில் மருத்துவ முறையில் தோன்றி, பின்பு சிவநெறியொடு தொடர்புபடுத்தப் பெற்றதாகத் தெரிகின்றது.

அக்கம் என்னும் சொல்லை வடமொழியாளர் அக்ஷ என்று திரித்து, அதை வடசொல்லாகக் காட்டல் வேண்டி, சிவபெருமான் முப்புர எரிப்பு முயற்சியில் ஆயிரம் தேவயாண்டு மருண்டு விழித்திருந்ததால், அவர் கண்களினின்று வடிந்த கண்ணீரில் அக்குமணி மரங்கள் தோன்றினவென்று, அக்ஷ என்னும் வடசொல்லின் கண் என்னும் பொருட்கேற்பக் கதையுங் கட்டிவிட்டனர். இக்கதையின் பொய்ம்மையைத் துடிசைகிழாரின் 'உருத்திராக்க விளக்கம்' என்னும் நூலிற் கண்டு தெளிக.

ஆரியர் பிற்காலத்தில் வேத உருத்திரனைத் தமிழ்ச் சிவனொடு மயக்கிவிட்டதால், உருத்திராக்கம் என்னும் சொற்குச் சிவமுண்மணி அல்லது சிவமணி என்பதே பொருந்திய பொருளாம்.

அக்கை—அக்கா, L acca

அகவு—ஹ்வே (இ. வே).

அகில்—அகரு (g).

அகில் ஒருவகைக் கள்ளிமரத்தில் விளைவதென்பது,

"கள்ளி வயிற்றின் அகில்பிறக்கும்"

என்னும் நான்மணிக்கடிகை (4) அடியால் அறியப்பெறும்.

கள்ளி என்பது பெரும்பாலும் முள்ளுள்ள நிலைத்திணை (தாவர) வகை.

தேக்குப்போல் அகிலும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விளைவதாகும்.

"குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்"
என்றது (பட்டினப் 188), உள்நாட்டகிலை.

> "வங்க ஈட்டத்துத் தொண்டியோ ரிட்ட
> அகிலும் துகிலும் ஆரமும் வாசமும்
> தொகுகருப் பூரமும் சுமந்துடன் வந்த
> கொண்டலொடு புகுந்து கோமகன் கூடல்)"

என்றது கீழ்நாட்டகிலை.

பண்டைக் காலத்தில் இங்கிருந்து மேனாடுகட்கு ஏற்றுமதியான பொருள்களுள் அகிலும் ஒன்றும். அது தமிழ்வணிகமே யன்றி ஆரிய வணிகமன்று.

அக்கு=அகில் (மலை.) அக்கிலு=நெருஞ்சி (மு. அ.)

அக்கு—(அக்கில்)—அகில். ம. அகில்.

Heb ahalim, Gk agallochon, L aquillaria agallocha, E eagle-wood, S agaru.

மேலை மொழிகளிலெல்லாம் லகர வடிவும், வடமொழியில் அதன் திரிபான ரகரவடிவும், இருத்தலை நோக்குக.

மானியர் வில்லியம்சு அகரமுதலியில் agaru என்பதை aguru என்றும் காட்டிப் பளுவில்லாதது ("not heavy") என்று சொற்பொருட்கரணியங் குறித்திருப்பது, அவர் சொந்தக் கைவரிசையே.

அகோ—அஹோ.

அகோ என்பது, மகிழ்ச்சி, வியப்பு, இரக்கம், துயரம் முதலிய உணர்ச்சிகளை வெளியிடும் குறிப்பிடைச் சொல். இது அக்கை என்னும் முறைப் பெயரின் விளிவேற்றுமையாம்.

அக்கை—அக்கா, அக்கோ—அகோ.
ஒ. நோ: ஐயன்-ஐயோ!
அத்தன்—அத்தோ!—அந்தோ!
அத்தன்—அச்சன்—அச்சோ!
அம்மை—அம்மோ! அம்மவோ!
அன்னை—அன்னே!

இங்ஙனம் பெற்றோர் பெயர்கள் பல்வேறு உணர்ச்சிக் குறிப்பிடைச் சொல்லாவது, தமிழிற் பெரும்பான்மையென அறிக. அக்கை என்னுஞ் சொல் தாயையும் மூத்த உடன் பிறந்தாளையும் குறிக்கும்.

அங்கணம்—அங்கண

வணங்கு—வாங்கு—வங்கு—அங்கு. அங்குதல்= வளைதல், சாய்தல். அங்கு—அங்கணம்= வாட்டஞ்சாட்டமாயிருக்கும் சாலகம்.

சாலகம், சாய்கடை (சாக்கடை) என்னும் பெயர்களும் இக்கரணியம் பற்றியவையே. வாட்டமாயில்லா விட்டால் நீர் செல்லாது தேங்கி நிற்கும்.

"அங்கணத்து ளுக்க அமிழ்தற்றால் தங்கணத்தார்
அல்லார்முற் கோட்டி கொளல்."

என்னும் குறளில் (720) உள்ள அங்கணம் என்னும் சொற்கு, பரிமேலழகர் முற்றம் என்று பொருளுரைத்திருப்பது பொருந்துவ தன்று. கீழோர்க்கு உரைக்கும் மாணுரை வீண்படுவதற்குச் சாலகத் திற் கொட்டிய பாலே தக்க உவமையாம்.

அங்கு (ang) என்னும் முதனிலைக்குச் 'செல்' (to go) என்று பொருள் கூறி, உலாவுமிடம் அங்கணம் என்று கொள்ளும் வடவர் சொல்லியல் உத்திக்குப் பொருந்துவதன்று.

அங்கதம்—அங்கத

அங்கு=வளை. அங்கதம்=வளையல், தோள் வளைவி.

பொதுவாக உறுப்பைக் குறிக்கும் அங்கம் என்னும் வடசொல்லினின்று அங்கதம் என்னும் சொற் பிறந்ததாக வடவர் கூறுவர்.

அச்சு—அக்ஷ (axle).

அட்டு—அட்டம்=குறுக்கு. அட்டு—அச்சு=குறுக்காக இருப்பது, உருள்கோத்த மரம்.

அசை—அச்

" நஞ்சினை யசைவு செய்தவன்" (தேவா. 581 : 3)

அசைத்தல்=உண்ணுதல். அசைவு செய்தல்=உண்ணுதல். அசை என்னும் முதனிலை வழக்கிறந்தது.

ஒ. நோ: கட்டல் (கள்+தல்) என்னும் வினை வழக்கற்றபின் களவுசெய் என்பது முதனிலையாய் வழங்குதல் காண்க.

அட்டம்—அட்டம் (boiled rice).

அடு—அடுசில்—அடிசில். அடு—அட்டம். அடுதல்=சமைத்தல்.

அட்டம்[2]—அட்ட (high, lofty).

எட்டு—எட்டம்=உயரம். எட்டம்—அட்டம்.
அட்டம்—அட்டஸ்(வ.)=மதில்மேற் காவற்கூடம்.

அட்டாலை—அட்டால

அட்டம்+ஆலை=அட்டாலை=மதின்மேற் காவற்கூடம் அல்லது கோபுரம். சாலை—ஆலை.

"கீழ்பா லிஞ்சி யணைய வட்டாலை கட்டு" (திருவாலவா. 20: 10).
அட்டாணி=அட்டாலை.

"தலையெடுப்பாக வுயர்ந்த அட்டாணியும்" (இராமநா. சுந். 3).

ஆரியர் வருமுன்பே, பல்வகை யரணுறுப்புக்களைக் கொண்ட கோட்டை கொத்தளங்கள் தமிழகத்திலிருந்தன.

அட்டாலை—அட்டாளை (யா.)

அடக்கம்—டக்கா (ḍh)

அடக்கம்=அடங்கிய ஓசையுடைய தோற்கருவி.

"நிசாளந் துடுமை சிறுபறை யடக்கம்" (சிலப். 8 : 27 உரை).

அடவி—அடவீ (t)

அடு—அடர்—(அடர்வி)—அடவி=மரமடர்ந்த சோலை அல்லது காடு. இனி, அடு—அடவி என்றுமாம். அடுத்தல்=நெருங்குதல், சேர்தல், அடர்தல்.

வடமொழியாளர் காட்டும் சொற்பொருட் கரணியம் வருமாறு:
அட்=திரி (to roam), அலை (to wander about). அடவீ=திரியுமிடம் (place to roam in), மரமடர்காடு (forest).

அடு—அச் (இ. வே.)

அடுத்தல்=நெருங்குதல், அடைதல்.

அத்தம்—அத்வன் (ḍh)

அற்றம்—அத்தம்=ஆளில்லாத காடு, அருநெறி.

"ஆளி லத்த மாகிய காடே" (புறம். 23).
அத்தவனக் காடு என்பது உலக வழக்கு.

ஆள்வழக்கற்ற காட்டுவழி என்னும் சிறப்புப் பொருளை இழந்து, வழி என்னும் பொதுப்பொருளையே அத்வன் என்னும் வடசொல் உணர்த்துகின்றது. (அ. வே.).

அதி—அதி (ati, adhi).

அதித்தல்=வீங்குதல், பருத்தல், மிகுதல்.

" மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை". (குறள். 636).
அதி+இகம்=அதிகம். அதி+அனம்=அதனம்=மிகுதி.
அதிகன்=1. மிக்கோன்.

" பகைஞர்க் கெல்லா மதிகனுய்" (பிரபோத. 26 : 110).
2. பரம்பொருள், இறைவன்.

"அதிகன் வேணியி லார்தரு கங்கையை" (கந்தபு. திருக்கயி-20).

அதிகர்=பெரியோர்.

"அதிகருக் கமுதமேந்தல்" (சூடா. 11: 99).

அதி+அகம்=அதகம்—அதகன்=வலிமையோன்.

" உறுதுயர் தீர்த்த வதகன்" (திவ். பெரியாழ். 2: 1: 9).
அதி— அதை. அதைத்தல்=வீங்குதல், செருக்குதல்.

அதி அன்னும் வினை பிற்காலத்தில் வழக்கற்றது.

அதி என்பது வடமொழியில் முன்னொட்டாகிய இடைச்சொல்லே யன்றி வினைச்சொல்லன்று. அது இருவடிவிற் காட்டப்படினும் ஒரு சொல்லே.

அதிகாரம்—அதிகார

அதி என்னுஞ் சொல் முற்கூறியதே.

கடுத்தல்=மிகுதல். கடு—கடி—கரி. கரித்தல்=மிகுதல். உப்புக் கரித்தல் என்னும் வழக்கை நோக்குக.

கரி—காரம்=மிகுதி, கடுமை, வலிமை, கடுஞ்சுவையான உறைப்பு.

அதிகரித்தல் (மீமிசைச்சொல்)=மிகுதல், பேரளவாதல்.

அதிகரி— அதிகாரம்=ஆட்சிவலிமை, நூலின் பெரும்பகுதி. அதிகாரி=அதிகாரமுள்ளோன்.

வடமொழியில் அதிக்ரு என்னும் கூட்டுச்சொல்லை மூலமாகக் காட்டி, அதற்குத் தலைமையாயிருத்தல் என்று பொருளுரைப்பர். க்ரு(செய்) என்னும் சொற் சேர்க்கையால் அப்பொருள் பெறப்படாமை காண்க.

மேலும், அதிகாரம் என்னும் சொல் வடமொழியில் நூற் சிறு பிரிவைக் குறிப்பதாக மானியர் வில்லியம்சு குறிப்பர். தமிழில் தொல் காப்பியத்திற்போல் நூற்பெரும் பிரிவைக் குறிப்பதே மரபு. திருக் குறளில் பதிகம் என்னும் பெயருக் கீடாக அதிகாரம் என்னும் சொல் லைப் புகுத்தியது உரையாசிரியர் தவறு போலும்!

அதிகாரி—அதிகாரின்

அந்த—ஹந்த(nt)—இ. வே.

அத்தன் (தந்தை)—அத்தோ!—அந்தோ!—அந்த!

அந்த!—அந்தவோ!—அந்தகோ!

சிறு பிள்ளைகள் ஏதேனுமொன்று கண்டு வியக்கும் அல்லது அஞ்சும் அல்லது இரங்கும் அல்லது வருந்தும் நிலையில், தம் பெற்றோரை (சிறுவர் தந்தையையும் சிறுமியர் தாயையும்) விளிப்பது இயல்பாதலால், பெற்றோர் பெயரின் விளிவடிவுகள் மேற்குறித்த உணர்ச்சிகளை வெளியிடும் குறிப்பிடைச் சொற்களாயின.

ஒ. நோ: அச்சன்-அச்சோ; ஐயன்-ஐய-ஐயவோ-ஐயகோ, ஐயோ.

அந்தி—சந்தி (dh)

உத்து (ஒத்து)—அத்து. அத்துதல்=ஒட்டுதல், பொருத்தித் தைத்தல்.

அத்து—அந்து—அந்தி. அந்தித்தல்=1. நெருங்குதல்.
"வேத மந்தித்து மறியான்." (திருவிளை. நகர. 106).

2. கூடுதல், ஒன்றுசேர்தல்.

இனி, உம்—உந்து—அந்து—அந்தி என்றுமாம்.

இரவும் பகலும் அல்லது பகலும் இரவும் கலக்கும் இடைவேளையே கால வகையில் அந்தி யெனப்பட்டது. காலையில் நிகழ்வது காலையந்தியென்றும், மாலையில் நிகழ்வது மாலையந்தியென்றும் சொல்லப்பெறும்.

"காலை யந்தியும் மாலை யந்தியும்" (புறம். 34.).

காலையந்திக்கு முன்னந்தி, வெள்ளந்தியென்றும், மாலையந்திக்குப் பின்னந்தி, செவ்வந்தி யென்றும், பெயருண்டு.

அந்தியென்னும் பொதுச்சொல் சிறப்பாக ஆளப்பெறும்போது மாலையந்தியையே குறிக்குமென்பது, அந்திக் கடை, அந்திக் காப்பு, அந்திமல்லிகை, அந்திவண்ணன், அந்திவேளை முதலிய சொல் வழக்கால் அறியப்படும்.

இடவகையில், அந்தி என்பது முத்தெருக்கள் கூடுமிடத்தைக் குறிக்கும்.

ை வீதியும்'' (சிலப் 14 : 213).

பிற்காலத்தில் அந்தி என்னுஞ் சொல் சகரமெய் முன்னிடப் பெற்றுச் சந்தி என்றாயிற்று.

ஒ. நோ : இளை—சிளை, உதை—சுதை, ஏண்—சேண்.

காலை அல்லது மாலை வழிபாடு.

''சந்திசெயத் தாள்விளக்க'' (நள. கலிதொ. 32).

2. மாலை (சூடா). ''சந்திக்காப்பு' (உ. வ.).

அந்தி சந்தி=காலை மாலை

3. முத்தெருக் கூடுமிடம்.

''சதுக்கமுஞ் சந்தியும்'' (திருமுரு. 225).

அந்தி அல்லது சந்தி என்னுஞ் சொல் தலைக்கூடுதற் பொருளில் பண்டையிலக்கியத்தில் அருகியே வழங்கியமையாலும், சொற் புணர்ச்சியைக் குறிக்கச் சந்தி என்னும் சொல் வடமொழியிலேயே ஆளப்பெறுவதாலும், தமிழ்ப்பற்றுள்ள பெரும்புலவரும் சந்தி என்பது வடசொல்லென்றே மயங்கி வருகின்றனர். ஆயின், ஆய்ந்து பார்க்குங்கால், இதன் தென்சொல் மூலம் வெளிப்படுவது வியக்கத் தக்கதாயிருக்கின்றது.

இச்சொல் முதலில் தமிழில் வழங்கிய வடிவம் அந்து என்பதே. அந்துதல்=கூடுதல். அந்து—அந்தி=கூடியது, கூடிய நேரம் அல்லது இடம். அந்து—சந்து (முதனிலைத் தொழிற்பெயர்)=1. பொருத்து (பிங்.) 2. உடற்பொருத்து (பிங்.), தொடைப் பொருத்து, இடுப்பு. 3. இரு பகைவர் பொருந்துதல் (ஒப்புரவாதல்). ''உயிரனையாய் சந்துபட வுரைத்தருள்'' (பாரத. கிருட்டிணன்றூ. 6), ''நடு நின்று ிருவருக்குஞ் சந்து சொல்ல'' (சிலப். 8: 101, உரை). 4. பல வழி கூடுமிடம். ''சந்து நீவி'' மலைபடு. 393).

சந்து—சந்தை=பல கடைகள் கூடுமிடம்.

இனி, வடவர் காட்டும் வரலாறு வருமாறு:—

ஸம்+தா (dhā)=ஸந்தா. ஸம்=கூட. தா=வை, போடு (to place or put).

ஸந்தா=1. வி. கூடு, ஒன்றுசேர், புணர். ஒப்புரவாகு முதலியன.

2. பெ. கூட்டம், சேர்க்கை, புணர்ச்சி, உடன்பாடு, கலவை முதலியன,

ஸம் + தி (dhi) = ஸந்தி = கூட்டமுள்ளது, கூட்டம், கூடுகை, கூட்டு, இணைப்பு, சேர்க்கை, ஒன்றியம், அவை, உடன்பாடு, அந்தி, புணர்ச்சி, சொற்புணர்ச்சி முதலியன.

ஸம் + த்யா (dhya) = ஸந்த்யா = ஒன்றுசேர்க்கை, கூட்டம், கூடுகை, ஒன்றியம், காலையந்தி, மாலையந்தி முதலியன.

இதினின்று அறியக் கூடியவை :—

(1) சந்தி என்னும் தென்சொல்லும் ஸந்தா என்னும் வடசொல்லும் வெவ்வேறு மூலத்தன.

(2) ஸம் என்னும் வடமொழி முன்னொட்டு கும் என்னும் தென் சொற்றிரிபு.

இது பின்னர் விளக்கப் பெறும்.

(3) தி (dhi), த்யா (dhyā) என்னும் ஈறுகள் தா (dhā) என்னும் முதனிலையொடு தொடர்புடையனவல்ல. கன்னி என்பதைக் கன்யா என்று திரித்ததுபோல், சந்தி என்பதைச் சந்த்யா என்று திரித்திருக்கின்றனர்.

(4) சந்தை என்னும் சொல்லும் பொருளும் வடமொழியில் இல்லை.

(5) சந்தி என்னும் தென்சொல்லே ஸந்தா என்னும் வடசொல்லொடு தொடர்பு படுத்தப்பட்டுள்ளது.

(6) சந்தி என்னும் தென்சொல் தனிச்சொல்; ஸந்தா என்னும் வடசொல் கூட்டுச்சொல்.

(7) அந்தித்தல், சந்தித்தல் என்னும் வினைகளும் வடமொழியில் இல்லை.

இவற்றால், அந்தி என்பதன் முன்மிகை வடிவான சந்தி என்பது தென்சொல்லே யென்பது தெளிவாம்.

சந்திப்பைக் குறிக்கும் junction அல்லது juncture என்னும் ஆங்கிலச் சொல்லின் முதனிலையான join என்பதும், jungere என்னும் இலத்தீன் சொல்லின் திரிபாம். அவ்விலத்தீன் சொல் jugare என்பதன் திரிபாம். L jugare = E join. L jugam = E yoke. ஆகவே, சந்திப்பைக் குறிக்கும் இலத்தீன் சொல்லும், சமற்கிருதச் சொல்லினின்று வேறுபட்ட தனிச் சொல் என்பதை அறிக.

சந்தி என்னும் வடிவமும் ஓசையும் ஆராய்ச்சியில்லாத் தமிழ்ப் புலவரை மயக்கலாம். இதற்கொத்த வடிவும் பொருளுமுள்ள சொற்கள், ஏனைச் சொன்முதன் மெய்களைக்கொண்டும் தமிழில் அமைந்திருத்தல் காண்க.

கும்—(குந்து)—குத்து—கொத்து=குலை, குடும்பம், திரள்.

கும்—கம்—கந்து=உடற்சந்து (திவா.), மாடு பிணைக்குந் தும்பு. கந்துவான் =மாடுபிணைக்குங் கயிறு.

கந்துகளம்=நெல்லும் பதருங் கலந்த களம்.

கந்துமங்கல்=கப்பும் மங்கலுங் கலந்த சாயம்.

கந்து மாறுதல்=நுகத்திற் பூட்டிய எருதுகளை வலமிடம் மாற்றிக் கட்டுதல்.

சந்தி என்பது அந்தி என்பதன் முன்மிகை.

சும்—சும்மை = தொகுதி. சும்—சொம் = திரண்ட செல்வம். சொம்—(சொந்து)—சொத்து.

சொந்து—சொந்தம்=தொடர்பு, உடைமை.
தும்—துந்து—தொந்து—தொந்தம்=தொடர்பு, தொடுப்பு.
தொந்து—தொத்து=வி. ஒட்டு; பெ. கொத்து.
நும்—நம்—நந்து. நந்துதல்=வளர்தல்.
பும்—பொம். பொம்முதல்=மிகுதல்.
"அதிர்குரல் பொம்ம" (பாரத. பதினென். 112)
பொம்—பொம்மல்=கூட்டம்.
"பொலிந்தன உடுவின் பொம்மல்" (கந்தபு. காசிபன் புல. 28)
பொம்—பொந்து=திரட்சி. பொந்து—பொந்தன்.
மும்—(மொம்) — மொந்து = திரட்சி, பருமை. மொந்து — மொந்தன்.

சந்தி என்னும் சொல், சொற்புணர்ச்சி என்னும் பொருளில் எவ்வகைத் தமிழ் வழக்கிலும் இதுகாறும் இடம் பெறுமற் போயினும், தெருப்புணர்ச்சி என்னும் பொருளில், சந்திக்கிழுத்தல், சந்தி சிரித்தல், சந்தியில் நிற்றல், சந்தி மறித்தல், சந்தியில் விடுதல் என்று உலக வழக்கிலும், சந்தி மிதித்தல் (திருவிளை உக்கிர. 27), "சதுக்கமுஞ் சந்தியும்" என்று செய்யுள் வழக்கிலும், ஊன்றியிருத்தல் காண்க. சந்திக்கோணம் என்பது ஒரு தெருறுப்பு (பெருங். உஞ்சைக். 58: 51).

அந்து, சந்து என்னும் வினைமுதனிலைகள் இகர வீறுபெற்று உண்ணி, கொல்லி என்பனபோலச் செய்வான் பெயர்களாகி (Noun of Agency), பின்னர் அஞ்சிக்கை, இரட்டித்தல் என்பனபோல் மீண்டும் முதனிலைகளாய்ப் புடைபெயர்ந்தன என அறிக.

அந்து -சந்து. அந்து-அந்தி. சந்து-சந்தி

அந்தி-அந்திப்பு. சந்தி-சந்திப்பு.

ஆராய்ச்சியின்மையாலும் ஏமாளித்தன்மையாலுமே, பல தென் சொற்கள் வடசொல்லெனத் தமிழராலும் நம்பப்பட்டு வருகின்றன. தென்சொல்லை வடசொல்லென ஏமாற்றும் வடமொழியாளரைச் சந்திக்கிழுக்கும் சொற்களுள், சந்தி என்பதும் ஒன்றும்.

அங்தோ—ஹந்த (nt)—இ. வே.

அப்பம்—அபூப (இ. வே.)

ம. அப்பம், தெ. அப்பமு, க., து. அப்ப.

உப்புதல்=ஊதுதல், எழும்புதல், பருத்தல்.

உப்பு-(உப்பம்)—அப்பம். ஊது-ஊத்து=பருக்கை. ஊத்து+ அப்பம்=ஊத்தப்பம்

அப்பளம்-பர்ப்பட (ṭ)

தெ. அப்பளமு, க. அப்பள, ம. பப்படம்.

அப்பளித்தல்=சமமாகத் தேய்த்தல். அப்பளி-அப்பளம்.

அம்-அப் (இ. வே.)

அம்முதல்=பொருத்துதல், ஒட்டுதல். அம்=நீர்.

"அந்தாழ் சடையார்" (வெங்கைக். 35).

அம்பரம்-அம்பர.

உம்பர்=உயர்ச்சி, மேலிடம், வானம், தேவருலகம்.

உம்பர் - உம்பரம் - அம்பரம். "ஒருமருந்தரும் குருமருந்தை உம்பரத்திற் கண்டேனே" (வே. சா.).

இதற்கு வடமொழியில் வேரில்லை.

அம்பு-அம்பு

அம் -அம்பு=நீர்.

அம்மை-அம்பா (இ. வே.)

ம., தெ., க. அம்மா. அம்ம—அம்மா—அம்பா (வ.).

OG amma, Them ammon, ammun, Ger amme (nurse), E mamma.

அம்பி, அம்பிஸ் (இ. வே.), அம்பீ (இ. வே.), அம்பிகா (VS) & TS), அம்பாலீ (TS), அம்பாலிகா (VS).

ammā என்னும் வடிவம் செ. ப. க. க. த. அகர முதலியில் வடசொற்போற் குறித்திருப்பது தவறுகும். அம்மம் (தாயின் முலை) என்ற சொல்லினின்றுவது ஆவின்கன்று கதறுலியினின்றுவது' அம்ம என்னும் சொற் பிறந்திருத்தல் வேண்டும். "அம்ம முண்ணத் துயிலெழாயே" (திவ். பெரியாழ் 2: 2: 1).

க. அம்மி, ம. அம்மிஞ்ஞி.

அமைச்சன்-அமாத்ய

அமை-அமைச்சு-அமைச்சன் = அரசியல் வினைகளைச் சூழ்ந்து அமைப்பவன்.

அமை + சு = அமைச்சு (தொ. பெ.). ஒ நோ விழை-விழைச்சு.
வடவர் காட்டும் வரலாறு:—

அம = இது (அ. வே.). அமா (அம என்பதன் கருவி வேற்.) = உடன் (இ. வே.)

அமாத் (நீக்க வேற்.) = அண்மையிலிருந்து (இ. வே).
அமாத்ய = உடன் வதிவோன், உடன் குடும்பத்தான் (இ. வே).
2. (அரசனின்) உடன் கூட்டாளி, அமைச்சன் (ம. பா.).

உடன்கூட்டாளி என்பது உழையன் என்பதற்கு ஒத்திருப்பினும், அம என்னும் அண்மைச் சுட்டுப் பெயரினின்று அமாத்ய என்னுஞ் சொல்லைத் திரிப்பது பொருந்தாது. பாரதக் காலத்தில் வடவருக்குத் தமிழரொடு மிகுந்த தொடர்பு ஏற்பட்டுவிட்டதனால், அமைச்சன் என்னும் தென்சொல் அக்கால வடநூல்வழக்கிற் புகுந்த தென்று கொள்ளுதற்கு எதுவுந் தடையில்லை. மேலும், அமை என்னுந் தமிழ்ச்சொல் அண்மைப் பொருளும் உணர்த்துவது கவனிக்கத் தக்கது. அமைதல் = நெருங்குதல். "வழையமைசாரல்" (மலைபடு. 181).

அயர்-ஹய்

அயர்தல் = தளர்தல், கொண்டாடுதல். வடசொற்பொருளும் இவையே.

அரக்கு-ராக்ஷா

ம. அரக்கு, க., து. அரகு.
எல் = கதிரவன். எல்-எர்-எரி = நெருப்பு, சிவப்பு. எர்-எருவை = குருதி, செம்பு, செம்பருந்து. எர்-இர்-இரத்தி = செம்பழ இலந்தை.

இர்-அர்-அரன், அரக்கு, அரத்தம், அருணம்.
அரக்கு = இங்குலிகம், சிவப்பு.
அரக்கு—அரக்கம் = அவலரக்கு (பதிற்றுப். 30: 27).
அரக்காம்பல், அரக்குச் சாயம், அரக்கு மஞ்சள் என்பன செந்நிறப் பொருள்களைக் குறித்தல் காண்க.

அரங்கம்—ரங்க

அர்—அறு, அர்—அரங்கு = 1. அறை. 2. அறை வகுக்கப்பட்ட பாண்டி (சில்லாக்கு) விளையாட்டுக் கட்டம்.

"கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக்
கல்லாச் சிறுவர் நெல்லிவட் டாடும்"

3. சூதாட்டுக் கட்டம்.

4. நாடக மேடை.

5. முத்தமிழ்ப் புலவர் தத்தம் திறங்காட்டி ஒப்பம்பெறும் மேடை.

அரங்கு—அரங்கம்—1. நாடக மேடை. 2. சூதாடுமிடம். 3. படைக்கலம் பயிலுமிடம். 4. போர்க்களம். 5. ஆற்றிடைக் குறை. 6. திருவரங்கம்.

காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடைப்பட்ட ஆற்றிடைக் குறை, திருமால் கோயிலையுடைமையால் திரு என்னும் பெயரடை பெற்றது.

வடமொழியில் இச்சொற்கு வேரில்லை. நிறத்தை அல்லது சாயத்தைக் குறிக்கும் ரஞ்ச் (ranj) என்னுஞ் சொல்லொடு தொடர்பு படுத்தி, தம் அறியாமையையோ அழுக்காற்றையோ காட்டுவர்.

தமிழிலுள்ள பொருள்களெல்லாம், அறுக்கப்பட்டது என்பதை அடிப்படையாய்க் கொண்டவையே.

அரசன்—ராஜன்

ம. அரசன், க. அரச, து. அரசு.

L regis, rex, Kelt, rig, CG rik, Goth reiks, AS rice, E rich.

அரவணைத்தல் என்பது தழுவுதலையன்றித் தழுவிக்காத்தலையே குறித்தலால், அரவணை என்னும் கூட்டுச் சொல்லின் முதலுறுப்பு, பாம்பைக் குறியாது காக்கும் வலிமையுள்ள உயர்திணையான் ஒருவனையே குறித்தல் வேண்டும். அகரம் பல சொன்முதலில் உகரத்தின் திரிபாயிருத்தலால், அரவு என்பது உரவு என்பதன் திரிபென்று கொள்ளுதல் தக்கதாம். உரவு வலிமை. வலி என்பது பண்பாகுபெயராய் வலிமையுள்ளவனையுங் குறிக்கும்.

"காய மனவசி வலிகள்" (மேருமந். 1097).

Authority என்னும் ஆங்கிலச் சொல்லையும் நோக்குக.

உலகில் வலிமை மிக்கவன் அரசனாதலின், உரவோன் என்னும் சொல் அரசனையே சிறப்பாகக் குறிக்கும்.

"முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்துபட்ட வியன்ஞாலம்
தாளிற் றந்து தம்புகழ் நிறீஇ
யொருதா மாகிய வுரவோ ரும்பல்"

என்று பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் பாடியது காண்க (புறம். 18).

வுகரவீறு சில சொற்களில் சுகர வீறாகத் திரிகின்றது.

எ - டு: ஏவு—ஏசு, பரவு—பரசு, விரவு—விரசு. துளவு—துளசு —துளசி.

இம்முறையில் அரவு என்பது அரசு என்றாயிற்று.

அரசு—அரசன். இச்சொல் குமரிக் கண்டத்தில் தலைக்கழகக் காலத்திலேயே தோன்றியதாகும். அகப்பொருளிலக்கணத்திற் குறிக்கப்பெறும் நால்வகை வகுப்பாருள் இரண்டாமவர் அரசர். அரசன் என்பது, கிழவன், வேள், மன்னன், கோ, வேந்தன் என்னும் ஐவகைத் தலைவர்க்கும் பொதுப் பெயராம்-

"ஐவகை மரபின் அரசர் பக்கமும்"

என்னுமிடத்து (தொல். 1021), வேறு பெயர் பொருந்தாமை காண்க.

அரசன்—அரைசன்—அரையன். அரசு—அரைசு.
தெ. ராயலு, க. ராயரு. E. roy,
மாவரையன்—மாராயன்—மாராயம்.

"மாராயம் பெற்ற நெடுமொழி யானும்" (தொல். பொ. 63).

இந்தியர்க்குள் வழங்கிவரும் ராய் என்னும் பட்டப் பெயர், அரையன் என்பதைத் தழுவியதாகும். ராவ் என்பது அரவன் (அரசன்) என்பதைந் தழுவியது போலும்!

மாராயம் என்பது தொல்காப்பியர் காலத்தில் மாவரையம் என்றே வழங்கியிருத்தல் வேண்டும். பிற்காலத்தில் எழுதினவன் பழமொழிப்படி ஏட்டைக் கெடுத்ததாகத் தெரிகின்றது.

அரையன்—வ. ராய. யகரம் பெற்ற இச்சொல் வடிவிற்குத் தமிழில் தவிர வேறெம்மொழியிலும் விளக்கமின்மை காண்க.

ராஜ என்னும் சொல்லை ரஜ் என்று குறுக்கி ஆள் (to rule) என்றும், ஒளிர் (to shine) என்றும், செயற்கை முறையில் வடவர் பொருள் கற்பிப்பது எள்ளளவும் பொருந்தாது.

இனி, அத்திரு, அத்து(க)மானி, இலஞை, கணவம், சுவலை, திருமரம், பஞை எனப் பல பெயர்கொண்ட அரசமரத்திற்கு, அப்பெயர் தொன்று தொட்டு உலக வழக்கில் வழங்கி வருவதும், அச்சொல்லின் தமிழ்மைக்கு ஒரு சான்றும்.

ம. அரசு, க. அரசெ, தெ. ராய்.

நாட்டு மரங்களுள் அரசமரம் மிக ஓங்கி வளர்வதால், மரவரசு என்னும் பொருளில் அது அப்பெயர் பெற்றது.

"அத்திபோல் துளிர்த்து, ஆல்போற் படர்ந்து, அரசுபோ லோங்கி, அறுகுபோல் வேரூன்றி, மூங்கில்போற் சுற்றம் முசியாமல் வாழ்ந்திருப்பீர்." என்னும் மரபுத் தொடர்மொழியையும் நோக்குக.

அரணம்—சரண (இ. வே).

உரத்தல் = வலிமையாதல். உரம் = வலிமை.

உரம்—அரம்—அரண் = வலிய காப்பு, காப்பான கோட்டை, காப்பான காடு. ஒ. நோ: பரம்—பரண்.

அரண்மனை = காப்பான அரசன் மாளிகை.

அரண்—அரணம் = காப்பு, அந்தளகம் (கவசம்), கோட்டை மதில், அடவி.

சரண என்னும் வடசொற்குச் சார்தல் (to lean on, rest on) என்று பொருள்படும் சரி என்னும் சொல்லை மூலமாகக் காட்டுவர். அது சார் என்னும் தென்சொல்லின் திரிபாயிருக்கலாம்.

அரணம்—அரண்ய (இ. வே.).

அரண் = காவற்காடு. அரண்—அரணம் = காடு.

"காவல்வேல் காவற் காடிவை யரணே". (பிங்.)

"காடும் எயிலுங் கவசமும் அரணம்". (பிங்.

"மலையரண் காட்டரண் மதிலரண் நீரரண்
நவையறு சிறப்பின் நால்வகை யரணே". (திவா.)

"மலையரண் காட்டரண் மதிலரண் நீரரண்
வகையுறு சிறப்பின் நால்வகை யரணே". (பிங்.)

வடமொழியார் காட்டும் மூலம்:

ரு (ṛ) = செல். ரு—அரண = தொலைவான, அயலான.

அரண—அரண்ய = தொலைவான அல்லது அயலான இடம், காடு, அடவி, பாலை.

அரத்தகம்—அலக்தக, அலக்தகம்

அர்—அரன் = சிவன். அர்—அரக்கு = செம்மெழுகு.

அர்—அரத்தம் = செந்நீர் (குருதி). அரத்தம்—அரத்தகம் = செம் பஞ்சுக் குழம்பு. எல்—எர்—இர்—அர்.

அரத்தம்[1]—ரக்த

அரத்தம் = செந்நீர்.

இதற்குத் தமிழ் வேர் மேற்காட்டப்பெற்றது.

வடவர் நிறமூட்டப்பெறு (to be dyed or coloured) என்னு பொருளுள்ள ரஞ்ச் (ranj) அல்லது ரஜ் என்னும் சொல்லை மூலமாகக் காட்டுவர்.

அரத்தம்² - அலக்த, அலக்தஸ்

அரத்தம் = அரக்கு. (திவா.).

அரத்தன் —— ரக்த

அரத்தன் = செவ்வாய். (பிங்.).

அரத்தம் என்னும் சொற்குத் தமிழில், சிவப்பு, செந்நீர், பவழம், செம்பரத்தை, செங்கழுநீர், செங்கடம்பு, செம்பருத்தி, செவ்வாடை (துகில்) என்னும் பொருள்களிருப்பதையும், வடமொழியில் அ + ரக்த என்று பிரித்துப் பொருந்தா மூலங் காட்டுவதையும், நோக்குக.

அரவம் — ரவ (இ. வே.)

அர் — அரவு. அரவுதல் = ஒலித்தல், அரவஞ் செய்தல்.

"வண்டரவு கொன்றை" (தேவா. 89:3).

அரவு — அரவம். "படையியங் கரவம்" (தொல். 1004).

வடவர் 'ரு' என்னும் மூலங்காட்டுவர். அது அர் அல்லது அரவு என்னும் தென்சொல்லின் சிதைவே.

அரவம் — ஆரவம் — ஆரவ (வ.) = ஒலி.

"ஆரவ மிகுத்தது" (பாரத. இரண்டா. 24).

அரன் — ஹர

அரம் — அரன் = சிவன் (சேயோன்). அர் — அரம் = சிவப்பு.

பிற்கால முத்திருமேனி (திரிமூர்த்தி)க் கொள்கைக் கேற்ப, ஹ்ரு (அழி) என்னுஞ் சொல்லை மூலமாகக் காட்டுவர் வடவர். அது அரி என்னும் தென்சொல்லின் திரிபாம்.

சிவன் ஆரியத் தெய்வமல்லன். அவன் முத்தொழிலையுஞ் செய்கின்றான் என்பதே தமிழர் கொள்கை.

அரி - ஹ்ரு

அரித்தல் = அழித்தல்.

அரி - ஹரி

அரி = காட்டிலுள்ள உயிரிகளை யெல்லாம் அழிக்கும் விலங்கு (சிங்கம்) — பிங்.

வடசொன்மூலம் 'ஹரி' (பச்சை) எனக் காட்டுவர். அது பொருந்தாமை காண்க.

அருக்கம்-அர்க்க

அருகு-அருக்கு. அருக்குதல் = அழித்தல்.
''அரிமுதலோ ருயிரருக்கி'' (உபதேசகா. சிவத்து. 422).
அருக்கு = எருக்கு. அருக்கு-அருக்கம்.
எருக்குதல் = 1. அழித்தல்.
''நாடுகெட வெருக்கி'' (பதிற்றுப். 83: 7).
2. கொல்லுதல் (திவா.).

அருக்கு-எருக்கு. எருக்கஞ்செடி நஞ்சாதலால் இப்பெயர் பெற்றது.

அருணம்-அருண (இ. வே.)

அர்-அருணம் = சிவப்பு, சிந்தூரம், செம்மறியாடு.
அருணம்-அருணன் = எழும் செங்கதிரோன்.

அருணமணி = மாணிக்கம். அருணமலை = தீப்பிழம்பாய் நின்றதாகச் சொல்லப்பெறும் மலை. அருணமலை — அண்ணாமலை, அருணை.

ஆதித்தரின் தாயாகச் சொல்லப்படும் அதிதியின் பெயரான ரு (ṛ) என்னும் சொல்லினின்று, அருண என்னும் பெயர் பிறந்துள்ளதாக வடவர் கூறுவர். இவ் 'ரு' அர் என்னும் தமிழ் வேரின் திரிபாயிருக்கலாம்.

அருந்து-அத் (இ. வே.)
L. ed, E eat
ஒ. நோ: மருந்து—மந்து (தெ.). உந்து—உத்து.

அலத்தகம்-அலத்தக

அலத்தகம்-அரத்தகம். அலத்தகம் = செம்பஞ்சுக் குழம்பு.

அலத்தம்-அலக்த

அலத்தம்-அரத்தம். அலத்தம் = செம்பருத்தி. இவை முன்னர்க் காட்டப்பெற்றன. எல் (கதிரவன்)—இல்—அல்.

அலப்பு-லப்

லப்-ரப் (இ. வே.) = அலப்பு.

அவை-சபா (sabhā)-இ. வே.

அமைதல் = நெருங்குதல், கூடுதல். அமை = கூட்டம்.
அமை-அவை. ஒ. நோ: அம்மை-அவ்வை, குமி—குவி.

அவையடக்கியல் அவையல்கிளவி என்பன, தொல்காப்பியர்க்கு முன்பே தொன்னூல்களில் வழங்கிவந்த இலக்கணக் குறியீடுகளாம்.

"வாயுறை வாழ்த்தே அவையடக் கியலே
செவியறி வுறூஉவென அவையும் அன்ன." (தொல். 1367)

"அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்." (தொல். 925)

அவை-அவையம்.

"தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்." (குறள்-67)

அவை-சவை. ஒ. நோ: இளை-சிளை, உதை-சுதை.

சவை-சபா (வ.)

வடசொல் வடிவிற்குப் பின்வருமாறு மூவேறு வகையில் மூலங் காட்டுவர்.

(1) ஸ=ஸஹ (கூட). ஸ-ஸபா=கூட்டம்.

(2) பா (bhā)=விளங்கு (to shine). ஸபா=விளக்கத்தோடு (பிரகாசத்தோடு) கூடியது, அறிஞரவை.

இப்பொருளிற் பா என்னும் வடசொல் பால் என்னும் தென் சொல்லொடு தொடர்புடையதாயிருக்கலாம்.

பால்=வெண்மை. "பாற்றிரு நீற்றெம் பரமனை" திருவாச.(44 6).

(3) ஸிப்.

இது உடன்பிறப்பைக் குறிக்கும் மேலையாரியத் தியூத்தானியச் சொல். ஆக்கசுப் போர்டுச் சிற்றகர முதலியில் (C. O. D.) பின்வருமாறு குறிக்கப்பெற்றுள்ளது.

sib=a brother or sister. sibship=the group of children from the same two parents.

OE sib (b), MDu sib (be), OHG sippi, Goth sibjis.

இம்மூவகை மூலத்தினும் தமிழ்மூலமே பொருத்தமாயிருத்தல் காண்க.

அளகம்-அலக

அள்=செறிவு. அள்ளுதல்=செறிதல். அள்ளல்=நெருக்கம். அளம்=செறிவு. அளம்-அளகம்=1. பெண்மயிர். (பிங்), செறிந்த கூந்தல். 2. மயிர்க் குழற்சி (பிங்.).

அளி-அலி

அள்=கூர்மை, நீர்முள்ளி. அள்-அளகம்=பன்றிமுள். அள்—அளி=கொட்டும் முள்ளுள்ளது, தேனீ.

அல் - அல (முன்)—வ.

ஒ. நோ நுள் - நள் - நள்ளி = நண்டு. நள் - நளி = தேள்.

வடமொழியில் அலி என்னுஞ் சொல் தேளையுங் குறிக்கும்.

அனல் - அனல

அன் - அன்று. அன்றுதல் = சினத்தல். அன்று - கன்று.

கன்றுதல் = சினத்தல், வெயிலாற் கருகுதல்.

அன் -- அனல் — கனல் = நெருப்பு. கனலி = கதிரவன்.

அனல் = தீ, வெப்பம், இடி அனலுதல் = அழலுதல்.

அனலி = நெருப்பு, கதிரவன்.

அழல், அன்று. அனல் என்னும் சொற்களின் மூலம் அல் என்பது உய்த்துணரப்படும். அது வழக்கற்றது. அது எல் என்னும் சொல்லொடு தொடர்புள்ளது. எல் = கதிரவன், வெயில், ஒளி, பகல்.

வடமொழியில் அன் என்பதை மூலமாகக் காட்டுவர். அதற்கு உயிர்த்தல், இயங்குதல் என்னும் பொருளே உண்டு.

ஆகவம்—ஆஹவ (இ. வே.)

அகவுதல் = அழைத்தல், போருக்கழைத்தல், அறைகூவல்.

அகவு — அகவம் — ஆகவம் = போர்.

வடவர் ஆ ஹ்வே என்று மூலங்காட்டுவர். ஹ்வே என்பது அகவு என்பதன் திரிபென்பது முன்னரே கூறப்பட்டது.

ஆ என்பது பொருளற்ற முன்னொட்டு.

ஆடு—(ஏடு) ஏட.

முழுத்தல் = திரளுதல். முழு-முழா = திரண்டமுரசு, முழா-முழவு - முழவம்.

முழா-மிழா = திரண்ட ஆண்மான்.

ஒ. நோ: முடுக்கு—மிடுக்கு, முண்டு-மிண்டு, முறை-மிறை = வளைவு.

மிழா-மேழம் = திரண்ட செம்மறிக்கடா.

மேழம்-மேழகம் = செம்மறிக்கடா.

"வெம்பரி மேழகமேற்றி" (சீவக. 522).

மேழம்—மேடம் = செம்மறிக்கடா, மேடவோரை (பிங்.).

மேழகம்—மேடகம் = செம்மறிக்கடா, மேடவோரை.

மேழகம்—ஏழகம்=செம்மறிக்கடா, ஆடு (சூடா.)

ஏழகம்—ஏடகம்—ஏடு—யாடு=ஆடு.

"யாடுங் குதிரையும் நவ்வியும் உழையும்" (தொல். 1511)

யாடு—ஆடு. ம. ஆடு, க. ஆடு, து. ஏடு.

மேடம்-மேஷ

மேடகம்-மேஷிகா

ஏழகம்-ஏலக

ஏடகம் ஏடக

ஏடு-ஏட

ஆடாதோடை—ஆட்டாருஷ

ஆடும் ஆவும் (மாடும்) தொடாத செடி என்று தமிழிற் சொற் பொருட் காரணங் காட்டுவர்.

ஆணவம்—ஆணவ

ஆண்—ஆணவம்=ஆண்மை, செருக்கு.

மானியர் வில்லியம்சு அகரமுதலி, ஆணவ என்னும் சொல்லை அணு என்பதினின்று திரித்து நுண்மை அல்லது மிகச் சிறுமை என்று மூலப்பொருள் கூறுகின்றது.

ஆணி—ஆணி (இ. வே.)

ஆழ்—ஆழி—ஆணி=ஆழ்ந்திறங்குவது, இருப்பாணி, மர வாணி, ஆணிபோல் கூரானது.

ஆணிக்குருத்து=அடிக்குருத்து, ஆணிவேர்=அடிவேர்.

ஆணி=அடிப்படை, நிலைக்களம், தாங்கல்.

"ஆணியா யுலகுக் கெல்லாம்" (கம்பரா. கடருவு. 27).

ஆணிக்கொள்ளுதல்=ஊன்றிக் கொள்ளுதல்.

ழ—ண, போலி. ஒ. நோ: தழல்—தணல், நிழல்—நிணல்.

கால்டுவெலார் பொருந்துதல் என்னும் அடிப்படைப் பொருள் கொண்டு, அண் என்னுஞ் சொல்லை மூலமாகக் காட்டுவர்.

வடமொழியார், ஊசிமுனை, கழுமுனை, அச்சாணி, முகக் கோற் குச்சு, வீட்டுமூலை, எல்லை என்று வடமொழி யகரமுதலியிற் பொருள் கூறப்பட்டுள்ள அணி என்னுஞ் சொல்லை மூலமாகக் காட்ட விரும் புவர். அது ஆணி என்பதன் குறுக்கமே.

முனைப்பொருள் கொள்ளினும், அள் (கூர்மை) என்னும் தென் சொல்லே ஆகா ிவேராம்.

ஆம்[1]—ஆம்

ஆ—ஆகு—ஆகும்—ஆம் (Yes). ம. ஆம், தெ. அவுனு

'ஆம்' வடமொழியில் மூலமில்லா உடன்பாட்டிடைச் சொல்.

ஆம்[2]—ஆப்

அம்—ஆம்=நீர். "ஆமிழி யணிமலை" (கலித். 48)

ஆமணக்கு—ஆமண்ட

"ஆமணக்கு நட்டால் ஆச்சா வாகுமா?" என்பது பழமொழி. சிற்றாமணக்கு, காட்டாமணக்கு (ஆதளை) என்பன ஆமணக்கு வகைகள்.

வடசொல் அமண்ட, மண்ட என்னும் வடிவுங் கொள்ளும்.

ஆயம்—ஆய (இ. வே.)

தாயம்—ஆயம்=உரிமை, கடமை, கடத்தக்கூலி, தாய ஆட்டக்காய், தாய எண் அல்லது பணயம்.

"உருளாயம் ஓவாது கூறிற் பொருளாயம்
போஒய்ப் புறமே படும்". (குறள். 933).

"ஆயத்திற் கஞ்சி ஆற்றில் நீந்தினதுபோல்."

என்பது பழமொழி.

இருக்கு வேதத்தில் ஆய என்னும் சொல் வந்துசேர்கை என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது (ii, 38 : 20). பாணினீயம், மனுஸ்மிருதி, மகாபாரதம் முதலிய பின்னூல்கள் வருவாய், வரி, ஊதியம் முதலிய பொருள்களில் அதை ஆள்கின்றன. ஆய என்னும் சொற்கு ஆ—இ என்னும் மூலங் காட்டுவர். இ என்பது இய் என்னும் தென்சொல்லின் சிதைவாம். இய்-இயல், இயங்கு.

ஆயிரம்—ஸகஸ்ர (இ. வே.)

அயிர்=நுண்மணல். அயிர்—அயிரம்—ஆயிரம்.

ஆற்று மணலும் கடற்கரை மணலும் ஏராளமாயிருப்பதால், மணற்பெயர் ஒரு பெருந்தொகைப் பெயராயிற்று.

"வாழிய...நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே". (புறம். 9).

"நீ நீடுவாழிய...வடுவாழ் எக்கர் மணலினும் பலவே" (புறம். 55.)

ம. ஆயிரம், கு. ஆயிரெ, க. சாவிர, து. சாவிர, துட. சோவெர் (f), கோ. சாவ்ர்ம்.

இ. ஹசார் (hazār), பெ. ஹசார் (hazār), கி khilloi for khesloi.

வடமொழியில் மூலமில்லை. அகரமுதல் சகர முதலாய்த் திரிவதும் யகரம் வகரமாய் மாறுவதும் இயல்பாதலால், கன்னடத்தில் ஆயிரம் என்பது சாவிர எனத் திரிந்தது.

ஒ. நோ: இளை—சிளை, உதை—சுதை, உவணம்—சுவணம், ஏண்—சேண். நீயிர்—நீவிர், சேயடி—சேவடி.

கன்னடச் சொல்லை யொட்டியே துளுவச் சொல்லும், கன்னடத் திரிபான படகச் சொல்லை யொட்டியே துடவச் சொல்லும் கோத்தச் சொல்லும், இவற்றை யொட்டியே வடசொல்லும், சகர முதலாய்த் திரிந்துள்ளன. இதை அறியாது, பேரா. பரோ வடசொல்லையே தென்சொற்கு மூலமாகத் தம் அகரமுதலியிற் காட்டியிருப்பது, தமிழைப் பற்றிய தம் தவற்றுக் கருத்தினாலேயே.

ஆர்—அர (இ. வே.)

ஆர்தல்=பொருந்துதல். ஆர்=சக்கரக் குறட்டிலும் வட்டையிலும் பொருந்தும் சட்டம் (spoke, radius).

"ஆர்கெழு குறடுசூட்டாழி போன்று" (சீவக. 828).

வடமொழியிற் காட்டப்பெறும் வேர் ரு (ṛi) என்பதே. அது இரி என்னும் தென்சொல்லின் திரிபாகும்.

ஆரம்—ஆர

ஆர்—ஆரம். "ஆரஞ் சூழ்ந்த அயில்வாய் நேமி" (சிறுபாண். 253).

ஆர்ப்பாட்டம்—ஆரபாட்ட (bh).

ஆர்த்தல்=ஆரவாரித்தல். ஆர்ப்பு + ஆட்டம்—ஆர்ப்பாட்டம்=ஆரவாரம். தெ. ஆர்பாட்டமு (bh).

ஆரம்—ஹார

ஆர்தல்=பொருந்துதல். ஆர்—ஆரம்=பல மலர்கள் அல்லது மணிகள் பொருந்திய மாலை.

ஒ. நோ: தொடு—தொடை.

ஆலாத்தி—ஆரத்தி (ஆ—ரத்தி)

ஆலுதல் = ஆடுதல், சுற்றுதல். ஆல்—ஆலா—ஆலாத்து. ஒ. நோ: உல்--உலா—உலாத்து.

ஆலாத்து—ஆலாத்தி = சுற்றியெடுப்பது.

"ஆலாத்தி சுழற்ற லென்கோ" (சௌந்தரி. 103).

ஆலாத்தி—ஆலத்தி—ஆரத்தி.

ஆ--ரத்தி என்னும் வடசொற்கு நீக்குதல், அமைதிப் படுத்தல் (ceased, quiet) என்னும் பொருள்களே மா. வி. அகரமுதலியிற் குறிக்கப்பட்டுள்ளன.

ஆவணம்[1]- ஆபண

ஆவணம் = அங்காடித் தெரு.

"மல்லல் ஆவணம் மாலை யயர" (நெடுநல். 44).

காவணம் = சோலை, சோலைபோன்ற பந்தல், கொட்டகை.

காவணம்—ஆவணம் = கடைத்தெரு (பிங்.), தெரு (திவா.).

"அந்தியுஞ் சதுக்கமும் ஆவண வீதியும்" (சிலப். 14 : 213).

ஆலமரத்தடியிலும் தோப்பிலும் சந்தை கூடுவதும் அங்காடி வைப்பதும் பண்டை வழக்கம். அது இன்றும் சிலவிடத்துள்ளது. வடமொழியில் மூலம் இல்லை.

ஆவணம்[2]— ஆபண

ஆவண்ணம்—ஆவணம் = ஆகும் எழுத்து.

ஆ(ஆகு)தல் = உதவுதல், ஊழியஞ் செய்தல். வண்ணம் = எழுத்து.

ஆவணம் = 1. ஊழிய ஒப்பந்தம், அடிமையோலை, ஊழியம், அடிமைத்தனம்.

"இராவணன் றிண்டோ ளிருபது நெரிதர வூன்றி
ஆவணங்கொண்ட....அண்ணல்" (தேவா. 869 : 8).

2. உரிமை (பிங்.) 3. உரிமையோலை.

"ஓராணவத்தால்...எனையாளுங் கொண்ட நம்பிரானுர்"
(தேவா. 977 : 5).

ஆவணக்களம் (களரி) = ஆவணப் பதிவுச் சாலை.

ஆவணவோலை = உரிமை முறி.

"அண்ணலோர் விருத்தன்போல்வந் தாவண வோலைகாட்டி"
(கந்தபு. வழிநடை. 12).

ஆவணமாக்கள் = உரிமை அல்லது அடிமைச் சூள் வாங்குவோர்.

"பொறிகண் டழிக்கும் ஆவண மாக்களின்" (அகம். 77).

ஆளத்தி — ஆலப்தி (ஆ-லப்தி)

ஆலத்தி—ஆளத்தி = ஒரு பண்ணை வலிவு மெலிவு சமன் என்னும் முந்நிலையுந் தழுவ மண்டலித்துப் பாடுதல் அல்லது இசைத்தல்.

ஆலத்தி சுற்றுதல் கட்புலனும் ஆளத்தி சுற்றுதல் செவிப் புலனும் ஆகும்.

லப் என்னும் வடசொற்கு, அலப்புதல், பிதற்றுதல், புலம்பல், விளித்தல், சொல்லுதல் என்ற பொருள்களே உள. ஆளத்தி என்னும் தமிழ்ச்சொற் கொப்பாக, ஆ-லப் என்னும் புனைசொல்லி னின்று ஆலாப, ஆலாபன முதலிய சொற்களைத் திரித்திருப்பதாகத் தெரிகின்றது.

இகம் — இஹ (இ. வே.)

இ—இகு—இகம் = இவ்வுலகம். இகு—இங்கு—இங்கண்.

முச்சுட்டும் முதலில் தமிழிலேயே தோன்றினவென்பது பின்னர் விளக்கப்பெறும்.

இசி — ஹஸ்

இளித்தல் = பல்லைக் காட்டுதல், சிரித்தல். இளி = சிரிப்பு (பிங்.).

இளி—இசி. இசித்தல் = சிரித்தல்.

ஹாஸ்ய ரஸ = நகைச்சுவை.

இஞ்சிவேர் — ச்ருங்கவேர.

இஞ்சி என்பது தொன்றுதொட்டுத் தமிழ்நாட்டில் விளைந்து வரும் மருந்துப் பூண்டு.

> "செய்யாப் பாவை வளர்ந்துகவின் முற்றிக்
> காயங் கொண்டன இஞ்சி" (மலைபடு. 125-6).

> "இஞ்சிவீ விராய பைந்தார் பூட்டி" (பதிற்றுப். 42 : 10).

> "மஞ்சளும் இஞ்சியும் மயங்கரில் வலயத்து" (சிலப். 10:74).

இஞ்சுதல் = நீரை உள்ளிழுத்தல். இஞ்சு—இஞ்சி.

இஞ்சி காய்ந்தாற் சுக்கு. சுக்கு = நீர்வற்றியது.

சுள்—சுட்கு—சுக்கு. இஞ்சி × சுக்கு.

இஞ்சியை இஞ்சிவேர், இஞ்சிக் கிழங்கு, இஞ்சிப்பாவை என்று சொல்வது வழக்கம்.

இஞ்சி, கிறித்துவிற்கு முற்பட்ட பண்டைக் காலத்திலேயே, இங்கிருந்து மேனுடுகட்கு ஏற்றுமதியான பொருள்களுள் ஒன்றும். ம. இஞ்சி, கு. இஞ்சி, கோ. இஞ்ச், பர் சிங்கிவேர.

L zingiber, Gk zingiberis, LL gingiber, OE gingiber, E ginger, S śṛngavera.

மேலையாரியச் சொற்களெல்லாம் இஞ்சிவேர் என்னும் தமிழ் வடிவைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. அவற்றை வழங்குவோரும் அவற்றைத் தமிழ்ச் சொல்லின் திரிபென ஒத்துக்கொள்வர். ஆயின் வேதமோதுவது தவிர வேறொன்றுந் தெரியாத வடமொழியாளரோ, இஞ்சிவேர் என்பதைச் ச்ருங்கவேர் எனத் திரித்து, மான் கொம்பு போன்ற வடிவினது என்று வலிந்தும் நலிந்தும் பொருள் கூறி, அதை வட சொல்லாகக் காட்ட முயல்வர். ச்ருங்க என்பது கொம்பு என்று மட்டும் பொருள்படும். இஞ்சிவேர் பொதுவாகக் கிளை கிளையாயிருப் பது பற்றி, அதை மான் கொம்பொடு ஒப்பிட்டு மான் என்னுஞ் சொல்லையுஞ் சேர்த்துக் கொண்டது, வடமொழியாளர்க்குத் தென் மொழி மீதுள்ள அழுக்காற்றையும், பகுத்தறிவிற்குச் சற்றும் பொருந்தாவாறு துணிந்து கட்டிக் கூறித் தென்சொல்லை வட சொல்லாகக் காட்டும் இழிவழக்கத்தையும், காட்டச் சிறந்ததொரு சான்றும். வேர என்பதும் உடம்பு என்று பொருள்படுவதேயன்றி, வேர் என்னும் பொருள் கொண்டதன்று. இத்தகைச் சொற்பொருட் காரணத்தை மேலையரும் ஏற்றுக்கொண்டது, அவரின் தமிழறியா மையையும் அதனல் விளையுந் தீமையையும் காட்டுவதாகும்.

இட்டி - யஷ்டி

இட்டு—இட்டி=ஒடுங்கிய அலகுள்ள வாள்வகை.

"இட்டிவேல் குந்தங் கூர்வாள்" (சீவக. 2764).

இட்டி—ஈட்டி. க., ம. இட்டி.

வடமொழியில் மூலம் இல்லை.

இட்டிகை—இஷ்டகா

இடு—இடுகு—இடுக்கு—இடுக்கம். இடு—இட்டு—இட்டிது = சிறிது.

"ஆகா றளவிட்டி தாயினும்" (குறள். 478).

இட்டிமை=சிறுமை (திவா.), ஒடுக்கம் (திருக்கோ. 149 உரை).

இட்டிய=சிறிய (ஐங்குறு. 215). இட்டளம்=நெருக்கம்.

இட்டிடை=சிறுகிய இடை. "இட்டிடையின் மின்னிப் பொலிந்து". (திருவாச. 7 : 16).

இட்டிகை=சிறுசெங்கல். "கண்சொரீஇ இட்டிகை தீற்றுபவர்" (பழ. 108).

வடமொழியிற் செங்கல் என்றே பொதுவாகக் குறிக்கப்பட்டுளது. அதில் மூலமும் இல்லை.

இடைகலை—இடாகலா (இடா + கலா)

இடைகலை=இடப்பக்க மூக்குத் துளைவழி விடும் உயிர்ப்பு, பத்து நாடிகளுள் ஒன்று.

இடை=இடம். இடைதல்=பின்வாங்குதல், தோற்றல், வலி குறைதல். இடை—இடம்=வலிகுறைந்த கைப்பக்கம். இடம் × வலம்.

இடைகலை இடைநாடி எனவும் படும். இடை—இடா (வ.). நாடி—நாடீ (வ.)

இடைகழி—தேஹலி (லீ).

இடை + கழி=இடைகழி=இடையிற் கழிந்து செல்லும் நடை, சந்து, வாயில்.

இடைகழி—டேகழி—டேழி—ரேழி (கொச்சைத் திரிபுகள்) டேகழி—தேஹலி (வ.)

இராகு—ராஹு

இராகு கரும்பாம்பு (பிங்.) என்றும் கருங்கோள் என்றும் சொல்லப்படும்.

இர்—இரு—இருமை=கருமை. இர்—இரா—இரவு. இர்—இருள்—இருட்டு.

இரா—இராகு.

வடமொழியிற் பற்றுவது (to seize, take hold of) என்று பொருள்படும் ரப் (rabh) என்னும் சொல்லை மூலமாகக் காட்டுவது, பொருந்தப் பொய்த்தல் என்னும் உத்தியாம்.

இலக்கு—லக்ஷ்

இலக்கு=இலை, எய்யுங்குறி.

விற்பயிற்சியிலும் விற்போட்டியிலும், பெரும்பாலும் ஒரு மரத்துச்சியிலுள்ள இலையை இலக்காக வைத்தெய்வதே பண்டை வழக்கம். இலக்கு=ஒரு குறித்த இடம் (நெல்லை வழக்கு).

வடமொழியாளர் லக்ஷ் என்பதை வினையாகவும் ஆள்வர்.

இலக்கம்—லக்ஷ

இலக்கு—இலக்கம்=குறி.

"இலக்க முடம்பிடும்பைக்கு" (குறள். 627).

இலக்கியம்—லக்ஷ்ய

இலக்கு—இலக்கம்=சிறந்த வாழ்க்கை யிலக்கை விளக்கிக் கூறும் வனப்பு (காவியம்).

வடமொழியில் லக்ஷ்ய என்ற சொற்கும் இலக்கான பொருள் என்றே பொருள் கூறுவர்.

இலக்கணம்—லக்ஷண

இலக்கு—இலக்கணம்=சிறந்த நடைக்கு எடுத்துக்காட்டாக அல்லது கற்றோர் பின்பற்றும் இலக்காக, கூறப்பெறும் மொழியமைதி (Grammar).

வடமொழியில் குறி, குறிக்கோள், இயல், இயல்விளக்கம் (definition), விளக்கக் காட்டு (illustration) என்னும் பொருள் களிலேயே லக்ஷண என்னும் சொல்லை ஆள்வர்.

லக்ஷ் என்னும் சொற்கு லக் (lag=that which is attached or fixed என்பதை மூலமாகக் காட்ட முயல்வது பொருந்தாது.

ஈந்து—ஹிந்தால

ஈர்தல்=அறுத்தல். "உயிரீரும் வாளது" (குறள். 334).

ஈர்=நுண்மை. "ஈரயிர் மருங்கின்" (சிலப். 6: 146).

ஈர்—ஈர்ந்து—ஈந்து=கிளையில்லா மரங்கட்குள் மிகச்சிறிய ஓலை யுள்ளது, அல்லது ஏறுவாரை அறுக்கும் அடியினது. ம. ஈத்த, தெ. ஈத்த.

ஈயம்—ஸீஸ (வே.)

இள் — இள — இளகு. இள் — இய் — ஈ — ஈயம் = எளிதில் இளகுவது.

உகு—உக்ஷ் (இ. வே.)

உகுத்தல்=சிந்துதல், சிதறுதல், தெளித்தல்.

உகை—அஜ்

உ—உகை. உகைத்தல்=முன்தள்ளுதல், செலுத்துதல்.

உகை—அகை. அகைத்தல்=செலுத்துதல் (சூடா.).

"பெருந்தோணி பற்றி யுகைத்தலும்" (திருவாச. 30: 4).

அகை—கை. கைத்தல்=செலுத்துதல்.

அகை—Gk ago, L. ago, S aj.

உச்சம்—உச்ச

உ—உச்சி=தலை, உச்சந்தலை, முகட்டு நுனி, வான முகடு, நண்பகல்.

உச்சி—உச்சம். உச்சம்போது=உச்சிப்பொழுது.

"உச்சம் போதே யூரூர் திரிய" (தேவா. 289 : 9).

உச்சந்தலை—உச்சித்தலை.

உடுக்கு—ஹுடுக்க

உடு=ஒடு. உடுக்கு=ஒடுக்கு. ஒடு—ஒடுகு—ஒடுங்கு—ஒடுக்கு—ஒடுக்கம். உடுகு, உடுங்கு, ஒடுகு என்பன இறந்துபட்டன. உடுக்கு=இடையொடுங்கிய சிறுபறை. உடுக்கு—உடுக்கை. வடமொழில் மூலமில்லை.

உண்ணம்—உஷ்ண (இ. வே.)

உள்—உண்—உண்ணம்=வெப்பம்.

"உண்ண வண்ணத் தொளிநஞ்சமுண்டு" (தேவா. 510 : 6).

உண்=உண. உணத்தல்=காய்தல், உலர்தல்.

உண—உணத்து. உணத்துதல்=காயப்போடுதல், உலர்த்துதல்.

தலையை (முடியை) உணத்துதல் என்பது நெல்லை நாட்டு வழக்கு.

மிளகாய் வற்றலை உணந்த மிளகாய் என்பது மேலை வடார்க்காட்டு வழக்கு.

உண—உணங்கு. உணங்குதல்=உலர்தல்.

"தினைவிளைத்தார் முற்றந் தினையுணங்கும்" (தமிழ்நா. 154).

உணங்கல்=உலர்ந்த கூலம், வற்றல். உணங்கு—உணக்கம்.

உள்—ஒள்—ஒளி—ஒளிர்—ஒளிறு. ஒள்—ஒண்மை=விளக்கம்.

உள்—உஷ் (இ. வே.)

விளக்கம் மேற்காண்க. உஷ்—உஷ்ண.

உள்—உர்—உரு—உரும்—உரும்பு—உருப்பு — உருப்பம்=வெப்பம்.

உரும்—உருமி. உரும்—உருமு—உருமம்=வெப்பம் மிக்க உச்சி வேளை.

உத்தரம்[1]—உத்தர (இ. வே)

உத்தரம்=1. குமரி மலை முழுகியபின் உயர்ந்த வடக்குத் திசை (திவா.)

"Uttara, "northern (because the northern part of India is high)" என்று மா. வி. அகர முதலியும் கூறுதல் காண்க.

2. தலைக்கு மேலுள்ள முகட்டு விட்டம்.

உ=உயர்ந்த, தரம்=நிலைமை.

வடமொழியாளர் உத்+தர என்று பகுத்து, தர என்பதை உறழ்தர (Comp. degree) ஈறாகக் காட்டுவர். அங்ஙனங் காட்டினும், உத் என்பது உயர்வு குறித்த தமிழுகரச் சுட்டினின்று தோன்றியதே. மேலும், உத்தர தேசம், உத்தர மடங்கல், உத்தர மதுரை முதலிய சொற்களில், உறழ்தரக் கருத்தின்மையையும் நோக்குக.

உத்தரம்[2]**—உத்தர**

உ=உயர்ந்த, தரம்—நிலைமை.

உ=மேல், பின். தரம்=தருவது. உத்தரம்—உத்தரவு=மறுமொழி. உத்தரவு என்னும் வடிவம் தருகைப் பொருளைத் தெளிவாய்க் காட்டுதல் காண்க. ம. உத்தரவு, தெ. உத்தருவு.

தமிழில் உகரச் சுட்டே உயரத்தைக் குறிக்கும்.

"உப்பா லுயர்ந்த வுலகம் புகும்" (நான்மணி. 27).

"உப்பக்கம் நோக்கி யுபகேசி தோண்மணந்தான்"

என்னும் திருவள்ளுவ வெண்பாமாலை யடியிலும், உப்பக்கம் என்பதற்கு (உயர்ந்த) வடதிசை என்று பொருளுரைப்பதே சாலச் சிறந்ததாம்.

உத்தி—யுக்தி

உத்தல்=பொருந்துதல். உ—ஒ. ஒத்தல்=பொருந்துதல்.

உத்தி=புணர்ப்பு, பொருத்தம், பொருத்தமானதை அறியும் அகக்கரணம், நூற்கும் உரைக்கும் பொருந்தும் நெறிமுறை.

உ—யு (இ. வே.) உத்தி என்பதில் உத் என்னும் செயற்கை யடியை வடமொழியார் யுஜ் (இ. வே.) என்று திரிப்பர்.

விளையாட்டில் இவ்விருவராய்ச் சேர்ந்துவரும் சேர்க்கையைக் குறிக்கும் உத்தி என்னும் சொல்லும் இதுவே. தெ. உத்தி (uddi).

கழித்தலை அல்லது தள்ளுதலைக் குறிக்கும் உத்து என்னும் சொல்லும் உகர அடியினதே.

உ—உந்து. உந்துதல்=முன்தள்ளுதல், தள்ளுதல். ம. உந்து.

உந்து—உத்து.

"பொன்னெல்லா முத்தி யெறிந்து" (கலித். 64).

உ—யு(இ. வே.)=to keep away, ward off.

உதடு—ஓஷ்ட (இ. வே.)—oṣṭha.

(உதழ்)—உதடு=வாயில் முன்னிருப்பது அல்லது பொருந்துவது. உதழ்—இதழ்.

வடவர் காட்டும் 'உஷ்' (உள்—ஒள்) மூலமன்று.

உந்து—உந்த் (und)—இ. வே.

உந்துதல்—நீரெழுதல்.

"உந்துநீர்க் கங்கை" (கூர்மபு. இராமனவ. 39.).

உந்து—உந்தி=நீர். (பிங்.).

L unda, Gk hudor, Goth vato, Lith wandu, E water, OHG wazar.

உந்த்—உத்—உத—உதக (இ. வே.)=நீர்.

VL ud or und=to flow or spring, as water.

உம்பர்—உபரி (இ. வே.).

உ—உம்—உம்பு—உம்பர்=மேல். ம. உம்பர்.

Z upairi, Goth ufār, OG obar, MG uber, E over, L super, Gk huper.

உரம்—உரஸ் (இ. வே.).

உர்—உறு=மிக்க. உறு—உறுதி=வலிமை.

உர்—உரம்=வலிமை, நிலத்திற்கு அல்லது பயிருக்கு வலிமை தரும் எரு, உடம்பில் வலிய உறுப்பான மார்பு.

இனி, உரம்=தழுவும் உறுப்பு என்றுமாம். உர்—உறு.

உறுதல்=பொருந்துதல், தழுவுதல்.

ஒ. நோ: மரு (மருவு)—மார்—மார்பு—மார்பம். மருவுதல்= பொருந்துதல், தழுவுதல்.

வடவர் காட்டும் ரு (ṛ) என்னும் மூலம் பொருந்தாமை காண்க.

உரு—ருஹ் (இ. வே.)

உருத்தல்=முளைத்தல் (திவா.), தோன்றுதல்.

உரு—அரு—அரும்பு. அரும்புதல்=தோன்றுதல்.

ருஹ்=முளை, தளிர் (இ. வே.).

உரு—உருத்து—ருத் (rudh)=to sprout, shoot (இ. வே.).

உருவம்—ருப (இ. வே.)—rūpa.

உருத்தல்=தோன்றுதல். உரு=தோற்றம், வடிவம், வடிவுடைப் பொருள், உடல். உரு—உருவு—உருவம்.

உருவு—உருபு—வேற்றுமை வடிவம், அதைக் குறிக்கும் எழுத்து அல்லது அசை அல்லது சொல்.

ஒ. நோ: அளவு—அளபு.

உருப்படி=உருவின்படி, தனிப்பொருள்.

உருப்போடுதல்=அக்கு, மணி முதலிய உருக்களை எண்ணி மந்திரம் ஓதுதல், அதுபோற் பன்முறை நவின்று (சொல்லி) மனப்பாடஞ் செய்தல்.

வேற்றுமை யுருபு என்பது, ஆரியர் வருகைக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முந்திய தலைக்கழகக் காலத்திலேயே தோன்றிய தமிழிலக்கணக் குறியீடெனவறிக.

rūpa என்னுஞ் சொல்லை rūp என்று குறுக்கி வினையாகவும் ஆள்வர் வடவர்.

உருத்திரம்—ருத்ர

உருத்தல்=1. அழலுதல்.

"ஆக முருப்ப நூறி" (புறம். 25 : 10).

2. சினத்தல்.

"ஒள்வாட் டானை யுருத்தெழுந் தன்று" (பு. வெ. 3 : 2).

3. பெருஞ்சினங் கொள்ளுதல்.

"ஒருபக லெல்லா முருத்தெழுந்து" (கலி. 39 : 23).

உரு—உருத்திரம்=சினம்.

OS wreth, OE wrath, E wrath, wroth, OHG reid, ON reithr

உலகம்—லோக (loka)—வே.

உல்—உலம்=உருட்சி, திரட்சி, உருண்ட கல்.

உலம்வா—உலமா. உலமருதல்=சுழலுதல், உழலுதல்.

உலக்கை=உருண்டு நீண்ட பெருந்தடி.

உலண்டு=உருண்டு நீண்ட புழு.

உலம்—உலவு. உலவுதல்=சுற்றுதல், திரிதல்.

உலா = சுற்றி வருதல், அரசன் வலமாக நகரைச் சுற்றி வருதல், அதைப் பாடிய பனுவல்.

உலாவுதல் = சுற்றி வருதல். உலாத்துதல் = சுற்றி வருதல்.

உலாஞ்சுதல் = தலை சுற்றுதல்.

உலம்—உலவு—உலகு. ஒ. நோ : புறம்—புறவு—புறகு.

உலகு = உருண்டையானது அல்லது சுற்றி வருவது.

ஒ. நோ : கொள்—கோள். கொட்குதல் = சுற்றி வருதல்.

உலகு—உலகம்.

மூவுலகம், ஈரேழுலகம், உலகமெல்லாம் என்னும் வழக்குக்கள், உலகம் என்னும் சொல்லின் பொதுமையைக் குறிக்கும். கதிரவன், திங்கள் என்னும் இரு சுடரின் உருண்ட வடிவும் சூழ்வருகைத் தோற்றமும் உலகங்கள் பொதுவாய் உருண்டையானவை என்றும் பெருவெளியில் வட்டமாகச் சுற்றி வருகின்றனவென்றும், இரு கருத்துக்களைத் தோற்றுவித்தன.

வடமொழியில் லோக என்னுஞ் சொற்குப் பார்க்கப்பட்ட இடம் என்றே பொருள் கூறுவர். அங்ஙனமே பொருட்காரணமுங் காட்டுவர். லோக் = பார். E. look

இதனால், உலகத்தைக் குறிக்கும் லோக என்னும் வடசொல் தென்சொல்லின் திரிபென்பது தெள்ளத் தெளிவாம்.

உலகம் என்னும் சொல்வழக்கு தொன்று தொட்டது.

"காலமுலகம்" (தொல். 541).

உவமை—உபமா

உத்தல்—பொருந்துதல். உ—ஒ—ஒப்பு—ஒப்புமை.

உ—உவ்—உவ. உவத்தல் = ஒத்தல், விரும்புதல், மகிழ்தல்.

உவ—உவமை. உவ—உவகை. உவமை = ஒப்பு (திவா.)

மகிழ்ச்சிக்கு விருப்பமும் விருப்பத்திற்கு மனப்பொருத்தமுங் காரணமாம்.

நாட, விழைய, வீழ என்னும் உவமவுருபுகள் விருப்பக் கருத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. உவமை என்னுஞ் சொல் விருப்பப் பொருளை உணர்த்துவது மட்டுமன்றி, ஒப்புமைப் பொருளை இயல்பாகக் கொண்டும் உள்ளது.

உவமை—உவமம்—உவமன்

ஒ. நோ: பருமை—பருமம்—பருமன்

முழுமை—முழுமம்—முழுமன்—முழுவன்.

உவமை—உவமி. ஒ. நோ: ஒருமை—ஒருமி.

உவமித்தல்=ஒப்பாக்குதல், ஒப்பாகக் கொள்ளுதல், ஒப்பிடுதல். தொல்காப்பியத்தில் ஆளப்பெற்ற வடிவம் உவமம் என்பதே.

உவமை என்னுஞ் சொல் வடமொழியில் உபமா என்று திரியும். அதை உப+மா என்று பிரித்து இருசொற் கூட்டாக்கி, ஒத்த அளவு என்று பொருள் கூறுவர். உப=உடன். மா=அளவு. தமிழில், உவமை என்பது, உவ என்னும் முதனிலையும் மை என்னும் ஈறுங் கொண்ட ஒரு சொல்லே.

இருக்கு வேதத்தில், உபமா என்பது கூட்டுச் சொல்லாயிருந்து முன்சொல்லிற் பொருள் சிறந்து, அளத்தல், பங்கிடுதல், அளித்தல் என்று பொருள்பட்டதாகத் தெரிகின்றது. சதபத பிராமணம், மகா பாரதம் முதலிய பின்னூல்களில், அது தமிழ்த்தொடர்பினால் ஒப்புமைப் பொருள்பெற்று விட்டது.

ஒப்பு, ஒப்புப்பொருள் என இருகூறு கொண்டது உவமை என்னும் அணி. ஒப்பு உவமம் என்றும் ஒப்புப்பொருள் பொருள் என்றும் தமிழிற் சொல்லப்பெறும், வடமொழியார், பிற்காலத்தில் பிரமாண(ம்)—பிரமேய(ம்) என்னும் முறையில், உவமத்திற்கும் பொருளுக்கும் உபமான—உபமேய என்னும் சொல்லிணையை ஆக்கிக் கொண்டனர். இதிலும், மான என்பது அளவுகுறித்த மானம் என்னும் தென்சொல்லே.

உற்கம்—உல்க (இ. வே.)

உல்—உலர். உல்—சுல்—சுல்லி=அடுப்பு.

உல்—உள்—உண்—உண. உள்—உர்—உரும்—உரும்பு=கொதிப்பு,

உல்—உற்கு—உற்கம்=1. அனற்றிரள், 2. கடைக்கொள்ளி, 3. விண்வீழ்கொள்ளி.

உற்குதல்=எரிகொள்ளி வீழ்தல்.

"திசையிரு நான்கும் உற்கம் உற்கவும்" (புறம். 41: 4). வடமொழியில் உஷ் என்பதையே மூலமாகக் காட்டுவர்.

ஊசி—சூசி (இ. வே.)—sūci.

உள்—அள்=கூர்மை. உள்—உளி=கூரிய வெட்டுக் கருவி. உளி—உகிர்=கூரிய விரலுறுப்பு.

உளி—உசி—ஊசி=கூர்மை (பதிற்றுப். 70: 7), கூரிய குத்துக் கருவி அல்லது தையற்கருவி (பிங்), சிறுமை.

ஒ. நோ: இளி—இசி, வாளி—வாசி—வாசிகை.

ஊசிக் கணவாய், ஊசிக்கழுத்தி, ஊசிக்களா, ஊசிக்காய், ஊசிக்கார், ஊசிச்சம்பா, ஊசித்தகரை, ஊசித்தூறல், ஊசித் தொண்டை, ஊசிப்பாலை, ஊசிப்புழு, ஊசிமல்லிகை, ஊசிமிளகாய், ஊசிமுல்லை, ஊசிவேர் என்பன கூர்மை அல்லது சிறுமை பற்றித் தோன்றுதொட்டுப் பல்வேறு பொருள்கட்கு வழங்கிவருஞ் சொற் களாம்.

எழுத்தூசி, குத்தூசி, துன்னூசி, தையலூசி என்பனவும் அத்த கையனவே. எழுத்தூசி=எழுத்தாணி. "மையெழுத் தூசியின்...... எழுத்திட்டாள்" (சீவக. 1767).

"மீன்தேர் கொட்பிற் பனிக்கயம் மூழ்கிச்
சிரல்பெயர்ந் தன்ன நெடுவெள் ளூசி
நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்" (பதிற்றுப். 42: 2-4)

என்பதால், புண்தைக்கும் ஊசியும் பண்டைத் தமிழகத்திருந்தமை அறியப்படும்.

"கொல்லத் தெருவில் ஊசி விற்பதா?" என்பது பழமொழி.

மதிற்றலையைக் கைப்பற்றும் பகைவர் கையைப் பொதுக்கும் ஊசிப் பொறிகளும், அக்காலத்துக் கோட்டை மதில்மேல் வைக்கப் பட்டிருந்தன.

"ஐயவித் துலாமுங் கைபெய ரூசியும்" (சிலப். 15: 213).

வடமொழியில் சூசி என்னும் சொற்கு மூலமில்லை. தையலைக் குறிக்கும் சிவ் என்னும் சொல்லை மூலமாகக்காட்ட விரும்புவர்.

இங்ஙனமிருந்தும், சூசி என்பதினின்று ஊசி என்பது திரிந்துள்ள தாக, பிராமணத்தமிழ்ப் பண்டிதர் சென்னைப் ப. க. க. த, அகர முத லியிற் காட்டியிருப்பது எத்துணை நெஞ்சழுத்தம்!

ஊதை—வாதை (இ. வே.)

ஊ—ஊது—ஊதை=1. காற்று (தி. வா.) 2. வாடைக்காற்று

"பனிப்புலர்பாடி......ஊதையூர்தர" (பரிபா. 11: 84) 3. வளி (வாத) நோய்.

"தலைவலி பன்னமைச்சலூதை" (தைலவ. தைல. 7).

வடமொழியார் வா (blow) என்பதை மூலமாகக் கொள்வர்.

அது ஊ என்பதன் திரிபே.

ஊர்—ரோஹ (இ. வே.)

உர்—உறு—உறி=உயரத் தொங்கிவிடும் தூக்கு.

உறு—உறை=உயரம் (பிங்.).

உர்—ஊர். ஊர்தல்=1. ஏறுதல். ஊர்பிழிபு......வந்தன்று (ஐங். 101). 2. ஏறிச்செல்லுதல்.

"சிவிகை பொறுத்தானோ டூர்ந்தான்" (குறள்: 37).

வடமொழியார் காட்டும் ருஹ் (to ascend) என்னும் மூலம் ஊர் என்பதின் முறைமாற்றுத் திரிபே (Metathesis).

ஊர்—ஊர்த்தம். ஒ. நோ: நேர்—நேர்த்தம். ஊர்த்தம்—ஊர்த்வ (Ūrdhva) உயர்ந்த, தூக்கிய (இ. வே.)

எருமை—ஹெரம்ப

இர்—இரு—இருமை=கருமை. இருமை—எருமை=கரியமாட்டினம்.

ம. எரும, து. எர்மெ, தெ. எனுமு, க, எம்மெ.

எல்லரி—ஜல்லரீ (jh)

எல்லரி=பறைவகை "வல்வா யெல்லரி" (மலைபடு. 10).

ஏது—ஹேது

ஏ—ஏவு—ஏசு—ஏது.

ஏசுதல்=ஏவுதல், செலுத்துதல்.

"கொல்லம் பேசி" (தேவா. 380: 5).

ஏது=ஏவுகை, தூண்டுகை, காரணம்.

ஏது நிகழ்ச்சி=கருமங்களாகிய காரணங்கள் தத்தம் பயனைக் கொடுத்ததற்குத் தோன்றுகை.

"ஏது நிகழ்ச்சி யெதிர்ந்துள தாதலின்" (மணி. 8: 4).

ஏது—ஏதன்=மூலக்காரணனான கடவுள்.

"ஏதனை யேதமிலா விமையோர் தொழும் வேதனை" (தேவா. 471: 3).

வடவர் வடசொற்குக் கூறும் வேர்ப்பொருளும் தூண்டுதல் என்பதே. அதற்குக் காட்டும் வேர் ஏவுதற்பொருளுள்ள ஹி என்பதாகும்.

ஏ—ஹி

"கூறுத லுசாத லேதீடு தலைப்பாடு" (தொல். பொ. 207). ஏதீடு=காரணமிட்டுரைத்தல்.

ஏமம்—க்ஷேம (இ. வே.)

உ—இ—எ—ஏ.

ஏ=1. உயர்ச்சி. "ஏபெற்றாகும்" (தொல். சொல். 305). 2. மேனோக்குகை. "கார்நினைந் தேத்தரும் மயிற்குழாம்" (சீவக. 87).

ஏக்கழுத்தம்=தலையெடுப்பு.

ஏண், ஏத்து, ஏந்து, ஏப்பம், ஏர், ஏல், ஏவு, ஏறு முதலிய சொற்களின் ஏகாரமுதல், எழுச்சி அல்லது உயர்ச்சிக் கருத்தைத் தாங்கி நிற்றலையும், எகர முதலும் இங்ஙனமே பல சொற்களில் உணர்த்தி நிற்றலையும், நோக்குக.

இருதிணை யுயிரிகளும், நெருங்கிவந்த பகைக்கும் பகைவர்க்கும் தப்பியோடிப் பாதுகாப்பிற்குத் தேடுவது, பெரும்பாலும் மறைவிடம் அல்லது உயரிடமே. இவற்றுட் பின்னது மிகச்சிறப்பாம்.

அரிமாவிற்குத் தப்பி மரத்தின் மேலேறுவதும் அரசிற்குத் தப்பி மலையின்மேலேறுவதும், இன்றும் வழக்கம். சிற்றரசரும் கொள்ளைத் தலைவரும் பண்டைக்காலத்தில் மலைகளையே அரணாகக்கொண்டிருந் தனர். இதனால், உயர்ச்சியைக் குறிக்கும் ஏகாரத்தை அடியாகக் கொண்டு பாதுகாப்புக்கருத்துச் சொற்பிறந்தது.

ஏ—ஏம்=1. காப்பு. "எஞ்சிய பொருள்களை ஏமுற நாடி" (திருமுரு. 97). 2. இன்பம்.

"ஏமுற இனிதி னேம்பி" (கம்பரா. விபீட. 114).

ஏம்+உறு=ஏமுறு. ஏமுறுதல்=காப்படைதல்.

ஏம்—ஏமை—யாமை=பாதுகாப்பான ஓடுள்ள ஊருயிரி.

"யாமை யெடுத்து நிறுத்தற்றால்" (கலித். 94).

யாமை—ஆமை. ஒ. நோ: யானை—ஆனை.

ஏம்—மரு=ஏமரு. ஏமருதல்=காக்கப்படுதல்.

"இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன்" (குறள். 448).

ஏம்—ஏமா. 'ஏமாத்தல்=அரணுதல்.

"இயற்பகை வெல்குறுவான் ஏமாப்ப முன்னே" (பழ. 306).

"எழுமையு மேமாப் புடைத்து" (குறள். 126).

ஏம்=ஆர்=ஏமார். ஏமார்த்தல்=வலுப்படுத்தல்.

"சலத்தாற் பொருள்செய் தேமார்த்தல்" (குறள். 660).

ஏம்+மாறு=ஏமாறு. ஏமாறுதல்=காப்பழிதல், வஞ்சிக்கப் படுதல். ஏமாறு—ஏமாற்று (பி. வி.).

ஏம்—ஏமம்=1. காப்பு, பாதுகாப்பு. "ஏமப்பேரூர்" (தொல். 983). 2. காவல்.

"எல்லா வுயிர்க்கும் ஏமமாகிய" (புறம். 1. 11).

"ஏம முரசம் இழுமென முழங்க" (புறம். 3: 3).

3. வைப்புச் சொத்து (திவா.).

4. பாதுகாப்பான இராக்காலம், நள்ளிரவு, இரா.

"புறங்காட்டி லேமந்தோறு மழலாடுமே" (தேவா. 965:7). 5. இன்பம் (திவா.).

ஏமம்—சேமம். ஒ. நோ: ஏண்—சேண்.

சேமம்=பாதுகாப்பு, நலம், இன்பம், நல்வாழ்வு, அரண், சிறைச்சாலை, புதைபொருள், சுவடிக்கட்டு, கவசம், சவக்காப்பு.

சேமம்—க்ஷேம (இ. வே.)

தங்குதலை அல்லது குடியிருத்தலைக் குறிக்கும் 'க்ஷி' என்னும் முதனிலையை, வடவர் மூலமாகக் காட்டுவது பொருந்தாமை காண்க.

ஏலம்—ஏலா

ஒட்டகம்—உஷ்ட்ரக

ஒட்டுதல்=வயிறு உள்ளொடுங்குதல். ஒட்டப்போடுதல்= பட்டினியிருக்கச் செய்தல். ஒட்டு—ஒட்டகம்=நீண்ட நாள் உண்ணாதிருக்கக்கூடிய விலங்கு.

" ஒட்டகம் குதிரை கழுதை மரைஇவை
பெட்டை யென்னும் பெயர்க்கொடைக் குரிய" (தொல். 1552).

வடவர் வெப்பத்தைக் குறிக்கும் உஷ் என்னும் அடிச்சொல்லை மூலமாகக் காட்டுவர். ஒட்டகம் சுடுகின்ற பாலை நிலத்திற்குரியதாயினும், அதன் வடசொற் பெயர் தென்சொல்லை ஒத்திருந்ததால், அதினின்றே திரிந்திருத்தல் வேண்டும்.

மேலும், உஷ் என்னும் வடசொல்லும் உள் என்னும் தென்சொல்லின் திரிபே. இது முன்னர் விளக்கப்பெற்றது.

ஒட்டகம்—ஒட்டகை. ம. ஒட்டகம், க., தெ., து. ஒண்டெ.

ஓடம்—ஹோட

ஓடு—ஓடம். ம. ஓடம், க., தெ., து. ஓட.

வடவர் காட்டும் ஹோட் (hoḍ), ஹௌட் (hauḍ) என்னும் மூலங்கள் இயங்கு என்னும் பொருளனவே.

ஓடு—ஹோட் (hoḍ)

ம., க., தெ., து. ஓடு.

வடசொல் ஹுட், ஹ்ருட், ஹுட், ஹோட், ஹௌட் எனப் பல வடிவங்கொள்ளும்.

ஓம்[1]—ஓம்

ஆம்—ஓம் (yes).

துரத்தல், தூண்டுதல், விரும்புதல், பொந்திகைப்படுதல், காத்தல், ஆள்தல் முதலிய பல பொருள்களில் ஆளப்பெறும் அவ் என்னும் சொல்லை வடவர் மூலமாகக் காட்டுவது பொருந்தாது.

ஓம்[2]—ஓம்

ஓ—ஓம்.

இதன் விளக்கத்தை என் 'தமிழர் மதம்' என்னும் நூலுட் காண்க.

அ+உ+ம் என்று பிரித்து, இவற்றைத் திருமால் சிவன் பிரமன் என்னும் முத்திருமேனியரைக் குறிப்பதாகக் கூறும் வடநூல் வழக்கு, உண்மைக்கு முற்றும் மாறானதாம்.

கஃசு—கர்ஷ

கால்—கஃசு=காற்பலம்.

கக்கட்டம்—கக்கட்ட (ṭ)

கக்கக் கக்க (ஒலிக்குறிப்படுக்கு)—கக்கட்டம்=உரத்த குரற் சிரிப்பு. kakk, kakh, kakkh, khakkh என வடசொன் முதனிலை நால் வடிவில் உளது.

மா. வி. அகர முதலியில் இச்சிறப்புப்பொருள் குறிக்கப்பெற வில்லை; சென்னைப் ப. க. க. த. அகர முதலியில் தான் குறிக்கப்பட்டுள்ளது.

கக்கரி—கர்க்கடீ (ṭ)

கள்=முள். கள்=(கட்கரி)—கக்கரி=முள்வெள்ளரி.

கச்சை—கக்ஷ்யா

கட்டு—கச்சு—கச்சை=கட்டவுதவும் நாடாப் பட்டை.

கச்சு—கச்சம்.

கக்ஷ என்னும் அரையிற் கட்டுவது என்று பொருட் காரணங் கூறுவர் வடவர்.

கஞ்சி—காஞ்சீ, காஞ்சிக, காஞ்சீக.

கஞ்சி = நீர்ப்பதமான அல்லது குழைந்த சோற்றுணவு.
ம. கஞ்ஞி, க., தெ., து. கஞ்சி (g).

வடமொழியில் மூலமில்லை. புளித்த கஞ்சி என்பதும் பொருந்தாது. இளம்பதத்தைக் குறிக்கும் கஞ்சி என்னும் சொல் இளமையைக் குறிக்கும் குஞ்சு (குஞ்சி) என்னும் சொல்லொடு தொடர்புடையது.

கட்கம்—கக்ஷ (வே.)

கள்—கட்கு—கட்கம் = அக்குள் (மறைவான இடம்).

" கதிர்மணி கட்கத்துத் தெறிப்ப" (பெருங். உஞ்சைக். 38:333).
கட்கம்—கக்கம்

''கட்டிச் சுருட்டித் தம் கக்கத்தில் வைப்பர்" (பட்டினத். பொது, 30).

கஷ் (தேய்), கச் (ஒலி) என்பவற்றை வடவர் மூலமாகக் காட்டுவது பொருந்தாது.

மறைவிடம் என்னும் பொருளில் இருக்குவேதத்திலும், அக்குள் என்னும் பொருளில் அதர்வ வேதத்திலும், கக்ஷ என்னும் சொல் ஆளப்பெற்றிருப்பதாக மா. வி. அ. கூறும்.

கட்சி—கக்ஷ

கட்சி = காடு. கள்—கடு—காடு. கள் + சி = கட்சி.

" கலவ மஞ்ஞை கட்சியிற் றளரினும்" (மலைபடு. 235).

கட்டில்—கட்வா (kh)

கட்டு—கட்டில்.

கட்டை—காஷ்ட

கள்—கட்டு—கட்டை = திரண்ட மரத்துண்டு, திரண்ட விறகு.
வடமொழியில் திரட்சி என்னும் சிறப்புப் பொருளில்லை.

கடகம்—கடக (ṭ)

குடா = வளைவு. குடங்குதல் = வளைதல். குடந்தம் = வணக்கம்.
குட—குடம்— (குடகம்)—கடகம் = வளையல், தோள்வளை, வட்டம், வட்டமான பெருநார்ப் பெட்டி, நண்டு, நகர் சூழ்ந்த

மதில், மதில் சூழ்ந்த ஒட்டர நாட்டுத் தலைநகர்.

கடகன்—கடக (gh, ṭ)

கடத்தல்=மிஞ்சுதல், தேர்தல், வெல்லுதல். கட—கடகன்= கடந்தவன், தேர்ந்தவன்.

கடம்பு—கதம்ப

கடம்பு—கடம்பம்—கதம்ப (வ.).

அம்மீறு பெற்ற வடிவே ஈறுகெட்டு வடமொழியிலுள்ளது. அதோடு, கடம்பம் என்னும் மரப்பெயரும் கதம்பம் என்னும் கலவைப் பெயரும் ஒன்றாக மயக்கப்பட்டுள்ளன.

கடாகம்—கடாஹ

கடகம்—கடாகம்=வட்டமான கொப்பரை, பெருவெளிக் கோளகை.

கடி—காத் (khād)—இ. வே.

கடித்தல்=பல்லால் வெட்டுதல், கடித்துத் தின்னுதல்.

கடிகை[1]—கட, கட, கடிகா (gh, ṭ)

குள்—குண்டு=குழி, ஆழம். குண்டு—குண்டான்=குழிந்த அல்லது குண்டான கலம். குண்டான்—குண்டா.

குண்டு—குண்டிகை—குடிகை—குடுக்கை—குடுவை.

குடிகை=நீர்க்கலம் (கமண்டலம்).

"அரும்புனற் குடிகை மீது" (கந்தபு. காவிரி. 49)-

குடிகை—கடிகை=நீர்க்கலம், நாழிகை வட்டில், நாழிகை மங்கல நாழிகை குறிக்கும் கணியன், மங்கலப் பாடகன்.

கடிகை—கடிகை. வடவர் காட்டும் கட (gh) என்னும் மூலம் குடம் என்னும் தென்சொல்லின் திரிபே.

கடிகை+ஆரம்=கடிகையாரம்—கடிகாரம்.

ஆரம் என்பது ஓர் ஈறு.

ஒ. நோ: கூடாரம், கொட்டாரம், வட்டாரம்.

கடியந்திர, கடிகா யந்திர என்னும் வடசொற் புணர்ப்பினின்று கடிகாரம் என்னும் தென்சொல் வந்ததன்று.

கடிகை[2]—கட, கடா (gh, ṭ)

குடி=குலம், கூட்டம். குடி—குடிகை—கடிகை=சிறு கூட்டம், அவை.

இங்குக் கை என்பது சிறுமைப்பொருட் பின்னொட்டு (dim. sfx.)

வடவர் காட்டும் கட் (gh) என்னும் மூலம் தொடர்பற்ற பல்வேறு பொருள்கொண்ட சொல். கூடுதல் என்னும் பொருளில் அது குட என்னும் தென்சொற்றிரிபாகும்.

குல்—குள்—குழு—குழ—குட—குடம்=திரட்சி. குடத்தல் = கூடுதல், திரளுதல்.

கடு[1]—கட் (ḍḍ)

கடு=வன்மை (கடினம்), கடுமை. கட்டெனல்=வன்மையாயிருத்தல். கடுக்கெனல்=வன்மையாயிருத்தல்.

கடு[2]—கடு (ṭ)

கள்=முள். கள்ளி=முட்செடி. கள்—கடு=முள் (திவா.), கார்ப்பு, கைப்பு, மிகுதி, வெம்மை, கொடுமை.

கடு—கடி=கூர்மை, மிகுதி, கார்ப்பு.

வடமொழியில் மூலமில்லை. க்ருத் (வெட்டு) என்னும் வடசொல் கத்து (வெட்டு) என்னும் தென்சொற் றிரிபாதலின், மூலமாகாது.

கடுகு—கடுக (ṭ)—இ. வே.

கடு—கடுகு=காரமுள்ள பொருள்.

"கடுகு சிறுத்தாலும் காரம் போகாது." என்பது பழமொழி.
கடுகு—கடுகம்.

அம்மீறு பெற்ற வடிவே ஈறுகெட்டு வடமொழியிலுள்ளது.

கடைகால்—கடீ, கடிகா (gh, ṭ)

கடைகால்—கடகால் (கொச்சை)=நீரிறைக்கும் வாளி, நீர்ச்சால்.

கண்—கண் (g)

கள்—கண்=1. கரிய பார்வையுறுப்பு. 2. அகக் கண்ணாகிய மனம். 3 அறிவு, ஓதி (ஞானம்).

"கள்ளொற்றிக் கண்சாய் பவர்" (குறள். 927).

கண்ணுதல்=அகக் கண்ணாற் காணுதல், கருதுதல், மதித்தல், அளவிடுதல்

கண்—கண்ணியம்=மதிப்பு.

கண்ணியம்—கண்ய (g)

கண்டம்—கண்ட (ṇṭ)=முள்.

கள்=முள். கள்—கள்ளி. ஒ. நோ: முள்—முள்ளி. கள்—கண்டு=கண்டங்கத்தரி (முட் கத்தரி.)

கண்டு—கண்டம்=கள்ளி, கண்டங்கத்தரி, எழுத்தாணி, வாள், வடமொழியில் மூலமில்லை.

கண்டகம்—கண்டக (ṇṭ)

கள்—கண்டு—கண்டகம்=முள், நீர்முள்ளி, உடைவாள், வாள்,

ஒ. நோ: முள்—முண்டு—முண்டகம்=முள், முள்ளி, முள்தூறு, தாழை, கருக்குவாய்ச்சி.

கண்டகி—கண்டகி, கண்டகின் (ṇṭ)

கண்டகம்—கண்டகி=தாழை, மூங்கில், இலந்தை, முதுகெலும்பு.

கண்டு—கண்டல்=தாழை, முள்ளி, நீர்முள்ளி.

வடமொழியிலும் கண்டக, கண்டகி என்னும் சொற்கள் முள்ளையும் முட்செடிகளையும் முட்போன்ற பொருள்களையுங் குறிக்கும். கண்டங்கத்திரி அதிற் கண்டகாரீ என வழங்கும்.

கண்டக—கண்ட (kh)

கண்டு=துண்டு, கட்டி, சருக்கரைக் கட்டி, நூற்பந்து.

கண்டு—கண்டம்=துண்டு, மாநிலப்பிரிவு,

ஒ. நோ: துண்டு—துண்டம். கண்டு—கண்டிகை=நிலப்பிரிவு. உப்புக்கண்டம், கண்டங்கண்டமாய் நறுக்குதல் என்பன உலக வழக்கு.

அம் என்பது இங்குப் பெருமைப் பொருட் பின்னொட்டு.

கண்டி—கண்ட் (kh)

கண்டு—கண்டி. ஒ. நோ: துண்டு—துண்டி.

கண்டித்தல்=துண்டு துண்டாய் வெட்டுதல், வெட்டுவது போற் கடிந்து கூறுதல். முகத்தை முறித்தல் வெட்டிப்பேசுதல் என்னும் வழக்குக்களை நோக்குக.

கண்டி—கடி—கடிதல்=கழறுதல். கண்டி—கண்டிப்பு.

கண்டிதம்—கண்டித (kh) கண்டி—கண்டிதம்=கண்டிப்பு.

கண்டனம்—கண்டன (kh)

கண்டி + அனம் = கண்டனம். ஒ. நோ: முண்டி—முண்டனம்.

கண்டை—கண்டா (gh, ṇṭ)

குண்டு—குண்டலம் = வட்டம், வளையம். குண்டு—குண்டை = உருண்டு திரண்ட காளை.

குண்டை—கண்டை = வட்டமான அல்லது திரண்டமணி.

கணக்கன்—கணக்க (g)—வே.

கள்ளுதல் = கூடுதல், பொருந்துதல், ஒத்தல். கள்ள = போல.

"கள்ளக் கடுப்ப ஆங்கவை எனாஅ" (தொல். 1232). கள்—களா—கணா. கணத்தல் = கூடுதல், ஒத்தல்.

கள்—களம் = கூட்டம், அவை. களம்—கணம் = கூட்டம். கணவன் = மனைவியொடு கூடுபவன்.

கண—கணக்கு = கூட்டு, மொத்த அளவு, அளவு. கணக்கு என்னுஞ் சொல் முதன்முதற் கூட்டற்கணக்கையே குறித்தது. அதற்குக் கணக்கில்லை, கணக்கு வழக்கில்லாமல், அது கணக்கன்று, என்பவற்றில் கணக்கு என்பது அளவு அல்லது கூட்டு என்றே பொருள் படுதல் காண்க.

கணக்க = போல. குரங்கு கணக்க ஓடுகிறான் என்னும் உலக வழக்கை நோக்குக. அந்தக்கணக்கில் (கணக்காய்) = அதைப்போல.

கணக்கு — கணக்கன் = கணக்குப் பார்ப்பவன், கணக்கத் தொழிற் குலத்தான்.

வடவர் காட்டும் கண் (g) என்னும் மூலம் இதற்குரியதன்று. **கணம்—கண (g) இ. வே.**

இது மேல் விளக்கப் பெற்றது.

கணி—கண் (g)

கண்—கணி. கணித்தல் = புறக்கண்ணாற் காணுதல், அகக் கண்ணாற் காணுதல், மதித்தல், அளவிடுதல், கணக்கிட்டு வகுத்தல்.

கடைக்கணித்தல், சிறக்கணித்தல், புறக்கணித்தல் என்பன புறக்கண்ணாற் காண்டலைக் குறித்தல் காண்க.

கணிதம்—கணித (g)

கணி—கணிதம் = கணிப்பு, பல்வகைக் கணக்கு.

கணிதம்—கணிசம் = மதிப்பு (உத்தேசம்). கணிசம் என்னும் வடிவம் வடமொழியில் இல்லை.

குழம்பிற்குக் கணிசமாய் உப்புப்போடு என்னும் வழக்கை நோக்குக.

கணிதம்—கணிதன் = கணியன், கணக்கறிஞன்.

கணி—கணி (g)

கணி = கணிப்பவன், கணியன் (சோதிடன்)

கணிகன், கணியன், கணிவன் என்னும் வடிவங்கள் வடமொழியில் இல்லை.

கணிகை—கணிகா (g)

கணி—கணிகை = தாளங்கணித்தாடுபவள்.

கத்தரி—கர்த்தரி

கத்துதல் = வெட்டுதல். இவ்வினை பிற்காலத்து வழக்கற்றது.

கத்து—கத்தி = அறுக்கும் அல்லது வெட்டுங்கருவி.

ஒ. நோ: கொத்து—கொத்தி, வெட்டு—வெட்டி.

கத்து + அரி = கத்தரி. கத்தரித்தல் = வெட்டி நறுக்குதல்.

அரிதல் = சிறிதாய் நறுக்குதல். அரித்தல் = அராவித்தேய்த்தல்.

கதக்குக் கதக்கென்று வெட்டுதல் என்பது உலகவழக்கு.

கத்தரிகை—கர்த்தரிகா

கதம்ப—கதம்ப

கல—கலம்பு—கலம்பம்—கதம்பம் = பல்வேறு வகை மலர்கள் கலந்த மாலை.

ல—த, போலித்திரிபு. ஒ. நோ: சலங்கை—சதங்கை.

வடவர் காட்டும் கத் என்னும் மூலம் கல்லென்னும் தென்சொல் வேர்த்திரிபே.

கதலி—கதலி, கதலீ

கதலி = சிறுவாழைப்பழம். கதலி—கசலி = மீன்குஞ்சு.

இச்சொல் குதலை என்பதனொடு தொடர்புடையது.

மிக இனிக்கும் சிறு வாழைப் பழவகை தேங்கதலி எனப்பெறும்.

வடசொல் சிறுமை என்னும் சிறப்புப் பொருளிழந்து, பொதுவாய் எல்லா வாழைப்பழ வகைகளையுங் குறிக்கும்.

கதை—கதா (th)

கத்துதல்=உரக்கச் சொல்லுதல்.

கத்து—கதை. ஒ. நோ: நச்சு—நசை. நொடித்தல்=சொல்லுதல். நொடி=கதை.

வடசொன்மூலம் கத் என்பதே. கத்து—கத்.

கந்தன்—ஸ்கந்த (dh)

கந்து=தூண், பற்றுக்கோடு. கந்து—கந்தன்=தூணிற் பொறிக்கப்பட்டவன் அல்லது பற்றுக்கோடானவன், முருகன்.

கந்துகம்—கந்துக

கள்—கண்டு=நூற்பந்து. கண்டு—கந்து—கந்துகம்=பந்து. இனி, கும்—கம்—கந்து—கந்துகம் என்றுமாம்.

கந்தை—கந்தா (nt)

கத்து-கந்து—கந்தல், கந்தை. கொந்து—கொந்தல்—கந்தல் (?)

கப்பரை—கர்ப்பர

கொப்பரை—கப்பரை.

கம்—க (நீர்)

அம்—கம்=நீர்.

கம்பலம்—கம்பல

கம்பலம்—கம்பளம்—கம்பளி

கமுகு—க்ரமுக

கரு—கர்ப்ப (g, bh)—இ. வே.

குருத்தல்=தோன்றுதல். குரு—கரு—(கருப்பு) கருப்பம்.

கரு=சூல், பீள், முட்டை, சேய், குட்டி.

வடமொழியாளர் க்ரு(விளி) என்றும் grabh=grah (பற்று) என்றும் மூலங்காட்டுவது பொருந்தாது.

கருள்—க்ருஷ்

கள்—கர்—கரு—கருள்=இருள் (பிங்), கருமை.

"கருடரு கண்டத்து......கைலையார் (தேவா. 337: 4).

கருள்—க்ருஷ்—க்ருஷ்ண (இ. வே.)=கருமை.

க்ருஷ்ணபக்ஷ=கரும்பக்கம், தேய்பிறை. க்ருஷ்ண ஸர்ப்ப=கரும்பாம்பு.

கரை—க்ரு (g)

கரைதல்=அழைத்தல், சொல்லுதல், **விளம்புதல்.**

கல்[1]—கல்

கல்லெனல்=ஆரவாரித்தல். கல்—கலி. கலித்தல்=ஒலித்தல். கலி=ஒலி (தொல். 832).

கல்[2]—கன் (kh)—இ. வே.

கல்லுதல்=தோண்டுதல். கல்—கன் — கன்னம் = சுவரைத் துளைத்தல், சுவர்த்துளை, துளைக்குங்கோல்.

கன் (வ.)=தோண்டு.

கன்னம் (ம.), கன்னமு(தெ.), கன்ன(க.) என்பன **சுவர்த்துளை**யைக் குறிக்கும்.

கலகம்—கலஹ

கலத்தல்=பொருந்துதல், பொருந்திப் போர் செய்தல்.
ஒ. நோ: பொரு—போர். **சமம்—சமர்.**
கை கலத்தல்=சண்டையிடுதல். கல—கலாம்=போர், கலகம்.

கல—கலவு—கலகு—கலகம்=கூட்டச் சண்டை. கலகு—கலகி. கலகித்தல்=கலகஞ்செய்தல்.

வடமொழியில் மூலமில்லை.

கலவம்—கலாப

கல—**கலவு. கலவுதல்=கலத்தல்.**
கலவு—**கலவம்=1. கற்றையான** மயில் **தோகை.**

கலவம் விரித்த மஞ்ஞை (பொருந. 212). 2. மயில் (**சினை**யாகு பெயர்).

"கலவஞ்சேர் **கழிக்கானல்**" (தேவா. 532: 4).
கலவு—கலாவு. **கலாவுதல்=கலத்தல். கலவம்—கலாவம்**=மயில் தோகை.

"**கலிமயிற்** கலாவம்" (புறம். 146: 8).

மயில் தென்னாட்டுக் குறிஞ்சி நிலத்திற்குரிய பறவை; குறிஞ்சித் தெய்வமாகிய முருகன் **ஊர்தி.**

வடமொழியிற் **கலா** (*சிறுபகுதி*)+ஆப் (**கொள்**, to obtain) **என்று** பிரித்து, பலபகுதிகளை ஒன்றுசேர்ப்பது **கற்றை** ("that which holds single parts together, a bundle" **என்று காரணங் கூறு**

வது, வட்டஞ்சுற்றி வலிந்தும் நலிந்தும் பொருள்கொள்ளுவதாயிருத்தல் காண்க.

கலுழன்—கருட (g)—இ. வே.

கல்—கலுழ். கலுழ்தல்=கலத்தல். கலுழ்—கலுழன்=வெண்மையும் செம்மையும் கலந்த பருந்தினம்.

"கலுழன்மேல் வந்து தோன்றினன்" (கம்பரா. திருவவ. 13).

வடமொழியார் க்ரு (g) என்பதை மூலமாகக் காட்டி, எல்லாவற்றையும் விழுங்குவது என்று பொருட் காரணங் கூறுவர்.

கலுழம்—கலுஷ

கலுழ்தல்=கலங்குதல். கலுழ்=நீர்க்கலக்கம். "கலுழ் தேறி" (கலித். 31.)

கலுழ்—கலுழி=கலங்கல் நீர் (திவா.). கலுழ்—கலுழம்—கலுடம்=கலங்கல் நீர்.

வடவர் காட்டும் கல் (துண்டு) என்னும் மூலம் பொருந்தாது.

கல்லை—கல்ல (kh)

கல்—கல்லை=தொன்னை (தொளையுள்ளது, குழிவுள்ளது).

"சருகிலை யிணைத்த கல்லை" (பெரியபு. கண்ணப்ப. 118).

கலுவம்—கல்வ, (kh) கல்ல (kh)

கல்—கலுவம்—கல்வம்=மருந்தரைக்கும் சிற்றுரல்.

கல்லுதல்=தோண்டுதல், குழித்தல்.

கலை—கலா

கல்—கலை.

வடமொழியில் மூலம் இல்லை.

கவளம்—கவல

கவ்வு—கவள்—கவளம்=கவ்வும் அளவான உணவு.

வடமொழியில் மூலமில்லை.

கவுள்—கபோல

கவ்வு—கவுள்=குறடுபோற் கவ்வும் அலகு, கன்னம்.

வடவர் காட்டும் க்ரப்—கப் (இரங்கு) என்னும் மூலம் இம்மியும் பொருந்தாது.

கவான்—கவீனீ, கவீனிகா (g)—அ. வே.

கவை—கவான்=கவைத்த தொடைச்சந்து, அதுபோன்ற மலைச்சந்து.

வடமொழியில் மூலமில்லை.

கழஞ்சு—கலஞ்ச

கழங்கு—கழஞ்சு=ஒருநிறை. கழங்கு=கழற்சிக்காய்.

வ. மூ. இ.

கள்வன்—கலம்

கள்ளுதல்=திருடுதல். கள்—களவு—கள்வு—கள்வன்.

களங்கம்—கலங்ம்

கல்—கள்=கருமை. கள்—களம்=கருமை. களம்—களங்கு= கருமை, குற்றம். களங்கு—களங்கம்=கருமை, கறை, மறு, குற்றம். களங்கன்=மறுவுள்ள மதி.

மா. வி. அ. மூலம் ஐயுறவிற்கிடமானது ("etym. doubtful") என்று குறித்திருப்பது கவனிக்கத்தக்கது.

காளம்—கால

கல்—கஃறு=கருமை, கருமைக் குறிப்பு.

"கஃஃறென்னுங் கல்லதர த்தம்" (தொல். எழுத். 40, உரை).

கல்—கால்=கருமை.

"கால்தோய் மேனிக் கண்டள்" (கம்பரா. வானர. 21).

கல்—கள்—களம். கால்—காள்—காளம்=கருமை. காள்—காழ்—காழகம்=கருமை.

களம்[1]—கல (kh)—இ. வே.

கள்ளுதல்=கூடுதல். கள்—களம்=உழவர் கூடி வேலை செய்யுமிடம்.

களம்—களமர்=உழவர். ஏர்க்களம், போர்க்களம் (போரடிக்குமிடம்) என்னும் வழக்குக்களை நோக்குக. களம்—களன்—கழனி=வயல்.

களம்[2]—கள (g)

கள்ளுதல்=கலத்தல், பொருந்துதல். கள்—களம்=தலையை உடலுடன் பொருத்தும் கழுத்து, தொண்டை.

"பாடுகள மகளிரும்" (சிலப். 6 : 157).

களம்—(களத்து)—கழுத்து.

வடவர் கல் என்னும் செயற்கையடியை க்ரு (விழுங்கு) என்னும் சொல்லின் திரிபாகக் கொண்டு, கல என்பதற்கு விழுங்கும் உறுப்பு என்று பொருட்காரணங் காட்டுவர்.

களி(ம.)—கேல்=விளையாடு.

களித்தல்=விளையாடுதல். களி=விளையாட்டு. களி—கீல் (பிரா.)—கேல்.

களை—க்லம்=களை.

களைத்தல்=அலுத்தல், அயர்தல், இளைத்தல்.

க்லம்=ச்ரம் என்று பொருந்தாவாறு பொருத்திக் காட்டுவர் வடமொழியாளர்.

கன்னம்—கர்ண

கல்—கன்=துளை. கன்—கன்னம்=1. துளையுள்ள காது, 2. யானைச் செவி (திவா.). 3. காதையடுத்த அலகுப் பக்கம். ம. கன்னம், க. கன்ன.

வடவர் காட்டும் க்ருத், க்ரு என்னும் மூலங்கள் பொருந்தா.

க்ருத்=1. செய்துகொண்டு, 2. சிதைவு, 3. திருகு, சுற்று.

க்ரு=1. கொட்டு, எறி, சிதறு. 2. சிதை, 3. அறி, அறிவி.

கன்னி—கன்யா (இ. வே.)

கன்னுதல்=பழுத்தல். கன்—கன்னி—கனி=பழுத்தது, பழம். கன்னி=பழுத்தவள், பூப்படைந்தவள். Mature என்னும் ஆங்கிலச் சொல்லை நோக்குக.

கன்னி—கன்னிகை=பூப்படைந்த இளைஞை.

கை என்பது இங்குச் சிறுமைப் பொருட் பின்னொட்டு.

கன்னிகை—கன்யகா

வடவர் காட்டும் கன் என்னும் மூலம் பல பொருளொரு சொல்லும் பொருந்தாப் பொருட் சொல்லும் ஆகும்.

கனம்—கன (gh)

கல்—கன்=1. கல் (சூடா.), 2. உறுதிப்பாடு (ஈடு, 5 : 8 : 3). கன்—கன. கனத்தல்=பளுவாதல், மிகுதியாதல், பருத்தல், குரல் தடித்தல், பெருமையுறுதல்.

கன—கனம்=பளு, பருமன், பெருமை, செறிவு, திரட்சி உறுதி, மிகுதி, கூட்டம், மும்மான வடிவு.

பொதுவாகக் கனத்திற்கு எடுத்துக் காட்டாகச் சொல்வது கல்லே. கல்லைப்போற் கனக்கிறது என்பது உலக வழக்கு. பண்டை நாளிற் கனத்த எடைக்கெல்லாம் கல்லையே பயன்படுத்திய தால், படிக்கல் என்னும் வழக்கெழுந்தது. இங்கிலாந்திலும் அவ் வழக்கமிருந்ததை stone (14 பவுண்டு) என்னும் சொல் உணர்த்தும்.

வடமொழியில் கனத்தல் என்னும் வினையில்லை. மா. வி. அகர முதலி காட்டியிருக்கும் ஹன் (கொல்) என்னும் மூலம், வடமொழி யிற் கன என்னும் சொற்குள்ள பல்வேறு பொருள்களுள் ஒன்றற்குத் தான் ஏற்கும்.

கா—கா (இ. வே.)

கவ—கவர்தல்=விரும்புதல். "கவர்வு விருப்பாகும்". (தொல். 845) .கவ—கா—காதல்=விருப்பம், அன்பு.

கா(வ.)=விரும்பு, அவாவு, அன்புகூர்-

வடமொழியார் கன் என்பதை மூலமாகக் காட்டுவர்.

காம்—கம்—கன் என்று திரிந்திருக்கலாம்.

காக்கை—காக்க

காகா—காக்கா—காக்கை. காகா—காகம்.

ஆரியம் தோன்றுமுன்பே காக்கை என்னும் சொல் குமரிக் கண்டத்தில் தோன்றிவிட்டது.

காஞ்சி—காஞ்சீ

காஞ்சி=ஆற்றுப் பூவரசு, அம்மரம் சிறந்த பழந்தொண்டை நாட்டுத் தலைநகர்.
காஞ்சி—கஞ்சி—கச்சி.
காஞ்சிபுரம்=கோபுரமுள்ள காஞ்சிநகர். புரம் என்பது பண்டைத் தமிழகத்திற் கோபுரமுள்ள நகர்ப் பெயரீறு.

காஞ்சி[2]—காஞ்சீ

காஞ்சி=எழுகோவையுள்ள மாதர் அரைப்பட்டிகை.

"எண்கோவை மேகலை காஞ்சி யெழுகோவை
பண்கொள் கலாபம் பதினாறு—கண்கொள்
பருமம் பதினெட்டு முப்பத் திரண்டு
விரிசிகை யென்றுணரற் பாற்று".

என்பது பழைய மேற்கோள் வெண்பா.

ஐவகை அரைப்பட்டிப் பெயர்களுள், காஞ்சி, மேகலை, கலாபம் என்னும் மூன்றும் வடநூலுட் புகுந்துள்ளன. அதனால் அவை வட சொல்லென்று காட்டப்படுகின்றன. ஆயின், அங்குச் சிறப்புப் பொருளையிழந்து அரைப்பட்டிகை என்னும் பொதுப் பொருளே தருகின்றன.

காண்—ஜ்ஞா *(இ. வே.)*

தமிழ்	பழைய ஆங்கிலம்	இலத்தீனம்	கிரேக்கம்	வேத ஆரியம்
கண்	கான், கன், கென் கொன், க்னே	க்னோ (g)	க்னோ (g)	ஜ்ஞா

இவ்வொரு சொல்லே, தமிழ் எங்ஙனம் ஆரியத்திற்கு மூல மென்றும், வேத ஆரியம் எவ்வளவு திரிந்துள்ளதென்றும், காட்டப் போதியதாம்.

காண்டம்—காண்ட *(வே.)*

கண்டு—கண்டம்=பெருந்துண்டு, பெருநிலப் பிரிவு.

கண்டம்—காண்டம்=நூற்பெரும் பிரிவு.

கண்டம் என்னும் சொல்லை hkaṇḍa என்றும், காண்டம் என்னும் சொல்லை kāṇḍa என்றும், முதலெழுத்தை வேறுபடுத்தி வடமொழி யாளர் மயக்கியிருக்கின்றனர்.

காந்தி—காந்தி (nt)

காள்—காய்—(காய்ந்து)—காந்து. காந்துதல்=எரிதல், எரிதல்போல் நோதல், ஒளிவிடுதல், மிகச்சுடுதல், சோறு முதலியன பற்றிக் கருகிப்போதல், எரிதல்போல் உறைத்தல், மிளகாய் போன்ற காரமான பொருள் உடம்பிற்பட்டு எரிச்சலெடுத்தல்.
காந்து—காந்தி=கடுவெப்பம், ஒளி.

காமம்—காம (இ. வே.)

கவ—கவர்வு=விருப்பு. கவ—கா—காதல்.

கா + அம்=காம்=விருப்பம், காமம். காம் + உறு=காமுறு. காமுறுதல்=1. விரும்புதல்.

"காமுறுவர் கற்றறிந்தார்" (குறள். 399). 2. வேண்டிக்கொள்ளுதல்.

"கனைகதிர்க் கனலியைக் காமுறுத லியைவதோ" (கலித். 16).

ஒ. நோ: வேள்—வேண்டு. 3. புணர்ச்சி விரும்புதல். "காமுற்றுரேறு மடல்" (குறள். 1133).

காம்+மரு (மருவு)=காமரு=விருப்பம் பொருந்துகின்ற, விரும்பத்தக்க.

"காமரு குவளைக் கழுநீர் மாமலர்" (சிலப். 4: 40).

காமரு—காமர்=1, விரும்பத்தக்க "காமர் கடும்புனல்" (கலித் 39). . அழகிய.

"காமர் வண்ண மார்பில்' (புறம் 1: 1).

காமரு என்பதைக் காம்வரு என்று பிரிப்பதினும், காம் மரு என்று பிரிப்பதே சிறந்ததாம். காம்—காமி=காமமுள்ளவன்—ள் காமித்தல்=விரும்புதல், காமங்கொள்ளுதல்.

காம்+அம்=காமம்=1. விருப்பம்.

"காமம் வெகுளி மயக்கம்" (குறள். 360)2. ஓரம் (பக்கபாதகம்)

"காமஞ்செப்பாது கண்டது மொழிமோ" (குறுந். 2)3. கணவன் மனைவியர் காதல், "காமத்துப்பால்" 4. புணர்ச்சி விருப்பம். "காமஞ் சாலா இளமையோள்" (தொல். 996). 5. புணர்ச்சியின்பம். "காமத்திற் செம்பாகமன்று" (குறள். 1092).

வடவர் காட்டும் கம் என்னும் மூலம் காம் என்பதன் குறுக்கமே.

காய்—காச்

காள்—காளம்=சுடுகை. காளவனம்=சுடுகாடு.

காளவாய்=சுண்ணாம்புச் சுள்ளை.

காள்—காய். காய்தல்=எரிதல், சுடுதல், ஒளி வீசுதல். உலை காய்தல், நிலாக்காய்தல் என்னும் வழக்குக்களை நோக்குக.

காய்—காய்ச்சு. காய்ச்சுதல்=சுடவைத்தல், சமைத்தல்.

காய்—காச் (வ.). வடசொல் ப்ர என்னும் முன்னொட்டொடு கூடிப் ப்ரகாச் என்று வழங்குவதே பெரும்பான்மை.

ய—ச, போலி.

காயம்—ஆகாச (வே.)

கள் — களம்—கயம்=கருமை, கரிக்குருவி. கயம்—கசம் = கருமை. இருட்டுக் கசமா யிருக்கிறது என்பது உலக வழக்கு.

கயவாய்=கரிக்குருவி, எருமை.

கயம்—காயம்=1. கரிய காயா மலர்.

"காய மலர்நிறவா" (திவ். பெரியாழ். 1 : 5 : 6)

காயம்—காயா. "காயாம்பூ வண்ணனிலை கழறுமன்றே' (கூர்மபு. இராமனவதா.)

2. கரிய வானம்.

"விண்ணென வருஉங் காயப்பெயர்" (தொல். எழுத் 305).

காயம்—காசம்=கரிய வானம்.

"காசமா யினவெல்லாங் கரந்து" (கம்பரா. மருத்து. 40).

காயா—காசா=1. காயா மலர்.

"காசா கடன்மழை யனையானை" (கம்பரா. கங்கை. 53).

2. எருமை (பிங்.)

காசா—காசை=காயா மலர்.

"காசைக் கருங்குழலார்" (பதினொ. ஆளு. திருவுலா, 120).

காசா—காச

காசா=எருமை. மேற்காண்க.

காய் (ஒளிவீசு) என்னும் தென்சொல்லின் திரிபான காச் என்னும் வட சொல்லொடு ஆ என்னும் முன்னொட்டுச் சேர்த்து, ஆ—காச என்றமைத்து, விளங்குவது, தெரிவது, வெற்றிடமா யிருப்பது என்று பொருட் காரணங் கூறி, வானத்தைக் குறிப்பர் வடவர். முன்னொட்டிற்குப் பொருளேயில்லை.

காரம்—க்ஷார

கடு—கடி—கரி—கார். கார்த்தல்=உறைத்தல் (பிங்). கார்ப்பு= உறைப்பு (சூடா). கார்—காரம்=உறைப்பு (சூடா). கார்—காரம்= உறைப்பு, எரிச்சல், பிள்ளை பெற்ற பெண்டிர்க்குக் கொடுக்குங் கார மருந்து, கடுஞ்சுவை, எரிக்கும் பொருள், காரவுப்பு, சாம்பலுப்பு, சலவைக்காரம், சாயக்காரம், வெண்காரம், சீனிக்காரம், அக்கர காரம், கோளக நஞ்சு, அழிவு, சினம்.

காரிகை—காரிகா

கரு—கார்= 1. கருமை. 2. கரியமுகில்.
3. மழை. "கார்பெற்ற புலமே போல்" (கலித். 38).
4. நீர் (பிங்). 5. அழகு (பிங்).

நீர்வளத்திருலேயே கண்ணிற்கினிய இயற்கைக் காட்சிகள் தோன்றுவதால், நீரைக்குறிக்கும் சொற்கட்கு அழகுப் பொருள் தோன்றிற்று.

ஒ. நோ: அம்=நீர், அழகு.

கார்—காரிகை=1. அழகு.

“கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்கு” (குறள். 1272.

2. அணி.

“கழல்யாப்புக் காரிகை நீர்த்து” (குறள். 777).

3. பெண்.

“காலை யெய்தினிர் காரிகை தன்னுடன்” சிலப். (11: 67).

வடவர் காட்டும் பொருந்தாப் பொருட்காரணம் வருமாறு:

க்ரு=செய். காரக (ஆ.பா.)=செய்பவன். காரிகா (பெ.பா.) செய்பவள், நடிப்பவள்.

மக்களினத்தில் அழகிற்குச் சிறந்தது பெண்பாலாதலின், அழகின் பெயர் பெண்ணிற் காயிற்று.

காலம்—கால

கோல்—கால்=கம்பு, தூண், தூண்போல் உடம்பைத் தாங்கும் உறுப்பு, கால்போன்ற வண்டிச் சக்கரம், கால்போல் நீண்டுசெல்லும் நீர்ப்போக்கு, நீண்டியங்கும் காற்று, நீண்டு தொடரும் காலம்.

கால்—காலம். கால்—காலை.

அம்மீறு பெற்ற பின்னை வடிவினின்றே வடசொல் திரிந்துள்ளது. கால் என்னும் முன்னை வடிவம் வடமொழியிலில்லை.

கல் என்னும் செயற்கை முதனிலைக்குக் கணி (calculate) அல்லது எண் (count or enumerate) என்று பொருளூட்டி, அதை மூலமாக வடவர் காட்டுவது பொருந்தாமை காண்க.

“பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்” (தொல். 108).
“எல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலை’ ’(ஷை 83).
“காலந் தாமே மூன்றென மொழிப.” (ஷை 684).

என்று இலக்கிய வழக்கிலும், வந்தக்கால், விடிகாலை, மழைக் காலம் என்று உலக வழக்கிலும், மூவடிவுச் சொல்லும் தொன்றுதொட்டுத் தமிழில் வழங்கி வருதல் காண்க.

தொல்காப்பியம் வழிநூலாதலின், அதிலுள்ள தென்சொற்களெல்லாம் தலைக்கழக முதனூலைச் சேர்ந்தவை என அறிக.

வந்தால் என்னும் நிலைப்பாட்டு அல்லது ஐயுறவு வினையெச்சத்தை வந்தக்கால் என்பது மேலைவடார்க்காட்டு வழக்கு. இது ஏனை வினைக்ட்கும் ஒக்கும்.

மா. வி. அகர முதலி, கல் என்னும் வடமொழிச் செயற்கை மூலத்தோடு Calculate என்னும் ஆங்கிலச் சொல்லை ஒப்புநோக்கும். இவ்வாங்கிலச் சொல் கல் என்னும் தமிழ்ப் பெயர்ச் சொல்லினின்று திரிந்ததாகும்.

E "calculate...f. LL calculare (CALCULUS)"

E "calculus...L, =small stone (—ULE) used in reckoning on abacus" என்று ஆக்கசுப் போர்டுச் சிற்றகர முதலி கூறுதல் காண்க.

Cal=கல். Culus=குழவு (இளையது, சிறியது).

குட்டி என்னும் இளமைப் பெயர் சிறு பொருளையுங் குறித்தல் காண்க

காலன்— கால

காலன்=காலத்தை முடிவு செய்யும் அல்லது காலமுடிவில் வருங் கூற்றுவன். "காலனென்னுங் கண்ணிலி யுய்ப்ப" (புறம். 240: 5).

காவிரி (காவேரி)—காவேரி

காவிரி—காவேரி.

இவ்விருவடிவுள் எது முந்தியதேனும், இரண்டும் தமிழக ஆற்றுப் பெயராதலானும் இருவகை வழக்கிலும் தொன்றுதொட்டு வழங்கி வருதலானும், தமிழ்ப் பெயராகவே யிருத்தல் வேண்டும்.

காளம்— கால

கள்— காள்—காளம்=கருமை.

காளம்^{2}—காஹல

எக்களித்தல்=கெந்தளித்தல், பெருமகிழ்ச்சி கொள்ளுதல்.

எக்களி—எக்காளம்=கெந்தளிப்பு. கெந்தளிப்பாய் ஊதும் கொம்பு அல்லது குழற்கருவி. எக்காளம்—காளம்—காளகம்.

காளகம்—காலக

காளம்—காளகம்=கருமை. "காளக வுடையினன்" (சீவக. 320.).

காளகம்—காழகம்=கருமை. "காழக மூட்டப்பட்ட" (சீவக. 1230).

காளி—காலீ

கள்—காள்—காளி=கரியவள், பேய்த்தலைவி, பாலை நிலத் தெய்வம்.

கருப்பி, கருப்பாய், மாரி என்னும் உலக வழக்கையும் மாயோள் என்னும் செய்யுள் வழக்கையும் நோக்குக.

மால்—(மார்)—மாரி=கருமுகில், மழை, கரியவள் (காளி).

மரணத்தை உண்டாக்குபவள் என்று பொருள் கூறி மாரி என்பதை வடசொல்லாகக் காட்டுவது பொருந்தாது.

மா=கருமை. மா—மாயோள்=கரியவள் (காளி).

பண்டைத் தமிழகத்திற் போர் பெரும்பாலும் பாலை நிலத்தில் நிகழ்ந்தமையால், காளி போர்த் தெய்வமும் வெற்றித் தெய்வமும் (கொற்றவை) ஆனாள். பின்பு தாயாகக் கருதப் பெற்றதனால் அம்மையெனப் பெயர் பெற்றாள்.

வேனிற்காலத்திற்குரிய கொப்புள நோய் காளியால் வருவதாகக் கருதப்பட்டதினால், அது அம்மை யெனப்பட்டது. போர் வெற்றி நோக்கியும் அம்மை நோய்பற்றியுங் காளி நாளடைவில் ஐந்திணைக் கும் பொதுத் தெய்வமானாள்.

ஆரியர் வருமுன்பு தமிழர் பனிமலைவரை சென்று பரவியிருந்த தினால், வங்கத்திற் காளிக்கோட்டம் ஏற்பட்டது.

காளி ஆரியத் தெய்வ மன்மையின் வேதத்தில் இடம்பெற வில்லை. ஆரியர் சிந்து வெளியினின்று கிழக்கு நோக்கிச் சென்று வங்கத்தையடைந்த பின்னரே, காளி வணக்கத்தை மேற்கொண் டனர்.

குமரிக்கண்டத்தில் தோன்றிய, குமரி, கன்னி என்னும் மலைப் பெயரும் ஆற்றுப் பெயரும் காளியின் பெயர்களே.

கயற்கண்ணியை அங்கயற்கண்ணி என்றதுபோல், காளியை யும் பிற்காலத்தில் அங்காளி, அங்காளம்மை என்றழைத்தனர். அங்கம்மா என்பது அங்காளம்மை என்பதன் சிதைவாகும்.

கானம்—கானன

கடு—காடு—கா—கான்—கானம், கானகம். கான்—காடு (திவா).

கானம்=காடு. "கானக் கோழியும்" (சிலப். 10: 116).

கானகம்=1. காடு. "கானகத்தே நடக்குந் திருவடி" (திருவாச. 40: 8.)

2. மலைக்காடு. "கானக நாடன்" ("ஐங்குறு. 217).

வடவர் கன் என்னும் பொருந்தாச் சொல்லை மூலமாகக் காட்டுவதை மா. வி. அகரமுதலி ஒப்புக்கொள்ளவில்லை.

கிண்கிணி—கிங்கிணி

கிண்கிண்—கிண்கிணி.

"தவளைவாய பொலஞ்செய் கிண்கிணி" (குறுந். 148).

கிண்கிணி—கிங்கிணி=1. பாத சதங்கை (பிங்.). 2. சதங்கை யரைக் கோவை.

"மாணிக்கக் கிங்கிணி தன்னரை யாட" (திவ். பெரியாழ். 1 : 8 : 2).

கிட்டம்—கிட்ட

கிட்டு—கிட்டி—கிட்டம். கிட்டித்தல்=இறுக்குதல். கிட்டம்= இறுகிய கட்டி, இறுகிய வண்டல், அதுபோன்ற இருப்புத்துரு.

கிழம்—ஜரஸ் (இ. வே.)

தமிழ்	கிரேக்கம்	வேதமொழி
கிழம்.	கெரோன் (g)	ஜரஸ்

வடவர் மூலமாகக் காட்டும் ஜா், ஜ்ரு என்பவையெல்லாம் கிழ என்பதன் திரிபே.

குக்கல்—குக்குர

குள்—(குட்கு)—குக்கு. குக்குதல்=குறுகுதல், ஒடுங்குதல், சிறுத்தல்.

குக்கு—குக்கல்=சிறுத்தநாய், குள்ளநாய்.

வடமொழியில் மூலமில்லாதிருப்பதுடன், குள்ளநாய் என்னும் சிறப்புப் பொருளிழந்து நாயென்னும் பொதுப்பொருளே வடசொல் தருகின்றது.

குகை—குஹா (g, h).

குழை—குகை. ஒ. நோ: முழை—முகை. வ. மூலம் குஹ் (மறை).

குத்து—குச்ச (g)

குத்து—கொத்து. குத்து—குச்சு—குச்சம்.

குத்ஸ=குச்ச(g)=குத்துச்செடி, கொத்து.

வடவர் காட்டும் குத் (gudh) என்னும் மூலம், சுற்றுதல், மூடுதல் என்றே பொருள் தருதலாற் பொருந்தாது.

குச்சு—கூர்ச்ச

குச்சு=வண்ண ஓவியன் தூரிகை (painter's brush), பாவாற்றி.

குட்டம்—குஷ்ட

குள்—குட்டு—குட்டம்=குட்டை, குட்டி.

குட்டம்=1. சீர் குறைந்து குறுகிய அடி.

"குட்டமும் நேரடிக் கொட்டின என்ப." (தொல். 1372).

2. விரல்களும் மூக்கும் அழுகிக் குட்டையாகும் நோய். "குட்டநோய்" (சீவக. 253).

வடவர் கு+ஸ்த என்று பிரித்து, குறைந்து நிற்பது என்று பொருட் காரணங் கூறுவர். அதிலும் கு என்பது தென்சொல்லே. குள்—கு. ஒ. நோ: நல்—ந, அல்—அ.

குட்டை=வெண்குட்டநோய்.

குட—குட்=வளை (to bend)

குட=வளைந்த. குடம்=வளைவு.

குடங்கர்—குடங்கக (t)=குடிசை.

குடம்—குடங்கு—குடங்கர்=1. குடம். 2. வளைந்த அல்லது வட்டமான குடிசை. "குடங்கருட் பாம்போ டுடனுறைந் தற்று". (குறள். 890).

குடங்குதல்=வளைதல்.

குடம்¹—குட (ṭ)

குடம்=நீர்க்குடம். வ. குட=நீர்க்குடம். குடம்—வ. கட (gh,ṭ).

குடம்²—குட (g)

குளம்—குடம்=வெல்ல வுருண்டை.

வ. குட (g)=வெல்லம்.

குடல்—குத (g)—வே.

குழல்—குடல்=குழல்போன்ற உறுப்பு.

வ. குத—குடல்.

குடி¹—(குடி ṭ)=வளைவு.

குட—குடி=வளைவு. வ. குடி—குட=வளைவு.

குடி²—குடி (ṭ)

குடி=இல், குடியிருப்பு. குடியிருத்தல்=இல்லிருத்தல், நிலையாகத் தங்குதல். குடிக்கூலி=வீட்டுவாடகை.

குடியானவன்=இல்வாழ்வான், உழவன்.

குடிகள்=நாட்டிற் குடியிருக்கும் மக்கள்.

வ. குடி=குடிசை, கொட்டகை, கூடம், கடை.

குட=குடிசை, கொட்டகை, வீடு, கூடம், கடை.

முதற்காலத்தில் வீடுகளெல்லாம் வட்டமாய்க் கட்டப்பட்டிருந்ததால், வீடு குடியெனப்பட்டது.

ஒ. நோ: வளவு=வீடு. "வளவிற் கமைந்த வாயிற்ருகி" (பெருங். இலாவாண. 3 : 77).

குடி³—குட் (ḍ)=உண்

குடிகை—குடகா (ṭ)=சிறுவீடு.

குடி—குடிகை=சிறுவீடு, சிறுகோயில், இலைக்குடில். கை என்பது ஒரு சிறுமைப் பொருட்பின்னொட்டு. ஒ. நோ: கன்னி—கன்னிகை.

குடிகை—குடிசை—குடிஞை. "தூசக் குடிஞையும்" (பெருங். இலாவாண 12: 43).

வடவர் கை என்பதைக் கா என்று திரித்திருக்கின்றனர்.

கைக்குள் அடக்கமானது அல்லது கையிலிருப்பது சிறிதாயிருக்குமாதலால், கை என்னும் சினைப்பெயர் சிறுமைப் பொருட் பின்னொட்டாயிற்று.

ஒ. நோ: கைக்குட்டை, கைக்குடை, கைத்தடி, கைப்பிள்ளை, கைவாள்.

குடில்—குடீர (t) = குடிசை.

குடி + இல் = குடில் = குடிசையினுஞ் சிறிய இல், குற்றில் (குச்சில்).

ஆட்டுக்குடில் என்னும் வழக்கை நோக்குக.

இங்கு இல் என்பது ஒரு சிறுமைப் பொருட் பின்னொட்டு.

ஒ. நோ: தொட்டி—தொட்டில், புட்டி—புட்டில்.

குடிலம்—குடில (t) = வளைவு

குடி—குடில்—குடிலம் = வளைவு.

"கூசும் நுதலும் புருவமுமே குடில மாகி யிருப்பாரை" (தனிப் பாடல்).

குடிலை—குடிலா (t)

குடி—குடில்—குடிலை = 1. ஓங்காரம். 2. தூய மாயை. இதன் விளக்கத்தை என் 'தமிழர் மதம்' என்னும் நூலுட் காண்க.

குடும்பம்—குடும்ப (t)

குடி = வீடு, வீட்டிலிருக்கும் மனைவி, மனைவியும் மக்களும் சேர்ந்த கூட்டம், கூட்டுக் குடும்பம், குலம், குலத்தார் குடியிருப்பு, ஊர், கொடிவழி.

ஒ. நோ: மனை = வீடு, மனைவி. இல் = வீடு, மனைவி, குடும்பம், சரவடி, ஊர்.

மனைவியைக் குடி என்பது உலக வழக்கு.

எ.டு: இருகுடி = இருமனைவியர்.

குடி = (குடிம்பு) — குடும்பு.

ஒ. நோ: குழி—(குழிம்பு)—குழும்பு = குழி.

"ஆழ்ந்த குழும்பிற் றிருமணி கிளர" (மதுரைக் 273).

இகரம் உகரமாயது உயிரிசைவு மாற்றம் (Harmonic Sequenec of Vowels).

குடும்பு = குடும்பம், உறவினர் கூட்டம், ஊர்ப்பிரிவு (ward).

குடும்பன் = குடும்பத்தலைவன், ஊர்த்தலைவன், பள்ளர்தலைவன்.

குடும்பு—குடும்பம் = 1. மனைவி.

" பரகத்தார் குடும்ப நீக்கி" (சீவக. 1487)

2. கணவன் மனைவி மக்கள் கூட்டம்.

" குடும்பத்தைக் குற்ற மறைப்பான் " (குறள். 1029).

3. உறவினர் கூட்டம்.

"குடும்பந் தாங்குங் குடிப்பிறந் தாரினே" (கம்பரா. சேதுப. 53).

காய்க் குலையைக் குறிக்கும் குடும்பு என்னுஞ் சொல் குழும்பு என்பதன் திரிபாகும்.

குடும்பு என்னும் வடிவம் வடமொழியில் இல்லை.

குடும்பி—குடும்பின் (ṭ)

குடும்பம்—குடும்பி=பெருங் குடும்பத்தலைவன்.

குண்டம்—குண்ட=குழி

குள்—குண்டு=குழி, சிறுகுட்டை, குண்டுங் குழியும் என்பது உலக வழக்கு.

குண்டு—குண்டம்=குழி, குட்டை, பானை, குடுவை.

வடமொழியிற் குண்டு என்னும் வடிவமும் இல்லை; குள் என்னும் மூலமும் இல்லை.

குண்டலம்—குண்டல

குள்—குண்டு=உருண்டை. குண்டு—குண்டலம்=வட்டம், சுன்னம், வானவட்டம், ஆடவர் காது வளையம்.

" குண்டல மொருபுடை குலாவி வில்விட" (சீவக. 1009).

குண்டலி—குண்டலின்

குண்டலம்—குண்டலி=மூல நிலைக்கள வட்டம், தூய மாயை.

இதன் விளக்கத்தை என் 'தமிழர் மதம்' என்னும் நூலுட் காண்க.

குண்டிகை—குண்டிகா=துறவியின் நீர்க்கலம்.

குண்டு—குண்டிகை= 1. குண்டான நீர்க்கலம்.

" நான்முகன் குண்டிகை நீர் பெய்து" (திவ். இயற். நான். 9).

2. குடுக்கை. "பருத்திக் குண்டிகை" (நன். 31).

குண்டிகை—குடிகை=நீர்க்கலம்.

"அரும்புனற் குடிகை மீது" (கந்தபு. காவிரி 49).

குடிகை—குடுக்கை—குடுவை.

குணம்—குண (g)

கொள்ளுதல்=கொண்டிருத்தல், உடையனாயிருத்தல்.

கொள்—கொள்கை=இயல்பு.

"கொம்பினின்று நுடங்குறு கொள்கையார்" (கம்பரா. கிளை. 10).

கொள்—கோள்=தன்மை. "யாக்கைக் கோளெண்ணார்" நாலடி. 18).

கொள்—(கொண்)—(கொணம்)—குணம்=கொண்ட தன்மை, தன்மை.

வடமொழியிற் கிரஹ் (பற்று) என்னுஞ் சொல்லை மூலமாகக் காட்டுவர். கிரஹ் என்னும் சொல்லினும் கொள் என்னும் சொல்லே வடிவிலும் பொருளிலும் பொருத்தமா யிருத்தலையும், கொள் என்பதும் பற்று என்று பொருள்படுதலையும், நோக்குக.

குந்து—குட் (ṭṭ)—வே.

குட்=குத்து, to pound.

குத்து—சத் (ஸ)—உட்கார்.

குத்தவை=புட்டத்தை நிலத்திற் குத்தும்படிவை, குந்தியிரு (நெல்லை வழக்கு).

குண்டிகுத்து=குந்து (நாகை வழக்கு).

குத்து—குந்து, to squat.

குதி—கூர்த்=குதி.

குந்தம்—குந்த (nt)=வேல், ஈட்டி.

குந்து—குந்து—குந்தம்=1. குத்துக்கோல்.

"பூந்தலைக் குந்தங் குத்தி" (முல்லைப். 41).

2. வேல்

"குந்த மலியும் புரவியான்" (பு. வெ. 4: 7).

3. எறிவேல் (javelin)

"வைவா ளிருஞ்சிலை குந்தம்" (சீவக. 1678).

குந்தாலம்—குத்தால (dd)

குந்தாலம்=குத்தித் தோண்டுங் கருவி வகை.

குந்தாலம்—குந்தாலி. "குந்தாலிக்கும் பாரை வலிது" (திருமந். 2909).

ம. குந்தாலி.

குந்தாலம்—கூந்தாலம். குந்தாலி—கூந்தாலி.

குப்பாயம்—கூர்ப்பாஸ=கவசம், சட்டை.

குப்பி=குடுவை, மாட்டுக் கொம்புப் பூண்.

குப்பா=தூரிவலையிற் சேர்த்துள்ள பை.

குப்பாயம்=சட்டை. 'வெங்கணேக்கிற் குப்பாய மிலேச்சனை" (சீவக. 431).

குப்பாயம்—குப்பாசம்=1. மெய்ச்சட்டை.
"குப்பாசமிட்டுக் குறுக்கே கவசமிட்டு" (தமிழ் நா. 192).
2. பாம்புச் சட்டை சி. சி. பாயி. பக். 42).

கும்பம்—கும்ப (bh)—இ. வே.

கும்முதல்=குவிதல். கும்—குமி—குமிழ்—குமிழி.
கும்—கும்பு—கூம்பு. கூம்புதல்—குவிதல். கும்புதல்=குவிதல்.

கும்பு—கும்பம்=குடம், தேர் முடி, யானைத் தலைக் குவவு, கட்டிடக் குவி முகடு (dome)

கும்பச்சுரை=குவிந்த சுரைக்காய்.
கும்பம்—கும்பா=கீழ் நோக்கிக் குவிந்த உண்கலம்.
கும்பு—கும்பிடு. கும்பிடுதல்=கைகுவித்தல்.

வடவர் காட்டும் கும்ப் (b, bh) என்னும் மூலம் கும்பு என்பதன் சிதைவே. ஆயின், அவர் கொள்ளும் பொருள் கவிதல்; தென்னவர் கொள்ளும் பொருள் குவிதல். முன்னது கீழ்நோக்கியதென்றும், பின்னது மேல் நோக்கியதென்றும், வேறுபாடறிக.

குமரன்—குமார (இ. வே.)

கும்—கும்மல்=கும்பல், கூடுதல். கும்மலி=பருத்தவள்.
கும்—கொம்—கொம்மை=1. பருமை (பெருங். உஞ்சைக் 40 : 210). 2. திரட்சி (சூடா). 3. இளமை (திவா.).
கும்—குமர்=1. திரண்ட இளைஞை, கன்னி.

2. கன்னிமை. "குமரிருக்குஞ் சசிபோல்வாள்" (குற்று. தல. தருமசாமி. 47).

3. அழியாமை. "குமருறப் பிணித்த" (பாரத. இந்திரப். 32). மணப் பருவத்தில் ஆணும் பெண்ணும் திரள்வது இயல்பு.

ஒ. நோ: விடை—விடலை=இளைஞன். விடலி=இளைஞை. விடை=இள ஆண் விலங்கு, பறவையின் திரண்ட இளமை. விடைத்தல்=பருத்தல்.

குமர்—குமரன்=இளைஞன், முருகன். குமர்—குமரி=இளைஞை. கன்னியாகக் கருதப்பெறும் காளி.

ஆரியர் வருகைக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே, குமரிக் கண்டமாகிய பழம்பாண்டி நாட்டில் குமரி (காளி) பாலைநிலத் தெய்வமும் வெற்றித் தெய்வமும் குரு (அம்மை) நோய்த் தெய்வமு மாயிருந்தாள். அவள் பெயரால் ஒரு மலைத் தொடரும் ஒரு பேராறு மிருந்தன.

வடவர் குமர என்னும் வடிவைக் குமார என்று நீட்டி அதற்கு மகன்மைப் பொருள் சேர்த்ததுடன், கு+மார என்று சொற் சிதைத்து, எளிதாயிறப்பவன் (easily dying) என்று பொருந்தாப் பொருட் காரணமுங் காட்டுவாராயினர்.

இனி, உணாதி சூத்திரம் கம் (விரும்பு, காமி) என்பதை மூல மாகக் காட்டும்

குமரன், குமரி என்னும் இரண்டும் தூய தென்சொற்களாதலின், மணமாகாத இளைஞன் பெயர்க்குமுன் குமரன் (Master) என்றும், மணமாகாத பெண்ணின் பெயர்க்குமுன் குமரி (Miss) என்றுமே, அடைகொடுத்தல் வேண்டும். செல்வன், செல்வி என்பன மண மக்கள் பெயர்க்கே பொருத்தமானவை.

மகன், மகள் என்று முறையே பொருள்தரும் குமார(ன்), குமாரீ என்னும் வடிவுகளே வடசொற்கள்.

எளிதாயிறப்பது குழவிப் பருவத்திலும் கிழப்பருவத்திலு மாதலின், கட்டிளங்காளைப் பருவத்தைக் குறிக்குஞ் சொற்கு அப் பொருட் காரணம் பொருந்தாது. காமுறுவதும் காளைப்பருவமே. ஆயின், கும் என்னும் சொற்கும் கம் என்னுஞ் சொற்கும் தொடர் பில்லை. கம் என்பது காம் என்பதன் குறுக்கம்.

கு+மார என்னும் தவற்றுப் பிரிப்புச் சொற்களும் தென்சொற் றிரிபே. குள்—கு. மடி—மரி—ம்ரு—மார.

குமுதம்—குமுத (அ. வே.)

கும்முதல்=குவிதல். கும்—குமுதம்=கதிரவனைக் கண்டு குவிவ தாகச் சொல்லப்படும் நீர்ப்பூ.

கு+முத என்று பகுத்து, 'என்ன மகிழ்ச்சியுறுத்துவது' ('exciting what joy') என்று வடவர் பொருட் காரணங் காட்டுவது, எத்துணை வியப்பானது!

கு என்பது குதஸ் (எங்கிருந்து), குத்ர (எங்கு), குவித், குஹ என்னும் வடமொழி வினாச் சொற்களின் அடியாகக் கொள்ளப்பட்டுள்ளது. முத்(வ.)=மகிழ்ச்சி.

குயில்—கோகில

கூ (கூவு)—(கூயில்)—குயில். ம. குயில், க. குகில், தெ. குக்கில், மரா. கோயில, வ. கோகில.

குரு—[1]குருத் (dh)—இ. வே.

உருத்தல்=பெருஞ்சினங் கொள்ளுதல். உரு - குரு. குருத்தல்=சினத்தல்.

குரு=வெப்பக் கொப்புளம்.

குரு[2]—க்ரு (gh)=எரி, ஒளிர்.

குரு=ஒளி. "குருமணித்தாலி" (தொல். 303, உரை).

"குருவுங் கெழுவும் நிறனாகும்மே" (ஷ).

குரு[3]—குரு (g)

குரு=1. பருமன். 2. பெருமை. "குருமை யெய்திய குணநிலை" (சீவக. 2748). 3. கனம்.

"பசுமட் குருஉத்திரள் போல" (புறம். 32).

4. தந்தை, 5. ஆசிரியன், 6. குரவன், அரசன்.

குருக்கள்=பிராமணரல்லாத மரபூண் வேளாளக் குரவர்.

குரு=குருசில்=தலைவன். "போர்மிகு குருசில்" (பதிற்றுப். 31 : 36).

குருசில்—குரிசில்=தலைவன். (திருமுரு. 276).

குரு—குரவன். இருமுது குரவர்=பெற்றோர். ஐங்குரவர்=தந்தை, தாய், தமையன், ஆசிரியன், அரசன் ஆகியோர்.

குரவன்—குரவஹ் (g)

குரு—குரை=பெருமை.

பருமையும் கனமுமே வேதத்திற் கொள்ளப்பட்ட பொருள்கள். பிறவெல்லாம் பிந்தினவே.

குருந்தம்—குருவிந்த = மாணிக்க வகை.

குரு = சிந்துரம். குருவெறும்பு = செவ்வெறும்பு.

குரு—குருதி = அரத்தம், சிவப்பு, செவ்வாய்.

குருதிக் காந்தள் = செங்காந்தள் (சீவக. 1651).

குரு—குருந்து = மாணிக்கவகை. குருந்து—குருந்தம்.

குருள்—குருல = மயிர்ச்சுருள்.

குள்—குர்—குரு—குருள். குருளுதல் = சுருளுதல்.

"குருண்ட வார் குழல்" (திருவிசை. திருவாலி. 1 : 3).

குருள் = மயிர்ச்சுருள், பெண்டிர் தலைமயிர்.

குரை—குர் = ஒலி.

குரைத்தல் = ஒலித்தல். ஆரவாரித்தல்.

குலம்—குல

குல்—குல—குலவு. குலவுதல் = கூடுதல்.

குல்—குலம் = கூட்டம், குடும்பம், வகுப்பு, குலப்பிரிவு, இனம். வடமொழி மூலமும் குல் என்பதே.

குவம்—குவ = ஆம்பல்.

குவி—குவம். ஒ. நோ: அம்—அம்பு—அம்பல்—ஆம்பல். கும்—குமுதம்.

குவளை—குவல

குவளை = 1. கருங்குவளை.

"குவளை...கொடிச்சி கண்போல் மலர்தலும்" (ஐங்குறு. 399), 2. செங்குவளை.

"விளக்கிட் டன்ன கடிகமழ் குவளை" (சீவக. 256).

3. ஒரு பேரெண்.

"நெய்தலுங் குவளையும் ஆம்பலுஞ் சங்கமும்" (பரிபா. 2 : 13).

குள்ளம்—குல்ல (kh)

குளம்[1]**—கூல** = சிறுகுளம்.

குளம்[2]—குல (g)=வெல்லம்

குளம்=வெல்லவுருண்டை.

குளிகை—குலிகா (g)=உருண்டை, மாத்திரை.

குளம்—குளிகை=உருண்டை மாத்திரை.

குளியம்=உருண்டை, உருண்டை, உருண்டை மாத்திரை.

குளிர்—குளீர=நண்டு

குள்ளுதல்=கிள்ளுதல், கிண்டுதல், கீறுதல். குள்—குளிர்=கூரிய கவைக்காலாற் கடிக்கும் அல்லது கூரிய கால்களால் நிலத்தைக் கீறும் நண்டு.

கூ—கு, கூ

கூ—கூவு.

கூகை—கூக (gh)

கூடம்—கூட (ṭ)

கூடு—கூடம்=பலர் கூடும் இடம், சாலை, பட்டறை.

கூடாரம்—குடரு (ṭ)

கூந்தல்—குந்தல (nt)

குத்து=கொத்து. குத்து—குந்து—கூந்து=மயிர்க்கொத்து. "கூந்திளம் பிடி" (குளா. நாட்டு. 19).

கூந்து—கூந்தல்=கொத்தான பெண்டிர் தலைமயிர், மயிற்றோகை, குதிரைவால் (?), கூந்தற்பனை, கமுகம்பாளை, குதிரைவாலிக்கதிர். ஒ. நோ: கொத்து—கொந்து.

ம கூந்தல். க. கூதல்.

கூம்பு—கூப=பாய்மரம்

கூலம்—குல

கூழ்—கூர

குழை—கூழ்=குழைந்த வுணவு.

கூழை—கூல=படையின் பின்னணி.

கூழை=1. வால். "புன் கூழையங் குறுநரி" (கல்லா. 89 : 18). 2. வால்போன்ற பின்னணி.

கேது—கேது

செல்—செள்—செய்—சேய்—சே—சேது=சிவப்பு.

சேதா = சிவந்த ஆ. சேதாம்பல் = செவ்வாம்பல்.

சேது—கேது = செம்பாம்பு வடிவினதாகச் சொல்லப்படும் ஒன்பதாங் கோள்.

கைதை—கைதக

கள் = முள். கள்—கய்—கை—(கைது)—கைதை = முள்ளுள்ள தாழை.

"கைதையம் படப்பை" (அகம். 100 : 18).

ம. கைதா. வடசொல் கேதக என்னும் வடிவுங் கொள்ளும்.

கொக்கு—கோக்க = ஓநாய்.

கொக்கு = செந்நாய் (பிங்.).

கொங்கணம்—கோங்காண

கொங்கு—கொங்கணம்.

கொஞ்சம்—கிஞ்சித்

குஞ்சு = சிறியது, பறவைக் குஞ்சு. குஞ்சு—குஞ்சி = சிறியது, பறவைக்குஞ்சு. குஞ்சிப்பெட்டி = சிறுபெட்டி. குஞ்சியப்பன் = சிற்றப்பன். குஞ்சு—குஞ்சன் = சிறியவன், குறளன்.

குஞ்சு—கொஞ்சு—கொஞ்சம்—கிஞ்சம் = சிறிது

கிஞ்சம்—கிஞ்சித்(வ.).

கொத்தமல்லி—குஸ்தும்பரு

கொத்து மல்லி—கொத்தமல்லி.

கொதி—க்வத் (th)

கொப்பரை—கர்ப்பர

கொப்பரை—கப்பரை—கர்ப்பர(வ.)

கோ—கோ (g), கௌஸ் (g)—இ. வே.

கோ = ஆ. கோவன் = 1: மாட்டிடையன், இடையன் (ஆயன்).

"கோவன் நிரை மீட்டனன்" (சீவக. 455).

2. அரசன். "கோவனு மக்களும்" (சீவக. 1843).

குடிகள் ஆடுகளும் அரசன் மேய்ப்பனும் போலக் கருதப்பெற்றதினால், அரசன் கோவன் எனப் பெற்றான். அரசன் செங்கோல் ஆயன் கைக்கோலுக் கொப்பாம்.

கோவன்—கோன்=1. இடையன். 2. அரசன்.

கோன்—கோனர்=இடையர். கோன்—கோ=அரசன்.

கோவன் என்பதைக் கோப என்று திரித்தும் பின்பு அதைக் கோ+ப என்று பிரித்தும், கோவைப் பாதுகாப்பவன் என்று வடவர் பொருள் கூறுவது பொருந்தாது. கோவன் என்பது ஆயன் (ஆ+அன்) என்பதை யொத்ததே.

ஆங்கிலத்தில் (தியூத்தானியத்தில்) கோ (OS), கூ (OE) கௌ (E) என்று எடுப்பொலியின்றியே வழங்கி வருகின்றது. வேத ஆரியத்தில்தான் go என்று எடுத்தும் gous என்று திரிந்தும் ஒலித்திருக்கின்றது.

கோசம்—கோச=உருண்டை.

கோளம்—கோசம்=முட்டை (பிங்.) ள—ச, போலி. ஒ. நோ. உளு—உசு. இளி—இசி.

கோட்டம்—கோஷ்ட

கோடுதல்=வளைதல். கோடு—கோட்டம்=1. வளைவு. 2. நிலாவைச் சூழ்ந்த வட்டக்கோடு. 3. மதிலாற்சூழப்பெற்ற கோயில். "கோழிச்சேவற் கொடியோன் கோட்டமும்" (சிலப். 14. 10). 4. மதிலாற்சூழப்பெற்ற சிறைச்சாலை.

"சிறைக்கோட்டம் விருப்பொடும் புகுந்து" (மணி. 19: 43).

கோட்டி—கோஷ்டீ (ஜ)

குலவுதல்=கூடுதல். குள்—கள்—களம். குழம்புதல்=கலத்தல், திரளுதல்.

குல்—குள்—கொள். கொள்ளுதல்=1. பொருந்துதல், கூடுதல், மனத்திற்குப் பொருந்துதல்.

"கொள்ளாத கொள்ளா துலகு" (குறள். 470). 2. ஒத்தல்.

"வண்டினம் யாழ்கொண்ட கொளை" (பரிபா. 11: 125).

கொள்—கோள்=குலை. "செழுங்கோள் வாழை" (புறம். 168).

கொள்—கொள்ளை=1. மிகுதி

"கொள்ளை மதத்த நால்வாய்" (பாகவ. 1: 5: 14). 2. கூட்டம்.

"கொள்ளையிற் பலர் கூறலும்" (கந்தபு. விண்குடி: 14)

கொள்—கொட்டி=கூட்டம் (அக. நி.).

கொட்டி—கோட்டி=1. ஒருவர் இன்னொருவரொடு கூடியிருக்கை. "தன்றுணைவி கோட்டியினிங்கி" (சீவக. 2035). 2. கூட்டம் (பிங்). 3. அறிஞர் அவை.

"தோமறு கோட்டியும்" (மணி. 1: 43). 4. அவைப்பேச்சு.

"வீரக்கோட்டி பேசுவார்" (கம்பரா. மாயாசனகப். 13).

கோட்டிகொளல்—அவையிற் பேசுதல்.

"நூலின்றிக் கோட்டி கொளல்" (குறள். 401).

வடவர் கோஷ்டி என்னும் தென்சொற்றிரிபைக் கோ என்னும் ஆவின் பெயரொடு தொடர்பு படுத்தி, மாட்டுக் கொட்டில், விலங்குக் கூட்டம், மக்கட் கூட்டம் என்று பொருத்திக்காட்டுவர். இதன் பொருத்தமின்மையைப் பகுத்தறிவுள்ளார் கண்டுகொள்க.

கோட்டை—கோட்ட

கோடுதல்=வளைதல். கோடு—கோட்டை=1. நிலாவைச் சூழ்ந்த வட்டக்கோடு.

"சந்திரனோர் கோட்டை கட்டி" (கொண்டல் விடு. 72). 2. வட்டமான நெற்கூடு.

"உலவாக்கோட்டை" (திருவாலவா. 50: 13). 3. நெற்குதிர். 4. ஒரு முகத்தலளவை.

இது முதலில் ஒரு நெற்குதிரளவாயிருந்து, இன்று 21 மரக்கால் கொண்ட அளவைக் குறிக்கின்றது. 5. அரண்மனையை அல்லது நகரைச் சூழ்ந்த மதிலரண். ம., க., தெ. கோட்ட. மா. வி. அகரமுதலி கோட்ட என்னுஞ் சொற்கு, வளைவு, குடிசை, மதிலரண் என்று பொருள்கூறி, குட் (வளை) என்பதை மூலமாகக் காட்டும். கோடு என்னுஞ்சொல் வடமொழியிலின்மையால் இங்ஙனங் காட்ட நேர்ந்தது. குட் என்பது குட என்னும் தென்சொற்றிரிபென்பது முன்னமே கூறப்பட்டது.

கோடரி—குட்டார (th)

கோடு=மரக்கிளை. அரிதல்=அறுத்தல், வெட்டுதல், கோடரி =மரக்கிளையை வெட்டும் அல்லது பிளக்குங் கருவி.

கோடரி—கோடாரி—கோடாலி.

க கோடாலி, தெ. கொட்டலி (g), ம. கோடாலி

கோடி—கோடி (ṭ)

கோடி=எல்லை, கடைசி, நுனி, நிலமுனை, முடிமாலை, உச்சியெண்ணாகிய நூறிலக்கம்.

"அடுக்கிய கோடி பெறினும்" (குறள். 954).

தெ. கோடி, மரா. கோட, இ. குரோட், ஆ. க்ரோர் (crore)

முதற்காலத்திற் கோடியே கடைசியெண்ணாக விருந்தது. பின்பு குவளை, தாமரை, குமுதம், வெள்ளம், ஆம்பல், நெய்தல் முதலிய அடுக்கிய கோடா கோடிப் பேரெண்கள் எழுந்தன.

"ஐஅம் பல்என வருஉம் இறுதி
அல்பெயர் எண்ணினும் ஆயியல் நிலையும்."
(தொல். 393).

கோடு = 1. விளைந்த கொம்பு.

2. விலங்கின் உச்சந்தலையிலுள்ள கொம்புபோன்ற மலையுச்சிக் குவடு.

"பொற்கோட் டிமயமும்" (புறம். 2. 24).

3. கொம்புங் குவடும் போன்ற உச்சி மயிர்முடி.

"குரற்கூந்தற் கோடு" (கலித். 72: 20).

கோடு—கோடரம் = தேரின்மொட்டு (பிங்.)

கோடு—கோடகம் = முடி (மகுடம்).

கோடு—கோடி = உச்ச எண்.

கோடி என்னும் சொற்கு எல்லைப்பொருள், கோடு என்னும் சொல்லின் நீர்க்கரைப் பொருளினின்று வந்திருத்தல் வேண்டும்.

கோடி[2]—கோடி (t)

கோடி = கடை, நுனி. வடவர் வில்லை நோக்கி வளைந்த கடை என்பர்.

கோடகம்—கோட்டக (gh)

கோடுதல் = வளைதல், திரும்புதல்.

கோடு—கோடகம் = வட்டமாயோடுங் குதிரை.

ஒ. நோ: மண்டிலம் = குதிரை (பிங்). கோடகம்—கோடம்—கோணம் = குதிரை.

"பச்சைக் கோடகக் காற்றை" (கல்லா. 17: 48).

கோடு—கோடரம் = குதிரை (பிங்.)

கோடரம்—கோரம் = குதிரை, சோழன் குதிரை.

"கோரத்திற் கொப்போ கனவட்டம்" (தனிப்பாடல்).

வடவர் எதிர்ப்பு, காப்பு, திரும்பல் ஆகிய பொருள்களைக் குறிக்கும் குட் (gh) என்னும் சொல்லை மூலமாகக் காட்டுவர்.

கோணம்—கோண

கோண்—கோணம்=வளைவு, மூலை.

கோபுரம்—கோபுர (g)

"புரையுயர் பாகும்" (தொல். (785).

புரம்=உயரமான கட்டிடம், மேன்மாடம். கோ=அரசன், தலைமை.

கோபுரம்=அரசனிருக்கும் மேன்மாடம், தலைமையான காவற் கொத்தளம், அதுபோன்ற கோயிற் கோபுரம்.

மா. வி. அகரமுதலி, கோபுர என்னும் சொல்லை ஆவைக்குறிக் கும் கோ என்னும் சொல்லின்கீழ்க் குறிக்கின்றது. முதன்முதற் கோபுரம் கட்டப்பெற்றது தென்னாட்டிலேயே.

கோளகம் – கோலக=கருமிளகு.

கோலகம்=நீண்டுருண்ட திப்பிலி.

கோலம்—கோல (g)=உருண்டை.

கோள்—கோள்—கோளம்=உருண்டை, கோளக்கட்டி (gland) கோள்—கோளா=உருண்டைக்கறி.

கோலகம் – கோலக (g)=உருண்டை.

கோளகம்=உருண்ட மிளகு, மண்டல விரியன்.

கோளகை=1. வட்ட வடிவம்.

"அண்டகோளகைப் புறத்ததாய்" (கம்பரா. அகலிகைப். 60). 2. யானைக்கிம்புரி. 3. மண்டலிப்பாம்பு.

சக்கரம்—சக்ர (c)—இ. வே.

சுழிதல்=வளைதல். திருகுதல்.

சுழி—சழி. சழிதல்=ஒரு பக்கஞ் சரிதல்.

சழி—சரி—சருவு. சருவுதல்=சாய்தல். சரி=வளையல் வகை. சருவு—சருகு. சருகுதல்=சாய்தல்.

சருகு—சருக்கு. சருக்குதல்=சாய்தல், வளைதல், சறுக்குதல்.

சருக்கு—சருக்கம்=வட்டம், நூற்பிரிவு. L. circum=வட்டம்

சருக்கு—சருக்கரம்—சக்கரம்=வட்டம், உருளி, குயவன் சக்கரம், சக்கரப்படை, வட்டக்காசு, சக்கரப்புள், மாநிலம், செக்கு.

"சக்கரப் பாடித் தெருவு" (பெரியபு. கலியநா. 5).

Gk kuklos, E cycle=சக்கரம்.

சருக்கரம்—சருக்கரை—சர்க்கரை—சக்கரை=வட்டமாக வார்க்கப்பெற்ற வெல்லக்கட்டி.

ஒ. நோ. வட்டு=வட்டமான கருப்புக்கட்டி.

சருக்கரம்—(சருக்காரம்)—சக்காரம் (மூ. அ)=இனியதேமா. இன்றும் சக்கரைக்குட்டி என்று ஒரு மாம்பழப் பெயர் வழங்குதல் காண்க.

சக்காரம்—அக்காரம்=சருக்கரை.

"அக்காரமன்னார்" (நாலடி. 374).

அக்காரடலை, அக்காரவடிசில் என்பன சருக்கரைப் பொங்கல் வகைகள்.

பதநீரை (தெளிவை) அக்காரநீர் என்பது நாஞ்சில்நாட்டு வழக்கு.

அக்காரம் என்று மாங்கனிக்கும் பெயர். அக்காரக்கனி நச்சுமனார் என்னும் புலவர்பெயர் அக்கனியால் வந்ததுபோலும்!

சக்கரம்—(சக்கு)—செக்கு=எண்ணெயாட்டும் வட்டமானஉரல்.

ஒ.நோ: பரு—பெரு, சத்தான்—செத்தான்.

சக்கு—சக்கடம்—சக்கடா=கட்டை வண்டி.

தெ. செக்கடா பண்டி.

சக்கடம்—சகடம்=சக்கரம், வண்டி, தேர், வட்டில், முரசு.

சகடம்—சகடி=வண்டி. சகடிகை=கைவண்டி.

சகடு=வண்டி. சகடு—சாகாடு=வண்டி. "பீலிபெய் சாகாடும்" (குறள். 475.).

சகடு—சாடு=வண்டி. "குறுஞ்சாட் டுருளை" (பெரும்பாண். 188).

சாடு—சாடிகம்=வண்டி.

சகடு—சகடை=வண்டி, முரசு, அமங்கலச் சிறுபறை.

சகடை—சகண்டை=முரசு, பறைப்பொது.

சகடம்—சகோடம்=சக்கரப்புள், அதன் வடிவான யாழ்.

சகோடம்=சகோரம்=சக்கரப்புள்.

சக்கு—சங்கு=உள் வளைந்துள்ள நந்துக்கூடு, வலம்புரி, இடம்புரி. புரிதல்—வளைதல்.

ஒ. நோ: கோடு=சங்கு. சுரிமுகம்=சங்கு. வளை=சங்கு. வாரணம்=சங்கு.

சங்கு—சங்கம்=1. சங்கு. "அடுதிரைச் சங்க மார்ப்ப" (சீவக. 701).

1. கைவளை. "சங்கங் கழல" (இறை. 39 உரை).

'சக்கரம்' முதல் 'சங்கு'வரை பல சொற்கள் வளைவுக் கருத் தடிப்படையில் ஒரே தொடர்புடையனவாதலின், ஒருங்கு கூறப் பட்டன.

சக்ர என்னும் வடசொல் வடிவிற்கு வடமொழியாளராற் குறிக் கப்பட்டுள்ள மூலம் க்ரு(செய்) என்பதே. மா. வி. அகரமுதலி சர் (car) என்னும் சொல்லை வினாக்குறியுடன் குறித்துள்ளது. சர்= இயங்கு. இவ்விரண்டுள், முன்னதின் பொருந்தாமையையும் பின் னதின் வன்புணர்ப்புத் தன்மையையும், அறிஞர் கண்டு கொள்க.

சகடம்—சகட (ṡ, ṭ)

மா. வி. அ. "of doubtful derivation" என்று குறித்திருத்தல் காண்க.

சகடி—சகடீ (ṡ, ṭ)

சகடிகை—சகடிகா (ṡ, ṭ)

சகோரம்—சகோர (c)

வடவர் காட்டும் மூலம் சக் (c) என்பதாகும். இது குறிக்கும் பொருள்கள் பொந்திகை (திருப்தி), எதிர்ப்பு, ஒளிர்வு என்பனவே.

சங்கம்—சங்க (ṡ, kh)—அ, வே.

வடமொழியில் இச்சொற்கு மூலமுமில்லை; சங்கு என்னும் மூல வடிவுமில்லை.

சச்சரி—ஜர்ஜரா (jh)

இது தென்னாட்டுப் பறைகளுள் ஒன்று.
"கொக்கரையின் சச்சரியின் பாணியானை" (தேவா. 722: 1).
இப்பெயர் ஒலிக்குறிப்படிப்படையில் தோன்றியது.

சடை—ஜடா (ṭ)

சள்ளுதல்=சிக்குதல்.
சழிதல்=நெருங்குதல், அடர்தல், நெருங்கிக் கிடத்தல்.
"திங்கட் டொல்லரா சழிந்த சென்னி" (தேவா. 980: 6).
சடாய்த்தல்=செழித்தல், அடர்ந்து வளர்தல்.

சடைத்தல் = அடர்ந்து கிளைத்தல்.

சடாய்—சடை = கற்றை, இயற்கையான மயிர்க்கற்றை, கற்றையான சடைப்பின்னல். சடை = சடாய்

சடைச்சம்பா, சடைச்சாமை, சடைப்பயறு, சடைப்பருத்தி, சடையவரை என்பன, கற்றையான அல்லது கொத்தான பொருள்களை உணர்த்தும்.

சடைமுடி, சடை விழுதல், சடையாண்டி, சடையன் என்னும் சொற்களில், சடை என்பது இயற்கையாகவோ எண்ணெய் தேய்க்காமையாலோ ஏற்படும் மயிர்க்கற்றையைக் குறிக்கும்.

வடவர் ஜட் (j, jh) என்னும் சொல்லை மூலமாகக் காட்டுவர். அது சிக்கற் பொருளை யுணர்த்துதலால் சடாய் என்பதன் திரிபே.

சடாய்—ஜட்

சண்டம்—சண்ட (c)

சள்ளெனல் = சினந்து விழுதல். சள் = தொந்தரவு.

சள்ளை = தொந்தரவு. சள்— சண்டு—சண்டை = சச்சரவு.

சளம் = கடுஞ்சினம். சண்டு—சண்டம் = 1. சினம்.
2. கொடுமை.

"சண்ட மன்னனைத் தாடொழுது" (சீவக. 430).

சண்டன் = கடுஞ்சினத்தன், கூற்றுவன், கதிரவன், கொடியவன்.

சண்டி = கொடியவள், காளி, இடக்குப் பண்ணும் விலங்கு.

சண்டாளன் = கொடியவன். சண்டாளி = கொடியவள்.

சண்டாளம் = கொடுந்தன்மை.

ஆளன், ஆளி என்னும் தமிழ்ப் பாலீறுகளை நோக்குக.

சண்டன்—சண்ட (c)

சண்டாளம்—சண்டால (c)

சண்டாளன்—சண்டால (c)

சண்டாளி—சண்டாலீ (c)

சண்டி—சண்டீ (c)

வடவர் காட்டும் சண்ட் (c) என்னும் மூலத்தை "derived fr. caṇḍa என்று மா. வி. அ. கூறுதல் காண்க.

சண்ணம்—சிச்ன (šišna)—இ. வே.

சுண்—சண். சண்ணுதல்=புணர்தல். சண்—சண்ணம். சண்ணக்கடா=பொலிகடா.

துளைத்தற் பொருளுள்ள ச்னத் (šnath) என்னும் சொல்லை வடவர் மூலமாகக் காட்டுவர்.

சண்பகம்—சம்பக (c)

''மல்லிகை மௌவல் மணங்கமழ் சண்பகம்'' (பரிபா. 12:77).

சணல்—சண (š)—அ. வே.

சள்ளுதல்=சிக்குதல். சடாய்த்தல்=அடர்ந்து வளர்தல்.

சடை=நார். சடைத்தேங்காய்=நார்த்தேங்காய்.

சடை—சடம்—சடம்பு=நாருள்ள சணற்செடி.

சடம்—சணம்=சணல். சணம்—சணம்பு=சணல்.

சணம்பு—சணப்பு=சணல். சணப்பு—சணப்பை=சணல்.

சணப்பு—சணப்பன்=சணலிலிருந்து நாருரிக்கும் குலத்தான்.

''சணப்பன் வீட்டுக் கோழி தானே விலங்கு மாட்டிக் கொண்டது.'' என்பது பழமொழி.

சணம்—சணல்.

சதங்கை—ச்ருங்கலா (š, kh)

சல்—சல—சலங்கை—சதங்கை. ஒ. நோ: கல்—கல—கலம்பு—கலம்பம்—கதம்பம்.

''பரியகம் நூபுரம் பாடகஞ் சதங்கை'' (சிலப். 6: 84, உரை).

சதரம்—சதுரச்ர (c, š)

சட்டுதல்=தட்டுதல். இவ்வினை இன்று வழக்கற்றது. ஆயினும் சட்டுச்சட்டென்று தட்டுதல் என்னும் வழக்குள்ளது.

சட்டென்று=சட்டென்று தட்டுமளவில், சட்டென்னும் ஓசை கேட்குமளவில், விரைந்து.

சட்டு—சட்டம்=தட்டையான பலகை. ஒரு பொருளைத் தட்டத் தட்ட மேன்மேலுந் தட்டையாதல் காண்க. இதனால் தட்டற் கருத்தினின்று தட்டைக் கருத்துத் தோன்றிற்று.

ஒ. நோ: தட்டு—தட்டம், தட்டை; பட்டு—பட்டம், பட்டை; மொட்டு—மட்டு—மட்டை.

சட்டம்=1. பலகை ஓலை முதலிய தட்டையான பொருள். 2. கொத்தன் சட்டப் பலகை, 3. சட்டப் பலகை போன்ற நேர்மை, 4. வரியிழுக்குஞ் சட்டம் (Flat ruler), 5 நேர்வரி, 6. நேர்வரி போன்ற ஒழுக்கநெறி, சட்ட திட்டம்;

7. நாற்புறமுந் தைத்த சட்டம் (Frame), நாற்புறச் சட்டமான சதுரம்;

8. உயிருக்கு அல்லது ஆதனுக்கு (ஆன்மாவிற்கு)ச் சட்டம் போன்றிருக்கும் உடம்பு.

(ஆங்கிலத்திலும் சட்டத்தைக் குறிக்கும் (frame) என்னுஞ் சொல் உடம்பைக் குறித்தல் காண்க.);

9. கட்டில் முதலியன பின்னுதற்கும் வீடு கட்டுதற்கும் படம் வரைதற்கும் அமைத்துக் கொள்ளும் சட்ட அமைப்பு, 10. முன்னேற்பாடான திட்டம் (Plan), 11. அணியம் (ஆயத்தம்);

12. கட்டுரை முதலியன வரைதற்குக் குறித்துக் கொள்ளும் குறிப்பு;

13. பார்த்தெழுதுதற்கு வைத்துக் கொள்ளும் மேல்வரியெழுத்து, 14. எதற்கும் அளவையான மேல்வரிச் சட்டம், 15. செப்பம் அல்லது சீர்மை.

சட்டம்—சட்டகம்=1. சட்டம் (Frame).
"சட்டகம் பொன்னிற் செய்து" (சீவக. 2523).
2. கட்டில், படுக்கை (திவா.).
3. வடிவு (பிங்). 4. உடல்.

"உயிர்புகுஞ் சட்டகம்" (கல்லா. 8: 1.).
சட்டம், சட்டகம் என்னும் இரு சொற்களும் வடமொழியில் இல்லை.

சட்டம்—சடம்=1. உடம்பு. ஒ.நோ: பட்டம்—படம்=துணி.
"சடங்கொள் சீவரப் போர்வையர்" (தேவா. 805: 10).
2. உடம்புபோல் அறிவில்லாப் பொருள் (பிங்).

சடம்—ஜட

வடவர் குளிர்மை என்பதை மூலக்கருத்தாக வைத்து, குளிர், சில்லெனல், விறைப்பு, மரப்பு, அசைவின்மை, உணர்வின்மை, உணர்ச்சியின்மை, மயக்கம், திமிர், மடமை, மந்தம், உயிரின்மை, அறிவின்மை என்று முறையே பொருள் வளர்ப்பர். அறிஞர் இதன் பொருந்தாமையை அறிந்துகொள்க.

குளிர்மைப் பொருளில் ஜட என்பது சளி என்னும் தென்சொல் திரிபாக இருக்கலாம்.

சடம்—சடலம்=உடம்பு. இது உலக வழக்கு.

ஒ. நோ: படம்—படலம்.

சடலம் என்னும் வடிவம் வடமொழியில் இல்லை.

சடலம்—சதரம்=உடம்பு (நெல்லை வழக்கு).

சதரம்—சதிரம் (கொச்சைத் திரிபு).

சதரம்—சரீர (இ. வே.).

த—ர, போலி. ஒ. நோ: விதை—விரை.

வடவருள் ஒரு சாரார் ச்ரி என்னும் சொல்லைக் காட்டித் தாங்குவது என்றும், மற்றொரு சாரார் ச்ரு என்னுஞ் சொல்லைக் காட்டி எளிதாய் அழிக்கப்படுவது என்றும், பொருட் காரணங் கூறுவர்.

சதரம்—சதுரம்=நான் மூலைச் சட்டம்போன்ற நாற்கோணம்.

"வட்டமுஞ் சதுரமும்" (பெருங். உஞ்சைக் 42 : 29).

சதுரக்கல், சதுரக்கள்ளி, சதுரத் தூண், சதுரப் பலகை, சதுரப் பாலை, சதுர மாடம், சதுர முகம், சதுர வரம், சதுர வோடு என்பன தொன்று தொட்ட வழக்கு.

வட்டம் என்பது போன்றே சதுரம் என்பதும் தூய தென்சொல். ஆயின், வட நூல்களில் ஆளப்பெற்றிருப்பது பற்றி, சதுரம் என்பதைப் போன்றே வட்டம் என்பதையும் வடசொல்லென வலிப்பர் வடவர். வட்டம் (த.)—வட்ட(பிரா.)—வ்ருத்த(வ.) என்னும் உண்மையான முறையைத் தலைகீழாய்க் காட்டுவர் அவர்.

சதுரம் என்னும் வடிவம் வடமொழியில் இல்லை.

சதுரம்—சதுர் அச்ர=நாற்கோணம்.

மேலையாரியத்தில் நான்கு என்னும் எண்ணுப்பெயர் முன்னொட்டுப் பெற்றே சதுரத்தைக் குறிக்கின்றது.

L quatuor=four; exquadra—OF esquarre—E square.

வடமொழியில் அது பின்னொட்டுப் பெற்றுக் குறிக்கின்றது. சதுர் என்னும் பெயர் இயல்பாக நின்று நான்கு என்னும் எண்ணுப் பெயரையே உணர்த்துகின்றது. சதுரிகா, சதுஷ்க, சதுஷ்டய என்னும் வடிவங்களும் பிற்காலத்திலேயே சதுர வடிவையும் உணர்த்தினதாகத் தெரிகின்றது.

அச்ர=கோணம், மூலை.

சதுரம் என்னும் வடிவக் கருத்து நான்மூலைச் சட்டத்தொடு மட்டுமன்றி, கட்டுடம்பொடும் தொடர்புடையதாகத் தெரிகின்றது.

கட்டுடம்பின் அமைப்பைச் சதுர்க்கட்டு என்பது உலக வழக்கு. ஆங்கிலத்திலும் square - built, a man of square frame என்று வழங்குதல் காண்க:

சடலம், சதரம் என்னும் சொல் வடிவங்கள் குமரிக்கண்டத்தில் சட்டக் கருத்தும் உணர்த்தியிருத்தல் வேண்டும்.

சதுர என்னும் பெயரினின்று, தோன்றிய சதுரி என்னும் வினை வடமொழியிலில்லை.

சதுரித்தல் = நாற்கோணமாக்குதல்.

குழித்தல் (வருக்கமாக்குதல்). சரியான சதுரத்தைக் குறிக்கும் சச்சதுரம் என்னும் இரட்டித்த வடிவம் வடமொழியிலில்லை.

சந்து—ஸந்தி (இ. வே.).

இது முன்னரே விளக்கப்பெற்றது.

உம்—அம்—அந்து—சந்து = பொருத்து, கூட்டு.

வடமொழியில் ஸம் + தா (dhā) என்று பிரித்து, உடன்வை, பொருத்து என்று பொருளுரைப்பர். ஸம் = கூட. தா = வை, இடு.

சப்பட்டை—சர்ப்பட்ட (c)

சப்பை—சப்பட்டை

சப்பாணி—சப்பேட்ட (c)

சப்பு—சப்பாணி = விரித்த கைகளைச் சேர்த்துத் தட்டுதல்.

"சப்பாணி கொட்டியருளே" (மீனாட். பிள்ளைத். சப்பாணி, 1).

தெ. சப்பட்லு.

சவை—சபா (s, bh)

இது முன்னர்க் கூறப்பட்டது.

சமம்—ஸம = ஒப்பு

உம்—அம்—சம்—சமம் = ஒப்பு. சமம்—சமன் = ஒப்பு, நடுநிலை

சமரம்—ஸமர = போர்

இருவர் அல்லது இரு படைகள் போர் செய்யும்போது ஒன்று கலத்தலால், கலத்தல் அல்லது ஒன்றுதற் கருத்தினின்று போர்க் கருத்துப் பிறந்தது.

எ-டு: கல—கலாம், கலகம். கைகலத்தல்=சண்டையிடுதல். பொருதல்—ஒத்தல், போர் செய்தல். பொரு—போர் = பொருத்து, சமர்.

இங்ஙனமே ஒப்பைக் குறிக்கும் சமம் என்னும் சொல்லினின்றும் போரைக் குறிக்குஞ் சொற்கள் பிறந்துள்ளன.

சமம்=போர். "ஒளிறுவா ளருஞ்சம முருக்கி" (புறம். 382).

சமம்—சமர்=போர் (திவா.) ஒ. நோ: களம்—களர்.

சமர்த்தல்=பொருதல். "சமர்க்க வல்லாயேல்" (விநாயகபு. (74 : 249).

போருக்கு வலிமை வேண்டுமாதலின், போரென்னும் சொல் வலிமை அல்லது திறமையையும் உணர்த்தும்.

போர்=வலிமை. சமர்த்து=திறமை.

சமர்—சமரம்=போர். "இலங்கையி லெழுந்த சமரமும்" (சிலப். 26 : 238).

சமர்—அமர்=போர். "ஆரமர் ஓட்டலும்" (தொல். 1006).

சமரம்—அமரம்=போர். தெ. அமரமு.

அமர்த்தல்=மாறுபடுதல். "பேதைக் கமர்த்தன கண்" (குறள். 1084).

வடமொழியில் சமர என்னும் வடிவே உள்ளது. சமம், சமர், அமர், அமரம் என்னும் வடிவுகள் இல்லை.

வடவர் ஸமர என்னும் சொல்லை ஸம் +ரு என்று பிரித்து, ஒன்று கூடு, மாறுபடு, போர்செய் என்று பொருள் காட்டுவர்.]

ஸம்=கூட. ரு=சேர்.

சமர்த்து—ஸமர்த்த (th)

வடவர் ஸம்+அர்த்த என்று பகுத்து, ஒத்த அல்லது தகுந்த நோக்கங் கொள்ளுதல், தகுந்த நிலைமை பெறுதல், வலிமை யடைதல் என்று பொருள் பொருத்துவர்.

ஸம்=ஸம. அர்த்= அடை, பெறு.

சமையம்—ஸமய (அ. வே.).

அம்—அமை. அமைதல்=பொருந்துதல், நேர்தல், ஏற்படுதல்.

அமை—அமையம்=நேரும் வேளை, நேரம், வேளை.

"ஆனதோ ரமையந் தன்னில்" (கந்தபு. திருக்கல். 72).

அமை—சமை. சமைதல்=1. அமைதல். 2. பொருந்துதல்.

"என்றிவை சமையச் சொன்னான்" (கம்பரா. அங்கத. 8).

3. அணியம் (ஆயத்தம்) ஆதல்.

"வனஞ்செல்வதற்கே சமைந்தார்கள்" (கம்பரா. நகர்நீ. 143).

4. தகுதியாதல். 5. மணவாழ்க்கைக்குத் தகுதியாகப் பூப்படைதல். 6. உண்ணத் தகுதியாக வேதல்.

சமையல்=உணவு வேவித்தல். சமைந்தவள்=பூப்படைந்தவள். சமையம்=நேரம். சமையம்—சமயம்=1. ஆதன் (ஆன்மா) அல்லது மாந்தன் இறைவன் திருவடிகளை அல்லது வீட்டின்பத்தை அடையச் சமைவாகும் (தகுதியாகும்) நிலைமை. 2. அந்நிலைமைக்குரிய ஒழுக்க நெறி.

நேரத்தைக் குறிக்குஞ் சொல்வடிவுகளில் மகர ஐகாரமும், மதத்தைக் குறிக்குஞ் சொல்வடிவில் மகரமும், வரல்வேண்டுமென வேறுபாடறிக.

வடமொழியில் மகரமுள்ள வடிவேயுண்டு. அமையம் என்னும் மூலச் சொல்லும் அங்கில்லை.

வடவர் ஸமய என்னுஞ் சொல்லை ஸம்+அய என்று பகுத்து, உடன் வருதல், கூடுதல், இணங்குதல், உடன்படிக்கை, ஒப்பந்தம், ஏற்பாடு, ஒழுங்கு, மரபு, சட்டம், நெறி, மதம் என்று பொருள் வரிசைப்படுத்துவர்.

ஸம்=கூட. அய=இயக்கம், செலவு, வருகை. இது இய என்னும் தென்சொற் றிரிபாகும்.

சருக்கம்—ஸர்க (g)

சருக்கம்=நூற்பிரிவு.

வடவர் ஸ்ருஜ் என்னும் சொல்லொடு பொருத்திக் காட்டுவர். அதற்கு விடு, எறி, வீசு, வெளிவிடு என்ற பொருள்களே உண்டு.

சருக்கரை—சர்க்கரா

இது முன்னர் விளக்கப்பெற்றது.

வடமொழியில் சரள், சிறுகல், கூழாங்கல், கற்கண்டு என்று பொருள் தொடர்பு காட்டுவர்.

சரம்—ஸர

நீர்ப்பொருள் ஒரு துளையினின்று நேராக விரைந்து ஒழுகுதலை, சர் என்று பாய்கிறது என்று கூறுவது வழக்கம்.

ஒழுகல் நீட்சிக் கருத்தை யுணர்த்தும்.

"வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்
நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள". (தொல். 800).

சர்—சரம்=நீண்ட அல்லது நேரான மணிக்கோவை அல்லது மலர்த்தொடை.

சரஞ்சரமாய்த் தொங்குகிறது என்னும் வழக்கை நோக்குக.

சரக்கொன்றை=நேர் மலர்த்தொடையாகப் பூக்கும் கொன்றை.

வடவர் காட்டும் ஸ்ரு என்னும் சொற்கும் ஒழுகு, ஓடு என்பனவே பொருள்.

சல்லகம்—ஜல்லக (jh)=தாளக்கருவி.

சல்—சல்லகம்=சல்லென வொலிக்கும் தாளக்கருவி.

சல்லரி—ஜல்லரீ (jh)

சல்லரி=1. திமிலைப்பறை. "சல்லரி யாழ்முழவம்" (தேவா. 89 : 2).

2. கைத்தாளம்.

சலசல—ஜலஜ்ஜல (jh)=நீர்த்துளிகள் விழும் ஒலிக்குறிப்பு.

"சலசல மும்மதஞ் சொரிய" (சீவக. 82).

சலவை—க்ஷால

சல்—சலவை=துணிவெளுக்கை. தெ. சலவ (c), க. சலவெ. வ. க்ஷல்=அலசு, சலவை செய்.

சலி—சல் (c)

சல்—சலி. சலித்தல்=அசைதல், மனங்கலங்குதல், சோர்வடைதல், அருவருப்புக் கொள்ளுதல், சல்லடையாற் சலித்தல் அல்லது சுளகால் (முறத்தால்) தெள்ளியெடுத்தல்.

சலியடை—சல்லடை. க. ஜல்லிசு, தெ. ஜல்லிஞ்சு=சல்லடையாற் சலி.

அசைதல், நடுங்குதல், கலங்குதல், நெறி திறம்புதல் என்னும் பொருள்களே வடசொற்குள.

சவ்வு—சவி (ch)=தோல், மீந்தோல்.

சவ்—சவ்வு=மெல்லிய தோல், மூடுதோல்.

சவம்—சவ=பிணம்.

சா—சாவு—சாவம்—சவம்=பிணம்.

வடவர் சூ அல்லது ச்வி என்னும் சொல்லைக் காட்டி, ஊதிப் போனது என்று பொருட்காரணங் கூறுவர்.

ச்வி = ஊது, வீங்கு.

சவலை—சபல (e)

சவளுதல் = வளைதல், துவளுதல்.

சவள்—சவல்—சவலை = 1. மெலிவு, தாய்ப்பாலில்லாக் குழந்தையின் மெலிவு. ம. சவல, தெ. த்சவிலெ.

"சவலை மகவோ சிறிதும் அறிந்திடாதே" (தண்டலை. சத. 97).

2. தாய்ப்பாலின்றி மெலிந்த குழந்தை.

"சவலையாய் நாயேன் கழிந்து போவேனோ" (திருவாச. 50: 5).

சவலைப்பிள்ளை என்பது உலகவழக்கு. 3. உறுதியின்மை.

"சவலை நெஞ்சமே" (வைராக். சத. 3). 4 இரண்டாம் அடி குறைந்த அளவியல்வெண்பா.

வடவர் கம்ப் என்னும் சொல்லை மூலமாகக் காட்டுவர். அது குறிக்கும் பொருள் நடுக்கம்.

தமிழ்ச்சொற்கில்லாத பல பொருள்களை வடசொல் குறிக்கின்றது. அவை மீன், காற்று, இதள் (பாதரசம்), கருங்கடுகு, ஒருவகை விரை, ஒருவகைக் கல், ஒருபேய், திப்பிலி, நாவு, கற்பிலா மனைவி, சாருயம், திருமகள் என்பன.

சவை—சர்வ் (c)

சப்பு—சவை.

சவை—சபா (bh)

இது முன்னர்க் காட்டப்பெற்றது.

சளப்பு—ஜல்ப்

சளப்புதல் = அலப்புதல்.

சன்னம்—தனு

க. தெ. சன்ன. L tenuis.

சாணம்—சகண (ch, g)

சண்ணுதல் = நீக்குதல். "கீழாநெல்லி......காமாலைகளைச் சண்ணும்" (பதார்த்த. 300).

சண்—(சாண்)—சாணம், சாணி = மாட்டுப் பவ்வீ.

வடவர் பல்வேறு மலத்தையும் சாணியையும் குறிக்கும் சக்ருத் என்னும் சொல்லினின்று சக்ன் என்றொரு மூலத்தை வலிந்து திரிப்பர்.

சாணை—சாண, சான.

சவள்—சாள். சாளுதல்=வளைதல். சாள்—சாய். சாய்தல்= வளைதல்.

சாள்—சாளை=வட்டமான குடிசை. சாளை—சாணை=1. வட்டமான சாணைக்கல். ம. சாணக்கல்லு, க., து. சாணெக்கல்லு. 2. வட்டமான புளியடை. 3. வட்டமான பணியாரவகை, 4. வட்டமான கதிர்ச் சூடு.

வடவர் சோ (தீட்டு) என்னுஞ் சொல்லை மூலமாகக் காட்டுவர். அது சாணைக்கல் ஒன்றற்குத்தான் சிறிது பொருந்தும்.

சாத்து—ஸார்த்த

சார்—சார்த்து—சாத்து=1. கூட்டம்.

"சுரிவளைச் சாத்து நிறைமதி தவழும்" (கல்லா. 63: 32). 2. வணிகர்கூட்டம்.

"சாத்தொடு போந்து தனித்துய ருழந்தேன்" (சிலப். 11: 190):

சாத்தன்—சாஸ்தா

சாத்து-சாத்தன்=வணிகச் சாத்தினர் வணங்குந் தெய்வம்.

பெருஞ்சாலை வழிகளிற் சாத்தன் (ஐயனார்) கோவிலிருப்பதையும், அங்குப் பொதிசுமத்தற்கேற்ற குதிரைகள் போன்ற உருவங்கள் செய்து வைத்திருப்பதையும், நோக்குக.

பண்டைக்காலத்திற் பெரும்பாலும் வணிகரே சாத்தன் என்னும் பெயர்தாங்கியிருந்தனர்.

எ—டு: கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார்.

சாந்து--சந்தன (c)

சார்—சார்த்து—சாத்து. சாத்துதல்=1. பூசுதல் (பிங்.). 2. திருமண் காப்பிடுதல்.

"தன்திரு நாமத்தைத் தானுஞ்சாத்தியே" (கம்பரா. கடிமண. 49). 3. சந்தனம் பூசுதல்.

சாத்தியருளச் சந்தன முக்கசும் (S I I. III. 187)

சாத்து—சாந்து=1. சுண்ணாம்புச் சேறு. 2. அரைத்த சந்தனம்

"புலர்சாந்தின்...வியன்மார்ப" (புறம். 3. சந்தனமரம். ம. சாந்து.

"சாந்து சாய் தடங்கள்" (கம்பரா. வரைக்காட்சி. 44).

4. நெற்றிப் பொட்டுப் பசை. க. சாது.
5. எட்பசை.

"வெள்ளெட் சாந்து" (புறம். 246).

சாந்து—சாந்தம்=சந்தனம். "சாந்த நறும்புகை" (ஐங்குறு. 258).

சாந்து—சந்து=சந்தன மரம் "வேரியுஞ் சந்தும்" (திருக்கோ. 301).

சந்து—சந்தனம்.

சாமை—ச்யாமா. சமை—சாமை "சக்கிலியப் பெண்ணும் சாமைக் கதிரும் சமைந்தால் தெரியும்." என்பது பழமொழி.
வடவர் கரியது என்று பொருட்காரணங் கூறுவர்.

சாமை கரிதாயின்மை காண்க.

சாய்—சீ (இ. வே.)

சாய்தல்=படுத்தல்.

"திருக்கையிலே சாயு மித்தனை" (ஈடு, 2 : 7 : 5).

சாய்கை=படுக்கை.

வ. சய=படுக்கை, தூக்கம். சயன=படுக்கை, தூக்கம்.

சாயுங்காலம்—சாயம் (ஸ)—இ. வே.

கதிரவன் சாயுங்காலத்தைப் பொழுது சாய்கிற வேளை என்பது இன்றும் பெருவழக்கான உலக வழக்கு.

ஆங்கிலரும் decline என்று கூறுதல் காண்க.

சாயுங்காலம்—சாயங்காலம்—சாய்ங்காலம். இது வெளிப்படை. வடவர் ஸோ என்பதை மூலமாகக் காட்டுவர். ஸோ=அழி, கொல், முடி. சாயம்=நாள்முடிவு. இங்ஙனம் வடசொல்லாகக் காட்டுவதற்கே, சாயுங்காலம் என்னும் வடிவைச் சென்னைப் ப. க. க. அகர முதலியிற் காட்டாது விட்டிருக்கின்றனர்.

சாயை—சாயா (ch)—இ. வே.

சாய்—சாயை=நிழல். நிழல் சாய்கிறது என்பதே வழக்கு.
கி. ஸ்கிய=நிழல்.

சாலை—சாலா (அ. வே.)

சாலுதல் = நிறைதல், கூடுதல். சால்—சாலை = கூடம், பட்டறை, தொழிலகம், அலுவலகம், அகன்ற பாதை.

சாவி—சப்

சா—சாவி (பி. வி.). சாவித்தல் = அங்கதம் பாடி அல்லது சினந்துரைத்துச் சாகப் பண்ணுதல், சாவு குறித்த சொற்களைச் சொல்லித் திட்டுதல்.

வாழ்த்து (வாழவை) என்னும் பிறவினைக்கு எதிராகச் சாவி என்னும் சொல்லே பொருத்தமாயிருத்தல் காண்க. இனி ஒருவன் கடுமையாகத் திட்டும்போது, சாவிக்கிறான் என்று கூறும் உலக வழக்கையும் நோக்குக.

சாவி—சாவம்—சாப (வ.).

சாறு—ஸார (இ. வே.).

தெள்—தெறு—தெற்று = தெளிவு. தெற்றென = தெளிவாக.

தெறு—தேறு. தேறுதல் = தெளிதல், துணிதல். தெ. தேரு.

தேறு—தேறல் = தெளிவு, தெளிந்த கள், தேன், தெளிந்த சாறு (சாரம்). "கரும்பினின் றேறலை" (திருவாச. 5 : 38).

தேறு—சேறு = 1. கள். "சேறுபட்ட தசும்பும்" (புறம். 379 : 18).

2. தேன். "சேறுபடு மலர்சிந்த" (சீவக. 426).

3. பாகு. "கரும்பின் றீஞ்சேறு" (பதிற்றுப். 75 : 6).

4. இனிமை. "தெண்ணீர்ப் பசுங்காய் சேறுகொள முற்ற" (நெடுநல். 26).

5. மணிநீரோட்டம்.

6. சாறு (சாரம்). "சேறு சேர்கனி" (சூளா. சுயம். 66).

ஒ நோ: தாறு—சாறு = காய்கனிக் குலை (பிங்.).

சேறு—சாறு = 1. கள் (பிங்.).

2. நறுமணப் பண்டங்கள் ஊறின நீர்.

"சாறுஞ் சேறு நெய்யு மலரும்" (பரிபா. 6 : 41).

3. மிளகுநீர்.

"சாற்றிலே கலந்த சோறு" (அருட்பா. 4, அவாவறு. 2).

க. சாறு, தெ. து. சாரு.

4. இலைகனி முதலியவற்றின் நீர் (சாரம்).

"கரும்பூர்ந்த சாறு" (நாலடி. 34). ம., து. சாரு.

சிச்சிலி—தித்திரி (வே.)

சிச்சிலி=1. மீல்கொத்தி (சீவக. 2199, உரை).
2. கதுவாலி வகை.
"அருமறையைச் சிச்சிலிபண் டருந்தத் தேடும்" (திருமுறைகண். 17).

சித்து—சித் (c)—இ. வே.

செத்தல்=1. கருதுதல்.
"அரவுநீ ருணல்செத்து" (கலித். 45).
2. அறிதல்.
"துதிக்கா லன்னந் துணை செத்து" (ஐங். 106).
செ—செத்து=கருத்து, அறிவு. செத்து—சித்து=கருத்து, அறிவு.
ஒ. நோ: செந்தூரம்—சிந்தூரம்.
சித்து—சித்தன்=அறிவன், முக்கால அறிவுள்ள முனிவன்.
"மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்" (தொல். 1021).
சித்து—சித்தம்=கருத்து, மனம், அறிவு, ஓதி, (ஞானம்).
சித்தம்—சிதம்=மனம், அறிவு, ஓதி.

வடவர் சி (ci) என்றொரு செயற்கை மூலங்காட்டுவர். அது செ என்பதன் திரிபே. சித்=கருது, அறி, காண், கவனி.

சித்தம்—சித்த (c).

வடவர் சித்தன் என்னும் சொல்லை, ஸாத் (dh) என்பதன் திரிபான ஸித் (dh) என்பதனொடு தொடர்புபடுத்தி, ஸித்த (siddha) என்றும், சித்தியை ஸித்தி (siddhi) என்றும், காட்டுவர்.

ஸித்=முடி, கைகூடு. ஸித்தி=முடிவு, முடிபு, கைகூடல், பேறு. ஸித்த=அரும்பேறு பெற்றவன்.

சித்தன் ஆற்றலைத் தமிழிற் சித்து என்பதே மரபு. சித்து விளையாடல் என்பது உலக வழக்கு. கலம்பக வுறுப்பும் சித்து என்றே பெயர் பெற்றிருத்தல் காண்க.

சித்திரம்—சித்ர (c)—இ. வே.

செத்தல்=ஒத்தல். செத்து=ஒத்து, போல (தொல். பொ. 286, உரை).

செ+திரம்=செத்திரம்—சித்திரம்=ஒப்பு, ஓவியம், பலவண்ணம், திறமை, புதுமை.

'திரம்' ஒரு தொழிற்பெயரீறு.

எ-டு: மாத்திரம், மோட்டிரம்—மோத்திரம்—மூத்திரம்.

சித்திரக் கம்மம்=ஓவிய வேலைப்பாடு.

"செந்நூல் நிணந்த சித்திரக் கம்மத்து" (பெருங். உஞ்சைக். 35 : 98).

சித்திரக்கம்மி=ஓவியத் தொழிலமைந்த ஆடைவகை (சிலப். 14 : 108, உரை).

சித்திரச் சோறு=பலநிறச் சோறு.

"சித்திரச் சோற்றிற் செருக்கினேன்" (அருட்பா 6, அவா வறுப்பு. 7).

சித்திரப் படம்=பல வண்ண அல்லது பூத்தொழிலமைந்த உறை.

"சித்திரப் படத்துட் புக்கு" (சிலப். 7 : 1).

சித்திரப் பாலடை, சித்திரப் பாலை என்பன பூண்டு வகைகள்.

சித்திரப் புணர்ப்பு=வல்லெழுத்தை மெல்லெழுத்தாகக் கொள்ளும் பண்ணீர்மை (சிலப். 3 : 56, உரை).

சித்திரமாடம்=ஓவியம் வரைந்த மாளிகை.

"பாண்டியன் சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன்" (புறம். 59).

சித்திரவண்ணம்=நெடிலுங் குறிலும் விரவிய ஓசை.

"சித்திர வண்ணம்
நெடியவுங் குறியவும் நேர்ந்துடன் வருமே." தொல். (1478).

செய்தல்=ஒத்தல்.

"வேனிரை செய்த கண்ணி" (சீவக. 2490).

செள்—செறு—செறி. செள்—செண்டு—செண்டை=இரட்டை. செள்—செய்—செ. ஒ. நோ: பொய்—பொ. பொத்தல்= துளைத்தல்.

சித்திரம்—சித்திரி. சித்திரித்தல்=சித்திரம் வரைதல், சுவடித்தல், வண்ணித்துப் பேசுதல்.

வடவர் சித்ர என்பதைச் சித் என்பதன் திரிபாகக் கொண்டு, தெளிவாய்த் தெரிதல், விளக்கமான நிறம், வண்ண வேறுபாடு, வண்ணப்படம் என்று வலிந்து பொருத்திக் காட்டுவர். சித்திரித்தல் என்னும் வினை வடமொழியிலில்லை.

சிதம்பரம்—சிதம்பர (e)

சிற்றம்பலம்—(சித்தம்பலம்)—(சித்தம்பரம்)—சிதம்பரம்.

தில்லையிற் சிற்றம்பலம் பேரம்பலம் என ஈரம்பலங்களுண்டு. அவற்றுள் சிற்றம்பலமே இறைவன் திருக்கோயில்.

"*சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும்*" (*திருக்கோ.*).

வடவர் திரிபு வடிவை இயல்பு வடிவாகக் கொண்டு அறிவுவெளி (ஞானகாசம்) என்று பொருள் புணர்க்க முயல்வர். அம்பலம் (மன்றம்) வேறு; அம்பரம் (வானம்) வேறு. மேலும், சித், அம்பர என்னும் இரு வடசொற்களும் தென்சொற்றிரிபே என்பதை அறிக. இவை முன்னரே காட்டப்பெற்றன.

சிதை—சித் (chid)—இ. வே.

சிதைத்தல்=பிரித்தல், குலைத்தல், பிய்த்தல், கெடுத்தல், வெட்டுதல், அழித்தல்.

சிதர்த்தல்=பிரித்தல், குலைத்தல், வெட்டுதல்.

சிந்து—ஸிந்து (dh)—இ. வே.

சிந்துதல்=துளி சிதறுதல், நீர் தெளித்தல், நீர் ஒழுகுதல்.

சிந்து=1. நீர். (பிங்.). 2. ஆறு (பிங்.). 3. கடல்.

"*தேர்மிசைச் சென்றதோர் சிந்து*" (*கம்பரா. ஆற்றுப். 32*).

ஆரியர் வருமுன்பே தமிழரும் திரவிடரும் பனிமலைவரை பரவியிருந்ததால், சிந்தாற்றைத் தமிழர் முன்னரே அறிந்திருத்தல் வேண்டும்.

வடவர் ஸித் (dh) என்னுஞ் சொல்லை மூலமாக ஐயுற்றுக் கூறுவர். ஸித்=செல்.

சிந்தூரம்—ஸிந்தூர

செந்தூள்=செம்பொடி, செந்நீறு.

செந்தூள்—செந்தூளம்—செந்தூரம்—சிந்தூரம்=1. செந்நீறு.

"*சிந்தூரத் தாது கொடுத்திலரேல்*" (*உபதேசகா. உருத்திரா. 67*).

2. *செம்பொடி.* "*மதகரியைச் சிந்தூர மப்பியபோல்*" (*கம்பரா. மிதிலைக். 151*).

3. *சிவப்பு (பிங்.). 4. செங்குடை. (பிங்.). 5. செம்புள்ளியுள்ள யானைமுகம் 6. யானை. (பிங்). 7. செம்மலர் பூக்கும் வெட்சி மரம். 8. சேங்கொட்டை. 9. செவ்வீயம்.*

சிந்தாரம்—சிந்துரம்=1. சிவப்பு. "சிந்துரச் சேவடியான்" (திருவாச. 18 : 5).

2. செம்பொடி. "சிந்துரமிலங்கத் தன் திருநெற்றிமேல்" (திவ். பெரியாழ். 3 : 4 : 6).

3. நெற்றிச் செம்பொட்டு. "சிந்துர வாதித்த வித்தாரமுடையார்" (கந்தரந். 5).

4. புகர்முக யானை. 5. புளியமரம்.

புகர்முகம் (செம்புள்ளியுள்ள முகம்) என்பது சினையாகு பெயராய் யானையைக் குறிப்பது போன்றே, சிந்தாரம், சிந்துரம் என்னும் சொற்களும் யானையைக் குறிக்கும்.

சிந்தூரப்பொட்டு=குங்குமப்பொட்டு.

சிந்தம், சிந்தகம், சிந்துரம், சிந்தாரம் என்பன புளியின் செந்நிறம் பற்றிப் புளியமரத்தையுங் குறிக்கும்.

சிந்துரம்—சிந்திடீ (c), திந்திட=புளியமரம்.

சிந்தூரித்தல்=தாதுக்களை (உலோகங்களை)ச் சிந்தூரமாக்குதல். "சுருக்குக் கொடுத்ததைச் சிந்தூரித்து" (பணவிடு. 230).

சிந்தூரி—சிந்துரி.

இவ்வினை வடிவங்கள் வடமொழியிலில்லை.

வடவர் காட்டும் மூலம் ஸ்யந்த் (அல்லது ஸ்யத்)=இயங்கு, ஒழுகு, பாய், ஓடு.

சென்னைப் ப. க. க. த. அ. சிந்தம் என்னும் தென்சொற்குச் சிஞ்சா (cincā=புளியமரம்) என்பதை மூலமாகக் காட்டும்.

சில்லி—ஜில்லி (jh)=சிள்வண்டு

சில்லிடுதல்=ஒலித்தல். சில்லெனல்=உச்சமாகக் கூர்ந்தொலித்தல். "சில்லி சில்லென் றொல்லறாத" (திவ். பெரியதி. 1:7:9). சில்=சிள். சில்—சில்லி—சில்லிகை. சில்—சில்லை. (பிங்.). சில்லுறு—சில்லூறு=சிள்வண்டு.

சில்லிகை—ஜில்லிகா (jh)=சிள்வண்டு.

சிவன்—சிவ

சிவத்தல்=செந்நிறமாயிருத்தல். சிவ—சிவம்—சிவன்=சிவந்தவன்.

சிவன் குறிஞ்சிநிலத் தெய்வமான சேயோன் கூறுதலால். சிவன் எனப் பெற்றான். அந்திவண்ணன், அழல்வண்ணன்,

செந்தீ வண்ணன், மாணிக்கக் கூத்தன் முதலிய பெயர்களை நோக்குக.

வடவர் சிவன் அழிப்புத் தொழில் திருமேனி என்று கொண்டு, சிவன் என்னும் சொற்குச் சீ (படு) என்பதை மூலமாகக் காட்டி, எல்லாப் பொருள்களும் ஒடுங்கும் இடமானவன் என்று பொருந்தப் பொய்த்தலாகப் பொருள் கூறுவர்.

சிலர், மங்கலமானவன், நன்மை செய்பவன் என்று பொருள் கூறுவர்.

சிவன் தமிழ்த் தெய்வமாதலானும், நெருப்பின் கூருகக் கொள்ளப்படுதலானும், முத்தொழில் முதல்வன் என்பதே தமிழ்க் கொள்கையாதலானும், குமரிக் கண்டத்திலேயே சிவ வணக்கம் தொடங்கிவிட்டமையானும், ஆரியவழிப் பொருட்காரணம் ஒரு சிறிதும் பொருந்தா.

சிவன்—சிவை (மலைமகள்).

சிவை—சிவா

சிவிகை—சிவிகா, சிபிகா.

சிவிதல் = சுருங்குதல். *சிவிந்தபழம்* = முற்றுது சுருங்கிப்போன பழம். *சிவிங்கி* = சிறுத்தைப் புலி.

சிவிகை = இருவர் தூக்கும் சிறிய மூடு பல்லக்கு.

சிற்பம்—ஸ்வல்ப

சிற்—சிற்பு—சிற்பம் = மிகக் கொஞ்சம்.

" சிற்பங்கொள் பகலென" (கம்பரா. சடாயுகாண்: 8).

சீகாழி—ஸ்ரீகாலீ

திரு—ஸ்ரீ. காளி—காலீ. *திருக்காளி—திருக்காழி—ஸ்ரீகாழி—சீகாழி.*

சிலர் சீர்காழி—சீகாழி என்பர்.

சீம (தெ.)—ஸீமிக = எறும்பு

சீர்த்தி—கீர்த்தி (அ. வே.).

சீர் = 1. பெருமை. "சீர்கெழு கொடியும்" (புறம். 1).

2. மதிப்பு. "வணக்கருஞ் சீர்...மன்னன்" (பு. வெ. 9 : 22).

3. புகழ். "ஆறுச்சீர்க் கூடலுள்" (கலித். 30).

சீர்த்தல் = சிறத்தல். "பொருடன்னிற் சீர்க்கத் தருமேல்" (திவ். திருவாய். 8:7: 6).

சீர்—சீர்த்தி=மிகுபுகழ். "சீர்த்தி மிகுபுகழ்." (தொல். சொல். 313).

சீர்த்தி—கீர்த்தி=புகழ். "விண்சுமந்த கீர்த்தி" (திருவாச.8:8). கீர்த்திமான்=புகழ்பெற்றவன். கீர்த்தி—கீர்த்திமை

"அரக்கனைக் கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடி" (திவ். திருப்பா. 13).

கீர்த்தித்தல்=புகழ்தல். "தான்றன்னைக் கீர்த்தித்த மாயன்" (திவ் திருவாய். 7: 9: 2).

வ. கீர்த்=புகழ் (ஏ. வி.—அ. வே. கீர்த்—கீர்த்தி—இ. வே.

இதற்குக் க்ரு (2) என்னும் சொல்லை மூலமாகக் கூறி, காரு=புகழ்வோன், பாவலன் (இ. வே.) என்று எடுத்துக் காட்டுவர்.

சீரகம்—ஜீரக

சீர்—சீரம்=சீரகம் (மு. அ.). சீரம்—சீரகம்.

உலகில் முதன்முதற் சிறந்த முறையிற் சமையல் தொழில் தொடங்கியதும் அதற்குச் சீரகத்தைப் பயன்படுத்தியதும் தமிழகமே.

"சிறுபிள்ளை யில்லாத வீடும் சீரகமில்லாத கறியும் செவ்வையாயிரா." என்பது தொன்றுதொட்டு வழங்கும் பழமொழி.

சீரகக்கோரை, சீரகச்சம்பா, சீரக வள்ளி என்பன ஒப்புமை பற்றிப் பெயர் பெற்ற நிலத்திணை (தாவர) வகைகள்.

பொன்னளவையிற் சீரகம் என்பது ஓர் அளவு.
5 கடுகு=1 சீரகம்.
5 சீரகம்=1 நெல்.

"அளவிற்கு நிறையிற்கு மொழிமுத லாகி
யுளவெனப் பட்ட வொன்பதிற் றெழுத்தே
அவைதாம்
கசதப வென்று நமவ வென்று
அகர உகரமோ டவையென மொழிப."

என்னுந் தொல்காப்பிய எழுத்ததிகார நூற்பா (170) வுரையில், "கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை" என்று இளம்பூரணரும்; "கழஞ்சு, சீரகம், தொடி. பலம், நிறை, மா, வரை, அந்தை இவை நிறை" ,என்று நச்சினார்க்கினியரும் கூறி யிருத்தலையும், நோக்குக. செரி—(செரியகம்)—சீரகம்.

வடவர் மூலங்காட்டும் வகை:—

ஜீரக=ஜீரண. ஜ்ரு—ஜீரண. ஜ்ரு=கிழமாக்கு, கட்டுக்குலை, கரை, செரிக்கச் செய்.

ஜரு என்பது கிழ என்னும் தென்சொற் றிரிபே. கிழம் என்னும் சொல்லைப் பார்க்க.

சீரை—சீர (c)

சிரைத்தல்=1. மயிர் கழித்தல். ம. சிரெ, க கெரெ.

2. செதுக்குதல். ''புற்சிரைத்தல் செய்ய மாட்டீர் களோ'' (ஈடு, 3: 9: 6).

சிரை—சீரை=1. செதுக்கப்பட்ட மரப்பட்டை, மரவுரி. ''சீரை தைஇய வுடுக்கையர்'' (திருமுரு. 126).

2. சீலை (பிங்.). சீரை—சீலை—சேலை.

வடவர் காட்டும் மூலம் சி (ci). சி=அடுக்கு, அடுக்கிக் கட்டு.

சுக்கு+சுஷ்க

உள்—சுள். சுள்ளெனல்=சுடுதல். சுள்—சுள்ளை=பானைசட்டியும் செங்கலும் சுடுமிடம். சுள்ளை—சூளை.

சுள்—சுடு—சுடல்—சுடலை=சுடுகாடு.

சுள்—சுட்கு. சுட்குதல்=காய்தல். வறளுதல். சுட்கம்—சுட்கு—சுக்கு. சுக்குதல்=உலர்தல்.

சுக்கு=காய்ந்த இஞ்சி (திவா.).

சுட்கம்—சுஷ்க

சுள் என்று வடமொழியில் சுஷ் என்று திரியும். ஒ.நோ: உள்—உஷ்.

சுஷ்க=உலர்ந்த பொருள்.

சுக்குச் சுக்காய்க் காய்ந்து போய்விட்டது என்னும் வழக்கு தமிழில் இருந்தாலும், சுக்கு என்பது தமிழிற் சிறப்பாய் உலர்ந்த இஞ்சியைத்தான் குறிக்கும். வடமொழியிலோ அது உலர்ந்த பொருள்கட் கெல்லாம் பொதுவாகும்.

சுண்டம்—சுண்டா=கள்

சுள்—சுண்டு—சுண்டம்=கள். சுண்டு—சுண்டை=கள். சுண்டுதல்=சுண்டக்காய்ச்சுதல், சுடுவதுபோற் கடுமையா யிருத்தல்.

சுண்டி—சுண்டி (ṭh)

சுள்—சுண்டு. சுண்டுதல்=காய்தல், நீர்வற்றுதல். சுண்டு—சுண்டி=சுக்கு.

சுண்டு—சுண்ட் (ṭh)

இதுவே மேலதன் மூலம். இவற்றிற்கு வடமொழியில் மூலம் இல்லை.

சுண்ணம்—சூர்ண (c)

சுள்—சுள்ளை—சூளை. சுள்—சுண்—சுண்ணம்=நீற்றுதல், நீறு, சுண்ணாம்பு, பொடி, பூந்தாது.

"தாழைக்கொழுமட லவிழ்ந்த சுண்ணம்" (மணி. 4: 18)

சுண்ணம்—சுண்ணம்பு—சுண்ணாம்பு.

சுண்ணித்தல்=நீற்றுதல் (சங். அ.).

சுண்ணகம்—சூர்ணக (c)

சுண்ணம்—சுண்ணகம்=நீறு, பொடி.

வடவர் காட்டும் மூலம் சர்வ் (c) என்பதே.

சர்வ்=பல்லினால் அரை, மெல், சவை, சுவை.

இது சவை என்னும் தென்சொற் றிரிபே.

சுதை—ஸுதா (dh)=சுண்ணாம்புச் சாந்து.

சுல்—சுல்லு=வெள்ளி (சூடா. வெண்பொன்).

சுல்—(சுலை)—சுதை=1. வெண்மை (சூடா.)

2. வானவெள்ளி (அக. நி.) 3. மின்னல் (சங்.) அக).
4. சிப்பிச் சுண்ணாம்பு.

"வெள்ளி வெண்சுதை யிழுகிய மாடத்து" (மணி. 6: 43).

5. பால். "சுதைக்க ணுரையைப் பொருவு தூசு" (கம்பரா. வரைக். 16).

6. அமிழ்து "சுதையனைய வெண்சோறு" (கம்பரா. குலமுறை. 18).

இங்குக் குறிக்கப்பட்டுள்ள பொருள்களெல்லாம், வெண்மையாய் இருத்தலை நோக்குக. ல—த, போலி. ஒ. நோ: சலங்கை—சதங்கை, மெல்—மெது.

மா. வி. அ. காட்டியுள்ள மூலமும் பொருள் வரிசையும் வருமாறு:

ஸு—தா (dh)=ஸு+தே (dhe)=நற்குடிப்பு, தேவர் குடிப்பு, அமிழ்து, தேன், சாறு, நீர், பால், வெள்ளை யடிப்பு, பூச்சு, சாந்து, சுதை.

ஸு=நல்ல. தே=உறிஞ்சு, குடி.

சும—க்ஷம் = பொறு.

பொறுத்தல் = சுமத்தல், தாங்குதல், தாளுதல், மன்னித்தல், இடந்தருதல். இளக்காரங் கொடுத்தல், துன்பந் தாங்குதல் (பொறை), அமைதியாய்க் காத்திருத்தல் (பொறுமை).

சும, பொறு என்பவை ஒருபொருட் சொற்கள். பொறு என்னும் சொல்லின் பொருள்களே க்ஷம் என்னும் சொற்கும் உரியன.

உம்—உம்பு—உம்பர்—மேல், மேலிடம். உச்சி உம்—சும்—(சுமை)—சிமை = உச்சி, குடுமி. சும்—சும. சுமத்தல் = மேற்கொள்ளுதல், தாங்குதல். சும்—சுமல்—சுவல் = சுமக்குந் தோட்பட்டை, மூதுகு, பிடரி, குதிரையின் பிடரி மயிர், உயர்ந்தமேடு. "வேங்கைச் செஞ்சுவல்" (புறம். 120).

வடமொழியிற் க்ஷம் என்னுஞ் சொற்கு மூலமில்லை.

சுர—ஸ்ரு (இ. வே.)

சுரத்தல் = ஊறுதல், ஒழுகுதல், சொரிதல்.

சுள்—சுர்—சுரி. சுரித்தல் = துளைத்தல் சுரி = துளை. சுரை = உட்டுளை. சுர் + சுர: சுரத்தல் = உள்ளிருந்தொழுகுதல்.

சுள்—சுன்—சுனை = ஊற்று, ஊற்று நீர்நிலை.

சுரப்பு = ஊற்று.

சுரங்கம்—ஸுரங்கா

சுர்—(சுரங்கு)—சுரங்கம். ஒ. நோ: அர்—அரங்கு—அரங்கம்.

சுரங்கம் = பாறையுடைக்க வெடி மருந்து வைக்கும் குழி, கள்வரிடுங் கன்னம், கீழ்நில வழி, குடைவரைப் பாதை (tunnel).

சுரப்பி—ஸுரபி (bh)

சுர—சுரப்பு—சுரப்பி = பால் மிகுதியாய்ச் சுரக்கும் ஆவு. குடஞ் சுட்டு. சுரப்பு = பால் சுரத்தல்.

சுரப்பி—சுரபி.

வடவர் ஸு + ரப் (bh) எனப் பகுத்து, 'இனிதாய்த் தாக்குதல்' ("affecting pleasantly") என்று வேர்ப் பொருளுரைப்பர். இருக்கு வேதத்தில், நறுமணங் கமழ்தல், வசியஞ் செய்தல், இன்புறுத்தல், அழகாயிருத்தல் என்னும் பொருள்களிலேயே சுரபி என்னும் சொல் ஆளப் பெற்றிருப்பதாகவும், பிற்கால வடநூல்களிலேயே அது காம தேனு என்னும் ஒரு கற்பனை ஆவைக் குறித்ததாகவும், மா. வி. அகரமுதலியினின்று அறியக் கிடக்கின்றது. ஸு = நன்றாய். ர = பற்று, தழுவு.

சுரம்—ஜ்வர

சுள்—சுர்—சுரம்=காய்ச்சல், சுடும் பாலைநிலம். "சுரமென மொழியினும்" (தொல். பொ. 216).

"பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானல்"
(தனிப்பாடல்).

"அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையாற்

கடியவே கனங்குழாய் காடென்றார்" (கலித். 10).
என்பவை பாலைநில வெம்மையை யுணர்த்தும்.

சுரம் என்னும் சொல் முதுவேனிற் காலத்திற் கடுமையாய்ச் சுடும் பாலை நிலத்தைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்டமையால், சுர நோயைக் காய்ச்சல் என்றே சொல்ல வேண்டும்.

ஜ்வர என்னும் சொல் காய்ச்சலை மட்டுங் குறிக்கும்; பாலை நிலத்தைக் குறிக்காது.

சுரிகை—சுரிகா (ch)

சுர்—சுருக்கு. சுறுக்கெனல்=குத்துதற்குறிப்பு. சுர்—சுரி. சுரித்தல்=துளைத்தல்.

சுரி—சுரிகை=1. உடைவாள்.
சுரிகை நுழைந்த சுற்றுவீங்கு செறிவுடை (பெரும்பாண். 73).
2. கத்தி.

வடமொழியில் சுரிகா என்பதன் அடி 'சுர்'. ஆயின், மா. வி. அ. க்ஷுர் என்பதை மூலமாகக் காட்டும். இவையிரண்டும் சுரி என்பதன் திரிபே.

சுரி—சூரி=ஓலையில் துளையிடுங் கருவி, சுரிகை.
ம., க., து. சூரி, தெ. த்சூரி.
சூரிக்கத்தி=சூரியுள்ள கத்தி. க. சூரிக்கத்தி, தெ. த்சூரிக் கத்தி.
சூரி என்பது உலக வழக்கு; சுரிகை என்பது செய்யுள் வழக்கு.
ஏட்டில் துளையிடுங் கருவியைச் சுரியூசி என்பது யாழ்ப்பாண வழக்கு.

சுருங்கை—ஸுருங்கா

சுருங்குதல்=ஒடுங்குதல். சுருங்கு=(ஒடுங்கிய) சாய்கடை (பிங்.). இனி, உட்டுளையான வழி என்றுமாம்.

சுருங்கு—சுருங்கை = 1. நுழைவாயில் (பிங்.).

2. சிறுசாளரம்.

" மாடமேற் சுருங்கையிலிருந்து'' (சீகாளத். பு. நக்கீர. 30).

3. நீர் செல்லுங் கரந்துபடை.

" பெருங்குள மருங்கிற் சுருங்கைச் சிறுவழி" (மணி. 12 : 79).

4. கோட்டையிற் கள்ளவழி (சூடா.).

5. தப்பியோடும் கீழ்நில நெடுவழி.

கீழ்நில வழியைக் குறிக்கும்போது, சுரங்கம் என்பது உலக வழக்கு.

சுல்லி — சுல்ல (c) = அடுப்பு.

சுல் = சுள். சுல்—சுல்லி = 1. அடுப்பு (திவா.). 2. மடைப் பள்ளி (இலக். அக).

சுவணம்—ஸுபர்ண

உ—உவண் = மேலிடம் (சீவக. 2853). உவணை = தேவருலகம். " ஆகநீத் துவணைமே லுறைந்தான்" (சேதுபு. விதூம. 54). உவண்—உவணம் = 1. உயர்ச்சி (திவா.).

2. கலுழன் (கருடன்).

" சிறையுவண மூர்ந்தாய்" (திவ். இயற். 1 : 22).

3. கழுகு (திவா.).

கலுழனுங் கழுகும் உயரப் பறக்கும் பருந்தினத்தைச் சேர்ந்தனவாதலின், அப்பெயர் பெற்றன.

" உயரவுயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா ?' என்னும் பழமொழியை நோக்குக.

உவணமுயர்த்தோன் = கலுழக் கொடியனுகிய திருமால்.

உவணர் = கலுழர். "உவணரோ டியக்கர்" (கந்தபு. அயனைச் சிறை நீ. 2).

உவணவூர்தி = "கலுழனை ஊர்தியாகக் கொண்ட திருமால்" (தணிகைப்பு. அகத். 370).

உவணன் = கலுழன் (திவா.). உவணம்—சுவணம் = கலுழன் (சங். அக.).

ஒ. நோ : உதை—சுதை, உருள்—சுருள், உழல்—சுழல்.

வடவர் சுவணம் என்பதை ஸுபர்ண என்று திரித்தும், ஸு + பர்ண என்று பிரித்தும், அழகிய இலை, அழகிய இலையுடையது இலைபோன்ற அழகிய சிறகுகளையுடையது, பெரும்பறவை,

கலுழன் என்று பொருள் விரித்தும், தம் ஏமாற்றுத் திறத்தின் பேரெல்லையைக் காட்டியுள்ளனர். ஸு = நல்ல. பர்ண = இலை.

சுவண்டை—ஸ்வத் (இ. வே.)

சுவை—சுவடு = சுவை, இனிமை. "அடிமையிற் சுவடறிந்த" (ஈடு, 2 : 6 : 5).

சுவடு—சுவண்டு—சுவண்டை = சுவை, இன்சுவை.

சுவண்டையாய்த் தின்னத் திரிகிறான் என்னும் உலக வழக்கைக் காண்க.

மா. வி. அ. பொருந்தப் பொய்த்தல் முறையில் ஸு + அத் என்பது மூலமாயிருக்கலாம் என்னும். ஸு = நன்றாய். அத் = உண்.

சுழிமுனை — ஸுஷும்ஞ

சுழிமுனை (திருப்பு. 732) = பதினாடியுள் இடைக்கும் பின் கலைக்கும் இடையிலுள்ளது.

சுள்—க்ஷுல்ல = சிறு.

சுள்—சிறுமை (இலக். அக.). சுள்ளாணி = சிறிய ஆணி. (மலைபடு. 27, உரை).

சுள்ளல் = மென்மை, மெலிவு. சுள்—சுள்ளி = சிறுமை.

"சுள்ளி வெள்ளிப் பற்கொண்டும்" (கம்பரா. முதற்போ. 139).

சுள்—சுஷ் = உலர்.

இது முன்னரே விளக்கப்பெற்றது.

சுறுக்கு—ஸ்ராக்

சுறுக்கு = விரைவு. சுறுக்காய் = விரைவாய்,

சூடம்—சூட (c)

சூடுதல் = 1. தலையிலணிதல்.

"கோட்டுப்பூச் சூடினுங் காயும்" (குறள். 1313).

2. முடியணிதல்.

"முடிசூடு முடியொன்றே" (கலிங். 525).

3. மேற்கவிதல்,

"வானஞ் சூடிய மலர்தலை யுலகத்து" (பெரும்பாண். 409).

சூடு—சூட்டு=1. நெற்றிப்பட்டம்.
"செம்பொற் சூட்டொடு கண்ணி" (சீவக. 2569).
2. பறவையின் உச்சிக்கொண்டை.
"காட்டுக் கோழிச் சூட்டுத்தலைச் சேவல்" (பெருங் உஞ்சைக். (52 : 62).
3. மதில்மேல் ஏவறை.
"இடுசூட் டிஞ்சியின்" (பு. வெ. 6 : 18, கொளு).
சூடு—சூடம்=தலையின் உச்சி.
"புரவிசயன் சூடந்தரு பாகீரதி" (பாரத அருச்சுனன். 7).
சூடு=1. குடுமி. "கானிறை குஞ்சிச் சூட்டில்" (திருவிளை. யானையெய். 25). 2. உச்சிக் கொண்டை.
சூடு—சூடை=1. தலை. "சூடையின் மணி" (கம்பரா. சூளா. 88).
2. குடுமி. "சூடைவிளங்கு மாமணி" (சேதுபு. சேதுவந்த 15).
சூடு-சூடிகை=1. மணிமுடி (பிங்.).
2. கோபுரக் கும்பம்.

சூடிகை—சூடிகா (c)

சூடை—சூடா (c)

சூடிகை—சுடிகை=1. தலையுச்சி (திவா.). 2. மகுடம் (திவா). 3. நெற்றிச்சுட்டி (திவா.) 4. மயிர்முடி (திவா.). 5. சூட்டு.
"பஃறலைச் சுடிகை மாசுணம்" (கந்தபு. திருநாட்டுப். 19).

சூர்—சூர்

சுள்—சுர்—சூர்.
சூர்=1. மிளகு, 2. கடுப்பு. "சூர்நறு வேந்திறுள்" (பரிபா. 7 : 62).
3. கொடுமை. "சூரர மகளி ராடுஞ் சோலை" (திருமுரு. 41).
4. அச்சம். "சூருறு மஞ்ஞையிற் சோர்ந்த கூந்தலார்" (பெருங். உஞ்சைக். 44).
5. அஞ்சத்தக்க பேய்த்தெய்வம். "உருமுஞ் சூரும்" (குறிஞ்சிப். 355).
6. மறம் (வீரம்). 7. வயவன் (வீரன்). "சூர்புக வரி யது" (கம்பரா. கவந்த. 21).
சூர்த்தல்=1. அச்சுறுத்தல்.

"சூர்த்துக் கடைசிவந்த சுடுநோக்கு" (சிலப். 5 : 84).
2. "கொடுமை செய்தல்." (திருமுரு. 48, உரை).

சூரன்—சூர (இ. வே.).

சூர்–சூரன்=வயவன். (பிங்.) "துறப்பில ரறமெனல் சூர ராவதே" (கம்பரா. தைலமாட்டு. 30).

சூரன்—ஸூர (இ. வே.)

சுள்—சுர்—சுரம்—சுரன்—சூரன்.

சூரன்=1. நெருப்பு (பிங்.). 2. கதிரவன் "காதற் சூரனை யனைய" (பாரத. பதினேழாம். 49).

சூர்ப்பம்—சூர்ப்ப

சூர்த்தல்=சுழலுதல். "சூர்த்த நோக்கு" (அக. நி.).
சூர்ப்பு=1. சுழற்சி (சங். அக.). 2. கைக்கடகம்.
"பசும்பூட் சூர்ப்பமை முன்கை" (புறம் 153 : 3).
சூர்ப்பு—சூர்ப்பம்=வளைந்த முறம் (பிங்.).

சூலம்—சூல (இ. வே.)

உல்=தேங்கா யுரிக்கும் கூரிரும்பு

உல்—சுல்—சுள். சுள்சுள்ளெனல்=முட்போற் குத்துதல்.

சுள்—சுர்—சுரி—சுரிகை=உடைவாள்.

சுல்–சூல்=சூலப்படை. "சூலிசங் கநேந்தி" (சேதுபு. தேவி புர. 27).

சூல்—சூலம். "ஊனக மாமழுச் சூலம்பாடி" (திருவாச 9 : 17).

சூலி—சூலின்

சூல் (சூலம்)—சூலி=சூலமேந்தி, சிவன், காளி.

சூலை—சூலா

சூலுதல்=1. குத்தல். 2. தோண்டுதல் குடைதல்.
"நுங்கு சூன்றிட் டன்ன" (நாலடி. 44)
3. வளைதல்.

சூல்—சூலை=குத்தல் குடைச்சலெடுக்கும் அல்லது கைகாலை முடக்கும் நோய்.

செடி—ஜடி (gh, t)=செடி.

செள்—செழி—செடி. செடித்தல்=அடர்தல் செடி=அடர்த்தி.
"செடிகொள் வான்பொழில் சூழ்" (திருவாச 29 : 5

செடி=இலைகிளை யடர்ந்த சிறு நிலைத்திணை வகை.

ம. செடி, தெ. செட்டு, க. கிட (g). தெ செட்டு—இ. ஜாட் (ḍ)= மரம்.

செட்டி—ச்ரேஷ்டின்

எழுதல்=உயர்தல். எண்ணுதல்=மேன்மேல் அளவிடுதல்.

எட்டுதல்=உயர்தல், உயர்ந்து தொடுதல், தொடுமளவு நெருங்குதல்.

எட்டிநோக்குதல்=அண்ணாந்து பார்த்தல் (பெருங். நரவாண. 8 : 82).

எட்டம்=உயரம், தொலைவு.

எடுத்தல்=உயர்த்துதல், தூக்குதல்.

எட்டு—எட்டி=1. உயர்ந்தவன், மேலோன். 2. பண்டையரசர் வணிக மேலோனுக்கு அளித்த பட்டம்.

"எட்டி குமர னிருந்தோன் றன்னை" (மணி. 4 : 58).

3. வணிகன் (திவா.).

எட்டிப்பூ=எட்டிப்பட்டம் பெற்றவனுக்கு அரசர் கொடுக்கும் பொற்பூ. "எட்டிப் பூப் பெற்று" (மணி. 22 : 113).

எட்டிப்புரவு=எட்டிப் பட்டம் பெற்றவனுக்கு அரசன் கொடுத்த நிலம் (நன். 158, மயிலை. உரை).

எட்டி—செட்டி. ஒ. நோ: இளை—சிளை, உதை—சுதை, ஏண்—சேண். செட்டிமை.=வணிகம், செட்டு.

செட்டி—செட்டு=செட்டித்தனம், சிக்கனம்.

செட்டி—சேட்டி—சேட்டு=வடநாட்டு வணிகன்.

வடமொழியார் காட்டும் மூவேறு மூலம் வருமாறு :—

(1) ச்ரீமத் (திருமான்) என்பதன் உச்சத்தரம் (sup. deg.)

(3) ப்ரசஸ்ய (புகழப்படத் தக்கவன்) என்பதன் உச்சத்தரம்.

(3) ச்ரீ (திரு) என்பதன் உச்சத்தரம்.

தென்சொற்களை வடசொல்லாக்கும் வழிகளுள் ஒன்று முதலெழுத்தின்பின் ரகரம் இடைச் செருகல்.

எ-டு. தமிழம்—த்ரமிள, கமுகம்—க்ரமுக, திடம்—த்ருட. நட்டம்—ந்ருத்த, படி—ப்ரதி, மெது—ம்ருது, விடை—வ்ருஷ.

இம்முறையில் செட்டி என்பதை (வடமொழியில் எகரம் இன்மையால்) ச்ரேட்டி எனத் திரித்து, அதற்கேற்பப் பொருந்தப் பொய்த்தல் என்னும் உத்தி பற்றி வெவ்வேறு மூலங் காட்டுவாராயினர்.

செட்டி என்பது, தமிழில் வணிகனை மட்டுங் குறிக்கும் என்றும், ச்ரேஷ்டின் என்பது வடமொழியிற் சிறந்தோன் எவனையுங் குறிக்கும் என்றும், வேறுபாடறிக.

செம்பியன்—சைப்ய (b)

ஆரியர் வருமுன் ஒருகாலத்தில் இந்தியா முழுதும் பாண்டியர் ஆட்சியிலிருந்தது.

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி."

என்று இளங்கோவடிகள் (சிலப். 11 · 19-22) கூறுதல் காண்க.

அக்காலத்திற் பாண்டியக் குடியினர் சிலர் வடநாடு சென்று வாழ்ந்திருந்தனர். அவரே பாண்டவரின் முன்னோரான வடநாட்டுத் திங்கள் மரபினர். அதன்பின், சோழக் குடியினர் சிலரும் வடநாடு சென்று ஆண்டனர். அவரே இராமனின் முன்னோரான வடநாட்டுக் கதிரவன் மரபினர். இதனாலேயே, மனு, மாந்தாதா, முசுகுந்தன், செம்பி முதலியோர், சோழருக்கும் வடநாட்டுக் கதிரவக் குலத்தினருக்கும் பொது முன்னோராகச் சொல்லப்படுவாராயினர். செம்பி வழிவந்தவன் செம்பியன். செம்பி என்னும் பெயர் வடமொழியிற் சிபி எனத் திரிந்துள்ளது.

செம்பியன் = சோழன். "செம்பியர் மருகன்" (புறம். 228 : 9).

சோழன் செம்பியன் எனப்பெற்றமையாலும், செம்பியன் தமிழப் பேரரையன், செம்பியன் தமிழவேள் என்பன சோழராற் கொடுக்கப் பெற்று வந்த பட்டங்களாயிருந்தமையாலும், செம்பி என்னும் பெயர் தூய தமிழ்ச் சொல்லாகவே யிருத்தல் வேண்டும். மனு மாந்தாதா முதலியோரின் தமிழ்ப் பெயர் மறையுண்டு போயின.

தலையெழு வள்ளல்களுள் ஒருவன் செம்பியன் எனப் பெற்றிருந்தமையால், சோழர்குடித் தொன்முது பழைமையும் செம்பியின் முதுபழைமையும் உணரப்பெறும்.

ஆரியர் வருமுன் வடநாட்டில் தமிழர் குடியேறியிருந்தது போன்றே, தமிழ அரசரும் குடியேறியிருந்தனர் என அறிக.

அகத்தியர் "துவராபதிப்போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்குடி வேளிருள்

ளிட்டாரையும் அருவாளரையும் கொண்டு போந்து, காடுகெடுத்து நாடாக்கிப் பொதியின்கண்'' இருந்தார் என்று நச்சினார்க்கினியர் கூறுவதையும் நோக்குக.

செவ்வந்தி—சேவதீ.

செவ்வந்தி=செவ்வந்தி நேரத்திற் பூக்கும் பூ. செவ்வந்தி—செவந்தி.

செவியுறு— ச்ரு. (இ. வே.)=கேள், செவிக்கொள்.

ச்ரு என்னும் சினைசொல்லினின்றே ச்ருதி (கேள்வி, மறை), ச்ரோத்ரிய, ச்ரவண, ச்ராவண முதலிய சொற்கள் பிறக்கும்.

சே— க்ஷி² (இ. வே.)=தங்கு, வதி.

சேத்தல்=தங்குதல். ''பைத லொருதலை சேக்கு நாடன்'' (குறுந். 13).

'' கான மஞ்ஞை கணனொடு சேப்ப'' (புறம். 127).

க்ஷி என்னும் சொல்லினின்றே க்ஷேத்ர என்னும் சொல் திரியும்.

க்ஷேத்ர=தங்குமிடம், மனை, நகர், இடம், திருவிடம்.

சேக்கை=1. கூடு. ''சேக்கை மரனொழியச் சேணீங்கு புள்'' (நாலடி. 30).

2. கட்டில்.

சேத்தல்=தங்கியுறங்குதல். ''கயலார் நாரை போர்விற் சேக்கும்'' (புறம். 24 : 20).

சேம்பு—கேமுக

சேம்பு=ஒருவகைக் கிழங்கு.

'' சிலம்பிற் சேம்பி னலங்கல் வள்ளிலை'' (குறுந். 76).

சேமம்—க்ஷேம

இது முன்னரே விளக்கப் பெற்றது.

சேரலம்—கேரல

சேரல்=சேரன். சேரல்—சேரலம்—வ. கேரல—கேரள.

சேலை—சேல (c)

சீரை—சீலை—சேலை. (பிங்.).

வடவர் சில் (c) என்றொரு செயற்கை மூலத்தை அமைத்துக் கொண்டு, ஆடை யணிதல் என்று பொருள் கூறுவர்.

சொம்[1]—ஸ்வ (இ. வே)

சும்மை=தொகுதி, கூட்டம்.
சும்—சொம்—(சொந்து)—சொந்தம்=தன்னொடு கூடியது.

சொம்[2]—ஸ்வ, ஸ்வாம். (இ. வே.).

சும்—சும்மை=தொகுதி, செல்வத் தொகுதி.

சும்—சொம்=சொத்து. முதுசொம்=முன்னோர் தேட்டு.

சொம்—சொத்து. ஒ. நோ : தொகை=தொகுதி, செல்வம்.

ஸ்வாம்=சொத்து. தேவஸ்வாம்=தெய்வச் சொத்து, கோயிற் சொத்து.

ஸ்வாம்—ஸ்வாமி—ஸ்வாமின்=சொத்துக்காரன், ஆண்டை, ஆண்டவன், தெய்வம்.

வடவர் ஸ்வாமின் என்னுஞ் சொல்லை ஸ்வ+மின் என்று பகுத்து, சொந்தக்காரன், உடையவன், உரிமையாளன், தலைவன், கணவன், அரசன், குரு, தெய்வப் படிமை என்று பொருள் தொடுப்பர்.

சொலவம்—ச்லோக

சொல்—சொலவு=மரபுக் கூற்று, பழமொழி, பழமொழி போன்ற செய்யுள் தொடர்.

சொலவு—சொலவம். சொலவு—சொலவடை.

வடமொழியில் முதல் வனப்பு (ஆதிகாவியம்) வான்மீகி இராமாயணம் என்பர். வான்மீகி முனிவர் காட்டில் ஒரு வேடனாற் கொல்லப்பட்ட பறவையைக் கண்டு வருந்தியபோது தம் முதற் செய்யுளைப் பாடியதால், வருத்தத்தைக் குறிக்கும் சோக(ம்) என்னும் சொல்லினின்று தனிச் செய்யுட்குச் ச்லோக என்று பெயருண்டாயிற்றென்று வடவர் கூறுவது மரபு. மா. வி. அ. இதை மறுத்துச் ச்ரு (கேள்) என்னும் சொல்லொடு தொடர்புகொண்டதாயிருக்கலாமென்று கருதுகின்றது.

சொலி—ஜ்வல் (வே.).

சுல்—சுல்லி=அடுப்பு. சுள்ளெனல்=வெயில் சுடுதல்.

சுள்—சுள்ளை=மட்கலஞ் சுடுமிடம், காளவாய்.

சுல்—சொல்—சொலி. சொலித்தல்=எரிதல், ஒளிர்தல்.

சொல்—சொன்—சொன்னம்=தங்கம்.

சொல்=பொன்னிறமான நெல். "சடைச்செந்நெல் பொன் விளைக்கும்" (நள. சுயம்வர. 68).

ஒ. நோ: நில்—நிலா, நிலவு. நிற்றல்=விளங்குதல்.

நில்—நெல்=விளங்கும் பொன்போன்ற கூலம்.

சொன்னம்—சுவர்ண

சொல்—சொன்—சொன்னம்=பொன் (திவா.). சொன்ன காரன்=தட்டான் (பிங்.).

"சொன்னதானப் பயனெனச் சொல்லுவர்" (கம்பரா. சிறப்பு.)

வடவர் சு+வர்ண என்று பகுத்து நன்னிற முள்ளது என்று பொருட் காரணங் காட்டுவர்.

இரட்டித்த னகரத்தை ர்ண என்று திரிப்பது வடவர் மரபு. எ—டு: கன்னம்—கர்ண=காது.

சோடை—சோஷ

சுடு—சூடு—சோடு—சோடி, சோடித்தல் =காய்தல், வற்றுதல் (சங். அக.).

சோடு—சோடை=வறட்சி.

வடவர் சுஷ் என்பதை மூலமாகக் காட்டுவர். அது சுள் என் பதன் திரிபென்பது முன்னரே கூறப்பட்டது.

சோம்பு—ஸ்வப் (இ. வே.)

சும்=அமைதி, ஒன்றுஞ்செய்யாமை, சோம்பல்.

சும்மாயிருத்தல்=அமைதியாயிருத்தல், வினைசெய்யாதிருத்தல்.

"சிந்தையை யடக்கியே சும்மாயிருக்கின்ற திறமரிது" (தாயு. தேசோ.).

சும்—சும்பு—சூம்பு=சோம்பல். சூம்பு—சோம்பு.

சோம்புதல்=வினைசெய்யாதிருத்தல், சுறுசுறுப்பின்மை, கால நீட்டித்தல், தூங்க விரும்புதல்.

ஒ. நோ: தூங்குதல்=உறங்குதல், காலந்தாழ்த்து வினைசெய்தல் மந்தமாதல்.

ஸ்வப்=தூங்கு, கனவுகாண்.

L. somnus. Slav supati, Lith sapnus, AS swef, Gk hupnos =sleep.

தக்கோலம்—கக்கோல

தக்கோலம்=ஒரு நறுமணச்சரக்கு. க. தக்கோல.

தக்கோலம் பஞ்சவாசம் என்றும் ஐம்மணங்களுள் ஒன்ருகவும் முப்பத்திருவகை ஓமாலிகைகளுள் ஒன்ருகவும் கூறப்பெறும்.

"தக்கோலந் தீம்பூத் தகைசா லிலவங்கங்
கப்பூரஞ் சாதியோ டைந்து." (சிலப். 5: 26, உரை).

"இலவங்கம்......தக்கோலம்........ஓமாலிகை" (சிலப். 6: 77, உரை).

தக—தஹ் (d)—இ. வே.

தளதளத்தல்=விளங்குதல்.

"பசுநரம்பு தளதளப்ப" (குற்ரு. தல. தருமசாமி. 34).

தள—தழ—தழல். தழலுதல்=1. அழலுதல்.

"தழன்றெரி குண்டம்" (திருவிளை. நாக. 6) 2. விளங்குதல்.

"தழலுந் தாமரையானெடு" (தேவா. 1215: 27.).

தழ—தக. ஒ. நோ: மழ—மக. தகதகவெனச் சொலிக்கிறது என்பது உலக வழக்கு.

தக—தகம்=எரிவு, சூடு. தகம்—தங்கம்=விளங்கும் பொன்.

தக—திகழ்—திங்கள்=நிலா. ஒ. நோ: தமிழர்—திகுளர் (க.).

தக—தகு—தகை=தாகம். தகம்—தாகம்—நீர்வேட்கை.

தாகம்—தாஹ

தகு—தவு—தவி—தவம்=வெப்பம், வெப்பம் பசிதாகம் முதலிய வற்ருல் உடலை வாட்டும் துறவுவினை, அல்லது இறைவேண்டல் வினை.

"சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு." (குறள். 537).

தவு—தவி—தாவம். தவித்தல்=நீர்வேட்கை யுறுத்தல். ஒன்றைப் பெறப் பெருவேட்கை கொள்ளுதல்.

தாவம்—தாப

To thirst after என்னும் ஆங்கில வழக்கை நோக்குக.

தக்கணம்—தக்ஷிண (இ. வே.)

தக்கு=தாழ்வு. தக்குத் தொண்டை=தாழ்ந்த குரல்.

தக்கிலே பாடுகிருர் என்னும் வழக்கை நோக்குக.

எச்சு (உயர்வு) × தக்கு.

வடதிசை பனிமலையால் உயர்ந்திருத்தலால் உத்தரம் எனப் பெற்றது.

"Uttara, northern (because the northern part of india is high," என்று மா. வி. அ. கூறுதல் காண்க.

தக்கு—தக்கணம்=வடதிசையை நோக்கத் தாழ்ந்திருக்கும் தென்றிசை.

கிழக்கு நோக்கும்போது தென்றிசை வலமும் வடதிசை இடமுமிருப்பதால், தக்கணம் என்னும் சொற்கு வலதிசைப் பொருளும் உத்தரம் எனனும் சொற்கு இடதிசைப் பொருளும் தோன்றின.

வலமாகச் சுற்றிவருதல் பிரதக்ஷிணம் என்று சொல்லப்படுதல் காண்க.

தட்டு—தட் (ḍ) தட்டுதல்=அடித்தல், புடைத்தல், தாக்குதல்.

தடம்—தட (ṭ)

தடம்=வளைவு, வளைந்தகரை, கரைசூழ்ந்த நீர்நிலை.

"தடவென் கிளவி கோட்டமுஞ் செய்யும்". (தொல். 804).

தடம்—தடாகம். தடம்—தட்டம். "தட்டத்து நீரிலே தாமரை" (திருமந். 2904).

தடாகம்—தடாக (ṭ)

தண்டம்—தண்ட (இ. வே.)

தள்—தளம்=கனம். தெ. தளமு. 2. கூட்டம். 3. படை. தளம்—தடம்=பெருமை, அகலம். தடம்—தட—தடா—தடவு.

தள்—தாள்=1. திரண்ட அடித்தண்டு. "தாணெடுங் குவளை (சீவக. 2802).

2. அடித்தண்டு போல் தாங்குங் கால்.

"எண்குணத்தான் தாளை வணங்காத் தலை" (குறள். 9).

3. மலையடி. "தாள்வரைப் புறத்து" (திருவாலவா 44: 36). "விரிதாள கயிலாய மலையே" (தேவா. 11: 56).

தள்—தண்டு=1. திரண்ட அடி. எ—டு: கீரைத்தண்டு, வாழைத்தண்டு, விளக்குத்தண்டு.

2. திரண்ட ஊன்றுகோல்.

"தலைநடுங்காத் தண்டூன்று" (நாலடி. 14).

3. திரண்ட உலக்கைப்படை.

"தண்டு முதற் சக்கரமு னேந்தும்" (திவ். பெரியதி. 3: (9: 10).

4. திரண்ட தடிபோன்ற பொருள்.

எ—டு: முதுகந்தண்டு, வீணைத்தண்டு.

5. திரண்ட படை (சேனை). தண்டெடுத்தல் = படையெடுத்தல்.

6. கொடித்தண்டு போன்ற உறுப்பு. எ. டு: காதுத் தண்டு.

தண்டுதல் = பொருள் திரட்டுதல். "தடியெடுத்தவ னெல்லாம் தண்டற்காரனோ?" (பழமொழி).

தண்டு—தண்டம் = 1. பெருந்தடிப் படைக்கலம்.

"தண்டமுடைத் தருமன்" (தேவா. 1055: 6).

2. தடிபோற் கீழே விழுந்து வணங்குதல் (தண்டனிடுதல்). தண்டம்—தண்டன்.

3. சேனை. எ—டு: தண்டநாயகன் = சேனைத்தலைவன்.

தண்டு—தண்டி = தண்டால் தூக்கப்பெறும் பல்லக்கு. தண்டி—தண்டிகை.

"வால்நீண்ட கரிக்குருவி வலமிருந்து இடஞ்சென்றால்
கால்நடையாய்ச் சென்றவரும் கனகதண்டி யேறுவரே."
பழமொழி.:

தண்டு—தண்டியம் = தண்டியப்படைக்கல் அல்லது கட்டை.

தண்டு—தண்டை = தாமரைக்கொடித்தண்டு போன்ற காலணி.

தண்டு—தண்டி. தண்டித்தல் = பருத்தல். தண்டி—தடி. தடித்தம் = பருத்தல். தடி = பருத்தகோல். தடிமன் = பருமை. தடியன் = பூசணி.

தண்டு—தண்டி. தண்டித்தல் = தடியாலடித்தல், தண்டனை செய்தல். தண்டி—தண்டம், தண்டனம், தண்டனை.

தண்டம்—தண்டா = மூவகைத் தண்டனைகளுள் ஒன்று.

தண்டம் = 1. தண்டனை.

"தண்டமுந் தணிதி பண்டையிற் பெரிதே." (புறம். 10: 6).

2. வீண். எ—டு. தண்டச்சோறு.

தண்டனம்—தண்டன

தபு—தப் (dabh)—இ. வே.

தபுதல் = கெடுதல். "அதங்கோட் டாசாற் கரில்தபத் தெரிந்து" (தொல். சிறப்புப்).

"காதலி யிழந்த தபுதார நிலையும்" (தொல். 1025).

தபுத்தல்=கெடுத்தல்.

"உள்ள மழியஹுக்குநர் மிடல்தபுத்து" (பதிற்றுப். 13: 18).

வடமொழியிற் கெடுத்தல் என்னும் பிறவினை வழக்கே யுள்ளது.

தமிழம்—த்ரமில (த்ரமிள) த்ரமிட, த்ரவிட.

தமிழ்—தமிழம் (பெ.)—தமிழ (பெ. எ.)

தயிர்—ததி (dadhi)—இ. வே.

தை—தயிர். ஒ. நோ: ஐ—அயிர் (நுண்மை), மை—மயிர் (கரியது), வை—வயிர் (கூர்மை). பை—பயிர் (பசியது).

தைத்தல்=குத்துதல், முட்குத்துதல்.

'கானவேல் முட்டைக்குங் காடு" (பொய்யாமொழிப்புலவர்).

பாலிற்கு உறைமோரிடுதலை உறைகுத்துதல், பிரை குத்துதல் என்பது வழக்கு.

ததி—தஹீ (இ.)

தரங்கம்—தரங்க=அலை.

துளங்குதல்= 1. அசைதல்.

"துளங்கிமில் நல்லேற்றினம்" (கலித். 106).

2. நிலைகலங்குதல்.

"கடிமரந் துளங்கிய காவும்" (புறம். 23).

துளங்கு—தளங்கு—தயங்கு. தயங்குதல்=அசைதல்.

"தயங்கிய களிற்றின்மேல்" (கலித். 31: 10).

தளங்கு—தரங்கு=அசைந்தியங்கும் அலை.

"தரங்காடுந் தடநீர்" (தேவா. 463 : 1).

தரங்கு—தரங்கம்=1. அலை.

"நீர்த்தரங்க நெடுங் கங்கை" (பெரியபு. தடுத்தாட். 165).

2. இசையலை.

"ஒண்டரங்க விசைபாடு மளியரசே" (தேவா. 87 : 1).

ஒ. நோ: அரங்கு—அரங்கம். அலைதல்=அசைதல்.

அலை=அலையும் நீர்த்திரை.

அம்போதரங்கம்=கரைநோக்கிவரும் நீரலைபோல் வரவரச் சிறுத்துவரும் கலிப்பாவுறுப்பு.

" அம்போதரங்கம் அறுபகிற் றடித்தே." (தொ. 1408).

தொல்காப்பியம் வழிநூலாதலால், ஆரிய வருகைக்கு முற்பட்ட இடைக்கழகக் காலத்திலேயே அம்போதரங்க வொத்தாழிசைக்கலி வழக்கிலிருந்திருத்தல் வேண்டும்.

வடவர் தரம்+க (ga) என்று பகுத்து, குறுக்கே செல்வது என்று மூலப் பொருளுரைப்பர். தரம் என்பதன் மூலம் த்ரு. இது துருவு என்னும் தென்சொற் றிரிபு. க என்பது ஏ என்பதன் கான்முனை. ஏ—யா—ஜா—கா—க.

தருக்கம்—தர்க்க.

தருக்குதல் = 1. செருக்குதல்.

" தன்னை வியந்து தருக்கலும்" (திரிகடு. 38).

2. மிகுத்துக் கூறுதல்.

" தன்னொடு மவளொடுந் தருக்கிய புணர்த்து" (தொல். 996).

3. போருக்கங் கொள்ளுதல்.

" வெம்போர்த் தருக்கினர் மைந்தர்" (சீவக. 1679).

4. தாக்குதல், இடித்தல்.

" தண்மருப்பால் வெண்பிண்டி சேரத் தருக்கி" (பதினெ. திருவீங்கோய். 40).

5. தகர்த்தல்.

' மரக்கல மியங்கவேண்டி....தருக்கியவிடத்து" (கம்பரா. மீட்சிப். 171).

தருக்கு = 1. செருக்கு. 2. எதிர்க்கும் வலிமை.

" எதிர்செயுந் தருக்கிலாமையின்" (கம்பரா. தாடகை. 40).

3. சொற்போர். "தருக்கினுற் சமண்செய்து" (திவ். பெரியதி. 2, 1 : 7).

தருக்கு—தருக்கம் = 1. சொற்போர்.

" பொருவரு தருக்கஞ் செய்ய" (கந்தபு. ததீசியுத். 157).

2. தருக்க நூல்.

தமிழ்த் தருக்க நூல் எழுபொருட் பாகுபாட்டை அடிப்படையாகக் கொண்டது. 'தர்க்க பரிபாஷை' என்னும் நூலிற் காட்டப்பெற்றுள்ள அகத்தியத் தருக்க நூற்பாக்களைக் காண்க. தமிழ்த் தருக்க நூலையே வடவர் வைசேடிகம் என வகுத்தனர்.

தவி—தப் (இ. வே.)

தவித்தல்=வெப்பமாக்குதல், நீர்வேட்கை யுண்டாக்குதல்.

தவிக்கிறது என்னும் வழக்கை நோக்குக.

தவிப்பு—தாகம். "நிரப்புறு தவிப்பினை யொழித்திட" (அரிச். பு. விவாக. 107).

தவி—தாவம்—தாகம்=நீர் வேட்கை.

தவி—தவம்=வெப்பத்தால் உடம்பை வருத்தி ஐம்புலனை யடக்குதல்.

தவம்—தவன்=தவஞ்செய்பவன். மாதவன்=பெருந் தவஞ் செய்தவன். "மாதவர் நோன்பு மடவார் கற்பும்" (மணி. 22: 208).

தவம்—தபஸ்

" உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு." (குறள். 261).

உற்ற நோயுள், வெயிலின் வெம்மையும் பசிதாகத்தாலுண்டாகும் உடம்பின் வெம்மையும் அடங்கும்.

தளம்—தல

தள்—தளம்=அடி, அடிப்பரப்பு.

இதற்கு வடவர் காட்டும் ஸ்த்ரு என்னும் மூலம் பொருந்தாமை காண்க. ஸ்த்ரு=சிதறு.

சிதறு என்னும் தென்சொல்லே, Strew என்னும் ஆங்கிலச் சொற்கும் ஸ்த்ரு என்னும் வடசொற்கும் மூலமாகத் தெரிகின்றது.

தா—தா (dā)—இ. வே.

பழந்தமிழ் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமாம் என்னும் உண்மையைக் காட்டுஞ் சொற்களுள், தா என்பது ஒன்றாகும்.

" தாஎன் கிளவி ஒப்போன் கூற்றே." (தொல். 929).

" அவற்றுள்,
தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீரிடத்த." (ஷை 512).

இப் பொருள்வரம்பு ஏனைமொழிகளில் இல்லை. ம. தா, க. தா. Gk didómi, L do.

தா—தா (இ. வே.)=தருபவன்.

தா=பிள்ளையைத் தந்தவன் (அப்பன்).

தாதா (தாத்தா)=தந்தையின் தந்தையாகிய பாட்டன். தெ. க. தாத்த.

தானம்—தான (இ. வே.)

தள்ளுதல்=ஈனுதல் (உள்ளிருந்ததை வெளித்தள்ளுதல்). (வாழை) குலை தள்ளுதல் என்னும் வழக்கை நோக்குக.

தள்—தள்ளை=தாய் ம. தள்ள. தெ. தல்லி.

தள்ளுதற் சொல் போன்றே ஈனுதற் சொல்லும் இருதிணைக்கும் பொதுவாம். ஈன்றாள்=தாய்.

"ஈனுமோ வாழை யிருகாற் குலை" (பழ. 221).

ஈ—ஈன். ஈனுதல்=இடுதல். "மணற்கீன்ற முத்தம்"=மணலீ விட்ட பருமுத்து.

தள்—(தர்)—தரு—தா—த.

தரு—தருகிறான், தருவான், தருகை, தரவு.

தா—தா, தானம்.

த—தந்தான், தத்தம்.

தருதல்=1. மகப்பெறுதல்.

"தந்தவளைப் பணிந்தவளும்" (சேதுபு. தேவிபுர. 7). தந்தவள்= தாய்.

2. மரஞ்செடிகள் பயன்தருதல்.

தாடி—தாடிகா (ḍh)

தாடி=1. மோவாய். "சுருளிடு தாடி" (சிலப். 27 : 181).

2. மோவாய் மயிர். "மருப்பிற் றிரிந்து மறிந்துவீழ் தாடி" (கலித். 15).

3. மாட்டின் அலைதாடி. "பேருடற் றழைந்த தாடி" (திருவாலவா. 36 : 24).

4. சேவற் கழுத்தின் தொங்கு சதை.

தாழ்தல்=தாழ்ந்திருத்தல். தொங்குதல். தாழி—தாடி.

ஒ. நோ: தாழ்வாட்=மோவாய் (பிங்.). தாழ்வாய்—தாழ் வாய்க்கட்டை.

தாண்டகம்—தண்டக

தாண்டு—தாண்டகம்=26 எழுத்து வரம்பைத் தாண்டிவரும் மண்டில (விருத்த)ச் செய்யுள்.

தாண்டவம்—தாண்டவ

தாண்டுதல்=குதித்தாடுதல். (பிங்.) தாண்டு—தாண்டவம்= (பிங்.). 2. கூத்துவகை (திவா.).

தாத்தா—தாத்த

தாம்பு—தாமன் (d)

தாம்பணி—தாமணீ

தாம்பு+அணி=தாம்பணி=மாடுகளை வரிசையாகப் பிணைக்கும் கயிறு.

தாம்பு=1. கயிறு. (பிங்.). 2. தாம்பணிக் கயிறு.

"கன்றெல்லாந் தாம்பிற் பிணித்து" (கலித். 111).

தாம்பு+இசை=தாப்பிசை=1. ஊஞ்சல்.

2. செய்யுட் சொல் முன்னும் பின்னுஞ் சென்று பொருள் கூடும் பொருட்கோள்.

தாமரை—தாமரஸ

தும்=செம். தும்—தும்பு—துப்பு=சிவப்பு, பவழம், அரக்கு.

தும்பு—தும்பரம்=சிவப்பு, சிவப்பான அத்திப்பழம்.

தும்—(துமர்)—துவர்=சிவப்பு, பவழம், காவி, துவரை, துவர்ப்பு (காசுக் கட்டி). துவர்த்தல்=சிவத்தல், துவர்ப்புச் சுவையாதல்.

துவர்—துவரை=செம்பயறு, செப்புக்கோட்டை நகர்.

துவர்—துகிர்=பவழம்.

துமர்—தமர்—தாமரம்=செம்பு. தாமரம்—தாமரை=செம்முளரி, முளரி.

தாமரஸ என்னும் வடசொல் வடிவைத் தாம+ரஸ என்று பகுத்துப் பகல் முளரி என்று பொருள் கூறுவர். ஆயின், தாம என்னுஞ் சொற்கு மூலமாகக் கொள்ளும் தம என்னுஞ் சொற்கோ, இருள் அல்லது இரவு என்றுதான் பொருள். இனி, இக்குழறுபடையைப் பெருக்கற்குத் தம் என்பதை அடி மூலமாகக் காட்டுவர். அதற்குத் திணறுதல் அல்லது திக்குமுக்காடுதல் என்பது பொருள் இங்ஙனம் வடவர் திணறித் திண்டாடுவதெல்லாம், வேண்டுமென்றே மெய்ம்மையைப் புறக்கணித்துப் பொய்ம்மையை மேற்கொள்வதன் விளைவே.

தாமரம்—தாம்ர

தும்பரம்—உதும்பர, உடும்பர (அ. வே.).

தாவு—தாவ் (dh)—இ. வே.

தாவுதல்=குதித்தல், தாண்டுதல், பாய்ந்தோடுதல்.

தாளம்—தால

தாள் = கால், அடி. தாள்—தாளம் = ஆடுபவர் காலால் தட்டும் காலக் கணிப்பு, ஆட்டிற்கும் பாட்டிற்கும் உரிய காலக்கணிப்பு, காலக் கணிப்பிற்குத் தக்க இசைக்கருவி.

தாளி—தால

தள்—தாள்—தாளி = திரண்ட கூந்தற்பனை.

திடம்—த்ருட (dṛḍha)—இ. வே.

தில்—திள்—திண்—திண்மை = செறிவு, பருமன், வலிமை, உறுதி. கலங்கா நிலைமை.

திண்—திண்ணம் = இறுக்கம், வலிமை, தேற்றம் (நிச்சயம்) ம. திண்ணம்.

திண்ணன் = வலியன், வல்லுடற் கண்ணப்பன்.

திண்ணகம் = செம்மறியாட்டுக்கடா. திண்ணக்கம் = நெஞ்சுரம்.

திண்ணிமை = மனவுறுதி. திண்ணியன் = வலியவன், திடமனத்தன்.

திண்ணை = திரண்டமேடு. ம. திண்ண, த., தெ. திண்ணெ. திணை = திரட்சி, குலம், வகுப்பு, பொருள் வகுப்பு, நிலவகுப்பு.

திண்ணம்—திணம் = திண்மை. திணம்—திணர் = செறிவு. திணர்த்தல் = செறிதல், கனமாகப் படிந்திருத்தல்.

திண்—திணி. திணிதல் = செறிதல், இறுகுதல். க. திணி.

திணிகம் = நெருங்கிச் செய்யும் போர்.

திணிப்பு—திணிம்பு = செறிவு. க. திணிம்பு.

திணுங்குதல் = செறிதல், உறைதல். திணுக்கம் = செறிவு, கட்டி.

திண்—திண்பு = உறுதி. க. திண்பு.

திண்பு—திட்பு—திட்பம் = வலிமை, மனவுறுதி, சொற் பொருளுறுதி, தேற்றம்.

திண்—திண்டு = பருமன், சிறுதிண்ணை, பஞ்சணை. தெ., ம. திண்டு.

திண்டு—திட்டு = சிறுமேட்டு நிலம், மணற்குன்று, ஆற்றிடைக் குறை. ம., க. திட்டு.

திட்டு—திட்டம் = தேற்றம், நிலைபேறு, உறுதியான ஏற்பாடு. தெ. திட்டமு, க. திட்ட.

திட்டு—திட்டை=திண்ணை, மணல்மேடு, மேட்டு நிலம். ம. திட்ட. திட்டாணி=மரத்தைச் சுற்றிய மேடை.

திட்டம்—திடம்=1 பருமன், வலிமை, உறுதி, கலங்காநிலை, நிலை தவறுமை, மனவுறுதி, உண்மை, தேற்றம்.

திடம்—திடன்—திடல்=மேட்டுநிலம், பொட்டல்.

திடல்—திடர்=புடைப்பு, மேட்டுநிலம், குப்பை மேடு, சிறுதீவு.

திடர்—திடறு=மேட்டுநிலம், கரடு.

திடாரி=திடமனத்தன். தெ. திடமரி. திடாரிக்கம்=மனத்திடம்.

திண்டு—திண்டன்=தடியன். திண்டி=பருமன், தடித்தவள், யானை.

வடவர் காட்டும் த்ருங்ஹ் அல்லது த்ருஹ் என்னும் மூலம், திற என்னும் தென் சொற்றிரிபே. திறத்தல்=திறனுதல்.

தித்தி—த்ருத்தி (இ. வே.)

துருத்துதல்=முன்தள்ளுதல். துருத்து—துருத்தி=காற்றை முன் தள்ளும் உலைக்களத் தோற்கருவி, நீரை முன்வீசுங் கருவி, ஊதும் தோலிசைக்கருவி, முன்தள்ளிய வயிறு.

துருத்தி—துத்தி—தித்தி.

வடவர் காட்டும் த்ரு (d) என்னும் சொற்குப் பிளத்தல் என்பதே பொருள்.

திமி—திம, திமீ

திம்மை=பருமன். தெ. திம்மெ.

திம்மன்=பருத்த ஆண்குரங்கு. க. திம்ம, தெ. திம்மடு.

திம்மலி=பருத்தவள். திம்—திமி=எல்லாவற்றுள்ளும் பருத்த மீன்.

திரு—ச்ரீ (ஸ்ரீ)—இ. வே.

தில்லுமுல்லு=திண்டுமுண்டு. தில்—திர்—திரள்.

திர்—திரு=திரண்ட செல்வம், திருமகள், சிறப்பு, பொலிவு, அழகு, நற்பேறு, தெய்வத்தன்மை, தூய்மை.

ஒ. நோ: வெறுத்தல்=மிகுதல். வெறுக்கை=மிகுதி, செல்வம்.

செல்வத்தாற் சிறப்பும் பொலிவும், அரசச்செல்வத்தால் தெய்வத் தன்மையும், தெய்வத்தன்மையால் தூய்மையும், ஏற்படுமென்பது

பண்டையுலகக் கருத்து. செல்வத்தாற் சிறப்பும் பொலிவும் இக்காலத்து முண்டு.

திரு என்பது தெய்வத்தன்மையை அல்லது தூய்மையைக் குறிக்கும் அடைமொழியாகக் கொள்ளப் பெற்றது.

எ—டு: திருமால், திருநாவுக்கரசு, திருக்குறள், திருச்சிற்றம்பலம், திருநீறு, திருப்பள்ளியெழுச்சி, திருமுறை, திருமேனி, திருவிழா, திருவிளையாடல், திருவுளம்.

தொன்றுதொட்டுத் திருவரங்கம் என்று வழங்கிவந்த இடப்பெயர், இன்று ஸ்ரீரங்கம் எனத் திரிந்து வழங்குகின்றது.

வடவர் வடமொழியிலுள்ள சொற்கட்கு வலிந்தும் நலிந்தும் மூலங்காட்டும் தம் வழக்கத்திற்கேற்ப, ச்ரி என்னும் சொல் ச்ரி[1] அல்லது ச்ரீ[1] என்பதினின்று திரிந்ததாகக் கூறுவர்.

ச்ரி[1] = சார் (to lean). ச்ரீ[1] = ஒளி. மா. வி. அ. இரண்டையும் இணைத்துக் கூறும்.

தீய்—தீ (d) இ. வே.

தீய்தல் = எரிதல், விளங்குதல்.

தீய்—தீய்வு—தீவு—தீவம் = விளக்கு.

தீவம்—தீப

தீவு—த்வீப (இ. வே.)

தீர்தல் = நீங்குதல். தீர்—தீர்வு—தீவு = பெருநிலத்தினின்று நீங்கியிருக்கும் சிறுநிலம், ஒரு நிலத்தினின்று நீங்கியிருக்கும் இன்னொரு நிலம் ஒ. நோ: கோர்வை—கோவை.

தீவு—தீவம்—வ. த்வீப.

வடவர் த்வி+அப் என்று பகுத்து, இருபுறமும் நீராற் சூழப்பெற்றதென்று பொருட் காரணங் கூறுவர். நாற்புறமும் நீராற் சூழப்பெற்ற தீவிற்கு இவ்விலக்கணம் பொருந்தாமை காண்க.

துந்தி—துந்த, துந்தி

உந்துதல் = முன்தள்ளுதல். உந்து—உந்தி = கொப்பூழ்.

உந்து—துந்து—துந்தி = முன்தள்ளிய வயிறு, கொப்பூழ்.

துந்தி—தொந்தி = முன்தள்ளிய வயிறு. ம. தொந்தி

வடவர் காட்டும் துத் (d) என்னும் மூலம் துந்து என்பதன் திரிபே.

து(ப்பு)—து[1] (இ. வே.)=வலியுறு.

துப்பு=வலிமை. "கெடலருந் துப்பின்" (அகம். 105). துத்தல் =உண்ணுதல். "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி" (குறள். 12).

"உண்டவுடல் உரஞ்செய்யும்." ஆதலால், உண்டற் கருத்தினின்று வலிமைக் கருத்துத் தோன்றியிருக்கலாம்.

து—துவ்வு. துவ்வுதல்=1. நுகர்தல். "துவ்வா நறவின்" (பதிற்றுப் 60: 12.).

2. வலியுறுதல். "தான்றுவ்வான்" (குறள். 862).

து—தூ=வலிமை. "தூவெதிர்ந்து பெறுஅ" (பதிற்றுப். 81: 34).

துருவு—த்ரு (இ. வே.)

துள்—துரு—துருவு. E. through, OS thurh.

துர—த்வர்=விரை, முடுகு.

துரை—த்வரா=வேகம், விரைவு.

துலை—துலா

துல்—துன். துன்னுதல்=பொருந்துதல்.

துல்—துல்லியம்=ஒப்பு, சரிமை, ஒப்பக் கையெழுத்து.

துல்லியம்—துல்லிபம்.

துல்—தூலம்=நிறைகோல், துலாநிறை.

துல்—துலா=நிறைகோல், துலாவோரை, ஏற்றமரம், வண்டியின் ஏர்க்கால், துலாக் கட்டை.

துவா—துலாந்து=துலாக்கட்டை.

துலா—துலாம்=நிறைகோல், துலாவோரை, துலாமாதம் (ஐப்பசி), 5 வீசை கொண்ட நிறை, ஏற்றமரம், உத்தரக்கட்டை, துலாக்கட்டை, தூணுறுப்பு. துலாம்—துலான். ம. துலாம்.

துலாக்கோல், துலாக்கடைக் கூரை, கைத்துலா, ஆளேறுந் துலா, துலாப்பட்டை என்பன பெருவழக்குச் சொற்கள்.

ஐயவித்துலாம்=ஒரு மதிற்பொறி (சிலப். 15: 213).

துலா—துலை=நிறைகோல், துலாவோரை, 100 பல நிறை, ஒப்பு. "தோல்வி துலையல்லார் கண்ணுங் கொளல்" (குறள். 986.).

வடவர் காட்டும் துல் என்னும் அடியே தமிழ்ச்சொற்கும் உரியதாம். ஆயின், மா. வி. அ. தூக்கற் கருத்தை முற்படக் கூறும். ஒப்பாதற் கருத்தே அடிப்படையாம்.

ஒ. நோ: ஒப்பு=நிறைகோல். ஒப்பராவுதல்=நிறைகோல் செய்தல்.

ஒப்பராவி=நிறைகோல் செய்பவன்.

குமரிக் கண்டத்தில் வழங்கிய துல் (நிறு) என்னும் வினை இக் காலத்து வழக்கற்றது.

துவரம்—துவர, துபர.

தும்—துமர்—துவர்= 1. சிவப்பு. "துவரிதழ்ச் செவ்வாய்" (சிலப். 6: 26.) தெ. தொகரு.

2. பவழம் (திவா.). துவர்—துகிர். க.தொகர்.

3. காவி. "துவருறுகின்ற வாடை" (தேவா. 608: 10).

4. துவரை. "துவர்ங்கோடு" (தொல். எழுத் 363, உரை).

5. துவர்ப்பு (காசுக்கட்டி).

6. துவர்ப்புச் சுவை. "துவர்மருவப் புளிப்பேற்றி" (தைலவ தைல.)

7. துவர்ப்புப்பொருள். "விரையொடு துவருஞ் சேர்த்தி" (சிவக. 623).

துவர்த்தல்=1. சிவப்பாதல். "துவர்த்த செவ்வாய்" (கம்பரா. நீர்விளை 13.).

2. துவர்ப்பாதல்.

துவர்—துவரம்=துவர்ப்பு (பிங்).

துவர்—துவரை=துவரம் பயறு. தெ. துவரி, க. தொவரி.

துவரை—துவரிகா

துவரை=உருக்கிய செம்பைச் சாந்தாக வார்த்துக் கட்டிய கோட்டை நகர்.

"செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை
யுவரா வீகைத் துவரை யாண்டு" (புறம். 201: 19—20).

துவரை—த்வாரக

வடவர் த்வார+க என்று பகுத்து, பல புறவாயில்களையுடையது ("many-gated") என்று பொருளுரைப்பர். த்வார=வாயில்.

துவள்—த்வ்ரு (dh)—இ. வே.

துவளுதல்=வளைதல்.

துவை—த்வன்² (dh)

துவைத்தல்=ஒலித்தல்,

துளசி—துலசி.

துளவு=துளசி. "கள்ளணி பசுந்துளவினவை" (பரிபா. 75:54).

துளவு—துளவம். "துளவமுங் கூடையும்" (திவ். திருப்பள்ளி. 10).

துளவம்—துளபம். "துளபத் தொண்டாய" (திவ். திருமாலை 45).

துளவு—(துளசு)—துளசி

துழாய்=துளசி. "துழாஅ யலங்கற் செல்வன்" (பதிற்றுப். 31 : 8).

துளவு—துளவன்=மாயோன். மாயோன் தமிழக முல்லை நிலத் தெய்வம் என்றும், துளவு அவனுக்குரிய முல்லைநிலப் பூவென் றும், அறிக.

துறட்டி—த்ரோட்டி. த்ரோத்ர.

துறடு—துறட்டி—தோட்டி, ம. தோட்டி. க. தொறடு, தோட்டி (d).

"உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்" (குறள். 24).

தோட்டி—தோத்ர (tottra).

வடவர் இதற்குக் காட்டும் துத் (d) என்னும் மூலம் துந்து என் பதன் திரிபே.

தூணம்—ஸ்தூண, ஸ்தூணு (இ. வே.).

துல்—துலை=ஒப்பு. துல்—துன். துன்னுதல்=பொருந்துதல். துல்—துள்—துண்—துணர் = கொத்து. துண்—துணை= சேர்க்கை, இரண்டு, ஒப்பு.

துள்—(துடு)—துடவை=தோட்டம். துடு—துடை=தொடை.

துடு—துடர்=தொடர். துடு—தொடு—தொடை, தொடர்.

துண்—தூண்=1. திரண்ட கம்பம். "சிற்றில் நற்றூண் பற்றி" (புறம். 86).

2. தாங்கல். "துன்பந் துடைத்தூன்றுந் தூண்" (குறள். 615).

தூண்—தூணம்= 1. பெருந்தூண்: "பசும்பொற் றூணத்து" (மணி. 1 : 48).

2. பற்றுக்கோடு (அக. நி.).

தூண்—தூணி. தூணித்தல் = பருத்தல்.

வடவர் காட்டும் ஸ்தா (நில்) என்னும் மூலத்திற்கும் அதனின் றமைந்த ஸ்தாணு (நிற்கும் அடி) என்னும் சொற்கும், தூண் என்பத னொடு யாதொரு தொடர்புமில்லை.

தூணம்—தூண

தூணி[1]—தூணீ

துள்—(தூள்)—(தூளம்)—தூணம் = துளைக்கப்பட்ட கூடு, அம்புப் புட்டில்.

துள்—(தூள்)—(தூளி)—தூணி = அம்புப் புட்டில்.

"பொலம்பூந் தும்பைப் பொறிகிளர் தூணி" (பதிற்றுப். 45 : 1). ஒ நோ: தோள்—தோணி.

வடவர் காட்டும் துல் (நிறு) என்னும் மூலமும், மா. வி. அ. கூறும் பொறுப்பது ("bearer") என்னும் பொருளும், பொருந்தா.

தூணி[2]—த்ரோண (d)—இ. வே.

மேற்கூறியதே இதற்கும். தூணி = 4 மரக்கால் கொண்ட முகத்தலளவு.

வடவர் த்ரு[4] (தரு, தாரு = மரம்) என்பதை மூலமாகக் காட்டு வர்.

தூது—தூத (dūta)

தூது = 1. தூதுமொழி. "தூதுரைப்பான் பண்பு" (குறள். 681).

2. தூது சொல்வோன். "தக்க தறிவதாந் தூது" (குறள். 686).

தூது—தூதன் (ஆ. ப.), தூதி (பெ. பா.).

தூது என்னுஞ் சொற்கு, முன்சென்றுரைப்பது என்பதே வேர்ப் பொருளாகும்.

ஒ. நோ : உது—(உதழ்)—உதடு = வாயின் முன்னிருப்பது. உதழ்—இதழ்.

குது—தெ. கொத்த=புதிய. து. கோடி=புதுமை, புத்தாடை. ம. கோடி.

புதுமை என்பது, ஒரு பொருள் தோன்றுவதின் அல்லது பயன் படுவதின் முன் நிலைமையே.

துது—தூது=ஓர் அரசனின் வருகையை அல்லது போர்ச் செய்தியை, மற்றோ ரரசனிடம்முன் சென்றறிவிப்பது. பிற் காலத்தில் செய்தியறிவிப்பது என்று மட்டும் பொருள்பட்டது.

நுது—நுதல்=மண்டையின் முன்னுள்ள நெற்றி.

நுதலுதல்=முன்சொல்லித் தொடங்குதல்.

புது—இது வெளிப்படை.

மா. வி. அ. து (செல்) என்பதை மூலமாக ஐயுற்றுக் காட்டும்.

தூரி—தூலி, தூரிகை—தூலிகா.

தூர்=குத்துச் செடியின் வேர்த்தொகுதி. தூர்—தூரி=தூர் போன்ற வட்டிகை (painter's brush).

தூரி—தூரிகை.

தூளி—தூலி (dh)

துவைத்தல்=இடித்தல். துவை—துகை. துகைத்தல்=இடித்தல். துகை—துகள்=இடித்த தூள்.

துகள்—தூள்—தூளி—தூசி. தூளித்தல்=தூளாக்குதல்.

இச்சொல் மா. வி. அகர முதலியில் இல்லை. ஆயின், சென்னைப் ப. க. க. அகர முதலியில் வடசொல்லாகக் காட்டப்பட்டுளது. தூளித்தல் என்னும் வினைக்குத் தூளைப் பூசுதல் என்று பொருள் கொண்டுள்ளனர் வடவர். தூலன, உத்தூலன—தொ. பெ. (வ.)

தேவன்—தேவ (இ. வே.)

தேய்தல்=உரசுதல். தேய்—தே=1. (உரசிப் பற்றும்) நெருப்பு, 2. (நெருப்பாகிய) தெய்வம்.

"தேபூசை செய்யுஞ் சித்திரசாலை" (சிவரக. நைமிச. 20).

3. (தெய்வம் போன்ற) தலைவன்.

தே—தீ=நெருப்பு, விளக்கு, சினம், தீமை, எரியகம் (நரகம்),

தீமை=தீயின் தன்மை. ம., க. தீ.

ஒ. நோ: தேன்—தேம்—தீம்.

தீ—தீ (இ. வே.)—ஒளிர்.

தீதல்=எரிதல், கருகுதல். தீத்தல்=எரித்தல், கருக்குதல். க. சீ.

தீ—தீய். தீய்தல்=தீதல். தீய்த்தல்=தீத்தல். தீ—தீவு—தீவம்=விளக்கு. இனி, தேய்—தீய்—தீ என்றுமாம்.

தேய்—தேயு=நெருப்பு (பிங்.).

தேய்—தேய்வு—தேவு=1. தெய்வம் (பிங்.).

"நரகரைத் தேவு செய்வானும்" (தேவா. 696 : 2).

2. தெய்வத் தன்மை.

தேவு—தேவன்=கடவுள், அரசன், கணவன், தலைவன்.

தேவி=தெய்வ மகள், அரசி, தலைவி.

தேய்வு—தெய்வு—தெய்வம்.

"தெய்வ முணவே மாமரம் புட்பறை" (தொல். பொ. 18).

ம. தெய்வம், தெய்யம், தெ. தேவுடு.

பண்டை யுலகில் நெருப்பே தெய்வமாகவும் தெய்வ வடிவாகவுங் கொள்ளப் பெற்றது

ஒ. நோ : சுள்—சுர்—சுரம்—சுரன்=தேவன்.

குறிஞ்சி மக்கள் முருகனைச் சேயோன் (சிவந்தவன்) என்றது நெருப்பு வடிவம் பற்றியே.

Gk theos, L deus.

தெய்வம்—தைவ

வடவர், திவ் (ஒளிர்) அல்லது த்யு என்றொரு செயற்கை யடியினின்று, த்யௌஸ் (ஒளியுள்ள வானம்), திவஸ் (பகல், நாள்), தேவ (விண்ணுலகத்தது), திவ்ய (தெய்வத் தன்மையுள்ள), என்னுஞ் சொற்களை அமைத்துள்ளனர். த்யு என்பது தெய்வம் என்னுஞ் சொல்லினின்றும், திவ் என்பது தேவன் என்னுஞ் சொல்லினின்றும், திரித்துக் கொண்டவையே.

தோரணம்—தோரண

துருவு—தூர்—தோர்—தோரணம்=தெருவிற் குறுக்காகக் கட்டும் சுவடிப்புத் தொங்கல்.

தூர்தல்=புகுதல், துருவுதல், குறுக்காகச் செல்லுதல்.

தோர்—தோரணை=கோர்வை, கோர்வையாகச் சொல்லும் முறை.

தோள்—தோஸ் (d)

தொள்—தொண்—தொண்ணை = பருமன்.
தொள்—தோள்—தோடு = திரட்சி, தொகுதி.
தொள்—தொழு—தொழுதி = தொகுதி.
தோள் = கையின் திரண்ட மேற்பகுதி. (புயம்).

"சிலைநவி லெறுழ்த்தோ ளோச்சி" (பெரும்பாண். 145).
ம., க. தோள், து. தோளு.

தோட்கடகம், தோள்வலி, தோள்வளை, தோளணி முதலிய சொற்களை நோக்குக.

பிற்காலப் புலவர் இச்சொல்லைக் கை என்னும் பொதுப் பொருளிலும் ஆண்டுவிட்டனர்.

நகரம்—நகர

நகுதல் = விளங்குதல். நகு—நகர் = விளங்கும் மாளிகை, மாளிகையுள்ள பேரூர்.
நகர்—நகரி = மாளிகையுள்ள பேரூர்.
நகர்—நகரம் = பெருநகர்.

நசி—நச் (naš)

நொள்—நொய்—(நய்)—நை.
"அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்." (தொல். 56).
நைதல் = நசுங்குதல், கெடுதல்.
நை—நசி—நசியல். நசி—நசுங்கு—நசுங்குணி.

நடி—நட், ந்ருத்

நளிதல் = ஒத்தல். நளி—நடி. ஒ. நோ : களிறு—கடிறு.
நடித்தல் = ஒத்து நடத்தல், நாடக நிகழ்த்தல், கூத்தாடுதல், பாசாங்கு செய்தல்.
நடி—நடம்—நட்டம்.

நடம்—நட (ṭ)

நட்டம்—ந்ருத்த

நடி—நடனம்

நடனம்—நடன (t)

நடி—நடிகன், நடிகை.

நடிகன்—நடிக (t), நடிகை—நடிகா (t)

நட்டம்—நட்டணம், நட்டணை.

நட்டணம்—நர்த்தன

நாகம்—நாக (g)

நகர்—நாகம்=பாம்பு. நகர்தல்=ஊர்ந்து செல்லுதல்.

ஒ. நோ: E. snake f. *snican*, to creep.

வடவர் நக (மலை) என்னுஞ் சொல்லைக் காட்டி, மலையிலுள்ள தென்று பொருட்காரணங் கூறுவர்.

நாகரிகம்—நாகரிக

நகரம்—நகரகம்—நாகரிகம்.

நாடகம்—நாடக (t)

நடி+அகம்=நாடகம்.

நாளம்—நால

நுள்—நள்—நாள்—நாளம்=உட்டுளையுள்ள தண்டு.

நாணல்—நாட

நாளம்—நாணம்—நாணல்=உட்டுளையுள்ள தட்டை.

நாடி—நாடி

நாள்—நாளி—நாழி—நாடி=அரத்த அல்லது மூச்சுக்குழாய், ஊதை (வாத) பித்துக் கோழை நாடி, நாடித்துடிப்பு.

நாலா—நாலு

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால் வகுப்பையும் சேர்ந்த எல்லா மக்களும் வந்திருந்தனர் என்பதை, நாலா பேரும் வந்திருந்தனர் என்றும்; நாற்றிசையிலுமிருந்து மக்கள் வந்திருந்தனர் என்பதை, நாலா திசையிலுமிருந்து மக்கள் வந்திருந்தனர் என்றும்; கூறுவது மரபு.

நாலா=நால்வகை, எல்லா, பலவகை.

நாவாய்—நௌ, நாவ (இ. வே.)

"நளியிரு முந்நீர் நாவா யோட்டி" (புறம். 66).

நாவுதல்=கொழித்தல். நாவு—நாவாய்=கடல்நீரைக் கொழித்துச் செல்லும் பெருங்கலம்.

“ வானியைந்த விருமுந்நீர்ப்
பேஎநிலைஇய விரும்பௌவத்துக்
கொடும்புணரி விலங்குபோழக்
கடுங்காலொடு கரைசேர
நெடுங்கொடிமிசை யிதையெடுத்
தின்னிசைய முரசுமுழங்கப்
பொன்மலிந்த விழுப்பண்ட
மாடியற் பெருநாவாய்
நாடார நன்கிழிதரு
மழைமுற்றிய மலைபுரையத்
துறை முற்றிய துளங்கிருக்கைத்
தெண்கடற் குண்டகழிச்
சீர்சான்ற வுயர்நெல்லி
னூர்கொண்ட வுயர்கொற்றவ” (மதுரைக். 75-88).

என்று, தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மீது, அவன் முன்னோருள் ஒருவன் சாலி (சாவக)த் தீவைக் கைப் பற்றியமை ஏற்றிக் கூறப்பட்டிருத்தல் காண்க.

வேத ஆரியர் கடலையும் கப்பலையும் கண்டறியாது நிலவழி யாக இந்தியாவிற்கு வந்தவர். சிந்தாற்றில் இயங்கிய படகுகளைப் பற்றித்தான் அவர்க்குத் தெரியும். அதனால் வடநாட்டில் வழங்கிய நௌ என்னும் சொல்லாற் படகையே முதலிற் குறித்தனர்.

வடவர் காட்டும் வேடிக்கையான சொன்மூலம் வருமாறு:—

(1) நௌ=வாச் (c)—நிருக்த, 1 : 11).

வாச்=பேச்சு, மொழி, குரல், ஒலி.

(2) நு[4]=பராவு (praise).

தெய்வத்தைப் பராவும் மன்றாட்டு (prayer) வானுலகிற்குச் செலுத்துகின்ற கலமாக இருக்கின்றது.

“ 2 nau=vāc, Nir. i, 11 (either because prayer is a vessel leading to heaven or fr. 4 *nu*, ‘to praise’)”—மா. வி. அ. பக். 571.

நாழி—நாடி

நுள்—நள்—நாள்—நாழி=உட்டுளைப் பொருள், மூங்கிற்படி, முகவைப்படி. நெசவுக்குழல், அம்பறுத்தூணி, கன்னல் (நாழிகை வட்டில்), நாழிகை. ம. நாழி, க. நாழி.

நாழிக்கிணறு, நாழிச்செம்பு, நாழிமணி, நாழியோடு, நாழிவழி என்பன தொன்றுதொட்ட பெருவழக்குச் சொற்கள்.

நாழிகை—நாடிகா

நாழி—நாழிகை=1. உட்டுளைப் பொருள்.

2. நாழிகை வட்டில்.

3. நாழிகை வட்டிலில் உள்ள நீர் அல்லது மணல் முழுதும் ஒருமுறை விழும் நேரம்=24 நிமையம் (நிமிஷம்).

4. அறை.

உண்ணாழிகை=உள்ளறை (கர்ப்பக்கிருகம்).

"உண்ணாழிகையா ருமையாளோடு" (தேவா. 592 : 3).

உண்ணாழிகை வாரியம்=கோயில் மேற்பார்வைக் குழு (I.M P. Cg. 205).

திருவுண்ணாழி—திருவுண்ணாழிகை (கர்ப்பக் கிருகம்).

"திருவுண்ணாழிகை யுடையார் வசமே நாள்தோறும் அளக்கக் கடவோம்" (S. I. I. i, 143).

ம. நாழிக, க. நாழிகே.

நாழிகைக் கணக்கன், (சிலப். 5 : 46, உரை), நாழிகைக்கல் (Mile-stone), நாழிகைத் தூம்பு (நீர்வீசுங் கருவி வகை, பெருங். உஞ்சைக். 38 : 106), நாழிகைப் பறை (சிலப். 3 : 27, உரை), நாழிகை வட்டம் (கால்வாயிலிருந்து தண்ணீர் பகிர்ந்துகொள்ளும் முறை), நாழிகை வட்டில் (சிலப். 5 : 49, உரை), நாழிகை வழி என்பன தொன்றுதொட்ட பெருவழக்குச் சொற்கள்.

நிமை—நிமி

இமை=இமைத்தல், கண்ணிமை.

ம. இம, க., து. இமெ.

இமை—நிமை=இமைத்தல், கண்ணிமை. க. எவே.

"நீலிக்குக் கண்ணீர் நிமையிலே." (பழமொழி).

வடவர் நிமி என்னும் சொல்லை இக்குவாவின் மகன் (நிமி) பெயரொடு தொடர்புபடுத்தி, அவன் வசிட்டர் சாவிப்பினால் தன் உடம்பை யிழந்து எல்லாவுயிரிகளின் கண்களையும் இடமாகக் கொண்டானென்று, ஒரு கதை கட்டுவர். (விஷ்ணு புராணம், 4 : 5).

நிலையம் — நிலய

நில் — நிலை — நிலையம் = 1. நிற்குமிடம், தங்குமிடம், இருப்பிடம்.

"நியாயமத் தனைக்குமோர் நிலைய மாயினான்" (கம்பரா. கிளை. 55).

2. கோயில்.

"நல்லூரகத்தே திண்ணிலையங் கொண்டு நின்றான்" (தேவா. 414 : 5), (திவா.).

'அம்' ஒரு பெருமைப் பொருட் பின்னொட்டு.

நிலை = நிற்கும் சிற்றிடம் (Stand). எ-டு: கதவுநிலை, தேர்நிலை.

நிலையம் = நிற்கும் பேரிடம் (Station). எ—டு: புகைவண்டி நிலையம்.

வடவர் நி + லய என்று பகுத்து, ஒன்று இன்னொன்றோடு ஒன்றி விடும் இடம் என மூலப் பொருள் கூறுவர்.

நி = கீழ். லீ = ஒட்டு. லீ—லய = ஒட்டுகை. நிலீ = கீழ்த் தங்கு, படிந்திரு, நிலைத்திரு. நிலய = தங்கிடம், இருக்கை, குடியிருப்பு, குகை, கூடு.

தென்சொல்லை வடசொல்லாகக் காட்ட வேண்டி, அதை வடவர் செயற்கை முறையிற் சிதைப்பதற்கு இஃதோர் எடுத்துக் காட்டாம். தம் கொள்கையை நிறுவவே, நிலையம் என்னும் சொல் வருமிடமெல்லாம் நிலயம் என்றே எழுதுவர், அல்லது பதிப்பிப்பர்.

நீரம் — நீர

நீள் — நீர் = நீளும் பொருள். நீர் × நிலம். நில்—நிலம் = நிற்கும் பொருள்.

நீர்—நீரம்—ஈரம். நீர்—ஈர். ஈர்மை = தண்மை. எ - டு : ஈர்ங் கதிர், ஈர்ங்கை.

நீலம் — நீல

நீர் — நீல் = நீலம்.

நீர்நிலைகட்குள் கடலே பெரிதாகவும் ஏனையவற்றிற் கெல்லாம் மூலமாகவு மிருப்பதால், நீர் என்னும் சொல் சிறப்பாகக் கடலையே குறிக்கும்.

"நீரொலித் தன்ன நிலவுவேற் றானை" (மதுரைக் 369).

கடல் நிறம் நீலமா யிருப்பதால், நீர் என்னும் சொல்லினின்று நீலக்கருத்தும் நீல் என்னும் சொல்லும் பிறந்தன.

"கானக் கோழியும் நீர்நிறக் காக்கையும்" (சிலப். 10: 116.).

கடல்வண்ணன் பண்டொருநாள் கடல்வயிறு கலக்கினையே" (சிலப். (17: 126).

"நீலித ழுண்கண்ணாய்" (கலித். 33 : 28).

"நீனிற மஞ்ஞையும்" (சிலப். 12: 34).

நீல்—நீலம்=நீலநிறம், நீலச்சாயம், நீலமணி, கருப்பு, கருங் குவளை, நீலமலை.

நீலன்=காரி (சனி). நீலி=காளி, அவுரி.

நீலக்கடம்பை, நீலக்காலி, நீலச்சம்பா, நீலச்சுரு, நீலநாரை, நீலமுள்ளி முதலிய எத்துணையோ நீலப்பொருட் பெயர்கள் தொன்று தொட்டு வழங்கி வருகின்றன.

நுகம்—யுக (g)—இ வே.

உத்தல்—பொருந்துதல். உத்தி=1. விளையாட்டிற் கன்னை (கட்சி) பிரித்தற்கு இவ்விருவராய் இணைதல்.

உத்திகட்டுதல் என்பது வழக்கு. தெ. உத்தி (dd).

2. நூலுரைகட்குப் பொருந்தும் நெறிமுறை.

"ஒத்த சூத்திரம் உரைப்பின் காண்டிகை
மெய்ப்படக் கிளந்த வகைய தாகி
ஈரைங் குற்றமும் இன்றி நேரிதின்
முப்பத் திருவகை உத்தியொடு புணரின்
நூல்என மொழிப நுணங்குமொழிப் புலவர்."
(தொல். 1598)

தொல்காப்பியம் கி. மு. 7-ஆம் நூற்றுண்டினதான வழிநூலே யாயினும், ஏனைமொழியிலக்கண நூல்கட்கெல்லாம் மிக முந்திய தாம்.

உ—உக—உகம்=இணை, நுகம்.
உகம்—நுகம்=ஏரிலும் வண்டியிலும் காளைகளைப் பூட்டும் மரம்.
"எருதே யிளைய நுகமுண ராவே" (புறம். 102).
ம. நுகம், க. நொக (g)

நுகக்கோல் என்பது இன்று பாண்டி நாட்டில் முகக்கோல் என்று திரிந்து வழங்குகின்றது. மோக்கால் என்பது அதன் கொச்சை வடிவம்.

உயிர்முதற் சொற்கள் நகரமெய்ம் முதலாவது இயல்பே.

எ—டு: இமை—நிமை, உந்து—நுந்து, ஊன்—நூன்—நீன், ஊக்கு—நூக்கு.

உ—யு² (இ. வே.).

உக. உகு—யுஜ் (இ. வே). ஒ. நோ: பகு—பஜ் (bh), புகு-புஜ் (bh).

உத்தி—யுக்தி

உகம்—யுக (g)

நுந்து—நுத் (d)—இ.வே.

உந்துதல்=முன் தள்ளுதல், தள்ளுதல்.

உந்து—நுந்து. நுந்துதல்=முன் தள்ளுதல், தள்ளுதல்; தூண்டுதல்.

நேயம்—ஸ்நேக

நெள்—நெய்—நே=1. அன்பு.

2. ஈரம். "நேஎ நெஞ்சின்" (புறம். 3).

நே—நேயம்=1. நெய், 2. எண்ணெய்.

3. அன்பு.

"நேயத்ததாய் நென்ன லென்னைப் புணர்ந்து"
(திருக்கோ. 39)

4. கடவுட்பற்று.

"நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி" (திருவாச. 1: 13).

நேயம்—நேசம்—நேசன்.

வடவர் காட்டும் ஸ்நிஹ் (ஒட்டு) என்னும் மூலம், நெய் என்னும் தென்சொற் றிரிபே.

பகு—பஜ் (bh)—இ. வே.

பகு—பக்கு=பிளவு,பை. பக்கு—பக்கம்=பகுதி, புறம். ஏட்டுப் புறம். பக்கம்—பக்கல்.

பக்கு—பாக்கு=பகுதி. பாக்கு—பாக்கம்=பட்டினப் பகுதி.

பாக்கு—பாக்கை=பாக்கம், ஊர், நகரப் பகுதி.

பகு—பகல்=நாட்பகுதி, நடுப்பகுதி, பகல்—பால்=வகுப்பு, பிரிவு. பகல்—பகர்=ஒளி.

பகு—பகவு=பிளவு, பகிர்வு. பகவு — பகவன்=பகிர்ந்தளிப்பவன், படியளப்பவன், ஆண்டவன்.

பகு—பகிர்.

பகு—பகுப்பு. பகு—பகுதி—பாதி. பகு—பகை. பகுதி—பஃதி.

பகு—பங்கு—பங்கி=பங்குள்ளது.

பங்கு—பாங்கு=பான்மை. பாங்கு—பாங்கர்=பக்கம்.

பாங்கு—பாங்கன்=பக்கத்திலிருப்பவன், தோழன்.

பகு—பா. பகு—பாகு=பகுதி, பக்கம், பாகன். பாகு—பாகன்= யானைப் பக்கத்திலிருந்து அதை நடத்துபவன்.

பாகு—பாகம். பாகு—பாகி=பாகமுள்ளது.

பாகு—பாகை=பகுதி, வரைப்பகுதி, பாகு—பாகர்=தேர்ப் பக்கச்சுவர்.

பா—பாது=பொருட் பங்கு. பாதீடு=பங்கீடு.

பா—பாத்தி=பகுதி, பயிரிடும் செய்ப்பகுதி. பாத்தி—பத்தி= பாத்தி, பகுதி, கட்டுரை கடிதம் முதலியவற்றின் தனிப்பகுதி (Para)

பத்தி—பந்தி=கூடியிருந்துண்பார் பகுதி, உண்பார் வரிசை.

பகு—வகு—வக்கு=வழிவகை. வக்கு—வாக்கு=பக்கம், திசை காற்று வாக்கு=காற்றுப் பக்கம் அல்லது திசை.

வகு—வகிர். வகிர்தல்=பிளத்தல். வகிர்—வகிடு=தலைமயிர் உச்சி வகிர்வு.

வகு—வகுதி=வகுப்பு. வகு—வகுப்பு | வகு—வகுந்து=வகுத்த வழி.

வகு—வகை=வேறுபட்ட வகுப்பு, வழிவகை.

வகு—வாகு=பக்கம், திசை.

பக்கம்—பக்ஷ (இ. வே.)

பங்கு—பங்க (bhanga)

பகவன்—பகவன் (bhagavan)

பாகம்—பாக (bhāga)

பந்தி—பங்க்தி (அ. வே.)

பக்கம், பாகம் என்னும் இரண்டும் பகு என்னும் ஒரே முதனிலையினின்று தோன்றியிருக்கவும், வடவர் அவற்றுள் முன்னதை ஆரிய இயல்பு வல்லொலிப் பகரத்திலும் (p), பின்னதைக் கனைப்பொலிப் பகரத்திலும் (bh), தொடங்கி யிருக்கின்றனர். அதற்கேற்ப, பக்கம் என்பதற்குப் பக்ஷ என்பதையும், பகவன், பங்கு,

பாகம் என்பவற்றிற்குப் பஜ்(bhaj) என்பதையும், மூலமாகக்கொண்டிருக்கின்றனர். இங்ஙனம் ஒருமூலச் சொற்களையே வெவ்வேறு மூலத்தின வாகக் காட்டுவது வடவர் வழக்கம்.

பக்ஷ என்பது பக்கு என்பதன் திரிபு. தாதுபாட என்னும் நூல் அதற்குப் பற்று, கொள், எடு என்றே பொருள் கூறும். ஆயின், வில்சன் அகரமுதலி பக்கம் (பக்ஷ) என்னும் சொற்கேற்பப் பக்கஞ் சார்தல் என்று பொருளுரைக்கும்.

பக்கம் என்னும் சொற்குத் தமிழிலும், பகுதி, கூறு, நூற்பகுதி, நூல், புறம் (side), ஏட்டுப் புறம் (page), அருகு, அண்மை, இடம், வீடு, நாடு, விலாப்புறம், சிறகு, இறகு, அம்பிறகு, கை, கையணி, நட்பு, அன்பு, சுற்றம், மரபு (வமிசம்), சேனைப்பகுதி, சேனை, பதினைந்து பிறைநாட்காலம், பிறைநாள், மேற்கோள் (Proposition), துணிபொருட் கூற்று, தன்மை எனப் பலபொருள்களுண்டு.

கை, சிறகு என்னும் சொற்கள் பக்கத்தைக் குறிப்பதுபோன்றே பக்கம் என்னும் சொல்லும் கையையும் சிறகையும் குறிக்கும். வடவர் சிறகுப் பொருளினின்று பறவைப் பொருளை விரித்திருக்கின்றனர் எனக் கருதலாம்.

பக்கம்—பக்ஷ—பக்ஷி = சிறகையுடையது.

இனி, சதுரக்கள்ளியில் தங்கும் ஒருவகைப் பறவை பக்கி எனப்படுகின்றது. "பக்கி யுவணங் கழுகு" (திருப்பு. 319) என அருணகிரி நாதரும் பாடியுள்ளார்.

பக (bhaga) என்னும் இருக்குவேதச் சொற்கு, "'dispenser', gracious lord, patron (applied to gods, esp. to Savitri), RV." என்று மா. வி. அ. பொருள் வகுக்கின்றது.

ஆகவே. பகவன் என்னும் சொற்கு, பகுத்தளிப்பவன், படியளப்பவன் என்பதே மூலப்பொருளாம். 'ஆண்டவன் படியளப்பான்.' என்று அடிக்கடி மக்கள் கூறுவதை நோக்குக.

"நமக்கும் படியளப்பார் நாரியோர் பாகர்" (தனிப்பாடல்).

பகவன் என்பது பல தெய்வங்கட்கும் பொதுப்பெயராய் வழங்கியதினலேயே, முழுமுதல் தெய்வமாகிய கடவுளைக் குறிக்க "ஆதி பகவன்" என்று அடைகொடுத்துக் கூறினர் வள்ளுவர்.

ஆதிபவகன் = ஆதிப்பகவன்.

வலி இடைமிகாதே பல கூட்டுச் சொற்கள் அக்காலத்து வழங்கி வந்தன.

எ—டு: மாரிகாலம், கார் காலம்.

பந்தி என்பது பத்தி என்பதன் மெலித்தல் திரிபே.

ஆயின், வடவர் பஞ்சன் (c) என்பதனொடு தொடர்பு படுத்திப் பச் (c) என்பதை மூலமாகக் காட்டுவர். அதன் விளக்கம் வருமாறு:—

பச் அல்லது பஞ்ச் = விரி, கைவிரி.

பஞ்ச்—பஞ்சன் = விரித்த கையிலுள்ள ஐந்துவிரல், ஐந்து.

பஞ்சன்—பங்க்தி = ஐம்பொருள் தொகுதி அல்லது வரிசை, தொகுதி, வரிசை, கூட்டம்.

வடவர் ஏமாற்றுக்கலையைக் காட்ட இஃதொன்றே அமையும்.

பஞ்சி—பஞ்சி

பைம்மை = பசுமை, இளமை, மென்மை, நொய்ம்மை.

பை—(பைந்து)—(பைஞ்சு)—பஞ்சு—பஞ்சி

ஒ. நோ: ஐ—ஐந்து—(ஐஞ்சு)—அஞ்சு.

நை—நைந்து—நைஞ்சு—நஞ்சு = நைந்து.

பட்டணம்—பட்டண

பட்டம் = பட்டையான துணி, பாய். பட்டம்—படம் = துணி, சீலை, சித்திரச்சீலை. திரைச்சீலை, .

படம்—படகு = பாய்கட்டிய தோணி.

பட்டம் = படகுவகை (பிங்). பட்டி = தெப்பம். பட்டி—பட்டிகை = தெப்பம், தோணி.

பட்டம்—பட்டணம் = படகுள்ள நெய்தல் நிலத்தூர்.

பட்டணம்—பட்டனம்—பட்டினம் = நெய்தல் நிலத்தூர், துறை நகர்.

"பனிநீர்ப் படுவிற் பட்டினம் படரின்" (சிறுபாண். 153).

இனி, பண்டம்—பட்டம் = பலபண்டம் (பிங்.) "பலபல தீவிற் பண்டம் பகர்வபட்டணமென்றுமே". (சூடா. 5: 37) என்றுமாம்.

பட்டம்—பட்ட

பட்டுதல் = தட்டுதல், அடித்தல். பட்டு—பட்டம் = பட்டை, பட்டையான பொருள், துணி, பெருங்கொடி, காற்றுடி, தகடு, பெயரும் பதவியும் பொறித்து அரசன் நெற்றியிலணியும் தகடு, பதவிப்பெயர், சிறப்புப்பெயர், பதவி. பெண்டிர் நுதலணி. ம. பட்டம்.

மேன்மேலும் தட்டுவதால் ஒரு பொருள் தட்டையாகும். பட்டுவ தாற் பட்டையாகும் என்பதும் அதுவே.

பட்டும் அறை பட்டறை. பட்டும் சாலை பட்டசாலை. பட்டும் அடை பட்டடை (anvil).

பட்டி—பட்டி ம பட்டி. த. பட்டி,

பட்டிகை—பட்டிகா

பட்டுதல் = தட்டுதல். பட்டு—பட்டி = பட்டை, மூங்கிற்பிளாச்சு, அதனாலமைந்த தொழு, ஏட்டிலெழுதிய பெயர் வரிசை, நாய்க் கழுத்து வார்.

பட்டி—பட்டிகை = அரைக்கச்சை, மேகலை, துணி, புண்கட்டுஞ் சீலை, ஓக(யோக)ப்பட்டி, உண்ணாழிகையைச் சுற்றியமைக்கும் அணிவேலை, பட்டியற்கல், ஏடு, அரசப்பட்டையம்

பட்டி—பட்டியல் = வரிச்சல், தூணின்கீழ் வைக்குங்கல், 'சரக்குப்' பெயர் வரிசை.

பட்டை = தட்டை, தட்டையானபொருள், மரப்பட்டை, மரவுரி, வாழைப்பட்டை, ஓலைப்பட்டை, மணிப்பட்டை, தோட்பட்டை, கழுத்துப்பட்டை, மினுகை (சரிகை)ப்பட்டை, பட்டைக்கோடு, பட்டையான திருநீற்றுப்பூச்சு, பட்டைத்தாறு, பட்டைத் தையல்.

தெ. பட்ட, பட்டெ; க. பட்டெ.

பட்டை—பட்டையம் (பட்டயம்) = அரசன் கொடுக்கும் செப்பாவணம்.

படகம்—படஹ (t) = பறை.

படகம் = அகமுழவுகளுள் ஒன்று (சிலப். 3: 27, உரை).

படம்—பட (t)

பட்டு—பட்டம் = பட்டையான துணி. பட்டம்—படம் = துணி, துணியிலெழுதிய ஓவியம், சித்திரச்சீலை, திரைச்சீலை, யானைமுக படாம், போர்வை, சட்டை, உடல்.

படம்—பட்ட

படம் = யானைமுகபடாம். 'படம்—படாம். ஒ. நோ: கடம்—கடாம்.

"வெங்கதக் களிற்றின் படத்தினல்" (கலிங். 89). (பிங்.).

படம்—பட (phaṭa), பணம்—பண (phaṇa)

பட்டம்—படம்=(பாம்பின் கழுத்து விரிவான) படம்.

படம்—பணம். "நாக பணந்திகழ்" (தேவா. 84: 4).

"பைந்நாப் படவரவு" (திருவாச. 34: 1).

படலம்—படல (ṭ)

படர்தல்=பரவுதல். படம்—படல்=ஓலை தட்டை மாறு முதலியவற்றாலாகிய கதவுபோன்ற அடைப்பு, உழுதநிலத்திற் பரம்படிக்கும் பரந்த மாறு, கண்ணிற் படரும் புரை.

படி—பட் (ṭh)

படுதல்=ஒலித்தல். படு—படி=ஒலியெழ வாயித்தல் (வாசித்தல்).

ஒ. நோ: ஓதை—ஓசை. ஓதுதல்=படித்தல். படி—பாடம்.

படி—ப்ரதி

பள்—படு. படுதல்=விழுதல். படு—படி. படிதல்=ஒன்றின்மேல் விழுதல், விழுந்து பதிதல், பதிந்து உருவம் அமைதல்,

நிலத்திற் பதிந்த பொருளின் வடிவம் நிலத்திலும், தாளிற்பதிந்த அச்சின் வடிவம் தாளிலும், அமைதல் காண்க.

படி=1 உருவம். "மயிலனூர்க்குப் படிவைத்து" (சீவக. 1156).

2. உடம்பு. "நினையாரவன்மைப் படியே" (திவ். இயற். திருவிருத். 93).

படிந்த உருவம் படிந்தபொருளை ஒத்திருத்தலால், படி என்னும் சொல் ஒப்புமைக் கருத்தை உணர்த்திற்று.

அப்படி=அதுபோல். "படியொருவ ரில்லாப் படியார் போலும்" (தேவா. 44: 7).

படி=ஒத்தவடிவம் (True copy). "கிழித்த வோலை படியோலை" (பெரியபு. தடுத்தாட். 56).

மூலமும் படியும் என்னும் வழக்கை நோக்குக.

படி—படிவு—படிவம். படி—படிமை—படிமம்.

படி—வடி (கொச்சை). படிவு—வடிவு. படிவம்—வடிவம்.

படிமை—ப்ரதிமா

படி—படிமை=1. வடிவம் "கட்டளைப் படிமையிற் படியாது" (சீவக 2752).

2. பாவை.

3. வழிபடு தெய்வ வுருவம்.

4. நோன்பு, தவம்

"பல்புகழ் நிறுத்த படிமை யோனே" (தொல். சிறப்புப்.)

ப்ரதிமா—பதுமை—பொம்மை.

பண்டாரம்—பாண்டார (bh)

பண்—பண்டு—பண்டம்=பண்ணப்பட்ட பொருள்.

பண்டம்—பண்டாரம்=சரக்கறை, பொக்கசம் (Treasure) பொக்கசச்சாலை (Treasury) களஞ்சியம், பொக்கசச்சாலையுள்ள கோயில் அல்லது அரண்மனை, பல்பொருட் சரக்கறைபோன்ற பெரும் பண்டிதன், பெரும்புலமையால் உலகப்பற்று விட்ட துறவி, போலித் துறவியான இரப்போன்.

பண்டார வாரியம்=கோயில் மேற்பார்வைக் குழுவார். (T. A.-S. I. 293).

பண்டாரம்—பிண்டார

பண்டாரம்=போலித் துறவியான ஆண்டி, இரப்போன்.

வடவர் பிண்டம் (சோற்றுருண்டை) வாங்கிப் பிழைப்பவன் என்று மூலப்பொருள் கூறுவர். இதற்குப் பண்டாரம் என்னும் சொல்லைப் பிண்டார என்று திரித்துக்கொண்டதே காரணம்.

பண்டிதன்—பண்டித

பண்டு—பண்டம்—பண்டிதன்=பல பொருள்களை அறிந்த புலவன். பண்டிதன்—பண்டிதம்=புலமை.

பேரா. பரோ வேறு வகையில் இச்சொல்லைத் தென்சொல்லாகக் காட்டுவர். அவர் கூறுமாறு:—

"paṇḍita—'wise, learned'; properly 'ripened, mature' cf. Te. paṇḍu 'to ripen, mature; ripe', paṇḍa 'wisdom, intelligence', Pj. paṇḍ—'to mature', Gō. Kol. paṉḍ—'to ripen'.—The Sanskrit Language, p. 384.

வடவர், பண்டா (ஓதி, அறிவு, கல்வி) என்னும் சொல்லினின்று சிலரும், ஸ்பந்தித (துடிப்பு) என்னும் சொல்லினின்று சிலரும், ஆக இரு வேறு வகையில் பண்டிதன் என்னும் சொல்லைத் திரிப்பர். பண்டா என்னும் சொல்லும் பண்டம் என்பதின் திரிபே. துடிப்பை மனத்துடிப்பென்பர்.

பண்ணியம்—பண்ய

பண்—பண்ணியம்=பண்ணப்பட்ட பல்வேறு பொருள்.

"கொடுப்போர் கடைதொறும் பண்ணியம் பரந்தெழ" (மணி: 7: 124).

வடவர், மெச்சத்தக்கது, வாங்கவும் விற்றற்கும் உரியது என்று செயற்கை முறையில் வெவ்வேறு மூலப்பொருள் கூறுவர்.

பதக்கம்—பதக

பட—பத—பதக்கம்=பரந்த அணி. ஒ. நோ: படாகை—பதாகை.

பதம்—பத (இ. வே)

பதி—பதம்=நிலத்திற் பதியும் காலடி. பதம்—பாதம்—பாதை= பாதம் பட்டு உண்டாகும் வழி.

பாதை என்னும் சொல் வடமொழியில் இல்லை, ஆயின், தியூத்தானியத்தில் உண்டு. OE paeth, E path.

பாதம்—பாத (இ. வே.)

பதவி—பதவீ

பதி—பதம்=பதிந்திருக்கும் நிலை அல்லது நிலைமை, பதவி.

"பிரிவில் தொல்பதந் துறந்து" (கம்பரா. திருவடி சூட்டு. 101).

பதம்—பதவு—பதவி.

பதிகம்—ப்ரதீக

பல்—பது—பத்து. பது—பதிகம்=1. ஒரு பொருள்பற்றி வரும் ஒரே வகைப் பத்துச் செய்யுள்.

2. பத்து அல்லது பதினொரு குறிப்பைக் கூறும் சிறப்புப் பாயிரம்.

"ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாய்எண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே." (நன். 47)

"காலங் களனே காரணம் என்றிம்
மூவகை யேற்றி மொழிநரும் உளரே" (ஷெ 48)

தொல்காப்பியம், நன்னூல், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியவற்றின் சிறப்புப்பாயிரம், பெரும்பாலும் இம்முறையைத் தழுவி அமைந்தவையே.

மா. வி. அ. ப்ரதி-அக என்பதன் திரிபென்று ப்ரதீக என்னுஞ் சொல்லைக் காட்டி, நோக்கியது. நோக்கு, தோற்றம், முகம், முற்பகுதி, செய்யுளின் முற்பகுதி முதற்சொல் என்று பல்வேறு மேற்கோள்களை இடர்ப்பட்டுப் பொருத்தி, வேறுபட்ட கருத்துக்களைத் தொடர்புபடுத்தி யிருப்பது, அதன் செயற்கைத் தன்மையைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

பப்படம்—பர்ப்பட (t)

அப்பளித்தல் = சமனாகத் தேய்த்தல். சுவரை அப்பளித்துப் பூசுகிறான் என்னும் வழக்கை நோக்குக.

அப்பளி—அப்பளம் = சமனாகத் தேய்த்தமைக்கும் உழுத்தமா வட்டம்.

"மேவுகபந் தீர்க்குங்காண் ஓதுமுழுந் தப்பளம்" (பதார்த்த. 1426).

தெ. அப்பளமு—அப்படமு—, க. அப்பள—பப்பள. ம. பப்படம்.

பரம்—பர

பரமன்—பரம

புரம் = மேல், மேன்மாடம், உயர்ந்த கோபுரம், கோபுரமுள்ள நகர்.

புரை = உயர்வு. "புரையுயர் வாகும்" (தொல். 785).

புரம்—பரம் = 1. மேல், மேலிடம்.

"அகிற்புகை......பரங்கொடு போகி" (இரகு. நகர. 4).

2. மேலுலகம்.

"இகபரமாகி யிருந்தவனே" (திருவாச.)

3. மேலானது. "விரதமே பரமாக" (திருவாச. 4: 50).

4. வீடு (மோட்சம்) (பிங்.)

5. மேலோன், கடவுள். "காணலாம் பரமே" (திருவாச. 5: 44).

பரம்—பரமன் = கடவுள். "மாநட மாடும் பரமனார்" (தேவா. 600: 1).

பரமன்—பிரஹ்மா (B)

வடவர் பர என்னுஞ் சொற்கு உயர்ச்சிக் கருத்தோடு, தொலைவு, அயன்மை, பிறிதாகை, பின்மை முதலிய கருத்துக்களையும் சேர்ப்பர். அதோடு பரம என்னும் வடிவைப் பர என்பதன் உச்சத்தரமாகக் கொள்வர்.

ஆரியர் முத்திருமேனி (திரிமூர்த்தி)க் கொள்கையைப் படைத்தமைத்தபின், படைப்புத் தெய்வத்தைக் குறிக்கப் பரமன் என்னும் சொல்லினின்று பிரஹ்ம என்னும் வடிவைத் திரித்துக் கொண்டனர்.

பரிதி—பரிதி (dh)

புரிதல்=வளைதல். புரி—பரி—பரிதி=1. வட்ட வடிவு. (திவா.).
"பரிதி ஞாலத்து" (புறம். 174).
2. கதிரவனை அல்லது திங்களைச் சுற்றிய கோட்டை.
"வளைந்து கொள்ளும் பரிதியை" (இரகு. இந்து. 7).
3. கதிரவன்.
"பரிதியஞ் செல்வன்" (மணி. 4: 1).
4. தேருருளை. "அத்தேர்ப் பரிதி" (களவழி. 4).
5. சக்கரப் படை. "பரிதியிற் றுரட்டிய வேலை" (கல்லா. 82 : 23).
6. சக்கரவாகப் புள். "பரிதியங் குடிங்கு கூடுமே" (இரகு. நாட்டுப். 40).
பரிதி—பருதி.

பல்லக்கு—பர்யங்க்க

ம. பல்லக்கு, க. பல்லக்கி. பிரா. பல்லங்க்க.
"பல்லக்குஞ் சிவிகையுந் தாங்கி" (தொண்டை. சத. 87).
பரி-அஞ்ச்=சுற்றித் திரும்புவது, சுழல்வது 'என்று வடவர் மூலங் காட்டுவது பொருந்தாது.

பல்லி—பல்லீ

புல்லுதல்=பொருந்துதல், ஒட்டுதல். (புல்லி)—பல்லி=சுவரில் ஒட்டிக்கொண்டிருப்பது.

பலகை—பலக (ph)

பலகை=1. பரந்திருக்கும் தட்டு. "பொற்பலகை யேறி" (திருவாச. 16 : 1).

2. கேடகம். "பலகை யல்லது களத்தொழியாதே" (புறம். 282).

பலம்—பல

பலம்=ஒரு நிறை (4 கஃசு).

பலா—பல (ph)

பல்—பரு. பல்—பலா=பெரும் பழம். "சிறுகோட்டுப் பெரும் பழம்" (குறுந். 18) என்றதை நோக்குக.

"பலாப்பழத் தீயிஞெப்பாய்" (திருவாச. 6: 16).

பலா—பலவு. "தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே" (புறம். 109).

பலாப்பழம் தமிழகக் குறிஞ்சி நிலத்திற்குச் சிறப்பா யுரியதை அறிந்திருந்தும், வடநாட்டுப் பிராமணர் மட்டுமன்றிச் சென்னைப் ப. க க. த. அ. தொகுத்த தமிழ்நாட்டுப் பிராமணரும், பலா என்னுஞ் சொல்லை வடசொல்லாகக் காட்டி யிருப்பது வியக்கத்தக்க நெஞ்சழுத்தமே.

பவளம்—ப்ரவால

பவர்=கொடி. பவளம்=கொடிபோற் கடலுட் படர்வது.
"பவளத் தன்ன மேனி" (குறுந். 1).
ப்ரவால(வ.)=இளந்துளிர். இது மூலமெனல் பொருந்தாது.

பழு=பல், பழம்—பல (ph)—இ. வே.

பள்—பண்டு=பழம், பழமை. தெ. பண்டு=பழம்.

பள்—பழு—பழம்—பழன், பழம்—பயம். பழன்—பயன்.

வடவரும் பல என்னும் சொல்லைப் பயன் என்னும் பொருளில் ஆள்வர்.

பள்ளி—பல்லி

பள்=பள்ளம், படுக்கை. பள்—படு.

பள்—பள்ளி=1. படுக்கை. பள்ளிகொண்டான், பள்ளியெழுச்சி என்பன உலக வழக்கு.

2. படுக்கும் இடம் அல்லது அறை. 3. படுக்கும் அறையுள்ள வீடு. 4. கோயில். 5. அரண்மனை. 6. ஊர். 7. வேற்றூரார் படுக்கும் மடம். 8. மடத்தில் அல்லது கோயிலில் நடைபெறும் கல்விச்சாலை.

8. மதக் கல்வி பயிற்றப் பெறும் முனிவர் குடியிருப்பு. 9. சமண அல்லது புத்தப் பள்ளி. 10. இடம்.

"சொல்லிய பள்ளி நிலையின வாயினும்." (தொல். 101).

வடவர் பல் (pall)=செல் என்று மூலங்காட்டுவது இம்மியும் பொருந்தாது. அவர் வயப்பட்ட மா. வி. யும் "prob. to explain the following words" என்று கூறுதல் காண்க.

பளிங்கு—ஸ்படிக (ph, ṭ)

பள்—பள, பளபள—பளபளப்பு. பளிச்சு. பளீர் என்பன மின்னற் குறிப்புக்கள்.

பள்—பளிங்கு=1 பளிங்குக்கல்.

"அடுத்தது காட்டும் பளிங்குபோல்" (குறள். 706).

2. கண்ணாடி. 3. கற்பூரம்.

பள—பளிதம்=கற்பூரம்.

"பாசிலைத் திரையலும் பளிதமும் படைத்து" (மணி. 28: 243).

பாண்டியன்—பாண்ட்ய

பள்—பண்டு—பண்டி—பாண்டி=எருது, காளை (பரிபா. 20: 17, குறிப்பு).

பாண்டி=பாண்டில்=எருது "மன்னிய பாண்டில் பண்ணி" (சீவக 2054.).

பாண்டி—பாண்டியன்=காளையன். வயவன் (வீரன்).

பாண்டியர் குடி குமரிக்கண்டத்தில் கி. மு. 10,000 ஆண்டுகட்கு முன் தோன்றியது.

பாதிரி—பாடலி (ṭ)

" கல்லாரே யாயினுங் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவுறி நாளுந் தலைப்படுவர்—தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு." (நாலடி. 139).

பாதிரியாற் பெயர்பெற்றது திருப்பாதிரிப்புலியூர். அது வடமொழியிற் பாடலிபுர அல்லது பாடலிபுத்ர எனப்பட்டது. இப்பெயரே மகத நாட்டுத் தலைநகர்க்கு இடப்பெற்றது. அது இன்று பாட்னா என்று வழங்குகின்றது.

தெ. பாதிரி, க. பாதிரி.

பிங்கலை—பிங்கலா

பிங்கலை = மூச்சுவிடும் மூந்நாடிகளுள் வலத்ததாகச் சொல்லப் பெறுவது.

பிசை—பிஷ் (இ. வே)

பிண்டம்—பிண்ட (இ. வே.)

பொள்—பொழி. பொழிதல் = நிறைதல்.
"பொழிமணித் தண்டுண்" (பெருங். உஞ்சைக். 47 110).
பொழித்தல் = திரட்டுதல். பொழிப்புரை = திரட்டுரை
பொழி = கணு. "பொழியமை மணித்தூண்" (பெருங். உஞ்சைக் 48: 87).

பொழி—பொழில் = பெருமை (பிங்.), சோலை, நாடு, ஞாலம்.
பொள்—பிள்—பிண்டு—பிண்டி—பிண்டம்.
பிண்டு = பிண்டம். "பிண்டாலம் வித்தின்" (திருமந். 3025).
பிண்டித்தல் = 1. தொகுத்தல். 2. திரட்டுதல்.
"பிண்டித்து வைத்தவுண்டியை" (தொல். பொ. 63, உரை).
பிண்டி = 1. கூட்டம், 2. வடிவம் (சிலப். 3: 26, உரை).
பிண்டம் = 1. சோற்றுத்திரள்.
"பிண்ட மேய பெருஞ்சோற்று நிலையும்" (தொல். பொ. 65.)
2. உருண்டை (பிங்). 3. தென்புலத்தார்க்கிடும் சோற்றுருண்டை 4. சதைத்திரள்.

"உறுப்பில் பிண்டமும்" (புறம். 28).

5. உடல். ' உண்டி முதற்றே உணவின் பிண்டம்" (புறம். 18.).

6. தொகுதி. "பிரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்" (புறம். 184).

7. தொகுத்துக் கூறும் நூற்பா. "பிண்டந் தொகைவகை" (நன். 20). 8. பொழிப்புரை.

9. மூவதிகாரமும் திரண்ட முழு இயற்றமிழ் நூல்.
பிண்டி—பிடி பிடித்தல் = 1. திரட்டுதல். ஒ. நோ: தண்டி—தடி.
"பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது." (பழமொழி).
பொரிவிளங்காய் பிடித்தல், கொழுக்கட்டை பிடித்தல் என்னும் வழக்குக்களை நோக்குக.

2. கை நிறையத் திரட்டியதுபோல் இறுகப் பற்றுதல், பற்றுதல், குறைத்தல், அகப்படுத்துதல், சேர்த்தல், தாங்குதல், விலைக்குக் கொள்ளுதல். மேற்கொள்ளுதல், விருப்பமாதல்

பிடி—பிடிப்பு, பிடிமானம், பிடித்தம்.

பிடி=கைப்பிடி, குடைக்காம்பு.

பிடிகல், பிடிகாசு, பிடிகாரன், பிடித்தராவி, பிடித்தாட்டிக்கழி, பிடிகொடு, பிடித்தபிடி, பிடிசீலை, பிடிதண்டம், பிடிநெல், பிடிபடு, பிடியரிசி, பிடிமண், பிடியாள், பிடிவிடு முதலிய எத்துணையோ கூட்டுச் சொற்கள் தொன்றுதொட்டு வழங்கிவரும் உலகவழக்காம்.

பிடித்து=1. கைப்பிடியளவு. "பிடித்தெருவும் வேண்டாது" (குறள் 1037.)

2. தொடங்கி (வி. எ.).

இவையெல்லாம் பிண்டி என்னும் சொல்லின் தொகுத்தல் வடிவான பிடி என்பதன் திரிபே.

பிண்டோதகம், சபிண்டீகரணம் முதலிய வடமொழிக் கூட்டுச் சொற்களை நோக்கி மயங்கற்க.

வடவர் காட்டும் பிண்ட் என்னும் மூலம் பிண்டி என்பதன் ஈறு கேடே.

பிண்ணாக்கு—பிண்யாக

பிள்+நாக்கு=ஆட்டிய எட்பிண்டத்தின் நாக்குப் போன்ற பிளவு.

பித்தம்—பித்த

பித்து—பித்தம். பிதற்று—பேத்து—பித்து=பிதற்றுநிலை, அந்நிலை நாடி, அறிவுமயக்கம், மயக்கிற்குக் காரணமான கைப்புநீர், அந்நீர் சுரக்கும் உறுப்பு.

மா. வி அ. "etym. unknown" என்று கூறுதல் காண்க.

பித்த என்னுஞ் சொல்லினின்று பைத்ய என்னுஞ் சொல்லைத் திரித்துள்ளனர் வடவர்.

புகு—புஜ்[3] (bh)—இ வே.

புகுதல்=உட்செல்லுதல், வாய்க்குட் செல்லுதல்.

புகு—புகா=வாய்க்குட்செல்லும் உணவு. ஒ. நோ: உள்—உண்.

"புகாஅக் காலைப் புக்கெதிர்ப் பட்டுழி" (தொல். 1053).

புகா—புகவு=உணவு. "பழஞ்சோற்றுப் புகவருந்தி" (புறம் 395).

புகா—புவா—புவ்வா (கொச்சை).

புகு—புஜ். ஒ. நோ: பகு—பஜ்.

புஜ் என்னும் அடியினின்றே, புக்தி, போக்த்ரு, போக, போகி, போக்ய, போஜ, போஜன முதலிய சொற்கள் பிறந்துள்ளன.

புட்டம்—ப்ருஷ்ட (t)—இ. வே.

புள்—புட்டி=உட்டுளையுள்ளது. ஒருவகைக் கலம், சிறுபடி, குடுவை, குப்பி. தெ., க புட்டி (dd). புட்டி—புட்டில்=அம்பறுத் தூணி. தெ. புட்டிக.

புட்டி=குடுவைபோன்ற பறவையுடம்பின் பிற்பகுதி. புட்டி—பிட்டி.

கொழுத்த கோழிப்புட்டியை நேய்க்குடம் என்று கூறும் வழக்கை நோக்குக.

புட்டி—புட்டம்=குடுவை போற் புடைத்த மாந்தன் உடம்பின் பின்பக்கம் ஒ. நோ: குண்டு—குண்டி. புட்டம்—பிட்டம்.

(மா. வி. அ, ப்ர-ஸ்த ("standing forth prominently"=எடுப்பாய் முன்நிற்பது) என்பது மூலமாயிருக்கலாம் என்று கருதுகின்றது.

புடம்—புட (t)

புள்—புழு. புழுத்தல்=புழுத்துளைத்தல். புழு—புழல்=உட்டுளை.

புழு—புழை=துளை, குகை. புழை—புடை=குகை.

புழு—(புழம்)—புடம்=பொன்னுருக்குங் குகை.

ம. புடம். ஒ. நோ: குழை—குகை—குவை. குழை—குடை—குடைவு.

புடம்—புடம்பு=குகை. "மலைப்புடம்புந் தேடி யொளிவார்" (பஞ்ச. திருமுக. 1895).

புடலை—படோல (t)

புள்—புழு—புழல்—புடல்=உட்டுளையுள்ளகாய். புடல்—புடலை. ஒ. நோ: குழல்—குடல். க. படல, ம. படோலம், தெ. பொட்ல.

புரசு—பலாச

புரம்—புர (இ. வே.)

புரம்=உயர்ச்சி, உயர்ந்த கட்டிடம், மேன்மாடம், கோபுரம், கோபுர நகர். (பிங்.)"மதுரையந்தண் புரத்தின்கண்" (திருவாலவா. 39: 1)., கோபுரமுள்ளகோயில், கோயில். "மூவர்க்கோதிய புரமும்" (கல்லா. 24: 23).

புரி—ப்ரீ (இ. வே.)=விருப்பப்படுத்து, மகிழ்வி, விரும்பு.

புரிதல்=விரும்புதல். "புகுமுகம் புரிதல்" (தொல். பொ. 261).

புரு—ப்ரூண (bh)—இ. வே. L embryo.

புரு=குழந்தை. புரு—பிரு—பிருக்கு=இளம்பிஞ்சு.

ஒ. நோ: உரு—அரு—அரும்பு.

குரு—கரு=சூல், பீள், முட்டைக்கரு, முட்டை, குழந்தை. குட்டி.

நுரு=தளிர். நுரு—தொரு=இளம்பிஞ்சு.

முரு—முருகு=இளமை.

புருவம்—ப்ரு (bh)—இ. வே.

புரிதல்=வளைதல். புரி—புரிவு—(புரிவம்)—புருவம்.

"கொடும்புருவங் கோடா மறைப்பின்" (குறள். 1086).

சென்னைப் ப. க. க. த. அ. வடசொல்லை bhruva என்ற வடிவிலேயே குறிக்கின்றது.

புரை—புர

புரை=1. துளை. 2. அறை. ஆக்குப்புரை=சமையற் பந்தல் மறைப்பு அல்லது கொட்டகை.

3. வீடு. "புரைபுரை யாலிவை செய்யவல்ல" (திவ். பெரியாழ். 2: 9: 1).

4. கோயில்.

"புரைவயிற் புரைவயிற் பெரிய நல்கி" (பதிற்றுப். 15: 37).

பூ—பூ (bh)—இ. வே.

புல்—புள்—புழு—புகு. புகுதல்=தோன்றுதல்.

புகு—பூ. பூத்தல்=1. தோன்றுதல்.

"பூத்திழி மதமலை" (கம்பரா. கும்பகர். 315).

2. படைத்தல். "ஞாலமெல்லாம் பூத்தோனே" (பாரத கிருட்டிண. 12).

3. பெற்றெடுத்தல். "ஒரு திருவைப் பூத்தனள்" (பிரமோத். 8: 15).

4. இருத்தல். "பூத்தலிற் பூவாமை நன்று" (நீதி. 6).

புகு—பொகு—பொகில்=அரும்பு. "பொகில்பிடித் தலருஞ் சந்தப் பொதும்பர்" (இரகு. குசனயோ. 63).

பொகில்—போகில்=அரும்பு (பிங்). பொகு—போ—போத்து= வளார், சிறு புதுக்கிளை.

போத்து வெடித்தல் என்பது மரபு.

மலரைக் குறிக்கும் பூ என்னும் சொல் வேறு. அது பொல் என்னும் அடியினின்று பிறந்தது. பொல்—பொலி—பொலிவு. பொல்-பூல்—பூ. பூல் என்னும் வடிவம் இன்று இந்தியில் வழங்குகின்றது.

பூசு—பூஜ், பூசை—பூஜா

பூசுதல்=கழுவுதல். "நீருண்டார் நீரான்வாய் பூசுப" (நான் மணிக். 35).

முகம்பூசுதல் என்பது தென்பாண்டி வழக்கு.

பூசு—பூசை=தெய்வப் படிமையை நீராட்டிச் செய்யும் வழிபாடு. பூசு—பூசனை. "சிறப்பொடு பூசனை செல்லாது" (குறள். 18).

பூசை—பூசையாரி—பூசாரி. தலையாரி என்னுஞ் சொல்லிற்போல் ஆரி என்பது ஓர் ஈறு.

ஆரியர்க்கு வேதகாலத்தில் வேள்வி வணக்கமே யன்றி உருவ வழிபா டிருந்ததில்லை யென அறிக.

பூதம்[1]—பூத (bh)—இ. வே.

பூத்தல்=தோன்றுதல். பூ—பூது—பூதம்=தோன்றியது, ஐம் பூதங்களுள் ஒன்று.

"வளியென வரூஉம் பூதக் கிளவியும்" (தொல். 242).

பூதம்[2]—பூத (bh)

ஊதாங்குழலால் நெருப்பூதுவதைப் பூத்துப் பூத்தென ஊதுகிறான் என்பது வழக்கு. காற்றூதுவதால் துருத்தியும் ஊத்தாம்பையும் புடைக்கும்.

ஊதுதல்=வீங்குதல், பருத்தல்.

ஊது—பூது—பூதல்—பூதலி. பூதலித்தல்=பருத்தல், தடித்தல். பூது—பூதம்=பருத்தது, பருத்த பேய்.

பூதக்கால்=யானைக்கால். பூதக்கண்ணாடி=பெருக்கிக்காட்டும் கண்ணாடி.

இனி, பொத்து—பொது—புது—பூது—பூதம் என்றுமாம். புதா = பெருநாரை. பொத்து—பொத்தை=பருமிளகாய்.

புதல்—புதர்=அடர் செடி. புதை=அடர்காடு, அம்புக்கட்டு.

புதை — பூதை = அம்புக் கட்டு. பூதி=பொது. பொது—பொதும்பு—பொதும்பர்.

மா. வி. அ.வும் செ. ப. க. க. த. அ. வும் இருவேறு பூதச் சொல்லையும் ஒன்றாகக் கூறியிருப்பது தவறாம்.

பூதி—பூதி (bh)

புழுதி—பூதி=1. புழுதி (சூடா). 2. சாம்பல். 3. திருநீறு (பிங்.). "பூதியணி பொன்னிறத்தர்" (தேவா. 592 : 2).

ஒ. நோ : கொழுது—கோது, பொழுது—போது.

பெட்டகம்—பேட்டக

பிள்ளுதல்=பிளத்தல், விரிதல், அகலுதல்.

பிள்—பிழா=1. வாயகன்ற ஓலைக்குட்டான். (நெல்லை வழக்கு) "மலர்வாய்ப் பிழாவிற் புலர வாற்றி" (பெரும்பாண். 276).

2. இறைகூடை. 'ஓங்குநீர்ப் பிழாவும்" (சிலப். 10:111).

பிழா—பிட (ṭ)

பிழா—பிழவு—பிடவு—பிடகு—பிடக்கு=பூத்தட்டுப் போன்ற புத்த மறைநூல். "பிடக்கே யுரை செய்வார்" (தேவா. 245 : 10).

பிடகு—பிடகம்=1. தட்டுக்கூடை.

2. புத்தமறை (திரிபிடகம்). "பெரியோன் பிடக நெறி" (மணி. 26 : 66).

பிடகம்—பிடக (ṭ)

பிடகு—பிடகை=பூத்தட்டு. "பிடகைப் பெய்த கமழ்நறும் பூவினர்" (மதுரைக். 397).

பிடகை—பிடகா (ṭ)

பிள்—பெள்—பெட்டி=1. வாயகன்ற வட்டமான நார்ப்பின்னற் கலம். 2. வாயகன்ற சதுர அல்லது நீள்சதுர மரக்கலம்.

பெட்டி—பேட்டீ

வடமொழியில் எகரமின்மையாற் பெட்டி பேட்டி என்றாயிற்று.

பெட்டி—பெட்டகம்=1. பெட்டி. "ஆங்கிலங்கு மளப்பரும் பெட்டகம்" (திருவாலவா 27 : 22).

2. கட்டுப்பெட்டி

பெட்டகம்—பேட்டக

பெள்—பேழ்=அகன்ற. பேழ்வாய்=அகன்றவாய்.

"பேழ்வாய்... .....பேய்மகள்" (திருமுரு. 47).

பேழ்—பேழை=1. பெட்டி. "அருங்கலப் பேழை" (சீவக. 557);

2. கூடை. 3. மரக்கலம் (Arc).

பேழை—பேட (t)

பெரு(கு)—ப்ருஹ் (b)—இ. வே.

பல்—பரு—பெரு—பெருகு.

பெருங்கதை—ப்ருஹத் கதா.

பெருவுடையார்=ப்ருஹத் ஈஸ்வர

பே—பீ (bh)

பேபே என்பது அச்சக் குறிப்பு.

பே=அச்சம். "பேஎமுதிர் கடவுள்" (குறுந். 87).

பே—பேம்=அச்சம்.

"பேம்நாம் உரும்என வரூஉங் கிளவி
ஆமுறை மூன்றும் அச்சப் பொருள." (தொல். 848).

பே—பேய்=அச்சம், அஞ்சப்படும் ஆவி.

பே—பீ—பய=அச்சம்.

பேம்—பேன (ph)

பே=நுரை (பிங்.). பே—பேம்=நுரை.

"பேஎ நாறுந் தாழ்நீர்ப் பனிச்சுனை" (இறை. 7, உரை).

அச்சத்தினற் பேய்கோட்பட்டவன் வாயில் நுரை தள்ளுவது இயல்பாதலால், அச்சக் கருத்தினின்று நுரைதள்ளற் கருத்துத் தோன்றியிருக்கலாம். பேம்=அச்சம்.

OHG feim, OE fām, E foam.

பேசு—பாஷ் (bh)

பே—பேசு. பேசுதல்=உதடசைத்துச் சொல்லுதல், மொழிதல், உரையாடுதல். பகரம் இதழ்ப் பிறப்பினது.

பேசு—பேச்சு=சொல், உரை, சொற்பொழிவு, மொழி.

பொத்தகம்—புஸ்தக

புல்லுதல்=பொருந்துதல். புல்—பொல்—பொரு—பொருந்து—பொருத்து—பொத்து—பொட்டு.

பொத்துதல்=பொருத்துதல், சேர்த்தல், தைத்தல், மூட்டுதல், மூடுதல்.

பொத்து—பொத்தகம்=பொத்திய (சேர்த்த) ஏட்டுக் கற்றை, எழுதிய ஏட்டுத் தொகுதி.

சுவடி சேர்த்தல் என்னும் வழக்கை நோக்குக.

சும்மை=தொகுதி. சும்—சுவ்—(சுவள்)—(சுவண்)—சிவண்.

சிவணுதல்=பொருந்துதல், ஒத்தல். சுவண்—சுவடு=பாதம் நிலத்திற் பொருந்திய தடம். சுவடு—சோடு=இணை, இரட்டை, இணையுள் ஒன்று, ஒப்பு, செருப்பிரட்டை. சுவடு—சுவடி=இணை, கற்றை, கட்டு, பொத்தகம்.

கணவனும் மனைவியும் சுவடியாய்ப் போகிறார்கள் என்னும் வழக்கை நோக்குக. சுவடி—சோடி=இணை.

சுவடித்தல்=பொருத்தி அழகுபடுத்துதல். சுவடி—சோடி—சோடணை=அழகுபடுத்தல் (அலங்கரிப்பு).

பொட்டு=மண்டையோட்டுப் பொருத்து. பொட்டுதல்=பொருத்துதல், கட்டுதல். பொட்டு—பொட்டணம்.

பொத்தகம்=1. நூற் புத்தகம்.

"நிறைநூற் பொத்தகம் நெடுமணை யேற்றி" (பெருங். உஞ்சைக். 34 : 26).

2. கணக்குப் புத்தகம்.

"பொத்தகப்படி குழி" (S. I. I. iii, 80).

பொத்தகம்—புத்தகம். "புத்தகமே சாலத் தொகுத்தும்" (நாலடி. 318).

வடவர் காட்டும் மூலம் புஸ்த் என்பது. அதற்கு மா. வி. அ. "மதி அல்லது அவமதி (?)" என்றும், தாது பாடம் (Dhātupāṭha) கட்டு என்றும், பொருள் கூறியுள்ளன. பிந்திய பொருளில் அது பொத்து என்பதன் திரிபே.

ஆரியர்க்கு முதல்நூல் வேதம் என்றும், அது நீண்டநாள் எழுதப்படாதிருந்து எழுதாக் கிளவி என்றும் கேள்வி என்றும் பெயர் பெற்றதென்றும், அறிக.

பொறு—ப்ரு (bh)—இ. வே.

பொல்—பொரு—பொறு. பொறுத்தல்=சுமத்தல், தாங்குதல், தாளுதல், மன்னித்தல், ஏற்றுக்கொள்ளுதல், அமைதியாய் நுகர்தல், காத்திருத்தல்.

"சிவிகை பொறுத்தானோ டூர்ந்தா னிடை" (குறள். 37).
இதில் பொறுத்தல் சுமத்தலைக் குறித்தல் காண்க.

மகள்—மஹிலா

மழ—மழவு—மகவு. மழ—மக—மகன், மகள்.
மகள்= 1. புதல்வி. "நல்கூர்ந்தார் செல்வ மகள்" (கலித். 56).

2. பெண். "ஆய மகணீயாயின்" (கலித். 107).

3. மனைவி. "மனக்கினி யாற்கு நீமக ளாயதூஉம்" (மணி 21 : 30).

வடவர் காட்டும் மஹ் என்னும் மூலம் மகிழ், மகிழ்வி என்று பொருள்படும்.

மகுடம்—மகுட (ṭ) முகுட (ṭ)

முகம்—முகடு=மூக்குப்போன்ற கூரையுச்சி.
முகடு= 1. உச்சி. "முகடு துமித்தடுக்கிய பழம்பல் லுணவின்" (பெரும்பாண். 246).

2. வீட்டின் உச்சி.

3. வானமுகடு. "வானெடு முகட்டை யுற்றனன்" (கம்பரா. மருத்து. 30).

4. தலை. "முகடூர் மயிர்கடிந்த செய்கையாரும்" (தேவா. 936 : 10).

5. உயர்வு. "முனிமை முகடாய மூவா முதல்வன்" (சீவக. 1609).

முகடு—(முகடம்)—மகுடம்=உச்சிமயிர் முடி, மணிமுடி, தேர் முடி, ஒருபொருட் பல பாட்டுப் பொது முடிவு.
இனி, முகிழ்—முகிழம்—முகுளம்—முகுடம்—மகுடம்=மொட்டுப் போற் கூம்பிய மணிமுடி என்றுமாம்.

"மாமொட் டொடிந்து ....மான்றேர் சிதைய" (பாரத. நான்கா நாள். 24).

பேரா. பரோ. இச்சொல்லைத் தென்சொல்லென்றே கூறுதல் **காண்க.** (The Sanskrit Language, P. 381).

முகுடம் பிறை வடிவினதென்றும், கிரீடம் குவிந்ததென்றும், மௌலி மும்முனையதென்றும் மா. வி. அ. கூறும்.

மங்கலம்—மங்கல

மங்கு—மங்கல்—மஞ்சல்=மங்கலான நிறம். அந்நிறக் கிழங்கு (மஞ்சள்). மஞ்சல்—மஞ்சள்.

ஒ. நோ : பொங்கு—பொஞ்சு, இங்கே—இஞ்சே (கொச்சை).

மங்கல்—மங்கலம்=1. மஞ்சளால் அல்லது மஞ்சள் நீரால் குறிக்கப்பெறும் நன்னிலைமை.

"மங்கல மகளிரொடு மாலை சூட்டி" (புறம். 332).

2. திருமணம். "மங்கல வாழ்த்துப் பாடல்" (சிலப்.).

3. திருமணத்தாலி.

"மற்றைநல் லணிகள் காணுன் மங்கலங் காத்த மன்னோ"
(கம்பரா. உருக்காட்டு. 35).

4. மங்கல நிகழ்ச்சி. "சிறந்த சீர்த்தி மண்ணு மங்கலமும்"
(தொல். 1037).

5. மங்கலச் சின்னம்.

எண் மங்கலமும் மங்கலம் பதினாறும்.

6. மங்கல வழக்கு (நன். 267).

7. நன்மை.

"மங்கல மென்ப மனைமாட்சி" (குறள். 60).

மங்கலம்—மங்களம்.

வடவர் காட்டும் மூலம் மங்க்=செல், இயங்கு.

மசி—மஷி

மத்து—மத்தி. மத்தித்தல்=மத்தினாற் கடைதல், கடைந்து களி அல்லது கூழாக்குதல்.

மத்தி—மதி. மதித்தல்=மத்தினாற் கடைவதுபோற் கைவிரலாற் குழைத்தல்.

குழந்தைக்குச் சோற்றை மதித்து ஊட்டு என்னும் வழக்கை நோக்குக.

மதி—மசி. மசித்தல்=குழைத்தல். மசிதல்=குழைதல்.

மசி—மசகு=வைக்கோற் கரியோடு விளக்கெண்ணெய் கலந்து மசித்த (குழைத்த) வண்டி மை.

எழுது மையும் இங்ஙனமே வேறு பொருளை மசித்து அமைக்கப் பெறும்.

" மசித்து மையை விள்ள வெழுதி" (பதினொ. திருவாலங். மூத். 2).

மசி=எழுதுமை. "மசிகலந் தெழுதப்பட்ட" (சூளா. தூது. 83). மசிக்கூடு, மசிக்குப்பி என்பன உலக வழக்கு.

மசி—மயி—மை.

கருநிறத்தைக் குறிக்கும் மை என்னும் சொல்வேறு. மால்—மா—மை.

வடவர் காட்டும் மூலம் மஷ்=சிதை, சேதப்படுத்து. மா. வி. அ.

இச் சொல்லின் கீழ், "(prob. invented to serve as the source of the words below)" என்று குறித்திருப்பது கவனிக்கத் தக்கது.

மஷி என்பது, மேலையாரிய வழியாய் வடமொழி பெற்ற தென் சொல் திரிபுகளுள் ஒன்றாகும்.

OE masc, E mash, mess, Dan mask, Sw. maska, Sc. mask, MLG mesch, MHG meisch, G maisch.

மசிர்—ச்மச்ரு (இ. வே.).

மை=கருநிறம். மை—மயிர்=கரிய முடி.

ஒ. நோ: ஐ—அயிர், தை—தயிர், பை—பயிர், வை—வயிர்.

மா. வி. அ. "(of unknown derivation, but cf. šman)".

"šman, n. the body, Nir.; the mouth, L. (both meanings prob. invented to explain šmašāna and šmašru)" என்று குறித்திருத்தல் காண்க.

மண்டலம்—மண்டல

முல்—முன்—முனி=வில். முல்—வில். ஒ. நோ: முழுங்கு—விழுங்கு.

முல்—முர்—முரி. முரிதல்=வளைதல். முரி—மூரி=வளைவு.

முர்—(முரு)—முருகு=பிறைபோல் வளைந்த காதணி.

முரு—முறு=முறுகு. முறுகுதல்=வளைதல், திருகுதல்.

முறுகு—முறுக்கு=திருகல், திருகிய தின்பண்டம். முறுக்கு—முறுக்கம்.

முறு—முற்று—முற்றுகை=சூழ்கை.

முறு—முறை=வளைவு, தடவை (turn). முறை—மிறை=வளைவு.

முறு—முறி. முறிதல்=வளைதல். முறி—மறி. மறிதல்=மடங்குதல்.

முல்—(முள்)—முண்டு=உருட்சி, திரட்சி. முண்டு—முண்டை=உருண்டை, முட்டை. "முண்டை விளைபழம்" (பதிற். 60:6).

முள்—முட்டு—முட்டை. முட்டு—முட்டான்=திருநீற்றுருண்டை.

முள்—(முண்)—முணம்—முணங்கு. முணங்குதல்=உள்வளைதல்.

முணம்—முடம்=வளைவு, கால் வளைவு முடம்—முடவு—முடவன்.

முடம்—முடங்கு, முடங்குதல்=வளைதல். முடங்கு—மடங்கு. முடக்கு—மடக்கு. முடக்கம்—மடக்கம்.

முடம்—முடந்தை=வளைந்தது. முடம்—(முடல்)—முடலை=குறடு, உருண்டை.

முடி—முடிச்சு=வளைத்துக் கட்டியது, மரத் திருகல். முண்டும் முடிச்சும் என்னும் வழக்கை நோக்குக.

முண்டு—மண்டு. மண்டுதல்=வளைதல். மண்டு – மண்டி. மண்டியிடல்=முழங்காலை மடக்குதல்.

மண்டு—மண்டலம்=வட்டம், நாட்டுப்பகுதி, காலப்பகுதி, நூற்பகுதி, வட்டவடிவம், வட்டமாய்ச் சுற்றிவருகை, வட்டமான பொருள்.

கொங்கு மண்டலம், தொண்டை மண்டலம் என்பன தொன்று தொட்ட வழக்கு.

மண்டலம்—மண்டலி. மண்டலித்தல்=வட்டமாதல், வட்டமாகச் சுற்றிவருதல், ஈறு தொடங்கியில் (அந்தாதியில்) ஈறும் முதலும் ஒன்றித்து வருதல்.

மண்டலி=வட்டமான பொறிகளுள்ள பாம்பு.

மண்டலம்—மண்டிலம்=1. வட்டம். 2. வட்டமான இடம். "பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்" (புறம். 30).

3. வட்டமான கதிரவன். "பகல்செய் மண்டிலம்" (பெரும்பாண். 442).

4. வட்டமான திங்கள். "செய்வுறு மண்டிலம்" (கலித். 7).

5. வட்டமான கண்ணாடி. "மையறு மண்டிலம்" (மணி. 25 : 137).

6. வட்டமான ஞாலம். "கடல்சூழ் மண்டிலம்" (குறுந். 300).

7. ஞாலப்பகுதியான நாடு, நாட்டுப்பகுதி.

"மண்டிலத் தருமையும்" (தொல். பொ. 41).

8. கூத்தின் மண்டில நிலை.

9. வட்டமாயோடுகை.

"செலவொடு மண்டிலஞ் சென்று" (பு. வெ. 12, வென்றிப். 14).

10. வட்டமாயோடுங் குதிரை (பிங்.). "மண்டிலங் கொட்பு" (இன்னா. 35).

11. அளவடி. "மண்டில யாப்பும்" (தொல். 1372).

12. செய்யுளின் எல்லாவடியும் அளவொத்து வருதல். எ-டு: நிலை மண்டில வாசிரியம், மண்டிலம் (விருத்தம்).

மண்—மணி=நாழிகை வட்டில், மணியடிக்கும் வட்டமான வெண்கலத் தட்டு, மணியென்னுங் கால அளவு, உருண்டை, உருண்டையான விதை.

இச் சொற்கு வடமொழியில் இத்தகைய வரலாறுமில்லை; மூலமுமில்லை.

மணி—மணி (இ. வே.).

மண்ணுதல்=கழுவுதல்; மண்—மண்ணி—மணி = கழுவப் பெற்ற ஒளிக்கல். "மண்ணி யறிப மணிநலம்" (நான்மணி. 5).

வடமொழியில் இச்சொல் அகரமுதலிகளில் மட்டும் உளதென்று மா. வி. அ. குறித்திருத்தல் காண்க.

மத்தளம்—மர்தல

மொத்துதல்=வீங்குதல், பருத்தல். மொத்தம்=பருமன், முழுமை, பொது, கூட்டுத்தொகை. மொத்து=உடல்தடிப்பு, மதித்தடிப்பு, மடமை.

மொத்தி=புடைப்பு. மொத்தை=பருமன், உருண்டை, மடப் பெண். மோத்தை=செம்மறியாட்டுக்கடா.

மொத்தளம்=மொத்தம், கூட்டம். மொத்தளம்—மத்தளம்= பருமேளம். ஒ. நோ. மொத்து—மத்து, மொத்திகை—மத்திகை, மொண்டை—மண்டை.

"மத்தள வயிறனை உத்தமி புதல்வனை" (திருப்பு.).

மத்தளம்—மத்தளி—மத்தளிகன்=மத்தளம் இயக்குவோன்

மத்தளிகன்—மர்தலிக

மர்தலிக என்னும் வடிவம் மா. வி அ. வில் இல்லை. சென்னைப் ப. க. க. த. அ. வில் மட்டும் உளது.

மத்தம்—மந்த்த

மொதுமொதெனல் = மக்கள் திரளுதற்குறிப்பு.

மொது—மொத்து. மொத்துதல் = வீங்குதல், பருத்தல்.

மொத்து = பருத்தது. மொத்து—மத்து = அடியில் திரண்ட கடை கருவி. "ஆயர் மத்தெறி தயிரி னுயினர்" (சீவக. 421.). "பருமத் தினு லடித்த" (காளமேகம்).

மத்து—மத்தி. மத்தித்தல் = மத்தினாற் கடைதல்.

மத்து = மத்தம் = தயிர்கடைகருவி. "ஆய்மகள் மத்தம் பிணித்த கயிறுபோல்" (கலித். 110).

மத்தி— மத், மந்த்

மதங்கம்—ம்ருதங்க

மதங்கம் என்பது மத்தளத்தின் சிறுமை. இடக்கண்ணையும் வலக்கண்ணையும் தொடர்ந்து தட்டுவதால் ஏற்படும் ஒலியினின்று இப்பெயர் பெற்றது.

"மதங்கமொடு துந்துபி...முழங்கவே" (திருவாத. பு. கடவுள். 1).

ம்ருதங்க என்னும் சொல் பின்வருமாறு இருவகையுள் ஒன்றில் தோன்றியிருக்கலாமென்று மா. வி. அ. கூறும்.

(1) ம்ருதம் + க = அடிக்கும்போது செல்வது ("going about while being beaten")

இப்பொருளில் க (ga) என்பது கம் (gam) என்பதன் கடைக்குறை.

(2) மர்தல—ம்ருதங்க.

ஆரியர் வருமுன்பே தமிழ் முத்தமிழாய் வழங்கிற்றென்பதும் மதங்கம் ஆட்டிற்கும் பாட்டிற்கும் உரிய இசைத்தமிழ்க் கருவியென் பதும், அறிக.

மதம் = மத (t)—(இ. வே.)

முத்துதல் = 1. பொருந்துதல், சேர்தல்.

"திருமுத்து ஆரம் = திருமகள் சேருமாரம்; "கழைபோய் விண் முத்தும்" என்றாற்போல" (சீவக. 504, உரை).

2. முகத்தொடு அல்லது வேறுறுப்பொடு முகம்பொருந்துதல்.

முத்து — முட்டு. முட்டுதல் = 1. பொருந்துதல். முட்டு = பொருத்து. 2. முடிதல்.

"முட்டடி யின்றிக் குறைவுசீர்த் தாகியும்" (தொல். பொ. 435).

முட்டுமிடம் ஒருபொருளின் முடிவாகவே யிருக்கும்.

முட்டு—மட்டு= அளவு. முட்டம்—மட்டம்.

முத்து—மத்து—மத்தி—மதி. மதித்தல்= அளவிடுதல், உயர்வாய் அளவிடுதல், உயர்வாய்க் கருதுதல், மனத்தால் அளவிடுதல்.

மதிப்பு= அளவீடு, உயர்வாய்க் கருதுகை, தோராய அளவு.

மதி—மதம்=மன அளவீடு, ஒருபொருளைப் பற்றிய கருத்து; கொள்கை, கடவுட்கொள்கை, மறுமைக்கொள்கை.

> "எழுவகை மதமே உடன்படல் மறுத்தல்
> பிறர்தம் மதமேற் கொண்டு களைவே
> தாஅ னாட்டித் தனாது நிறுப்பே
> இருவர் மாறுகோள் ஒருதலை துணிவே
> பிறர்நூற் குற்றங் காட்டல் ஏனைப்
> பிறிதொடு படாஅன் தன்மதம் கொளலே.

என்னும் நன்னூற் பொதுப்பாயிர நூற்பாவால் (11), மதம் என்னும் சொல்லின் உண்மைப் பொருள் கண்டு தெளிக.

மதி—மதி

மதி= 1. அளவு, அளவீடு.
2. அளந்தறியும் அறிவுக் கரணம்.
"மதிநுட்பம் நூலோ டுடையார்க்கு" (குறள். 636).
3. பகுத்தறிவு. "மதியிலி மடநெஞ்சே" (திருவாச 5: 33).
4. அறிவு. "மதிமை சாலா மருட்கை நான்கே" (தொல். பொ. 255).

வடவர் மன் (கருது) என்னும் சொல்லினின்று மதம், மதி என்னும் சொற்களைத் திரிப்பர். மன் என்பது வேறுவழிச் சொல்லாயிருப்பதோடு தூயதமிழ்ச்சொல் என்பது, பின்னர் விளக்கப்பெறும்.

மத்தம்—மத்த (இ. வே.)

மதம்—மத (இ. வே.)

மது—மது (dh)—இ. வே.

முத்துதல்= பொருந்துதல், சேர்தல், கலத்தல்.

முத்து—மத்து—மத்தம்=கலக்கம், மயக்கம்.

"மத்தமாம் பிணி நோய்க்கு" (தேவா. 426: 3.).

ஒ. நோ: கல—கலுழ்—கலுழி=கலக்கம். கல—கலங்கு—கலக்கு—கலக்கம்.

முயங்குதல்=தழுவுதல், கூடுதல், கலத்தல்.

முயங்கு—மயங்கு—மயக்கு—மயக்கம்=கலப்பு, கலக்கம்.

முய—முயல்—மயல்—மால்=மயக்கம்.

வெறுத்தல்=செறிதல், கலத்தல். வெறு—வெறி=கலக்கம்' மயக்கம்.

கலத்தற் கருத்தினின்று கலக்கக் கருத்துத் தோன்றுதல் காண்க.

மத்து=பித்தியம் (பைத்தியம்) உண்டாக்கும் சாற்றுச் செடி (ஊமத்தை). "நன்மத்தை நாகத்தயல் சூடிய நம்பனே போல்' (கம்பரா. உருக்கா. 81).

மத்து—மத்தம் (ஊமத்தை).

"மத்தநன் மாமலரும் மதியும் வளர்" (தேவா. 923: 8).

மத்தம் என்னுந் தென்சொல்லையே உன்னென்னும் முன்னொட்டுச் சேர்த்து வடசொல்லாக்கினர்.

மத்து—மத்தை (ஊமத்தை)—(மலை.)

மத்தம்—வ. உன்மத்த—ஊமத்தம், ஊமத்தை.

மத்தம்=மயக்கந்தரும் கடாம். மத்தமா=யானை.

மத்தம்—மதம். மதமா=யானை.

மதம்—மதர். மதர்த்தல்=1. செருக்குதல்.

2. களித்தல்.

"மதுப்பருகிப் பருவாளை நின்று மதர்க்கும்" (கம்பரா. நாட்டுப். 24.).

3. மதங்கொள்ளுதல்.

"மதர்விடையிற் சீறி" (பு. வெ. 7: 14).

மதர்—மதர்வை=செருக்கு, களிப்பு, மயக்கம்.

மதம்—மதன்=1. செருக்கு.

"மதனுடை நோன்றாள்" (பட்டினப். 278).

2. மடமை. 3. கலக்கம்.

மதம்=1. யானைக்கடாம். "மதயானை" (சீவக. 2485).

2. மதுவெறி (மலைபடு. 173, உரை).

3. தேன். "மதங்கமழ் கோதை" (சீவக. 2584).

4. காம மிகை. 5. வெறி.

6. செருக்கு. "போரெதிர்ந் தேற்ருர் மதுகை மதந்தப" பரிபா. 18: 1).

மதம்—மத. மதத்தல்=மயங்குதல், கள்ளுண்டு களித்தல், காமம் மிகுதல், மதங்கொள்ளுதல், செருக்குதல்.

மத—மதக்கம்=மயக்கம். மதமதப்பு=திமிர், செருக்கு.

மத்து—மது=1. கள். "மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சிபோல" (தொல். பொ. 114, உரை).

2. தேன். "மதுவின் குடங்களும்" (சிலப். 25: 38).

மத்து—மட்டு=1. கள். "வெப்புடைய மட்டுண்டு" (புறம். 24).

2. தேன். "மட்டுவா யவிழ்ந்த தண்டார்" (சீவக. 1145).

3. இன்சாறு. "கருப்புமட்டு வாய்மடுத்து" (திருவாச. 5: 80).

4. காமக்குடிப்பு "மட்டுடை மணமகள்" (சீவக. 98).

5. கட்சாடி. "மட்டுவாய் திறப்பவும்" (புறம். 113).

"மட்டுவார் குழலம்மை" என்பது மலைமகள் பெயர்களுள் ஒன்று.

மதம்—OE gemad, E mad.

மது—Gk. methu AS medu, ME mede, OE meodu, E mead, OHG metu, MLG mede, ON mjqthr, L mel, G meth, Russ med, W medd, Lith. middus, Sw mjod, Dan miod, Ice mjodr, D mede.

மது என்னுஞ் சொல் தமிழில் அருகியும் வடமொழியிற் பெருகியும் வழங்குவதனாலேயே, அது வடசொல்லெனக் கருதப்படுகின்றது.

மதுரை—மதுரா (dh). மதி—மதிரை. ஒ. நோ: குதி—குதிரை.

மதி—மதிரை—மதுரை=மதிக்குலத்தவனான பாண்டியன் முதல் தலைநகர் (தென்மதுரை), கண்ணன் ஆண்ட வடமதுரை, அப் பெயர் பெற்ற கடைக்கழகப் பாண்டியர் தலைநகர் (வைகைமதுரை).

சிவபெருமான் தம் சடைமுடியிலுள்ள திங்களினின்று மதுவைப் பொழிந்த இடம் (வைகை) மதுரை எனப்பெற்றது என்றும், மது என்னும் அரசன் ஆண்டதினால் மதுபுர என்று ஏற்பட்டபெயர் மத்ரா (வட மதுரை) எனத் திரிந்ததென்றும், காரணங்காட்டுவர்.

மந்திரம்[1] — மந்த்ர (இ. வே.).

முன்னுதல் = கருதுதல். முன்—மன். மன் + திரம் (திறம்) = **மந்திரம்.** எண்ணத்தின் திண்மையினால். எண்ணியவாறு நிறை வேறும் எண்ணம் அல்லது கூற்று அல்லது பாட்டு மந்திரமாம்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." (குறள். 666).

மந்திரம் = 1. எண்ணம் (பிங்.).
2. சூழ்வினை 3. சூழ்வினைஞர் (மந்திரிமார்) அவை.

"மன்னவன் றனக்கு நாயேன் மந்திரத் துள்ளேன்"
(கம்பரா. உருக்காட். 31).

3. கொண்முடிபு (சித்தாந்த) மந்திர நூல்.

"போகமிகு மந்திரமா மறையொன்று" (திருமுறை கண். 26).

4. சாவிப்புக் கூற்று.

மந்திரம்—மந்திரி = அரசனுக்குச் சூழ்வினைத் துணையாயிருப் பவன்.

மந்திரக்காரன் = சாவிப்பு மந்திரம் பண்ணுபவன் (மந்திரவாதி).

மந்திரம்—மந்திரி. மந்திரித்தல் = (செ. குன்றுவினை) 1. மந்தி ரத்தால் அடக்குதல்.

2. மந்திரத்தால் ஆற்றலுண்டாக்குதல்.
3 மந்திரத்தால் ஊழ்குதல் (தியானித்தல்).

"மந்திரிப்பார் மனத்துளானை" (தேவா: 590: 4).

4. கூடிச்சூழ்தல்.

"மகட்பேசி மந்திரித்து' (திவ் நாய்ச். 6. 3).

5. மந்திர மன்றாட்டுச் செய்தல்.

"சிரத்தினஞ் சுற்றபின்னை மீண்டிட மந்திரிப்பார்"
(பிரபோத, 5: 7).

"மந்திரப் பொருள்வயின் ஆஅகுநவும்" (தொல். 932),
"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப." (ஷை 1434)

என்று தொல்காப்பியமும்,

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்" (குறள்-28).

என்று திருக்குறளுங் கூறுவதால், திருமந்திரம் போன்ற மறைநூல் கள் அக்காலத் திருந்தமை அறியப்படும்.

"பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்."

என்னும் தொல்காப்பிய நூற்பாவும் (1336) அதை வலியுறுத்தும், வாய்மொழி யென்றது மந்திரத்தை. எண்ணத்தின் திண்மையே அல்லது மன்னும் திறமே மந்திரமாதலால், மன் என்னுஞ் சொல்லும் மந்திரத்தைக் குறிக்கும் (பிங்).

மன்—மநு

மந்திரம்[2]—மந்திர

மன்னுதல்=1. பொருந்துதல். "மன்ன சொகினம்" (பு. வெ. 10: 11).

2. தங்குதல். "உத்திரை வயிற்றின் மன்னிய குழவி" (பாகவத. 1, பரிட்சித்துவின்றோ. 1).

3. நிலைபெறுதல். 'மன்னர்க்கு மன்னுதல் செங் கோன்மை" (குறள். 556).

4. கூடுதல்.

மன்—மனை=பொருந்தி வாழும் இடம்.

மன்—மன்று=கூட்டம், கூடுமிடம், அம்பலம்.

மன்று—மன்றம். மன்று—மந்து—மந்தை=கால்நடைக்கூட்டம்.

மன்+திரம்=மந்திரம் 1. வீடு. "மந்திரம்பல கடந்து" (கம்பரா. ஊர்தேடு. 138).

2. அரண்மனை (பிங்.) 3. கோயில். 4. மண்டபம். 5. குகை.

"அரிமந் திரம்புகுந்தால் ஆனை மருப்பும்" (நீதிவெண்: 2).

6. குதிரைச்சாலை (பிங்).

மயிர்—ச்மச்ரு

இது முன்பு கூறப்பெற்றது.

மயில்—மயூர

மை=கருநிறம். இல்=இடம், கண். மை—மயி+இல்=மயில்= கரிய அல்லது நீலப் பீலிக் கண்களை யுடையது.

மயில் தமிழகக் குறிஞ்சி நிலப் பறவை; குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகனூர்தி.

வடவர் ஐயுற்றுக் காட்டும் மூலம் மா^{2}=ஒலி (to sound).

மரி—ம்ரு (இ. வே.).

மடி—மரி. ஒ. நோ. கடி—கரி.

மரி + அணம் = மரணம். இது ஒரு திரவிடச் சொல்.

L. mori (மொரி).

மருமம்—மர்மன் (இ. வே.)

மருவுதல் = தழுவுதல். மரு—மார்—மார்பு — மார்பம் = தழுவும் உறுப்பாகிய நெஞ்சு. மார் = மார்பு. க. மார்.

''இப்பாதகன் மாரினெய்வ னென்று'' (கம்பரா. இராவணன் வதை. 192).

''ஊரிலே கலியாணம், மாரிலே சந்தனம்.'' (பழமொழி).

மார்பு = நெஞ்சு. ''கள்ளற்றே கள்வநின் மார்பு'' (குறள். 1288).

மார்பம் = நெஞ்சு. ''பொன்றுஞ்சு மார்பம்'' (சிலப். 11: 64).

மரு—மருமம் = 1. மார்பு. ''மருமத்தி னெறிவேல்'' (கம்பரா. கையடை. 11).

2. மறைவிடம், 3. மறைபொருள் (இரகசியம்).

4. உயிர்நிலை. ''எங்கு மருமத் திடைக்குளிப்ப'' (பு. வெ. 7. 23).

ஒ. நோ. L arca = chest, arcanum = mystery, secret. வடவர் காட்டும் மூலம் ம்ரு = மரி. மர்மன் = மரணத்திற்கேதுவான இடம், சேதப்படத்தக்க உறுப்பு, உயிர்நாடி நிலை.

மரி என்பது தென்சொற் றிரிபென்பது மேலே கூறப்பட்டது.

மல்லன்—மல்ல

முல்—மல் = 1. பருமை. 2. வலிமை (பிங்.).

3. மற்போர்த் தொழில்.

''மல்லலைத் தெழுந்து வீங்கி'' (சீவக. 268).

4. மற்போர் செய்பவன்.

''மல்லொடு கஞ்சனுந் துஞ்சவென்ற மணிவண்ணன்'' (திவ். பெரியதி. 11 : 2 : 3).

மல்—மல்லன் = மற்போர் செய்வோன்.

"மறத்தொடு மல்லர் மறங்கடந்த" (பு. வெ. 9 : 4).

மல்—மல்லம் = மற்போர். மல் = வலிமை. மல்லல் = வலிமை.

முல்—மொல்—மொலு. மொலு மொலு—மொது மொது.

மொலு மொலு, மொலோர் என்பன மொய்த்தல் அல்லது திரளுதற் குறிப்புக்கள். மொல்—(மொள்)—மொய் = நெருக்கம், கூட்டம், திணுக்கம், பெருமை, வலிமை, போர்.

மல் = மல்கு. மல்குதல் = கூடுதல், மிகுதல், நிறைதல். மல் = கூடிச் செய்யும் போர்.

மல்—மலை. மலைதல் = பொருதல்.

வடவர் மல் (mal, mall = வைத்திரு, கொண்டிரு, உடைமை கொள்) என்னுஞ் சொல்லை மூலமாகக் காட்டுவர்.

மல்லி—மல்லி, மல்லிகை—மல்லிகா

மலையம்—மலய

மலை—மலையம் = பொதியமலை. "ஓங்குயர் மலையத் தருந்தவன் உரைப்ப" (மணி. 1 : 3).

'அம்' பெருமைப் பொருட் பின்னொட்டு. ஐகாரம் அகரமானது சமற்கிருத வடிவைப் பின்பற்றி. ஒ. நோ : நிலையம்—நிலய, வளையம்—வலய.

மனம்—மனஸ் (இ. வே.).

உன்னுதல் = 1. கருதுதல். 2. ஊழ்குதல் (தியானித்தல்).

"உன்னலே தியானம்" (கந்தபு. திருநகர. 81).

ம. உன்னு, க. உன்னிசு.

உன்—உன்னம் = 1. கருத்து (திவா.). 2. ஊழ்கம் (தியானம்).

"அகத்தியான் பள்ளியை யுன்னஞ் செய்த" (தேவா. 847 : 2).
3. மனம் (திவா.). ம. உன்னம்.

உன்—உன்னல் = 1. கருதுகை (பிங்.).

"உன்னல் காலே ஊன்றல் அரையே
முறுக்கல் முக்கால் விடுத்தல் ஒன்றே" (உரைநூற்பா).
2. மனம் (பிங்.).

உன்னுதல்—முன்னுதல் = முற்படக் கருதுதல், கருதுதல்.

" வேறுபுல முன்னிய விரகறி பொருந" (பொருந. 3).

தெ. முன்னு, க. முன்னு. AS munan = to think.

முன்—முன்னம் = 1. கருத்து. "முன்ன முகத்தி னுணர்ந்து" (புறம். 3).

2. மனம் (திவா.). 3. குறிப்பு.

" முன்னத்தா னென்று குறித்தாய்போற் காட்டினை" (கலித். 61).

முன்—முன்னல் = 1. கருத்து, நெஞ்சு, மனம். (சூடா.).

முன் = மனக்குறிப்பு. "முன்னுற வுணர்தல்" (தொல். பொ. 127).

முன்னம்—முனம்—மனம். "மனத்தொடு வாய்மை மொழியின்" (குறள். 295).

மனம்—மனன். "ஆறறி வதுவே அவற்றொடு மனனே" (தொல். 1526).

L mens, OE gemynd, ME mynd, E mind.

மன்—மநு (இ. வே.).

முன்—மன் = கருதும் ஆறும் அறிவுள்ள மாந்தன். மன்பது = மக்களினம்.

" மன்பது மறுக்கத் துன்பங் களைவோன்" (பரிபா. 15 : 52).

மன்பது—மன்பதை = 1. மக்களினம்.

" மன்பதை காக்குநின் புரைமை" (புறம். 210).

2. மக்கட் கூட்டம், படை.

" மன்பதை பெயர" (பதிற்றுப். 77 : 3).

OS, OHG man, OE, man (n), E mar, Goth manna.

மனை—மான (இ. வே.). = வீடு.

மன்னுதல் = பொருந்துதல், தங்குதல், மிகுதல், கூடுதல், நிலைபெறுதல். மன்—மனை = நிலையாகத் தங்கும் வீடு.

E manse, L mansus fr. *mans*, remain.

வடவர் மா (அள) என்னுஞ் சொல்லை மூலமாகக் காட்டுவர்.

மா[1] (மக)—மஹா (இ. வே.), மகிழ்—மஹ்

முழுத்தல் = திரளுதல், பருத்தல், முழுமையாதல்.

முழு = பருத்த. "முழுமுதல் தொலைந்த கோளி யாலத்து" (புறம். 58).

முழுத்த = முழுவளர்ச்சி யடைந்த.

"முழுத்த ஆண்பிள்ளைக்கு மூன்று வெற்றிலை." (பழமொழி).

முழு—முது. ஒ. நோ: தொழு—தொகு, புழு—புகு.

முகு—மிகு—மிகல். முகு—மகு—மகிழ். ஒ. நோ: நெகு—நெகிழ்.

மகிழ்தல்=மலர்தல், அகமலர்தல், களித்தல்.

முகு—முகை=கூட்டம் (பிங்.).

முகு—மொகு—மொக்கு—மொக்கன்=தடித்தவன்.

மொக்கு—மொக்கை=பருமன். மொக்கைச் சோளம்—மக்கைச் சோளம்—மக்காச் சோளம். மொக்காளி—மக்காளி=மிகத்தடித்தவன்.

மகு—மகம்=பருமை, பெருமை. மகம்—மக—மா=பெரிய.

மகக்கதை—மாக்கதை. "எடுக்கும் மாக்கதை" (பெரிய. பாயிரம். 3).

மகம்—மகன்=பெரியோன், சிறந்தோன். (சூடா.).

"நூல்கற்ற மகன்றுணையா நல்ல கொளல்" (நாலடி. 136).

மகன்—மான்=பெரியோன்.

"மானே தொழுகை வலி" (சி. போ. 12 : 4, வெண்பா 3).

மிகு—க. மிகு. மிக்கு—தெ. மிக்கிலி. OG michel, E mickle, much.

மகம்—Gk megas, L. magnus.

வடசொன்மூலம் மஹ்=மிகு, மகிழ். ஆதலால், மஹ் என்பது மகு என்பதன் திரிபே. மேலும், மா. வி. அ. "orig. magh" என்று குறித்திருத்தலுங் காண்க.

மா[2]—மா (இ. வே. =அள.

மாத்தல்=அளத்தல். இவ்வினை இன்று வழக்கற்றது.

மா—மாத்திரம்=அளவு. அவன் எனக்கு எம்மாத்திரம் என்னும் உலக வழக்கை நோக்குக. மேலை வடார்க்காட்டில் ஒரு பொருளின் விலையை எம்மாத்திரம் (எம்மாத்தம்) என்று வினவும் வழக்கு இன்றுமுள்ளது. அங்கேயே நாட்டுப் படியை மானம் என்கின்றனர்.

மா+அனம்=மானம்=அளவு, படி, மதிப்பு.

மா—மாத்திரை=அளவிட்ட மருந்து, கண்ணிமைக் கால அளவு.

"மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ"

என்பது தொல்காப்பியம் (1259). அளவு என்பது போன்றே மாத்திரை என்பதும் தென்சொல்லே. அதன் வடமொழி வழக்கும் தமிழில் அளவு என்னுஞ் சொல்லுண்மையும் வடமொழி தேவமொழி என்னும் ஏமாற்றும், மாணவரையும் ஆராய்ச்சியில்லாரையும் மயக்கு கின்றன. தென்மொழி சொல்வளஞ் சிறந்தது என்பதை அறிதல் வேண்டும். மாத்திரை என்பது, ஆரியர் வருமுன்பே தமிழகத்து வழங்கிய மருத்துவ நூற் குறியீடு.

பண்டைக்காலத்து, மா என்னுஞ் சொல் வெவ்வேறு அளவு குறித்து வழங்கிவந்தது.

மா = 1. ஒருநிறை. (தொல். எழுத். 170, உரை).
2. ஒரு கீழ்வாயிலக்கம் (1/20)—(பிங்.) ம. மா, தெ. மாவு.
3. ஒரு நில அளவு (1/20 வேலி).

"மா நிறை வில்லதும் பன்னாட் காகும்." (புறம். 184).

மாத்திரை—மாத்ரா (இ. வே.)

Gk metron, L meter, E meter, metre, measure. இச்சொல் மேலை யாரியத்திலிருப்பதனால் மட்டும் ஆரியச்சொல் ஆகிவிடாது. மேலை யாரியத்திலும் நூற்றுக்கணக்கான அடிப்படைச் சொற்கள் தென்சொல்லா யிருப்பதை, The Primary Classical Language of the World என்னும் நூலைக்கண்டு தெளிக.

மாகம்—நாக (இ. வே.)

மால்—மா = கருமை. "மாயிரும் பீலி" (சிலப். 2: 53). மா—மாகம் = 1. முகில் (சீவக. 569, உரை).

2. கரிய வானம். "மாக விசும்பின்" (பிறம். 35).
3. மேலிடம். "மாக மாடத்து" (கம்பரா. மிதிலைக். 83).
4. விண்ணுலகம்.

"மாகந்தொட நணிநிவந்த கொடி" (ஞானா. 34: 15).

வடவர் காட்டும் மூலம்: (1) நம் = வளை (to bend).
2. ந + அக = நோவில்லாத இடம்.

மாகாளி—மஹா காலீ

மாடை—மாஷ

மழ—மாழை = 1. மழமழப்பான பொன். (பிங்.) "உருகி மாழையும் வெள்ளியும்" (தணிகைப்பு. சீபரி. 374).

2. பொற்கட்டி (பிங்.) "கனக மாழையால்" (சீவக. 913).

மாழை—மாடை=பழம் பொற்காசு. "வந்த மாடை நெல்லாக்கி" (S. I. I. iii, 187).

மாணவன்—மாணவ

முள்—முளை=இளமை. "முளையமை திங்கள்" (சும்பரா. கும்பக. 16.)

முளையான்=சிறுவன், சிறுபிள்ளை.

முள்—மள்—மழ=1. இளமை. "மழவுங் குழவும் இளமைப் பொருள". (தொல். சொல். 311).

2. குழந்தை. "அழுமழப்போலும்" (திருக்கோ. 147).

மழ—மாழை=இளமை. "மாழை மடமான் பிணையியல்" (கலித். 131).

மள்—மள்ளன்=இளைஞன். "பொருவிறல் மள்ள" (திருமுரு. 262).

மள்—மண்—மணி=சிறியது, ஒரு சிறுமைப்பொருள் முன்னொட்டு.

எ—டு: மணிக்காடை, மணிக்காக்கை, மணிக்குடல், மணித்தக்காளி, மணிப்பயறு, மணிப்புரு.

மணி—மாணி=1. குறள்வடிவம். (திவ். பெரியாழ். 1: 4: 1, வ்யா.)

2. சிறுவன்.

3. மாணவன்.

"கருமாணியா யிரந்த கள்வனே" (திவ். இயற். 2: 61).

மாணி—மாண்=1. கற்குஞ் சிறுவன். "மாணாகி வைய மளந்ததுவும்" (திவ். பெரியதி. 8: 10: 8).

2. குறளன். "குறுமாணொருவன் தற்குறியாகக் கொண்டாடும்" (தேவா. 164: 5).

மாணி—மாணவன். ஒ. நோ: பள்ளிப்பிள்ளை, E pupil.

இனி, மண்—மாண்—மாணி என்றுமாம்.

வடமொழியிலும் மாணவ என்னுஞ் சொற்கு இளைஞன், குறளன் என்னும் பொருள்களே உள.

மாணவன்—மாணவகன்—மாணாக்கன்.

மாதம்—மாஸ், மாஸ (இ. வே.)

மதித்தல்=அளவிடுதல். மதி=1. அளவு. 2. அளவிடப்பெற்ற பொருள். ஏற்றுமதி, இறக்குமதி என்னும் சொற்களை நோக்குக.

3. பக்கம், மாதம் முதலிய கால அளவிற்குத் துணையான நிலா. "மதிப் பின்னீர பேதையார் நட்பு" (குறள். 782). 4. நிலவி னுற் கணிக்கப் பெறும் கால அளவு (மாதம்).

5. ஓரை. "ஆறிரு மதியினும்" (சிலப். 26: 25).

மதி—மாதம். ஒ. நோ: மானம்=அளவு. AS mona, E moon, Gk men, mene, L mensis, Mena, Ger mano, mane, Mond, Goth mena, Lith menu, menesis, Slav meseci.

இனி, மத்து—மத்தி—மதி=மயக்கஞ் செய்யும் நிலா என்றுமாம்.

ஒ. நோ: L luna=moon, lunatic=insane, lunacy=insanity.

வடவர் மா[3] (அள) என்னுஞ் சொல்லை மூலமாகக் காட்டுவர். அதன் பொருந்தாமையையும், ஒருகாற் பொருந்துவதாகக் கருதினும் அதுவும் தென்சொல்லே யாதலையும், காண்க.

சென்னைப் ப. க. க. த. அ. மாஸ—மாதம் என்று தலைகீழாகக் காட்டும். மதி என்னும் மூலத்தினின்று, மாதம் என்னும் தகரச் சொல்லன்றி மாஸ என்னும் ஸகரச் சொல் எங்ஙன் தோன்றும்?

மாதர்—மாத்ரு (இ. வே.)=தாய்.

மா=அழகு. "மாவீழ் பள்ளி" (ஞாஞ. 10: 6).

மா—மாது=1. அழகு. "மாது குலாயமென்னோக்கி" (திருக்கோ. 316).

2. (அழகுள்ள) பெண்.

"வாட்டடங்கண் மாதே" (திருவாச. 7: 1)

3. (பெரும்பாலும் அழகினுல் ஏற்படும்) காதல். "மாதுகு மயிலினல்லார்" (சீவக. 363).

மாது—மாதர்=1. அழகு. (பிங்.)

"மாதர்கொண் மாதரெல்லாம்" (திருவாத. 4. திருவம்பல. 40).

2. பெண். "மறுவுண்டோ மாதர் முகத்து" (குறள். 117).

3. காதல். "மாதர் காதல்" (தொல். சொல். 328).

மாதர்—மாதரான் = (அழகுள்ள) பெண். "மடமொழி மாதரான்" நாலடி 384).

பெண்கள் பெரும்பாலும் தாய்மாராதலாலும், தெய்வப்பெண்டிர் தாய்போற் கருதப் பெறுவதாலும், பெண்ணின் பெயர் தாய்க் கருத்தையுங் கொள்ளும்.

எ—டு. மலைமகள், மலைமடந்தை, மலைமாது.

இம்முறையிலேயே, மாதர் என்னும் சொல்லும் தாய்ப்பொருளைப் பெற்றது.

Gk mater, L mater, E mother. G. muotar, mutter, other, Lith mote, Slav mati.

வடவர் காட்டும் மூலம் மா³ = அள.

"derivation from 3. mā very doubtful" என்று மா. வி. அ. குறித்திருத்தல் காண்க.

மாந்தம்—மாந்த

மொத்து = 1. தடித்த—வன்—வள்—து.
2. சுறுசுறுப்பில்லாத—வன்—வள்—து.

மொத்து—மத்து—மந்து—மந்தம் = செரிமான வுறுப்பின் சுறுசுறுப்பின்மை, செரியாமை.

மந்தம் – மாந்தம் = செரியாமையாற் குழந்தைகட் குண்டாகும் நோய்.

வடவர் காட்டும் மூலமும் இதுவே.

மாமன்—மாம¹, மாமக

அம்மை—அம்மான் = அம்மையின் உடன்பிறந்தான்.

அத்தன் (தந்தை)—அத்தை = அத்தனின் உடன்பிறந்தாள்.

அம்மான் மனைவி அத்தையென்றும், அத்தை கணவன் அம்மான் என்றும், அழைக்கப் பெறுவர். ஒருவன் அம்மான் மகளையும் அத்தை மகளையும், ஒருத்தி அம்மான் மகனையும் அத்தை மகனையும் மணப்பது முறை மரபு.

இங்ஙனம் நெருங்கிய உறவில் மணமகனோ மணமகளோ இல்லாதபோதும், அயலில் மணமகனோ மணமகளோ செல்வத்திலும் அழகிலும் பிறவற்றிலும் சிறந்திருக்கும்போதும், அயலில் மணவுறவு கொள்வது வழக்கம்.

மகனின் மனைவியையும் மகளின் கணவனையும் மக்களைப்போற் கருதவேண்டுமென்றும், அவர்களும் கணவன் தன் மனைவி பெற்றோரையும் மனைவி தன் கணவன் பெற்றோரையும் தன் தன் சொந்தப் பெற்றோரைப் போற் கருதவேண்டுமென்றும், பண்டைத் தமிழர் தீர்மானித்தே, மகன் மனைவியை மருமகள் (மருவிய மகள்) என்றும் மகள் கணவனை மருமகன் (மருவிய மகன்) என்றும், அழைத்தனர். மருவுதல்=பொருந்துதல், குடும்பத்தொடு கலத்தல், இனமாகத் தழுவுதல்.

அயலில் மணவுறவு கொண்டபோது, மனைவியின் தந்தையையும் கணவனின் தந்தையையும் மருவம்மான் (மருவிய அம்மான்) என்று அழைத்திருக்கலாம்.

மருவம்மான்—மாமான்.

மணவுறவு கொண்ட அம்மானும் மருவம்மானும் முறையளவில் ஒரே நிலையிலிருப்பதால், பெண்கொடுத்த அல்லது பெண்கொண்ட அம்மானும் மாமன் எனப் பெற்றான். அதன்பின் மணவுறவு கொள்ளாத அம்மானும் அப்பெயர் பெற்றான்.

"மாமான் மகளே" (திவ். திருப்பா. 9).

மாமான்—மாமன். ம. மாமன், தெ. மாம.

"மாமனு மருகனும் போலு மன்பின" (சீவக. 43).

சில குலத்திலும் குடும்பத்திலும் ஒருத்தி தன் அம்மானை மணந்து கொள்ளும் வழக்கமிருப்பதால், கணவனை மாமன் என்றழைக்கும் நிலைமையும் நேர்ந்தது. ஒருவன் தன் அக்கை அல்லது தங்கை மகளை மணப்பதும் இதுவே.

மாமன்—மாமி = 1. அம்மான் மனைவி.

"அன்புடைய மாமனு மாமியுநீ" (தேவா. 1228: 1).

2. அத்தை.

3. மனைவி அல்லது கணவன் தாய்.

"சிறக்கு மாமியர் மூவர்க்கும்" (கம்பரா. குளா. 33).

அம்மான் மாமி—அம்மாமி (ஆரியப் பார்ப்பன வழக்கு)=

1. அம்மான் மனைவி.

2. மாமன் மனைவி.

"அம்மாமி தன்வீவுங் கேட்டாயோ தோழி" (சிலப். 29, தேவந்தியரற்று).

வடமொழியில் மாமி என்னும் பெண்பால் வடிவில்லை.

மாம (மாமக) என்னும் ஆண்பாற் சொற்கு மம (எனது) என்னும் தன்மை யொருமைப் பெயரின் 6-ஆம் வேற்றுமையடியை மூலமாகக் காட்டுவர். மாம=எனக்குரியவன்.

"māmā, m. (fr. mama, lit. 'belonging to mine') dear friend, uncle (only in voc. sg. as a term of affection among animals in fables), Pancat" என்று மா. வி.அ. (பக். 810) கூறுதல் காண்க.

மாயை—மாயா (இ. வே.)

மாள்—மாய்

மாய்தல்=மறைதல், மறந்து போதல், இறத்தல், அழிதல்.
மாய்—மாயம்=1. திடீர்மறைவு. 2. மயக்கம். 3. நிலையின்மை.
'என்மாய வாக்கை யிதனுட் புக்கு' (திவ். திருவாய் 10: 7:3).

4. பொய். "வந்த கிழவனை மாயஞ் செப்பி." (தொல். பொ. 114).

5. பாசாங்கு. 6. ஏமாற்று (வஞ்சனை).
"மாய மகளிர் முயக்கு" (குறள். 918).

7. பொய்த் தோற்றம் (மாயை).

"வருந்திட மாயஞ்செய்து நிகும்பலை மருங்கு புக்கான்"
(கம்பரா. மாயா சீதை. 96).

8. மாயக்கலை.

மாய்கை=மயக்கம், மயக்கக் காதல்.

மாய்—மாயை=1. மறைவு. 2. மாயக்கலை.

"மாயையி னொளித்த மணிமே கலைதனை" (மணி. 18 : 155).

3. மறைப்பாற்றல் (திரோதான சத்தி).

4. பொய்த்தோற்றம், 5. பொய்த்தோற்ற உலகம்.

"தோன்றிக்கெடு மாயாகாரி யத்தை மெய்யெனநீ கண்டனையே"
(அருட்பா, i, நெஞ்சறி. 527).

6. ஐம்பூதமூலம். "பூதலய மாகின்ற மாயைமுத லென்பர் சிலர்" (தாயு. பரிபூரண. 6).

ஒ. நோ: சாய்—சாயை—வ. சாயா (chāyā).

மாலை—மாலா

முல்—முள்—முள்கு. முள்குதல்=முயங்குதல்.

"இளமுலை முகிழ்செய முள்கிய" (கலித். 125).

முள்—(முய்)—முய—முயங்கு—முயக்கு—முயக்கம்.
முயங்கு—மயங்கு—மயக்கு—மயக்கம்.

முய—மய. மயத்தல்=மயங்குதல். "மயந்துளே னுலகவாழ்க் கையை" (அருட்பா, VI, அபயத்திறன். 14).

முய—முயல்—மயல்=மயக்கம்.

"மயலிலங்குந் துயர்" (தேவா. 121 : 2).

ம. மய்யல், தெ. மயல, க. மயமு.

மயல்—மால்=மயக்கம். மாலுதல்=மயங்குதல்.

"மான்று வேட்டெழுந்த செஞ்செவி யெருவை" (அகம். 3).

மயக்கக் கருத்திற்கு அடிப்படை கலத்தற் கருத்தே.

மயங்குதல்=கலத்தல். மயக்குதல் (பி. வி.)=கலத்தல்.

"பாற்பெய் புன்கந் தேனொடு மயக்கி" (புறம். 34).

மால்—மாலை=1. பல மலர்கள் கலக்குந்தொடை. 2. பகலும் இரவும் கலக்கும் அந்திவேளை.

மசங்கல், மசங்கு பொழுது, மசண்டை, மயண்டை என்னும் வழக்குக்களை நோக்குக.

மயங்கு—மசங்கு. மயல்—மயன்றை—மயண்டை—மசண்டை.

தொடைப் பொருளில் கலத்தற் கருத்தும், அந்திவேளைப் பொருளில் கலத்தற் கருத்தொடு கலக்கக் கருத்தும், அமைந்துள்ளன என அறிக.

கண் தெரியாது கலங்குவதும் இராத்தங்க இடமின்றிக் கலங்குவதும் காதலர் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்து கலங்குவதும், மாலைக்கால மயக்க வகைகளாம். இதனையே மருண்மாலை என்னும் இலக்கிய வழக்கு உணர்த்தும்.

வடமொழியில் இச்சொற்கு மூலமில்லை.

மாவலி—மஹாபலி (b)

மாவலி=பெரு வலிமையுள்ள ஒரு பழஞ் சேரவேந்தன்.

"மூரிவார் சிலை மாவலி" (மணி. 19 : 54).

ஓ. நோ : உறுவலி=மிகுந்த வலிமையுள்ளோன்.

"உறுவலி தாக்கினனே" (சீவக. 2282).

மதவலி (மீமிசைச் சொல்) = மிக வலிமையுள்ளோன்.

"வலம்புரி பொறித்த வண்கை மதவலி" (சீவக. 204).

மாவலிவாணன் = மாவலி வழிவந்த ஒரு சிற்றரச ஆள்குடியான்.

"வையமொரு கோலாற் புரந்தருள் மாவலிவாணன்" (S. I. I. iv, 98).

மாளிகை—மாலிகா

மல்—மால். மாலுதல் = மாட்சிப்படுதல். "மான்றபூண் முலையினள்" (காஞ்சிப்பு. திருக்கண். 194).

மால் = பெருமை (பிங்.). மால்—மாள்—மாண்—மாண்பு, மாட்சி.

மாள்—மாளிகை = 1. மாடமுள்ள பெருவீடு. (பிங்.).

"மறையவர்க்கு மாளிகைகள் பலசமைத்தார்" (பெரியபு. கோச் செங். 16).

2. மாடம் போன்ற கோயில்.

"உத்தர கோசமங்கை......மாளிகை பாடி" (திருவாச. 16 : 3).

வடவர் மாலிகா என்னும் சொல்லை மாலா என்பதனொடு தொடர்புபடுத்தி, மேன்மாடியுள்ள வீடு என்று பொருளுரைப்பர். மலரடுக்குப் போன்ற மாடியடுக்கு என்பது அவர் கருத்துப்போலும்! "a white-washed upper-storied house" என்னும் பொருளை மா. வி. அ. எங்ஙன் பெற்றதோ, அறிகிலம்.

மானம்[1]—மான = பெருமை (Greatness).

மல்—மல்லல் = பெருமை. "மல்லலச் செல்வ வடமொழி மறைவாணர்" (திவ். திருவாய். 8 : 9 : 8).

மல்—மன். மன்னுதல் = மிகுதல். "விதவாதன மன்னே". (நன். 165).

மன் = மிகுதற் குறிப்பு. "சிறியோன் பெறினது சிறந்தன்று மன்னே" (புறம். 75).

மன் = 1. பெருமை. 2. பெரியோன், தலைவன்.

"மன்னுயிர் நீத்தவேலின்" (பு. வெ. 4 : 23, கொளு).

3. கணவன். 4. அரசன். மன்—மன்னன்.

மன்—மான்—மானம் = பெருமை.

"புகழு மானமு மெடுத்துவற் புறுத்தலும்" (தொல். பொ. 41).

மானம்[2]**—மான** = மதிப்பு (Honour)

மா + அனம் = மானம் = அளவீடு, அளவு, அளவை, மதிப்பு.

மா. வி. அ. வும் சென்னைப் ப. க. க. த. அ. வும் இவ்விரு சொல்லையும் ஒரு சொல்லாகக் காட்டுகின்றன.

மானியம் = மான்ய

மானம்—மானி. மானித்தல் = அளத்தல், மதித்தல், பெருமைப் படுத்துதல், தன்னை மிக மதித்துச் செருக்குதல்.

ஒ. நோ: தீர்மானம் = முடிவு. தீர்மானித்தல் = முடிவு செய்தல், முடிபு கொள்ளுதல்.

மானம்— மானி = அளக்குங் கருவி, தன்மானமுள்ளவன், செருக்கன்.

மானி—மானியம் = புலவரையும் மறவரையும் மதித்துச் செய்யும் சிறப்பு, அவர்க்களிக்கும் முற்றூட்டு அல்லது இறையிலி (சர்வ மானியம்), கோயில்கட்கும் அறச்சாலைகட்கும் விடும் அறப்புறம் (இறையிலிநிலம்).

மானியம்—மானிபம். இவ்வடிவம் வடமொழியிலில்லை.

நிலமானியம் (Endowment of land) என்னும் பொருளும் மா.வி. அ. விற் குறிக்கப்பெறவில்லை.

மிதி—ம்ருத் (d)

மிதித்தல் = பாதத்தை மேல்வைத்தல், பாதத்தால் தேய்த்தல்.

மீனம்—மீன

மின்—மீன் = வெண்ணிறத்தால் மின்னும் கெண்டைமீன். மீன்.

கெண்டை மீன் வகைகளுள் வெள்ளிபோல் மின்னுவது வெளிச்சி.

பெண்ணின் கண்ணிற்கு வடிவால் உவமை கூறப்படுவது கெண்டை மீனே. கயல் என்பது கெண்டையின் மறுபெயர்.

மீன் வகைகட்குள் மிக மென்மையானது கெண்டையாதலின் அப்பெயர் பெற்றது.

"கயவென் கிளவி மென்மையும் செய்யும்". (தொல். 805).

பொதுவாக வரையப் பெறுவதும் பாண்டியன் கொடியின் உருவமும் எண் மங்கலங்களுள் ஒன்றும் கெண்டை மீனே. ஏரி குள நீருட் பெருவாரியாய் வாழ்வதும் அம்மீனே.

மீன்—மீனம் (திவா.). 'அம்' பெருமைப் பொருட் பின்னொட்டு. மீன் என்னும் வடிவம் வடமொழியிலில்லை. வடவர் காட்டும் மூலம் மீ[1] =குறை, சிறு, அழி; வழிதப்பு, வழிவிலகு; மீறு, கலக்கடி, மாற்று. திரிவது (சஞ்சரிப்பது) என்று மூலப் பொருள் கூறுவர். சிறுத்தற் பொருளில் மீ என்பது மின் (min) என்னும் இலத்தீன் சொல்லின் திரிபாகத் தெரிகின்றது.

முகம்—முக (kh)—இ. வே.

முகம்=முன்பக்கம், தலையின் முன்பக்கம், முகத்தின் முன் நீண்டுள்ள மூக்கு, நுனி, தொடக்கம், முன்பு, முதன்மை. இவையெல்லாம் முன்மைக் கருத்தைப் பொதுவாகக் கொண்டவை.

இப்பொருள்கட்கெல்லாம் அடிப்படை தோன்றற் கருத்தே. இயல்பான தோற்றமும் இயக்கமும் முன்னோக்கியே நிகழ்வதால், ஒரு பொருள் தோன்றும்போது அதன் முன்புறமே தெரியும்.

முகஞ் செய்தல்=1. தோன்றுதல்.

''முகஞ்செய் காரிகை'' (பெருங். உஞ்சைக். 35 : 49).

2. முன்னுதல்.

'' தோற்றினன் முகஞ்செய் கோலம்'' (சீவக. 675).

3. நோக்குதல்.

'' முன்னினன் வடதிசை முகஞ்செய்து'' (சீவக. 1408).

முகம்=1. தோற்றம். ''சுளிமுகக் களிறன்னான்'' (சீவக. 298).

2. நோக்கு. ''புகுமுகம் புரிதல்'' (தொல். பொ. 261).

முகு=முகிழ். முகிழ்தல்=அரும்புதல். முகிழ்த்தல்=தோன்றுதல்.

'' மூவகையுலகு முகிழ்த்தன முறையே'' (ஐங்குறு. கடவுள்).

முகு—முகை. முகைதல்=அரும்புதல்.

'' பொய்கை முகைந்த தாமரை'' (ஐங்குறு. 6).

அரும்புதல்=தோன்றுதல். முகிழ்த்தல் = தோற்றுவித்தல், ஈனுதல் முகு என்னும் அடிபோன்றே, உகு, நுகு, புகு என்னும் அடிகளும் தோன்றற்கருத்துச் சொற்களைத் தோற்றுவித்துள்ளன.

உகு—உகை—அகை. அகைதல்=துளிர்த்தல்.

"கொய்குழை யகை காஞ்சி" (கலித். 74).

நுகு—நுகும்பு=பனை, வாழை முதலியவற்றின் குருத்து.

"பனை நுகும்பன்ன" (புறம். 249).

புகு—பொகு—பொகில்=அரும்பு.

முகம்—முகர்—முகரை=மூக்கும் வாயும் சேர்ந்த பகுதி.

முகர்—முகரி=முதன்மை, தலைமை.

முகம்—முகவு=முன்மண்டபம். முகம்—முகப்பு=வீட்டின் முற்பகுதி, அணிகலப் பொருத்துவாய்.

முகம்—முகமை=முதன்மை, தலைமை. முகமை—முகாமை.

முகம்—முகன்—முகனை=முன்புறம், தொடக்கம், முதலெழுத்து.
முகனை—மோனை=முதலெழுத்து ஒத்து வருகை.

முகம்—முக. முகத்தல்=மூக்கால் நுகர்தல். முக—மோ—மோப்பு—மோப்பம். முகம்—முகர். முகர்தல்=மோத்தல்.

வடமொழியில் முக என்னுஞ் சொற்கு மூலமில்லை.

வடவர் அச்சொற்கு முகம் என்பதைவிட வாய் என்பதையே சிறப்புப் பொருளாகக் கொள்வதால், பின்வருமாறு பொருந்தப் பொய்த்தலாக மொழிப்பொருட் காரணங் கூறுவதுமுண்டு'

முக=மு+க (kha). க=கன் (தோண்டு).

முக=தோண்டப்பட்ட கிடங்குபோன்ற வாய்.

இது ஒரு நகையாட்டுச் செய்தியாக இருப்பதொடு, கன் (khan) என்னும் சொல்லும் தென்சொல்லாகவே யிருத்தல் காண்க.

கல்லுதல்=தோண்டுதல். கல்—கன்—கன்னம்=சுவரில் தோண்டும் துளை.

முகிழம்—முகுல, முகுர.

முகு—முகிழ். முகிழ்தல்=அரும்புதல், தோன்றுதல்.

முகிழ்=அரும்பு. முகிழ்—முகிழம்=மலரும் பருவத்தரும்பு.

முகிழ்—முகிழி. முகிழித்தல்=அரும்புதல்.

முகு—முகை=அரும்பு. முகைதல்=அரும்புதல்.

முகு—முகுள்—முகுளம்=அரும்பு. முகுள்—முகுளி. முகுளித்தல்=குவிதல். க. முகுள்=முகிழ்.

முகுளி—முகுலீ

முகு—மொக்கு=மொட்டு. க. மொக்கு (gg), தெ. மொக்க (gg).

மொக்கு—மொக்குள் = 1. பேரரும்பு. க. முகுல் (g).

"முகைமொக்கு ளுள்ளது நாற்றம்" (குறள். 1274).

2. மொக்குள் போன்ற நீர்க்குமிழி.

"படுமழை மொக்குளின்" (நாலடி. 27).

முட்டு - மித் (th)—இ. வே.

முட்டுதல் = எதிர்ப்படுதல், பொருந்துதல், மோதுதல்.

முட்டி—முஷ்டி (இ. வே.)

முட்டுதல் = 1. எதிர்ப்படுதல்.

"வரையா நாளிடை வந்தோன் முட்டினும்" (தொல். பொ. 112).

2. மோதுதல். 3. தாக்குதல்.

4. இறுகப் பிடித்தல்.

"குழலாள்......கையினைக் கையாலவன் முட்டிடலும்" (உத்தரரா. திக்குவி. 16).

5. பொருதல். "குலப்பகைஞன் முட்டினன்" (கம்பரா. நட்புக் 50).

முட்டு—முட்டி = 1. தாக்குதற்கு விரல் முடக்கிய கை.

2. கைக்குத்து. "முட்டிகள் படப்பட" (பாரத. வேத்திர. 56).

3. நான்கு விரல்களை யிறுக முடக்கி அவற்றின்மீது கட்டை விரலை யழுத்தும் இணையா வினைக்கை. " (சிலப். 3 18, உரை).

4. படைக்கலம் பிடிக்கும் வகை.

"துய்ய பாசுபதத் தொடையு முட்டியும்" (பாரத. அருச்சுனன் றவ. 129).

5. கையுள் மறைத்ததை இன்னதென்று கூறும் கலை.

வடவர் காட்டும் மூலம் முஷ் = திருடு, கொள்ளையடி, சிறை கொண்டுபோ; உளங்கவர், மகிழ்ச்சியால் மயக்கு, உடை, அழி.

"Mușți, m. f. stealing, filching, W.; the clenched hand, fist (perhaps orig. 'the hand closed to grasp anything stolen')".

முண்டம்—முண்ட

(முள்)—மொள்—மொண்—மண். மண்ணுதல் = மழித்தல். இந்தக் கத்தி மண்ணாது என்னும் வழக்கை நோக்குக. மொண்—மொண்ணன் = வழுக்கைத் தலையன்.

"வன்கண்ணர் மொண்ணரை" (தேவா. 705 : 4).

மொண்—மொண்ணை = வழுக்கை. கூர்மையின்மை.

மொண்ணையன் = அறிவு மழுங்கியவன். மொண்ணை—மண்ணை = 1. கூர்மழுக்கம்.

"மண்ணை வெண்கோட்டுச் சிறுகண் யானை" (அகம். 24).

2. மூடன்.

"இம்மணியை நின்மணியொடு கலக்கும் மண்ணைதா னுளனே" (மேருமந். 303).

(மொள்)—மொழு—மொழச்சு. மொழச்சுதல் = மழித்தல்.

மொழு—மழு—மழி. மழித்தல் = மொட்டையடித்தல், தலை வறண்டுதல்.

"மழித்தலும் நீட்டலும் வேண்டாவாம்" (குறள். 280).

மழித்தலை = மொட்டைத்தலை. "கொய்ம்மழித் தலையொடு கைம்மையுற" (புறம். 261).

மழி—வழி. முகம் வழித்தல், நாக்கு வழித்தல் என்பன உலக வழக்கு.

வழி—வழல். வழலுதல் = மயிர் நீங்குவதுபோல் தோலுரிதல்.

வழல்—வழற்று (பி. வி.). வழல்—வழன்று—வரன்று—வறண்டு.

வழன்றுதல் = தோலுரிதல். வரன்றுதல் = வழித்து வாருதல்.

"மணிவரன்றி வீழுமருவி" (நாலடி. 369).

வறண்டுதல் = வழித்தல். தலை வறண்டுதல் என்பது பாண்டி நாட்டு வழக்கு. களைவறண்டி, பாதாள வறண்டி என்னும் கருவிகளைக் கருதுக.

மொழு—மொழுப்பு—மோப்பு—மோப்பி = முண்டை. தெ. மோப்பி, க மோப்பு.

மொழு—மொழுக்கு. மொழுக்குதல் = வழித்த தலைபோற் சமனுகுமாறு உழுத நிலத்திற் பரம்படித்தல்.

மொழுக்கு—மொழுக்கன் = வேலைப்பாடில்லாது வழுக்கையான அணிகலம்.

மொழுக்கன் — மொழுங்கன் — மழுங்கன் = வேலைப்பாடில்லாத அணி.

மொழு—மழு. மழுமட்டை, மழுகூழை (வால் முற்றுமற்றது) என்னும் வழக்குக்களை நோக்குக.

மழு—மழுகு. மழுகுதல்=மொட்டையாதல், மழுங்குதல்.
“நுதிமுக மழுகிய......வெண்கோட்டு” (அகம். 24.).
மழுகு—மழுக்கு—மழுக்கம்=மொட்டை, கூரின்மை.
மழுகு—மழுங்கு. மழுங்குதல்=1. கூர்நீங்கி மொட்டையாதல்.
“நுதிமழுங்கிய” (புறம். 4).

1. மதிக்கூர்மை குறைதல்.

“உதிக்கின்ற புத்தியும் மழுங்கிடும்” (திருவேங். சத. 15).

மொழு—மோழல்=மொட்டை மூஞ்சியுள்ள பன்றி (பிங்.).

மொழு—மோழை=1. மொட்டை. 2. கொம்பிலா மாடு.

“ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்.” (பழமொழி)

3. மரத்தின் அடிமுண்டம். 4. மடமை.

5. நொய் சேராத கஞ்சி

மொட்டைக் கூழ் என்னும் வழக்கை நோக்குக.

மோழைமுகம்=பன்றி.

முள்—முண்—முண்டு—முண்டம்=1. மழித்த தலை.
“சடையுமுண்டமுஞ் சிகையும்” (அரிச். பு. விவாக. 2).

2. வழுக்கைத்தலை

3. அம்மணம்.

முண்டக்கட்டை=மயிரில்லாத் தலை போல் ஆடையில்லா வுடம்பு.

4. தலையில்லா வுடம்பு.

முண்டம்—முண்டன்=1, மழித்த தலையன்.

“கண்டராய் முண்டராகி” (தேவா. 259: 3).

2. அமணன். 3. மஞ்சிகன் (நாவிதன்).

முண்டன்—முண்டை (பெ. பா.)=தலைமழித்த கைம்பெண், கைம்பெண்.

முண்டை—முண்டைச்சி (இரட்டைப் பெ.பா.)

முண்டு—முண்டி. முண்டித்தல்=தலையை மொட்டையடித்தல். “தலைமுண்டிக்கு மொட்டரை” (தேவா. 423: 4).

முண்டி=மழித்த தலையன், மஞ்சிகன்.

முண்டி+அனம்=முண்டனம் (தலைமழிக்கை).

மொள்—மொட்டு=மொட்டை, கூரின்மை. "மொட்டம்பு" (பிங்).
மொட்டு—மொட்டம். மொட்டந்தலை=மொட்டைத்தலை.
"மொட்டந் தலையிற் பட்டங்கட்டியாள வந்தாளோ?"
மொட்டு—மொட்டை. ம. மொட்டு, தெ. மொத்து (dd).

மொட்டைத் தன்மையைக் குறிக்கும் முண்டம் என்னும் சொல்லும், உருட்சியைக் குறிக்கும் முண்டம் என்னும் சொல்லும் வெவ்வேறென அறிக.

வடவர் காட்டும் முண்ட் (muṇḍ) என்னும் மூலம் செயற்கையென்பது தெளிவு.

"*muṇḍ* (prob. artificial, to serve as the supposed source of the words below), cl. I. P. to cut (*khaṇḍane*=chidi), Dhātup. ix, 40; to crush, grind, ix, 38 (v. l. for *muṭ*); cl. I.Ā. 'to cleanse' or to sink' or 'to shave'' என்று மா. வி. அ. குறித்திருத்தல் காண்க.

முத்தம்—முக்தா

முள்—முட்டு—முத்து=1. உருண்டை வடிவாயிருக்கும் சிறு பொருள்.
2. தொண் (நவ) மணிகளுள் ஒன்று.
"முல்லை முகைமுறுவல் முத்தென்று" (நாலடி. 45).
3. ஆமணக்கு விதை.
"முத்திருக்குங் கொம்பசைக்கும்" (காளமேகம்).
4. அம்மைநோய்க் கொப்புளம்.
5. கண்ணீர்த் துளி.
"பருமுத்துறையும்" (சீவக. 1518).

ஆமணக்கு முத்து (கொட்டை முத்து), குருக்குமுத்து, புளிய முத்து, வேப்பமுத்து என்பன ஓரளவு உருண்டை வடிவான விதைகள்.

முத்துச்சம்பா, முத்துச்சோளம், முத்துமாதுளை என்பனவும் அத்தகையனவே.

முத்துக்குளிப்பு மன்னர்குடாக் கடலில் தொன்றுதொட்டு நிகழ்ந்து வருகின்றது. முத்தூர்க்கூற்றம் என்பது பாண்டிநாட்டின் கீழ்கரைப் பகுதி. உரோம நாட்டிற்கு ஏற்றுமதியான பாண்டி நாட்டு முத்து வரலாற்றுப் புகழ் பெற்றது.

"வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து."

என்பது பிற்காலத்து ஒளவையா ரொருவர் பாட்டு.

முத்து—முத்தம். 'அம்' பெருமைப் பொருட் பின்னொட்டு.
"முறிமேனி முத்த முறுவல்" (குறள். 1113).

வடவர், முக்தா என்னும் சொல்லை முச் (c) என்னும் வினை முதனிலையொடு தொடர்புபடுத்தி, சிப்பியினின்று விடுதலைபெற்றது என்று பொருட் காரணங் கூறுவது எத்துணை வேடிக்கையானது! முச்=விடு, விடுதலை செய்.

முத்திரை—முத்ரா (d)

முகம்—முகர்=அரசனது முக அல்லது தலையுருவம் பொறித்த முத்திரை பெர். முஹர்.

முக+திரம்=மோதிரம், முத்திரையிட்ட விரலணி.

முத்திரை மோதிரம் என்னும் வழக்கை நோக்குக.

முகத்திரம்—(முத்திரம்)—முத்திரை. ஒ. நோ: மாத்திரம்—மாத்திரை.

வடவர் முத்ர (மகிழ்ச்சியான) என்னுஞ் சொல்லை மூலமாகக் காட்டுவர்.

முரசம்—முரஜ

முருள்—முருடு=1. பெருங்குறடு. 2. முடிச்சுள்ள மரக்கணு. 3. உருண்ட மரக்கட்டை.

"வன்பராய் முருடொக்குமென் சிந்தை" (திருவாச. 23 : 4).

4. பறைப்பொது (பிங்.).

5. பெரு மத்தளம். "முருடதிர்ந்தன" (சிலப். மங்கல.).

முருடு—(முருசு)—முரசு. "இடியென முழங்கு முரசின்" (புறம். 17).

முரசு—முரசம்=பெருமுரசு. "திண்பிணி முரச மிடைப்புலத் திரங்க" (புறம். 288).

வடமொழியில் மூலமில்லை. "fr. mura+ja?" என்று வினவுகின்றது மா. வி. அ.

முழுகு—மஜ்ஜ் (இ. வே.)

முள்—முழு—முழுத்து. முழுத்துதல்= அமிழ்த்தல். முழுத்து—மூழ்த்து.

முழு—முழுகு. முழுகுதல்=உட்செல்லுதல், அமிழ்தல், நீளா நிலை யடைதல். முழுகு—மூழ்கு.

ம. முழுகுக, க. முழு, தெ. முனுகு.

முழுகு—முழுங்கு—விழுங்கு. தெ. மிங்கு.

முழுங்குதல்=வாய்க்குள் முழுகச் செய்தல்.

முழுங்கு—முங்கு. முங்குதல்=நீர்க்குள் முழுகுதல்.

முழுக்கு—முக்கு (பி.வி.). க. முழுகிசு.

முழுகு—L. mergo—VL majj.

முனி, முனிவன்—முனி

முனிதல்= 1. சினத்தல்.

"முடிபொரு ளன்று முனியன் முனியல்" (பரிபா. 20 : 93).

2. வெறுத்தல்.

"முனித னினைதல் வெருஉதன் மடிமை" (தொல். பொ. 260).

ம., க., து. முனி.

முனி—முனிவு= 1. சினம். "முனிவு தீர்ந்தேன்" (கம்பரா. வருண. 82).

2. வெறுப்பு. (தொல். சொல். 386).

ம. முனிவு க. முனிப்பு.

முனிவு—முனிவன்=உலகப் பற்றைத் துறந்த அறிவன்.

"வந்தெதிர்ந்த முனிவனை" (கம்பரா. மிதிலைக். 85).

முனி=முனிவன். "முனியுந் தம்பியும்" (கம்பரா. மிதிலைக். 139).

வடவர் காட்டும் மூலம் 'மன்'=கருது. இது முன் என்னும் தென்சொற் றிரிபென்பது முன்னரே விளக்கப்பெற்றது.

முசை—முஷ, முஷீ

முள்—முழை. முழைத்தல்=துளைத்தல். "முழைத்த வான் புழை" (பாரத. காண்டவ. 17).

முழை=குகை. "அவ்விசை முழையேற் றழைப்ப" (பரிபா. 19 : 63).

முழை—முழைஞ்சு=1. துளை. "குழன் முழைஞ்சுகளி னூடு குமிழ்த்து" (திவ். பெரியாழ். 3 : 6 : 11).

2. குகை.

"மாரி மலைமுழைஞ்சில் மன்னி" (திவ். திருப்பா. 23).

முழை—மூழை=1. குழிந்த இடம். "குன்றை யம்மூல மூழை வாய் வைத்து" (கம்பரா. மருத்து. 116).

2. அகப்பை. "மூழை சுவையுணரா தாங்கு" (நாலடி. 321).

மூழை—மூசை=மண்குகை, மட்கரு.

வடமொழியில் மூலமில்லை. மா. வி. அ. இச்சொல்லை மூஷ (சுண்டெலி) என்னும் சொல்லோ டிணைக்கின்றது.

மூத்திரம்—மூத்ர (அ. வே.).

முள்—(மொள்)=மோள். மோளுதல்=சிறுநீர் விடுதல். ம. மூள்.

மோள் + திரம் = (மோட்டிரம்)—மோத்திரம்—மூத்திரம். மோள் என்னும் வினையும் மோத்திரம் என்னும் பெயர் வடிவும் இன்றும் பாண்டிநாட்டு வழக்கென அறிக.

மூட்டை—மூட்ட, முட்ட

முள்—மூள். மூளுதல்=பொருந்துதல், கூடுதல்.

மூள்—மூட்டு (பி. வி.). மூட்டுதல்=1. பொருத்துதல்.

"கால்கொடுத் தெலும்பு மூட்டி" (தேவா. 631 : 3).

2. தைத்தல்.

மூட்டு=பொருத்து. மூட்டு—மூட்டை=கட்டு, பொட்டணம், பொருள் நிறைத்த கோணி. ம., தெ. மூட்ட, க. மூட்டே.

மூளை—மஜ்ஜன் (இ. வே.).

முள்—மூளை=எலும்பிற்கு அல்லது மண்டையோட்டிற்கு உள்ளிருப்பது. ம. மூள.

OS, OHG marg, OE mearg, E marrow, ON mergr.

மெது—ம்ருது (வே.)

மெல்—மெது—மெத்து—மெத்தை.

மெது—க. மெது. மெத்தை—ம. மெத்த, தெ. மெத்த, க. மெத்தை.

மெது—மெதுக்கு=சோறு. தெ. மெதுக்கு.

மெத்தெனவு—தெ. மெத்தன, க. மெத்தனெ.

மெது—மெதுகு—மெருகு.

OE smoth, smette, smeeth; E smooth.

மேகலே—மேகலா (kh)

மேகலம்—மேகலே=பெண்டிர் அரையில் ஆடையின்மேல் அணியும் எண்கோவைப் பட்டிகையான அணிகலம்.

மேகலே தமிழர் அணிகலங்களுள் ஒன்று.

மேழம்—மேஷ (இ. வே.)

மேழகம்—மேஷக

இவை முன்னர்க் கூறப்பட்டன.

வக்கா—பக (baka)

வக்கா=கொக்குவகை. "வக்காவு நாரையுங் கொக்கும் படுக்கவே" (குற்று. குற. 93 : 2).

வக்கா—வங்கா=பறவை வகை. "வங்காக் கடந்த செங்காற் பேடை" (குறுந். 151).

வங்கு—வக், வங்க்

வள்—வண்—வணம்—வணர்=வளைவு, யாழ்க்கோட்டின் வளைந்த பகுதி.

வணர்—வணரி=வளைதடி.

வணம்—வணங்கு—வாங்கு—வங்கு—வங்கி=நெளி வளையல், வளைந்த கத்தி. வணங்குதல்=வளைதல்.

வணக்கம்=வளைவு. "வில்வணக்கம்" (குறள். 827).

வாங்கு=வளைவு. வாங்குதல்=வளைதல்.

"வாங்குகதிர் வரகின்" (முல்லேப் 98).

வாங்கு—வாங்கா=வளைந்த ஊதுகருவி. வங்கம்=வளைவு, ஆற்றுவளைவு.

வஞ்சி—வஞ்ச்

வங்கு—வஞ்சு—வஞ்சி. ஒ. நோ : அங்கு—அஞ்சு. பொங்கு—பொஞ்சு.

வஞ்சி—வஞ்சம், வஞ்சகம், வஞ்சனம், வஞ்சனே.

வஞ்சு=வஞ்சகம். "வஞ்சே வல்லரே" (தேவா. 828 : 3).

வஞ்சகம்—வஞ்சக

வஞ்சனம்—வஞ்சண

இரு மொழியிலும் வங்கு என்பதே மூலம். ஆயின், வடவர் வக்கு (வக்) என்னும் வளைத்தல் வடிவிற் காட்டுவர். இதினின்றே வக்ர, வச்ரீகரண முதலிய வடசொற்கள் பிறக்கும்.

ஒருவனை ஏமாற்றுவது வட்டஞ் சுற்றி அவனை வளைவதுபோ லிருத்தலால், வளைதற்கருத்தில் ஏமாற்றுக் கருத்துப் பிறந்தது.

Circumvent என்னும் ஆங்கிலச் சொல்லையும் நோக்குக.

வட்டம் - வ்ருத்த (இ. வே.).

வல்—வள்—வட்டு—வட்டம் = 1. வளைவு.

" வில்லை வட்டப்பட வாங்கி" (தேவா. 5 : 9).

2. வளைதடி. "புகரினர் சூழ் வட்டத்தவை" (பரிபா. 15 : 61).

3. வட்டவடிவம். 4. கதிரவனை அல்லது திங்களைச் சுற்றிய கோட்டை.

5. வண்டிச்சக்கரம். 6. திரிகை, 7. தோட்கடகம் (பிங்.).

8. வட்டமான அப்பவகை.

" பாகொடு பிடித்த விழைசூழ் வட்டம்" (பெரும்பாண். 378).

9. வட்டக்கல்.

"வடவர் தந்த வான்கேழ் வட்டம்" (நெடுநல். 51).

10. நிறைகோல் தட்டு.

" வட்டம தொத்தது வாணிபம் வாய்த்ததே" (திருமந். 1781).

11. வட்டக் கேடகம்.

" ஐயிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்ப" (திருமுரு. 111).

12. ஆலவட்டம் (வட்டப்பெரு விசிறி.)

" செங்கேழ் வட்டஞ் சுருக்கி"

13. வட்டமான நீர்ச்சால் (பிங்.).

14. வளைந்த குளம் (பிங்.). 14. சுற்றுப் பக்கம்.

"கோயில் வட்டமெல்லாம்" (சீவக. 949).

15. சிலவூர்களைக் கொண்ட நாட்டுப் பகுதி.

16. வட்டமான செலவு.

"புரவிவட்டந் தான்புகக் காட்டுகின்றாற்கு" (சீவக. 442).

17. ஒரு சுற்று. 18. ஒரு கோள் வானமண்டலத்தை ஒரு முறை சுற்றிவருங் காலம். 19. ஒரு தடவை.

"விநாயகர் நாமத்தை நூற்றெட்டு வட்டஞ் செய்து"
(விநாயகபு. 74 : 214).

20. தோறும். "ஆட்டை வட்டம் காசு ஒன்றுக்கு"
S. I. I. ii, 122, 27).

இச்சொற்கு இன்னும் பலபொருள்கள் உள. முதன்மையானவையே இங்குக் குறிக்கப்பட்டுள.

வள்—வள்கு—வட்கு. வட்குதல்=வளைதல், வணங்குதல்.
வட்கார்=வணங்கார், பகைவர். வட்கார்—வட்கர்.
வட்கு என்னும் வடிவம் வடமொழியிலில்லை.
வட்டம்—வட்டகை=நாட்டுப்பகுதி, வட்டில், சிறு கிண்ணம்.
வட்டகை என்னும் வடிவம் வடமொழியி லில்லை.

வட்டணம்—அட்டன

வட்டம்—வட்டணம்=கேடகம்

"இட்ட வட்டணங்கண் மேலெறிந்த வேல்" (கலிங் 413).
வட்டணம்—வட்டணி. வட்டணித்தல்=வட்டமாதல், வட்டமாக்குதல்.
வட்டணி என்னும் வினை வடிவம் வடமொழியி லில்லை.

வட்டணம்—வர்த்தன

வட்டணம்—வட்டணை=வட்டம். வட்டமான செலவு, இடம் வலம் சுற்றுகை, வட்டமான தாளக் கருவி, வட்டக் கேடகம், உருண்டை.
வட்டரவு=வட்ட வடிவு.
வட்டு—வட்டன்=வட்டுப்போல் உருண்டு திரண்டவன்.

"குறுவட்டா......கூனின்பிறப்பு" (கலித். 94).
இவ்வடிவம் வடமொழியில் இல்லை.
வட்டம்—வட்டாரம்=சுற்றுப்புற நாட்டுப்பகுதி.
தெ. வட்டாரமு, க.. து. வட்டார.
வட்டாரம் என்னும் வடிவம் வடமொழியில் இல்லை.

வட்டு—வட்டா=வட்டமான கலம். "வட்டாவுந் தாம்பூலமுந் துகிலுந் தாங்கிநிற்ப" (சீதக்.).

வட்டி—வர்த்தி

வட்டு—வட்டி. வட்டித்தல்=வட்டமாதல், சுழலுதல், சுழற்று தல், சுற்றிக் கட்டுதல், வளைத்தல், வளைத்தெழுதுதல், உருட்டு தல்.

க. பட்டிசு (baḍḍisu).

வட்டி=கடகப்பெட்டி, கூடை.

வட்டிகை—வர்த்திகா

வட்டி—வட்டிகை=1. சித்திரம்.

"வட்டிகைப் பாவை நோக்கி" (சீவக. 2085).

2. சித்திரமெழுதுங்கோல்.

"வட்டிகைச் செய்தியின்" (மணி. 4 : 57).

3. வட்டம். 4. சுற்றளவு. 5, கூடை. 6. பரிசல். 7. ஒருவகை விருது,

இவற்றுள் முதலிரு பொருள்களே வடமொழியில் உள.

வட்டி—வட்டில்=வட்டமான உண்கலம், கிண்ணம், கடகப் பெட்டி, நாழிகை வட்டில், ஒருவகை விருது.

க. பட்டலு (b).

இவ்வடிவம் வடமொழியில் இல்லை.

வட்டு=வட்டமான சில், வட்டமான சூதாட்டுக் கருவி, வட்ட மான கருப்புக்கட்டி.

இவ்வடிவம் வடமொழியில் இல்லை.

வட்டை=சக்கரத்தின் சூட்டு, வட்டகை. பிரா. வட்டா.

இவ்வடிவம் வடமொழியில் இல்லை.

வடகம்—வடக (ṭ)

வட்டம்—வடம்—வடகு—வடகம்=அரைத்த பருப்புடன் கறிச் சரக்குச் சேர்த்துலர்த்திய தாளிப்புருண்டை.

வடம்—வட (ṭ)

வட்டம்—வடம்=1. வட்டமாகப் பரவும் ஆலமரம்.

"வடநிழற்கண் ணூடிருந்த குருவே" (தாயு. கருணா. 41).

2. உருண்டு திரண்ட கயிறு.

கமலை (கம்மாலை) வடம், தேர்வடம் முதலியவற்றை நோக்குக.

3. உருண்டு திரண்ட பொற்கொடி அல்லது மணிக் கோவை.

"Vaṭa, m. (perhaps Prākṛit for vṛita, 'surrounded, covered" என்று மா. வி. அ. குறித்திருத்தல் காண்க.

வடவை—வடபா (b) வடவா, படவா (b) படபா (b, b).

வடம்—வடவை=வடதிசை நெருப்பு (Aurora borealis).

"வடவைக் கனலைப் பிழிந்தெடுத்து" (தனிப்பாடல்).

வடவனல்=வடவை.

"அக்கடலின்மீது வடவனல் நிற்கவிலையோ" (தாயு. பரிபூர. 9).

"வெள்ளத் திடைவாழ் வடவனலை" (கம்பரா. தைலமா. 86).

வடவனலம்=வடவை.

"கடுகிய வடவனலத்திடை வைத்தது" (கலிங். 402).

வடந்தை=வடக்கிலுள்ளது. வடந்தைத்தீ=வடவை.

"சுடர்ந்தெரி வடந்தைத் தீயும்" (காஞ்சிப்பு. இருபத். 384).

உத்தர மடங்கல்=வடவை (திவா.). உத்தரம்=வடக்கு.

மடங்கல்=ஊழித்தீ.

உத்தரம்=வடக்கிலுள்ள ஊழித்தீ (பிங்.).

பண்டைத் தமிழர் சுற்றுக் கடலோடிகளா (Circumnavigators) யிருந்தமையால், வடமுனையில் ஒரோவொருகால் தோன்றும் மின்னொளியைக் கண்டு அதற்கு வடவை அல்லது வடவனல் எனப் பெயரிட்டிருந்தனர். குமரிக் கண்டத்திற் பல பேரழிவுகள் நேர்ந்ததினால், ஊழியிறுதியழிவிற்கு அவ்வடவையே காரணமென்றுங் கருதினர்.

தென்முனையிலும் வடவை போன்ற ஒளி தோன்றுமேனும், பண்டைத் தமிழிலக்கியம் முற்றும் அழியுண்டு போனமையால், அதைப்பற்றிய இலக்கியக் குறிப்பும் இறந்துபட்டது.

"*Aurora*, n Luminous atmospheric (prob. electrical) phenomenon radiating from earth's northern (*borealis*) or southern (australis) magnetic pole" என்று COD கூறுதல் காண்க.

வடவர் வடவை என்னுஞ் சொல்லை வடசொல்லாகக் காட்டல் வேண்டி, வடபா என்னும் அதன் வடமொழி வடிவிற்குப் பெண் குதிரை என்று பொருளிருத்தலால், அதற்கேற்ப ஒரு கதையைக் கட்டி வடபாக்னி என்றும் வடபா முகாக்னி என்றும் பெயரிட்டு, பெண்குதிரை முகத்தில் தோன்றிய நெருப்பென்று பொருளும் விரித்துவிட்டனர். அக்கதை வருமாறு:—

கிருதவீரியன் மக்கள், பிருகு முனிவர் ஈட்டிவைத்த பெருஞ் செல்வத்தைக் கவரவேண்டி அம் முனிவரின் மக்களையும் பேரப் பிள்ளைகளையுங் கரு நிலையிலுங் கொன்றதினால், அக்குடும்பத்தைச் சேர்ந்த ஒரேயொரு பெண் தன் கருவைத் தன் தொடையில் மறைத்து வைத்திருந்து, அது பிறந்தபின் ஔர்வ எனப் பெய ரிட்டாள். (ஊரு = தொடை. ஔர்வ = தொடையிற் பிறந்தவன்). அவ் வாண்பிள்ளை பெரியவனானபின், தன் தந்தைமாரைக் கொன்றவரிடம் பழிவாங்கும் பொருட்டுத் தவஞ்செய்ய, அத்தவத்தினின்று உலகையே அழித்துவிடத்தக்க ஒரு பெருந் தீ கிளர்ந்தெழுந்தது. அதைக் கண்டு அவன் முன்னோர் அஞ்சி அதைக் கடலில் இட்டுவிடுமாறு கட்டளையிட, அவனும் அதற் கிணங்கி அங்ஙனமே இட்டுவிட்டான். அது ஒரு பெண்குதிரை முக வடிவு கொண்டு அங்குத் தங்கிற்று.

மா. வி. அ. இக்கதையையும் வரைந்து, வடபாக்னி என்னுஞ் சொற்கு, " 'mare's fire', submarine fire or the fire of the lower regions (fabled to emerge from a cavity called the 'mare's mouth' under the sea at the South pole') என்று விளக்கமுங் கூறியுள்ளது.

மேலையர் தமிழைக் கல்லாமையால் விளையும் தீங்கு இதனால் வெளியாகின்றது.

வடை—வடா

வட்டை—வடை = வட்டமான பலகார வகை.

ஒ. நோ : பெட்டை—பெடை.

"globule, round mass or cake, L." என்று மா. வி. அ. வும் குறித்திருத்தல் காண்க.

வரணம்—வர்ண (இ. வே.).

வள்—வளை. வளைத்தல் = எழுதுதல், வரைதல்.

" உருவப் பல்பூ வொருகொடி வளைஇ" (நெடுநல். 113).

வள்—வட்டு—வட்டி. வட்டித்தல் = 1. வளைத்தல். (இலக். அக.).

2. எழுதுதல். "சிலப். 21 : 46, அரும்.).

எழுத்திலும் ஓவியத்திலும் வளைகோடும் வளைபூச்சும் நிரம்பியிருப்பதால், வளைத்தற் கருத்தில் எழுதுதற் கருத்துத் தோன்றிற்று.

வள்—வண்—வண்ணம் = 1. வளைத்தெழுதும் எழுத்து அல்லது ஓவியம்.

2. எழுதும் மை அல்லது கலவை நீர்.

"பலகை வண்ண நுண்டுகிலிகை" (சீவக. 1107).

3. எழுதிய கலவை நீரின் நிறம்.

"வான்சுதை வண்ணங் கொளல்" (குறள். 714)

4. ஓவிய அழகு.

"பிறைநுதல் வண்ண மாகின்று" (புறம். 1).

5. அழகிய கோலம். 6. ஓவியக்கலவை, நிறத்தின் வகை, வகை.

7. ஓசை வகை, பாட்டு, செய்யுள், சிறப்போசைச் செய்யுள், மெட்டு, பண்.

வண்ணமாலை = நெடுங்கணக்கு (எழுத்துக் கோவை).

வண்ணத்துப் பூச்சி—வண்ணாத்திப் பூச்சி = பல நிறம் அல்லது கோலமுள்ள பூச்சி.

வண்ணத்தான், வண்ணான் = ஆடைகளை நன்றாய் வண்ணஞ் செய்பவன்.

வண்ணக்கன் = பொற்காசுகளின் அல்லது பொற்கட்டிகளின் மாற்று நிறத்தை அல்லது திறத்தை நோட்டஞ் செய்பவன்.

வண்ணமகள் = கோலம் (அலங்காரம்) செய்பவள்.

வண்ணம் — வண்ணகம் = 1. முடுகிய வோசைக் கலிப்பா வுறுப்பு.

2. வரணித்துப் புகழ்கை.

வண்ணம்—வண்ணி. வண்ணித்தல் = பலவகையில் அல்லது பல்வேறு ஓசைபடப் புகழ்ந்து பாடுதல்.

வண்ணி—வண்ணிகன் = எழுத்தாளன்.

வள் — வர்—வரி. வரிதல் = 1. எழுதுதல் (பிங்.).

2. சித்திரமெழுதுதல், பூசுதல்.

"வரிவனப் புற்ற வல்லிப் பாவை" (புறம். 33).

வரித்தல் = 1. எழுதுதல்.

"வள்ளுகிர் வரித்த சாந்தின் வனமுலை" (சீவக. 2532).

2. சித்திரமெழுதுதல், பூசுதல்.

3. கோலஞ் செய்தல்.

"அணிமலர் துறைதொறும் வரிக்கும்" (ஐங். 117).

வரி=1. வளைகோடு (வரிப்புலி=வேங்கை), 2. கோடு, 3. எழுத்து (அரிவரி=அரியென்று தொடங்கும் நெடுங்கணக்கு) 4. இசைப்பாட்டு.

"வரிநவில் கொள்கை" (சிலப். 13 : 38).

5. நிறம். "வரியணிசுடர் வான்பொய்கை" (பட்டினப். 38). 6. அழகு. "வரிவளை" (பு. வெ. 11, 12).

தெ. வரி, க. பரெ (b), ம. வரெ.

வரி + அணம் = வரணம் = எழுத்து, பூச்சு, நிறம், வகை, அழகு, நிறம்பற்றிய குலம்.

வரணி—வர்ண்

வரணம்—வரணி. வரணித்தல் = புனைந்துரைத்தல்.

வரணம், வரணி என்னும் இரு சொல்லும், வடசொல் வடிவைப் பின்பற்றி வருண, வருணி எனத் தமிழில் வழுப்பட எழுதப்பட்டுள்ளன. பாண்டி நாட்டிற் குலம் வினவும்போது "என்ன வரணம்?" என்றே இன்றும் ரகர வடிவில் நாட்டுப்புறத்தில் வழங்குதல் காண்க.

வண்ணம், வரணம் என்னும் இரு சொல்லும் ஒரே மூலத்தினின்று தோன்றியவையே. ஆயின், முன்னது அடிப்படை மூலமாகிய வள் என்பதினின்றும், பின்னது மேற்படை மூலமாகிய வரி என்பதினின்றும், திரிந்தவையாகும்.

வள்—வண்—வண்ணம்—வண்ணி—வண்ணனை.

(வள்—வர்—)வரி—வரணம்—வரணி—வரணனை.

ஒ. நோ : திள்—திண்—திண்ணை (அடிப்படை மூலம்).

(திள்—திர்—) திரள்—திரளை—திரணை (மேற்படை மூலம்).

திண்ணை, திரணை என்னும் இரண்டும் ஒரே மூலத்தினின்றும் தோன்றிய ஒருபொருட் சொற்களே. இவையிரண்டும் இன்றும் நெல்லைநாட்டு உலக வழக்காம்.

இங்ஙனமே வண்ணம், வரணம் என்பனவும்.

வண்ணம் என்னும் அடிப்படை மூலத்திரிபு வடமொழியிலின்மையும், வரணம் (வர்ண) என்னும் மேற்படை மூலத்திரிபே **அதிலுண்மையும்**, கவனிக்கத் தக்கன.

வண்ணக வொத்தாழிசைக்கலி என்னும் செய்யுள் வகைப் பெயர், தொல்காப்பியர் முந்நூலிற்கண்ட இலக்கணக் குறியீடாதலின், தலைக்கழகக் காலத்தது என்று அறிதல் வேண்டும்.

வர்ண் என்று வடவர் காட்டும் மூலம் செயற்கையே.
"varṇ (rather Nom. fr. varṇa)" என்று மா. வி. அ.
குறித்திருத்தல் காண்க.

வணிகன்—வணிஜ் (இ. வே.), வணிஜ

பண்ணுதல்=செய்தல், உண்டாக்குதல், விளைவித்தல், உருவாக்குதல். இச்சொற்கு வடவர் கூறும் பண்டமாற்றுப் பொருள் கற்பனையே.
பண்ணியம்=1. பண்ணப்பட்ட பொருள், பண்டம்,
"பல்வேறு பண்ணியந் தழீஇத்திரி விலைஞர்" (மதுரைக்; 405).
"காம ருருவிற் றும்வேண்டும் பண்ணியம்" (மதுரைக் 422).
"சிறந்த தேளத்துப் பண்ணியம் பகர்நரும்" (மதுரைக். 506).
2. விற்கப்படும் வணிகப்பொருள்.
"கொடுப்போர் கடைதொறும் பண்ணியம் பரந்தெழ', (மணி 7, 24).
பண்ணிய விலைஞர்=பண்டவாணிகர்.
"பெருங்கடல் நீந்திய மரம்வலி யுறுக்கும் பண்ணிய விலைஞர்' (பதிற்றுப். 76: 5).
பண்ணியாரம்—பண்ணிகாரம்=பலபண்டம் (திவா.). தெ. பண்யாரமு.
பண்ணியன்—(பண்ணிகன்)—(பணிகன்)—வணிகன்.
ஒ. நோ. பண்ணியாரம்—பண்ணிகாரம். பண்ணியாரம்—பணியாரம். பகு—வகு.

வணிகன்—வணிகம். வணிகன்—வாணிகன்—
வாணிகம். வாணிகன்—வாணியன்.
"வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை." (தொல். 1578).

Guj. vaṇiyo, baniya, A. banyan, Port. banian, E banian banyan.

குமரிக்கண்ட முழுக்கினாலும், முதலிரு கழக இலக்கிய இறந்து பாட்டாலும், பலசொற்களின் வேர்களையும் இணைப்பு அண்டுகளையும் இன்று காட்ட இயலவில்லை.

வணிகன்—வணிகு. ஒ. நோ: வேந்தன் (வேய்ந்தோன்)-வேந்து. "அதன்கண் வணிகொருவ னுளன்" (மேருமந். 230).

வணிகு—வணிஜ். இனி, பொருள் பண்ணுபவன் (ஈட்டுபவன்) பணிகன் என்றுமாம்.

"vanij. m. (also written *banij.*) a merchant, trader RV. &. &." என்பது மா. வி. அ.

வதி—வஸ்

பதிதல்=தங்குதல். "பதிசென்று பதிந்தனன்" (தணிகைப்பு. பிரமன். 2).

பதி=1. உறைவிடம் (திவா) "பதியிற் கலங்கிய மீன்." (குறள். 1116).

2. வீடு (திவா.). 3. கோயில் (சங். அக.).

4. நகரம். "பதியெழு வறியாப் பழங்குடி" (சிலப். 1 15.) மதுரையம்பதி, தில்லையம்பதி முதலியன இலக்கிய வழக்கு.

பதி—வதி. ஒ. நோ: பகு—வகு, படிவு—வடிவு.

வதிதல்=தங்குதல். "வதிமண வம்பலர் வாயவிழ்ந் தன்னார்" (பரிபா. 10: 20).

வதி=தங்குமிடம். "மாவதி சேர" (கலித். 119.).

வதி—வஸ்—வாஸ. ஒ. நோ: மதி—மஸ்—மாஸ (மதம்).

வயிரம்—வஜ்ர

வல்—வள்=வலிமை (பிங்) "வள்வார் முரசு" (பு. வெ. 3: 2. கொளு).

வள்—(வய்)—வை—வயிர்=திண்ணிய கொம்பு.

"திண்காழ் வயிரெழுந் திசைப்ப" (திருமுரு. 120).

இதன் உரை:—"திண்ணிய வயிரத்தையுடைய கொம்பு மிக் கொலிப்ப"—நச்.

வயிர்த்தல்=1. வயிரங்கொள்ளுதல்.

"வயிர்த்தன ணிலத்தினுயர் வானமினி தென்பாள்" (பாரத. சம்பவ. 102.).

2. செற்றங்கொள்ளுதல்.

வயிர்— வயிரி=1 வன்னெஞ்சன் 2. செற்றமுள்ள பகைவன்.

வயிரித்தல்=மனம் முதலியன கடினமாதல், ஒட்டாரம் (பிடிவாதம்) செய்தல்.

வயிர் – வயிரம்=1. திண்மை. "உலந்தரு வயிரத்திண்டோள்" (கம்பரா. பூக்கோ. 10).

2. வலிமை. தோள்வயிரந் தோன்ற" (சீவக. 645).

3. மரவயிரம் (பிங்). 4. தொண்மணியுள் ஒன்று.

"வயிரப்பொற்றோடு" (சிலப். 29, செங்குட்டுவன் கூற்று.)

5. மனவயிரமாகிய செற்றம்.

வடமொழியில் இதற்கு மூலமில்லை.

"Another *vaj* or *uj*, 'to be hard or strong" may be inferred from *ugra*, *ojas*, *vajra*, *vaja*, (qq. vv.) the last of which gave rise to the Nom. *vājaya*."

என்று மா. வி அ. குறித்திருப்பதை நோக்குக.

வரால்—முரல

வரி=நீளம்; வரி—வரால் = குறவையினும் நீண்டிருப்பது. E murrel.

முர் (சூழ், பின்னு, பிணை) என்பது மூலமாயிருக்கலாமென்று, மா. வி. அ. கருதுவது சரியன்று.

வரி—வ்ரீஹி (அ. வே.).

வரி=வரிச்சம்பா, வரியுள்ள நெல், நெல் (பிங்.).

"எடுத்துவரி முறத்தினிலிட்டு" (தனிப்பாடல்).

மா. வி. அ. "of doubtful derivation" என்று குறித்திருத்தல் காண்க.

வல்—வல்

வல்—வல. வலத்தல்=1. வளைத்தல். 2. சூழ்தல். "இழை வலந்த" (புறம். 136). 3. சுற்றுதல்.

"நெடுங்கொடி...வாங்குசினை வலக்கும்" (புறம். 52).

வலந்தம்=வளைவு,

வலம்—பல (d)—இ. வே.

L valere, be strong.

வகரம் பகரமாய்த் திரிந்துள்ளது வடமொழியின் பின்மையைக் காட்டும்.

வள்ளி—வல்லி

வள்—வள்ளி=வளைந்த கொடிபோன்ற பெண், குறிஞ்சி நிலப் பெண், முருகன்தேவி.

ஒ. நோ: கொடு—கொடி=வளைந்த தண்டு. கொடி—கொடிச்சி =குறிஞ்சிநிலப் பெண்.
''கொடிச்சி காக்கும் பெருங்குர லேனல்'' (ஐங். 296).

வளையம்—வலய

வள்—வளை—வளையம்=வட்டம், வளையல்.

வனம்—வனஸ்—(இ. வே.)

வனம்=அழகு. ''வனமுலை'' (கலித். 97).
வனப்பு=அழகு. ''செவ்வானத்து வனப்பு'' (புறம். 4).

வாடகை—பாடக் (bh, ṭ)

வாழ்—(வாழகை)—வாடகை=வீட்டிற் குடியிருத்தற்குக் கட்டும் மாத அல்லது ஆட்டைக் கட்டணம்.

பின்பு இயங்கு திணைப்பொருள்களைப் பயன்படுத்தற்குக் கொடுக்குங் கட்டணமும் இப்பெயர்பெற்றது.

வடவர் பட் (bhaṭ) என்னுஞ் சொல்லை மூலமாகக்காட்டி, அதை யும் ப்ருத்த (bhṛta) என்பதன் திரிபாக்குவர். bhṛ=பொறு. bhṛta= தாங்கப்பெற்றவன், கூலிக்கு அமர்த்தப்பெற்ற வேலைக்காரன் அல் லது உழைப்பாளி அல்லது படைஞன். இவ்வகையிலும் மூலம் தமிழ்ச் சொல்லே, பொறு—bhṛ.

வாடி—வாட (ṭ)

வாடுதல்=வளைதல், பயிர் பச்சை வளைந்து பட்டுப்போதல்.
வாட்டம்=வளைவு, பொலி வழிவு.

அங்கணம் வாட்டசாட்டமாயிருந்தால் தண்ணீர் சரட்டென்று போகும் என்று வழக்கை நோக்குக.

வாடு—வாடி=வளைசல், அடைப்பு, சூழவேலி கோலிய விறகுக் கடை அல்லது மரக்கடை.

வாரி—வாரி (இ. வே.)

வார்தல்=ஒழுகுதல்.
"வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்
நேர்பும் நெடுமையுஞ் செய்யும் பொருள." (தொல். 800).
வார்—வாரி=நீர், வெள்ளம், கடல், நீர்நிலை. வார்=நீர்.
"வாராயிர முகமா நுகர்மஞ்சு" (பாரத அருச்சுனன்றவ-159).

வாரணம்—வாருண, வருண

வரிதல்=வளைதல். வரி—வார்—வாரணம்=நிலத்தைச் சூழ்ந்துள்ள கடல். "வாரணஞ் சூழ்புவி" (தனிப்பாடல்). வாரணம்—வாரணன்=கடல்தெய்வம். வடவர் வ்ரு (கவி, மறை, சூழ்) என்பதை மூலமாகக்காட்டி அனைத்தையும் மூடும் வானம் ("All-enveloping sky" என்று பொருள் கூறுவர். இது வருணனை மழைத்தெய்வமாகக் கொண்ட இடைக்காலத்திற்கு மட்டும் பொருந்துமேயன்றி, கடல் தெய்வமாகக்கொண்ட முற்கால பிற்கால நிலைமைக்குப் பொருந்தாது.

தமிழர் வாரணனை என்றும் கடல்தெய்வமாகவே கொண்டனர்.

"வருணன் மேய பெருமணல் லுலகமும்" (தொல். 951).

இது வாரணன் மேய நீர்மணல் லுலகமும் என்றிருத்தல் வேண்டும். தொல்காப்பியர் வருண என்னும் வடசொல் வடிவிற்கேற்ப வருணன் என்று திரித்துக்கொண்டார்.

வடவர் காட்டும் வ்ரு என்னும் மூலத்திற்குச் சூழ்தற் பொருளுமுள்ளது.

இனி, வரி என்னும் தமிழ்ச்சொற்கு மூடுதற் பொருளுமுள்ளது.
வரிதல்=மூடுதல். "புண்ணை மறைய வரிந்து" (திவ். திருவாய். 5 : 1 : 5).

வளைவுக் கருத்தடிப்படையிலேயே, வாரணம் என்பது கேடகத்தையும் சங்கையும் குறிக்கும்.

வாலம்—வால, பால (b), வார

வார்—வால்=நீண்ட வுறுப்பு. ஒ. நோ: நீர்—நீல்.

"வால் குழைக்கு நாய்" (நாலடி. 213).

வால்—வாலம்=1. வால். "வாலமும் பணமு மிருங்கையிற் பற்றி" (காஞ்சிப்பு. மணிகண், 14).

2. நீண்டு ஒடுங்கிய துணி அல்லது கந்தை.

வாலமுகம்= நீண்டமுகம் (உ. வ.).

வாலுகம்—வாலுக, பாலுக (b) =மணல்

வால்=வெள்ளை. வாலுகம்=வெண்மணல்.

" வேலைவா லுகத்து விரிதிரைப் பரப்பின்" (சிலப். 6 : 131).

மா. வி. அ. "of doubtful derivation" என்று குறித்திருத்தல் காண்க.

வாளம்—வால

வள்—வாள்—வாளம்=வட்டம், வட்டமான மதில், மதில் போன்ற மலைத்தொடர்.

வாளி[1]—பாலி

வள்—வாள்—வாளி=வட்டமாயோடுகை. "மாதிர முறப்பல வாளி போதுமால்" (பாரத. சூது. 121). "வாளி வெம்பரி" (பாரத. குரு. 108).

மா. வி. அ. சுற்றளவு (Circumference) என்று மட்டுங் குறித்துள்ளது.

வாளி[2]—வாலீ

வள்—வாள்—வாளி=வளையம், வளைந்த அல்லது வளைய வடிவான காதணி.

"வாளிமுத்தும்" (குமர. பிர. முத்து. பிள். 11).

வாளிகை—வாலிகா

வாளி—வாளிகை=வளைய வடிவான காதணி.

" சுட்டிகையும் வாளிகையும்" (பதிெனா. திருக்கைலாய. 68).

விக்கல்—ஹிக்கா

விக்கு—விக்குள், விக்கல்.

" உண்ணுநீர் விக்கினா னென்றேனா" (கலித். 51).

" நாச்செற்று விக்குள்மேல் வாராமுன்" (குறள். 355).

" நெஞ்சே விக்கல் வராது கண்டாய்"

தெ. வெக்கில்லு, க. பிக்கலு (b), ம. எக்கில்.

E hicket, hiccup, hiccough.

இது ஒலிக்குறிப்புச் சொல்லாயினும், ஆரிய இனத்தினும் தமிழ் இனம் முந்தியதாதலின், இது தமிழ்ச் சொல்லேயெனத் தெளிக.

விட்டம்—விஷ்ட

விள்—விடு—விட்டம். விள்ளுதல்=பிரிதல். விடுதல்=பிரித்தல்.

விட்டம்=1. குறுக்காகச் சென்று வட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் கோடு.

2. குறுக்குத்தரம்

"இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென" (அகம். 167).

"குருட்டுப் பூனை விட்டத்திற் பாய்ந்தது போல." (பழமொழி).

விட்டை—விஷ்டா

விள்ளுதல்=நீங்குதல், வெளிப்படுத்துதல். விள்—விட்டை.

"கழுதை விட்டையைக் கைநிறைய ஏந்திறற் போல" (பழமொழி).

வடவர் விஷ்[3] என்பதை மூலமாகக் காட்டி, அதன் புணர்ப்புத் திரிபாக விட், விண் என இரு வடிவுகளைக் குறிப்பர்.

விள்—விஷ் (மலம்). ஒ. நோ: உள்—உஷ், சுள்—சுஷ்.

விள்—விண். பிள்—விள். பிள்—(பிய்)—பீ. பிள்—பீள்—பீளை=கண்மலம்.

விடி—வ்யுஷ்டி (இ. வே.)

வெள்—வெளு. வெளுத்தல்=1. வெண்மையாதல். 2. விடிதல். கிழக்கு வெளுத்தது (உ. வ.).

வெள்—வெளி. வெளித்தல்=1. வெண்ணிறங் கொள்ளுதல்.

2. விடிதல்.

வெளி—வெடி. ஒ. நோ: வெளி—வெடி=திறந்தவெளி (பிங்.). களிறு—கடிறு, கெளிறு—கெடிறு.

வெடிதல்=விடிதல். "என்றூழ் வெடியாத போதிற் கொய்தான்" (செவ்வந்திப்பு. உறையூரழி. 47).

வெடி=விடிவெள்ளி (பிங்.). வெடியல்=விடியல். வெடிவு=விடிவு.

வெடி—விடி. விடிதல்=கதிரொளி தோன்றுதல்.

"வெஞ்சுடர் தோன்றி விடிந்ததை யன்றே" (சீவக. 219).

விடி=விடிகாலை. "விடிபக லிரவென் றறிவரிதாய" (திவ். பெரிய. 4 : 10 : 8).

விடி—விடியல். "வைகுறு விடியல்" (தொல். பொ. 8).

"விடியல் வைகறை யிடூஉ மூர" (அகம். 196).

விடி—விடிவு—விடிவை. "விடிவை சங்கொலிக்கும்" (திவ். திருவாய் 6 : 1 : 9).

மா. வி. அ. அல்லது வடவர் காட்டும் மூலம் வருமாறு:—

வ்யுஷ்[1] (ப்யுஷ்)=1. எரி. 2. பிரி. 3. தள், வெளிவிடு.

வி+வஸ்[2] (ஒளிர்)=வ்யுஷ்[2] (vy-uṣ)=விடியல் (அ. வே); வ்யுஷி (7-ஆம் வேற்.)—இ. வே.).

வ்யுஷித (7-ஆம் வேற்.)=விடியல்.

வ்யுஷ்ட=விடிந்து. வ்யுஷ்டி=விடியல் (இ. வே.).

இதை நோக்கும்போது, விடி என்னும் சொல்லையே வ்யுஷ் என்று திரித்து அதற்கேற்ப இங்ஙனம் தித்திருக்குச் செய்திருக்கின்றனர் என்பது தெரியவருகின்றது.

உள் (ஒள்)—உஷ் என்பது, முன்னரே உண்ணம் (உஷ்ண) என்னும் சொல்லின்கீழ்க் காட்டப்பெற்றது.

விடை—வ்ருஷ, வ்ருஷப

விடைத்தல்=விம்முதல், பருத்தல், விறைத்தல், செருக்குதல்.

விலங்கினத்திற் பெரும்பாலும் ஆண் பருத்திருப்பதால், விடை என்னும் சொல் விலங்கின் ஆண்பாலை உணர்த்தும்.

விடை=1. காளை. "பீடுடைய போர்விடையன்" (தேவா. 539 : 2).

2. எருமைக்கடா. "மதர் விடையிற் சீறி" (பு. வெ. 7 : 14).

3. வெள்ளாட்டுக்கடா.

"மாடந்தோறும் மைவிடை வீழ்ப்ப" (புறம். 33).

4. ஆண்மரை. "மரையான் கதழ்விடை" (மலைபடு. 331).

5. ஆண்வெருகு. "வெருக்கு விடையன்ன" (புறம். 324).

விடை—விடலை=இளங்காளை, காளை போன்ற மறவன், பாலைநிலத் தலைவன்.

விடலை. L. vitula, Gk italos, S. vatsa.

விடை என்பது விலங்கினத்தின் ஆண்பாலைக் குறிக்கும் பொதுச் சொல்லாயினும், வழக்கு மிகுதிபற்றிச் சிறப்பாகக் காளையை யே உணர்த்தும்.

வடவர் காட்டும் மூலம் வ்ருஷ் (மழைபெய்) என்பதே. மழைக் கருத்தினின்று, ஆண்மைக் கருத்தை இருவேறு வகையில் கடுகள வும் பகுத்தறிவிற் கொவ்வாதவாறு வலிந்து வருத்தியிருக்கின்றனர்.

வ்ருஷ்=மழைபெய் (இ. வே.), மழைபோல் அம்பைப் பொழி, ஆண்மைகொள், பிறப்பிப்பு ஆற்றல் பெறு.

வ்ருஷன்—("ஒருகால், முதலில் 'பெய்கின்ற, தெளிக்கின்ற, சினைப்பிக்கின்ற') ஆண்மையுள்ள, வலிமையுள்ள, மைந்துள்ள (இ. வே.); ஆடவன், ஆண், ஆண்விலங்கு, காளை, ஆண் குதிரை, தலைவன்.

வ்ருஷ=ஆடவன், ஆண், கணவன், ஆண்விலங்கு, காளை, விடையோரை, தலைவன், தலைசிறந்தது.
வ்ருஷப (bh)=வ்ருஷன் (இ. வே.).
வ்ருஷப—ருஷப=காளை (இ. வே.).

வ்ருஷப என்பதன் முதற்குறையே ருஷப என்பது. ஆயினும், வடவர் அது வந்த வழியை அறியாமலோ, வடசொல்லாகக் காட்டல் வேண்டி வேண்டுமென்றோ, ருஷ்[2] என்பதை ருஷப என்னும் வடி விற்கு மூலமாகக் காட்டுவர்.

ருஷ்[2]=செல், இயங்கு; குத்து, கொல்; உந்து, தள்.

விடை என்னும் சொல்லின் திரிபாதலாலேயே, வ்ருஷ என்பதில் வகரமுள்ளது. ஆயின், வ்ருஷ் (மழைபெய்) என்னுஞ் சொல் லொடு அதைத் தொடர்புபடுத்தி உத்திக்கொவ்வா முறையில் பொருள் தொடர்பு காட்டினர். அதனோடமையாது, ருஷப என்னும் முதற்குறைத் திரிபையும் வேறு சொல்லாகக் கொண்டு, அதற்கும் பொருந்தா முறையிற் பொருள் பொருத்தினர்.

விடை என்பது கொச்சை வடிவில் விட என்று நிற்கும். இடை யின விடைச் செருகல் வழக்கப்படி வி-வ்ரு என்றும், மெய்த்திரிபு மரபுப்படி ட-ஷ என்றும், திரிந்தனவென உண்மை அறிக.

விண்டு—விஷ்ணு

விள்ளுதல்=விரிதல், வெளியாதல். விள்—வெள்—வெளி. விள்—விண்=1. விரிந்த அல்லது வெளியாகிய வானம்.

"விண்பொரு புகழ் விறல்வஞ்சி" (புறம். 11).

2. வானத்திலுள்ள முகில் (திவா.).

3. மேலுலகம்.

"விண்மீதிருப்பாய்" (திவ். திருவாய். 6 : 9 : 5).

விண்—விண்டு = 1. வானம். "விண்டுலாய் நிமிர் கிரவுஞ்சகிரி" (கந்தபு. தாரக ஃ).

2. முகில் (பிங்.). 3. வானளாவு மலை.

"விண்டு நிறைய வாணன் வைத்த விழுநிதி" (மதுரைக். 202).

4. வானவெளியில் இயங்குங் காற்று (பிங்.).

5. திருமால் (பிங்.).

குமரிக்கண்ட முல்லை நிலத்து மக்கள், தங்கட்கும் தங்கள் ஆடு மாடுகட்கும் இன்றியமையாத மழையைத்தரும் தெய்வமென்று கருதியே, கரிய வானத்தை அல்லது முகிலை மாயோன் (கரியோன்) என்னும் பெயரால் வணங்கிவந்தனர்.

ஒ. நோ: மால் = முகில், மாயோன்.

இச்சொல்லே திரு என்னும் அடைபெற்றுத் திருமால் எனத் தெய்வப்பெயராய் வழங்கி வருகின்றது.

ஆரியர் வேதக்காலத்தில் கதிரவனையே விஷ்ணு என்றழைத்தனர். பின்னர், தமிழரொடு தொடர்புகொண்டு தமிழ்மதத்தை மேற்கொண்ட பின்பே, விஷ்ணு என்னும் சொல் திருமாலைக் குறிக்கலாயிற்று.

வடவர் காட்டும் மூலம் விஷ்[1] = வேலைசெய், ஓடு, மேம்படு, மூடு உண். மா. வி. அ. "prob. for vish, 'All-pervader' or 'Worker'" என்று கருதும்.

எங்கும் நிறைந்திருப்பது என்னும் கருத்தில், விஷ் என்பது விள் என்பதன் திரிபே. ஒ. நோ: உள்—உஷ், சுள்—சுஷ்.

வித்து—(விதை)—வீஜ, பீஜ (இ. வே.)

வித்து = 1. விதை. "சுரைவித்துப் போலுந்தம் பல்." (நாலடி. 315).

2. விந்து (நாமதீப, 601).

3. காரணம். "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்" (குறள். 138). ம., தெ., து. வித்து, க. பித்து.

மா. வி. அ. "of doubtful origin என்று குறித்திருத்தல் காண்க.

ஆங்கிலர் 'மதுரையை' மெஜுரா என ஒலித்ததையும் நோக்குக.

விந்து — பிந்து, விந்து (அ. வே.)

வித்து—விந்து = 1. வித்துப்போன்ற நீர்த்துளி 2. நீர்த்துளியாகிய கருநீர் (சுக்கிலம்). 3. உலகத்திற்கு வித்துப்போன்ற மாயை.

"விந்துவின் மாயையாகிய" (சி. சி. 1: 19).

வியம்—வியத் (இ. வே.)

விள்ளுதல் = விரிதல்.

விள்—(விய்)—வியம் = விரிவு. "வியம்பெறு தோற்றமும்" (திருக்காளத். பு. ஞானோப 62).

வடவர் வி-யத் என்று பிரித்துப் பிரிந்து போகை என்று பொருள் கூறி, யத் என்பதற்கு இ[5] என்பது மூலமெனக் காட்டுவர். இவ் 'இ' என்பது இயல் என்னும் தமிழ்ச்சொல்லின் முதனிலையாகிய இய்யே என்று முன்னரே காட்டப்பெற்றது.

வியம்—வியன்—வியல் = அகலம். ஒ. நோ: திறம் — திறன்— திறல்.

"வியலென் கிளவி யகலப் பொருட்டே." (தொல். சொல். 354).

வியன் = 1. அகலம், 2. பெருமை (திவா.) 3. வானம்.

"வியனிடை முழுவது கெட" (தேவா. 833: 7).

விருது —விருத, பிருத, பிரத

வெல்— (வில்)—(விர்)—விறு—(வில்)—வீறு = வெற்றி.
"வீறுபெற வோச்சி" (மதுரைக். 54).

(விர்)—விருது = 1. வெற்றிப்பட்டம்.

"தலம்புகழ் விருது" (திருவாலவா. 49: 9).
2 வெற்றிக்கொடி.

"கயல்விரு தனங்கன்" (தனிப்பாடல்).
3. வெற்றிச் சின்னம்.

"பருதி .... விருதுமேற் கொண்டுலாம் வேனில் (கம்பரா. தாடகை. 5).

வடவர் காட்டும் மூலம் :—

வி-ருத் (d) = அழு, கரை, ஏங்கு, புலம்பு, துயர்கொண்டாடு.
விருத = புகழ்ச்சிச் செய்யுள், பாடாண்பாட்டு, ஏத்துரை.

இரங்கற் செய்யுளாகிய கையறு நிலையில் ஒரு தலைவனை அல்லது வள்ளலைப் புகழ்ந்து பாடுவது வழக்கமேனும், அழுகைக் கருத்தில் வெற்றிக்கருத்துத் தோன்றுமா என்பதை அறிஞர் ஆய்ந்து காண்க.

வில்வம்—பில்வ (அ. வே.), வில்வ

விள்—விளம் = வெள்ளையான தோடுடைய கனி:
விள்—விளா—விளவு—விளவம். விளம்—விளர்—விளரி = விளர்.
விளா—விளாத்தி. விளவம்—விலவம்—வில்வம் = கருவிளத்திற்கினமான கூவிளம்.
வடமொழியில் மூலமில்லை.

விழி—வித் (d)—இ. வே:

விள்ளுதல் = விரிதல், திறத்தல். விள்—விழி.
விழித்தல் = 1. கண் திறத்தல்.
இமையெடுத்துப் பற்றுவே னென்றியான் விழிக்குங்கால்"
(கலித். 144).
2. *தூக்கந் தெளிதல்.*
"உறங்கி விழிப்பது போலும் பிறப்பு." (குறள். 339).
3. *காணுதல்.*
4. *எச்சரிக்கையா யிருத்தல், முற்காப்பா யிருத்தல்.*
5. *கவனித்து நோக்குதல். "நாட்டார்கள் விழித்திருப்ப' (திருவாச. 5: 28).*
6. *விளங்குதல், ஒளிர்தல்.*
"பொன்னா ணிருள்கெட விழிப்ப" (சீவக. 2283).
7. *அறிதல்.*
விழி = 1. அறிவு. 2. ஓதி (ஞானம்).
"தேருர் விழியிலா மாந்தர்" (திருமந். 177).
L vide, E vide, S. vid = to know.

வித்யா, வித்வான், வைத்ய, வேத, வேதஸ் (dh) முதலிய பல சொற்கள் வித் என்னும் மூலத்தினின்று பிறந்தவையே.

ஆகவே ஆரியர்க்கு ஞானமும் வித்தையும் தமிழினின்றே தோன்றின என அறிக.

வித்யா என்னும் வடசொல், தமிழில் வித்தை, விச்சை, விஞ்சை என முறையே திரியும். ஆரியர் இதைக்கொண்டு, விழி என்பதன் திரிபே வித் என்பதை அறியாத தமிழரை மயக்குவர்.

வீ—வீ (இ. வே.)

விள்—(விய்)—வீ. வீதல்=நீங்குதல்.

"வினைப்பகை வீயாது பின்சென் றடும்." (குறள். 207).

2. மாறுதல்.

"வானின் வீயாது சுரக்கும்" (மலைபடு. 76).

3. சாதல்.

"சிலைத்தெழுந்தார் வீந்தவிய" (பு. வெ. 3. 7).

4. அழிதல். "வீயாச் சிறப்பின்" (புறம். 15).

வீ=1. நீக்கம் (பிங்.). 2. சாவு (பிங்.). 3. அழிவு.

" வீகலந்த மஞ்ஞைபோல்" (சீவக. 1104).

வடவர் வி-இ[5] என்று மூலங்காட்டி, வ்யய் (vyay)=பிரிந்து போ (to go apart or in different directions) என்று விரித்து விளக்குவர்.

வி என்பது விள் என்பதன் திரிபு. இ என்பது இயல் என்பதன் முதனிலை. இயல்=செல்கை, நடக்கை.

வீசு[1]—வீஜ்=விசிறி வீசு.

வடவர் விஜ்[1] (விசையாக இயங்கு) என்பதை மூலமாகக் கருதுவர். அதுவும் விசை என்பதன் திரிபே.

விசு—விசை. விசுவிசு=விருவிரு. விசுவிசென்று பிடித்தெரிந்து விட்டது என்னும் வழக்கை நோக்குக.

விசு—விசிறு—விசிறி. விசிறு=வீசு. விசு—வீசு.

வீசு[2]—வாஸ்[2]

வீசுதல்=மணம் வீசுதல், மணத்தல். வீச்சம் = மணம், நாற்றம்.

நாறு என்னும் சொற்போன்றே வீசு என்பதும், செய்யுள் வழக்கில் நறுமணத்தையும் உலக வழக்கில் தீய மணத்தையும் உணர்த்தும்.

வாஸ்—வாஸ=மணம். வாஸ் என்பது பெயரடி வினையே. மா. வி. அ. "perhaps only Nom. fr. next" என்று குறித்திருத்தல் காண்க. "next" என்றது வாஸ என்னும் சொல்லை.

வீணை—வீணா

விண் = வில் நரம்பு தெறித்தற் குறிப்பு.

விண்விண் = 1. யாழ் நரம்பு இசைத்தற் குறிப்பு.

2. புண்ணினால் நரம்பு நோவெடுத்தற் குறிப்பு.

விண்—வீணை. "நாரதன் வீணை நயந்தெரி பாடலும்" (சிலப். 6 : 18).

"மங்கலம் இழப்ப வீணை" (ஷெ 6 : 22).

"மாசில் வீணையும் மாலை மதியமும்" (அப்பர்).

ஆரியர் வருமுன்பே தலைக்கழகத் தமிழ் முத்தமிழாய் வழங்கி வந்ததினாலும், நாரதர் தமிழ்நாடு வந்தே இசைத் தமிழ் கற்றுப் 'பஞ்சபாரதீயம்' என்னும் இசைத்தமிழ் நூலியற்றியதினாலும், கி. பி. 2-ஆம் நூற்றாண்டுச் சிலப்பதிகாரம் வீணையைக் குறித்தலாலும், 7-ஆம் நூற்றாண்டில் அப்பர் "மாசில் வீணை" (குற்றமற்ற யாழ்) என்று பாடியிருத்தலாலும், வீணை 11-ஆம் நூற்றாண்டில் வடக்கினின்று வந்த ஆரிய இசைக்கருவி என்பார் கூற்று தமிழ் வெறுப்பாலெழுந்த தென்க.

வீணை தமிழர் இசைக்கருவியே என்பதைப் 'பாணர் கைவழி' என்னும் நூலுட் கண்டு தெளிக.

வடவர் வேண் என்றொரு சொல்லைப் படைத்து இசைக்கருவி யியக்குதல் என்று பொருள்கூறி, வேணு (மூங்கில்) என்னும் சொல்லொடு தொடர்பு காட்ட விரும்புவர். வேணு என்பது வேய் என்னும் தென்சொல்லின் திரிபாகத் தெரிகின்றது. மேலும், அதன் பொருந்தாமையையும் விண் என்பதன் முழுப் பொருத்தத்தையும் பகுத்தறிவுள்ளார் கண்டறிக.

மா. வி. அ. "of doubtful derivation" என்று குறித்திருத்தலையும், மூலங் காட்டாமையையும், வேண் என்னும் சொல்லைப்பற்றி "prob. artificial" என்று கருதுதலையும், நோக்குக.

வெஃகு—பிக்ஷ் (bh)—இ. வே.

வெள்ளுதல் = விரும்புதல். வெள்—வெண்டு. வெண்டுதல் = ஆசைப்படுதல். வெள்—வேள். வேட்டல் = விரும்புதல். வேள்—வேண்டு. வேண்டுதல் = விரும்புதல், கெஞ்சுதல், இரத்தல்.

வெள்—வெள்கு—வெஃகு. வெஃகுதல் = விரும்புதல், பேராசை கொள்ளுதல், பிறர் பொருளை விரும்புதல்.
வெஃகு—க பேக்கு (b). E beg.

பிக்ஷ் என்பது பஜ் (bh) என்பதன் ஆர்வ வினையென்றும், பங்கு கொள்ள விரும்பு என்று பொருள்படுவதென்றும், மா. வி. அ. கூறும். "Desid. of bhaj, lit. 'to wish to share or partake.'"

பஜ் என்பது பகு என்பதன் திரிபென்று முன்னரே காட்டப் பெற்றது.

Beg என்னும் ஆங்கிலச் சொல்லின் தமிழ் மூலத்தை அறியாது, "perh. shortened f. F *beguiner* be a *beghard* or *beguin*, lay brother of mendicant order named f. Lambert Begue" என்று COD வரைந்திருப்பது பொருந்தாது.

வெஃகா—வேகா (g)

வெஃகு = மிக விரும்பு. வெஃகு—வெஃகா = 1. காஞ்சிபுரத் தருகில் ஓடும் ஆறு.

"சேயாற்றுலும் வெஃகாவினுலும்" (S. I. I. ii, 352 : 115).

2. திருமால் திருப்பதிகளுள் ஒன்று. (திவ். இயற். 3 : 62).

வெஞ்சனம்—வ்யஞ்சன

அண்ணுதல் = நெருங்குதல், கூடுதல், பொருந்துதல்.

அண்—ஆணம் = கூட்டு, நேயம், கறிக்கூட்டு, குழம்பு.

வெந்த ஆணம்—வெஞ்சனம் = வேகவைத்த கூட்டு.

பச்சடி × ஆணம்.

ஆணம் வெஞ்சனம் என்னும் இரு சொற்களும் பெரும்பாலும் கீழ் வகுப்பாரிடையே வழங்குகின்றன. ஆணம் என்னும் சொல்லே வெந்த குழம்பைத்தான் குறிக்கும். ஆயினும் பச்சடியினின்று தெளிவாய் வேறுபடுத்திக் காட்டற்கு வெந்த என்னும் அடை பெற்றது. "நண்டாணமுங் களியும் தின்றாலோ தெரியும்." என்பது பழமொழி. இதில் ஆணம் என்பது சமைத்த குழம்பைக் குறித்தல் காண்க.

வெஞ்சணம்—வெஞ்சனம்—வெஞ்சினம்.

"வெஞ்சினத்திற் பற்பட்டான் மீளாது" (காளமேகம்),

"வெஞ்சினங்க ளென்றும் விரும்பாளே" (தனிப்பாடல்).

வடவர் காட்டும் வி + அஞ்ச் (vy-añj) என்னும் மூலத்திற்கும் வெஞ்சனத்திற்கும் எள்ளளவும் தொடர்பில்லை.

அஞ்ச்=எண்ணெய் தேய் அல்லது சாயம் பூசு, தோற்றுவி, வெளிப்படுத்திக் காட்டு (இ. வே.).

வ்யஞ்ச்=நன்றுயெண்ணெய் தடவு, தோற்றுவி, வெளிப்படுத்திக் காட்டு (இ. வே.).

அணிகலம், அடையாளம், மெய்யெழுத்து முதலிய பொருள்கட்கு வடவர் காட்டும் மூலம் பொருந்தும். ஆயின், வெஞ்சணத்திற்குப் பொருந்தாது. வடிவொப்புமை பற்றித் தென்சொல்லை வடசொல்லொடு தொடர்புபடுத்தியுள்ளமை வெளிப்படை.

வேண்—வேந் (இ. வே.)

வெள்—வெண்டு. வெள்—வேள்—வேண்—வேண்டு. வேள்—வேட்பு, வேட்கை. வேண்+அவா=வேணவா. வேணும் (உ. வ.)=வேண்டும்.

வெள்—வெள்கு—வெஃகு.

வேந்=பேரார்வங்கொள், ஏக்கமுறு (இ. வே.); பொறாமைப்படு (இ. வே.).

தாது பாடம் இதை வேண் (பற்று, எடு) என்னும் சொல்லின் மறுவடிவாகக் கொள்வது பொருந்தாது.

வேலை—வேலா=கடல்

வேல்—வேலி=1. சூழ வேலமுள்ளால் இடும் அரண்.

"வேலிக்குப் போட்டமுள் காலுக்கு வினையாயிற்று." (பழமொழி).

2. சூழெல்லை.

வேல்—வேலை=1. எல்லை.

2. நிலத்திற்கு எல்லையாக வுள்ள கடல்.

"நளியிரு முந்நீ ரேணி யாக" (புறம். 35). ஏணி=எல்லை.

"வேலை நஞ்சுண் மழைதரு கண்டன்" (திருவாச. 6 : 46).

3. கடற்கரை. (பிங்.).

"பௌவ வேலை" (கந்தபு. மேருப். 46).

வேளா—வேலா

வேலை=1. எல்லை, காவலெல்லை, அமையம்.

ஒ. நோ: "கூறிய வெல்லையில்" (கம்பரா. விபீடண. 97).

2. காலம் (பிங்.)

" மணந்தா ருயிருண்ணும் வேலை" (குறள், 1221).

வேலை—வேளை = 1. அமையம். எ - டு. வந்தவேளை நல்ல வேளை.

2. சிறுபொழுது. எ-டு: காலைவேளை.

3. பகற்பகுதி. எ-டு : இருவேளைப் பள்ளி.

4. நாட்பகுதி. எ-டு : பகல்வேளை, இராவேளை.

5. மருந்துண்ணும் நேரம். எ-டு : மூவேளை மருந்து.

6. நேரம், காலப்பகுதி. எ-டு: வேளைபார்த்து அனுப்பி வைக்க வேண்டும்.

வைகை —வேகவதீ

வைகுதல் = தங்குதல். வைகு—வைகை = தங்கிச் செல்லும் ஆறு. தங்கிச் செல்லுதலாவது மெல்லச் செல்லுதல்.

" வையை யன்ன வழக்குடை வாயில்" (மதுரைக்.) 35. 6.

" வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பின்" (புறம். 71).

4. தென்சொல் மூலத் திரிசொற்கள்

(1) குறிப்பொலிச் சொல்

எ—டு:	தமிழ்	வடமொழி
	திருதிரு	த்ருச் (இ வே')=பார்
	பசபச	பச் (இ.வே.)= ,,

(2) மருஉ

எ—டு:	தமிழ்	வடமொழி
	அருந்து	அத்(d)—இ.வே.

(3) சிதைவு

எ—டு:	தமிழ்	வடமொழி
	செவியுறு	ச்ரு (இ. வே.)

(4) மேற்படை வளர்ச்சி

எ—டு.	தமிழ்	வடமொழி
	கரணம்	கரண—காரண, கார்ய
	முகம்	முக—முக்ய (அ.வே.)

(5) விரிப்பு

எ—டு: தமிழ்	வடமொழி
கரு	கர்ப்ப (garbha)—இ.வே.
வரி (நெல்)	வ்ரீஹி

6) தொழிற் பெயர் வினைமுதலாதல்

எ—டு. தமிழ்	வடமொழி
வள்—வட்டு—வட்டம்	வ்ருத்=திரும்பு, வளை.
குரு—குருத்தல்=சினத்தல்	க்ருத் (dh)=சின.

இவ்வியல்பு மேலையாரியத்திலும் அமைந்துள்ளது.

வ்ருத்—L vertere, Slav vruteti, vratite, Lith vartyti, Goth wairthen, Ger werden, E-ward·

5. தென்சொல்லடிப் புணர்ப்புச் சொற்கள்

எ—டு. தமிழ்	வடமொழி
உ+தூளி+	உத்(d)+தூலன (dh)=உத்தூலன
கும்+பிண்டம்+சரணம்	ஸபிண்டீகரணம்

கும்ம—L கும்—Gk சிம்—(sym)—Skt ஸம்—ஸ

6. மொழிபெயர்ப்புச் சொற்கள்

தமிழ்	வடமொழி	தமிழ்	வடமொழி
அங்குற்றை	தத்ரபவத்	நிலை	ஸ்தாய்
ஆனைத்திப்பிலி	ஹஸ்திப்பிப்பலி	நூற்றுவரைக் கொல்லி	சதக்நீ
இங்குற்றை	அத்ரபவத்	புள்	சகுந
இடையினம்	அந்தஸ்த	பூப்பு	புஷ்ப
உடனே	ஸகயா		
காண்வரு	தர்சநீய	பொருமை	அக்ஷமா
காலதர்	வாதாயந	மன்பதை	ஜனபத
கேள்வி	ச்ருதி(இசையலகு)	மான்றலை	ம்ருக சீர்ஷ
கைம்மா	ஹஸ்திந்	விலங்கு	த்ரியக்ஸ்

அறுபருவப் பெயர்

வேத ஆரியரின் முன்னோர் இருந்த வடமேலை நாடுகட்கு, இளவேனில் (Spring), கோடை (Summer), வறளை (Autumn), மாரி (Winter) என்னும் நாற் பெரும்பொழுதே, உரியன. தென்னாடு வந்து தமிழரொடு தொடர்புகொண்ட பின்னரே, தமிழகத்திற்குரிய அறு பெரும் பொழுதுகளையும் ஆரியர் மொழிபெயர்த்துக் கொண்டனர்.

தமிழ்	வடமொழி	தமிழ்	வடமொழி
இளவேனில்	வஸந்த்த	கூதிர்	சரத்
முதுவேனில்	க்ரீஷ்ம (g)	முன்பனி	அச்சிர
கார்	வர்ஷ	பின்பனி	ஹேமந்த்த

எழுகிழமைப் பெயர்

தமிழ்	வடமொழி	தமிழ்	வடமொழி
ஞாயிறு	ஆதித்ய	வியாழன்	ப்ருஹஸ்பதி
திங்கள்	ஸோம	வெள்ளி	சுக்ர
செவ்வாய்	அங்கார, அங்காரக	காரி	(சநி)
அறிவன்	புத (b, dh)		

பன்னீரோரைப் பெயர்

தமிழ்	வடமொழி	இலத்தீனம்
மேழம் (மேடம்)	மேஷ	Aries
விடை	வ்ருஷப	Taurus
இரட்டை (ஆடவை)	மிதுன	Gemini
கடகம்	கர்க்கடக	Cancer
ஆளி (மடங்கல்)	ஸிம்ஹ	Leo
கன்னி	கன்ய	Virgo
துலை	துல	Libra
நளி	வ்ருச்சிக	Scorpio
சிலை	தநு (dh)	Sagittarius
சுறவம்	மகர	Capricorn
கும்பம்	கும்ப (bh)	Acquarius
மீனம்	மீன	Pisces

இன்று தமிழ்நாட்டில் வழங்கும் கணிய (ஜோதிட) நூல், குமரி நாட்டிலேயே தமிழரால் முற்றும் அறியப்பட்டுவிட்டது. அதை வழி வழி கையாண்டுவந்த வள்ளுவரைத் தீண்டாதவரென்று தாழ்த்தி, ஆரியர் பெரும்பாலும் தமக்கே அந்நூலாட்சியை உரிமையாக்கிக் கொண்டனர்.

எழுகோள்களும் இருபத்தேழு நாண்மீன்களும் ஓர் ஆண்டு வட்டத்தை யமைக்கும் பன்னிரு திங்கட்குரிய பன்னீரோரைகளும், தமிழர் கண்டவையே. இன்று உலக முழுவதும் வழங்கிவரும் எழு கோட் பெயர்களைக் கொண்ட எழுநாட் கிழமையமைப்பு, தமிழரதே. ஆரியர் வந்தபின் அறிவன் (புதன்), காரி (சனி) என்னும் இரு கிழமைப் பெயர்கள் வழக்கு வீழ்த்தப்பட்டதால், பண்டைத் தமிழர் ஐங்கோளே அறிந்திருந்தனர் என்று கால்டுவெலார் பிறழ்ந்துணர வும், அதனால் உலக முழுதும் தமிழ் நாகரிகத்தைத் தாழ்வாகக் கருதவும், நேர்ந்துவிட்டது.

பன்னீரோரைப் பெயர்களுள், மிதுன, ஸிம்ஹ, வ்ருச்சிக, தநு, மகர என்னும் ஐந்தே மொழிபெயர்ப்பாகும்; ஏனையவெல்லாம் எழுத்துப் பெயர்ப்பே.

குமரிக் கண்டத்தில் பன்னீரோரைப் பெயர்களே பன்னிரு மாதப் பெயர்களாய் வழங்கி வந்தன. ஆரியர் வந்தபின் அவை நாட்பெயர்களாக மாற்றப்பட்டுவிட்டன.

7. இரு பிறப்பிச்சொற்கள் (Hybrids)

எ-டு: அல்(த.) + சிசிர(வ.) = அச்சிர (முன்பனி)
கடா(த.) + அக்ஷ(வ.) = கடாக்ஷ (கடைக்கண்)

கடை என்பது கட அல்லது கடா (ṭ) எனத் திரிந்தது. கடாக்ஷி = கடைக்கணி.

கட (ṭ) என்னும் தனிச் சொல்லையும், கடைக்கண் பார்வை என்னும் பொருளில் பாகவத புராணம் ஆண்டுள்ளது.

8. மயக்கச் சொற்கள்

(1) மருளற் குரியவை:

எ-டு: அதிகாரம்: இது முன்னரே விளக்கப்பெற்றது.

ஆசை—ஆசா (அ. வே.)

ஆசு = பற்று. "ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ"
(புறம். 235).

ஆசு—ஆசை = பற்று, விருப்பம், அவா.

ஒ. நோ: பூசு—பூசை (பூனை). பொற்கொல்லர் பொன்னணி கலத்திடையே இடும் பற்றும் ஆசெனப்படுதல் காண்க.

ஆசிடையிட்ட எதுகை என்னும் செய்யுள் தொடையமைப் பையும் நோக்குக. பற்று என்னுஞ் சொல் பற்றும் அல்லது பற்றப் பெறும் பொருளைக் குறித்தல் போன்றே, ஆசு என்னும் சொல்லும் ஆசிற்குரிய பொருளைக் குறிக்கும் என்க.

அள்—அண்—அடு—(அசு)—ஆசு. அள் = பற்றிரும்பு.

ஆசு—ஆசி. ஆசித்தல் = அவாவுதல்.

வடவர் ஆசா என்னும் சொல்லை ஆ - சா எனப் பகுத்து, ஆ - சம்ஸ் என்பதன் வழிப்பட்டதாகவும் ஆ - சஸ் என்பதன் திரி பாகவுங் காட்டி, விரும்பு, எதிர்பார் என்று பொருள் கூறுவது பொருந்தாது. சம்ஸ் = ஒப்பி, புகழ், சொல், முன்விளம்பு, சூளிடு.

கட்டம்—கஷ்ட

கடு—கடுமை = வன்மை, வருத்தம், செயற்கருமை.

கடு—கட்டம். ஒ. நோ: அடு—அட்டம், கொடு—கொட்டம், அறு—அற்றம், செறு—செற்றம்.

வடமொழியில் மூலமில்லை. ஒருகால் கஷ் என்பதன் இறந்த கால வினையெச்சமாயிருக்கலாமென்று மா. வி. அ. கூறும். கஷ் = தேய், சுறண்டு; சேதப்படுத்து (பா.); சேதப்படுத்து, கொல், அழி (தாது.).

கருமம்—கர்மன் (இ. வே.)

கருமம், கர்மன் என்னும் இருசொல்லும் செய்கை, வினை, தொழில் என்று பொருள்படும் ஒரே சொல்லின் இருவேறு வடிவு களே. கருமம் என்பதனொடு தொடர்புடைய கருவி என்னும் சொல் வடமொழியிலில்லை. காரணம் காரியம் என்னும் வடசொல்லினை யொத்ததே கருவி கருமம் என்னும் தென்சொல் லிணையும்.

> "மூன்றா குவதே
> ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
> வினைமுதல் கருவி அனைமுதற் றதுவே." (தொல். 557).

> "கருமம் அல்லாச் சார்பென் கிளவிக்கு
> உரிமையும் உடைத்தே கண்என் வேற்றுமை"
> (ஷை 568).

இங்ஙனம் கருவி கருமம் என்னும் இரு சொல்லும், தொன்று தொட்டுத் தமிழில் வழங்கி வருவதுடன், இலக்கணக் குறியீட்டுறுப் புக்களாகவும் அமைகின்றன. இவ்விரண்டும் கரு என்னும் ஒரே முதனிலையினின்று பிறந்தவை. ஆதலால், கருவி என்னும் சொற் போன்றே கருமம என்னும் சொல்லும் தென்சொல்லாதல் தெளிவு.

கரு என்னும் முதனிலை இன்று வழக்கற்றது. கருத்தல் செய் தல். கருங்களமரும் வெண்களமரும் போலப் பல்வகைப்பட்ட கரியரும் பல்வகைப்பட்ட பொன்னருமென, இருவேறு நிறவகை யினராகத் தமிழர் தொன்றுதொட்டு இருந்துவந்திருக்கின்றனர். வருந்தியுழைப்பதன் விளைவாக, கரியர் கை மிகக் கருப்பதும் பொன்னர் கை சிவப்பதும் இயல்பு.

"கருங்கை வினைஞருங் களமருங் கூடி" (சிலப். 10 : 125).

"செய்தகை சேவேறும், செய்யாத கை நோவேறும்."

(பழமொழி)

கை கருத்தல் பற்றிக் கரு என்னும் வினைச்சொல்லும் சிவத்தல் பற்றிச் செய் என்னும் வினைச்சொல்லும், தோன்றியதாகத் தெரிகின் றது. இவற்றிற்குப் பிறவினை வடிவம் வேண்டியதில்லை.

ஒ. நோ : வெளுத்தல்=வெள்ளையாதல் (த. வி.), துணியை வெள்ளையாக்குதல் (பி. வி.).

கருமம்—கம்மம்—கம்.

கம்மம்=முதற்றொழிலாகிய பயிர்த்தொழில்.

கம்மவர்—கம்மவாரு=பயிர்த்தொழில் செய்யும் தெலுங்கர்.

கம்=பல்வேறு கனிய (உலோக)த் தொழில். "ஈமுங் கம்மும்" (தொல். 328)

கம்மாளன்=பொற்கொல்லன், ஐங்கொல்லருள் ஒருவன்.

கம்மியன்=கற்றச்சன் (சிற்பி).

கரு+வி=கருவி. கரு+அணம்=கரணம்=செய்கை, திரு மணச் சடங்கு, கருவி, அகக்கருவி.

"கற்பெனப் படுவது கரணமொடு புணர" (தொல். 1088).

இதிற் கரணம் என்பது திருமணவினையாகிய சடங்கைக் குறித் தது.

வடவர் கரு என்னும் முதனிலையைக் க்ரு எனத் திரித்துள்ள னர். இங்ஙனம் சொன்முதல் உயிர்மெய்யில் உயிரை நீக்குவது ஆரிய மரபு.

ஒ. நோ : பொறு—ப்ரு (bh), திரு—ச்ரீ, வரி—வ்ரீஹி.

கரை—E cry, துருவு—E through, புருவம்—E brow.

வடவர் கரணம் என்னும் சொல்லைக் காரண என நீட்டி, அதற்கேற்பக் கார்ய என்னும் சொல்லையுந் திரித்துள்ளனர். காரணம் என்னும் நீட்டம் தமிழுக்கேற்கும். ஆயின், கார்ய என்னும் திரிப்பு ஏற்காது.

ஏற்கெனவே கரணம் என்பதினின்று கரணியம் என்னும் சொல் திரிந்துளது அதற்கேற்பக் கருமம் என்பதினின்று கருமியம் (காரியம்) என ஒரு சொல்லைத் திரித்துக் கொள்ளலாம்.

செய், பண்(ணு), புரி முதலிய பல பிற ஒருபொருட்சொற்கள் தமிழில் இருப்பதனாலும், கரு என்பது வழக்கற்றுப் போனதினாலும், பின்னது வடசொல்லென மயங்கற் கிடந்தருகின்றது. தமிழ் வடமொழிக்கு முந்தியதென்றும் பெருஞ் சொல்வள மொழியென்றும் அறியின், இம்மயக்கந் தெளிந்துவிடும். தமிழ் திரவிட மொழிகட்குரிய இல் மனை வீடு முதலிய சொற்களை மட்டுமன்றி, ஆரிய மொழிகட்குரிய குடி என்னுஞ் சொல்லையுந் தன்னகத்துக் கொண்டுள்ளதென்று, கால்டுவெலார் கூறியிருப்பதைக் கூர்ந்து நோக்குக.

(2) வியப்பை விளைப்பவை

எ-டு : சதரம். இது முன்னரே விளக்கப் பெற்றது.

நித்தம்—நித்ய (இ. வே.)

நில் + தம் = நிற்றம் = நிலையானது. ஒ. நோ : கொல்—கொற்றம் = பகைமையக் கொன்றுபெறும் வெற்றி. முடக்கொற்றன் = முடங்கொன்றன். வெல்—வெற்றம் = வெற்றி.

அதம், அத்தம், இதம், இத்தம், உதம், உத்தம் என்னும் சுட்டுச் சொற்கள், முதல் கெட்டு முதனிலையொடு புணர்ந்து தம், த்தம் என்னும் அளவில் நிற்பதை, என் தமிழ் வரலாறு என்னும் நூலிற் கண்டு தெளிக.

நிற்றம்—நித்தம். ஒ. நோ : குற்று—குத்து, முற்றகம்—முத்தகம்.

“நித்த மணாளர்” (திருவாச. 17 : 3).

நித்தக்கட்டளை = நித்தியக் கட்டளை.

“நேரினித்தமு மொட்டின னுகுமே” (மேருமந். 652).

" இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்." (தொல். 516).

என்னும் நெறிமொழிப்படி, நித்தம் என்பது நித்தமும் என உம்மையேற்றது.

நித்தம்—நிச்சம். ஒ. நோ : அத்தன்—அச்சன், நத்து—நச்சு, மொத்தை—மொச்சை.

" அச்சமு நாணு மடனுமுந் துறுத்த
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப." (தொல். 1045).

நில்—நிற்றல் (நில் + தல்) = நிலைப்பு.

" குணபத் திரன்ருள் நிற்றலும் வணங்கி" (சூடா. 7 : 76).

நிற்றல்—நித்தல் = என்று முண்மை, எந்நாளும் நிகழ்வு

" நித்தல் விழாவணி நிகழ்வித் தோனே." (சிலப். உரைபெறு கட்டுரை).

வினையொடு முடியின் உம்மை பெறவேண்டிய முற்றுப் பொருட்சொற்கள், தம்மையுணர்த்தும்போதும், கூட்டுச் சொல்லுறுப்பாகவும் குறிப்புப் பெயரெச்சமாகவும் நிற்கும்போதும், உம்மை பெறவேண்டியதில்லை; தம்மையுணர்த்தும்போது பெறவே பெறு.

எ-டு : "முழுதென் கிளவி யெஞ்சாப் பொருட்டே."
(தொல். 809).

உலகமுழுதுடையாள், முழுதுலகு.

" உமை நித்தலுங் கைதொழுவேன்" (தேவா. 825 : 1).

" நித்தல் பழி தூற்றப்பட்டிருந்து" (இறை. கள. 1 : 14) என்பது செய்யுள் திரிபாகவோ வழுவமைதியாகவோ கொள்ளப்பெறும்.

நித்தல்—நிச்சல்

" நிச்சலும் விண்ணப்பஞ் செய்ய" (திவ். திருவாய். 1 : 9 : 11).

வடவர் காட்டும் மூலம் வருமாறு:—

நி[1] (முன்னொட்டு) = கீழ், பின், இல், உள், உட்கு, உட்பெற.

நி[1] -ஜ (ஜன்) = உள்ளான, உடன்பிறந்த, சொந்த, தன்னின, தன் நாட்டிற்குரிய; அடிக்கடி நிகழ்கின்ற, தொடர்கின்ற.

நி[1]— நித்ய = உள்ளான, தன் நாட்டிற்குரிய; சொந்த; தொடர்கின்ற, நிலையான, என்றுமுள்ள.

நி என்னும் வடமொழி முன்னொட்டு, இல் (E in) என்னும் தமிழ் இடவேற்றுமை யுருபின் முறைமாற்றுத் திரிபே.

இல்—இன்—நி. ஒ. நோ: அல்—அன் (E an, un)—ந (வ.).

ந என்னும் வடமொழி எதிர்மறை முன்னொட்டை மூலச்சொல்லாகக் கொண்டு, அதுவே அந் என்று பிரிந்ததாகத் தலைகீழாய்க் கூறுவர் வடவர்.

என்றுமுண்மைப் பொருட் சொல்லிற்கு மூலமாக இருக்கக் கூடியது, நில் என்னும் தென்சொல்லா, நி என்னும் வடமொழி முன்னொட்டா என்று, நடுநிலையறிஞர் ஆய்ந்து தெளிக.

பருவம்—பர்வன் (இ. வே.)

பரு—பருவு—பருவம்=காய்கனி முதலியன பருத்துள்ள நிலை, தக்கநிலை, தக்க காலம், ஒவ்வொன்றிற்குத் தக்க வெவ்வேறு காலப்பகுதி, பெரும்பொழுது.

வளர்ச்சியடைந்த மக்களையும் பூப்படைந்த மகளிரையும் பருவம் வந்தோர் என்றும், பருத்து உடையும் நிலையிலிருக்கும் சிலந்தியைப் பருவச் சிலந்தியென்றும், கூறும் வழக்கை நோக்குக.

வடவர் காட்டும் மூலமும் பொருள் வரிசையும் வருமாறு:—

ப்ரீ=நிரப்பு, நிறைவாக்கு, நிரம்பக்கொடு (இ.வே.); நிறைவேற்று, முற்றுஞ் செலவிடு, முற்றும்வளை, மூடு (அ.வே.).

பரு=கைகால், உறுப்பு; மலை; கடல்; வானம், விண்ணுலகு.

பருஸ்=கணு, முடிச்சு; உறுப்பு, பகுதி (இ.வே.). மா.வி.அ.

"a joint or knot (esp. of a cane or reed, orig. 'fullness', i.e. the full or thick part of the stalk" என்று குறித்திருப்பதைக் கூர்ந்து நோக்குக.

பர்வன்=கணு. முடிச்சு, உறுப்பு (இ.வே.); பிளவு, இடையீடு, பிரிவு, பகுதி (ச.பி.); ஒரு கூட்டின் உறுப்பு (பிராதி., நிரு.); ஒரு குறித்த காலப்பகுதி (இ.வே.).

இது மொட்டைத் தலைக்கும் முழங்காற்கும் முடிபோடுவதாயிருத்தலைக் காண்க.

பத்தி—பக்தி (bh)

பகு—பஜ் (bh). பத்தன்—பக்த (bh). இங்ஙனம் பகு, பத்தன், பத்தி என்னும் தென்சொற்களும், பஜ், பக்த, பக்தி என்னும் வடசொற்களும், ஒரே மூலத்தினின்று தோன்றியிருப்பதால், வடசொற்கட்குக் காட்டிய மொழிப்பொருட் காரணமே தென்சொற்கும் ஒக்கும் என அறிக.

பக்த=பகுக்கப் பெற்றது, பகுதியானது, பாற்பட்டது, பாற்பட்டவன், பற்றுள்ளவன், போற்றுபவன், வணங்குபவன், வழிபடுபவன், அடியான் (மா. வி. அ.).

பக்தி=பகுக்கப் பெற்றமை, பகுதியானமை, பாற்பட்டமை, போற்றுகை, வணங்குகை, வழிபடுகை, தேவடிமை (மா.வி.அ.).

பத்தி என்னும் சொல்லின் வடிவ வரலாற்றையும், அதன் பொதுப்பொருளையும், பகு என்னும் சொல்லின் கீழ்க் காண்க.

பற்று என்பது இருதிணைப் பொருள்கள்மீதுமுள்ள அழுந்திய ஆசையையே குறிக்கும்; பத்தி என்பது இறைவனிடத்தும் தலைவனிடத்துங் கொண்ட அச்சத்தொடு கூடிய உண்மையான பணிவன்பையே குறிக்கும்.

(3) ஐயுறவிற் கிடமானவை

எ—டு : கலியாணம்—கல்யாண (இ. வே.)

கலித்தல்=ஆரவாரித்தல், மிக்கெழுதல், பெருகுதல், செருக்குதல், தருக்குதல், செருக்கி வளர்தல், தழைத்தல், மகிழ்தல்.

கலி=ஆரவாரம், பெருக்கு, செருக்கு, தழைத்தல், மகிழ்ச்சி.
யாணம்=அழகு.

"யாணஞ் சான்ற அறிவர் கண்டோர்" (தொல். 1446).

ஏண்—ஏணம் (எழுச்சி, அழகு)—யாணம்=அழகு.

யாணம்—யாணர்=புதுமை, புதுவருவாய்.

"கலியாணர்"=மனச்செருக்கு எழுதற்குக் காரணமான புதுவருவாய்" (பட்டினப். 32).

"கலிகொள்யாணர்"=தழைத்தலைக் கொண்ட புதுவருவாயையுடைய (புறம்: 66).

"கலியாணர்"=ஓசையையுடைய புதுப்பெயல் (புறம். 205).
"கலியாணர்"=செருக்கினையுடைத்தாகிய புதுவருவாய் (மதுரைக். 330).

"கலியாணர்"—பெருக்கினை யுடைத்தாகிய புது வருவாய் (ஷை 118.)

யாணர் என்பது யாணம் என்பதன் திரிபாதலின், கலியாணம் என்பதே முன்னை வடிவாம்.

கல்யாண என்னும் வடசொற்கு, அழகிய, மனத்திற்கேற்ற (இ.வே.), சிறந்த, உயர்ந்த, நல்ல, நலமான, மங்கல, மகிழ்ச்சியான, ஆக்கமான என்னும் பொருள்களும், அதன் கல்யாணம்

என்னும் வடிவிற்கு ஆகூழ், மகிழ்ச்சி, ஆக்கம், தழைப்பு, நல்லொழுக்கம், அறப்பண்பு என்னும் பொருள்களும் கூறப்பட்டிருப்பதால், அது கலியாணம் என்னும் தென்சொல்லின் திரிபோ என ஐயுறக் கிடக்கின்றது.

அதன் மூலமாகக் காட்டும் கல்ய என்னும் சொற்கு நல்ல, நலமான என்னும் பொருள்களும், அதன் கல்யம் என்னும் வடிவிற்கு உடல்நலம் என்னும் பொருளும் கூறப்பட்டுள. ஆயினும், இச் சொல் கல்யாண என்பதன் சிதைவாகவு மிருக்கலாம். யாண என்னும் பிற்பகுதியை ஈறாகக் கொள்ளாது கிளவியாகக் கொள்வதே பொருத்தமாம்.

வடசொல்லாகக் கருதப்படும் கல்யாணம் என்னும் சொற்கு உலகவழக்குத் தமிழில் திருமணம் என்னும் பொருளுண்டு; வடமொழியில் அஃதில்லை. மங்கலம் என்னும் பொருளே இருமொழிக்கும் பொதுவாம். ஆகவே, திருமணப் பொருள் தென்னாட்டிலேயே வடசொற்குக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். மங்கலம் என்னுஞ் சொல் வடமொழியில் நன்மை என்று பொருள்படுமே யன்றித் திருமணத்தைக் குறிக்காது. கல்யாண குணம்=நல்ல பண்பு. கலி என்னும் சொல் இசைக் கருவி முழக்கத்தையும்; யாணம் என்னுஞ் சொல் பந்தற்சுவடிப்பும் மணமக்கள் கோலமுமாகிய அழகையும், வரிசை வைத்தலும் மொய்யெழுதுதலும் சீர் செய்தலுமாகிய புதுவருவாயையும்; குறிப்பது கவனிக்கத்தக்கது.

கப்பி—கபி (இ. வே.)

கப்பு=கிளை. கப்பி=மரக்கிளையில் தங்கும் குரங்கு. கப்பி—கபி. "கோடுவாழ் குரங்கும் குட்டி கூறுப." (தொல். 1512).

வடமொழியார் காட்டும் கம்ப் (நடுங்கு) என்பது மூலமாகாது.

சோம்பு—ஸோம (இ- வே.)

சோம்புதல்=தூக்க மயக்கமா யிருத்தல், வேலை செய்யா திருத்தல். L. somnus=தூக்கம்.

ஸோமச்சாறு மயக்கந்தரும் கள்ளாதலால், அப்பெயர் பெற்றிருக்கலாம். மயக்கந் தருவதாகப் பண்டைக்காலத்திற் கருதப்பட்ட திங்களும் வடமொழியில் ஸோம என்று பெயர் பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது.

வடவர் காட்டும் ஸு (பிழி) என்னும் மூலத்தினின்று ஸுத (சோமச்சாறு) என்னும் சொல் திரிந்துள்ளது. அதுவே ஸோம என்ப தற்கும் மூலமென்பது பொருந்தாது.

வானரம்—வாநர

வால் + நரம் = வாலுள்ள மாந்தன் போன்ற விலங்காகிய குரங்கு.

வடவர் வனர் (வனம்) என்னும் சொல்லை மூலமாகக்கொண்டு காட்டு விலங்கு என்றும், நர ஏவ என்பதை மூலமாகக்கொண்டு மாந்தனைப் போன்றது என்றும், பொருள் கூறுவர். முன்னதற்குப் பொருட் பொருத்தமும் பின்னதற்குச் சொற்பொருத்தமும் இன்மை காண்க.

வடமொழியில் இச்சொற்கு மூலமில்லை.

Gk *anēr*, stem *-ner*, OL *nero*, st. *nerōn*, L *Nero*, S *nará*, *nṛu*, Z *nar*, OE *wer*.

நரம் அல்லது நரன் என்னும் சொல் நரல் என்பதினின்று திரிந்திருக்கலாம். நரலுதல் = ஒலித்தல். மாந்தனுக்கு மொழி சிறப்பான ஒலியமைப்பா யிருத்தல் காண்க,

9. தென்சொல்லை வடசொல்லாக்கிய வகைகள் :

(1) எழுத்துத் திரிப்பு. எ—டு: சுள்—சுஷ், பகு—பஜ்.

(2) திரிசொல் எழுத்து மாற்று. எ—டு: சாய்—சயன, ஸாயம், cāyā.

(2) சொற்றிரிப்பு. எ—டு. அப்பம்—ஆபூப, பேசு—பாஷ்.

(3) எழுத்துக் குறைப்பு. எ—டு: மண்டலம்—மண்டல.

(4) எழுத்துச் சேர்ப்பு எ—டு: மயிர்—மசிர்—ச்மச்ரு(வ.).

(5) முன்னொட்டுச் சேர்ப்பு. எ—டு: காயம்—ஆகாச, ஆயிரம்—ஸகஸ்ர.

(6) பின்னொட்டுச் சேர்ப்பு:

எ—டு—தாமரை—தாமரஸ (எழுத்து)
சதுரம்—சதுரஸ்ய (அசை)
வடவை—வடவாமுக (சொல்)

(7) இடைச்செருகல். எ—டு திடம்—த்ருட, மெது—ம்ருது
சொம்—ஸ்வாம்

(8) முறைமாற்று (Metathesis). எ—டு: கதவம்—கபாடம்

(9) தவற்று மூலம்

க. பொருள் மாற்று. எ—டு: இஞ்சிவேர்—ச்ருங்கவேர, முத்தம்—முக்தா.

உ. தவற்றுப் பிரிப்பு. எ—டு: குமரன்—கு+மார சுவணம்—ஸு+பர்ண

(10) இடுகுறியெனல்.

(11) தேவமொழியெனல்.

(12) கதை கட்டல். எ—டு: சொலவம்—ச்லோக. சோக—ச்லோக (கதை)

வான்மீகி ஒரு வேடனாற் கொல்லப்பட்ட பறவையைக் கண்டு துயருற்றபோது முதற்செய்யுளை யியற்றியதினால், செய்யுள் சுலோகம் எனப் பெயர் பெற்றதென்பது கதை கட்டல்.

10. சுட்டுச் சொற்கள்

தமிழிலும் திரவிடத்திலுமுள்ள சுட்டுச் சொற்கள், ஆ (அ), ஈ (இ), ஊ (உ) என்னும் மூன்று சுட்டொலிகளும் அவற்றின் வளர்ச்சியுமாகும்.

சுட்டொலிகள் மூன்றும் கைச்சுட்டை யொத்த வாய்ச்சுட் டொலிகளாகத் தோன்றியவை. வாய்ச்சுட்டாகத் தோன்றக் கூடிய ஒலிகள் ஆ ஈ ஊ என்னும் மூன்றே. வாயை விரிவாய்த் திறப்பதால் சேய்மைச் சுட்டாகிய ஆகாரமும், வாய்மூடியாகிய உதட்டைப் பின்னுக்கிழுப்பதால் அண்மைச் சுட்டாகிய ஈகாரமும், அதை முன்னுக்குக் குவிப்பதால் முன்மைச் சுட்டாகிய ஊகாரமும், பிறக் கின்றன.

சுட்டுக்களெல்லாம் முதலில் நெடிலாகவே தோன்றிப்பின் குறுகின. குறில் நிலையில் வாய்ச்சைகை தெளிவாய்த் தோன்றாது. நெடில் நிலையிலும் முதற்காலத்திற்போல் அத்துணைத் தெளிவா யில்லை. ஒலியளவிலேயே பொருள் தெரிந்து விடுவதாலும் சோம்ப லாலும், இற்றைத்தமிழர் முதற்காலத் தமிழர்போல் வாய்ச்சைகை யோடு சுட்டுக்களை ஒலிப்பதில்லை. ஆயினும், இன்றும் பொரு ளளவிற் சுட்டொலிகள் கைச்சுட்டுப் போன்றே திட்டவட்டமா யுள்ளன. எக்கரணியத்தையிட்டும் முச்சுட்டுக்களும் இடமாறிச் சுட்டுவதில்லை. இவ்வியல்பு ஆரிய மொழிகளில் இல்லை. இதனால் ஆரிய மொழிச் சுட்டுச் சொற்கட்கெல்லாம் தமிழ்ச் சுட்டொலிகளே மூலமென்பது தேற்றம்.

சுட்டொலிகள் இன்றும் தமிழிலும் திரவிடத்திலும் குறிப்புப் பெயரெச்சமாகத் தமித்து வழங்குகின்றன.

எ-டு: ஆயிடை, இக்காலம் (தமிழ்)
ஈயாள், அவ்விடே (மலையாளம்)

ஊகார அல்லது உகரச் சுட்டு இன்று தாய்நாட்டுத் தமிழில் வழக்கற்றது; யாழ்ப்பாணத்தில் வழங்குவதாகச் சொல்லப்படுகின்றது.

இந்தியில் ஈகாரச் சுட்டு ஏகாரமாகவும் முன்மைச் சுட்டு சேய்மைச் சுட்டாகவும் திரிந்து வழங்குகின்றன.

எ-டு: ஈ—ஏ = இது, இந்த
ஊ—ஓ = அது, அந்த; உதர் = அங்கு.

ஈகாரம் ஏகாரமாகத் திரிந்துள்ள நிலை வடமொழியிலுள்ளது.

இடமாறா வடமொழிச் சுட்டுச் சொற்கள்

	சேய்மை	அண்மை
எ-டு:	அதஸ் (adas) = அது, அங்கு, அவ்வாறு.	இஹ = இங்கு, இவ்வுலகில்.
	ததா (tathā) = அப்படி.	ஏதத் (ētad) = இது, இங்கு
	அஸவ் = அந்த	

இடமாறிய வடமொழிச் சுட்டுச் சொற்கள்

	சேய்மை	அண்மை
எ-டு:	இயத் = அவ்வளவு	அதஸ் (atas) = இங்கிருந்து
		அதுநா (dh) = இப்போது
		அயம் = இந்த

ஈரிடப்பொது வடமொழிச் சுட்டுச் சொற்கள்

எ-டு: அத்ர = இங்கு, அங்கு
தத் (d) = அவன், அவள், அது, இது.
இதம் = இந்த; அங்கு.
ஏநா = இங்கு, இவ்வாறு; அங்கு, அன்று.

11. வினுச்சொற்கள்

சுட்டுச் சொற்கள் போன்றே வினுச் சொற்களும், தமிழிலும் திரவிடத்திலும் ஓரெழுத்துச் சொல்லாகவும் பலவெழுத்துச் சொல் லாகவும் இருக்கும். எ-டு : எ, எந்த.

வினுவெழுத்துக்கள் மூன்றென்ருர் தொல்காப்பியர்.

"ஆஎ ஓஅம் மூன்றும் வினுஅ." (தொல். 32).

இவற்றையே பவணந்தியார் ஐந்தாக விரித்துரைத்தார்.

"எயா முதலும் ஆஓ ஈற்றும்
ஏயிரு வழியும் வினுவா கும்மே." (நன். 67).

இவ்வைந்தும் மூல அளவில் ஓரெழுத்தாகவே தோன்று கின்றன. ஏ—எ. ஏ—யா—ஆ—ஓ.

இவற்றுள், சொன்முதலில் வரும் எ, ஏ, யா என்னும் மூன்றும் சுட்டெழுத்துப் போன்றே வகர மெய்யும் தகர மெய்யும் அடுத்து வினுப் பெயராகும். எ-டு : எவன், எது.

எவை என்பதன் திரிபான எவி என்னும் தெலுங்கச் சொல், அற்றுச் சாரியை யேற்று வேற்றுமைப்படும்போது, வேட்டி எனத் திரியும். இங்ஙனமே எவ் ஏவ் என்னும் வினுச் சொற்களும், முறையே வெ, வே என முன்பின்ஞக எழுத்துமுறை மாறி நிற்கும். இத்திரிபுகளின் வகர முதலே ஆரிய மொழிகளிற் ககரமாக மாறி யுள்ளது. வெ—கெ—க. வே—கே—கா.

இவ் வ—க திரிபு தெலுங்கையடுத்த மராத்தியிலேயே தொடங்கி விடுகின்றது. மராத்தி முதலில் ஐந்திரவிடத்துள் ஒன்ருயும், பின்பு நடுத்திரவிடம் என்று கருதத் தக்கதாயும், அதன்பின் ஐம்பிராகிருதத் துள் ஒன்ருயும், இருந்தமை கவனிக்கத் தக்கது.

தமிழ் ஆரிய மொழிகட்கு முன்தோன்றிய தொன்மொழியாத லின், அதில் நேரியல் வினுச் சொற்களும் உறவியல் (Releative) வினுச்சொற்களும் வேறு பிரிக்கப்பெறவில்லை.

எ-டு :

யார் என்ன செய்தார் ?—நேரியல்
யார் என்ன சொன்னுலும்—உறவியல்

இந்திய ஆரியமொழிகளில், நேர்வினுச் சொற்கட்கு வகரத்

தின் திரிபான ககர வடியும், உறவியல் வினைச் சொற்கட்கு எகரத்தின் திரிபான யகர வடியும், ஆளப்பெறுகின்றன. யகரம் ஜகரமாகவும் திரியும்.

	நேர்வினை	உறவியல்வினை
மராத்தி		
இந்தி	கஹான்	யஹான்—ஜஹான்
வடமொழி	குத்ர	யத்ர

சில தமிழ் வினைச்சொற்கள் வடிவிலேனும் பொருளிலேனும் வடமொழியிற் சற்றே வேறுபட்டுள்ளன.

	தமிழ்	வடமொழி	
எ-டு:	எதோள்=எங்கு	யத்ர=எங்கு	(வடிவு)
	எதா=எங்கே	யதா=என்று	(பொருள்)

12. இடைச்சொற்கள்

(1) ஒலிக் குறிப்புக்கள்

எ-டு: தும், துப் (துந்துபி)

(2) விளியொலிகள்

எ-டு: ஊ, ஏ, ஓ—ஹூ, ஹே, ஹோ

(3) உணர்ச்சிக் குறிப்பொலிகள்

எ-டு: வியப்பு—ஆ—ஹா, ஓ, ஹாஹா
மகிழ்ச்சி—ஹோ
இரக்கம்—ஆ, ஓ
நோவு—ஆ, ஈ, ஆ—ஹா, (உம்—)ஹூம்
நினைவு—ஏ, ஓ
கழிவு வருத்தம்—ஆ
இகழ்ச்சி=ஏ, (உம்—) ஹூம்
உடன்பாடு—(உம்—) ஹூம்

13. பல்வகைச் சொற்பெருக்கம்

ஆரியர் தென்னாட்டிற்கு வந்ததிலிருந்து மறைமலையடிகள் காலம் வரை, தமிழ் வளர்ச்சி யடையவில்லை. ஏற்கெனவே அமைந்திருந்த பல சொற்களும் ஒவ்வொன்றாக வழக்கு வீழ்த்தப்பட்டு வந்திருக்

கின்றன. வடமொழியோ தமிழை இன்றியமையாத துணையாகக் கொண்டு, தமிழுக்கே மாறாக இடையறாது மேன்மேலும் சொல் வளர்ச்சி யடைந்து வந்திருக்கின்றது.

(1) காண்—(த்யூத்.) கான், கன், கென், க்னே—(இலத்.) க்னோ (g)—(கி.) க்னோ (g)—இ.வே. ஜ்ஞா = அறி.

ஜ்ஞா என்னும் அடியினின்று திரிந்த சொற்கள் :

எ—டு: i. முன்னொட்டுப் பெறாதவை :

ஜ்ஞாத்வ = மதியுடைமை ஜ்ஞாத்ர = அகக்கரணம்
ஜ்ஞாப்தி = அறிகை, உணர்கை ஜ்ஞாந = அறிவு, ஓதி
ஜ்ஞாதி = நெருங்கிய உறவினன் ஜ்ஞாநி = அறிஞன்
ஜ்ஞாத்ரு = அறிவோன் ஜ்ஞாபக = அறிவிக்கை, நினைப்பிக்கை
ஜ்ஞாதேய = இனமை ஜ்ஞேய = அறியப்படுவது

ii. முன்னொட்டுப் பெற்றவை :

அஜ்ஞா, அஜ்ஞாதி, அஜ்ஞாந, அஜ்ஞாநி, அஜ்ஞேய;

அநுஜ்ஞப்தி, அனுஜ்ஞா, அநுஜ்ஞாந, அநுஜ்ஞாபக, அநுஜ்ஞாபந;

ஆஜ்ஞா (ஆணை) ஆஜ்ஞப்தி (ஆணத்தி), ஆஜ்ஞாத்ரு ஆஜ்ஞாபந;

ப்ரஜ்ஞா, ப்ரஜ்ஞ, ப்ரஜ்ஞாத்ரு, ப்ரஜ்ஞாந, ப்ரஜ்ஞாபந;

ப்ரதிஜ்ஞா, ப்ரதிஜ்ஞாந, ப்ரதிஜ்ஞேய;

விஜ்ஞா. விஜ்ஞாந, விஜ்ஞாநி, விஜ்ஞாபக, விஜ்ஞாபந (விண்ணப்பம்), விஜ்ஞாப்தி, விஜ்ஞேய;

ஸம்ஜ்ஞா (ஸமிக்கை), ஸம்ஜ்ஞாபந, ஸம்ஜ்ஞாந, ஸம்ஜ்ஞாநி.

(2) பூ—இ. வே. பூ (bhū).

E be, OTeut beo, Gk phu, L fu.

பூ (bhū) என்னும் அடியினின்று திரிந்த சொற்கள்

எ-டு : i. முன்னொட்டுப் பெறாதவை:

பின்வருஞ் சொற்களின் முதற் பகரமெல்லாம் (bh) என்னும் கனைப்பொலி அல்லது மூச்சொடு கூடிய எடுப்பொலி என அறிக.

புவ, புவத் (d), புவந, புவஸ், புவி, பூ பூத, பூதி, பூமந், பூமி, பூயஸ், பூர்,

பவ, பவக, பவத், பவந. பவந்த்த, பவாநீ, பவித்ர, பவித், பவிஷ்ய, பவீத்வ, பவீயஸ், பவ்ய;

பாவ, பாவக. பாவந, பாவி—பாவிந், பாவிக, பாவித்ர.

ii. முன்னொட்டுப் பெற்றவை :

அபவ, அபாவ, அபாவந, அபாவிந்;

அதிபூ, அதிபூத;

அநுபூ, அநுபவ, அநுபாவ, அநுபாவக, அநுபாவந, அநுபாவிந், அநுபூத, அநுபூதி;

அப(p)பூ, அபபூதி;

அபி(bh)பூ, அபிபவ, அபிபவந, அபிபாவக, அபிபாவத, அபிபாவிந், அபிபு, அபிபூத, அபிபூதி, அபிபூய, அபிபூவந்;

உத்(d)பூ, உத்பவ, உத்பாவ, உத்பாவந, உத்பாவிந், உத்பூத, உத்பூதி;

சம்பூ, சம்பு;

தத்பவ, தத்பாவ, தத்பூத;

ப்ரபூ, ப்ரபு, ப்ரபவந, ப்ரபாவ, ப்ரபாவந, ப்ரபூத, ப்ரபூதி, பரிபூ, பரிபவ, பரிபவந, பரிபவிந், பரிபாவந, பரிபூத, பரிபூதி, ப்ரதிபூ, ப்ரதிபாவ;

ஸம்பூ, ஸம்பாவித, ஸம்பவ, ஸம்பாவந; ஸ்வபாவ, ஸ்வயம்பூ, ஸ்வயம்பு, ஸ்வயம்புவ, ஸ்வயம்பூத.

(3) மா—மா (இ. வே.)=அள.

மா என்னும் அடியினின்று திரிந்த சொற்கள்

எ-டு :

i. முன்னொட்டுப் பெறாதவை :

மாந, மாத்ர, மாத்ரு, மாதி.

ii. முன்னொட்டுப் பெற்றவை :

அநுமா, அநுமாந, அநுமிதி, அநுமேய;

அபமா, அபமாந, அபமாநிந்;

உபமா, உபமாதி, உபமாத்ரு, உபமாந, உபமிதி, உபமேய;

நிர்மா, நிர்மாண, நிர்மாத்ரு, நிர்மிதி;

ப்ரமா, ப்ரமாண, ப்ரமாத்ரு, ப்ரமிதி, ப்ரமேய;

ப்ரதிமா, ப்ரதிமாந, ப்ரதிமிதி;

பரிமா, பரிமாண, பரிமிதி, பரிமேய.

சமாந, சந்மாந;

ஸம்மா, ஸம்மாந, ஸம்மாத்ரு, ஸம்மிதி.

14. இடுகுறிச் சொற்கள்

ஸம்வர்த்த, ஆவர்த்த என்பன போன்ற முகிற்பெயர்களும், சங்கராபரணம், நாதநாமக்கிரியை என்பன போன்ற பண்ணுப் பெயர்களும், இவைபோன்ற பிறவும், இடுகுறிச் சொற்களாம்.

ஆட்பெயர்கள் இக்காலத்திற் பெரும்பாலும் இடுகுறிகளாகவே எங்கும் இடப்பெறுகின்றன. தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்பன போல வடமொழிப் புராணங்களில் வரும் படைப்புப் பெயர்கள் இடு குறியுள் இடுதறியாகும். பஞ்சதந்திரக் கதைகளுள் வரும் புனை பெயர்களும் இத்தகையனவே.

15. வடசொற்கள் தென்சொற்களால் விளக்கம்பெறல்

பல வடசொற்களின் வேர் தமிழிலும் திரவிட மொழிகளிலுமே காணக்கிடக்கின்றன

எ-டு: புது—புதல் = அரும்பு. புதல்—புதல்வு—புதல்வன் = மகன், புதல்வி = மகள்.

புதல்வன்—புத்ர = பிள்ளை, மகன் (இ.வே.); புத்ரீ = மகள். புத் என்னும் நரகத்தினின்று பெற்றோரை மீட்பவன் புத்ர என்பது, வடவர் பொருந்தப் பொய்த்தலாகப் படைத்துக் கூறும் செய்தி யாகும். இதற்குத் த்ரா (காப்போன்) என்னும் சொல்லுண்மையே துணையாம்.

புத்ர என்னும் சொல்லின்கீழ், "etym. doubtful" என்றும், புத் என்னும் சொல்லின்கீழ், "a word invented to explain *putra* or *put-tra*" என்றும், மா.வி.அ. குறித்திருப்பது கவனிக்கத்தக்கது. ஆயின், புஷ்[2] (ஊட்டங்கொடு) என்பது மூலமா யிருக்கலாம் என்று அது கருதுவதும் தவறாகும்.

சார்தூல(வே.) = புலி, வேங்கை. இது சாரதோல என்னும் தெலுங்குச் சொல்லின் திரிபாகச் சொல்லப்படுகின்றது.

சார = வரி. தோல = தோல். வரித்தோலையுடையது என்னும் பொருட்காரணம் பொருத்தமானதே.

இதற்கு வடமொழியில் மூலமில்லை. மா. வி. அ. "of unknown derivation" என்று குறித்திருத்தல் காண்க.

வடமொழி எண்ணுப் பெயர்கள் பெரும்பாலும் தென்சொற்க ளாலேயே விளக்கம் பெறுவனவாயுள்ளன.

ஏக—(k)

ஒ—ஒக்கல்=ஒப்பு, இனம். ஒக்க=ஒப்ப, ஒருங்கு.

தெ. ஒக்க—ஒரு. ஒகட்டி=ஒன்று.

ஒக்க—(எக்க)—ஏக (வ). ஒ. நோ: சொருகு—செருகு. வடமொழியில் எகரமின்மையால் எக்க—ஏக என்றாயிற்று.

கால்டுவெலாரும் இங்ஙனங் கருதுவதைக் காண்க.

தமிழ் முதல் எண்ணுப் பெயரின் மறுவடிவான ஓன் (ஒன்னு, ஒன்று, ஒண்ணு) என்பது மேலையாரியத்தில் வழங்குவதையும் நோக்குக.

com. - Teut. one, OE an, Du een, G ein, Gk oinos. oinē, L unus.

த்வி—(d)

இது துமி என்னுஞ் சொல்லினின்று திரிந்ததா யிருக்கலாம். துமித்தல்=வெட்டுதல், இரண்டாகப் பகுத்தல். ஒரு வெட்டில் ஆகக் கூடிய துண்டுகள் இரண்டே. "வெட்டு ஒன்று, துண்டு இரண்டு." என்னும் சொலவடையை நோக்குக.

துமி—துவி—த்வி. ஒ. நோ: குமி—குவி.

இரண்டு என்னும் தமிழ் எண்ணுப் பெயரின் வேர்ப்பொருளும் இதுவேயா யிருத்தல் காண்க.

ஈர்தல் = அறுத்தல், பிளத்தல். ஈர்—இர்—இரது—இரடு—இரண்டு.

த்ரி

நார்க்கயிறும் நூற்கயிறும் திரிப்பதற்குப் பொதுவாகச் சேர்ப்பது முப்புரியே. திரிக்கும் புரித்தொகை பற்றித் திரி என்னும் மூன்றாம் எண்ணுப் பெயர் தோன்றியிருக்கலாம். திரி—த்ரி.

சதுர் (c)

இது முன்னரே விளக்கப் பெற்றது.

சட்டம்—சடம்—சடல்—சதர், சதிர், சதுர்=நாற்கோணம், நாற்புறம், நான்கு.

சடல்—சடலம்—சதரம், சதிரம், சதுரம்=நாற்கோணம், நாற்புறம், நான்கு.

பஞ்ச்சன்

ஐந்து—அஞ்சு—பஞ்சு—பஞ்ச்சு—பஞ்ச்சன்.

ஒ. நோ : அஞ்சவன்—பஞ்சவன் (பாண்டியன்).

அப்பளம்—அப்படம்—பப்படம் (ம.).

அப்பன்—அப்பா—பப்பா (E. f. F. f. L).

ஷஷ்

ஆறு என்னும் தமிழெண்ணுப் பெயர் மத (சமயநெறி) வகை பற்றித் தோன்றியது. சாஸன என்னும் வடசொற்கு மதம் என்னும் பொருளுண்டு. ஆதலால், சாஸ்—ஷஷ் என்று திரிந்திருக்கலாம்.

ஏழ் என்னும் தமிழ் எண்ணுப் பெயர் எழுவும் இசைத்தொகை பற்றித் தோன்றியிருத்தலால், வடமொழியிலும் அதைப் பின்பற்றி முதலெழுத்து மாறி ஸப்தன் என்னும் சொல் அமைந்திருக்கலாம்.

சப்த (b)—ஸப்தன். சப்த=ஒலி, ஓசை.

பொருள் மாறும்போது எழுத்துக்கள் மாறுவதும் இயல்பே.

அஷ்ட்டன்

எட்டு—(அட்டு)—அஷ்ட்ட—அஷ்ட்டன்.

எ-அ. ஒ. நோ: வெறுமை—வறுமை.

நவன்

தொண்டு (ஒன்பது) என்னும் தமிழ் எண்ணுப் பெயர், உடம்பிலுள்ள ஒன்பான் தொளைபற்றித் தோன்றியதாகும்.

ஒள், கொள். சொள், தொள், நொள், பொள், மொள் என்னும் ஏழடிகளும் தொளைத்தலை அல்லது தொளையைக் குறிப்பனவே.

நொள்—நொள்ளல், நொள்ளை. நொள்—நெள்—நெள்ளல்—ஞெள்ளல்=பள்ளம், குழி, குழிந்த தெரு (புறம். 15).

நெள்—நெளி. நெளிமருங்கு=குழிந்த இடம் (புறம். 18).

நொள்—நொள்வு—நொவு—(நவு)—நவி=வெட்டுக் கோடரி. நவி—நவியம்.

ஒருகால் நவு—நவம்—நவன் என்றாகியிருக்கலாம்.

தசன் (d)

தசன=பல், கடி (கடிப்பு). தச=கடி.

தம்ஸ்[2]=கடி, to bite.

தந்த்த=பல் (இ. வே.). தத்=பல் (இ. வே.).

பத்து என்னும் தமிழ் எண்ணுப் பெயர் பல் என்னும் சொல்லி னின்று திரிந்தது. ஆயின், அது பல என்று பொருள் படுவது. வடவர் தவறாக அதைக் கடிக்கும் பல்லைக் குறிக்குஞ் சொல்லாகக் கருதி, தசன் என்று மொழிபெயர்த்துக் கொண்டனர் போலும்!

ஸஹஸ்ர

அயிர்=நுண்மணல். அயிர்—அயிரம்—ஆயிரம் = மணல் போன்ற பெருந்தொகை.

ஆயிரம் (அயிரம்)—ஹஸ்ர—ஸஹஸ்ர. 'ஸ' முட்டெழுத்து.

இனி, க. சாவிர—வ. ஸஹஸ்ர என்றுமாம்.

இ. ஹஸார் (z), பெ. hazār.

லக்ஷ

இலக்கம்—லக்ஷ=பெரிய இலக்கம் (எண்).

கோடி (ṭ)

கோடி—கோடி (ṭ)=ஒழுங்கான கடைசி யெண்.

அடுக்கிய கோடிப் பெயர்களாகிய குமுதம், சங்கம் முதலியன தமிழினின்று கடன் கொண்டவையே. ஸமுத்ர என்பது வாரணம் என்பதன் மொழிபெயர்ப்பாகும்.

16. வடவர் காட்டும் வேர்ச்சொற்கள் வேர்ச்சொற்களன்மை

வேதமொழி வழக்கற்ற கலவைத் திரிமொழியாதலாலும், சமற் கிருதம் அரைச் செயற்கையான இலக்கிய நடைமொழியாதலாலும், வடசொற்களினின்று பெரும்பாலும் வேர்ச்சொற்களை அறிய முடி யாது.

இடைகழி என்பது முறையே டேகழி, டேழி, ரேழி எனக் கொச்சை வழக்கில் திரிந்துள்ளது. இடைகழி என்னும் சொல்லிற் போல் அதன் கொச்சைத் திரிபுகளில் வேர்ச்சொல்லும் பொருளும் தோன்றவில்லை. இங்ஙனமே, தமிழ் போன்ற இயன்மொழியில்

தோன்றும் வேர்ச்சொற்கள் ஆரியம் போன்ற திரிமொழிகளில் அத்துணைத் தெளிவாய்த் தோன்ரு; அவற்றுள்ளும், திரிபில் திரிபாகிய சமஸ்கிருதத்திற் பெரும்பாலும் தோன்றவே தோன்ரு.

வடமொழியாளர் தம் மொழியைத் தேவமொழியென்று காட்டி, தமிழை என்றும் அதற்கு அடிப்படுத்தல் வேண்டி, வடசொற்களின் முதனிலைகளை அல்லது முதலசைகளையெல்லாம் வேர்ச்சொல்லென்று கொண்டு அவற்றைப் பிரித்துக் கோவைப்படுத்தி மொத்தம் 1,750 வேர்ச்சொற்களெனக் கணக்கிட்டிருக்கின்றனர். அவற்றுட் பல பல்பொரு ளொருசொற்க ளாதலால், மேலையர் அவற்றை ஆய்ந்து கண்டு வேர்ச்சொற்றொகையை 2,490 ஆகப் பெருக்கியுள்ளனர். ஆயின், சிறந்த ஆராய்ச்சியாளர் எல்லா வேர்ச்சொற்களையும் 120—இற்குள் அடக்கிவிடலாம் எனக் கருதுகின்றனர்.

மேலையர் வடமொழி வேர்ச்சொற் றிரட்டுக்களின் குறைபாட்டை ஒருவாறுணர்ந்தவராயினும், தமிழைச் செவ்வையாய்க் கல்லாமையால் அவற்றைத் திருத்தியமைக்கும் ஆற்றலற்றவராயுள்ளனர்.

வடமொழி வேர்ச்சொல் திரட்டின் குறைபாடுகள்

(1) சொன்னிலை.

சொன்மூலம் வேர் (Root), அடி (Stem), முதனிலை (Theme) என மூவகைப்படும். வேரும் முதல்வேர், வழிவேர், சார்புவேர் என முத்திறப்படும். முதல் வேருக்கு மூலம் முளையாகும். முளைக்கு மூலம் வித்தே. அடி என்பது கவையுங் கொம்புங் கிளையும் போத்துங் குச்சுமாகப் பிரியும். இவையெல்லாம் தமிழ் போன்ற இயன் மொழியிலேயே தெளிவாய்க் காணப்பெறும்.

வடவர் திரிபுற்ற முதனிலைகளையும் சொற்களையுமே வேர்ச்சொல்லாகக் கொண்டுள்ளனர்.

எ-டு : சுள்—சுஷ், பகு—பஜ் (bh)—முதனிலை

பெருகு—ப்ருஹ்(b)—வழி முதனிலை

செவியுறு—ச்ரு—மரூஉ முதனிலை.

சுண்ணம்—சூர்ண் (c), வட்டு—வட்—சொன்னிலை.

(2) பல்வடிவச் சொற்கள்

எ-டு : அக்=வளைந்து செல், அக் (g)=வளைந்து செல்.

அண்=உயிர் (மூச்சுவிடு), அந்=உயிர் (மூச்சுவிடு).

(3) மூலச்சொல்லும் திரிசொல்லும்

எ-டு: அத் (d) = உண், அச் (ś) = உண்.

அஸ் = இரு, ஆஸ் = உட்கார்.

(4) இனக்கருத்துச் சொற்கள்

எ-டு: உச் (c) = தொகு, உஞ்ச் (ch) = அரித்துத் தொகு.

(5) பல்லசைச் சொற்கள்

எ-டு: ஓலண்ட் = வெளியெறி, கண்டுய் = தேய்.

(6) பல்மெய்ச் சொற்கள்

எ-டு: ஸாந்த்வ் = அமைதிப்படுத்து, ஸ்த்ருக்ஷ் = செல்

(7) பிற்காலவெழுத்துச்சொற்கள்

எ-டு: காங்க்ஷ் = ஆசைப்படு, ஸ்தம்ப் (bh) = அசையாமல் நிறுத்து.

(8) படைப்புச் சொற்கள்

எ-டு: கல்ய, பிண்ட்

(9) ஒரு சொல்லைப் பலசொல்லாக்கல்

எ-டு. சாய்—சாயை—சாயா (c).

சாய்—சாய (சாய்கை, படுக்கை).

சாய்—ஸாயம் (சாயுங்காலம்).

பகு—பக்கம்—பக்ஷ

பகு—பாகு—பாகம்—பாக (bh).

(10) தொடர்பிலாப் பொருள் கூறல்

எ-டு: ஈஞ் = போ, கண்டனஞ்செய்.

ப்ருஹ்[4] = பேசு, ஒளிர்.

(11) செயற்கைப் பொருளிணைப்பு

எ-டு: வர்ஷ் = மழைபெய், மழைபோல் அம்புபொழி, அம்பெய்யும் ஆண்மை பெறு.

வர்ஷ்—வ்ருஷ—வ்ருஷப—ருஷப.

(12) ஒருபொருட் பல சொற்களின் மிகை

பின்வருஞ் சொற்களெல்லாம் போதலைக் குறிப்பனவாம்

அங்க் (g), அங்க் (gh), அச் (c), அஞ்ச் (c), அஜ், அப்ர (bh), அம், அய், அஹ், இ, இக் (kh), இங்க் (g), இட் (ṭ), இஷ், ஈ, ஈஜ், ஈர், ஈஷ், உக் (kh), ரு, ருஜ், ரூ, ஏஷ்,

கங்க், கட் (ṭ), கம்ப் (b), கல், கஸ், கேப், கப் (kh, b), கர்வ் (kh), கம் (g), கர்ப் (gh), கூர் (g), க்லுச் (g, c), க்லுஞ்ச்,

சஞ்ச் (c, e), சம்ப் (c, p), சய் (c), சேல் (c),

டிக் (ṭ), டீக் (ṭ), டீ, டௌக்,

தங்க் (g), தஞ்ச், தய், திக், தில், தீக், து, தூர் (பரபரப்பாய்), த்ருக்ஷ், த்ராங்க். த்ரக், த்ரஸ், த்ரிக் (kh), த்ரௌக், த்வய்க் (g), தக்ஷ் (d), (விரைவாய்), து (d), தந்வ் (dh), த்ரு (dh), த்ராஜ் (dh), த்ரிஜ் (dh), த்யஜ் (dh),

தேஷ்,

பட் (ṭ). பண்ட் (ḍ), பய், பத் (th), பத் (d), பர்ப், பர்ப் (b), பல், பஷ். பி, பேஸ், ப்ரேஷ், ப்லிஹ், ப்லீர், பண (ph) பல் (ph), பேல் (ph), பம்ப் (b), பர்ப் (b), பிஸ் (b),

மங்க் (g), மப்ர (bh), மய், மவ்ர், மீவ், மேப், ம்ருச் (c), ம்லுச் (c) யா,

ரக் (kh), ரங்க் (g), ரங்க் (gh), (சுருக்காய்), ரப் (ph), ரய், ரி, ரீ, ரு, ருண்ட், ரேப், ரேப் (b),

லக் (kh), லங்க் (kh), லங்க் (g), லய், லர்ப் (b), லிங்க் (kh), லிங்க் (g), லிச், லுட் (ṭh), லுண்ட் (ṭ) லுண்ட் (ṭh), லேப், லௌண்.

வக், வக் (kh), வங்க், வங்க் (g), வஜ், வஞ்ச் (c), வப்ர (bh), வர்ப் (ph), வல்க் (g), வல்ல், வஸ்க், வா, வேல், வ்யஸ், வ்ரீ, வ்லீ.

சஞ்ச் (c), சத் (d), சப் (b), சர்ப் (b), சல், சவ், சிக் (kh), சுக், சுந், சேல், சோண், ச்யே, ச்ரக், ச்ரக் (g), ச்ரி, ச்ரு, ச்லங்க் (g), ச்வங்க், ச்வச் (c), ச்வஜ், ச்வட் (ṭh), ச்வப்ர (bh),

ஷ்வக்க், ஷ்வஷ்க்; ஸம்ப் (b), ஸய், ஸர்ப் (b), ஸல், ஸாத் (dh), ஸ்ர, ஸ்ரு, ஸேக், ஸேல், ஸ்கு (தாண்டி), ஸ்த்ருக்ஷ்.

ஹ்வல் (நெளிந்து).

இவற்றுட் சில வேறுபட்ட போக்குகளைக் குறிப்பினும், இத்தனை சொற்கள் ஒரே பொருள் குறிக்குமென்பது ஐயத்திற்கிடமானதாயிருக்கின்றது.

இங்ஙனமே உண், கொல், என்னும், பொருள்கள் பற்றியும் ஏராளமான சொற்கள் உள்ளன.

(13) எளிதாய்ப் பொருள் வளர்த்தல்

பல வடசொற்கட்குப் போதற் பொருளை முதலிற் குறித்து, அதன்பின் வேண்டிய பொருட்களையெல்லாம் பொருந்தா வகையிற் பொருத்திக் கொள்கின்றனர்.

எ-டு: ரு[4]—செல், இயங்கு, எழு, உயரநோக்கு; ஒன்றை நோக்கிச்செல், தலைக்கூடு, மேல்விழு, சேர், பெறு; ஒருவன் பங்கிற்கு விழு, நிகழ், நேர்; இயக்கு, தூண்டு, எழுப்பு, உயர்த்து, இயக்கு, எறி; ஊடெறி, துளை, துருவு; உள்ளிடு, வை, பதி, இறுக்கு.

இவை வேதப் பொருட்கள். பிற்கால நூல்களில் இன்னுஞ் சில பொருள்கள் கூறப்பட்டுள.

(14) மூலங் கூறப்படாமை

எ-டு: க்ருஷ்ண = கருப்பு, கரிய. க்ருஷ்ணபக்ஷ = கரும்பக்கம் (தேய்பிறை).

கண்ணன் பிறக்கு முன்பே இச்சொல் வேதத்தில் உள்ளது. இது இருவகையாய் வந்திருக்கலாம்.

க. கரு—கருள். கருளுதல் = கருத்தல். கருள்—க்ருஷ்—கிருஷ்ண.

உ. கள்—கண்—கண்ணன் = கரியன். கண்ணன் – க்ருஷ்ண.

ஒ. நோ: உள் = உண்—உண்ணம்—உஷ்ண.

'ரு' இடைச்செருகல். ஒ. நோ: கத்(தி)—க்ருத்.

(15) தமிழ் மூலம் மறைக்கப்பட்டுள்ளமை

வடசொற்களுள் குறைந்த பக்கம் ஐந்திலிரு பகுதி தமிழாயினும், அவற்றுள் ஒன்றுகூடத் தமிழென்று காட்டப்பெறுமையும், முழுப் பூசணிக்காயைச் சோற்றில் முழுக்குவதுபோல் தமிழ் என்னும் பெயரே த்ரவிட என்னும் வடசொல்லின் திரிபென்று கூறுவதும், எத்துணை நெஞ்சழுத்தமான இரண்டகச் செயல்!

நூற்றுக்கணக்கான வடசொற்கட்கு மூலம் அல்லது முதனிலை தமிழிலிருக்கவும், அவற்றைக் குறியாது வடசொல்லின் பெயர் வடிவினின்றே வினைச்சொல்லைச் செயற்கையாகத் திரித்திருக்கின்றனர். சமற்கிருதம் உலக வழக்கிலில்லாத இலக்கிய நடைமொழியாதலின்

(Literary dialect), அதிற் பெயரடி வினைக்கு விருப்பம்போல் மிக எளிதாகத் திரித்துக் கொள்ளலாம். 'தாதுபாட' என்னும் வடமொழி வேர்ச்சொற்றிரட்டின் ஆசிரியர், தந்து புணர்ந்துரைத்தல் என்னும் உத்தியை இவ்வகையில் தாராளமாகக் கையாண்டுள்ளனர்.

எ-டு :

பிண்டம் என்னும் பெயர் பிடி என்னும் தமிழ் வினையின் முன்னை வடிவான பிண்டி என்பதின்று திரிந்திருக்கவும், தாது பாடம் அதற்குப் பிண்ட் என்றொரு செயற்கை மூல வினையைப் படைத்து, கட்டியாக அல்லது உருண்டையாகத் திரள், ஒன்றுசேர், பொருந்து, கூடு என்று பொருளுரைத்துள்ளது. இது பெயரடி வினை என்பதை "prob. Nom. fr. next." என்று மா. வி. அ. குறித்திருத்தல் காண்க. Nom. = Nominal verb.

II. இலக்கண வதிகாரம்

வியாகரணம் என்னும் சொல் விளக்கம்

இலக்கணம், இலக்கியம் என்னும் இரு சொற்களும் தென் சொற்களாதலால், தொன்றுதொட்டு நூலும் வனப்பும் என இருபாற் பட்ட தமிழ்ச் செய்யுட்டொகுதிகட்கே முறையே பெயராகி வழங்கி வந்திருக்கின்றன. இவற்றிற்கு நேர் வடசொற்கள் வியாகரணம் (வ்யாகரண), சாகித்தியம் (ஸாஹித்ய) என்பனவாகும்.

வ்யாகரண என்னும் சமற்கிருதச் சொல் வி + ஆ + க்ரு என்னும் முக்கூற்றுக் கூட்டுச் சொல்.

'வி'[3] என்பது, வேறு அல்லது துண்டாக என்று பொருள்படும் முன்னொட்டு; 'ஆ' என்பது சொல்வேறுபடுத்தலன்றித் தனக்கென ஒரு பொருளில்லா இடையொட்டு, க்ரு என்பது செய் என்று பொருள்படும் வினை முதனிலை.

வ்யாக்ரு = துண்டு செய், வேறு பிரி, பகு, கூறுபடுத்து, விளக்கு.

வ்யாகரண = வேறுபடுத்தம், கூறுபடுப்பு (Analysis), விளக்கம், இலக்கணம் (Grammar).

'வி'[3] என்னும் முன்னொட்டு த்வி (இரண்டு) என்னும் சொல்லினின்று திரிந்திருக்கலாமென்று மா. வி. அ. கூறும். இரண்டாக்குதல் என்னும் கருத்தினின்று பகுத்தற் கருத்துத் தோன்றுவது

இயல்பே. ஆயின், விள் என்னும் தென்சொல்லின் கடைக்குறையாக 'வி' என்னும் வடமொழி முன்னொட்டைக் கொள்வதே மிகப் பொருத்தமாம்.

ஒ. நோ: அல்—அ, குள்—கு, நல்—ந, பொள்—பொ.

விள்ளுதல்=பிளத்தல், பிரிதல், பகுதல், வேறுபடுதல், கூறுபடுதல்.

விள்—விறு—வீறு—வீற்று. வீற்று வீற்று=துண்டு துண்டாய். வீறு—வேறு—வேற்று.

'ஆ' என்னும் இடையொட்டு ஆக என்னும் வினையெச்ச வீற்றின் கடைக் குறையாகவு மிருக்கலாம்.

"பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு."

என்னும் நன்னூற் பொதுப்பாயிர நூற்பாவில் (24), சொல்லாக என்பது சொல்லா என்றும், சேயிழையாக என்பது சேயிழையா என்றும், ஆகவீறு ஆவீறாக ஈறு குன்றி நிற்றல் காண்க. வ்யாக்ரு என்னும் சொற்கு, வேறாகச் செய் என்னும் பொருளும் பொருந்துதல் காண்க.

க்ரு என்பது, கருவி கருமம் என்னும் தென்சொற்கட்கு முதனிலையாகிய கரு என்பதன் முதன்மெய்ந் நீக்கமே. இவ்வினை கடைக் கழகத்திற்கு முன்பே வழக்கற்றது.

சொல்லைக் கூறுபடுப்பதும் சொற்றொடரைக் கூறுபடுப்பதும் சொற்றொகுதியாகிய மொழியைக் கூறுபடுப்பதும், ஆக, மூவகைக் கூறுபடுப்பே வியாகரணம்.

1. எழுத்தியல்

(1) வண்ணமாலை (வர்ண மாலா)

வடமொழி நெடுங்கணக்கு அல்லது குறுங்கணக்கு வர்ணமாலா எனப்பெறும். வண்ணம்—வர்ண. மாலை—மாலா. வர்ண, அக்ஷர என்பன எழுத்தின் பொதுப் பெயர்கள். இவற்றுட் பின்னது அசையையுங் குறிக்கும்.

வகையும் தொகையும்

உயிரெழுத்துக்கள் (13):

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ரு, ரூ, லு, ஏ, ஐ, ஓ, ஔ.

a, ā, i, ī, u, ū, ṛu, ṛū, ḷu, ē, ai, ō, au.

அனுஸ்வார ÷

விஸர்க (g):

மெய்யெழுத்துக்கள் (33):

ஐவர்க்கம் (25)

k, kh, g, gh, ṅ

c, ch, j, jh, ñ

ṭ, ṭh, ḍ, ḍh, ṇ

t, th, d, dh, n

p, ph, b, bh, m

இடையினம் (4) ய், ர், ல், வ்

இரைப்பினம் (3) ச், ஷ், ஸ்

மூச்சொலி (1) ஹ்

யாகுபாடும் பெயரும்

உயிரெழுத்து அச் (ac) என்றும் ஸ்வர என்றும் பூத (bhūta) என்றும், அவற்றுள் குறில் ஹ்ரஸ்வ என்றும் நெடில் தீர்க்க (dīrgha) என்றும், பெயர்பெறும்.

மெய்யெழுத்து ஹல் என்றும் வ்யஞ்சன என்றும் பெயர் பெறும். அவற்றுள் ஐவர்க்கமும் ஸ்பர்சா (Mutes) என்றும், இடையினம். அந்தஸ்தா (antasthā : Semi-vowels) என்றும், இரைப்பினமும் மூச்சொலியும் (Aspirate) ஊஷ்மாண: (Sibilants) என்றும் பெயர் பெறும்.

ஐவர்க்கங்களும், முறையே, ஒலிபற்றிக் கவர்க்கம் (kavarga), சவர்க்கம் (cāvarga), டவர்க்கம் (ṭavarga), தவர்க்கம் (tavarga), பவர்க்கம் (pavarga) என்றும்; பிறப்பிடம்பற்றிக் கண்ட்யா: (Gutturals), தாலவ்யா: (Palatals), மூர்தன்யா: (Murdhanyā:-Linguals or Cerebrals), தந்த்யா: (dantyā:-Dentals), ஓஷ்ட்யா: (Labials) என்றும், சொல்லப்பெறும்.

(2) ஒலியும் பிறப்பும்

உயிரெழுத்துக்களுள்; ருகரம் குற்றியலுகரம் சேர்ந்த ரகரமாகும்; ரூகாரம் அதன் நெடில் அல்லது நீட்டம். லுகரம் குற்றியலுகரம் சேர்ந்த லகரம்.

அனுஸ்வார என்பது முந்தின வுயிரை யடுத்தொலிக்கும் மகர வகை.

விஸர்க்கம் (விஸர்க) என்பது ஆய்தப் போலி; ஆயின் வரி வடிவின்றி உயிரேறப் பெறுவது; ஸகரத்தின் திரிபாக வரக்கூடியது.

k, kh ஆகியவற்றின் முன்னும் p, ph ஆகியவற்றின் முன்னும் வந்து அரை விஸர்க்கமாக ஒலிக்கும் ஒலிக்கு, முறையே, ஜிஹ்வா மூலீய என்றும் உபத்மானீய (dh) என்றும் பெயர். முன்னதற்கு மிடறும் பின்னதற்கு இதழும் பிறப்பிடமாம்.

சிலவிடத்து, உயிர்களும் ய வ ல ஆகிய இடையின மெய்களும் மூக்கொலியுடன் இசைக்கும். அன்று அவை அனுநாசிகம் எனப் படும்.

ஊஷ்மாணங்களுள்: ஹகரத்திற்கு மிடறும், சகரத்திற்கு இடையண்ணமும், ஷகரத்திற்கு முன்னண்ணமும், ஸகரத்திற்குப் பல்லண்ணமும், பிறப்பிடமாம்.

ஐ, ஔ என்னும் இரு நெடிலும் முதற்காலத்தில் ஆய், ஆவ் என நீண்டொலித்தனவென்றும், ஆரியம் தமிழொடு தொடர்பு கொண்டபின், அவை தமிழிற்போல் அய், அவ் எனக் குறுகியொலிக்கின்றனவென்றும், கூறுவர்.

தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவான பிற எழுத்துக்களெல்லாம், தமிழிற்போன்றே ஒலிக்குமென அறிக.

ஏ, ஓ இரண்டும் தமிழில் எகர ஒகரங்களின் நீட்டமான தனி யொலிகளாகக் (Simple vowels) கொள்ளப்பெறும்; சமற்கிருதத்தில் தவருகப் புணரொலிகளாகக் (Diphthongs) கொள்ளப் பெறுகின்றன. இதற்கு அம்மொழியில் எகர ஒகர மின்மையும் குணசந்தியுமே காரணம்.

அ, ஆ + இ, ஈ = ஏ. எ-டு: மஹா + இந்திர(ன்) = மஹேந்திர(ன்)

அ, ஆ + உ, ஊ = ஓ. எ-டு: குல + உத்துங்கன் = குலோத்துங்கன்.

(3) எழுத்துச் சாரியை

" காரமும் கரமும் கானொடு சிவணி
நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை" என்பது தொல்
காப்பியம் (134).

உயிரெழுத்தின் உதவியின்றித் தாமாக வொலிக்காத மெய் யெழுத்துக்களை ஒலிப்பித்தற் பொருட்டும், தாமாக வொலிக்கும் உயிரெழுத்துக்களையும் எளிதாக ஒலிப்பித்தற் பொருட்டும், சில துணை யொலிகளைப் பண்டைத் தமிழிலக்கண நூலார் அமைத்துள்ளனர். அவை சாரியை எனப்பெறும்.

உயிரெழுத்துக்களுள் குறிற்குக் கரமும் நெடிற்குக் காரமும் சாரியையாம். ஐகார ஔகாரங்கட்குக் கான் என்பது சிறப்புச் சாரியை. இதைக் குறிற்கும் மெய்க்கும் பயன்படுத்தியது பிற்காலத்த தாகத் தெரிகின்றது.

மெய்யெழுத்துக்கட்கு அவ்வும் அகரமும் சாரியை.

" மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்." (தொல். 46).

எ-டு : "வல்லெழுத் தென்ப கசட தபற." (தொல். 19)

" வகரக் கிளவி நான்மொழி யீற்றது." (ஷை. 81).

வடமொழி மெய்களும் தமிழ் முறைப்படியே அகரமொடு இயங்கு கின்றன. உயிர்மெய்கட்குள் குறிற்குக் கரமும் நெடிற்கு மெய்ச் சாரியையொடு கூடிய உயிர்நெடிற் சாரியையும் சாரியையாம்.

எ-டு : ககரம் (க), ககர ஆகாரம் (கா).

ஆய்தத்திற்கு அ-கேனம் என்பது சாரியையாம்.

எ-டு . அஃகேனம். இது தொல்காப்பியத்திற் சொல்லப்பெற வில்லை.

இங்ஙனம் தமிழெழுத்துச் சாரியை யொழுங்கு நிறைவாக அமைந்துள்ளது.

வடமொழியார் கரம், காரம் என்னும் இரண்டையே தமிழினின்று கொண்டுள்ளனர். அதோடு குறிற்கு இரண்டையும் வேறுபாடின்றி ஆள்வர். இதனாற் சாரியை யமைப்பின் தமிழ் மூலம் தெளிவாகத் தெரிகின்றது. கரம், காரம் என்பன வடமொழியில் கர, கார என்று ஈறுகெட்டு நிற்கும். சாரியை என்னுங் குறியீடும் வடமொழியி லில்லை.

" ரகார ழகாரம் குற்றொற் றாகா." (தொல். 49).

" உஊ காரம் நவவொடு நவிலா." (ஷ 74).

என்பன போன்றவற்றைச் செய்யுள் திரிபில் அடக்குதல் வேண்டும்.

" கரமும் கானும் நெட்டெழுத் திலவே." (ஷ 135).

என்று விலக்கியபின்,

" ஐகார ஔகாரங் கானொடுந் தோன்றும்." (ஷ 137).

என்று தொல்காப்பியரே முரண்படக் கூறுவதால்,

" வரன்முறை மூன்றும் குற்றெழுத் துடைய." (ஷ 136).

என்று அவர் குறித்திருப்பது குமரிநாட்டு வழக்கொடு பொருந்தியதாய்த் தோன்றவில்லை.

(4) முறை

மேலையாரிய மொழிகட்குள் ஒன்றிற்காவது முறை என்னும் எழுத்திலக்கணம் இன்றுமில்லை. வேத ஆரியர் எழுத்தும் இலக்கியமுமின்றி இந்தியாவிற்குட் புகுந்தனர். வேத மொழிக்கும் வேதத்திற்கும் எழுதாக்கிளவி என்று பெயர். வேதத்தைக் குறிக்கும் ச்ருதி (கேள்வி) என்னும் பெயரே ஆரியர்க்கு எழுத்தின்மையை உணர்த்தும்.

இந்தியாவில் மட்டுமன்றி உலகத்திலேயே முதன்முதல் நெடுங்கணக்கு வகுத்ததும் அதற்கு முறையமைத்ததும் தமிழரே.

வேத ஆரியர் தென்னாடு வந்து தமிழரொடு தொடர்புகொண்ட பின்னரே, தமிழ் நெடுங்கணக்கைப் பின்பற்றி வடமொழிக்குக் கிரந்த வண்ணமாலையை அமைத்துக் கொண்டனர்.

உயிர் முன்னும் மெய் பின்னும், உயிருள் ஆ ஈ ஊ முன்னும் ஏ ஓ பின்னும், ஒவ்வோர் உயிரிலும் குறில் முன்னும் நெடில் பின்னும், ஏயின் பின் ஐயும் ஓவின் பின் ஔவும், ஆய்த மொத்த விஸர்க்கம் உயிர்க்கும் மெய்க்கும் இடையும், மெய்யுள் வலி வகை முன்னும் மெலி பின்னுமாகக் கசடதப முறையிலும், அவற்றிற்குப் பின் இடையினம் ய ர ல வ முறையிலும், அமைந்திருப்பது, வடமொழி வண்ணமாலை தமிழ் நெடுங்கணக்கு முறையை முற்றுந் தழுவியதென்பதை, எத்துணைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றது! இஃதொன்றே வடமொழியின் பின்மையைக் காட்டப் போதிய சான்றும்.

உயிர் வரிசையுட் செருகப்பட்ட சிறப்பெழுத்துக்களை நோக்கினும், முற்றுகரத்தை யடுத்துக் குற்றுகரமும், ரகரக் குற்றுகரத்தின் பின் லகரக் குற்றுகரமும் வைக்கப்பெற்றிருப்பது, எத்துணைத் தமிழ் முறையொட்டியது!

இங்ஙன மிருப்பினும், தமிழர் வேற்று நாட்டினின்று வந்தவ ரென்றும், ஆரியரால் நாகரிகப்படுத்தப் பெற்றவரென்றும், இரு தவறுன முற்கோள் கொண்டிருந்ததினாலும், பண்டைத் தமிழிலக்கி யத்தைப் பார்க்கப் பெருமையாலும், தமிழின் தொன்மை முதன்மை தாய்மை தலைமை ஆகியவற்றை யுணராது, வடமொழி வண்ண மாலையைத் தழுவியது தமிழ் நெடுங்கணக்கென்று, தலைகீழாகத் தவறுன முடிபிற்குக் கால்டுவெலார் வர நேர்ந்ததென்று கண்டு கொள்க

(5) அளபு

அளபு என்பது எழுத்தொலியின் மாத்திரை அல்லது அளவு. அளபு, மாத்திரை என்பன ஒருபொருட் சொற்கள். இவற்றுள் முன்னது தமிழ்ச் சிறப்புச் சொல்; பின்னது தென்மொழிக்கும் வட மொழிக்கும் பொதுச் சொல்.

மெய்க்கு அரையும் குறிற்கு ஒன்றும் நெடிற்கு இரண்டும் மாத் திரை என்பது இருமொழிக்கும் பொது. வடமொழியில் ப்லுதம் என்னும் அளபெடையையும் உயிர் அல்லது உயிர்மெய் வகைகளுள் ஒன்றுகச் சேர்த்து, அதற்கு மும்மாத்திரை என வகுத்துள்ளனர்.

அளபெடை தமிழிலும் உண்டு. ஆயின் அதை ஒழுங்கான உயிர் வகையாகக் கொண்டிலர். ஏனெனின், அது உலகியல் அல்லது இயற்கையளபெடையில் மும்மாத்திரை முதல் பத்து அல்லது பன்னிரு மாத்திரைவரை நீண்டளபெடுக்கும். செயற்கை யாகிய செய்யுளியல் அளபெடை குறுகியொலிப்பினும், அருகியும் திட்டமான மாத்திரை வரம்பின்றியுமே நிகழும்.

அளபெடையையும் ஓர் உயிர் வகையாகக் கொண்டது வட மொழியிலக்கணத்தின் பின்மையையே காட்டும்.

(6) வடிவம்

வடமொழிக்கு முதன்முதல் எழுத்து ஏற்பட்டது தமிழ்நாட் டில்தான். அது தமிழ் எட்டெழுத்தினின்று திரிந்த கிரந்த வெழுத்து. அதன் காலம் தோரா. கி. மு. 10-ஆம் நூற்றுண்டு.

ஐந்திரம் என்னும் வடமொழி வியாகரணம் தொல்காப்பியத்திற்கு முந்திய நூலாதலால், வடமொழிக் கிரந்தவெழுத்து அதற்கு ஓரிரு நூற்றுண்டு முற்பட்டதாயிருத்தல் வேண்டும்.

கிரந்தம் என்பது நூல். வடமொழியாளர்க்குச் சொந்த வழக்கு மொழியின்மையால், நூலிற்கு மட்டும் பயன்பயடுத்தப்பெற்ற எழுத்தைக் கிரந்தாட்சரம் என்றனர்.

இன்றுள்ள தேவநாகரி கி. பி. 4-ஆம் நூற்றுண்டிற் கருக்கொண்டு 11-ஆம் நூற்றுண்டில் முழுநிறைவடைந்தது. அதையும் உற்று நோக்கின், அதற்கும் கிரந்தவெழுத்திற்குமுள்ள நுண்ணிய வடிவொப்புமை புலனுகும்.

தேவமொழி யென்னும் வடமொழிக்கு நகரங்களில் ஆளப்பெற்ற எழுத்து தேவநாகரி. தேவர் நகரங்களில் ஆளப்பெற்றது தேவநாகரி என்பர் வடமொழியாளர். அவர் தேவரென்று நாணுது குறிப்பது பிராமணரை.

சில எழுத்துக்களின் வடிவங்கள் :

எழுத்து	வடிவம்	
அனுநாசிகம்	◡̇	
ஜிஹ்வாமூலீய	≍	(k, kh ஆகியவற்றின் முன்)
உபத்மானீய	≍	(p, ph ஆகியவற்றின்முன்)

தமிழ்க் கையெழுத்தில் சில கூட்டெழுத்துக்களை ஆள்வது போல், வடமொழி அச்செழுத்தில் ஏராளமான கூட்டெழுத்துக்களை அமைத்திருக்கின்றனர். அவை சந்தியக்ஷரம் எனப்படும்.

எ-டு: க்ஷ—க்ஷ, ச்ரீ—ஸ்ரீ

இவை கிரந்தம். இங்ஙனம் தேவநாகரியில் ஏராளமாகவுண்டு.

மெய்யைக் குறிக்கக் கிரந்தத்தில் மேற்புள்ளியும் தேவநாகரியிற் கீழிழுப்பும் இட்டதும், இருவகையெழுத்திலும் உயிர்மெய்க்குத் தனி வடிவமைத்ததும், முற்றும் தமிழைப் பின்பற்றியே.

(7) புணர்ச்சி

எழுத்துப் புணர்ச்சி, சொற்புணர்ச்சி எனப் புணர்ச்சி இருவகைப்படும்.

தமிழிலக்கணத்தை முதன்முதல் ஆய்ந்து கண்டு நூலியற்றியவர் தலைசிறந்த முனிவர் என்பது,

"வினையின் நீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்."

என்னும் தொல்காப்பிய நூற்பாவால் (1594) விளங்கும்.

முனிவர் மெய்ப்பொருளுணர்வு முதிர்ந்தவராதலின், உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் உயிர், உயிரில்லது (மெய்), உயிருள்ளது (உயிர்மெய்) என மூவகையாக இருக்கக்கண்டு, அவற்றையொத்த மூவகை எழுத்தொலிகட்கும் அவற்றின் பெயரையே உவமையாகு பெயராக இட்டு, உயிர்மெய்க்குத் தனி வடிவும் அமைத்தனர்.

இதனால், உயிர்மெய்யொலியை உயிரும் மெய்யுமாக முதன் முதற் பகுத்தவர் தமிழர் என்பதும், உயிர்மெய்யிலேயே எழுத்துப் புணர்ச்சி தோன்றிவிட்டதென்பதும், தெளிவாம்.

சொற்புணர்ச்சி எல்லா மொழிகளிலுமுண்டு. ஆயின், இயன் மொழியிலேயே புணர்ச்சி ஒழுங்காகவும் புணர்ச்சொற்கள் எளிதாய்ப் பகுக்கக் கூடியனவாகவுமிருக்கும் திரிமொழிகளில் தனிச்சொல்லும் கூட்டுச் சொல்லும் பெரும்பாலும் திரிந்திருப்பதாலும், திரிபுப் புணர்ச்சி நிகழவேண்டிய விடத்தும் இயல்புப் புணர்ச்சியே பெரும்பான்மையாய் நிகழ்வதாலும், திரிபுப் புணர்ச்சி நிகழ்ந்த விடத்தும் அது வரிவடிவிற் காட்டப் பெறுமையாலும், அவற்றிற் புணர்ச்சியிலக்கணம் வகுக்கப் பெரிதும் இடமில்லை.

சமற்கிருதம் திரிமொழியாயினும், தொன்று தொட்டுத் தமிழொடு தொடர்பு கொண்டமையானும், ஐந்திலிரு பகுதிக்குக் குறையாது தமிழாயிருத்தலானும், தமிழைத் தழுவியே இலக்கணஞ் செய்யப் பெற்றமையானும், புணர்ச்சியிலக்கணம் அதற்கமைந்ததென்க. ஆயினும், திரிமொழியாதலின், தமிழ்ப் புணர்ச்சிபோற் பெரும்பாலும் ஒழுங்குபடாது எத்துணையோ விலக்குக்களைக் கொண்டுள்ளதென அறிக.

வடமொழிப் புணர்ச்சியும் தமிழ்ப் புணர்ச்சி போன்றே உயிரீறும் மெய்யீறும் பற்றி இருவகைப்படும். உயிரீற்றுப் புணர்ச்சியை அச் ஸந்தி அல்லது ஸ்வரஸந்தி என்றும், மெய்யீற்றுப் புணர்ச்சியை ஹல்ஸந்தி என்றுங் கூறுவர்.

உயிரீற்றுப் புணர்ச்சியில், குணம், விருத்தி என்னும் இருவகை உயிர்த்திரிபுகள் வடமொழிக்குச் சிறப்பானவை. இன்னின்ன சிற்றுயிர்கட்கு (Simple Vowels) இன்னின்ன வுயிர்கள் அல்லது அசைகள் குணம் என்றும், இன்னின்ன வுயிர்கள் அல்லது அசைகள்

விருத்தி என்றும், வகுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைக் கீழ்வரும் கட்டமைப்பிற் கண்டுகொள்க.

இயலுயிர்	அ	இ, ஈ	உ, ஊ	ருʼ, ரூʼ	லுʼ
குணவுயிர்	அ	ஏ	ஓ	அர்	அல்
விருத்தியுயிர்	ஆ	ஐ	ஔ	ஆர்	ஆல்

தீர்க்கஸந்தி என்னும் மூவகை நெடிற்புணர்ச்சி, குளாம்பல் (குள ஆம்பல்), புதூர் (புது ஊர்) என்னும் மரூஉப் புணர்ச்சி யொத்தவையே.

தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் முப்புணர்ச்சித் திரிபுகளும், ஆகம(ம்), ஆதேச(ம்), லோப(ம்) என மொழிபெயர்க்கப் பட்டுள.

"எண்பெயர் முறைபிறப் புருவம் மாத்திரை
முதலீ றிடைநிலை போலி யென்றா
பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே."

என நன்னூலார் (57) கூறும் பன்னிருவகை எழுத்திலக்கணங்களுள், முதல் ஈறு இடைநிலை என்னும் மூன்றும் திரிமொழியாகிய வடமொழிக்கில்லை.

(8) வடமொழியெழுத்துப் பெருக்கம்

கிரேக்கக் குறுங்கணக்கு (24)

A (a and ā), B, G (g and ṅ), D, E, Z, Ē, TH, I (i and ī), K, L, M, N, X, O, P, R, S (s and z), T, U (u and ū), PH, KH, PS, Ō.

இவற்றுள், TH, X (ks), PH, KH, PS என்னும் ஐந்தே புணர்மெய்கள்; TH, PH, KH, என்னும் மூன்றே மூச்சொலிப் புணர்மெய்கள். X (ks) வடமொழியில் க்ஷ (kṣ) ஆக வளர்ந்துள்ளது.

இலத்தீன் குறுங்கணக்கு (21)

A, B, C, D, E, F, Z, H, I (J), K, L, M, N, O, P, Q, R, S, T, V (U), X.

இவற்றுள் X (ks) ஒன்றே புணர்மெய். அதுவும் மூச்சொலியற்றது. C=G. J=Y.

தியூத்தானியக் குறுங்கணக்கு (ஆங்கிலம்)

A, B, C, D, E, F, G, H, I, J, K, L, M, N, O, P, Q, R, S, T, U, V, W, X, Y, Z.

இவற்றுள் X (ks) ஒன்றே புணர்மெய்.

கிரேக்க அரிவரி பினீசியரிடத்தினின்றும், இலத்தீன் அரிவரி கிரேக்கரிடத்தினின்றும், ஆங்கில அரிவரி இலத்தீனராகிய உரோமரிடத்தினின்றும், பெறப்பட்டவையாகும்.

இன்று ஐரோப்பா முழுதும் வழங்கும் ஆரியமொழி அரிவரிகள், இலத்தீன் அரிவரியைத் தழுவியவையே.

ஆங்கிலம் பிற்கால மொழியாதலால், சில பிற்கால வொலிகள் இணைவரிகளால் (Digraphs) குறிக்கப்பெறுகின்றன.

எ-டு: ch = ச்ச, sh = ஷ.

சமற்கிருதம் ஆரியமும் திரவிடமுங் கலந்த மொழியாதலின், பல முதிரொலிகளைக் கொண்டிருப்பதுடன், வல்லின ஐவகையுள்ளும் பொலி Voiced) யொலியுடனும் பொலியா Voiceless) வொலியுடனும் மூச்சொலியை ஒழுங்காகச் சேர்த்து அவற்றிற்குத் தனி வடிவம் அமைத்துள்ளது.

kh, gh; ch, jh; ṭh, ḍh; th, dh; ph, bh என்னும் பத்துக் கூட்டு மெய்கட்கும் வடமொழியில் தனி வடிவம் அமைந்திருத்தல் காண்க. இந்நிலைமை வேறெம் மொழியிலுமில்லை.

(9) வடமொழி வண்ணமாலையின் பின்மை

வடமொழி வண்ணமாலையின் பின்மை பின்வருஞ் சான்றுகளால் துணியப்பெறும்.

(1) வடமொழியின் பின்மை.

(2) ஆரிய வேதம் பன்னூற்றாண்டு எழுதாக் கிளவியாயிருந்தமை.

(3) தமிழெழுத்தைப் பின்பற்றிய கிரந்தம் தேவநாகரிக்கு முற்பட்டமை.

(4) ஒலி வடிவு, மாத்திரை, சாரியை, வரிவடிவு, முறை முதலியவற்றில் இயன்றவரை தமிழைப் பின்பற்றியிருத்தல்.

(5) ஒலிப்பெருக்கம்.

(6) கூட்டு மெய்கட்குத் தனி வடிவு கொண்டுள்ளமை.

ஐவர்க்கங்களும் கவர்க்கம் சவர்க்கம் (e) என முதன்மெய்யாலேயே பெயர்பெற்றிருப்பதால், அம்முதன்மெய்யின் திரிபே பிற்பட்ட மூன்றும் என்பது பெறப்படுதல் காண்க.

இனி, தமிழ்ப்பொலியா வொலிச் சொற்கள் திரவிடத்திற் பொலிவொலிச்சொற்களாகவும், ஆங்கிலப் பொலியாவொலிச் சொற்கள் இலத்தீன கிரேக்கத்திற் பொலிவொலிச் சொற்களாகவும், திரிந்திருத்தலையும் நோக்கித் தெளிக.

இனி, வடமொழி யைவருக்க முதன்மெய்களும் தமிழ் வல்லினத்தின் வலித்த வடிவேயென்பதையும் கண்டறிக.

(7) மேலையாரியம்போற் குறுங்கணக்கு மட்டுங் கொண்டிராது தமிழ்போல் நெடுங்கணக்குங் கொண்டிருத்தல்.

(10) வடமொழி வண்ணமாலையின் ஒழுங்கின்மை

(1) ரு, ரூ, லு என்னும் உயிர்மெய்கள் உயிரினத்திற் சேர்க்கப்பட்டிருத்தல்.

(2) தேவநாகரியிற் சில எழுத்துக்கட்கு ஒன்றேடொன்றை மயக்கற்கேற்றவாறு வடிவமைந்திருத்தல்.

(3) மகரவொலியாகிய அனுஸ்வாரக்குறி மெல்லினப் பொதுவாயிருத்தல்.

(11) வடமொழிக் குறுங்கணக்கு நூற்பாக்கள்

1. "அ இ உ ண்," 2. "ருலுக்." 3. "ஏ ஓங்." "4. ஐஔச்" (c). 5. "ஹயவரட்" (ṭ). 6. "லண்." 7. "ஞமஙணநம்" 8. "JHA BHA ஞ்." 9. "GHA ḌHA DHA ஷ்." 19. "ஜ BA GA ḌA DAச்." 11. "KHA PHA CHA ṬHA THA CA ṬA TA வ்." 12. "KA PAய்." 13. "சஷஸர்." 14. "ஹல்."

இப்பதினல் நூற்பாக்கட்கும் மகேசுவர சூத்திரங்கள் அல்லது சிவசூத்திரங்கள் என்று பெயர். இவை பாணினீயத்தொடு பொதுவாகச் சேர்த்துக் கூறப்படினும், சிவபெருமானுற் செய்யப்பெற்றவையென்றும், அவர் துடியைப் பதினன்முறை இயக்க இப்பதினல் ஒலித்தொகுதிகளும் தோன்றினவென்றும், வடமொழியாளர் கூறுவர். வடமொழியையே தேவமொழியென்பார் இங்ஙனங் கூறுவதில் வியப்பொன்றுமில்லை. ஆயினும் துணிச்சலான ஏமாற்றே.

அஷ்டாத்யாயீ என்னும் பாணினியிலக்கணத்தின் மூல பாடத்தில் இவை சேர்க்கப்பெறுமையாலும், பாணினீய நூற்பாக்கள் போல் அதிகாரவியல் எண் பெறுமையாலும், நன்னூற் பொதுப் பாயிர நூற்பாக்கள்போல் முன்னரே பலராற் செய்யப்பட்டு வழிவழி திருந்தி வந்தவையாயுமிருக்கலாம்.

இந்நூற்பாக்களின் இறுதியெழுத்துக்கட்கு இத் என்று பெயர். ஒரு நூற்பாவின் முதலெழுத்தையும் அதன்பின் வரும் ஓர்இத்தையும் சேர்ப்பின் ப்ரத்யாகார என்னுங் குறியீடாகும். அக்குறியீடு, அதன் முதலெழுத்தையும், அதன் ஈறெழுத்திற்கும் இடைப்பட்ட இத்தல்லா எல்லா நூற்பா எழுத்துக்களையும் குறிக்க உதவும்.

இம்முறையில், அண் என்பது அகரத்தையும் அகர இகர வுகரங் களையுங் குறிக்கும். அச் என்பது எல்லா உயிர்களையும், ஹல் என்பது எல்லா மெய்களையும், அல் என்பது எல்லா உயிர்களையும் மெய் களையும் குறிக்கும்.

இதனால், மேற்கூறிய பதினால் நூற்பாக்கட்கும் பிரத்தியாகார சூத்திரங்கள் என்றும் பெயர்.

2. சொல்லியல்

எல்லா மொழிகளிலும் இலக்கணவகைச் சொற்கள் பெயர் வினை இடை என மூன்றே. இவை சிக்ஷை, நிருக்தம் என்னும் தொடக்க வட நூல்களில், நாம(ம்), ஆக்யாத (ம்),நிபாத(ம்) எனக் குறிக்கப்பட்டன. பாணினீ இவற்றை முறையே சுபந்தம், திஙந்தம் அவ்யய(ம்) எனக் குறித்தார்.

உபஸர்க்கம் என்னும் முன்னொட்டு நிபாதத்துள் அடங்கும்.

ஆரியர் இந்தியாவிற்கு வருமுன்பே, நாமம் என்னுஞ் சொல் மேலையாரியத்தில் namon, nomen என்று வழங்கியதாகத் தெரிவதாலும், தியூத்தானியத்தில் வினையாகவும் வழங்கிவருவதனாலும், ஒரு கால்அது மேலையாரியச் சொல்லாக இருப்பினும் இருக்கலாம். ஆக்யாத(kh) என்னும்சொல்,சொல்என்றே பொருள்படுவது. இது பொருளிலும் ஆட்சியிலும் verb (L. verbum) என்னும் ஆங்கிலச் சொல்லை யொத்தது. கியா=சொல். verb=சொல். நிபாத என்பது நிபத் என்னும் கூட்டு முதனிலையினின்று திரிந்தது. நி=கீழ். பத்=விழு. நிபாத=நெறிதிறம்பியது, ஒழுங்கற்றது. படி(த.)—பத்.

வேற்றுமை யுருபேற்ற பெயரும் காலவெண்ணிடங் காட்டும் ஈறேற்ற வினையும் பதம் எனப்படும்.

(11) **பெயர்ச்சொல் (ஸுபந்த)**

தாது எனப்படும் முதனிலையொடு, கிருத் எனப்படும் பெயரடி யிடையொட்டும் தத்திதன் எனப்படும் வழிநிலை யிடையொட்டும் சேர்ந்த வடிவிற்குப் பிரகிருதி அல்லது பிராதிபதிகம் என்று பெயர். இப்பிராதிபதிகத்துடன் வேற்றுமை யுருபு சேரின் பெயர்ப்பதமாம். அது சுபந்தம் எனப்படும். சுப் (ஸுப்) என்பது வேற்றுமை யுருபு களையெல்லாம் பொதுவாகக் குறிக்கும் பாணினீயக் குறியீடு. அந்தம் ஈறு.

கிருத் ஈறு கிருதந்தம் என்றும், தத்தித ஈறு தத்திதாந்தம் என்றும் சொல்லப்படும். இவையிரண்டிற்கும் பிரத்யயம் என்பது வடமொழிப் பொதுப்பெயர்.

பிராதிபதிகத்திலும் பெயர்ப்பதத்திலும் க்ருத், தத்திதன் ஆகிய இருவகை யிடையொட்டும் சேர்ந்துமிருக்கலாம்; அவ்விரண்டிலொன்று தனித்துமிருக்கலாம்.

பால் (லிங்க)

வடமொழியில் திணையில்லை; பால்மட்டும் உண்டு. அது புல்லிங்கம் (ஆண்பால்), ஸ்திரீலிங்கம் (பெண்பால்), நபும்ஸகலிங்கம் (அலிப்பால்), என மூவகைப்படும்.

வடமொழிப் பால்வகுப்பு இயற்கையான பொருளியல்புபற்றியதன்று; பெரும்பாலும் செயற்கையான இலக்கண முறை பற்றியது. சில பெயர்களே உண்மையான பால்காட்டும்.

எ—டு: புஸ்தகம் (ஆ. பா.), சிலா (பெ. பா.) = கல்.

மனைவியைக் குறிக்கும் தாரம் (ஆ. பா.) பாரியா (பெ. பா.), களத்திரம் (அ. பா.) என்னும் முச்சொற்களும், பால் வேறுபடும்.

எண் (வசன)

வடமொழியில், ஏகவசனம் (ஒருமை), த்விவசனம் (இருமை), பஹு வசனம் (பன்மை) என எண் மூவகைப்படும்.

மேலையாரியத்தைச் சேர்ந்த தியூத்தானியத்திலும் இலத்தீனிலும் இருமையெண் இல்லை; சமற்கிருதத்திற்கு மிக நெருங்கிய கிரேக்கத்தில்தான் உண்டு.

இடம் (புருஷ)

இடம் தமிழிற் போன்றே வடமொழியிலும் மூன்றாம்.

அவை உத்தம புருஷ (தன்மை), மத்யம புருஷ (முன்னிலை), ப்ரதமபுருஷ (படர்க்கை) எனப்படும்.

வேற்றுமை (விபக்தி)

கிரேக்க இலக்கணத்தில், எழுவாய் வேற்றுமை. விளிவேற்றுமை, செய்பொருள் வேற்றுமை, கிழமை வேற்றுமை, கொடை வேற்றுமை என்னும் ஐவேற்றுமைகளும்; இலத்தீன் இலக்கணத்தில், எழுவாய்வேற்றுமை, கிழமைவேற்றுமை, கொடைவேற்றுமை, செய்பொருள் வேற்றுமை, விளிவேற்றுமை, நீக்கவேற்றுமை என்னும் அறுவேற்றுமைகளுமே, கூறப்படுகின்றன. முதற்கால ஆங்கிலத்தில் எழுவாய், விளி, செய்பொருள், கிழமை, கொடை, கருவி என்னும் அறுவேற்றுமைகள் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. ஆயின் மேலையாரிய மொழி ஒன்றிலாவது எண் வேற்றுமை சொல்லப்படவில்லை.

வடமொழியிலோ தமிழிற்போல் எண்வேற்றுமை காட்டப்பெறுவதுடன், அவற்றின் வரிசையும் பெயரும் பொருளும் முற்றும் தமிழை ஒத்திருக்கின்றன.

வேற்றுமைப்பெயர்		வேற்றுமைப்பொருள்	
தமிழ்	வடமொழி	தமிழ்	வடமொழி
முதல் வேற்றுமை	ப்ரதமா விபக்தி	வினைமுதல்	கர்த்தா
இரண்டாம் ,,	த்விதீயா ,,	செய்பொருள்	கர்ம(ம்)
மூன்றும் ,,	த்ருதீயா ,,	வினைமுதல், கருவி	கர்த்தா, கரணம்
நான்காம் ,,	சதுர்த்தீ ,,	கொடை	ஸம்பிரதானம்
ஐந்தாம் ,,	பஞ்சமீ ,,	நீக்கம்	உபாதானம்
ஆறும் ,,	ஷஷ்டீ ,,	கிழமை	ஸம்பந்த(ம்)
ஏழாம் ,,	ஸப்தமீ ,,	இடம்	அதிகரணம்
எட்டாம் (விளி) ,,	ஸம்போதன ப்ரதமா ,,	விளி	ஸம்போதனம்

இங்ஙனம் முற்றும் ஒத்திருப்பதால், வடமொழி வண்ணமாலை போன்றே வடமொழி வேற்றுமையமைப்பும் தமிழைத் தழுவியதென்பது வெள்ளிடைமலை. விபக்தி என்னும் சொல்லே விள்-பகு என்பதன் திரிபான வி-பஜ் என்னும் கூட்டுமுதனிலையினின்று திரிந்து வேறு பிரிப்பு என்று பொருள்படும் மொழிபெயர்ப்பாகும்.

தமிழில் எண்வேற்றுமையும் எண்வரிசையால்மட்டுமன்றி, எழுவாய், செய்பொருள், கருவி, கொடை, நீக்கம், கிழமை, இடம், விளி எனப் பொருள்பற்றியும்; பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி என உருபுபற்றியும்; பெயர்பெறும்.

வடமொழியில் எட்டாம் வேற்றுமை எண்ணுற் பெயர்பெருதிருப்பதும் கவனிக்கத்தக்கதாம்.

கால்டுவெலார் தொல்காப்பியத்தையும் தமிழின் முன்மையையும் அறியாமையால், மூலத்தைப் படியாகவும் படியை மூலமாகவும் பிறழவுணர்ந்து, தமிழ்வேற்றுமையமைப்பு வடமொழி வேற்றுமையமைப்பைப் பின்பற்றியதென்று தலைகீழாகக் கூறிவிட்டார்.

தமிழ் இயன்மொழியாதலால் அதில் முதல் வேற்றுமைக்கு உருபில்லை; சமற்கிருதம் திரிமொழியாதலின், அதற்கு அஃதுண்டு.

வடசொற்கள் ஈற்றிற் கேற்ப வேற்றுமையுருபுகள் சிறிதும் பெரிதும் வேறுபடும். இங்கு அகரவீறென்று காட்டப்பெறும்.

ராம (வேற்றுமைப்படா வடிவு)

	ஒருமை	இருமை	பன்மை
முதல் வேற்றுமை	ராம:	ராமௌ	ராமா:
இரண்டாம் வேற்றுமை	ராமம்	,,	ராமான்
மூன்ரும் வேற்றுமை	ராமேண	ராமாப்யாம்	ராமை:
நான்காம் வேற்றுமை	ராமாய	,,	ராமேப்ய:
ஐந்தாம் வேற்றுமை	ராமாத்	,,	,,
ஆரும் வேற்றுமை	ராமஸ்ய	ராமயோ:	ராமாணும்
ஏழாம் வேற்றுமை	ராமே	,,	ராமேஷு
விளி வேற்றுமை	ஹே ராம	ஹே ராமௌ	ஹே ராமா:

3-ஆம் 4-ஆம் 5-ஆம் வேற்றுமைகளிலும் 6-ஆம் 7-ஆம் வேற்றுமைகளிலும் இருமை வடிவும், 5-ஆம் 6-ஆம் வேற்றுமைகளிற் பன்மை வடிவும், எல்லா ஈற்றுப் பெயர்கட்கும் பெரும்பாலும் ஒத்தேயிருக்கும்.

வடமொழியிற் பெயரெச்சங்களும் (விசேஷணங்களும்) வேற்றுமைப்படும்.

அஸ்ய என்னும் 6-ஆம் வேற்றுமை யொருமை யுருபு, உடைய என்னும் சொல்லுருபின் திரிபாயிருக்கலாம்.

(2) வினைச்சொல் (திஙந்த)

தாது என்னும் முதனிலையொடு காலவெண்ணிடங் காட்டும் ஈறு சேரின் வினைப்பதமாம். அது திஙந்தம் எனப்படும். ங் என்பது வினையீறுகளையெல்லாம் பொதுப்படக் குறிக்கும் பாணினீயக் குறியீடு.

சமற்கிருத வினைகள், ஆறுகாலங்களும் (Tenses) நான்கு படிசுகளும் (Moods) மூன்று உறவுகளும் (Voices) கொள்ளும். காலம் கால என்றும், படிசு அர்த்த என்றும், உறவு ப்ரயோக என்றும், பெயர் பெறும்.

ஆறுகாலங்களும் நான்கு படிசுகளும் லக்கரங்கள் எனப்படும். வடமொழியில் எல்லா வினை வகைகட்கும் இடுகுறியான குறியீடுண்டு.

அறுகாலம்

காலவகை	வடமொழிப் பெயர்	வடமொழிக் குறியீடு
நிகழ்காலம்	வர்த்தமான :	லட் (ṭ)
இறந்த காலம்—		
இன்றலா இ. கா.	அனத்யதனபூத :	லங்
சேய்மை ,,	பரோக்ஷபூத ;	லிட் (ṭ)
வரையிலா ,,	பூத :	லுங்
எதிர்காலம் —		
முதல் எ. கா.	பவிஷ்யன்	லுட்
இரண்டாம் எ. கா.	அனத்யதன பவிஷ்யன்	லுட்

நாற்படிசு

தமிழ்ப் பெயர்	வடமொழிப் பெயர்	வடமொழிக் குறியீடு
ஏவல் வினை	ஆஜ்ஞா	லோட் (ṭ)
ஆற்றல் வினை	விதி	லிங்
வாழ்த்துவினை	ஆசீ :	ஆசீர்லிங்
நிலைப்பாட்டுவினை	ஸங்கேத	லுங்

லேட் (ṭ) என்று ஓர் இணைப்புப் படிசு (Subjunctive Mood) வேதமொழியி லிருட்பதாகவும், பின்பு வழக்கற்றுப் போனதாகவுஞ் சொல்லப்படும்.

மூவுறவு

தமிழ்ப் பெயர்	வடமொழிப் பெயர்	எடுத்துக்காட்டு
செய்வினை	கர்த்தரிப்ரயோக	ராம : ஸத்யம் பாஷதே.
செயப்பாட்டுவினை	கர்மணிப்ரயோக	ஹரிணு பலம் பக்ஷ்யதே.
தன்பாட்டுவினை	பாவேப்ரயோக	ராமேண கம்யதே.

சமற்கிருத வினைமுற்றீறுகள், தற்பொருட்டுவினை (ஆத்மனேபத) ஈறுகள் என்றும், மற்பொருட்டுவினை (பரஸ்மைபத) ஈறுகள் என்றும், இருவகைப்பட்டுள்ளன. சில வினைகள் தற்பொருட்டு வினையீறுகளையும், சில வினைகள் மற்பொருட்டு வினையீறுகளையும், சில வினைகள் இரண்டையும் ஏற்கும். முன்னொட்டுச் சேர்க்கையால், த. பொ. வினை ம. பொ. வினையாகவும், ம. பொ. வினை த. பொ. வினையாகவும் மாறுவதுண்டு.

த. பொ. வினைப்பயன் செய்வானையும், ம. பொ. வினைப்பயன் பிறனையுஞ் சாரும்.

எ-டு: தேவதத்த : யஜதே (t).=தேவதத்தன் தனக்கு வேட்கிறான்.

தேவதத்த : யஜதி (t).=தேவதத்தன் பிறனுக்கு வேட்கிறான். வேட்டல் வேள்வி செய்தல்.

எல்லா வினைகளும் பத்து லக்கரங்களிலும் மூவிடத்தும் மூவெண்ணிலும் புடைபெயரும்.

நிகழ்காலம், இன்றலா இறந்தகாலம், ஏவல்வினை, ஆற்றல் வினை ஆகிய நாலிலக்கரங்களிலும், வினைகள் சில வேறுபாடடைகின்றன. அவ்வேறுபாடு விகரண(ம்) எனப்படும். வேறுபாடடையும் லக்கரங்கள் ஸார்வதாதுக என்றும், வேறுபாடடையா லக்கரங்கள் அர்த்த தாதுக என்றும், சொல்லப்படும்.

விகரணம்பற்றி வினைகள் பத்துக் கணங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன. இப்பத்துக் கணங்களும் மீண்டும் இரு தொகுதிகளாகப் பகுக்கப்பட்டுள. முதலாம் இரண்டாம் மூன்றும் பத்தாங் கணங்கள் முதல் தொகுதியும், ஏனைய இரண்டாம் தொகுதியும் ஆகும். முதல் தொகுதி வினையடிகள் அகரத்தில் இற்று என்றுந் திரியாது நிற்கும்; இரண்டாந் தொகுதி வினையடிகள் அகரத்தில் இருது திரிந்துவரும்.

வடமொழிச் செயப்பாட்டிறந்தகால வினையெச்சவீறாகிய 'த', தமிழிறந்தகால வினையெச்ச வீறாகிய துவ்வை ஒருபுடையொத்தது.

வடமொழி எதிர்மறையேவ லசையாக வரும் 'மா', வத்து என்னும் தெலுங்குச் சொல்லின் திரிபாகத் தெரிகின்றது. கூடாது என்னும் எதிர்மறையாற்றல்வினை விலக்குப் பொருளையும் உணர்த்தும். நீ போகக்கூடாது = நீ போகாதே, நீ போகவேண்டாம்.

ஒல்லும் = கூடும். ஒல்லாது = கூடாது.

ஒல்லாது—(தெ.) ஒத்து (வேண்டாம்)—வத்து—(இ.) மத்.

வேதகாலச் சூரசேனியிலும் மத்து என்றே இருந்திருக்கலாம்.

மத்து—மத்—மா (வ.) Gk. mē.

மா பை : (bh) = அஞ்சாதே.

வடமொழியில், த்வித்வலிட் என்னும் செய்மை யிறந்தகால வினையும் ஸன் என்னும் ஆர்வ வினையும் முதனிலை யிரட்டித்தல், சில தமிழ் இறந்தகால வினைகள் முதனிலையிறுதி வலி இரட்டிப்பதை யொத்தது. கிரேக்க மொழியிலும் இத்தகைய இரட்டிப்புண்டு.

வடமொழி திரிமொழியாதலின், அதன் வினைகட்கு வேர்ச் சொற்கள் அம்மொழியிலில்லை. அவை பெரும்பாலும் இயன்மொழி யாகிய தமிழில்தான் உள்ளன. ஆயினும், வடமொழி தேவமொழி யென்னும் ஏமாற்றிற்கேற்ப, வடமொழி வினைச் சொற்களின் முதனிலைகளையும் (Themes) அடிகளையும் (Stems) வேர்களாகக் (Roots) காட்டியுள்ளனர். மேனாட்டாரும், தமிழை வரலாற்று முறைப்படி ஆராயாமையால், வடமொழியை இயன்மொழியென்றும் ஆரியத் தாய்மொழியென்றும் மயங்கி, வடவர் காட்டியுள்ள போலி வேர்ச்சொற்களை உண்மையான வேர்ச்சொற்களென்றே நம்பியிருக்கின்றனர்.

வடவர் காட்டியுள்ள தாதுக்கள் (வேர்ச்சொற்கள்) ஏறத்தாழ 1750. அவை எங்ஙனம் தவறானவை என்பது, இங்கு ஐந்தாதுக் களால் எடுத்துக் காட்டப்பெறும்.

கீர்த்

சீர் = சிறப்பு, புகழ். சீர்—சீர்த்தி = பெரும்புகழ்.

"*சீர்த்தி மிகுபுகழ்.*" (தொல். 796).

சீர்த்தி—கீர்த்தி. ச—க. ஒ. நோ: செய்—(கெய்)—கை, செம்பு—கெம்பு, சேரலம்—கேரளம், சேது—கேது.

சீர் என்னும் முதனிலையும், 'தி' என்னும் ஈறும், 'த்' ஆகிய புணர்ச்சித் தோன்றலும், கொண்ட சீர்த்தி என்னும் தொழிற் பெயரின் (அல்லது தொழிலாகு பெயரின்) முற்பகுதித் திரிபாகிய கீர்த் என்பதை முதனிலையாகக் கொள்வது எத்துணை இயற்கைக்கு மாறானது! வடமொழி நூன்மொழியேயாதலால், அதில் எச்சொல் வடிவையும் எப்பொருளிலும் ஆளலாம்.

கீர்த்தி என்பதனொடு நேர்த்தி என்பதனை ஒப்பு நோக்குக.

இனி, இதற்கு வேராக, க்ரு[2] என்பதைப் பாணினியார் (3 : 3 : 97) குறித்துள்ளார். அது கரை என்னும் தென்சொல்லின் திரிபே.

கரைதல் = 1. அழைத்தல். "கலங்கரை விளக்கம்" (சிலப்.).

2. சொல்லுதல், கற்பித்தல்.

"அறங்கரை நாவின் நான்மறை முற்றிய" (தொல். சி. பா.).

3. எடுத்துச் சொல்லுதல், புகழ்தல்.

அழைத்தலைக் குறிக்கும் அகவல் என்னும் சொற்போல், கரைதல் என்னும் சொல்லும் பாடுதலை உணர்த்தும். ஆதலால், வடமொழியிற் பாணனை அல்லது பாவலனைக் காரு (இ. வே.) என்பர்.

ஜ்ரு

கிழம்—Gk. கெரோன் (gerōn)—வ. ஜரா.

ஜ்ரு என்பது செயற்கைவேர். அதற்குக் கிழமாகு என்னும் பொருள் பொருந்தாது.

மந்த்ர்

முன்னுதல் = கருதுதல், எண்ணுதல், சூழ்தல். முன்—மன் + திரம் (திறம்) = மந்திரம். ஒ. நோ: மன் + து = மன்று—மந்து—மந்தை.

மந்திரம்—மந்த்ர (வ.). மந்த்ர என்னும் வடிவினின்று மந்த்ர் என்றொரு செயற்கைச் சொல்லையமைத்து, அதை முதனிலையாகவோ வேராகவோ காட்டுவது. எத்துணை நகைப்பிற்கிடமானது! அது, உசாவு அல்லது சூழ் என்னும் பொருளை எங்ஙன் ஏற்கும்?

வருத்

வள்—வட்டு (வள் + து) — வட்டம் — வ்ருத்த(வ.). L verto (to turn). ஒ. நோ: நட்டம் (நடம்)—ந்ருத்த(வ).

வ்ருத்த என்னும் திரிசொல்லினின்று, வ்ருத் என்னும் பகுதியை வெட்டி, அதை வேராகக் காட்டுவது எத்துணைச் செயற்கை முறை! இங்ஙனம் எத்தனையோ தமிழ்த்தொழிற் பெயர்கள் ஆரிய மொழிகளில் முதனிலையாகவும் வேராகவும் காட்டவும் ஆளவும் பெறுகின்றன என அறிக.

வேப்

விது—விதிர்—விதிர்ப்பு = நடுக்கம்.

"அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கஞ் செய்யும்." *(தொல். 799).* *விதிர்ப்பு—வேப் (வ.) = நடுங்கு. வேப்—வேபன = அதிர்ச்சி.*

(3) **இடைச்சொல்** (அவ்யய)

உபஸர்க்கம் (முன்னொட்டு)

அதி (ati, adhi)

இது முன்னரே விளக்கப் பெற்றது.

அந்தர் (antar), *அந்தர* (antara).

இல் **(உள்)**—L in—inter—வ. அந்தர்—அந்தர, அந்த:

அநு

அல்லுதல் = பொருந்துதல். அல்—அன்—அநு = உடன், பின்.

அப (apa)

அப்பால்—Gk apo, வ. அப.

உத்

உ = மேல். உ—உகள், உச்சி, உத்தரம், உம்பர், உயர், ஊர், உவண், உறை (உயரம்), உன்னு.

உ—உத் (வ.) = மேல்.

உப (upa)

உத்தல் = பொருந்துதல். உத்தி = பொருத்தம், பொருந்து முறை, விளையாடுவார் இணை.

உ—ஒ. ஒத்தல் = பொருந்துதல். உ—உவ்—உவ. உவத்தல் = ஒத்தல், உளம் பொருந்துதல், விரும்புதல், மகிழ்தல்.

உவ—உவமை = ஒப்பு. உ—உவ்வு—ஒவ்வு.

உவ்வு—உவ்வ—உவ=ஒக்க, பொருந்த, உடன். உவ—உப (வ.).

ந

அல்—அன்—அந்—ந (முறை மாற்று).

நி[1] இல் (உள்)—இன்—இந்—நி=உள்.

நி[2] இல்—இன்—இந்—நி=இன்மையாக, மாறுக.

ப்ரதி படி—ப்ரதி

பர பிற—பர

பரா புறம்—புற—பர(வ.)—பரா=அப்பால், பின், மாறுக.

பரி புரிதல்=வளைதல். புரி—பரி=வட்டமாக, சுற்றி.

வி விள்—வி=வேறுக.

ஸம் கும்முதல்=கூடுதல். கும்ம—L cum—Gk sym—வ. ஸம்.

குறிப்புச் சொற்களும் அசைகளும்

வியப்புக் குறிப்பு: ஆ, ஏ, ஐ, ஓ. இவை இருமொழிப் பொது.

ஆ—ஹா (வ.), ஆகா—ஹாஹா (வ.).

துயரக் குறிப்பு: ஆவா—ஹாஹா

அத்தன்—அத்தோ—அந்தோ—ஹந்த(வ).

அக்கை—அக்கோ—அகோ—அஹோ(வ.).

விளியசைகள்

ஏ—ஹே. ஓ—ஹோ

அடே—அரே(வ.)—ரே. அடேடே—அரேரே(வ.)—ரேரே.

பாலீறுகள்

தமிழ் ஈறு	வடமொழியீறு	எடுத்துக்காட்டு
(பெண்பால்)		
அனி	ஆநி	உபாத்யாயாநீ
இ	ஈ	சுந்தரீ
ஐ	ஆ	ஆர்யா
கை	கா	கன்யகா
அர் (உயர்வுப்பன்மை)	ரு	மாத்ரு
(ஆண்பால்)		
அன்	அந்	ராஜந்

அன்	அ	பாண்ட்ய (பாண்டியன்)
அர் (உயர்வுப் பன்மை)	ரு	ப்ராத்ரு
மன்	மந்	வர்மந்
மான்	மாந்	அர்யமாந்

இணைப்பிடைச் சொல்

"உம்உந் தாகும் இடனுமா ருண்டே." (தொல் 777)

என்பதால், பெயரெச்ச வினைமுற்றீறன்றி எண்ணிடைச் சொல்லான உம்மும் உந்தாகத் திரிவது பெற்றும்.

உந்து—வ. உத்த. OE, E and.

சுட்டும் வினவும்

சுட்டும் வினவும், ஆரியமும் சேமியமுமான பிறமொழிகளிலெல்லாம் சொற்களாகவேயிருக்கின்றன. தமிழிலோ அவை சொற்களாக மட்டுமன்றிச் சொற்கட்கு மூலமான எழுத்துக்களாகவும் இருக்கின்றன. அவ்வெழுத்துக்கள் உண்மையில் ஓரெழுத்துச் சொற்களே.

"நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி."
"குற்றெழுத் தைந்தும் மொழிநிறை பிலவே."
"ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே."
"அஇ உஅம் மூன்றுஞ் சுட்டு."
"ஆஏ ஓஅம் மூன்றும் வினஅ."
"எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி."

என்று தொல்காப்பியம் (43, 44, 301, 31, 32, 552) கூறுவதாலும், சுட்டும் வினவும் இன்றும் தனிநெடிலாகத் திரவிடத்திலும் வடதிரவிடக் கான்முளையாகிய இந்தியிலும் வழங்குவதாலும், குறில் நெடில் பலுக்க வெளிதா யிருப்பதனாலும், ஆண்டு ஈண்டு யாண்டு (ஏண்டு) என்னுஞ் சொற்கட்கு முதல் குறுகிய வடிவின்மையாலும், சுட்டு வினவெழுத்துக்கள் முதற்காலத்தில் நீண்டே யிருந்து பின்னர்க் குறுகியமை அறியப்படும்.

சுட்டடிகளும் வினவடிகளும் தனியெழுத்துக்களா யிருப்பதனால், அவற்றை இடைச் சொல்லென்று கொண்டனர் முன்னோர். அவை தனியெழுத்துக்களாயினும், பொருளுணர்த்துவதாற் சொல்

லாயும் பலவெழுத்துச் சொற்போன்றே பொருள் நிரம்பியும், இருப்பதை அறிக

ஆஹூர், அவ்ஹூர், அந்தஹூர் என்னும் மூன்றும் ஒன்றே. அ= அந்த (that) That என்னும் ஆங்கிலச் சொற்போன்றே, அ, அந்த என்பனவும் சுட்டுப் பெயரெச்சம் (Demonstrative Adjective) என அறிக. பெயரைத் தழுவுவதெல்லாம் பெயரெச்சமே. அது தெரிநிலை வினையாகவு மிருக்கலாம்; குறிப்பு வினையாகவு மிருக்கலாம்; பிறவாறும் இருக்கலாம்.

இயல்பான சுட்டுக்கள் சேய்மை, அண்மை, முன்மை என மூன்றே. ஆகவே, அவற்றைக் குறிக்கும் ஒலிகள் அல்லது எழுத்துக்களும் ஆ(அ), ஈ (இ), ஊ(உ) என்னும் மூன்றே.

இவை குமரிக்கண்டத்தில் தமிழ்த் தோற்றக் காலத்தில் கைச் சுட்டுக்களுக்குப் பகரமாக (பதிலாக) வாய்ச்சுட்டுக்களாகத் தோன்றிய ஒலிகள். இம்மூவொலிகளன்றி வேறெவ்வொலிகளும் அம் மூவிடத்தையும் சுட்டாமையை ஒலித்துக் காண்க.

முச்சுட்டும் முதன்முதல் தமிழில் தோன்றியதனாலேயே, அவை தமிழிலும் அதன் வழிப்பட்ட திரவிடத்திலும் இன்றும் தனியெழுத்து வடிவிலிருப்பதுடன், மூவிடத்தையும் ஒழுங்காகச் சுட்டவும் செய்கின்றன. இஃதொன்றே தமிழ் ஆரியத்திற்கு மூலம் என்னும் உண்மையைக் காட்டவும் நாட்டவும் போதிய சான்றாம்.

வடமொழி திரிமொழி யாதலின், அதிற்சுட்டெழுத்தில்லா திருப்பதொடு, சுட்டுச் சொற்கள் இடமாறியுஞ் சுட்டுகின்றன.

எ-டு: அத்ர = இங்கே. அத்ய = இன்றைக்கு. அதுநா = இப்போது. சில அகரச் சுட்டுச் சொற்கள் சேய்மை யண்மையாகிய ஈரிடத்தையுஞ் சுட்டுகின்றன.

எ-டு: அதஸ் = அது, இது.

சில இகரச் சுட்டுக்கள் ஏகாரமாகத் திரிந்துள்ளன.

எ-டு: ஏதத் = இது, ஏவம் = இப்படி.

சில சுட்டுக்களின் சார்பு மெய்யான தகரம் ஸகரமாகத் திரிந்துள்ளது.

எ-டு. தத் (d) = அவன், அவள், அது.

இதன் வேற்றுமைப்பாடு (Declension) வருமாறு:—

	ஒருமை	இருமை	பன்மை	
ஆ பா.	ஸ:	தௌ	தே	முதல் வேற்றுமை
பெ.பா.	ஸா	தே	தா:	,,
அ.பா.	தத்	தே	தானி	,,

ஒ. நோ: OE sīo, sēo, sie, E she.

வினவெழுத்தும் வடமொழியிலில்லை. அதோடு, ஏகார (எகர) வடியின் திரிபான யகரவடியும் ககரவடியுமே வடமொழியி லுள்ளன.

ஏ—யா. ஏது—யாது. ஏவன்—யாவன்.
இவை தமிழ்.

ஏ—எ—எவ்—வெ—கெ. தெலுங்கில் எவற்றினை என்பது வேட்டினி என்று திரிதல் காண்க.

தமிழில் உறவியல் (Relative) வினவும் நேர்வினவும் ஒரே வகையடிகொண்டிருக்கும். வடமொழியில் உறவியல்வின யகரவடி கொண்டும் நேர்வின ககர வடிகொண்டும் உள்ளன.

எ-டு :	உறவியல் வினச்சொல்	நேர்வினச்சொல்
	யத் (d)	கிம் = யார், எது
	யத்ர	குத்ர = எங்கு
	யத:	குத: = எங்கிருந்து
	யதா (d)	கதா (d) = எப்போது

இந்தியில் உறவியல் யகர வினவடி ஜகர வடியாகத் திரிந்துள்ளது.

3. தொடரியல்

(1) தொகைச் சொல் (ஸமாஸ)

வேதமொழியின் மூலமாகிய மேலையாரிய முறைப்படி சமற்கிருதச் சொற்றொடரமைப்பு ஒரு மருங்கு வேறுபட்டிருப்பினும், வேத மொழியின் வடதிரவிட அல்லது பிராகிருதக் கலப்பினாலும், சமற்கிருதத்தின் தமிழ்த் தொடர்பினாலும், அது ஒரு மருங்கு தமிழையும் தழுவியுள்ளது.

சமாசம் என்னும் சமற்கிருதக் கூட்டுச் சொற்கள் அல்லது தொகைச் சொற்கள் பின்வருமாறு ஐவகைப்படும்.

(1) துவந்துவம் (த்வந்த்வ) உம்மைத் தொகை
(2) தற்புருடன் (தத்புருஷ) வேற்றுமைத் தொகை
(3) கருமதாரயன் (கருமதாரய) பண்புத்தொகை (இருபெயரொட்டு)
(4) பகுவிரீகி (பகுவ்ரீஹி) அன்மொழித் தொகை
(5) அவ்வியயீபாவம் (அவ்யயீபாவ) இடைச் சொல்லியல் தொகை அல்லது வினையெச்சவியல் தொகை

ஸமாஸ என்னும் சொல்லை, ஸம் + அஸ்[2] என்று பகுப்பர். ஸம் = கூட. அஸ் = எறி. ஸமாஸ = (இருசொல்லை) உடனிட்டது.

கருமதாரயனைப் பல இலக்கண நூல்கள் தற்புருடனில் அடக்கிக் கூறும். அது பொருந்தாது. எண்ணுப் பண்புத் தொகையைத் தனியாய்ப் பிரித்துத் த்விகு என்று பெயர் கொடுப்பர்.

பொதுவாக நோக்கின், வடமொழிச் சமாசப் பகுப்பினும் தமிழ்த் தொகை தொடர்ப் பகுப்பு மிகச் சிறந்தது.

அடுக்குத் தொடர் (வீப்ஸா)

தமிழிற் போன்றே வடமொழியிலும் சொற்கள் அடுக்கிவரலாம்.

எ-டு: வ்ருக்ஷம் வ்ருக்ஷம் ஸிஞ்சதி = மரம் மரமாய்த் தண்ணீர் ஊற்றுகிறான்.

(2) சொற்றொடர் (வாக்ய)

வடமொழிச் சொற்றொடர்ச் சொல்வரிசை பெரும்பாலும் தமிழ் முறையை ஒத்ததே.

எழுவாய் முன்னும் செயப்படுபொருள் இடையும் பயனிலை பின்னும் வருவதே இயல்பான முறை.

பாலக: க்ரந்தம் படதி = பையன் பொத்தகத்தைப் படிக்கிறான்.
ஸ வா இமே பாலகா வா ஆம்ரம் க்ருஹ்ணந்து. = அவனாவது இந்தப் பையன்களாவது மாம்பழத்தை எடுத்துக் கொள்ளட்டும்

சொற்றொடரின் மூவுறுப்பும் அடைமொழியொடும் வரும். அடைமொழி பொதுவாக அடைகொளிக்கு முன் நிற்கும்.

எ-டு: ரூபவதி ஸ்த்ரீ = அழகான பெண்.

அப்யகார்யஸதம் க்ருத்வா பர்த்தவ்யா = நூறு தீவினைகளைச் செய்தும் காக்கப்படவேண்டும்.

இரு, உண்டு என்னும் இணைப்பு வினையின்றிப் பெயரும் பயனிலையாக வருவதுண்டு.

எ-டு: ஸிம்ஹ: ச்வாபதராஜ:= அரிமா விலங்கரசு.

ஏஷ மே நிச்சய: = இது என் தீர்மானம்.

இனி, சொற்றொடரின் மூவுறுப்புக்களும், ஏதேனும் ஒரு பயன் நோக்கி, பொருள் மாறு வகையில் மேற்குறித்த முறை மாறியும் வரும்.

மணீம் சோரயதி ஸ்தேந: = மணியைத் திருடுகிறான் திருடன். இனி, கூட்டுக் கிளவியப் பயில்வு, நெடுந்தொடர் யாப்பு, சார்புக் கிளவியங்கட்குப் பகரமாக எச்சவினை வரல், முற்றுவினைக்கீடாக இறந்தகால வினையெச்ச ஆட்சி, நேரல் கூற்றின்மை முதலிய கூறுகளிலும், வடமொழிச் சொற்றொடரமைப்பு தமிழைத் தழுவியதே என அறிக.

வடமொழியிலக்கணம் எழுத்து, சொல், சொற்றொடர் என்னும் மூன்றொடு முடிகிறது. செய்யுளிலக்கணம் சந்தஸ் என்றும், அணியிலக்கணம் அலங்கார சாஸ்திரம் என்றும் வேறு நூல்கள்போல் வெவ்வேறாகக் கூறப்படும்.

தமிழில் வடமொழியிலில்லாப் பொருளிலக்கண முண்மையாலும், பண்டை யிலக்கியமெல்லாம் செய்யுள் வடிவி லிருந்தமையாலும், சொல்லையடுத்த மொழியுறுப்பு பொருளென்று கொண்டு, அதனுள்ளேயே செய்யுளையும் உடம்பின் இயற்கையழகுபோற் செய்யுளிலமைந்திருக்கும் அணியையும் அடக்கிவிட்டனர், மெய்ப் பொருளியல் முற்றத் துறைபோய மேதகு பண்டைத் தமிழ் நூலோர்.

நன்னூல், சின்னூல் முதலிய தென்னூலும் எழுத்துஞ் சொல்லும் சொற்றொடருமே கூறுகின்றனவேயெனின், அவை வடநூன் முறை தழுவிய பின்னூலென்றும், தொல்காப்பியம்போல் நிறைவான பிண்ட நூலாகாது குறைவான துண்ட நூலேயென்றும், கூறிவிடுக்க.

III இலக்கிய வதிகாரம்

வடமொழி என்பது ஒருகாலும் பேசப்படாத நூன்மொழியே யாதலின், அதன் வரலாறென்பது உண்மையில் இலக்கிய வரலாறே.

1. வேதம்

வடமொழியில் முதலாவது ஏற்பட்ட நூல் வேதம். அது முதலில் ருக் என்னும் ஒரே மறையாயும், பின்னர் இருக்கு, எசுர் (யஜுர்), சாமம் (ஸாம) என்னும் மும்மறையாயுமிருந்து, இறுதியில் அதர்வ வேதத்தொடு கூடி நான்காயிற்று.

வேதம் என்பது அறிவு அல்லது அறிவுநூல் என்று பொருள் படும். விழி—L vide—ஆ. (wit)வித்=அறி. வித்—வேதம். வேதம் நீண்டகாலமாய் எழுதப்படாது செவி வழக்காகவே வழங்கி வந்த தால், (ச்ருதி) என்றும் பெயர் பெற்றது. ச்ரு=கேள். ச்ருதி= கேள்வி. செவியுறு—ச்ரு.

வேதங்கள் மூன்றுயிருந்தபோது த்ரயீ எனப்பட்டன. இருக்கு வேதமே ஏனை மூன்றிற்கும் பெரிதும் சிறிதும் மூலமாம். அது ஏறத்தாழ 10,500 (10,402—10,622) மந்திரங்களைக் கொண்டது. அவற்றுள் ஏறத்தாழப் பாதியைக் கொண்டது எசுர்வேதம். சாம வேத மந்திரங்கள் 1549 அவற்றுள் 78 நீங்கலாக ஏனையவெல் லாம் இருக் அதர்வ வேதம் ஏறத்தாழ 6000 மந்திரங்களை யுடையது. அவற்றுள் 1/3 பகுதிக்குமேல் இருக்காகும்.

இருக்குவேதம் பல்வேறு சிறு தெய்வ வழுத்துத்திரட்டு; எசுர் வேதம் பல்வேறு வேள்வி செய்யும் முறைகளைக் கூறும் பகுதித் திரட்டு; சாமவேதம் இசை வகுத்த இருக்கு மந்திரத்திரட்டு; அதர்வ வேதம் தெய்வவழுத்தும் வாழ்விப்பும் வசியமும் சாவிப்பும் கருமாற்றும் பற்றிய மந்திரத்திரட்டு. இது பொதுமக்களின் குருட்டு நம்பிக்கையைத் தழுவியது.

இருக்கும் சாமமும் செய்யுள் வடிவின; ஏனையிரண்டும் செய்யு ளும் உரைநடையும் கலந்தன.

செய்யுட்பகுதி வேதமொழியும், உரைநடைப் பகுதி சமற்கிருதத் தொடக்கமும், ஆகும். வேதமொழியும் அக்காலத்து வட்டார மொழிகளாகிய பிராகிருதங்களும் கலந்ததே சமற்கிருதம். அது வான்மீகி யிராமாயணத்தொடு முழுவளர்ச்சி யடைந்தது.

மந்திரம் என்னும் சொல்லும் வேதப் பெரும்பிரிவுப் பெயர்களான மண்டலம், காண்டம் என்பனவும், தென்சொல்லேயென்பது முன்னரே விளக்கப்பெற்றது.

வேதக்காலம் தோரா. கி. மு. 1500—1000.

வேதக்காலத்திறுதியில் வேத ஆரியர் வடஇந்தியா முழுதும் பரவிப் பல்வேறிடங்களிலிருந்ததால்; வேதங்களைத் தொகுத்தபோது இடத்திற்கேற்ப, வேறுபட்டிருந்தன. அவ்வேறுபாடுகள் சாகைகள் எனப்பட்டன. சாகை கிளை. வேத ஆரியரின் முன்னோர் மொழி இருக்கு வேதத்திற்கு முன்பே வழக்கற்றுப்போனமையும், அவ்வேறுபாட்டிற்குக் காரணமாம். ஆரியமொழி வழக்கறவிற்குப் பேசினோர் தொகைச் சிறுமையும் பேசிய மொழியின் செயற்கை வளர்ச்சியுமே காரணம். ஒவ்வொரு வேதத் தொகுப்பிற்கும் ஸம்ஹிதை என்று பெயர்.

வேதக்காலத்திலேயே இந்திய ஆரியர்க்குத் தென்னாட்டொடு தொடர்புண்டாய்விட்டது.

இதற்குச் சான்றுகள் :—

(1) இருக்கு வேதத்தில் மேலையாரியத்தி லில்லாத தமிழ்ச் சொற்களும் சாமசாகையில் எகரஒகரமு முண்மை.

(3) மாவலி என்னும் சேரவேந்தன் குறள் தோற்றரவு (வாமனாவதார)க் கதையொடு தொடர்புபடுத்தப்பட்டிருத்தல்.

(2) சத்திய விரதன் என்னும் பெயரால், ஒரு தமிழவரசன் (திரவிடபதி) மீனத் தோற்றரவு (மச்சாவதார)க் கதையொடு தொடர்புபடுத்தப் பெற்றிருத்தல்.

(4) பரசிராமன் சேரநாடு வந்து தவஞ் செய்ததாகச் சொல்லப்படுதல்.

(5) அகத்தியரும் நாரதரும் தென்னாடு வந்து தமிழ் கற்றுத் தமிழ் நூலியற்றியதாகக் கதையுண்மை.

(6) தமிழ்ப் பொருளிலக்கணம் வகுத்த, அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நாற்பாற் கிளவித்தலைவர் வகுப்பை மூலமாகக்கொண்ட, பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் மக்கட்பாகுபாடு வேதக் காலத்திலேயே செய்யப்பட்டமை.

(7) குமரிக் கண்டப் பாண்டியனொருவன் வாரியில் வடிவே லெறிந்தது (கடல் சுவற வேல் விட்டது) போன்ற பண்டைத் தென்னாட்டுச் செய்தி, திருவிளையாடற் புராணத்திற்கு மூலமான வடமொழிப் புராணத்திற் சொல்லப் பட்டிருத்தல்.

(8) பிராதிசாக்கியங்கள் கூறும் எழுத்தொலியிலக்கணம் தமிழிலக்கணத்தை ஒத்திருத்தல்.

(9) ஆரியர் பல்வேறு சிறு தெய்வங்களை வணங்கிக்கொண்டு பிள்ளைமைநிலையி லிருந்த வேதக் காலத்தில், திடுமென உயர்ந்த கடவுள் வழிபாட்டு மெய்ப்பொருள் நூல்கள் (உபநிஷத்துக்கள்) வடமொழியில் எழுந்தமை.

(10) பிற்காலத் தமிழருக்குத் தெரியாத தென்கடல் மகேந்திரத் தீவும் மலையும் வடநூல்களிற் சொல்லப்பட்டிருத்தல்.

பிராமணம்

வேதத்தின்பின், வேதப் பொருளை விளக்கும் பிராமணம் என்னும் உரைநடை நூல்கள் எழுந்தன. பிராமணனுக்குரியது பிராமணம். பிரமனை யறிந்தவன் பிராமணன். பிரமன் (ப்ரஹ்மன்) என்னும் சொல் பரமன் என்னும் தென்சொல்லின் திரிபு. மா. வி. அ. இதைப் ப்ருஹ் (b) என்னும் மூலத்தினின்று திரிக்கும். ப்ருஹ் என்பது பெருகு என்னும் தென்சொற் றிரிபென்பது முன்னரே விளக்கப்பெற்றது.

ஆரணியகமும் உபநிடதமும்

பிராமணத்தின்பின் ஆரணியகம் (ஆரண்யக) என்னும் உபநிடதத் தோற்றுவாய் நூல்கள் தோன்றின. ஆரணியத்திலிருந்து ஆராய்ந்தது ஆரணியகம். ஆரணியம் காடு. ஆரணியம் என்னும் சொல் அரணம் என்னும் தென்சொற் றிரிபு.

அக்காலத்தில் நாடு சிறிதாகவும் காடு பெரிதாகவும் இருந்ததினால், ஊரையடுத்தே காடு அல்லது சோலையிருந்தது. தமிழ திரவிட முனிவர் காட்டிலுறைவதைக் கண்ட வேதப் பிராமணர், தாமும் அவர்போல் நடித்தே, ஊரையடுத்த அல்லது தடிவழி (Trunk Road) மேலுள்ள சோலைகளிலும் மக்கள் வழங்கும் மலையடிவாரங்களிலும், குடும்பத்துடன் வதிந்தனர்.

"சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி யந்தண ரருங்கட னிறுக்கு

முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே."

என்னும் புறப்பாட்டுப் பகுதியை (2) நோக்குக.

தமிழ முனிவர் முற்றத் துறந்தவர்; ஆணவம் அற்றவர்;

"பேய்போற் றிரிந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சையெல்லாம்
நாய்போ லருந்தி நரிபோ லுழன்றுநன் மங்கையரைத்
தாய்போற் கருதித் தமர்போ லெவருக்குந் தாழ்மைசொலிச்
சேய்போ லிருப்பர்கண் டீருண்மை ஞானந் தெரிந்தவரே."

"காடே திரிந்தென்ன காற்றே புசித்தென்ன கந்தைசுற்றி
ஓடே யெடுத்தென்ன உள்ளன் பிலாதவ ரோங்குவிண்ணோர்
நாடே யிடைமரு தீசர்க்கு மெய்யன்பர் நாரியர்பால்
வீடே யிருப்பினு மெய்ஞ்ஞான வீட்டின்ப மேவுவரே."

என்னும் பட்டினத்தடிகள் பாட்டிற் கிலக்கானவர்.

வேதப் பிராமண முனிவரோ, தம்மைப் பிறப்பிலுயர்ந்தவரென்றும் வீடுபேறும் அதற்கு வாயிலான துறவும் பிராமணர்க்கே உரியனவென்றும் கருதி, ஆணவம் என்னும் குன்றேறி நின்று, காம விருப்பம் நீங்கும்வரை மனைவியொடு கூடி வாழ்ந்தவர். ஆதலால், அவர் உண்மையான துறவியருமல்லர்; துறவு முதிர்ச்சியால் மெய்ப்பொருள் கண்டவருமல்லர். ஆரணியகத்திற்குப்பின் எழுந்த உபநிடதம் *(உபநிஷத்)* என்னும் மெய்ப்பொருள் நூல்களெல்லாம், ஓத்துக்கள் என்னும் தமிழ் நூல்களின் மொழிபெயர்ப்பே.

"உயர்ந்தோர்க் குரிய வோத்தி னான."

என்பது தொல்காப்பியம் (977).

உபநிஷத் என்னும் வடசொல் உப+நி+ஸத் என்று பிரியும். உப=உடன், அருகு. நி=கீழ். ஸத்=குந்து. ஆகவே, உபநிஷத் என்னும் சொற்கு அருகடியமர்தல் என்பது திரண்ட பொருள்; ஆசிரியன் கீழிருந்து மெய்ப்பொருள் கற்றல் என்பது விரிந்த பொருள். ஆயின், பரமவோதியால் அறியாமையை அடக்குதல் என்பது ஆரியர் கூறும் விளக்கப் பொருள் ("Setting at rest ignorance by revealing the knowledge of the Supreme Spirit").

வேத முனிவர் காட்டில் வதிந்ததனால், கடவுளைப்பற்றிய வுண்மைகளைத் தாமே கண்டறிந்ததுபோற் காட்டிக் கொண்டனர். அவர் முனிந்ததெல்லாம் தமிழையும் தமிழனையும் தமிழப் பண்பாட்டையுமே. முனிதல் வெறுத்தல். முனிந்தவன் முனிவன்.

உபநிடதங்கள் 108 என்பர்.

2. வேதாங்கம்

வேதத்திற்கு உறுப்பாகச் சொல்லப்படும் சிட்சை, நிருத்தம், சந்தசு, சோதிடம், கற்பம், வியாகரணம் என்னும் அறுவகை நூல்கள், வேதத்திற்குப் பின் முறையே, வெவ்வேறு காலத் தெழுந்தன.

சிட்சை (சிக்ஷா) என்பது வேத ஒலியிலக்கணம். அது சாகை தொறும் தனிப்பட இருந்ததினால் பிராதிசாக்கியம் (ப்ராதிசாக்ய) எனப்பட்டது. அதற்கு மூலம் தமிழிலக்கணமே.

நிருத்தம் (நிருக்த) என்பது வேதச் சொற்பொருள் கூறுவது.

சந்தசு (சந்தஸ்) என்பது வேத மந்திரச் செய்யுளிலக்கணங் கூறுவது. அச்செய்யுட்கள் ஓரடிமுதல் எட்டடிவரைப் பட்டு, காயத்ரீ, உஷ்ணிக், அநுஷ்டுப், ப்ருகதீ, பங்க்தீ, த்ரிஷ்டுப், ஜகதீ முதலிய பலபெயர் கொண்டவை.

சோதிடம் (ஜ்யௌதிஷ) என்பது வேள்வியியற்றற்குரிய நாள் கோள்நிலை கூறும் கணிய நூல். அதற்கு மூலம் தமிழ்க் கணியமே.

கற்பம் (கல்ப) என்பது, இம்மை மறுமைக்குரிய இருவகைச் சடங்குகளையும் ஒழுக்கத்தையும் வகுத்துக் கூறுவது. அது, வேத வேள்விபற்றிய சிரௌதசூத்திரம் (ச்ரௌத ஸூத்ர), இல்ல வேள்வி பற்றிய கிருகிய சூத்திரம் (க்ருஹ்ய ஸூத்ர), நால்வகை வரண ஒழுக்க வேறுபாடு பற்றிய தரும சூத்திரம் (தர்ம ஸூத்ர), என மூவகைப்படும். இவற்றுள், தமிழரையும் திரவிடரையும் அடிமைப் படுத்திப் பிராமணரை நிலத்தேவராக உயர்த்திய வகை, வரணாசிரம தருமங் கூறும் தரும சாத்திரமே.

வியாகரணம் என்பது, வேதச் சொல்லையும் பொதுச் சொல்லை யும் ஆராய்ந்து, நன்னூல்போல் எழுத்தும் சொல்லும் சொற்றொடரும் பற்றிக் கூறும் இலக்கண நூல்.

வேதக் காலத்திலேயே முதன்முதல் தோன்றிய சமற்கிருத இலக்கணம் ஐந்திரம். அது தமிழகத்திலேயே தோன்றியதாகத் தெரிகின்றது. அதன் காலம் தோரா. கி. மு. 1200. சமற்கிருத இலக்கணங்களுள் தலைசிறந்தது பாணினியாரின் அஷ்டாத்யாயீ. அதற்குமுன் 64 இலக்கணங்கள் வடமொழியில் தோன்றியதாக மாக்கசு முல்லர் கூறுவர். வண்ணமாலை, புணரியல், வேற்றுமை யமைப்பு ஆகிய மூன்றும், வடமொழி யிலக்கணங்களின் தமிழ் மூலத் தைக் காட்டும்.

3. வேதசாத்திரம்

வேதத் தொடர்புள்ளனவாகச் சொல்லப்படும் அறுவகை நூல்கள், மீமாம்சை, வேதாந்தம், வைசேடிகம், நியாயம், சாங்கியம், யோகம் என்பன,

மீமாம்சை வேதத்தின் முற்பகுதியை ஆராய்வது; அதனால் பூர்வ மீமாம்சை எனப்படுவது. இதை இயற்றியவர் ஜைமினியார்.

வேதாந்தம் வேதத்தின் பிற்பகுதியை ஆராய்வது; அதனால் உத்தரமீமாம்சை யெனப்படுவது. இதை இயற்றியவர் பாதராயண வியாசர்.

வைசேடிகம் பொருள்களை எழுவகையாகப் பகுக்கும் தருக்க நூல். இதை இயற்றியவர் கணாதர். இதற்கு மூலம் ஏரணம் எனப் படும் தமிழ்த் தருக்க நூல்.

நியாயம் பொருள்களைப் பதினறுவகையாகப் பகுக்கும் தருக்க நூல். இதை இயற்றியவர் கௌதமர்.

சாங்கியம் 25 மெய்ப்பொருள்களைக் கூறும் பட்டாங்கு நூல். இதை இயற்றியவர் கபிலர். இதற்கு மூலம் தமிழே.

யோகம் துறவுக்குரிய எண்வகை ஓக நிலைகளைக் கூறும் நூல். இதை இயற்றியவர் பதஞ்சலியார். இவர் தென்னுட்டார். ஆதலால், இவர் நூலும் தமிழ் வழியதே.

4. புராணம்

புராணம் என்பது பழைமை. ஆதலால் பழஞ்செய்திகளைப் பற்றிக் கூறும் நூல் பொதுவாகப் புராணம் எனப்படும். மாபுராணம், பூதபுராணம் என்பன தென்னுடு வந்து தங்கிய ஆரியர் இயற்றிய பழந்தமிழ் இலக்கண நூல்கள்.

பிற்காலத்தில், (1) உலகப் படைப்பு, (2) உலக அழிவும் மறு தோற்றமும், (3) தெய்வங்களின் வழிமரபு, (4) மநுக்கள் ஆட்சி, (5) கதிரவ திங்கட்குல அரசர் வரலாறு ஆகிய ஐந்தையுங் கூறுவது புராணம் என இலக்கணம் வகுக்கப்பட்டது.

தரும சாஸ்திரங்கள் தமிழரை அடிமைப்படுத்தினவெனின், புராணங்கள் அவரை மடமைப்படுத்தின.

வடமொழிப் புராணங்கள் முன்னெழுந்தவை 18; பின்னெழுந் தவை 18. பின்னெழுந்தவை உபபுராணம் எனப்படும்.

பதினெண் புராணம் :

பிரமம், பதுமம், விஷ்ணு சிவம், பாகவதம், நாரதீயம், மார்க் கண்டேயம், ஆக்நேயம், பவிஷ்யம், பிரமவைவர்த்தம், லிங்கம், வராகம், ஸ்காந்தம், வாமனம், கூர்மம், மச்சம், கருடம், பிரமாண்டம்.

உபபுராணம் :

சனற்குமாரம், நரசிங்கம், நந்தி, துருவாசம், சிவதருமம், நாரதீயம், கபிலம், மானவம், ஔசனசம், வசிட்டலிங்கம், வருணம், காளிகம், சாம்பேசம், அங்கிரம், சௌரம், பராசரம், மாரீசம், பார்க்கவம்.

புராணங்களின் காலம் கி. மு. 11-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 7-ஆம் நூற்றாண்டுவரைப் பட்டதாகும்.

5. இதிகாசம் (இதி - ஹ - ஆஸ=இப்படி உண்மையில் இருந்தது)

இராமாயணம், மகாபாரதம் என இதிகாசம் இரண்டு.

மகாபாரதக் காலம் கி. மு. தோரா. 1000.

மகாபாரதத்தொடு தொடர்புடையது பகவத்கீதை. நால்வகை வரணத்தையும் அவற்றின் ஏற்றத் தாழ்வுடன் இறைவனே படைத்த தாக, கண்ணன் கூற்றில் வைத்து வலியுறுத்தப் பகவத்கீதை பயன் படுத்தப்பட்டுள்ளது. வியக்கத்தக்க அரசர் வரலாறு இதிகாசம்.

6. ஆகமம்

வேதப்பிராமணர் தென்னாட்டிற்கு வந்தவுடன், மதக்கொண் முடிபு, கோயிலமைப்பு, கோயில் வழிபாடு, மந்திர மொழிகள் முதலியனபற்றிய நூல்களை அமைத்துக்கொண்டனர். அவை சிவ நெறி பற்றியவாயின் ஆகமம் என்றும், திருமால்நெறி பற்றியவாயின் ஸம்ஹிதை யென்றும், சாக்தம்பற்றியவாயின் தந்த்ரம் என்றும், பெயர் பெறும். ஆகம=வந்தது, தோன்றியது, வழிவந்த நூல்.

7. பல்வகை நூல்கள்

பாணினீயம் (அஷ்டாத்யாயீ) இயற்றப் பெற்றது. கி.மு. 5-ஆம் நூற்றாண்டு.

அர்த்த சாஸ்திரம் சாணக்கியரால் இயற்றப் பெற்றது. கி மு. 3-ஆம் நூற்றாண்டு.

பிற்காலத் தர்ம சாஸ்திரங்கள்

மநுதர்ம சாஸ்திரம் (கி.பி. 200); யாஞ்யவல்கிய ஸ்மிருதி (கி.பி. 400), நாரத ஸ்மிருதி (கி.பி. 500).

காவியம்

வடமொழி முதற்காவியம் வான்மீகி யிராமாயணம். அது மகா பாரதத்திற்கு முந்தியது.

கவியினாற் செய்யப் பெற்றது காவியம் (காவ்ய).

ஆயினும் வடமொழியாளர் பத்யம் (செய்யுள்), கத்யம் (உரை நடை), சம்பு (செய்யுளும் உரைநடையுங் கலந்த கலவை) என மூவகையாகக் காவிய நூல்களை வகுத்திருக்கின்றனர்.

இனி, படிக்கப்பட்டுக் காதால் மட்டும் கேட்கப் பெறுவது சிரவியம் (ச்ரவ்ய) என்றும், படிக்கப்படுவதுடன் நடிக்கவும்பட்டுக் கண்ணாலுங் காணப்பெறுவது திருச்சியம் (த்ருச்ய) என்றும், வேறும் இருவகையாகக் காவியங்களை வகுத்துள்ளனர். திருச்சியம் என்பது நாடகக் காவியம்.

காளிதாஸன்முதல் நாகராஜ கவிவரை 54 காவிய வாசிரியர் பெயர்களும், அவர்களியற்றிய நூற்றுக்கணக்கான பத்திய காவியங்களும், P S. சுப்பிரமணிய சாத்திரியார் இயற்றிய 'வடமொழி நூல் வரலாறு' என்னும் நூலிற் குறிக்கப் பெற்றுள.

பத்திய காவியம் என்னும் வனப்பியற்றிய பாவலருள் தலைசிறந்தவர் காளிதாசர். அவரியற்றிய குமாரஸம்பவம், மேக ஸந்தேஸம், ரகுவம்சம், ருதுஸம்ஹாரம் என்னும் கேள்வி வனப்புக்களும், மாளவிகாக்னிமித்ரம், விக்ரமோர்வசீயம், சாகுந்தலம் என்னும் காட்சி வனப்புக்களும், உலகப் புகழ்பெற்றவை. காளிதாசன் காலம் கி.பி 2-ஆம் நூற்றுண்டா யிருக்கலாம்.

விருத்த விலக்கணம்

விருத்த விலக்கணங் கூறும் நூல்கள், காளிதாஸரின் ச்ருத போதம், கேதாரபட்டரின் விருத்தரத்நாகரம், ஸோமேந்திரரின் ஸுவிருத்த திலகம் முதலியன. வடமொழி விருத்தம் வேறு; தமிழ் மண்டிலச் செய்யுள் வேறு. பின்னதை விருத்தம் என்பது வழுவாம்.

நாடகம்

காளிதாஸன், அச்வகோஷன், ஸ்ரீஹர்ஷன், பவபூதி முதலியோர் இயற்றிய வடமொழி நாடக நூல்களும் நூற்றுக்கணக்காகவுள. அவை ஆங்கில நாடக நூல்கள் போன்றன.

பிற்காலச் சோதிடம்

ஸூர்ய ஸித்தாந்தம் (கி.பி. 300), ஆர்யபட்டரின் ஆர்யபட்டீயம் (கி.பி. 476), வராஹ மிஹிரரின் ப்ருஹத் ஸம்ஹிதை, பஞ்ச

ஸித்தாந்திகை (கி. பி. 505—578) ப்ரும்மகுப்தரின் ப்ராம்மஸ்புட ஸித்தாந்தம் (கி.பி. 593), பாஸ்கராச்சாரியாரின் ஸித்தாந்த ஸிரோமணி (கி.பி. 1114).

அலங்காரம்

வடமொழியில் முதன்முதற் சிறப்பாகக் காவ்யா தர்சம் என்னும் அணியிலக்கணம் தொகுத்தவர் தண்டி. இவர் தென்னாட்டார்; காஞ்சியில் வாழ்ந்தவராகச் சொல்லப்படுகின்றார். இவர் காலம் கி. பி. 650—700. தமிழ்த் தண்டியலங்காரம் இயற்றியவரும் இவரேயாயின்,

> "ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
> ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
> மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
> தன்னே ரிலாத தமிழ்"

என்னும் எடுத்துக் காட்டுச் செய்யுளால், தமிழின் தொன்மை முன்மை தாய்மை தலைமையையும் வடமொழி தமிழுக்குப்பட்டுள்ள கடப்பாட்டின் அளவின்மையையும், தம் உள்ளான தமிழ்ப் பற்றினால் உலகிற்குணர்த்தியுள்ளார் என்னலாம்.

நாட்யம் (நடம்)

தமிழில் நடமும் நாடகத்துள் அடங்கும். வடமொழியில் நாடகம் வேறு; நடம் வேறு.

தோரா. கி. மு. 10,000 ஆண்டுகட்கு முன் தோன்றிய தலைக் கழக இலக்கணமே முத்தமிழாயிருந்தது.

பரதம் என்னும் பெயரால் முதன்முதல் தோன்றிய நாடக நூல் தமிழ் நூலேயென்று, அடியார்க்கு நல்லார் கூறியிருத்தலைக் காண்க. மதிவாணர் நாடகத் தமிழ்நூல் கி. மு. சில நூற்றாண்டுகட்கு முற்பட்டது.

வடமொழிப் பரத சாஸ்திரம் இயற்றப் பட்டகாலம் கி. பி. 500.

சங்கீதம்

ஆசிரியர்	வடநூல்	காலம்
சாரங்கதேவர்	சங்கீத ரத்னகரம்	கி. பி. 1200
அகோபிலர்	சங்கீத பாரிஜாதம்	,, 1600
வேங்கடமகி	சதுர்தண்டி பிரகாசிகா	,, 1637

தலைக்கழக இடைக்கழகத் தமிழ் இசை நாடக நூல்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுவிட்டன.

நாரதர் இயற்றிய பஞ்ச பாரதீயம், யாமளேந்திரர் இயற்றிய இந்திரகாளியம், சிகண்டியார் இயற்றிய இசை நுணுக்கம் ஆகிய தமிழ் இசை நூல்கள் பாரதக் காலத்தையடுத்து, அதற்கு முன்னும் பின்னும் இயற்றப் பெற்றவையாகும்.

கி. பி. 12-ஆம் நூற்றுண்டுவரை பாணருங் கூத்தருமே தமிழகத்தில் இன்னிசையும் நாடகமும் பயிற்றியும் வளர்த்தும் வந்தாரேனும், பிராமணர் கழகக் காலத்திலேயே முன்னுேக்கொடு அவ்விரு கலைகளையும் பயின்றும் அவை பற்றிய நூல்களை வடமொழியிற் பெயர்த்தும் வைத்திருந்திருக்கின்றனர்.

ஆரியர் தமிழ் நூல்களை வடமொழியில் மொழிபெயர்க்கும் போது, பெயர்ப்புத் தோன்ருவாறு சில வழிகளைக் கையாண்டிருக்கின்றனர். அவை, மறு பாகுபாடு (Re-classification), புதுப் பெயரீடு (Change of nomenclature), மாற்றம் (Alteration) சேர்க்கை (Addition) என்பன. இது இசைநூலிற் பிறங்கித் தோன்றுகின்றது.

குமரிக் கண்டத் தமிழ்ப் பாணர், செங்கோட்டியாழ் என்னும் வீணை வாயிலாக இசை நுட்பங்களையெல்லாம் தம் எஃகுச் செவியாலும் கூர்மதியாலுங் கண்டறிந்து; பண்ணும் பண்ணியலும் திறமும் திறத்திறமுமாக நால்வகைப் பண்கள் வகுத்து, நாற்பெரும் பண்களினின்று நூற்றுமூன்றும் பன்னீராயிரமுமாக (11991) நரப்படைவாற் பண்பெருக்கி; ஆயப்பாலை வட்டப்பாலை சதுரப்பாலை திரிகோணப்பாலை என்னும் பண்திரிவுமுறைகளால் பேரிசைகள் அரையுங் காலும் அரைக்காலுமான சிற்றிசைகளாக நுணுகும் வகை நுணித்தறிந்து; பெண்ணிற்குப்பின் பண் என்னுமாறு எல்லையற்ற இன்பம் பயக்கும் முறையில் வளர்த்திருந்த இசைத்தமிழ் என்னும் தமிழிசையைக் கருநாடக சங்கீதம் எனப் பெயர் மாற்றி, பாணரைத் தீண்டாதவரென விலக்கி, பன்னீரிசைக் கோவையைப் பதினறிசைக் கோவையெனக் காட்டி, ஆகணவுழை (சுத்த மத்திமம்) அந்தரவுழை (பிரதிமத்திமம்) என்னும் இசை வேறுபட்டால் எழுபத்திரு தாய்ப்பண்ணென வகுத்து; ஆம்பல், குறிஞ்சி, சுருட்டி, செவ்வழி, தக்கம், நாட்டை, நேரிசை, புறநீர்மை, முல்லை, விளரி என்பன போன்ற தூய தமிழ்ப் பெயர்களை மாற்றிக் கரகரப்பிரியா, சங்கராபரணம், தந்யாசி, நீலாம்பரி, பைரவி, மத்தியமாவதி, வனஜாட்சி என ஆரிய இடுகுறிப் பெயர்களையிட்டு, வடமொழியிலும் வடமொழி கலந்த திரவிடத்திலும் பாட்டுக்களை இயற்றிப்

பாடி, ஆரியக் கலையாகக் காட்டியிருப்பது எத்துணை யிரண்டகச் செயல்!

இங்ஙனமே தமிழ் முதனூல்களையொட்டிய கணிதம், மருத்துவம் முதலிய பல நூல்களும், காம சூத்திரம், கொக்கோகம் முதலியனவும் பிறவும், வெவ்வேறு காலத்து வடமொழியில் இயற்றப்பட்டன.

வடமொழியாளர் கலைகளையெல்லாம் 64 ஆக எண்ணினர். நால்வேதம், ஆறுசாஸ்திரம், பதினெண்புராணம், அறுபத்துநான்கு கலைஞானம் என்று சொல்வது மரபு. கலைகள் என்று எண்ணப்பட்ட வற்றுட் சில, கலைகளல்ல.

வடமொழி பேச்சுமொழி யன்றுயினும், பிராமணர் தம் கூட்டரவி யல் மேம்பாட்டைப் போற்றிக் காக்க, இன்றும் அதில் நூலியற்றியும் கட்டுரை வரைந்தும் திருமுகம் விடுத்தும் வரவேற்பிதழ் படித்துக் கொடுத்தும் வருவது, அவரது ஒப்புயர்வற்ற மொழிவெறியை விளக்கிக் காட்டுகின்றது.

வடநூல்கள் தோன்றத் தோன்றத் தென்னூல்கள் மறைந்து கொண்டே வந்திருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான தென் மொழித்தொன்னூலெல்லாம் இறந்துபட்டபின், வடமொழிப்பெயர்ப்பு நூலும் புதுநூலும், முதுநூலும் மூல நூலும்போற் காட்சியளிக்கின் றன. இது, கதிரவன் கரந்தபின் திங்கள் திகழ்வ தொத்ததே.

வடமொழி தமிழகத்தில் தமிழாலேயே வளர்ந்ததென்பதை, வட மொழிச் சொற்களும் வியாகரணங்களும் இசைநட கணிய மருத்துவ நூல்களும், சிவ திருமால் நெறிகளும் மட்டுமன்றி, சிறந்த வட நூலாசிரியர் பலர் தமிழ் நாட்டாராயிருந்ததும், 14-ஆம் நூற்றுண்டில் வேதங்கட்கு விளக்கவுரை வரைந்த சாயணுச்சாரியார் தென்னுட்டா ராயிருந்ததும், இன்றும் தலைசிறந்த வடமொழிப் பண்டிதர் தமிழ் நாட்டாராயிருப்பதும், தெள்ளத் தெளியக்காட்டும்.

வடமொழிப் பட்டாங்கு நூல்களில், பெருந்தொடரியம் (மஹா வாக்ய) எனப் பறைசாற்றப்பெறும் தத் த்வம் அஸி என்னும் சொற் ருெடரே, முற்றுந் தமிழ்த்திரிபாயிருந்து வடமொழியாளரைத் தலை கவிழச் செய்கின்றது.

> தான்—தத், நூம்—நும்—தும்—த்வம், இரு—இஸ் (தியூத்.)—எஸ் (இலத்., கி.)—அஸ் (வ.), தி (முன்னிலையொருமையீறு) —ஸி.

தான் என்பது முதற்காலத்திற் படர்க்கையொருமைச் சுட்டுப் பெயராயிருந்து, பின்பு தற்சுட்டுப் பெயராயிற்று.

IV தமிழ்மறைப்பதிகாரம்

வேதப் பிராமணர், தம்மை நிலத்தேவரென்றும் தம் முன்னோர் மொழியைத் தேவமொழியென்றும் கூறி யேமாற்றித் தமிழ் நூல்களை யெல்லாம் வடமொழியில் மொழிபெயர்த்துக் கொண்டபின், தமிழ் முதல் நூல்களும் தமிழ்த் தூய்மையும் இருக்கும்வரை என்றேனும் தம் ஏமாற்றம் வெளியாகிவிடுமென்றறிந்து, அதைத் தடுத்தற்கு அரசரும் பொதுமக்களுமான தமிழ்ப்பேதைகளையும் தந்நலக்காரரையுந் துணைக்கொண்டு, நூலுரையாலும் பிற செயலாலும் பல்வேறு மறைப்பு வினைகளையும் அழிப்பு வினைகளையும் செய்து வந்திருக்கின்றனர். அவற்றையே அவர் வழியினரும் கையாண்டு வந்திருக்கின்றனர்.

மூவகை வினைகளும் வருமாறு :—

சொன் மறைப்பு, சொற்பொருள் மறைப்பு, முதனூல் மறைப்பு, கழகக் கலைப்பு, முன்னூலழிப்பு, கலை மறைப்பு, அறிவியல் மறைப்பு, தெய்வ மறைப்பு, சமய மறைப்பு, கொள்கை மறைப்பு, கருத்து மறைப்பு, ஒழுக்க மறைப்பு, நாகரிக மறைப்பு, பண்பாடு மறைப்பு, கருப்பொருள் மறைப்பு, அறிவு மறைப்பு, மொழி மறைப்பு, எழுத்து மறைப்பு, கழக மறைப்பு, வரலாறு மறைப்பு, தமிழன் பிறந்தக மறைப்பு, தமிழ்நாடு மறைப்பு. தமிழ இனமறைப்பு, வனப்புக்கதை மறைப்பு, பொருளிலக்கண மறைப்பு, புலவரை மறைப்பு, மொழியாக்க முயற்சித் தடுப்பு, தனித்தமிழ் வழக்குத் தடுப்பு, தமிழ்ப்பற்றுத் தடுப்பு, தமிழ் விழாத் தடுப்பு, தமிழ்ப்புலவர் பதவிப்பேறு தடுப்பு, தமிழ்த்தொண்டர் வாழ்வுத் தடுப்பு முதலியன.

கடல்கோளும் நில நடுக்கமும் போன்ற இயற்கைப் பேரழிவு ஏதும் நேராதுபோயினும், தமிழகத்தில் ஆரியம் வேரூன்றினதினாலேயே கடைக்கழகம் கலைக்கப்பட்டது. அதன்பின், முதலிரு கழக நூல்கள் அத்தனையும் அழிக்கப்பட்டுவிட்டன.

18-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட பிரயோக விவேகம், தமிழ்ச் சொல்லிலக்கணம் முழுவதையும் மறைக்க முயன்ற சிறுகேது.

இந்நூற்றாண்டில் ஏறத்தாழ நாலரை யிலக்கம் உருபா செலவழித்து முப்பதாண்டாகத் தொகுக்கப்பட்ட சென்னைப் ப. க.க த. அகர முதலியில், ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்கள் விடப்பட்டுள; அடிப்படைத் தமிழ்ச் சொற்களெல்லாம் ஆரியச் சொற்களாகக் காட்டப்பட்டுள; வேண்டாத ஆயிரக்கணக்கான அயற்சொற்கள்

தமிழ்ச் சொற்களாக இடம்பெற்றுள; தமிழ்ச் சொற்கட்குத் தரப்பட்டுள பொருள்கள் முற்றுப்பெருதிருப்பதொடு, ஆங்காங்கு வழுவாகவும் உள. பல தமிழ்ச் சொற்கள் தொடர்பற்ற ஆரியச் சொற்களொடு தொடர்புபடுத்தப்பட்டுள.

எ-டு :

அச்சன்—ஆர்ய, ஐயன்—ஆர்ய, அந்தரம்—அந்தர, அம்பலம்—அம்பர, ஆகுளி—ஆகுல, ஆசிரியன்—ஆசார்ய (c), ஆமை (வடை)—ஆம (வடா), உல்லரி—வல்லரி; ஏடன்—சேஷ, ஏணி, சேணி—ச்ரேணி, ஓரை—ஹோரா, கம்பம்=ஸ்தம்ப, கும்மாளம்—குமால, கெஞ்சு—கஞ்ச் (kh), சட்டன்—சத்ர (ch), சடங்கு—ஷடங்க (ḍ), சாரி—சாரி (c), சம்பளம்—சம்பல, சரி—ஸத்ருச, சாலி—சாலி, சுணை—ஸ்மரண, சும்பன்—சும்பன (c), சேந்தன்—ஜயந்த, தச்சன்—தக்ஷ (d), தகழி—ஸ்தாலீ, தாயம்—தாய (d), தாலி—தாலீ, திசை—திசா, நயம்—நீதி (t), நாயகன்—நாயக, பட்டி (மண்டபம்)—பட்டி (விக்கிர மாதித்தன் மந்திரி). பரண்—பரண (bh), பரத்தன்—பரஸ்தா, பார்ப்பனன்—ப்ராமண (b), புடவி—ப்ருத்வீ, மஞ்சள்—மஞ்சிஷ்டா, மாரி—மாரி, வரி—பலி (b), வயம்—வச, வல் (விரைவு)—வல், வாசி—வாச் (c).

அத்தன்—அச்சன். ஐ—ஐயன். தந்தையைக் குறிக்கும் இத் தமிழ்ப் பெயர்கட்கும் ஆர்ய என்னும் பேரினப் பெயருக்கும் எள்ளளவுந் தொடர்பில்லை.

உம்—அம். அம்முதல்=பொருந்துதல், கூடுதல், குவிதல். அம்—அம்பு—அம்பல்=குவிந்த அரும்பு. "அம்பலும் அலரும் களவு வெளிப்படுத்தலின்" (தொல். 1085). அம்பல்—ஆம்பல்=பகலிற் குவிவதாகச் சொல்லப்படும் நீர்ப்பூ. அம்பல்—அம்பலம்=கூடும் கூட்டம், அவை. அம்பரம் என்பது வானத்தைக் குறிக்கும் உம்பரம் என்பதன் திரிபு. அதுவுந் தமிழ்ச் சொல்லே.

ஆசு (குற்றம்) இரியன் (நீங்கினவன், நீக்குபவன்) ஆசிரியன். சர் (c)=நட. ஆ (முன்னொட்டு) - சார=நடக்கை, ஒழுக்கம். ஆசார்ய=ஒழுக்கங் கற்பிப்பவன். ஆகவே, இவ்விரு சொல்லும் வெவ்வேறு. ஆசிரியன் கற்பிக்கும் நூலில் ஆளப்பெற்ற அகவல் என்னும் பாவும், தலைக்கழகத்திலேயே ஆசிரியம் எனப்பெற்றது. "அகவல் என்ப தாசிரி யம்மே." (தொல். 1338).

உழுந்துவடைபோல் தட்டையாயிராது ஆமைபோல் மேல் வளைவாயிருப்பது ஆமைவடை. ஆமைத்தாலி, ஆமைப் பலகை,

ஆமைப்பூட்டு என்பன இக்கரணியம் பற்றியே இப்பெயர் பெற்றன. ஆமை என்பதை ஆம எனத் திரித்து, நன்ருய் வேகாதது ஆமவடை எனப் பொருள் கூறுவது எத்துணை இழிவான குறும்புத்தனம்!

ஓர்தல்=பொருந்துதல். ஓர்—ஓரை=கூட்டம், மகளிர் கூட்டம், விண்மீன்கூட்டம் (இராசி). Constellation என்னும் ஆங்கிலச் சொல்லை நோக்குக. ஹோரா என்னும் கிரேக்கச் சொல் மணிக் காலத்தை (hour)க் குறிப்பது.

கொம்பு—கம்பு—கம்பம்=பெரு மரத்தூண். 'அம்' பெருமைப் பொருட் பின்னொட்டு. ஸதம்ப்=ஊன்று, நில், தாங்கு. ஸ்தம்ப்—ஸ்தம்ப=ஊன்றிய (மர அல்லது கல் அல்லது செங்கல்) தூண். ஸ்கம்ப என்பது தென்சொல்லின் அல்லது வடசொல்லின் திரிபா யிருத்தல் வேண்டும். மா. வி. அ "Prob. a mere phonetic variety of stambh" என்று குறித்திருத்தல் காண்க.

சட்டம்=எழுதப்பெற்ற ஓலை. சட்டம்—சட்டன்=ஓலைக் கணக்கன் என்னும் மாணவன். சட்டர் (மாணவர்) தலைவன் சட்ட நம்பி. சட்டநம்பிப்பிள்ளை — சட்டம்பிப்பிள்ளை — சட்டாம்பிள்ளை. சத்ர=குடை, குடைபோல் மாணவர்க்குக் காப்பான ஆசிரியன். இவ்விரு சொற்கும் என்ன தொடர்புண்டு?

சட்டம்=ஒழுங்கு. சட்டம்—சடம்—சடங்கு=ஒழுங்கான வினை. ஷடங்கம்=ஆறுறுப்பு. இரண்டிற்கும் வேறுபாடு வெளிப்படை.

சம்பு=சம்பா, நெல். அளம்=உப்பு பண்டைக் காலத்தில் நெல்லும் உப்பும் சம்பளமாகக் கொடுக்கப்பட்டன. "உப்பிட்டவரை உள்ளளவும் நினை." என்னும் பழமொழியையும், 'உப்புக்கு உழைக் காதவன்' என்னுந் தொடரையும் நோக்குக. Salary என்னும் ஆங் கிலச் சொல்லும் இதே பொருளதே. சம்பல என்னும் வடசொற்கு. வழியுணவு, வழிப்போக்குப் பண்டம் என்பனவே பொருள். ஆத லால், தென்சொல்லே மூலமாதல் அறிக.

சுள்—(சுண்)—சுணை=முள். சுள்ளெனல்=குத்துதல். சுள் சுள்ளென்று குத்துகிறது என்னும் வழக்கை நோக்குக. தன்மான வுணர்ச்சி ஒருவன் நெஞ்சை முட்போற் குத்துவது. அதனால், "உனக்குச் சுணையில்லையா?" என்று கேட்பது வழக்கம். சுரணை என்பதும் இதே பொருளதே. அது சுரி என்னும் முதனிலையினின்று திரிந்தது. ஸ்ம்ரு[2]=நினை. ஸ்மரண=நினைவு. ஆகவே, தென் சொல் வேறு; வடசொல் வேறு.

சும்பன் என்பது இடக்கர்ச் சொல். சும்பன=முத்தமிடுகை.

ஜயந்த=வெற்றி பெற்றவன். சே—சேந்தோன்—சேந்தன்=சேயோன் (சிவந்தவன்), முருகன். அசுரனை வென்றோன் என்னுங் கருத்தில், வடமொழியில் ஜயந்த (ஜயித்தவன்) எனப் பெற்றான்.

தைத்தல்=பொருத்துதல். தை—தைச்சு—தச்சு=மரத்துண்டுகளை அல்லது பலகைகளைப் பொருத்திச் செய்யும் வேலை. ஒ. நோ: ஐந்து—அஞ்சு, மைந்தன்—மஞ்சன். Joiner என்னும் ஆங்கிலச் சொல் இப்பொருளதே. தக்ஷ்=வெட்டு. தக்ஷன்=மரம்வெட்டி. இது வேறு சொல்லாயிருத்தல் வேண்டும்; அல்லது தமிழ்ச் சொல்லின் திரிபாதல் வேண்டும்.

தாய்—தாயம்=தாயினின்று பெறும் உரிமை. முதற் காலத்தில் தாயே குடும்பத் தலைவியாயிருந்தாள். தாய்நாடு, தாய்மொழி என்னும் சொற்களை நோக்குக. இனி, தா (தந்தை)—தாயம் என்று கொள்ளினுங் குற்றமாகாது. தாயம் (உரிமை) பற்றிப் பாண்டவ கௌரவர்போற் பண்டை நாளிற் காயுருட்டி விளையாடியதால், அவ்வாட்டிற்குத் தாயம் என்பது கருமிய அல்லது விளைவாகு பெயரா யிற்று. பாணினியார் இச்சொல்லைக் கொடை என்னும் பொருளில் தா என்னும் வினையினின்று திரித்திருக்கின்றனர். தா என்பது தூய தமிழ்ச் சொல்லென்று முன்னரே விளக்கப் பெற்றது.

நால்—நாலி=தாலி=கழுத்தில் தொங்கும் அணி, சிறுவர் கழுத்தில் தொங்கிய ஐம்படைத் தாலியும், வெள்ளாட்டுக் கழுத்தில் தொங்கும் சதைத் தாலியும்போல, மணமகள் அல்லது மனைவி கழுத்தில் தொங்கும் மங்கலவணி. Pendant என்னும் ஆங்கிலச் சொல்லையும் நோக்குக. வடமொழியாளர் பனையோலை யென்றும் காதணி யென்றும் பொருள் கூறுவர். இதன் பொருந்தாமை காண்க. மேலும், தாலி கட்டும் வழக்கம் தமிழரதே என்பதையும் நோக்கித் தெளிக.

திகைதல்=முடிதல், முடிவாதல். இன்னுந் திகையவில்லை என்பது நெல்லை நாட்டு வழக்கு. தமிழில் எல்லைக் கருத்து திசைக் கருத்தையுந் தழுவும். எல்லை=முடிவு, திசை.

“ஐந்தா வதனுரு பின்னும் இல்லும்
நீங்கலொப் பெல்லை யேதுப் பொருளே.”

என்று நன்னூலார் (299) கூறுதல் காண்க.

திகை—திசை. திசைச் சொல்=செந்தமிழ் நிலத்திற்கப்பால் வெவ்வேறு திசைகளில் வழங்கும் கொடுந்தமிழ் நிலச்சொல்.

'கண்கால் இடைகடை தலைவாய் திசைவயின்" (நன். 302)

"பின்பா டளைதேம் உழைவழி யுழியுளி" (ௌ)

"பின்சார் அயல்புடை தேவகை எனாஅ" (தொல். 566)

திசை—தேசம்—தேயம்—தேம்—தே. இச்சொல் வடிவுகளெல்லாம் இடப்பொருளுருபாகப் பண்டைத் தமிழில் வழங்கின. தேவகை=இடவகை. தேசம்=திசை, நாடு இடம், பகுதி.

"நெறியினாற்றிய அறிவன் தேயமும்" (தொல். 1021) என்னுமிடத்து, தேயம் என்பது பக்கம் (பகுதி) என்று பொருள்படுதல் காண்க. தேசம் என்னும் தென்சொல்லை யொத்தே, ஸீமா என்னும் வடசொல்லும் எல்லையையும் நாட்டையும் உணர்த்தும்.

வடமொழியில் திசா என்னும் சொற்கு திச் (ś) என்பதை மூலமாகக் காட்டுவர். திச்=காட்டு. Gk deiknumi (to show). காட்டற் கருத்து திசைக் கருத்திற்கு மூலமாதற்குப் பொருத்தமானதே

இந்தியில் திக்கா என்னுஞ் சொல் காட்டுதலைக் குறுக்கின்றது. நோக்கு—தேக்கு (த. வி.)—திக்கா (பி. வி.) ஒ. நோ: காண்—காட்டு. திக்கா என்னும் இந்திச் சொற்கு மூலமான சூரசேனிச் சொல் கிரேக்க நாட்டிற்குச் சென்றிருக்கலாம். அங்கிருந்து வேத ஆரியரின் முன்னோர் மொழிக்கு வந்திருக்கலாம். வடமொழியில் திக் என்னும் வடிவமும் உள்ளது. அதுவே திச் என்று திரிந்திருக்கலாம்.

ஆகவே, தமிழ்ச்சொல் எல்லைப் பொருளடியாகவும், வடசொல் காட்டற் பொருளடியாகவும், வெவ்வேறு வகையில் தோன்றியிருப்பதாகத் தெரிகின்றது.

நயத்தல்=விரும்புதல். நய—நாயன்=விரும்பப்படும் தலைவன். ஒ. நோ: நம்பு=நசை. நம்பன்=தலைவன். வேள்=விரும்பு, விருப்பம், தலைவன். நாயர்—(நாயிர்)—நாயிறு—ஞாயிறு=கோள்களின் நாயகம். நாயன்—நாயகன்—நாயக்கன்—நாய்க்கன்—நாய்கன். நாயன்—நாயனார்—நயினார். கணவன், தந்தை, அரசன், படைத் தலைவன், ஊர்த்தலைவன், வணிகத் தலைவன், அடியார் தலைவன் முதலிய பல்வேறு தலைவரை, நாயன் என்னுஞ் சொல் வெவ்வேறு வடிவில் தொன்றுதொட்டுக் குறித்து வருகின்றது. நாயகன்—நாயகம்=சிறந்தவன், சிறந்தவள், சிறந்தது. ஞாயிறு என்னும் சொல் ஆரியர் வருமுன்பே தோன்றியது.

வடமொழியில் நீ (நடத்து) என்பதை மூலமாகக் காட்டுவர். நாய, நாயக என்னும் இருவடிவே அதில் உள.

பட்டுதல்=அடித்தல். பட்டசாலை=சுத்தியலால் அடிக்குங் கூடம். தருக்கத்தில் எதிரி கூற்றை மறுத்தலை வெட்டிப் பேசுதல் என்றும், அடித்துப் பேசுதல் என்றும் கூறுவது மரபு. பட்டி மண்டபம்=சமயக் கணக்கர் எதிரிகள் கூற்றையடித்துத் தம் கோளை நிறுவும் மண்டபம். விக்கிரமாதித்தனின் மந்திரியாகிய பட்டியின் பெயரால் ஏற்பட்ட மண்டபம் என்பது எள்ளி நகையாடத்தக்கது.

நால்வகுப்பாருள் அந்தணர் ஐயரும் பார்ப்பாரும் என இரு வகையர். முன்னவர் துறவியர்; பின்னவர் இல்லறத்தார். இவருள் சிறப்பாக அந்தண்மையுடையவர் துறவியர். இவ்விரு வகையரும் ஆரியர் வருமுன் தமிழரே. நூல்களைப் பார்க்கின்றவன் பார்ப்பான். இது செய்வான் வாய்பாட்டது. பார்ப்பனன் என்பது செய்வனன் வாய்பாட்டது. பிரமத்தை யறிந்தவன் பிராமணன் என்பர். இவ்விரு சொல்லையும் ஒன்றாக இணைப்பது, பிராமணரின் தமிழ்ப் பகைமை யையே காட்டுகின்றது.

மால்=கருப்பு. மால்—மார்—மாரி=கரிய முகில், மழை, கரிய காளி. மரணத்தை உண்டாக்குபவள் மாரி என்பது ஒரு சிறிது பொருந்தப் பொய்த்தல்.

வரிதல்=சுற்றிக் கட்டுதல். வரி=கட்டு, கட்டணம், அரசிறை. பண்டைத் தமிழ் நாட்டில், உழவர் பொலி தூற்றிய களத்தில் ஆறி லொரு பங்கைக் கோணிப்பைகளிற் கட்டி அரசனுக்குக் கடமையாக இறுத்ததினால், கட்டுதற் சொற்குக் கட்டணப் பொருள் தோன் றிற்று. இதைத் தெய்வங்கட்குப் படைக்கும் படைப்பைக் குறிக் கும் பலி என்னும் சொல்லொடு தொடர்புபடுத்துவது எத்துணை மடமையாகும் !

வாய்—வாயி. வாயித்தல்=வாயாற் படித்தல். ஒ. நோ: கண்—கணி. கடைக்கணித்தல்=கடைக்கண்ணாற் பார்த்தல். மலையாளத்தில் வாயித்தல் என்னும் வடிவம் வழங்குகின்றது.

வாயி—வாசி. வாசித்தல்=வாயாற் படித்தல், புல்லாங்குழல் போன்ற துளைக்கருவி யியக்குதல். வாசி—வாசினை=குழல் வாசிப்பு. வாசி—வாசகம்=வாசிக்கும் அல்லது வாசித்தற் குரிய பகுதி, வாசகப் பொத்தகம் (Reader).

வடமொழியில் வாசக என்னும் சொற்கு, பேசுதல், சொல்லுதல், ஒப்பித்தல், வெளியிடுதல் என்னும் பொருள்களே உள; வாசித்தல் (reading) என்னும் பொருளில்லை. அதற்கு வாச் என்பது மூலம்; வச் என்பது அடிமூலம். அதினின்று வசனம் என்னும் சொல்

தோன்றும். வாச் என்பது வாக் என்று திரிந்து வாக்ய என்னும் சொல்லைப் பிறப்பிக்கும்.

வாசிப்பது வேறு; சொல்வது வேறு. வடசொல் வேறு ெ யில் தோன்றியிருத்தல் வேண்டும்; அல்லது தென்சொல்லினின்று ஒலியும் பொருளும் திரிந்திருத்தல் வேண்டும்.

இங்ஙனமே ஏனைச் சொற்களும். விரிவஞ்சி அவை இங்கு விளக்கப்பட்டில.

காரன்—காரி யீறுகள்

காரன், காரி என்பன தமிழில் உடைமை அல்லது உரிமைபற்றிய ஆண்பால் பெண்பால் ஈறுகள்.

> கடுமை=மிகுதி, வலிமை. கடு—கடி—கரி—காரம்=கடுமை, மிகுதி, வலிமை, அதிகாரம், உரிமை, உடைமை இச்சொல் உறைப்பையும் எரிவையும் குறிப்பதும் கடுமை பற்றியே.
>
> காரம்—காரன் = உரிமையாளன், உடையவன். காரன்—காரி=உரிமையாட்டி, உடையவள்.
>
> அதிகாரம் என்னும் சொல்லும் மிகுதிப்பொருளை அடிப்படையாகக் கொண்டதே. அதிகரி=அதிகாரம். அதிகரித்தல்= மிகுதல்.

வடமொழியிலுள்ள க்ரு (செய்) என்னும் வினையடியாகப் பிறந்து, செய்பவனைக் குறிக்கும் கார என்னும் சொல்லினின்று 'காரன்' ஈறு திரிந்ததாக ஆரியவழிப் புலவர் கூறுவது ஒரு சிறிதும் பொருந்தாது. கும்பகார என்னும் வடசொல் குடத்தைச் செய்யும் குயவனையே குறிக்கும். குடத்துக்காரன் அல்லது பானைக்காரன் என்னும் தென்சொல், அக்கலத்திற்கு உரியவனையே குறிக்கும்.

ஆட்டுக்காரன், கடைக்காரன், கப்பற்காரன், காய்ச்சற்காரன், குடைக்காரன், குருவிக்காரன், கூலிக்காரன், கோழிக்காரன், சொந்தக்காரன், தட்டுக்காரன், திருநெல்வேலிக்காரன், தோட்டக் காரன், நிலத்துக்காரன், பட்டக்காரன், பணக்காரன், பானையக் காரன், பிள்ளைகுட்டிக்காரன். புன்செய்க்காரன், புள்ளிக்காரன், பெருமைக்காரன். பொறுமைக்காரன், மாட்டுக்காரன், முட்டைக் காரன், வண்டிக்காரன், வாடிக்கைக்காரன், வீட்டுக்காரன், வெள்ளைக்காரன் முதலிய நூற்றுக்கணக்கான தென்சொற்கள் உரிமையையன்றிச் செய்கையை எங்ஙன் உணர்த்தும்? கோழிக்

காரன் கோழியைச் செய்பவனா? முட்டைக்காரன் முட்டையைச் செய்பவனா? திருநெல்வேலிக்காரன் திருநெல்வேலியைச் செய்பவனா?

கொள்ளைக்காரன், தையற்காரன், வேலைக்காரன் முதலிய தொழில் பற்றிய சொற்களும், அத்தொழிலை உடையவர் அல்லது அத்தொழிற்கு உரியவர் என்றே பொருள்படுவனவாகும். செய்பவர் என்னும் பொருள் இவற்றிற்குப் பொருந்துவது தன்னேர்ச்சியே.

அண்ணன்காரன், தம்பிக்காரன் என்னும் முறை பற்றிய சொற்களும், அம்முறையை உடையவன் என்றே பொருள்படும்.

'காரன்' ஈறு பெண்பாலிற் காரி என்றாகும்.

மா. வி. அ., செய்பவனைக் குறிக்கும் கார என்னுஞ் சொல்லொடு கார(ம்) என்னும் நெடிற் சாரியையைத் தொடர்புபடுத்தியிருப்பது தவறாகும்.

சாலி என்னும் ஈறு இகரவீறு பெற்ற சால் என்னுஞ் சொல்லே. சாலுதல் நிறைதல். சாலி (இருபாற்பொது)=நிறைந்தவன், நிறைந்தவள். சாலினி (பெ. பா.). பேரா. K. A நீலகண்ட சாத்திரியார், தாம் இயற்றிய 'தென்னிந்திய வரலாறு' (A History of South என்னும் பொத்தகத்தில், தமிழர் அறுவகை யினங்கலந்த கலவையினத்தாரென்றும்,

" பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப."

என்னும் தொல்காப்பிய நூற்பாவில் (1091) உள்ள ஐயர் என்னுஞ் சொற்குப் பிராமணர் என்று பொருள் கொண்டு, தமிழரின் இல்லற வாழ்க்கைக்குரிய திருமணக் கரணம் பிராமணரால் வகுக்கப் பெற்றதென்றும், அவர் வருகைக்குமுன் தமிழர் மணையறவொழுங்கின்றித் திரிந்தனரென்றும், வரைந்துள்ளார்.

பர். P. S. சுப்பிரமணிய சாத்திரியார், தொல்காப்பிய எழுத்ததிகாரப் பிறப்பியல் நூற்பாக்கள் பாணினி சிட்சையிலும் பிராதிசாக்கியங்களிலுமுள்ள நூற்பாக்கள் சிலவற்றின் மொழிபெயர்ப்பென்றும், சொல்லதிகார நூற்பாக்கள் சில யாஸ்கரின் நிருக்தத்தைப் பின்பற்றியவையென்றும், பொருளதிகார மெய்ப்பாட்டியலில் எண்சுவை பற்றிய நூற்பாக்கள் நாட்டிய சாத்திர நூற்பாக்களின் மொழிபெயர்ப்பென்றும், களவியல் நூற்பாக்கள் சில கௌதம தரும சாத்திரத்தையொட்டியவை யென்றும், மாயோன் வேந்தன் வருணன் என்பவை

இருக்குவேதத் தெய்வங்களென்றும், மரபியலிற் சொல்லப்பட்டுள்ள உத்திகள் சில அருத்த சாத்திரத்தினின்று மேற்கொண்டவை யென்றும், பத்துப்பாட்டிலும் எட்டுத் தொகையிலுங் கூறப்பட்டுள்ள பல செய்திகள் வட நூல்களைத் தழுவியவையென்றும், பொருளிலக் கணமென்பது பாட்டியலே (Poetics) யென்றும், திருவள்ளுவர் இரண்டன்மை (அத்துவைத)க் கொள்கையைத் தழுவியவரென்றும். தாம் விரும்பியவாறெல்லாம் தமது 'An Enquiry into the Relationship of Sanskrit and Tamil' என்னும் பொத்தகத்தில் எழுதி யுள்ளார்.

இனி, அவர் தம் 'வடமொழி நூல் வரலாறு' என்னும் பொத்த கத்தில், "நாட்ய சாஸ்த்ரம் கி. மு. மூன்றும் நூற்றூண்டிற்கு முன்ன தாய் இருத்தல் வேண்டும். அங்குக் கூறப்பட்ட செய்திகள் பல:—வேதத்திலுள்ள செய்திகளைச் சூத்திரர் அறியாமையான், சூத்திரர்க்கும் ஏனையோர்க்கும் கண்ணிற்கும் காதிற்கும் ஆனந்தத்தைத் தரும் நூலை இயற்ற வேண்டுமெனத் தேவர்கள் பிரும்மாவை வேண்ட, அவர் அதனை இயற்றினர். ஆங்குக் கூறப் படும் பொருள்களை ருக்வேதத்திலிருந்தும், கீதிகளை ஸாமவேதத்தி லிருந்தும், அபிநயங்களை யஜுர் வேதத்திலிருந்தும், ரஸங்களை அதர்வ வேதத்திலிருந்தும், அவர் கொண்டனர். அதற்கு நாட்ய வேதம் எனப் பெயர். அதனை நடிக்கத் தேவர்களால் இயலாமை யான், பரத முனிவரைத் தம் நூறு புதல்வரைக் கொண்டு நடிக்கு மாறு பிரும்மா ஏவினர். முதலில் அம்ருத பந்தனம் பரதரால் பிரும்மா வின் முன்னர் நடிக்கப்பட்டது. பின்னர் த்ரிபுரதாகம் சிவபிரானின் முன்னர் நடிக்கப்பட்டது." (பக். 536—7) என்று வரைந்திருப்பதும், இத்தகைய செய்திகள் நிறைந்த நூல் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தால் இவ்விருபதாம் நூற்றூண்டில் வெளியிடப்பட்டிருப்பதும், இதற்கு அங்குள்ள தமிழ்ப் பேராசிரியர் தடை நிகழ்த்தாதிருப்பதும், தமிழரின் அடிமைத்தனத்தையே காட்டுகின்றன.

பர். P. S. சு. சாத்திரியார் கிழவன் என்னும் சொல் முதலில் உரியவனைக் குறித்து இன்று முதியவனைக் குறிக்கின்றதென்று. தம் தமிழறியாமையைப் புலப்படுத்தியுள்ளார்.

இன்றும் அச்சொல் அவ்விருபொருளையும் உணர்த்தும். உரிய வன் என்னும் பொருளில் கெழு என்னும் அடியினின்றும், முதியவன் என்னும் பொருளில்கீழ் என்னும் அடியினின்றும், அது திரிந்ததாகும்.

குழு—கெழு—கெழுமை—கிழமை = உரிமை.

கீழ்—கிழம்—கிழமை = முதுமை.

திரு சாம்பமூர்த்தி ஐயர் தம் 'இந்திய இன்னிசை வரலாறு' (History of Indian Music) என்னும் நூலில், சாமவேத இசைக்

கோவையே இந்திய இசைக்கோவைகட்குள் முந்தியது எனக் கூறியுள்ளார்.

பர். சு. கு. சட்டர்சியும் பர். S. M. கத்திரேயும் இந்தியத் திணையியற் களஞ்சியத்தில் (Gazetteer of India) மொழிகள் (Languages) என்னும் 7-ஆம் அதிகாரத்தில், தமிழிலக்கியம் கிறித்தவ ஊழியில் தொடங்கிய தென்றும், திருவள்ளுவர் காலம் கி. பி. 10-ஆம் நூற்றுண்டிற்குப் பிற்பட்டதன்றென்றும், இருளரும் காடரும் தம் ஆப்பிரிக்க மொழியை மறந்துவிட்டுத் தமிழைப் பேசி வருகின்றனரென்றும், வரைந்துள்ளனர்.

இனி, பர். சட்டர்சி. தமிழர் கிரேக்க நாட்டினின்று வந்தவரென்றும், ஸந்தி, ஸஹஸ்ர, கன்யகா, ஸ்தூணு, ஸ்த்ரீ, துலஸீ, லோக, ப்ராஹ்மண, த்ரோணீ, ஸ்நேக, தேச முதலிய வடசொற்கள், தமிழில், முறையே, அந்தி, ஆயிரம், கண்ணகி, தூணம், தீ (பெண்பாலீறு), துழாய், உலகு, பார்ப்பான், தோணி, நேஎம், தேஎம் முதலியனவாகத் திரிந்துள்ளனவென்றும், விஷ்ணு, குமார, துர்கா என்னும் ஆரியத் தெய்வங்களே மாயோன், முருகன், கொற்றவை யெனத் தமிழ்த் தெய்வங்களாக மாறியுள்ளனவென்றும், திருவள்ளுவரின் முப்பால் ஆரியத் திரிவர்க்கமே யென்றும், அ. ம. ப. க. க. மொழிநூல் துறைத் தொடக்கவிழாத் தலைமையுரையிற் கூறியுள்ளார்.

இவற்றையெல்லாங் கவனித்துக் கண்டியாது, பொருளீட்டுந் தம்பாட்டையே பார்த்துக்கொண்டிருக்கின்றனர் இற்றைத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர்.

“ நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்.”

இன்று தமிழைக் கெடுப்பவர், தலைமைத் தமிழ்ப் பேராசிரியரும் அரசியற் கட்சித் தலைவருமாகிய இரு சாராரே.

தமிழ்மறைப்பதிகாரத்தில் விடுபட்ட இரு சொற்கள்

1. அம்மணம்

ஆடையில்லா வுடல்நிலையைக் குறிக்க, அற்றம் என்னும் இலக்கிய வழக்குச் சொல்லும், அம்மணம், முண்டம், மொட்டைக் கட்டை என்னும் உலக வழக்குச் சொற்களும், தொன்றுதொட்டு வழங்கி வருகின்றன.

இவற்றுள், அம்மணம் என்னும் சொல் சமணம் என்பதன் திரிபாகச் சென்னைப் ப. க. க. த. அகரமுதலியிற் காட்டப்பட்டுளது. சமணம் என்பது ச்ரமண என்னும் வடசொல்லின் திரிபு.

ச்ரம் (ஏ. வி.)=களை, அயர், சோர், சலி, உழை, வெட்டிவேலை செய்.

ச்ரம (பெ.)=களைப்பு, அயர்வு, சோர்வு, உழைப்பு, மெய்வருத்தம், ஓகப்பயிற்சி, தவம், உடம்பை வாட்டல்.

ச்ரமண (பெ. எ.)=உழைக்கின்ற, இழிந்த, கெட்ட, அம்மண; (பெ.) புத்தத் துறவி, சமணத் துறவி, முனிவன், அடியான், ஆண்டி.

ஆச்ரம்=தவநிலையம், முனிவர் குடில்.

Gk gumnos=naked. gumnosophistes—E gymnosophist=One of ancient Hindu philosophic sect going nearly naked and given up to contemplation, mystic, ascetic. Gk gumnasticos—E gymnastics=bodily exercise.

ச்ரமண என்னும் வடசொல், சமணம், சமண, அமணம், அமண் என்றே தமிழில் திரிந்துள்ளது. அம்மணம் என்னும் தென்சொல் என்றும் அற்றம் ஒன்றையே குறிக்கும். அதுவும் சமயச் சார்பின்றி எல்லார்க்கும் பொதுவானதே வடசொற்றிரிபுகளுள் ஒன்றேனும் அற்றத்தை உணர்த்துவதில்லை. அமணம் என்னும் வடிவும் செய்யுளில் அம்மணம் என்பதன் தொகுத்தல் திரிபாக வந்தே அற்றத்தை உணர்த்தும்.

சமணத் துறவியருள் ஒரு வகுப்பாரே திசையாடையர் (திகம்பரர்) என்னும் அம்மணர். சமணம் என்னும் சொல் உடம்பை வாட்டலையும் சமண மதத்தையுமேயன்றி அற்றத்தை உணர்த்தாது.

பண்டைநாளில் அடியாருள்ளும் நாட்டில் வதியும் துறவியருள்ளும் சிலர் நீர்ச்சீலையே (கோவணமே) அணிந்திருந்தனர். காட்டில் வதிந்த முனிவர் சிலர் அதுவுமின்றி யிருந்தனர். ஆதலால், அம்மண நிலை சமணத் துறவியர்க்கே சிறப்பாக வுரியதன்று.

அம்மணத்தைக் குறிக்கும் கும்னொஸ் என்னும் கிரேக்கச் சொல்லும், பொதுவானதேயன்றிச் சமயச் சார்பானதன்று. ஆதலால், அம்மணம் என்னும் சொல்லைத் தென்சொல்லென்று கொள்வதே பொருத்தமாம்.

2. மடம்

மடுத்தல் = உண்ணுதல். மடு—மடை = உணவு. மடைத் தொழில்=சமையல் தொழில். மடையன்=சமைப்போன்' மடைப்பள்ளி=சமையலறை அல்லது சமையல் மனை. மடை நூல்=சமையற்கலை நூல்.

மடு—மடம்=அறவுணவுச்சாலை, துறவியரும் இரப்போரும் உண்டு தங்கும் இடம், சமயச் சார்பான துறவியர் விடுதி, துறவியர் கல்லூரி.

தமிழகத்திற் பேரூர்தொறும் மடமுண்டு. அதில் பண்டாரம் பரதேசி என்னும் ஆண்டிகளும் இரப்போரும் அயலூர் எளியாரும் தங்குவர். "ஆண்டிகள் கூடி மடங்கட்டினாற்போல்." என்பது பழமொழி. ஆண்டிமடம் என்பது பெருவழக்கு.

செல்வப் பெற்றோர், தமக்கடங்காது தம்மைவிட்டுப் பிரிந்து சென்ற மக்கள் பல்லாண்டு கழித்துத் தம்மூர் மடத்திற்கு வந்து தங்குவாராயின், தம் உறவைக் காட்டிக்கொள்ளாதே அவர்க்கு இரவில் நல்லுணவளிப்பது வழக்கம். அதற்கு 'இராமடம் ஊட்டுதல்' என்று பெயர்.

வடமொழியில் மடம் என்னும் தென்சொல் மட (maṭha) என்று திரியும். அதற்கு,

"a hut, cottage, (esp.) the retired hut (or cell) of an ascetic (or student),......a cloister, college (esp. for young Brahmans), temple..." என்று மா. வி. அ. பொருள் கூறும். இதற்கு மட் (maṭh) என்பதை மூலமாகக் காட்டுவர். அது மூலமன்று என்பதை,

"(prob. invented for the word below) என்று மா. வி. அ. கூறுவதினின்று தெரிந்து கொள்க. வடவர் கூறும் மூலப்பொருள் வருமாறு :—

தாது பாடம்—to dwell or to be intoxica ted

வோபதேவர்—to grind.

பிறர்—to go.

V. முடிபதிகாரம்

1

தேவ மொழியொன்று தேரின் உலகிலில்லை
யாவும் நிலமக்கள் யாத்தனவே—சாவினால்
தெய்வ நிலைமையெனின் தேவ ருலகினையே
எய்தி விடுதல் இயல்பு.

2

ஆரியம் தேவமொழி யாகு மெனின்மேலை
யாரிய மெல்லாம் அதுவாகும்—ஆரிய
நான்மறை தெய்வமெனின் நானிலத் தேனைமொழி
நூன்மறை மேலாம் நுவல்.

3

இந்திய ஐரோப் பியமென்னும் மாமரத்தின்
முந்திய ஆணிவேர் முத்தமிழாம்—பிந்திய
உச்சாணிக் கொம்பே உரப்பும் வடமொழியாம்
அச்சேது மின்றி யறை.

4

இயல்பே திரிபே யெனுந்தமிழின் பாங்கில்
இயல்பே தமிழாகும் என்க—அயலாம்
திரிபே திரவிடமாம் தேரினதன் முற்றே
மருவும் வடமொழி மாண்பு.

5

வடமொழியே தெய்வ வகைமொழியேல் அந்த
மடமொழியின் மூலத் தமிழாம்—திடமொழி
தெய்வத்தின் தெய்வத் திருமொழி யென்றின்றே
உய்வுற்றுச் சீராக வோம்பு.

6

சொற்பொருள் யாப்புஞ் சுவையாம் அணியியலும்
நற்புல நூலுமே நல்வளமாம்—வற்பொலியின்

மூச்சுங் கனைப்பும் மொழியின் சிறப்பாயின்
ஓச்சங் கழுதை யுலகு.

7

எல்லா வகையாலும் எண்ணினு லிவ்வுலகில்
எல்லோர் தமிழுக் கிணையில்லை—அல்லாச்
சிறந்த மொழியெல்லாம் செந்தமிழ்போ லன்றி
இறந்த மொழியாகும் இன்று.

8

ஆரிய ஏமாற்றிற் காளா யடிமைமடப்
பூரிய வாழ்வழுந்திப் போந்தமிழா—சீரிய
செந்தமிழ் மானஞ் சிறந்துரிமை பெற்றுயர்க
முந்திய தென்னோர் முறை.

9

ஒருமுறை யேமாறின் ஏமாற்றி குற்றம்
மறுமுறை யேமாறி குற்றம்—பலமுறையும்
ஏமாறும் பேதை யியல்பன் தமிழனெனின்
ஆமாறே யில்லை யறி.

10

மொழியே யினமக்கள் முன்னேற நல்ல
வழியாம் அதனை வளர்க்க—பழியாய்த்
தமிழயரத் தாழ்ந்தான் தமிழன்காண் முன்போல்
தமிழுயரத் தானுயர்வான் தான்.

11

பகுத்தறிவைச் சற்றும் பயன்படுத்தார் கல்வி
மிகுத்ததனு லில்லையொரு மேன்மை—வகுத்தநன் னூற்
கற்றைகளைத் தின்றாலுங் காளவாய் நல்லறிவு
பெற்றிடுமோ எத்துணையும் பேசு.

12

உடம்பளவில் மாந்தர் உயர்திணைய ராகார்
மடந்தவிரும் நல்லறிவு மானம்—திடம்பெறவே
தாழ்வுணர்ச்சி நீங்கித் தகுநற் றொழிலொழுக்கம்
வாழ்வுயர்ச்சி காணும் வழி.

13

அடிமைத் தனத்தின் அடிநீக்கி யின்றே
குடிமைத் தனந்தமிழா கொள்க—மடிமை
இருக்குந் தமிழையும் இல்லாத தாக்கும்
தருக்கும் பெயருந் தப.

14

செங்கதிரின் நீண்மறைவிற் செந்தமிழும் ஆரியத்தால்
மங்கி மறைந்தநிலை மாய்ந்ததினல்—எங்குமினி
மூல மொழியென முத்தமிழே யாளுகின்ற
கால மணுகியதே காண்.

15

குப்பை யுயர்ந்தது கோபுரந் தாழ்ந்ததெனத்
தப்பி வடமொழி தான்கவர்ந்த—செப்பத்
தமிழணையை விட்டினித் தானகற்குத் தாழ்க
குமரியணை யென்றதைக் கொண்டு.

16

மறைமலை மாணடிகள் மாபெயர் வாழி
நிறைமொழி முத்தமிழ் வாழி—இறைமொழியான்
என்னும் வடமொழியும் ஏமாற்ரு தெந்நிலத்தும்
மன்னுக நூன்மொழி மற்று.

அருஞ்சொல் அகர முதல் வரிசை

(எண் பக்கத்தைக் குறிக்கும்)

அகத்தியர் 38
அந்தஸ்தா 297
அவ்யய 307
அறுபெரும்பொழுது 271
அனுநாசிகம் 302
அனுஸ்வார 298
அஷ்டாத்யாயீ 307
அஸ்வினிகள் 33
ஆதன் 13
ஆதித்தியர் 33
ஆயப்பாலை 331
ஆரணியகம் 324
ஆரியானு 20
இடையொட்டு 295
இணைவரி 205
இயங்குதிணை 256
இயலுயிர் 304
இயன்மொழி 303
இருபிறப்பிச் சொற்கள் 272
இரைப்பினம் 297
ஈயோஸ் 33
உபத்மானீய 302
உபநிடதம் 324
உபஸர்க்கம் 307
உயிரிசைவு மாற்றம் 26
உஷஸ் 33
ஊஷ்மாண : 297
ஏழ்தெங்க நாடு 2
ஐந்திரம் 302
ஐவர்க்கம் 297
ஔரோரா 33
கத்தியம் 329
காரக்கோரம் 25
காரோதிமம் 2
காளிதாசன் 329
கிரந்தவெழுத்து 302
கிருகிய சூத்திரம் 326
குமரிக்கண்டம் 1
குணம் 303
குணவுயிர் 304
குணசந்தி 298
குயக்கோடன் 51
குறுங்கணக்கு 296
கெந்தும் மொழி 19
கெர்பெரோசு 33
கோகித்தானம் 26
சத்தியவிரதன் 323
சதம்மொழி 19
சதுரப்பாலை 331
சம்பு 329
சாகை 323
சாயனர் 33
சாலி 4
சாவித்திரி 33
சிரவிய காவியம் 329
சிரௌத சூத்திரம் 326
சிவஞான முனிவர் 52
சுந்தரம் பிள்ளை 52
சுவாமிநாத தேசிகன் 51
சூரசேனி 312
ஜிஹ்வா மூலீய 302
தரும சூத்திரம் 326
தற்பொருட்டு வினை 312
தன்பாட்டு வினை 312
திணையியற் களஞ்சியம் 342
தியௌஸ் (த்யௌஸ்) 34

தியூத்தானியம் 36
திரிகோணப்பாலை 331
திரிமொழி 303
திருச்சிய காவியம் 329
திருத்தக் கல் 2
தீர்க்க சந்தி 304
தென்பல்லி 3
தென்புலக்கோன் 3
தென்புலத்தார் 3
தேவநாகரி 302
நக்கீரர் 51
நடைமொழி 294
நயன்மைக் கட்சி 31
நாரதர் 38
நாவலந்தேயம் 1
நிலத்திணை 2
நெடுங்கணக்கு 300
பஃறுளியாறு 2
பஞ்சதிராவிடம் 28
பத்தியம் 321
பர்ஜன்யா 33
பரஞ்சோதி முனிவர் 52
பன்னீரோரை 271
பாணினியர் 326
பாணினீயம் 328
பிரஜாபதி 33
பிராகிருதம் 63
பிராதிசாக்கியம் 42
பிராமணம் 324
பின்னொட்டு 242
புணரொலி 298
புலனெறி வழக்கம் 3
புலுதம் (ப்லுதம்) 301
புளூட்டோ 33
பூஷன் 33
பொலியொலி 305
பொலியாவொலி 305
மற்பொருட்டு வினை 312
மறைமலையடிகள் 53
மனோன்மணீயம் 52
மாக்கசு முல்லர் 20
மித்திரா (மித்ரா) 33
முன்னொட்டு 295
ரிபுக்கள் 33
ருத்ர 33
லக்கரம் 311
வட்டப்பாலை 331
வடபல்லி 3
வண்ணமாலை 296
வருணா 33
வழியடி 4
வாரணன் 33
வான்மீகி 329
விகரணம் 312
வியஞ்சனம் (வ்யஞ்சன) 297
விருத்தி 303
விருத்தியுயிர் 304
வில்லியம் சோன்சு 20
விசர்க்கம் (விஸர்க) 297
வேதத் தெய்வங்கள் 33
வேதாந்தம் 327
ஸம்ஹிதை 323
ஸமாஸ 819

பிழைதிருத்தப்பட்டி

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
108	21	கப்ப	கர்ப
111	8	கலம்	கலம
,,	10	கலங்ம்	கலங்க
130	30	நேது	கேது
137	5	1	2
,,	28	ஜ்டா	ஜடா
204	29	இவற்றுன்	இவற்றுள்
206	13	நேய்	நெய்
219	தலைப்பு	மொதியதிகாரம்	மொழியதிகாரம்
280	21	ஆபூப	அபூப

84-ஆம் பக்கத்தில், ஆயம் என்னும் சொல் வரலாற்றின் கீழ், பின்வருவதைச் சேர்த்துக் கொள்க.

இனி, ஆயம் என்னும் சொற்கு வருவாய் என்று பொருள் கொள்ளினும், ஆ என்னும் அதன் முதனிலையை வா என்பதன் திரிபாகக் கொள்க.

விலை ரூ. 7-50

இந்நூல் கிடைக்கும் இடங்கள்:

1. தே. மணி, நேசமணி பதிப்பகம், ஆ 1135, 2-ஆம் மேற்குக் குறுக்குச்சாலை, காட்டுப்பாடி விரிவு, வ. ஆ. மாவட்டம்.
2. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மட்டிட்டது, 1/140, பெருவழி (பிராடுவே), சென்னை-1.
3. புலவர் மி. மு. சின்னாண்டார், 50, நத்தமர் தெரு, அம்மாப்பேட்டை, சேலம்-3.
4. திரு. நா. செல்வராசனார், பி. ஏ., பி. தி., 'தொல்காப்பியன் இல்லம்', செங்காட்டுப்பட்டி, (வழி) துறையூர், திருச்சி மாவட்டம்.
5. திரு.பு.கா. பாலசுப்பிரமணியனார், டி.ஆர்.எசு., பி.தி, செயலாளர், மறைமலையடிகள் மன்றம், புன்செய்ப்புளியம்பட்டி, (வழி) ஈரோடு, கோவை மாவட்டம்.
6. திரு. கருணையார், 'தமிழ்ப்பாவை' ஆசிரியர், 15, சண்முகபுரம் முதல் தெரு, மதுரை-10.
7. Thiru MAA. Panchatchara Lingam,
   I D-5, Railway Line, Sentul Pasar,
   Kuala Lumpur, Malaysia

இந்நூலாசிரியரின் ஏனை நூல்கள்:

I. இதுவரை வெளிவந்தவை (சொந்த வெளியீடு):

1. இசைத்தமிழ்க் கலம்பகம் (3 உருபா)
2. பண்டைத்தமிழ் நாகரிகமும் பண்பாடும் (6¼ உருபா)
3. தமிழ் வரலாறு (6¼ உருபா)
4. The Primary Classical Language of the World   Rs. 15